**மலரினும் மெல்லியவள்!**

# Jeline's-Malarinum Melliyaval

பாகம் - 1

எம்.எல்.ஏ சங்கரலிங்கத்தின் அலுவலகம்... தன்னுடைய பி.ஏ வுடன் அன்றைய நாளுக்குரிய அலுவல்களையும், மற்றும் கூட்டங்களையும் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார் சங்கரலிங்கம்.... அறையில் இருந்த இண்டர்காம் அழைக்க, அதை எடுத்த பி ஏ...

"சரி, இருங்க சாரிடம் கேட்டுட்டு சொல்றேன்.... அவர வெயிட் செய்ய சொல்லுங்க" என்றார்.

"யாரது?" என்று சங்கரலிங்கம் கேட்க,

"சார், எ. கே க்ரூப் ஆஃப் கம்பெனிஸோட எம்.டி அர்ஜூன் கிருஷ்ணா வந்திருக்கார் சார்.... உங்கள அவசரமா பார்க்கனுமாம்" என்றார்...

எம்.எல்.ஏ சங்கரலிங்கம் சலித்துக் கொண்டே,

"இவனுங்க வேறடா, பெரிய தொல்லையா இருக்கு.... காசு வாங்கினாலும் வாங்கினோம்.... என்னமோ இவனுங்க வீட்டு வேலைக்காரங்க மாதிரி கூப்பிட்டவுடனேயே வேலை செய்ய வேண்டியதா இருக்கு" என்று தலையில் அடித்துக் கொண்டார்......

"கோடி கோடியா அவர் கொடுக்கும் போது பல்ல

இழிச்சுகிட்டு வாங்க வேண்டியது... அவர் கொடுக்கிற பார்ட்டியில போய் கூத்தடிக்கத் தெரியுது.... அப்போ அவர் போடுற பிஸ்கட்ட திங்குற **** மாதிரி அவர் கால சுத்தித் தான ஆகணும்" என்று மனதிற்குள் திட்டிக் கொண்ட பி.ஏ இண்டர்காமில் ரிஷப்ஷனிஸ்டை அழைத்து,

"அர்ஜூன் சாரை வரச் சொல்லுங்க" என்றார்.

புயலென உள்ளே நுழைந்த அர்ஜூன்... (இங்கு நம் கதையின் நாயகனைப் பற்றி வர்ணித்தே ஆக வேண்டும்)

நெடு நெடுவென்று ஆறு அடி மூன்று அங்குலத்திற்கு உயரம்... சிவப்பு கலந்த வெண்மை நிறம்.... யாரையும் ஊடுறுவி பார்க்கும் சக்தி வாய்ந்த கண்கள்... அவற்றின் கூர்மையில் தெரிவது உறுதியா? கடினமா? நிதானமா? மென்மையா?... ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது....

சில நேரங்களில் நெருப்பு வீசும் அவனின் விபரீத பார்வையில் எதிராளிகள் நடுநடுங்கி போவார்கள்... அவனை எதிர்ப்பது அபாயம் என்று சொல்லாமல் சொல்லும் அவன் விழிகள்...

அவனின் வசீகரமான தோற்றமும் ஆளை அசரடிக்கும் ஆளுமையும் கலங்கடிக்கும் துணிவும் சுற்றி இருப்பவர்களை பிரமிக்க வைக்கும்... அவனிடம் அடி பணிய செய்யும்...

உள்ளுக்குள் கட்டுக்கடங்காத கோபம் இருந்தாலும்

அதனை முகத்தில் காட்டாமல் உதடுகளில் நெளிந்த இளம் புன்னகையுடன் தன் அறைக்குள் கம்பீரமாக நுழைந்தவனைப் பார்த்த எம்.எல்.ஏவிற்கே ஒரு நிமிடம் வயிற்றில் புளியை கரைத்தது....

"என்ன, சங்கரலிங்கம் சார்... சொன்னப் பேச்சை எப்போதுமே காப்பாத்துவேன்னு சொல்லுவீங்க.... இப்பொ திடீர்னு என்னாச்சு? யாராவது என்ன விட ஜாஸ்தி பணம் கொடுத்துட்டாங்களோ?" என்றான் அவர் எதிரில் இருந்த சேரில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தபடி.....

அவன் அமைதியாக ஒவ்வொரு வார்த்தையாக கூறினாலும் அதில் அவனுடைய கொந்தளித்து கொண்டு இருக்கும் கோபம் நன்றாக தெரிய சங்கரலிங்கத்தின் மனம் பதற ஆரம்பித்தது... அவற்றின் விளைவாக முளைத்த திகில் அவர் பார்வையைக் கூட மறைத்தது...

தன்னிச்சையாக அவன் முன் எழுந்து நின்றவர்...

"அப்படி எல்லாம் இல்ல அர்ஜூன் சார்... உங்களுக்கு தெரியாம இங்க ஒரு நூல் கூட அசையாதுன்னு தெரியாதா என்ன?" என்று மனதில் உள்ள கலக்கத்தை மறைத்து பல்லை இளித்துக் கொண்டே கூற,

"அப்போ என்னுடைய டெண்டர் விஷயம் என்னாச்சு?" என்றான் அவரை கூர்ந்து பார்த்தக் கொண்டே....

"நாளைக்கு நீங்க போங்க சார்.... டெண்டர் நிச்சயமா

உங்களுக்கு தான் கிடைக்கும்.... எல்லா ஏற்பாடும் நான் செஞ்சுட்டேன்" என்று மீண்டும் இளிக்க...

வெடுக்கன்று சேரை விட்டு எழுந்தான் அர்ஜூன்.... அவன் எழுந்த வேகத்தில் அந்த அறையே எதிரொலித்தது போல் தோன்றியது...

"உங்களுக்கே தெரியும், நான் சாதாரனமா இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் நேர்ல வர மாட்டேன்னு... நானே வந்திருக்கேனா, இந்த டெண்டர் எனக்கு எவ்வளவு முக்கியம்னு புரிஞ்சுக்கோங்க" என்று கூறியவனின் மனதில் அணல் தெறித்தாலும் முகத்தில் எந்த உணர்வையும் வெளிப்படுத்தவில்லை...

சட்டென்று எழுந்தவர் அவன் கரத்தை இறுக்க பற்றி,

"சார், நான் சொன்னால் சொன்னது தான்... நீங்க கிளம்புங்க சார்... எல்லாத்தையும் நான் பார்த்திக்கிறேன்" என்று மீண்டும் இளிக்க, குனிந்தவன் தன் கரத்தின் மேல் இருக்கும் அவர் கரத்தை ஒரு புலிப் பார்வை பார்க்க, விருட்டென்று தன் கரத்தை விலக்கினார் எம்.எல்.ஏ...

அவரை ஒரு விநாடி கூர்ந்து உற்று நோக்கிவிட்டு அவன் வெளியே செல்ல, அவன் சென்ற மறு நொடியே தன் பி.ஏவை அழைத்த சங்கரலிங்கம்...

"யோவ், உடனேயே ஃபோன் போட்டு அவனுக்கே டெண்டர் கிடைக்கனும்னு சொல்லிடு.... இவன் சிரிச்சாலே எனக்கு

குலை நடுங்கும், இப்பொ கோபமா வேர போறான்... அவன் ஒரு விரல் அசைச்சா இந்த அரசாங்கமே நடுங்குது.... நம்மல ஏதாவது பண்ணிர போறான்..... முதல்ல அவன் வேலைய முடி" என்றார்.

ஏ.கே க்ரூப் ஆஃப் கம்பெனிஸ்! சேர்மன் பாலமுருகன், அவருடைய தர்மப் பத்தினி ஸ்ரீ என்கிற ஸ்ரீவித்யா... மனமொத்த தம்பதியர்...

இவர்களின் மூத்த மகன் அர்ஜூன்.... 27 வயது.... லண்டனில் முதுநிலை பட்டப்படிப்பை முடித்துவிட்டு அவர்களின் அனைத்து தொழிற்களையும் வெற்றிகரமாக நடத்தி வருபவன்....

இரண்டாவது மகன் அருண்..... பொறியியல் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருப்பவன்... அர்ஜூனிற்கு நேர் எதிர் குணம் உள்ளவன்... மிகவும் பொறுமை சாலி... தன் அண்ணன் மேல் பயம் கலந்த மரியாதை வைத்திருப்பவன்.... அவன் முன் நின்று பேச தயங்குபவன்... அனைவரையும் போல்...

ஒரே செல்ல மகள் மஹா என்கிற மகாலெட்சுமி... மூன்றாம் வருடம் பி எஸ் சி படித்துக் கொண்டிருப்பவள்.... அந்த வீட்டின் இளவரசி... அருணைப் போல் தன் மூத்த அண்ணனிடம் மரியாதை கலந்த பாசம் கொண்டு இருப்பவள்....

அர்ஜூனின் செல்ல தங்கை... ஆனால் மனதில் மட்டுமே...

வெளியில் என்றுமே அர்ஜூன் தன் தங்கையின் மேல் தான் வைத்திருக்கும் பாசத்தை வெளிக்காட்டிருக்கவில்லை...

பரம்பரை பரம்பரையாக பல தொழிற்களை செய்து வரும் குடும்பம் ஸ்ரீவித்யாவின் குடும்பம்... இந்தியா மட்டும் அல்லாது வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யும் தொழிற்களிலும் கோலோச்சிக் கொண்டிருப்பவர்கள்...

இந்தியாவிற்குள் மட்டும் நடந்துக் கொண்டிருந்த தொழிற்களை வெளிநாடு வரை விரிவுப்படுத்தியது அர்ஜூனின் கடின உழைப்பும், தொழில் சாமார்த்தியமும், புத்திக் கூர்மையும், அடங்காத ஆளுமையும் தான்.

சிறு வயது முதலே அன்னையைத் தவிர மற்றவர்களிடம் அளந்து பேசுபவன்... வார்த்தைகளில் அல்லாமல் செயல்களில் தன் சாமர்த்தியத்தை காண்பிப்பதில் கில்லாடி...

ஸ்ரீக்கு அர்ஜூனை காணும் பொழுதெல்லாம் தன் தந்தை ருத்ரமூர்த்தியை பார்ப்பது போலவே இருக்கும்...

ருத்ரமூர்த்தி... பெயருக்கு ஏற்றார் போல் மற்றவர்களுக்கு ருத்ரமூர்த்தியாகவே இருந்தவர்... குடும்பத்தில் ஒரே வாரிசாக பிறந்து, தன் தந்தையுடைய அனைத்து தொழிற்களையும் ஒற்றையாளாக செம்மையாக நடத்தியவர்... யாருக்கும் அடி பணிந்திராதவர்...

அர்ஜூன் தன் தாத்தாவைப் போலவே கடின உழைப்பாளி,

மிகுந்த அந்தஸ்து பார்ப்பவன், கோபக்காரன், அழுத்தக்காரன்...

எதிராளி நூறு வார்த்தைகள் பேசினால் இவன் ஒரு வார்த்தை மட்டுமே பேசுவான்... ஆனால் அந்த ஒரே வார்த்தையில் எதிராளியை எளிதாக வீழ்த்தி தன் காரியத்தை சாதித்துக் கொள்வான்...

அதனால் அவன் இருக்குமிடத்தில் இருக்கும் அனைவருக்கும் ஒரு வித பயமும் நடுக்கமும் இருக்கும்... அவனிடம் பேசும் அனைவருமே யோசித்து தான் பேசுவார்கள்... தவறாக பேசிவிட்டால் அவன் பார்க்கும் பார்வையே போதும் அவர்களை குலை நடுங்க செய்ய...

தொழிலும் சரி, அவன் அலுவலகங்களிலும் சரி, அல்ல குடும்பத்திலும் சரி... அவனை ஒரு சிங்கம் போல் தான் நினைத்துக் கொள்வார்கள்... அவன் வருகிறான் என்றால் அந்த இடத்தில் ஊசி விழுந்தால் சத்தம் கேட்டுகுமே அத்தனை அமைதி இருக்கும்...

அவன் குரலில் தெரியும் கம்பீரம், அவனின் தோரணை, அழகும் கம்பீரமும் கலந்த அவன் தோற்றம் எல்லாவற்றிலும் உறைந்து கிடக்கும் அவனின் ஆணவம்....

தாத்தாவைப் போல் பேரன்....

சென்னை மாநகரத்தின் நடுவெ அமைந்திருந்த எ.கே க்ருப் ஆ்ஃப் கம்பெனிஸின் தலைமை அலுவலகத்தின் முதல்

தளத்தில் MD என்று பொறிக்கப் பட்ட கேபினுக்கு வெளியே, கதிர் தன்னுடைய அலை பேசியில் பேசியபடியெ MD யின் அறைக் கதவை தட்டினான்.

"எஸ் கம் இன் [Yes come in]" என்ற கம்பீரக்குரலுக்கு சொந்தக்காரனான அர்ஜுன் தன்னுடைய சேரில் அமர்ந்து கணினியில் கண்ணைப் பதித்துக் கொண்டெ கதிரை வர பணித்தான்.

அறையில் நுழைந்த கதிர் வழக்கம் போல் தன்னுடைய MD அமர்ந்திருந்த தோரனையையும், தோற்றத்தையும் பார்த்து ஒரு நொடி அசந்த பிறகு தன்னை சுதாரித்து கொண்டு "குட் மார்னிங் சார் [Good Morning sir]" என்றான்...

Likes:Niranjanadevi, Priayamadhavan, shanbagavalli and 17 others



Jelineusa
JB

Apr 4, 2018

#4

கதிரை கண்டதும் நிமிர்ந்து பார்த்த அர்ஜுன் "எஸ் ஜே இண்டஸ்ட்ரீஸிலிருந்து வந்த ஆர்டர் எல்லாம் கம்ப்ளீட் பண்ணியாச்சா? என்க...

"இல்ல சார், ஆனால் அதுக்கான வேலையெல்லாம் நடந்துக்கிட்டு இருக்கு... இன்னிக்கு ஈவ்னிங்குள்ள முடிஞ்சிரும்... அது ஒன்னும் பெரிய பிரச்சனை இல்ல....

நான் பார்த்துகிறேன் சார்" என்று கூறியவன் அர்ஜுனின் முகம் மாறியதை கண்டதும்,

"சார், அப்புறம் அந்த டெண்டர் நமக்கே ஷான்க்ஷன் ஆகிடுச்சு" என்றான்.

அதைக் கேட்டவுடன் மறுபடியும் கணினியை பார்க்க ஆரம்பித்த தன் முதலாளியின் முகத்தில் சிறு புன்னகை படிவதை கவனித்த கதிருக்கு தெரிந்தது இதுவும் தன் முதலாளியின் கை வண்ணமாகத் தான் இருக்கும் என்று.

"சரி, கதிர், யூ கேன் கோ [you can go]" என்று கூறிவிட்டு வேலையில் கவனத்தை செலுத்த ஆரம்பிக்க, அப்பொழுது தான் அவன் அலை பேசி அழைத்தது....

எடுத்து எண்ணைப் பார்த்தவன் அழைத்தது தன் அன்னை என்றவுடன் உடனே பேச ஆரம்பித்தான்....

"அர்ஜூன், வீட்டுல ஒரு சின்ன பூஜை ஏற்பாடு செஞ்சிருக்கேன்பா, கொஞ்சம் சீக்கிரம் வீட்டுக்கு வரியா?"

"மாம், எத்தன தடவை சொல்றது... கடவுளுக்கும் எனக்கும் ரொம்ப தூரம்னு.... ப்ளீஸ் மாம். எனக்கு நிறைய வேலை இருக்கு.... அருணையும், மஹாவையும் வச்சு பூஜைய முடிங்க" என்று கூறிவிட்டு அலை பேசியை துண்டித்தான்.

தன்னுடைய அறையிலிருந்து வெளியே வந்த பாலா, "என்ன ஸ்ரீ, ஒரு மாதிரியா இருக்க" என்று கேட்க,

"அர்ஜூனை பூஜைக்கு வரச் சொன்னேன், வரலைன்னு சொல்லிட்டாங்க"...

"என்ன ஸ்ரீ, இது என்ன புது விஷயமா? இது எப்பவும் நடக்கிறது தான... அவன் என்னைக்கு கோயிலுக்கோ இல்லை பூஜைக்கோ வந்திருக்கான்.... தாத்தா மாதிரி பேரன்... நீ மத்த வேலைகளைப் போய் பாரு" என்றுக் கூறிவிட்டு தன் காரில் ஏறப் போக, அவர் பின்னாடியே வந்த ஸ்ரீ,

"இப்படியே இருந்தா எப்படிங்க? குடும்பத்தில நடக்கிற எந்த விஷேஷத்திலேயும் கலந்துக்க மாட்டேங்குறான்.... யார் கூடவும் சரியா முகம் கொடுத்துக் கூட பேசமாட்டேங்கிறான்.... தம்பி, தங்கைக் கிட்ட கூட ஒரு லிமிட்டோடத் தான் பழகுறான்.... இவனுக்கு ஒரு கல்யாணக் காட்சி செய்ய வேண்டாமா? இப்படி பிஸினஸே கதின்னு இருந்தால், எப்படிங்க?" என்று ஆதங்கத்துடன் கூறிய மனைவியை பார்த்த பாலாவிற்கும் அதே விஷயம் தான் மனதை குடைந்துக் கொண்டிருந்தது.

ஒரு தந்தையாக பாலாவிற்கு அர்ஜூனை நினைத்து பெருமையாக இருந்தது...

தொழிலில் அவனின் சாமார்த்தியத்தை பார்த்து அவரே அசந்து போய் இருக்கிறார்.... தொழில் வட்டாரத்தில் அவனின் புகழ் தீப் போல்பரவியிருப்பதை கண்டு கர்வம் கொண்டு இருக்கிறார்...

ஆனால் அதே சமயம் அவன் குடும்பத்தில் இருந்து தன்னை தொலை தூரத்தில் வைத்திருக்கிறான்... தன்னை தொழில் என்ற சமுத்திரத்தில் மூழ்க அடித்துக் கொண்டு இருக்கிறான் என்ற வருத்தமும் மேலோங்கியே இருந்தது...

ஆனால் தந்தையானாலும் அவனுக்கு அறிவுரை கூறும் தைரியம் அவருக்கும் கூட இல்லை....

ஸ்ரீ பூஜையை முடிக்கவும், வீட்டின் தொலைப் பேசி அழைக்கவும் சரியாக இருந்தது...

அதை ஸ்ரீ எடுக்க, அந்த பக்கம் என்ன சொன்னார்களோ ஸ்ரீயின் முகத்தில் அத்தனை மகிழ்ச்சி தெரிந்தது.

"ஏய் கலா, நீயாடி? எப்படிடி இருக்க? எத்தனை வருஷமாச்சு உன் குரலைக் கேட்டு... எங்கடி இருக்க? கடைசியா நம்ம ஊர் கோயில் திருவிழாவில உங்க அப்பாவ பார்க்கும் போது உன்ன பத்திக் கேட்கனும்னு ரொம்ப ஆசையா இருந்தது... ஆனா எங்க அப்பா பண்ணினத நெனைக்கும் போது, எந்த முகத்த வைச்சுக்கிட்டு பேசுறதுன்னு தெரியல... அதனால நானும் பேசல... எப்படிடி இருக்க? என் நம்பர் எப்படி கெடைச்சுது?" என்று மூச்சுக் கூட விடாமல் பேசும் தன் அன்னையைப் பார்த்த மஹாவிற்கு, "கலா" என்றவுடனேயே தெரிந்தது....

அது அவர் அன்னை அடிக்கடி சொல்லும் அவர் ஆருயிர்

தோழியாகத் தான் இருக்கும் என்று.

மிகவும் வசதிப்படைத்த குடும்பத்தில் பிறந்தவர் ஸ்ரீ... தன் தந்தை ருத்ரமூர்த்திக்கும் தாய் சரசுவதிக்கும் நீண்ட காலத்திற்கு பிறகு பிறந்த ஒரே வாரிசு...

தந்தையின் கண்டிப்பிற்கும் தாயின் செல்லத்திற்கும் இடையே வளர்ந்திருந்த ஸ்ரீக்கு சிறு வயது முதலே ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு பார்க்கத் தெரியாது.

என்ன தான் வசதி இருந்தாலும், ருத்ரமூர்த்தி தன் மகளை அங்கிருந்த அரசு பள்ளியிலேயே படிக்க வைத்திருந்தார்....

மூன்றாம் வகுப்பு படிக்கும் பொழுது தான் கலா அப்பள்ளியில் சேர்ந்தாள்.

துறுதுறுவென்றிருந்த ஸ்ரீயை பார்த்த மாத்திரத்திலேயே மிகவும் பிடித்துவிட்டது அமைதியான சுபாவம் கொண்ட கலாவிற்கு....
இருவரும் நெருங்கிய தோழிகளானார்கள்.

பன்னிரெண்டாம் வகுப்பு முடிந்தவுடன் ஸ்ரீ கல்லூரிக்கு போக, வசதியில்லாத காரணத்தினால் கலாவால் படிப்பைத் தொடர முடியவில்லை.... இருந்தும் இவர்கள் நட்புக்கு எந்த ஒரு கட்டுபாடும் இல்லை.

ஆனால் இவர்கள் இனையில்லா நட்பிற்கும் வந்தது ஒரு கேடு... ருத்ரமூர்த்தியின் ஒன்று விட்ட அண்ணனும், ஸ்ரீயின் பெரியப்பாவும் ஆன காத்தவராயனின் மகன்

சுந்தரேசனின் மூலம்.

அடிக்கடி ஸ்ரீயை பார்க்க வரும் போது தான் ஸ்ரீயின் பெரிப்பாவின் மகன் சுந்தரேசனின் கண்ணில் பட்டுவிட்டாள் கலா....

ருத்ர்மூர்த்தியின் அண்ணன் காத்தவராயனும் கிட்டத்தட்ட அவர் தம்பி போலவே குணத்தில்.

சுந்தரேசனின் விருப்பம் கலாவிற்கு புரிய ஆரம்பிக்க, கலா ஸ்ரீயை பார்க்க வருவதை குறைத்துக் கொள்ள ஆரம்பித்தார்.... இதை உணராத ஸ்ரீ அவர் மீது கோபப்பட, அப்பொழுது தான் கலா தன் நிலைமைக் கூறி இதை நீடிக்கவிட்டால் தங்களுடைய நட்புக்கே பிரச்சனையாக முடியும் என்று கூறினார்.

இதைப் பற்றி தன் ஒன்று விட்ட சகோதரனிடம் பேசுவதென்று முடிவெடித்த ஸ்ரீ, சகோதரனைத் தேடி போக, கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுப் போல வந்தான் சுந்தரேசன்.

"சுந்தரேசன்னா, உங்ககிட்ட கொஞ்சம் பேசனும்...." என்றவர் சட்டேன்று நேரே விஷயத்திற்கு வந்தார்...

நீங்க கலாவ விரும்புறீங்களா?"

தன் தந்தை தங்கள் அருகில் ஒரு மரத்திற்கு பின்னால் நின்று யாரிடமோ பேசிக் கொண்டிருப்பது தெரியாமல் தன் காதலை பற்றி சொல்ல ஆரம்பித்தான் சுந்தரேசன்...

படீர் என்று தன் தலையில் அடி விழுந்தப் பின் தான் தெரிந்தது தன் தந்தை தான் சொன்னதை எல்லாம் கேட்டுவிட்டார் என்று.

இது ருத்திரமூர்த்தியின் காதுகளுக்கு போக, ருத்திரமூர்த்தி போட்ட ஆட்டத்தில் கலாவின் குடும்பம் கலாவை வேறு ஒரு ஊரில் வசித்து வந்த அவள் அத்தை வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டியதாகியிருந்தது.

நாட்கள் செல்ல, ஸ்ரீயின் திருமணமும் முடிய, அவர் தகப்பனார் ருத்ரமூர்த்தியும், தாய் சரசுவதியும் ஒருவர் பின் ஒருவராக காலமாக, தன் சொந்த ஊருக்கு போவதையே குறைத்துக் கொண்டார் ஸ்ரீ.

ஆனால் மூன்றாம் வகுப்பில் ஆரம்பித்து கிட்டத்தட்ட பதினொரு வருடங்கள் இணைப் பிரியாத தோழிகளாக கலாவுடன் சுற்றிய நினைவுகள் என்றுமே ஸ்ரீயின் மனதில் மலரும் நினைவுகளாக.

Likes:kavitha28, Niranjanadevi, Priayamadhavan and 17 others



*Jelineusa*
**JB**

Apr 4, 2018

#5

பல வருடங்களுக்கு பிறகு தன் தோழி அழைத்ததை இன்னும் ஸ்ரீயால் நம்ப முடியவில்லை.

"என் நம்பர் எப்படிடி கலா கெடைச்சுது?" என்ற கேள்விக்கு கலா சொன்ன பதிலில் ஸ்ரீக்கு சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை.

"நம்ம ஊருக்கு போயிருந்தேன்டி... அப்போ உன் பெரியப்பா மகன் சுந்தரேசனப் பார்த்தேன்... அவர் தான் உன் நம்பர் குடுத்தது" என்றார்.

"ஆஹா! இது தான் விதி என்பதோ? யார் தங்களுடைய நட்பு பிரிய காரணமோ, அவரே சேர்த்தும் வைத்திருக்கிறார்" என்று எண்ணி மகிழ்ந்த ஸ்ரீ கதை பேச ஆரம்பிக்க, அங்கே கலாவோ....

"ஸ்ரீ, முதல்ல நான் கூப்பிட்ட விஷயத்தை சொல்லிடறேன்... என் பொண்ணு திவ்யாவுக்கு கல்யாணம் பேசி இருக்கோம்டி... வர இருபத்தி நாளாம் தேதி கல்யாணம்... அதச் சொல்லத் தான் கூப்பிட்டேண்டி... உன் விலாசம் சொல்லு, பத்திரிக்கை அனுப்புறேன்.... எனக்கு உன்னை நேரில வந்து அழைக்கனும்னு ஆசை... ஆனால் கல்யாணம் இன்னும் ஒரு வாரத்தில... மாப்பிள்ளை வீட்டுல வேற ரொம்ப அவசரப்படுத்திறாங்க... அதுவும் இல்லாம நீ கணடிப்பா நான் கூப்பிட்டா வருவேன்னு தெரியும். வருவ இல்லடி? என்று ஆசையாக வினவ,

ஸ்ரீக்கோ இன்னும் தன் காதுகளையே நம்ப

முடியவில்லை...

ஒரு காலத்தில் இருவரும் தங்கள் ஊரில் உள்ள ஆற்றங்கறையில் அமர்ந்து...

"டீ கலா, நாம இரண்டு பேரும் கல்யாணம் முடிச்சு, குழந்தைகள் பெற்றுக் கொண்டால், என் பொண்ண உன் பையனுக்கும், உன் பொண்ண என் பையனுக்கும் கல்யானம் முடிச்சு வச்சிருலாமா" என்று விளையாட்டாக பேசிக் கொண்டது ஞாபகம் வந்தது.

"கண்டிப்பா கலா, நீ ஒன்னும் வர வேண்டாம்... கல்யாண வேலைய கவனி... நான் இருபத்தி நாலாம் தேதி அங்க இருப்பேன்" என்றார்.

மற்ற விஷயங்களையும் பேசி முடித்து தொலை பேசியை கீழே வைக்கும் போது மனசு நிறைந்து இருந்தது ஸ்ரீக்கு.

இருபத்தி நாலாம் தேதி அதிகாலையில் எழுந்த ஸ்ரீ திருமணத்திற்கு செல்வதற்கு தயாராக, அப்பொழுது தான் பாலா வந்தார்.

"ஸ்ரீம்மா, நேற்றே சொல்லனும்னு நினைச்சேன், டயர்ட்னஸ்ல வந்ததும் தூங்கிட்டேன்... திடீர்னு கம்பெனியில ஒரு முக்கிய ஆடிட்டிங்... நான் கண்டிப்பா போகனும்... நீ அருணையோ அல்லது மஹாவையோ அழச்சுட்டுப் போம்மா"

"இல்லைங்க, இரண்டு பேருக்கும் எக்ஸாம்ஸ் நடக்குது....

நான் தனியா நம்ம காரிலேயே முருகனோடையே போயிட்டு வந்திடுறேன்"

வீட்டில் உள்ள அனைவருக்கும் தனி தனி கார்கள்... அதிலும் அர்ஜுன் தன் காரை தன்னை தவிர வேறு யாரையும் தொடக் கூட விடமாட்டான்...

அதனால் ஶ்ரீக்கு என்று அவர்கள் ட்ரைவர் முருகனை பணித்திருந்தார்கள்... வீட்டில் பல கார்கள் இருந்தாலும் ட்ரைவர் முருகன் மட்டும் தான்....

அர்ஜூன் அவ்வளவு எளிதாக வேறு யாரையும் நம்பி விடமாட்டான்... ஶ்ரீ சொல்லவும் ட்ரைவர் முருகன் வீட்டிற்குள் நுழையவும் சரியாக இருந்தது.

"வாப்பா முருகா, இப்போ தான் உன்னப் பத்தி பேசிட்டு இருந்தோம்... போன வாரமே சொன்னேன், கடலூர் வரை போகனும்னு... நியாபகம் இருக்க... போய் கார ரெடிப் பண்ணு"

"அம்மா, என் பொண்ணுக்கு உடம்பு சரியில்லை, ஆஸ்பத்திரியில சேர்த்துவிட்டுட்டு தான் வந்திருக்கேன்... அதை சொல்லத் தான் வந்தேன்... ஆனா நீங்க ஏதோ முக்கிய விஷேஷத்துக்கு கிளம்பியிருக்கிற மாதிரி தெரியுது.... நான் என் பொண்டாட்டிட்ட சொல்லிடுறேன். நீங்க கெளம்புங்க"

"என்ன முருகா விளையாடுறியா? போடா போய்,

பிள்ளைய பாரு... நான் வேற ஏதாவது வழிய பார்த்துக்கிறேன்" என்று கூறிவிட்டு, அவன் கையில் பணத்தை திணித்துவிட்டு,

"ஏதாவது வேணும்னா அய்யாவுக்கு ஃபோன் பண்ணு... என்னா?" என்று கூறி அவனை அனுப்பி வைத்தார்.

ஆக மொத்தம் யாரும் துணைக்கு இல்லை... என்ன செய்யலாம்? என்று யோசித்தவருக்கு ஒரே வழி அர்ஜுன் தான் என்று தோன்றியது.

ஏனெனில், அவருக்கு ஆக்டிவ் ட்ரைவரெல்லாம் சரி வராது... பாலாவும் யாரோடும் தனியாக அனுப்ப மாட்டார்... இப்பொழுது எப்படியும் திருமணத்திற்கு போயே ஆக வேண்டும்...

சாட்சிக்காரனை பிடிப்பதை விட சண்டைக்காரனையே பிடிப்பது மேல்.

அர்ஜுனின் அலை பேசிக்கு அழைத்தார்... நீண்ட நேரத்திருக்கு பிறகே அவன் அழைப்பை எடுத்தான்...

எடுக்கும் போதே ஏதோ கோபத்தில் இருப்பது போல் தெரிய, ஸ்ரீ தன் மகனைப் பற்றி நன்கு தெரிந்தவர் ஆகையால், தன்னுடைய அஸ்திரத்தை உபயோகப்படுத்த ஆரம்பித்தார்.

"அர்ஜுன், நான் கிளம்புறேம்பா.."

மொட்டையாக திடீரென்று ஸ்ரீ சொல்லவும் யோசனையில் புருவத்தை சுருக்கியவன் "என்ன மாம், எங்க கிளம்புறீங்க?" என்றான்...

"என்னோட க்ளோஸ் ஃபிரெண்ட் கலாவோட பொண்ணோட கல்யாணம்பா... கடலூருக்கு பக்கத்துல... அப்பாவோட போலாம்னு பார்த்தேன், அப்பாவுக்கு ஏதோ ஆடிட்டிங்காம்... அருணுக்கும், மஹாவுக்கும் எக்ஸாம்ஸ் நடக்குது... ட்ரைவர் முருகன் பொண்ணுக்கு உடம்பு சரியில்லையாம், அதனால ஒரு ஆக்டிவ் ட்ரைவர அரேஞ்ச் செஞ்சுருக்கான்பா... நான் அவருக் கூட போயிட்டு வந்திடுறேன்" என்று கூறி முடிக்கவில்லை, அங்கு அவன் தாம் தூம் என்று குதிக்க ஆரம்பித்திருந்தான்.

"என்ன மாம் இப்படி கேஷுவலா சொல்றீங்க... கடலூர் என்ன பக்கதிலயா இருக்கு? நீங்க பாட்டுக்கு தனியா போறேன்னு சொல்றீங்க... நீங்க ஒன்னும் கல்யாணத்திற்கு போக வேண்டாம்" என்று கூறினான்.

அய்யய்யோ இதென்னடா பிள்ளையார் பிடிக்க குரங்கானது போல இருக்கு என்று யோசித்தவர்,

"அர்ஜூன் அவ என்னோட க்லோஸ் ஃப்ரெண்ட்பா... கண்டிப்பா நான் போகனும்... உனக்கு என்ன தனியா அனுப்ப பயமா இருந்தால் பேசாமல் நீயே என் கூட வாயேன்... நாம இரண்டு பேரும் நல்லா பேசியே ரொம்ப நாளாச்சு... இன்னைக்கு நீ என் கூட டைம் ஸ்பெண்ட் செஞ்சா ரொம்ப சந்தோஷமா இருக்கும்பா"....

தன் அன்னையின் குரலில் ஏதொ ஒரு ஆற்றாமையை கண்டவன் இந்த பயனம் தன் வாழ்க்கையையே மாற்ற போவது தெரியாமல் தன் தாயுடன் செல்வதற்கு முதன் முறையாக ஒப்புக் கொண்டான்·

மலரினும் மெல்லியவள்!!!

தொடரும்.....

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 2

அந்த அதிகாலை வேளையில் சென்னை கடலூர் தேசிய நெடுஞ்சாலையில் சீறீக் கொண்டு பாய்ந்தது அந்த சிகப்பு நிற மாசராட்டி க்வாட்ரெபோர்ட் (Maserati Quattroporte) கார்...

திருமணம் கடலூருக்கு அருகில் உள்ள ஒரு சிறு குக்கிராமத்தில்.... காரில் அமர்ந்திருந்த அர்ஜுன் அலை பேசியில் கோபமாக பேசியபடியே அருகிலிருந்த தன் அன்னையை முறைத்துக் கொண்டே தன்னுடைய காரை செலுத்தினான்·

ஏதோ ஒரு நினைவில் நொடி கூட யோசிக்காமல் தன் அன்னையின் விருப்பத்திற்கு ஒப்பு கொண்டு விட,

அன்றைய அலுவலக மற்றும் தொழில் சம்பந்தமான மீட்டிங்குகள் எல்லாவற்றையும் தள்ளி வைத்து விட்டு தன் அன்னைக்காக இந்த வேண்டாத வேலையை பார்க்க போகிறோமே என்று நொந்துக் கொன்டு வர, தன் மகனின் கோபம் அறிந்து ஸ்ரீயும் எதுவும் பேசாமல் வர மூன்று மனி நேரம் பயணம் வெகு அமைதியாக கழிந்தது.

எப்பொழுதும் தொழில் தொழில் என்று உழண்டு கொண்டு இருக்கும், மனதளவில் தன் பெற்றோரை விட்டு தன் தம்பி தங்கையை விட்டு தூரப் போயிருக்கும் தன் மூத்த மகனிடம் இன்று ஒரு நாளாவது மனம் விட்டு பேசிக் கொண்டு செல்லலாம் என்று ஆசையோட வந்தவருக்கு அவனுடைய உர்ரென்று இருந்த முகத்தைப் பார்த்ததுமே எதுவுமே பேசாமல் போவதே மேல் என்றிருந்தது.

அர்ஜூன் இது வரை யோசிக்காமல் ஒரு இடத்திற்கு செல்ல மாட்டான்... அது தொழில் சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தாலும் சரி, தன் தனிப்பட்ட விஷயமாக இருந்தாலும் சரி...

அவனுக்கு அன்றைய நாளுக்கு உரிய கால அட்டவணைகள், மீட்டிங்குகள் சம்பந்தமான பட்டியல்கள் ஒரு வாரத்திற்கு முன்னரே அவனின் மேஜையில் இருக்க வேண்டும்...

அதனை முதல் நாள் மாலையிலும், முதல் வேலையாக அன்றைய காலையிலும் மீண்டும் வாசித்துக் காட்டுவது

தான் கதிரின் முதன்மை பணி…

அதற்கு அவன் கதிரை தவிர வேறு ஒருவரையும் பொறுப்பேற்றுக் கொள்ளவிட்டதில்லை…

அதில் எதிர்பாராதவிதமாக ஏதேனும் மாற்றம் செய்ய பட வேண்டி வந்தது என்றாலும் அல்ல அர்ஜூனை சந்திக்க வேண்டியவர்கள் அவனுடன் ஒத்துக் கொண்டு இருந்த மீட்டிங்கை முன்னறிவுப்பு இல்லாமல் தள்ளிப் போட்டார்களோ அல்லது இரத்து செய்திருந்தார்களோ அதனை அர்ஜூனிற்கு தெரியப்படுத்துவதற்குள் கதிருக்கு காய்ச்சலே வந்து விடும்…

அர்ஜூனிற்கு வாழ்க்கையில் எதிர்பாராத ஆச்சரியம் [Surprise] என்பது சுத்தமாக பிடிக்காத விஷயம்…. எதையும் திட்டமிட்டே செம்மையாக செய்து முடிப்பவன்…

அப்படி பட்டவனுக்கு வாழ்க்கை ஒரு பெரிய ஆச்சரியத்தை வைத்துக் கொண்டு காத்திருந்தது…

இன்னும் சில மனித்துளிகளில் அந்த ஆச்சரியத்தில் தான் மூழ்கடிக்க படப் போவதை உணராமல் அதை நோக்கி தன்னையும் அறியாமல் விரைவாக காரை செலுத்திக் கொண்டு இருந்தான்…

எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்தோடு அதி விரைவாக காரை ஓட்டிக் கொண்டு வந்த மகனை பார்த்த ஸ்ரீ ஏதாவது பாடல்களையாவது கேட்கலாமே என்று காரின்

மியூஸிக் சிஸ்டத்தை நோக்கி கையை கொண்டு செல்ல, அவரை நிதானமாக திரும்பி ஒரு பார்வை பார்த்தவனை கண்டவருக்கு பேசாமல் மனதிற்குள்ளே கந்த சஷ்டி கவசம் சொல்லிக் கொண்டு செல்வதே மேல் என்று தோன்றியது...

மெல்ல கையை விலக்கி கொண்டு வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தவர் அதற்கு பின் அவன் புறம் திரும்பவில்லை...

வேறு வினையே வேண்டாம்... அவன் திடீரென்று ஒரு பெரிய யூ டர்ன் போட்டு திரும்பி சென்னைக்கே சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.... ஏனெனில் அதை அவன் செய்ய கூடியவன் தான்....

அவனுக்கு விருப்பம் இல்லை எனில் அவன் மற்றவரை பற்றி கவலைப் படமாட்டான்... அது தன் குடும்பத்தினர் ஆகட்டும் அல்லது தொழில்வட்டாரத்தில் ஆகட்டும்.... அதுவும் அவனின் குணங்களில் ஒன்று...

இரு பக்கங்களிலும் தென்னை மரங்களும் நடுவில் ஒரு சிறு பாதையுமாக பிரிந்த அந்த ஒற்றையடி பாதையில் காரை செலுத்துவதற்கு அர்ஜுனுக்கு சிறு சிரம்மமாக இருக்க அவனுடைய கோபம் இன்னும் அதிகமாகி அவனுக்கு எப்போதடா திரும்பி செல்வோம் என்று இருந்தது.

ஒரு வேளை வழி தவறி விட்டால் இன்னும் கோபப்படுவானே என்று ஸ்ரீ தன்னுடைய தோழியின்

அலை பேசியில் அழைத்து மண்டபத்தின் வழியை விசாரிக்க ஆரம்பித்தார்.

திருமண மண்டபத்தை கிட்டத்தட்ட நெருங்கி விட்ட சந்தோஷத்தில் மகனை பார்க்க, இந்த குக்கிராமத்தில் அப்படி என்ன பெரிய கல்யாணம் நடந்து விட போகிறது என்று தன் மனதில் கணக்கிட்டவாறே அர்ஜுனும் தன் தாயை நோக்க அந்த மண்டபமும் வந்தது....

திருமண மண்டபம் இருந்த அந்த சிறு தெருவில் காரை நிறுத்த இடம் தெரியாமல் அர்ஜுன் சுற்றும் முற்றும் பார்க்கவும், அதற்குள்ளாகவே ஸ்ரீ காரை விட்டு இறங்க முயற்சிக்கவும், ஸ்ரீயின் தோழி கலா மண்டபத்தை விட்டு வெளியில் வரவும் நேரம் சரியாக இருந்தது.

ஒரு சில சிறு சாதாரன கார்களையே பார்த்திருந்த அந்த ஊர் மக்கள் இவ்வளவு பெரிய விலை உயர்ந்த காரை பார்த்ததும் மலைத்து போய் தாமாக அர்ஜுனுக்கு உதவ ஆரம்பித்தார்கள்.

ஒரு வழியாக ஸ்ரீ இறங்கி தன்னுடைய தோழி கலாவை நோக்கி வெகு வேகமாக நடக்க ஆரம்பித்தார்...

மகிழ்ச்சியில் அர்ஜுன் தன்னுடன் வராததை அவர் கவனிக்கவில்லை.

தோழியிடம் நலம் விசாரித்த பிறகே மகனை திரும்பி பார்க்க, அவனோ காரிலேயே அமர்ந்துக் கொண்டு

தன்னுடைய அலை பேசியை ஆராய்ந்து கொண்டு இருந்தான்.

சலிப்புடன் திரும்பி வந்தவர்..

"என்ன அர்ஜுன் இவ்வளவு தூரம் வந்துட்டு இப்படி கார்லையே உட்காந்து இருந்தா நல்லாவா இருக்கும்? என்று கேட்க,

அது வரையிலும் அடக்கி வைத்திருந்த அர்ஜூனின் கோபம் தெறிக்க ஆரம்பித்தது.

"ஏன் மாம் இப்படி கொல்றீங்க? என்ன பத்தி நல்லா தெரியும்... பின்ன எதுக்கு இந்த மாதிரி இடத்துக்கு என்ன கூட்டிட்டு வரீங்க?
திஸ் இஸ் சோ அனாயிங் மாம்... லுக் அட் திஸ் ப்ளேஸ் அண்ட் பீப்பில்.... ஐ ஹேவ் டன்ஸ் ஆ:ப் திங்ஸ் டு டு அட் ஆ:பிஸ் ஆண்ட் யூ ஹேவ் ம ட்ரோவ் ஆல் தி வேய் ஹியர் டு திஸ் க்ராப்பி வில்லேஜ்.. [This is so annoying mom. Look at this place and people. I have tons of things to do at office and you have me drove all the way here to this crappy village] இதுல மண்டபத்துக்குள்ள வேற நான் வரனுமா?" என்று வெடித்தான்.

அவன் கத்தலில் அதிர்ந்தாலும் அவனைப் பற்றி நன்றாக தெரிந்திருந்ததால் ஸ்ரீயும் ஒன்றும் பேசாமல் மண்டபத்தின் வாயிலில் இவர்களின் உரையாடல்களை பார்த்திருந்த கலாவிடம் சென்றவர் அவருடன் மண்டப்பத்திற்குள்ளே

செல்ல, அர்ஜூன் மறுபடியும் தன் அலை பேசியை நோண்ட ஆரம்பித்தான்.

மண்டபத்திற்குள்ளே சென்ற ஸ்ரீ தன்னுடைய இளம் வயது தோழியை நீண்ட வருடங்களுக்கு பிறகு பார்த்த சந்தோஷத்தில் அர்ஜூனை மறந்துவிட்டு திருமணத்தில் மனதை செலுத்த ஆரம்பித்தார்.

தோழியையும், திருமண மண்டபத்தையும், அங்கு வந்திருந்த விருந்தினர்களையும், தோழியின் உறவினர்களையும் பார்த்தவுடனையே தெரிந்து போனது ஸ்ரீக்கு...

தன்னுடைய தோழி வசதிப் படைத்தவளாலில்லை என்று... குக்கிராமம், அதிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருப்பவர்கள் போல் தோன்றினார்கள் திருமணத்திற்கு வந்திருந்தவர்கள்.

ஸ்ரீக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்க, அப்பொழுது தான் மணமேடையிலிருந்த மணமக்களை பார்த்தார்.....

மணமகன் சுமாராக இருந்தாலும்,

மணமகள் திவ்யா... 19 வயது.... வட்டமான நல்ல களையான முகம், சிறிய நெற்றி, கூர்மையான மூக்கு... அதில் பளபளக்கும் ஒற்றை கல் மூக்குத்தி, குழி விழும் கன்னம், செப்பு இதழ்கள் என்று மாநிறத்தில் மிகவும் லட்ஷணமாக இருந்தாள்.

பார்த்த உடனயே திவ்யாவை பிடித்து விட, அவளின் முகம் மனதில் ஆழ பதிந்து போக அவளை வைத்த கண் வாங்காமலே பார்த்துக் கொண்டு இருந்தார் ஸ்ரீ.

கலாவும் மற்றவர்களும் மணமேடைக்கு அருகில் சுறுசுறுப்பாக வேலை செய்துக் கொண்டிருக்க, தனியாக அமர்ந்திருந்த ஸ்ரீக்கு திவ்யாவை ரசிப்பதே சுகமாக இருந்தது....

திவ்யாவின் அமைதியான முகம் நிச்சயம் அவள் கலாவை போன்று மென்மையானவள் என்றே சொல்லியது..... மலரினும் மெல்லியவள்!

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" என்று சொன்ன ஐய்யர் மந்திரத்தை கூறிக் கொண்டே தாலியை எடுத்துக் கொடுக்க, அதை வாங்கிய மணமகன் ஏதோ யோசனையில் இருந்தவன் சடாரென்று எழுந்தான்.

"என்னைய மன்னிச்சிடு திவ்யா... இதை நான் முன்னமே சொல்லிருக்கனும்... ஆனால் என்னால அப்போ சொல்ல முடியலை.... எவ்வளவோ எங்க அப்பா அம்மாக்கிட்ட எடுத்து சொல்லியும் அவங்களும் கேட்கல.... அவங்களை எதிர்த்து பேசவும் எனக்கு தைரியம் இல்லை... ஆனால் என் மனசாட்சி என்னயை குத்துது... என்னையே நம்பிட்டு இருக்கிற அவள ஏமாத்திட்டு உன் கழுத்துல என்னால தாலிக் கட்ட முடியாது" என்று கூறிவிட்டு மண மேடையை விட்டு இறங்கி சென்று விட்டான்.

திவ்யாவிற்கும் சரி, திவ்யாவின் தாய் தந்தையருக்கும் சரி, மண்டபத்தில் கூடி இருந்த அனைவருக்கும் சரி, என்ன நடந்தது என்று புரிபடவே சில நிமிடங்கள் ஆனது...

"ஐய்யய்யோ!!! என்னஙக இது? இப்போ என்ன பண்றதுங்க?" என்று கலா கதற ஆரம்பிக்கும் போது தான் திவ்யா இவ்வுலகத்திற்கே வந்தாள்...

ஏழை பெற்றோர் சிறுக சிறுக சேமித்து வைத்த பணத்தை தங்கள் மகள் திருமணத்திற்கு என்று செலவு செய்து இன்று சல்லி காசுக் கூட அவர்களின் கையில் மிச்சம் இல்லை... எத்தனை கனவு, ஆசை அவர்களின் மனதில்....

தங்கள் செல்ல மகளின் திருமணத்தை கண் கொண்டு பார்ப்பதற்கு அவள் பிறந்த நாள் முதலே தவம் இருப்பவர்கள் இல்லையா அவளின் பெற்றோர்கள்....

அனைத்தையும் ஒரே நிமிடத்தில் உடைத்து சிதறிவிட்டு சென்று விட்டான் யாரோ ஒருவன்....அந்நியன்..... தன் சுயநிலத்திற்காக...

சின்ன பெண்.... அவளுக்கு தெரிந்தது எல்லாம் ஒரு முறை திருமணம் நின்று விட்டால் அது அவளின், அவள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதிக்கும்... அவளால் இனி அவள் பெற்றோருக்கு நிம்மதி என்பதே இல்லை....

இனி என்ன இருக்கிறது தன் வாழ்வில்... முடிந்தது!!!

எல்லாம் முடிந்தது!!!

சில நிமிடங்கள் அப்படியே ஆணி அடித்தது போல் ஒரே இடத்தில் மணவறையில் ஆடாமல் அசையாமல் அமர்ந்து இருந்தவள் திடீரென்று அனைவரையும் தள்ளி விட்டு எழுந்து ஓட, அவள் பின்னரே திவ்யாவின் தந்தை சிவசுப்ரமணியமும், திவ்யாவின் அண்ணன் வினோத்தும் ஓட, அதற்குள்ளாகவே திவ்யா மணமகள் அறைக்குள் சென்று கதவை அடைத்து விட்டாள்.

Last edited: Apr 6, 2018

Likes:Niranjanadevi, Priayamadhavan, Arulthevy and 13 others



*Jelineusa*
**JB**

Apr 4, 2018

#8

ஏற்கனவே மணமகன் திருமணத்தை நிறுத்தி வெளியே சென்றது அங்கு இருந்தவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது என்றால் திவ்யாவின் செயல் அனைவரையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது....

சுதாரித்து அவள் பின்னரே அனைவரும் ஓடியவர்கள் கதவை படபடவென்று தட்ட, மண்டபமே பெறும் அமர்க்களமாக ஆனது..

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீ, திவ்யா

ஓடியது கூட மூளையில் உரைக்காமல் மணமேடையில் இன்னும் அரற்றிக் கொண்டிருந்த கலாவிடம் சென்று அவளை அணைத்துக் கொண்டு சமாதனப்படுத்த முயல, சட்டென்று சுய நினைவிற்கு வந்த கலா திவ்யாவை தேட அங்கு அனைவரும் மனமகள் அறைக் கதவை உடைக்க முயற்சி செய்துக் கொண்டு இருப்பதை கண்டவருக்கு அடி வயிறு கலங்க ஆரம்பித்தது....

சடாரென்று எழுந்தவர் மணமகள் அறையை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

அதற்குள்ளாகவே மணமகள் அறையின் கதவை எல்லோரும் சேர்ந்து உடைத்திருந்தார்கள்....

அங்கு திவ்யா தூக்கு மாட்ட முயற்சித்துக் கொண்டிருந்ததை பார்த்த திவ்யாவின் பெற்றோருக்கும், ஸ்ரீக்கும் உயிரே போய் விட்டது போல் இருந்தது.

"ஐயோ! என்னடி திவ்யா இப்படி பண்ணிட்ட?????" என்று கலா அரற்ற, அதற்குள்ளாகவே திவ்யாவை எல்லோரும் சேர்ந்து கயிற்றில் இருந்து இறக்கவும், கலா திவ்யாவை கட்டி அணைத்துக் கொண்டார்.

"ஏண்டி! அவன் தான் புத்திக் கெட்டதனமா போய்ட்டானா, அதுக்குன்னு நீ ஏண்டி இப்படி ஒரு முடிவ எடுத்த?? நாங்கல்லாம் இங்க இல்ல... எங்கள விட்டுட்டு போக எப்படி டி உனக்கு மனசு வந்துச்சு??" என்று கதறிய தாயை பார்க்க திவ்யாவிற்கும் மனது தாளவில்லை.

ஏனெனில் அந்த மாப்பிள்ளை வீட்டினர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் திவ்யாவைப் பெண் கேட்டு வந்தனர்... திவ்யா அவனின் முகத்தை கூட சரியாக பார்த்திருக்கவில்லை.... ஆனால் மாப்பிள்ளை வீட்டார் கொடுத்த நம்பிக்கையில், அவசரத்தில் இந்த திருமணத்தை சிவசுப்ரமணியம் ஒத்துக் கொண்டுவிட்டார்....

மாப்பிள்ளை பையன் வேறு ஜாதிப் பெண்ணை காதலிப்பதை விரும்பாத அவனின் பெற்றோர் அவனைன் கையைக் கட்டி வாயைக் கட்டி, மிரட்டி தான் இந்த திருமணத்திற்கே சம்மதிக்க வைத்திருந்தனர்....

இதனாலேயே அவன் திருமணத்திற்கு முன் திவ்யாவிடம் ஒரு வார்த்தைக் கூட பேசியிருக்கவில்லை.... நிச்சயத்தன்று அவன் சிறிது நேரமே அவர்களின் வீட்டில் இருந்தான்... அன்றும் திவ்யா அவனைப் பார்த்திருக்கவில்லை....

முகம் கூட மனதில் பதியாமல், யாரென்றே தெரியாத பெற்றோரை எதிர்க்க துணிவில்லாத திருமணம் வரை அமைதியாக இருந்துவிட்டு மணமேடையில் தாலிக் கட்டும் நேரம் வேறு ஒரு பெண்ணிற்கு வாழ்க்கை கொடுப்பதற்காக இன்னொரு சின்ன பெண்ணின் வாழ்க்கையில் மண்ணை அள்ளி வீசிவிட்டு போன ஒரு கோழையைக்காக தன் மகள் உயிரை விடுவதா? என்பது தான் கலாவின் கதறலே!!!

சிவசுப்ரமணியமும் அழுது கரையும் மகளின் அருகில் வந்து அவளை கட்டிப் பிடித்து கொண்டு ஆறுதல் கூற ஆரம்பித்தார்.

அது ஒரு கிராமம்... அதுவும் மிகச் சிறிய குக்கிராமம்... கிட்டதட்ட இன்னும் மூட நம்பிக்கைகளில் உழன்று கொண்டு இருக்கும் அடிமட்ட மக்கள் வசிக்கும் பகுதியில் இந்த கிராமமும் ஒன்று...

ஆதலால் இது போல் மணவறை வரை வந்து திருமணம் நின்றுவிட்டால் அது அப்பெண்ணிற்கு எவ்வளவு பெரிய கஷ்டம் என்று அனைவருக்கும் தெரியும்.

அது அவளை மட்டும் அல்ல.... அவளுடைய ஒட்டு மொத்த குடும்பத்தையே பாதிக்கும்....

அந்த பெண் இராசியில்லாதவள் என்ற பட்டத்தை சூட்டி, அவளுக்கு அடுத்தடுத்து வரும் வரன்களைக் கூட கெடுக்க நினைக்கும் மக்களும் இருக்கத் தான் செய்வார்கள்...

இதெல்லாம் கலாவின் மனதில் ஓட, தன் தோளில் சாய்ந்து கதறிய தன் தோழிக்கு எப்படி ஆறுதல் சொல்வதன்றே தெரியவில்லை ஸ்ரீக்கு...

மனம் கலங்கிய நிலையில் சுற்று புறம் மறந்து அதிர்ந்து நிற்கும் மணப் பெண் திவ்யா....

தன் மகளின் நிலை குறித்து கதறி துடித்துக்

கொண்டிருக்கும் தன் ஆருயிர் தோழி கலா....

என்ன செய்வது என்றே புரியாமல் கலக்கம் அடைந்திருக்கும் தந்தையாக சிவசுப்ரமணியம்....

தன் தங்கையின் வாழ்வை, எதிர்காலத்தை நினைத்து விழிகள் கலங்கி நிற்கும் அண்ணன் வினோத்....

இவர்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீ எதையோ யோசித்தவராக உடனே மண்டபத்தை விட்டு வெளியே வர, அங்கு இது எதனையுமே அறியாமல் மிகுந்த யோசனையுடன் கணினியை நோண்டிக் கொண்டிருந்த மகனை பார்க்கவும் அவரையும் அறியாமல் மிகுந்த கோபம் வந்தது அவன் மேல்.

"உள்ள ஒரு பிரளயமே வெடிச்சிட்டு இருக்கு... இவன் என்னடான்னா இது எதுவுமெ தெரியாமல் இப்படி உட்கார்ந்திருக்கானே" என்று அர்ஜூனை கோபமாக பார்க்க, அதே சமயம் அர்ஜூனும் தன் அன்னையைப் பார்க்க சரியாக இருந்தது.

விரைவிலேயே வந்து விட்ட தன் அன்னையைப் பார்த்ததும் ஏதொ தோன்ற காரிலிருந்து இறங்கி தன் அன்னையை நோக்கி நடந்து வந்தான்.

"வாட் ஹேப்பண்ட் மாம்? [What happened mom?] இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்க... இது தானே நீங்க வர வேண்டிய மண்டபம், ஏன் சீக்கிரம் வந்துட்டீங்க?"

அவனுக்கு உள்ளே நடந்துக் கொண்டிருக்கும் அமர்க்களம் தெரிந்து இருந்தால் தானே.... மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டவர்...

"இல்ல அர்ஜுன், கல்யாணம் நின்னிருச்சுப்பா... மாப்பிள்ளை பையன் யாரையோ லவ் பண்ணினாம் போலிருக்கு... அவங்க வீட்டுல ஒத்துக்கலை போல... அதனால அமைதியா இத்தனை நாள் இருந்துட்டு, இப்போ கல்யானம் வரைக்கும் வந்துட்டு, திடீர்னு மணமேடை விட்டு எழுந்து போயிட்டான்பா"

"இடியட், சரியான பொட்டை பயன் போல.... சரி அதுக்கு நாம என்ன பண்ண முடியும்? நீங்க உங்க ஃப்ரெண்ட் கிட்ட சொல்லிட்டு வந்திட்டீங்க இல்ல.... நாம கௌம்பலாமா?" என்ற மகனைப் பார்த்த ஸ்ரீக்கு அவன் குணம் ஏற்கனவே நன்கு தெரிந்து இருந்தாலும் இன்று அவன் ஒரு திருமணம் நின்று போனதையே கண்டுக் கொள்ளாமல் இத்தனை எளிதாக போகலாமா என்று கேட்டது அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக இருந்தது.

"இங்க ஒரு பொண்ணு வாழ்க்கையே கேள்விக் குறியா இருக்கு.... இவன் என்னாடான்னா சரி நாம கௌம்பலாமாங்கறான்" என்று அவனை ஆயாசமாக பார்த்தார்.

ஆனால் அது தான் அர்ஜூன்... அத்தனை எளிதில் அவனுக்கு யார் மேலும் இரக்கம் வந்துவிடாது... அதுவும்

யாரென்றே தெரியாத ஒரு பெண்ணின் திருமணம் நின்றால் அவனுக்கென்ன??

அர்ஜூனுக்கு தான் என்ன சொல்லிவிட்டோம், எதற்கு தன் அன்னை தன்னை இப்படி அதிர்ச்சியுடன் பார்க்கிறார் என்று புரியவில்லை.

தன் மகனிடம் இதற்கு மேல் என்ன பேசுவதென்று ஸ்ரீக்கும் தெரியவில்லை....

அவன் கேள்விக்கு மறு பேச்சு எதுவுமே பேசாமல் திரும்பி மண்டபத்தை நோக்கி செல்ல, பதில் எதுவும் சொல்லாமல் திரும்பி செல்லும் அன்னையை பார்த்தவனுக்கு கோபம் எகிற ஆரம்பித்தது....

"மாம், மாம்" என்று காட்டு கத்தல் கத்த, தன்னுடைய சத்தம் காதிலே விழாதது போல் சென்றவரை வேறு வழியில்லாமல் எரிச்சலுடன் பின் தொடர்ந்தான்.

அன்னையை தொடர்ந்து மண்டபத்தின் உள்ளே ஒரு அடி எடுத்து வைத்தவன் சட்டென்று நின்றான்.... அவன் வீட்டின் ஒரு சிறு பகுதியில் அந்த திருமண மண்டபத்தையே வைத்து விடலாம்... அது தான் அந்த மண்டபத்தின் மொத்த பரப்பளவு....

இவ்வளவு சிறிய அளவுக் கூட திருமண மண்டபம் இருக்குமா என்று ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு.

தான் நின்றும் தன்னை கவனியாமல் தன் போக்கிற்கு

நிற்காமல் சென்று கொண்டிருந்த தன் அன்னையை பார்த்தவன் சலிப்புடன்...

"மாம், ப்ளீஸ், நில்லுங்க... இப்போ எங்க போறீங்க? நீங்க போய் என்ன செய்யப் போறிங்க" என்று அடக்கப்பட்ட கோபத்தில் கத்த,

அழைத்த மகனை திரும்பி பார்க்காமலே சென்ற அன்னையை தொடர்வதை தவிர அவனுக்கும் வேறு வழியில்லை.

மண்டபத்திற்குள்ளே சென்ற ஸ்ரீ நேரே மணமகள் அறையை நோக்கி சென்றார்...

ஒரு நிமிடம் அறை வாயிலில் நின்று திரும்பி அர்ஜூனைப் பார்த்தவர் ஒரு முடிவுடன் அங்கு குழுமியிருந்த அனைவரையும் விலக சொல்லி நேரே திவ்யாவிடம் சென்றார்...

அவளின் தலையில் கை வைத்து அவள் முடியை வருடிக் கொண்டே,

"இங்க பாரும்மா... சின்ன வயசிலேருந்தே நானும் உங்க அம்மாவும் இணை பிரியா தோழிகள்... கலாவுக்கு ஒரு கஷ்டம்ன்னா அது எனக்கும் போலத் தான்... அதனால நான் ஒரு முடிவு எடுத்திருக்கேன்... அதுல உனக்கு சம்மதம்னா நிச்சயம் கலாவுக்கும் சம்மதமாகத் தான் இருக்கும், என்னமா சொல்ற?" என்க,

அவரை ஊற்றாக பெருக்கெடுத்து கொண்டு இருந்த விழி நீரோடு நிமிர்ந்து பார்த்த திவ்யா குழப்பத்துடன் அவரையே நோக்க....

இந்த களேபரத்தில் இவர் என்ன புதிதாக சொல்ல வருகிறார் என்று புரியாமல் அனைவரும் ஸ்ரீயவே பார்த்தது பார்த்தபடியே இருந்தனர்...

சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்தவர் தொடர்ந்து சொன்ன வார்த்தைகள் அங்கு இருந்த அனைவர் முகத்திலும் அவர் அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப விதம் விதமான உணர்வுகளை கொண்டு வந்தது...

ஒரு முறை தன் தொண்டையை செறுமியவர்....

"இது தான் என் பையன்... அர்ஜூன்.... 27 வயசாகுது... எங்களோட எல்லா பிசினஸ்ஸையும் இவன் தான் பார்த்துகிறான்.... உனக்கு என் பையன கல்யானம் செய்துக்க இஷ்டமா?" என்றார்....

Likes:Fathima rila, Niranjanadevi, Priayamadhavan and 17 others



*Jelineusa*
**JB**

Apr 4, 2018

#9

இது யாருக்கு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்குமோ இல்லையோ, ஆனால் அர்ஜூனுக்கு பேரிடியாக இருந்தது....

தன் காதுகளையே அவனால் நம்ப முடியவில்லை.... 10000 வாட்ஸ் மின்சாரத்தை தன் உடம்பில் பாய்ச்சியது போல் இருந்தது.

"உண்மையில் நான் கேட்டது சரியா? இல்ல மாம் வேற ஏதாவது சொன்னது தான் எனக்கு அப்படி கேட்டுச்சா?" என்று குழம்பிப் போய் தன் அன்னையை பார்க்க, அவர் என்னவோ தெளியாவாகத் தான் இருந்தார்.

ஸ்ரீயே தன் பேச்சை தொடர்ந்தார்...

"கலா, அவ சின்னப் பொண்ணு, நீ... நீ என்னடி சொல்ற?" என்றவர் நேரே கலாவின் கணவரிடம் சென்று..

"அண்ணா, உங்களுக்கு எங்க குடும்பத்தை பத்தி தெரியுமா தெரியாதான்னு எனக்கு தெரியலை... ஆனால் நிச்சயம் கலா என்னை பத்தி உங்களுக்கு சொல்லியிருப்பான்னு நினைக்கிறேன்... திவ்யாவை என் மகள் போல் பாத்துக்கிறேன்... நீங்க சொல்லுங்க, உங்களுக்கு சம்மதமா?" என்றார்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அர்ஜூனுக்கு பேசுவது தன் அன்னையா என்று சந்தேகமே வந்துவிட்டது....

சில நேரங்களில் நம்மை சுற்றி நடக்கும் விஷயம் ஏதோ

கனவில் நடப்பது போலவே தோன்றும்...

மூளை உறைந்து, உணர்வுகள் மரத்து, மனம் கூட தளர்ந்து, ஒட்டு மொத்த உடலும் தன் இயக்கத்தை நிறுத்தியது போன்ற ஒரு நிலை வரும்...

அப்பேற்பட்ட ஒரு நிலையில் தான் இருந்தான் அர்ஜூன்...

அவனுக்கு தன் அன்னையின் மேல் தீராத பாசம் இருக்கிறது... அவனைப் பார்த்து மற்றவர்கள் அஞ்சுவார்கள் என்றால் அர்ஜூனுக்கோ தன் அன்னையின் மேல் ஒரு தனி மதிப்பு உண்டு...

ஸ்ரீயின் தாத்தாவின் அதாவது ருத்ரமூர்த்தியின் தந்தையின் பெயர் அனந்த கிருஷ்ணன்... அவர் தான் எ.கே (அனந்த கிருஷ்ணன்) இண்டஸ்ட்ரீஸின் நிறுவனர்....

அவரின் நியாபகத்தில் தான் தன் மகனிற்கு அர்ஜூன் கிருஷ்ணா என்று பெயரிட்டார் ஸ்ரீ...

வாழ்கையில் சில நிகழ்வுகளுக்கு ஆதியையும் கண்டறிய முடியாது அந்தத்தையும் கண்டறிய முடியாது...

கொள்ளு தாத்தாவின் பெயரும் தன் பெயரும் கிட்டதட்ட ஒரே மாதிரி இருப்பதினாலே அவன் எ.கே (அர்ஜூன் கிருஷ்ணா) க்ரூப் ஆ◌ஃப் கம்பெனிஸின் மொத்த அதிகாரமும் தன்னிடம் வந்ததோ என்று அர்ஜூனே நினைத்து வியந்திருக்கிறான்...

தன் தந்தை ருத்ரமூர்த்தியின் இறப்பிற்கு பிறகு அர்ஜூன் தொழிற்களை கையில் எடுக்கும் வரை தன் கணவர் பாலாவை விட அந்த தொழில் சாம்ராஜ்யத்தில் அதிகப்படியான பொறுப்புகளை வகுத்து வந்தவர் ஸ்ரீ.....

தந்தைக்கு பிறகு மகன் வரும் வரை ஸ்ரீயே எ.கே க்ரூப் ஆ.ஃப் கம்பெனிஸின் சேர்மன்... அர்ஜூன் முழுப் பொறுப்புகளை எடுத்துக் கொள்ளும் வரை திறம் பட அத்தனை தொழிற்களையும் செம்மையாக நடத்தியவர்....

அதனாலே அர்ஜூனிற்கு தன் அன்னையின் மீது அத்தனை மரியாதை இருந்தது...

ஆனால் அவை அனைத்தையும் ஒரே நிமிடத்தில் குலைத்து விடுவார் போல் தோன்றியது, தான் அவர் அருகில் இருந்தும் தன்னை கொஞ்சம் கூட கலக்காமல் அவர் இன்று எடுத்த அவனின் திருமணம் பற்றிய முடிவு....

அதிர்ச்சி விலகாமல் திகைத்து இருந்தவன் தன்னை ஒரு நிலைப்படுத்தி இன்னமும் இங்கிருந்தால் இது வேறு எங்கேயாவது போய் முடிந்து விடும் என்று உணர்ந்து அந்த இடத்தை விட்டு செல்ல முடிவெடுத்தான்.

அவன் திரும்பி செல்ல எத்தனித்த அந்த விநாடியே அதை கண்டுக் கொண்ட ஸ்ரீ,

"அர்ஜுன், ஒரு நிமிஷம் நில்லுப்பா... திவ்யாவோட முடிவ தெரிஞ்சுட்டு போகலாம்" என்றார் கொஞ்சம் கூட கலக்கம்

இல்லாமல்...

ஆனால் கலக்கம் அவரின் முகத்தில் தான் தெரியவில்லை.... உள்ளம் முழுவதும் கலங்கி திகிலாகத் தான் இருந்தது...

அவருக்கு நன்றாகவே தெரியும் தன் மகனை பற்றி....

அவன் உள்ளுக்குள் ஒரு எரிமலையாக பொங்கி கொண்டு இருக்கிறான் என்று.... அது எப்பொழுது வேண்டுமானாலும், எந்த நிமிடம் வேண்டுமானாலும் வெடித்து சிதற காத்திருக்கிறது...

"ஐயோ! அதற்குள்ளாகவே இந்த பெண் சம்மதம் சொல்லிவிட மாட்டாளா?? இவன் எந்த நிமிஷத்திலேயும் வெடித்து விடுவானே" என்று பயந்துக் கொண்டே இருக்க, திவ்யாவோ எந்த ஒரு வார்த்தையும் சொல்ல வருவதாய் தெரியவில்லை.

அதற்கு மேல் பொறுமையற்றவனாய் தன் அன்னையின் அருகில் வந்தவன் அவர் காதுக்கு அருகில் குனிந்து பல்லைக் கடித்துக் கொண்டு,

"மாம், போதும்! என்னைய ஏலம் போட்டது... திஸ் இஸ் தி லிமிட் [this is the limit]... இப்போ நீங்க இங்க இருந்து கௌம்ப போறீங்களா, இல்லையா?" என்றான்...

ஆனால் அதற்கு எல்லாம் அசந்து விடுவதாக இல்லை ஸ்ரீ...

"ஒரு நிமிஷம் இருப்பா" என்று கூறி விட்டு திவ்யாவின் அருகில் சென்றவர்....

"திவ்யா, என்னடா... இப்படி திடீர்னு கேட்கறாங்களேன்னு நினைக்காதடா... நிச்சயம் உனக்கு நல்லது செய்றதுக்கு தான் இந்த முடிவ எடுத்திருக்கேன்.... நல்ல நேரம் முடியறதுக்குள்ள தாலிய கட்டனும்..." என்றவர் தன் தோழியின் பக்கம் திரும்பி...

"கலா, நீயும் சொல்லுடி... இப்போ நான் எடுத்திருக்குற முடிவு நிச்சயம் நல்லா யோசிச்சு தான் எடுத்தது... உன் மகள நான் நல்லா பார்த்துக்குவேன்னு உனக்கு நம்பிக்கை இருந்தா திவ்யாவ மண மேடைக்கு அழைச்சுட்டுவா... இல்லைன்னா இப்பவே சொல்லிடு" என்க,

அப்பொழுது தான் பேச ஆரம்பித்தார் கலா....

"ஸ்ரீ, எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலைடி... இது சாதாரன விஷயம் இல்லை... கல்யாணம்... முதல்ல உன் மகனிடமும் பேசு... இது அவசரத்துல எடுக்க வேண்டிய முடிவு இல்ல... இரண்டு பேரும் மனமுவந்து இதுக்கு சம்மதிக்கனும்.... அவர் கிட்ட பேசுடி... அப்புறம் நாம முடிவெடுக்கலாம்" என்றார்.

ஏனெனில் திருமண மண்டபத்தின் வாயிலில் அர்ஜூன் தன் அன்னையிடம் பொறிந்து கொண்டு இருந்ததைப் பார்த்தவராயிற்றே...

எடுத்தோம் கவிழ்த்தோம் என்று முடிவெடுக்க கூடிய விஷயம் இல்லை.... இரண்டு சின்னஞ் சிறு ஜீவன்களின் வாழ்க்கை... ஒரு சின்ன தவறு கூட இருவரின் வாழ்க்கையும் சிதறடித்து விட்டும்...

பெண்ணின் அன்னை தனக்கு சாதகமாக பேசவும் இது தான் சமயம் என்று அர்ஜுன் வாய் திறக்கும் முன்னரே சுதாரித்த ஸ்ரீ,

"கலா, என் பையனப் பத்தி எனக்கு தெரியும்... அவன் என் பேச்ச தட்ட மாட்டான்... என்ன தான் அவன் பெரிய பிஸ்னஸ்மேனா இருந்தாலும் அவனுக்கு என்ன பத்தி நல்லா தெரியும்... நான் எடுக்கிற எந்த முடிவும் நிச்சயம் அவனுக்கும் நல்லதாவே இருக்கும்னு" என்றார் தெளிவாகவும் திடமாகவும்....

அதிர்ச்சியில் உறைந்து நின்றிருந்த அர்ஜுனோ கண்களாலேயே தன் தாயை எரித்துக் கொண்டிருந்தான்.

ஸ்ரீக்கு நன்றாக தெரியும்.... அர்ஜுன் எவ்வளவு அந்தஸ்து பார்ப்பவன் என்று....

கண்டிப்பாக அவன் திவ்யாவைப் போல் ஒரு ஏழை பெண்ணை திருமணம் செய்ய சம்மதிக்கவே மாட்டான்...

ஆனால் அவன் விருப்பப்படி அவனுக்கு திருமணம் முடிக்க வேண்டும் என்றால் அவன் நிச்சயம் தங்கள் அந்தஸ்துக்கு தகுந்தது போல் இந்தியாவிலேயே மிகப் பெரிய

கோடிஸ்வரர்களில் ஒருவரின் பெண்ணை தான் மணக்க முன் வருவான்....

அது போன்ற பெண்ணை ஏனோ ஸ்ரீக்கு தனக்கு மருமகளாக கொண்டு வர விருப்பம் இல்லை...

விதியே இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தை வலுவில் தன் காலடியில் போட்டு இருப்பதாகவே ஸ்ரீ எண்ணினார்....

இல்லை எனில் இத்தனை வருடங்களுக்கு பிறகு தன் உயிர் தோழி எப்படி தன்னை கண்டுப் பிடித்திருக்க முடியும்???

அதுவும் சரியாக தன் மகளின் திருமணத்திற்கு முன்...

எப்பொழுதும் தன் கணவருடனே திருமணம் போன்ற விஷேஷங்களுக்கு சென்று வந்தவருக்கு எப்படி இன்று அர்ஜூனோடு செல்ல சந்தர்ப்பம் அமைந்தது...

திருமண மேடை வரை வந்த மணமகன் ஏன் திருமணத்தை நிறுத்த வேண்டும்?? அவன் ஒரு வேளை திருமண நாளுக்கு முன்னதாகவே சொல்லியிருந்தால் கூட இத்தகைய ஒரு சூழல் உருவாகியிருக்க வாய்ப்பில்லையே....

தெரிந்தே இது போன்ற ஒரு நல்ல சந்தர்ப்பத்தை தவற விட ஸ்ரீக்கு மனதில்லை.

அதே சமயம் அவருக்கு தன் தோழியைப் பற்றியும்

தெரியும்…

நிச்சயம் கலாவின் மகள் தன் வீட்டிற்கு ஏற்ற மருமகளாகவும், தன் மகனை நன்றாக பார்த்துக் கொள்ளும் மனைவியாகவும் இருப்பாள் என்று….

அந்த நம்பிக்கையில் தான் அவர் இந்த முடிவை எடுத்திருந்தார்….

ஆனால் அவர் ஒன்றை அந்த நேரத்தில் மறந்துப் போனார்… மறந்து போனாரா அல்லது அதை வேண்டுமென்றே நினைக்க விரும்பவில்லையா என்பது அவருக்கு மட்டும் தான் தெரியும்….

அது அவர் மகன் அத்தனை விரைவில் அவர் செய்யப் போகும் ஒரு காரியத்தை ஏற்கவோ அல்லது விரும்பவோ போவது இல்லை என்று.

ஆனால் இருந்தும் அவர் தன் பிடியை தளர்த்துவதாக இல்லை… அவரின் பிடிவாதத்தை கண்ட அர்ஜூனிற்கு திகைப்பதை தவிர வேறு வழி தெரியவில்லை…

இதற்கு மேல் அத்தனை பேர் சுற்றி இருக்கும் பொழுது தன் அன்னையை எதிர்த்து பேச அர்ஜூனும் விரும்பவில்லை… ஏனோ தன் கரங்களையும் கால்களையும் யாரோ, எதுவோ கட்டிப் போட்டது போலவே உணர்ந்தான்…

அதுவும் விதியின் செயலோ…. அதற்கு தேவையான நேரத்தில் மனிதனை, தன் உணர்வுகளை இழக்க செய்து

தன் வழிக்கு கொண்டு வருவது....

சிறு சலசலப்பிற்குப் பின் அங்கிருந்தவர்கள் அனைவரும் மன மகிழ்ச்சியோடு ஸ்ரீயின் முடிவே சரி என்று முடிவெடுத்தனர்....

மண வாழ்க்கையில் நுழையப் போகும் இருவரை தவிர அனைவர் முகத்திலும் திருப்தியும் நிம்மதியும் பரவ ஆரம்பித்து.

அர்ஜுன் அருகில் வந்த சிவசுப்ரமணியம் கண்கள் கலங்க நன்றியுணர்ச்சியோடு அவன் காலில் விழப் போக, அர்ஜுனோ தன் தாயை முறைத்துக் கொண்டே அவரை பிடித்து தூக்கினான்.

Likes:Vsumimadurai, Niranjanadevi, Priayamadhavan and 17 others



*Jelineusa*
**JB**

Apr 4, 2018

#10

பின் அனைவரும் மணமகளின் அறையை விட்டு வெளியே செல்ல, ஸ்ரீ மகனின் முகத்தை திரும்பி கூட பார்க்காமல் திவ்யாவை அழைத்துக் கொண்டு மண மேடைக்கு செல்ல, அர்ஜுனோ என்ன செய்வதன்று

தெரியாமல் நின்றுக் கொண்டிருந்தான்.

அவன் அருகில் வந்த கலா,

"வாங்க மாப்பிள்ளை...." என்று அழைக்க,

"மாப்பிள்ளை" என்ற அழைப்பே அவனுக்கு கசப்பாக இருந்தது...

மனம் முழுவதும் எரிச்சலும் கோபமும் மண்டியிருக்க, இருந்தும் ஒன்றும் செய்ய வழியில்லாது அவரை பின் தொடர்ந்தான்.

மீண்டும் திருமண மண்டபம் களைக் கட்ட ஆரம்பித்து...

மணமேடையில் மணமகளை அமரச் செய்துவிட்டு ஸ்ரீ திரும்பி அர்ஜுனைப் பார்க்க, அவன் கலாவின் பின் அமைதியாக வருவதைக் கண்டு ஆச்சரியமாகவும் யோசனையாகவும் இருந்தது.

"புலி எதுக்கு பதுங்குதோ??" என்று எண்ணியவர்,

"முதல்ல கல்யாணம் முடியட்டும்... அப்புறம் மத்ததெல்லாம் யோசிக்கலாம்" என்று விட்டுவிட்டார்.

ஐய்யர் "மாப்பிள்ளையை மணமேடையில உக்கார வைங்கோ. முகூர்த்தம் முடியப் போகுது" என்க,

அர்ஜுன் மணமேடையில் அமர்த்தப்பட்டான்.

அதன் பின் சுப காரியங்கள் மளமளவென்று நடந்தது...

கலா, ஸ்ரீ, சிவசுப்ரமணியம், வினோத் மற்றும் அனைவரும் சுற்றி நிற்க,

ஐய்யர் "கெட்டி மேளம்! "கெட்டி மேளம்! என்று குரல் கொடுக்க, நாதஸ்வரம் மங்கள இசையை முழங்க,

தி க்ரேட் அர்ஜுன் [The great Arjun].....

பள்ளி கல்லூரி வாழ்க்கையில் கூட தன்னருகில் அமர்வோரிடம் அந்தஸ்து பார்த்தவன்..... தொழில்வட்டாரத்திலும் வெளியிடங்களிலும் தனக்கு நிகர் இல்லாதவர்களை கால் தூசிக்கு மதிக்காதவன்..... எந்த சூழ்நிலையிலும் தனக்கு கீழ் இருப்பவர்களை தன் ஒற்றை பார்வையிலேயே தள்ளி வைப்பவன்...

நேற்று வரை யாரென்று அறியாத ஒரு கிராமத்து ஏழை பெண்ணின் கழுத்திற்கு அருகில் மங்கள நாணை கொண்டு போனவன் முடிச்சு போடாமல் மனம் தடுமாறினான்.

கழுத்து வரை மாங்கலயத்தை கொண்டு போனவன் தயங்கி நிற்க, திவ்யாவின் அருகில் குனிந்து நின்று இருந்த கலாவிற்கும் ஸ்ரீக்கும் பகீரென்று இருந்தது....

ஒரு வேளை அவனைப் போல் இந்த மாப்பிள்ளையும் எழுந்து சென்று விடுவாரோ என்று கலா திகிலோடு காத்திருந்தார் என்றால், ஏற்கனவே நொந்து போயிருக்கும்

தன் தோழியையும் அவள் மகளையும் மீண்டும் துன்பத்தில் ஆழ்த்திவிடுவானோ நம் மகன் என்று கதி கலங்கி போய் காத்திருந்தார் ஸ்ரீ....

ஆனால் அர்ஜூன் தயங்கியது சில விநாடிகள் தான்....

சட்டென்று தன் அன்னையை நிமிர்ந்து பார்த்தவன் எது நடக்கனும்னு இருக்கோ அது நடந்தே தீரும் என்று ஒரு பெருமூச்சை விட்டவன் திரு மாங்கல்யத்தின் இரண்டு முடிச்சுகளையும் போட, மூன்றாவது முடிச்சை போட பின்னால் இருந்து யாரோ கையை நீட்ட அவர்களையும் நிமிர்ந்து பார்த்தவன் என்ன நினைத்தானோ தானே மூன்று முடிச்சுகளையும் போட்டு, உணர்ந்தோ உணராமலோ தன் வாழ்க்கை பயணத்தில் திவ்யா என்ற ஒரு ஜீவனையும் இணைத்துக் கொண்டான்....

அங்கே பிரிக்க முடியாத ஒரு அழகான பந்தம் உருவானது....

கடவுள் இணைத்ததை மனிதன் (அர்ஜூன்) பிரிக்காதிருக்கட்டும்!!!!!!

தொடரும்....

***<u>மலரினும் மெல்லியவள்!</u>***

***<u>பாகம் - 3</u>***

மற்ற திருமணச் சடங்குகள் நடக்க ஆரம்பிக்க, ஏதோ ஒரு நினைவில் கடமைக்கு என்று அர்ஜூன் ஐய்யர் சொல்லிக் கொண்டு இருந்ததை செய்தான் என்றால் திவ்யாவின் நிலைமையோ சொல்ல முடியாத வகையில் இருந்தது...

மனம் கணக்க கண்களில் நீர் குளமாக தேங்கி இருக்க தலை நிமிராமலே ஐய்யர் சொல்வதை செய்து கொண்டிருந்தவளுக்கு இது வரை அறிந்திராத, சில நிமிடங்களுக்கு முன் வரை அந்நியனாக இருந்து இப்பொழுது முழு உரிமையுள்ள கணவனாக தன்னருகில் அமர்ந்து இருந்தவனை நினைத்து உள்ளம் கலங்கியது...

"யார் இவர்? எங்கு இருந்து வந்தவர்? எப்படி பட்டவர்? இவருக்கு இந்த திருமணத்தில் விருப்பமா இல்லை அவர் அம்மா சொன்னதற்காக இதற்கு ஒத்துக் கொண்டாரா?" என்று அந்த சித்த பிரம்மை பிடித்த நிலையிலும் அவளின் அடி மனதில் ஆயிரமாயிரம் கேள்விகள்....

"கல்யாணத்திற்கு தன் அன்னை அழைக்கும் போதே வராமல் இருந்திருந்தால் இப்படி ஒரு சம்பவம் தன் வாழ்கையில் நடந்து இருக்க வாய்ப்பே இல்லை... நான் எப்படி இதற்கு சம்மதித்தேன்? எது என்னை மறு பேச்சு பேசாமல் மண மேடையில் அமரச் செய்தது? யார் இந்த பெண்? எப்படி நான் அவளின் கழுத்தில் தாலி கட்டினேன்? எப்படி அவளை நான் ஏற்றுக் கொண்டேன்?" என்று அர்ஜூன் நினைக்க,

எதை நினைப்பது எதை நினைக்காமல் இருப்பது என்று குழம்பிய மனதுடன் அவன் அருகில் அமர்ந்திருந்தாள் திவ்யா.

நேற்று வரை ஒருவருக்கொருவர் புதிய முகமாக அறிமுகம் இல்லாதவர்களாக இருந்தவர்கள்....

இன்று வாழ்க்கையின் பாதையில் ஒருங்கே பயணிக்க போகும் விந்தையை நினைத்து விதியை குறை சொல்வதா அல்லது யாரைக் குறை கூறுவது என்று குழம்பிக் கொண்டிருக்கும் போது ஐய்யர் அழைக்க, இந்த உலகத்திற்கு வந்தனர் இருவரும்.

பெண் வீட்டாரின் சம்பிரதாயப்படி மண மேடையிலேயே மாப்பிள்ளை மணப் பெண்ணின் காலில் மெட்டி அணிவிக்க வேண்டும்...

ஐய்யர் அர்ஜூனை அழைத்து திவ்யாவின் காலில் மெட்டி அணிவிக்க சொல்ல,

ஸ்ரீக்கு "ஐயோ! இவன் இவ்வளவு நேரம் பொறுமையா இருந்ததே பெரிசு, இதுல இது வேறையா?" என்றிருந்தது....

முதலில் இந்த இடத்தில் இருந்து இவனை கூட்டி செல்ல வேண்டும் பின் மற்ற சாஸ்திர சம்பிரதாயங்களை எல்லாம் பார்த்துக் கொள்ளலாம் என்று சட்டென்று முடிவெடுத்தவர் ஐய்யரிடம்,

"எங்க வழக்கப்படி பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு உள்ளே அழைத்துப் போகும் முன் வாசலில் வைத்து தான் மெட்டி போடனும்... அதனால நாங்க இப்போ பெண்ணை அழைச்சுட்டு போறோம்.... அங்க போய் மற்ற எல்லா சடங்குகளையும் செஞ்சுக்கிறோம்" என்று கூறி விட்டு கலாவை அழைத்து,

"கலா, நாம கிளம்பலாமா?" என்றார்.....

காலை மணமகன் திருமணத்தை நிறுத்தியதில் அதிர்ந்து இருந்தவருக்கு, பின் கனவிலும் நினைத்திராத அளவில் தன் உயிர் தோழியை இத்தனை நீண்ட வருடங்களுக்கு பிறகு சந்தித்து அவளின் மகனுக்கே தன் மகளை மண முடித்து வைத்ததை நினைத்து மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தவருக்கு ஸ்ரீயின் குரல் நிதர்சனத்தை உணர்த்தியது...

தங்கள் செல்ல மகள் திவ்யாவின் நிலைமை!

தவிப்புடன் திரும்பி தன் கணவரைப் பார்க்க, சில நொடிகள் யோசித்த சிவசுப்ரமணியம் ஏதோ முடிவு செய்தவராய் ஸ்ரீயை நோக்கி...

"நீங்க மாப்பிள்ளையும் பெண்ணையும் அழைச்சுட்டு போங்க... நாங்க கல்யாணத்திற்கு வந்தவங்களை கவனிச்சுட்டு, சாப்பாடு வேலை எல்லாம் முடிச்சிட்டு பின்னாடியே வரோம்" என்றார்.

ஆனால் கலாவிற்கோ திவ்யா இதனை எவ்வாறு எடுத்து கொள்வாள் என்று தெரியவில்லை...

சின்ன பெண் வேறு... சாதாரணமாக கோவிலுக்கு செல்வதென்றால் கூட தனக்கு துணைத் தேடுபவள்....

தோழிகள் ஒருவரும் அகப்படவில்லை என்றால் தன் அண்ணன் வினோத்தின் காலில் விழுந்து கெஞ்சியாவது அவனை தன்னுடன் அழைத்து செல்வாள்...

ஆனால் இன்றோ யாரென்றே தெரியாதவர்களுடன் தனியே செல் என்றால் அவள் மனம் என்ன பாடுபடும்...

அதே சமயம் அவர் கணவர் சொல்வது போல் மண்டபத்தில் இருக்கும் விருந்தினர்களை அப்படியே விட்டுவிட்டு செல்வதும் முறையல்ல… அவரால் ஸ்ரீயையும் அர்ஜூனையும் தங்களுடன் தங்குவதற்கு கேட்பதற்கும் அச்சமாக இருந்தது…

ஏனெனில் தன் தோழியையாவது சமாளித்துக் கொள்ளலாம்…

ஆனால் மாப்பிள்ளை?

ஏற்கனவே அவர் முகத்தில் தெளிவு என்பதே இல்லை… அவரின் குழம்பிய முகமே சொல்கிறது நிச்சயம் அவருக்கு இந்த திருமணம் பிடித்திருக்க வாய்ப்பில்லை என்று… அதற்கு காரணத்தை கண்டுப் பிடிப்பது அத்தனை கடினமான விஷயமா என்ன?

அவரின் தோற்றமும் தோரணையுமே சொல்கிறதே அவரது வசதியையும் செல்வாக்கையும் பற்றி… அதுவும் ஸ்ரீயே தன் வாயால் சொல்லிவிட்டாள்… இவர் தான் அவர்களின் அத்தனை தொழில்களையும் கவனித்துக் கொள்கிறார் என்று…

இப்பேற்பட்டவர் தன் மகளின் கழுத்தில் தாலி கட்டியதே பெரிது... இதில் இதற்கு மேல் அவரிடம் என்ன எதிர்பார்ப்பது? அதற்கு நமக்கு என்ன தகுதி இருக்கிறது?

இதே யோசனையுடன் கணவரையே பார்த்திருக்க... சிவசுப்ரமணியமோ..

"கலா, திவ்யாவை பத்தி கவலைப்படாத.... நாம் இங்க இருக்கவங்களை இப்படியே விட்டுட்டு வர முடியாது... அவங்க கௌம்பட்டும்... நைட்டுக்குள்ள நாம் அவங்க வீட்டிற்கு போய்விடலாம்" என்றார்.

கலங்கிய விழிகளுடன் சரி என்று தலை அசைத்தார் கலா....

ஸ்ரீக்கும் அதுவே சரி என்று பட்டது...

ஏனெனில் இந்த மண்டபத்தை விட்டு கிளம்பிய பின் தான்

தன் மகன் ருத்ர தாண்டவம் ஆட போகிறான்....

"அதற்கு இவங்க நம்ம கூட வராம இருக்கிறது தான் நல்லது" என்று மனசுக்குள்ளயே கணக்கு போட்டவர்,

"சரி கலா, அப்போ நாங்க கௌம்புறோம்" என்றார்.

திவ்யாவிற்கோ ஏற்கனவே தன் தந்தை தன்னை தனியாக அனுப்ப முடிவு செய்ததை கேட்டு பகீரென்று இருக்க, இப்பொழுது ஸ்ரீ "நாங்க கிளம்புகிறோம்" என்றதும் அடி வயிறு கலங்கியது...

காலையில் மாப்பிள்ளை தாலியைக் கட்டமாட்டேன் என்று சொன்னதில் இருந்து, இதோ யாரென்றே அறியாத ஒருவருடன் தனியாக போ என்று தன் தந்தை சொல்வது வரை நினைத்தவளுக்கு ஏதோ கண்களை கட்டி நடு காட்டில் விட்டது போல் தோன்றியது.

"இது வரை வாழ்க்கையில் அறிந்திராத ஒருவருடன் எப்படி நம்மை நம்ம அப்பா அம்மா அனுப்பறாங்க? மாப்பிள்ளையின் முகத்தை கூட நிமிர்ந்து பாக்கலை...

அவர் எப்படி பட்டவரோ? அவங்க வீட்டுல யார் யார் இருக்காங்களோ? இன்னும் சொல்ல போனால் அவர் என் முகத்தை பார்த்தாரா இல்லையான்னு கூட தெரியலை? அதுக்குள்ள நம்மை அவர் கூட போக சொல்றாங்களே" என்று தனக்கு தானே மனதிற்குள் கேள்விகள் கேட்டு கேட்டு கலைத்துப் போனாள் அந்த சின்ன பெண்.

அர்ஜூனின் நிலைமையோ அதை விட மோசமாக இருந்தது...

அவனுக்கு தன் அன்னையின் மேல் அளவுக்கதிகமான பாசம் உண்டு... அவன் எதிரில் நின்று பேச அனைவரும் பயப்படும் பொழுது, தன் எண்ணத்தை தைரியமாக வெளிப்படுத்தும் ஒரே ஜீவன் அவன் அன்னை தான்...

அவன் தந்தை கூட அவனுடைய முடிவுகளில் தலையிட தயங்கும் நேரத்தில் எந்த தயக்கமும் இல்லாமல் அவனுக்கு எடுத்து கூற ஸ்ரீ என்றுமே யோசித்ததில்லை... அதனாலேயே அவனுக்கு ஸ்ரீயிடம் ஒரு தனி மரியாதை உண்டு...

கிட்டத்தட்ட தன் அன்னையை அவன் ஒரு குரு

ஸ்தானத்தில் வைத்திருந்தான் என்றே சொல்லலாம்…

ஆனால் இன்றோ அதை தன் அன்னை தவறாக பயன்படுத்திக் கொண்டாரோ என்றே அவனுக்கு தோன்றியது… முதன் முறை அவரின் மேல் வெறுப்பு வந்தது…

Likes:Niranjanadevi, Priayamadhavan, Vijayasanthi and 24 others



*Jelineusa*
**JB**

Apr 4, 2018

#12

இளையவர்களின் நிலையை உணர்ந்த ஸ்ரீ,

"சரி, அர்ஜுன், வா நாம கௌம்பலாம்" என்று கூறிவிட்டு, கலாவிடமும் சிவ சுப்ரமண்யத்திடமும் தன் வீட்டு விலாசத்தை கொடுத்து விட்டு மண்டபத்தை விட்டு வெளியேர, கலங்கிய விழிகளுடனும் திகில் நிறைந்த முகத்துடனும் திவ்யா தன் அன்னையை திரும்பி பார்த்தாள்.

ஒரு தாயாக தன் மகளின் தவிப்பை உணர்ந்த கலா மகளின் அருகில் சென்றவர்,

"திவ்யாம்மா, இப்போ நீ என்ன நினைக்கிறன்னு எனக்கு தெரியும்... அம்மா என்னடா யாரோடவோ திடீர்னு போக சொல்கிறாள்னு நினைக்கிற இல்ல? தைரியமா போடாம்மா... நீ போறது என் ஸ்ரீயோட வீட்டுக்கு.... நானே தேடி இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு மாமியார உனக்கு பார்த்திருக்க முடியாது... ஸ்ரீ உனக்கு அம்மாவா இருப்பா... அவ என்ன விட உன்ன நல்லா பார்த்துக்குவா... போடா... நாங்க சீக்கிரம் அங்க வரோம்... வந்து எல்லாத்தையும் பேசிக்கலாம்.... தைரியமா போடா" என்றார்.

அதையே தன் தந்தையும் சொல்ல, வேறு வழி இன்றி ஸ்ரீயின் பின்னால் நடக்க ஆரம்பித்தாள்.

இவர்களுக்கு முன்னரே காரை அடைந்த அர்ஜூன் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்திருக்க, திவ்யா ஸ்ரீயுடன் பின்னால் அமரப் போக, ஸ்ரீயோ,

"திவ்யா, நீ முன்னாடி ஏறுமா" என்றார்....

"ஸ்ரீ - நீ அடங்க மாட்ட?" என்றது அவரது மனசாட்சி... இருந்தாலும் அதற்கெல்லாம் பயப்படுபவரா அவர்?

ஆனால் அவருக்கு விழி நீர் வழிய, கலங்கிய முகத்துடன் தன் மகளேயே பார்த்திருக்கும் தன் தோழி, தன் மகள் அவள் கணவனுடன் அமர்ந்து செல்வதை பார்க்க வேண்டும் என்று ஒரு சின்ன ஆசை...

அதற்கும் நேரம் காலம் வர வேண்டாமா????

ஏற்கனவே நடந்து முடிந்த அனைத்தையும் நினைத்து புருவம் நெறிக்க, மூக்கு விடைக்க, முகம் சிவக்க ஆத்திரத்திலும் ஆங்காரத்திலும் அமர்ந்திருந்த அர்ஜூனுக்கு இது இன்னொரு அடியாக இருந்தது...

உண்மையில் அவனுக்கு தன் அன்னையின் செயல்கள் எதுவுமே விளங்கவில்லை...

ஸ்ரீ எப்பொழுதுமே இப்படி இல்லை... எதை செய்தாலும் ஒரு முறைக்கு பல முறை ஆழ்ந்து யோசித்தே முடிவு எடுப்பார்....

அதிலும் அர்ஜூனை நன்கு புரிந்துக் கொண்டவர் அவர் ஒருவரே... அவரா இன்று இப்படி நடந்து கொள்கிறார்?? என்று குழம்பி போனான்...

ஆனால் தன் மகனை நன்கு புரிந்துக் கொண்டதினால் தான் அவர் இந்த திருமணத்தையே நடத்தினாரென்று அவனுக்கு தான் புரியவில்லை..... இருந்தும் அவனால் இப்பொழுது எதுவும் செய்ய முடியாத நிலை...

ஏனெனில் மண்டபத்தில் இருந்திருந்த அனைவரும் இவர்களைத் தான் பார்த்திருந்தார்கள்...

ஆனால் திவ்யாவிற்கோ காரில் முன் இருக்கையில் அர்ஜூனின் அருகில் அமர அச்சமாக இருந்தது.

அவள் ஸ்ரீயிடம் தயங்கியவாரே, "நான் பின்னாடியே

உட்கார்ந்திக்கிறேன்" என்க, அவளின் முகத்தில் இருந்த கலக்கத்தை பார்த்த ஸ்ரீ புன்முறுவலுடன் அவளை தன் அருகில் அமர்த்திக் கொள்ள, அர்ஜூனுக்கு "அப்பாடி" என்றிருந்தது.

மண்டபத்தின் வாயிலில் ஒரு வித கலக்கத்துடன் இருந்த கலாவை பார்த்து ஸ்ரீ ஆறுதலாக கண்களை மூடி திறக்க, திவ்யா தன் தாய் தந்தையையும், அண்ணனையும் பார்த்து தலை அசைக்க, இவர்கள் யாரையும் கண்டுக் கொள்ளாமல் காரை சீறி கிளப்பினான் அர்ஜூன்.

வாழ்க்கையை தன்னுடன் சரி பாதியாக பகிர்ந்துக் கொள்ளப் போகிறவளையே அவன் இது வரை திரும்பி கூட பார்க்கவில்லை, மற்றவர்களை பற்றியா அவன் நினைக்க போகிறான்.

கார் மீண்டும் கடலூர் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ரேஸ் கார் வேகத்தில் பறந்தது...

அவனுடைய வேகத்திலேயே தெரிந்தது அவன் எந்நேரமும் வெடிக்க தயாராக இருக்கிறான் என்று.

அவனுடைய வேகமும், அதீத மௌனமும் ஒரு வித திகிலான சூழ்நிலையை அங்கு கொண்டு வர, மிக மிக மௌனமாகவே இருந்த அந்த பயணம் ஸ்ரீக்கு அதிக பட்ச அச்சத்தைக் கொடுக்க, உண்மையில் அவன் வாய் திறந்து பேசினால் தேவலாம் போல் இருந்தது.

ஆனால் அர்ஜூனை பற்றி நன்றாக தெரியும்... அவன் எதை பேசினாலும் பேசுவதற்கு முன் நிறைய யோசிப்பவன்....

அதுவும் தான் செய்திருக்கும் காரியம் சின்னதா என்ன? அவன் வாழ்க்கையையே புரட்டி போட்டு இருக்கிறாரே.... எதற்கும் தயாராகவே இருந்தார் ஸ்ரீ....

ஒரு மணி நேரம் சென்றவுடன் காரின் வேகத்தை குறைத்து பின் காரை ஒரு ஒரமாக நிதானமாக நிறுத்திய மகனை பார்க்க அவருக்கே உள்ளுக்குள் குளிரெடுத்தது என்றால் திவ்யாவை பற்றி சொல்லவா வேண்டும்???

தன் இஷ்ட தெய்வமான முருகனை மனதிற்குள் நினைத்து...

"முருகா, இன்னைக்கு நடந்தது எதுவும் என் இஷ்டப்படி நடக்கலை... இதுல என் தப்பும் எதுவும் இல்லை... இதுக்கு மேலயும் அதிர்ச்சிய தாங்குற சக்தியும் எனக்கு இல்ல... என்னை கை விட்டுறாதப்பா....." என்று திவ்யா வேண்ட,

முருகனோ, "என்னை மன்னித்து விடு மகளே... இதற்கு மேல் தான் அதிர்ச்சிகள் உனக்கு இருக்கு.... ஆனால் அத தாங்கிக்கிற சக்திய நிச்சயம் நான் உனக்கு தருவேன்" என்று கூறி சிரித்தார்.

காரை ஓரமாக நிறுத்திய அர்ஜூன் "ஷிட்" என்று ஸ்டியரிங் வீலை ஓங்கி குத்த திவ்யாவிற்கு தூக்கி வாரிப் போட்டது...

அதிர்ந்து போய் தன் கணவனின் முதுகையே வெறித்து பார்க்க, அவன் தன் தலையை அழுந்த கோதிவிட்டுக் கொண்டு காரை விட்டு இறங்கினான்...

அவன் பின்னால் இறங்க நினைத்த ஸ்ரீக்கு நிச்சயம் அவன் தன்னை கண்டதும் காட்டு கத்தல் கத்துவான், அது திவ்யாவிற்கு இன்னும் அதிர்ச்சியை தான் கொடுக்கும்

என்று எண்ணியவர் காரிலையே அமர்ந்திருக்க,

காரிலிருந்து இறங்கி அடிப்பட்ட புலி போல் அங்கும் இங்கும் நடந்த அர்ஜூனை அப்பொழுது தான் முதன் முறையாக கவனித்தாள் திவ்யா...

காலையிலிருந்து தன் வாழ்க்கை பந்தாடப்படுவதிலேயே குறியாக இருக்க, அவளுக்கு இந்த ஒரு நாளிலிருந்து எப்படி தப்பித்துக் கொள்ள போகிறோம் என்று பாடாய் இருக்க அவளுக்கு அர்ஜூனை பார்க்க எங்கு நேரம் இருந்தது?

ஆனால் அவன் காரின் அருகில் இங்குமங்கும் நடக்கும் பொழுது தான் அவன் அவளுக்கு தெளிவாக தெரிந்தான்....

ஒரு சின்ன கிராமத்தில் பிறந்து அதை சுற்றிய ஊர்களிலேயே படித்து வெளி உலகமே தெரியாமல் வளர்ந்தவள்...

ஆறு அடி மூன்று அங்குலத்திற்கு நெடு நெடுவென வளர்ந்து, நல்ல சிவந்த நிறத்தோடு, வட நாட்டு கதாநாயகன் போல் கம்பீரமாக, ஆளை அசரடிக்கும் ஆளுமையோடு மொத்தத்தில் ஆணழகனாய் இருந்தவனை கண்ணிமைக்கவும் மறந்து பார்த்தாள்.

நிச்சயமாக கனவில் கூட அவள் இவ்வளவு அழகான கணவனை எதிர்பார்த்து இருக்கவில்லை....

ஏனெனில் திருமணத்தை மணமேடையில் நிறுத்தி சென்ற அந்த கோழையை அவள் ஒரு முறை கூட பார்த்ததில்லையாதலால் அவன் முகம் கூட தன் மனதிலோ அல்லது இதயத்திலோ பதியவில்லையாதலால், இதோ தன் அன்னை சொன்னார் என்றவுடன் தன் வசதி, அந்தஸ்து எதுவும் பார்க்காமல் தன் கழுத்தில் தாலிக் கட்டிருக்கும் இவனே என் கணவன் அன்று அந்த நிமிடமே அவள் மனதில் அர்ஜூன் ஆழமாக புகுந்துவிட்டான்.....

ஆனால் அதே சமயம் அவனின் முகத்தை இப்பொழுது முதன் முறை பார்க்கவும், இவ்வளவு அழகானவன் தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்வானா? என்று நினைக்கும் போதே "உனக்கே இது பேராசையாக

தெரியவில்லையா?" என்று அவளின் மனசாட்சி அவளை இடித்துரைத்தது.

இதில் அவன் வேங்கை போல் ஆங்காரத்துடன் நடந்துக் கொண்டும், தலையை அழுந்த கோதிக் கொண்டும், வாயில் எதையோ முணுமுணுத்துக் கொண்டும் இருப்பதை பார்த்தால் மிகப் பெரிய விபரீதம் உருவாகப் போகிறது என்பதை புரிந்துக் கொண்டாள்...

கதி கலங்க புடவை முந்தானையின் முடிச்சுக்களை இறுக்க பிடித்துக் கொண்டு அமர்ந்திருக்க, அடிபட்ட சிங்கம் போல் சீற்றத்துடன் மகன் இருப்பதை பார்த்த ஶ்ரீக்கோ இதற்கு மேலும் காரில் அமர்ந்திருப்பது நல்லதல்ல என்பது புரிந்து மெல்ல காரை விட்டு இறங்கினார்...

அவர் இறங்கியதும் அவரை தீப் பார்த்த அர்ஜூன் காரின் முன் பக்க கதவை ஓங்கி சாத்த ஶ்ரீக்கே ஒரு விநாடி உடல் தூக்கி போட்டது.

"அர்ஜூன்" என்று அவன் அருகில் வர, தன் கையை அவர் முகத்திற்கு நேரே நீட்டி பேசாதிர்கள் என்று சைகை மட்டும் காட்டி விட்டு தன்னுடைய அலை பேசியை எடுத்தான்.

ஸ்ரீக்கு நன்றாக தெரியும் அவன் யாரை அழைக்கப் போகிறான் என்று....

தன் தந்தையை அலை பேசியில் அழைத்த அர்ஜூன் தன் அன்னையிடம் அலை பேசியை கொடுத்து "நீங்களே நடந்ததை டாட்க்கு சொல்லுங்க" என்றான் அடக்கப்பட்ட கோபத்தில்.

ஸ்ரீக்கு மயக்கமே வரும் போல இருந்தது....

இதை எல்லாம் எதிர்பார்த்தவர் தான்... ஆனால் அது நிஜத்தில் நடக்கும் பொழுது தான் மனிதர்களுக்கு ஒட்டு மொத்த தைரியமும் போய்விடுகிறது.

அர்ஜூனிடமிருந்து அலை பேசியை வாங்கியவர் தன் கணவரின் எண்ணைப் பார்க்க மறுமுனையில் அழைப்பை எடுத்தவுடன்,

"பாலா, நான் ஸ்ரீ பேசுறேன்" என்றார்...

Likes:Vijayasanthi, Niranjanadevi, Priayamadhavan and 20 others



***Jelineusa***
**JB**

Apr 4, 2018

#13

அதற்குள்ளாகவேவா திருமணம் முடிந்தது என்று யோசித்த பாலா,

"என்னடா, அர்ஜூன் உடனேயே கிளம்புனனும்னு சொல்லிட்டானா?" என்று வினவ,

இதற்கு மேல் தாமதிக்க முடியாது என்று உணர்ந்த ஸ்ரீ,

"பாலா, நான் உங்களிடம் சொல்லாமல் ஒரு பெரிய விஷயம் செய்துட்டேன்... முதல என்ன மன்னிக்கனும்... உங்களுக்கே நல்லா தெரியும்.... நான் எதையும் ரொம்ப யோசிக்காம செய்யமாட்டேன் என்று" என்றார்.

"ஸ்ரீ, என்ன சொல்ல வர? எதுவும் பிரச்சனையா? அர்ஜூன் எதுவும் பிரச்சனை செஞ்சானா?"

"இல்லங்க, அவன் எதுவும் பிரச்சனை செய்யலை... நான் தான் செஞ்சுட்டேன்...."

ஸ்ரீ இப்படி சொல்லும் பொழுதே ஏதோ மிகப் பெரிய விஷயம் நடந்திருக்கு என்று யூகித்துக் கொண்டவர்,

"நீங்க இப்போ எங்க இருந்து பேசுறீங்க?" என்றார் யோசனையுடன்...

"நாங்க கடலூரிலுருந்து கௌம்பிட்டோம்.. வர வழியில இருந்து தான் பேசுறோம்.."

"என்னம்மா, வர வழியில ஏதுவும் பிரச்சனையா?"

மீண்டும் பாலா கேட்க, இதற்கு மேல் தாமதிக்க முடியாது என்று நினைத்த ஸ்ரீ உடனேயே விஷயத்துக்கு வந்தார்....

"நம்ம அர்ஜூனுக்கு கல்யானம் ஆயிடுச்சுங்க"

அவ்வளவு தான்.... பாலா பதற்றத்துடன் "என்ன ஸ்ரீ, என்ன சொல்ற? விளக்கமா சொல்லு" என்க

ஸ்ரீ நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் சொல்ல எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டிக் கொண்டிருந்தவர்,

"ஸ்ரீ, நீ என்ன செஞ்சிருக்கன்னு உனக்கு புரியுதா?" என்றார் தவிப்புடன்...

"தெரியுதுங்க, ஆனா கலாவோட நிலைமையும் நினைச்சுப்பாருங்க... எனக்கு இப்படியொரு நிலைமை வந்தா அவளும் இதையே தான் செஞ்சுருப்பா"

"ஸ்ரீ, அது வேற யாருக்கு வேணா பொருந்தும்... ஆனா நீ பேசுறது அர்ஜூனை பத்தி... அவன பத்தி எல்லோரையும் விட உனக்கு தான் நல்லா தெரியும்... இப்பொ இதுல ஒரு பொண்ணோட வாழ்க்கையும் இருக்கு..." என்று பெருமூச்சுவிட்டவர் சில விநாடிகள் தாமதித்து...

"சரி, நீ அர்ஜூனிடம் ஃபோனைக் குடு" என்றார்....

இத்தனையும் சற்று தள்ளி நின்று கேட்டுக் கொண்டிருந்த அர்ஜூன், ஸ்ரீ அவனிடம் அலை பேசியை நீட்ட தன் அன்னையிடமிருந்து வெடுக்கென அலை பேசியை பிடுங்கியவன்,

"டாட், நாங்க அங்க வந்து சேரதுக்குள்ள, எனக்கு ஒரு லாயரை பார்த்து வைங்க" என்றான்.

குழம்பிய முகத்துடன் ஸ்ரீ அவன் முகத்தை பார்க்க, தன் அன்னையை பார்த்துக் கொண்டே,

"ஐ நீட் டு டாக் அபௌட் டிவோர்ஸ் [i need to talk about divorce]" என்றான் ஒவ்வொரு வார்த்தையாக ஆனால் அழுத்தம்

திருத்தமாக...

இது வரை நடந்த அனைத்தையும் திறந்திருந்த கார் கதவின் வழியாக கேட்டுக் கொண்டிருந்த திவ்யாவிற்கு எது காதில் விழுந்ததோ இல்லையோ டிவோர்ஸ் என்ற வார்த்தை நன்றாகவே விழுந்தது.

இனி எந்த ஒரு அதிர்ச்சியும் வரக் கூடாது முருகா என்று வேண்டிக் கொண்டவளுக்கு வந்த முதல் அதிர்ச்சியே அவளின் உயிர் வரை சென்று அவளை வேரோடு பிடுங்கி சாய்த்தது.

அதிகம் படிப்பறிவில்லாத மக்கள் வாழும் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவளுக்கு, இறக்கும் வரை கணவனே தெய்வம் என்று போதிக்கப் பட்டிருந்தவளுக்கு, விவாகரத்து என்பது ஒரு பெண்ணின் வாழ்வின் முடிவிற்கு சமாணம்...

ஏற்கனவே முதல் மாப்பிள்ளை நடக்கவிருந்த திருமணத்தை நிறுத்த, கழுத்தில் தாலியை கட்டிய

கணவனோ திருமணம் முடிந்து மூன்று மூன்று மணி நேரத்திற்குள்ளாகவே விவாகரத்து பற்றி பேச, இதற்கு தான் மண்டபத்திலேயே தூக்கு போட்டு செத்தே இருக்கலாம் என்று தோன்றியது,

உணர்ச்சிகள் கொந்தெளித்தெழுந்து சுழன்று அவளை ஆட்கொள்ளவே நெஞ்சத்தில் விவரிக்க இயலாக பயம் பிடித்துக் கொள்ள தன்னையும் அறியாமல் நடுங்கும் விரல்களுடன் தன் கழுத்தில் தொங்கிய தாலியை தன் கையால் இறுக்கி பிடித்துக் கொண்டாள்.

"அர்ஜூன், நீங்க முதல்ல வீட்டிற்கு வாங்க.... எல்லாத்தையும் நடு ரோட்டில் வச்சு பேச முடியாது" என்று பாலா கூற,

"ஓகே டாட்" என்று அலை பேசியைத் துண்டித்து விட்டு யாரையும் பார்க்காமல் தன் காரில் ஏறினான்.

காரில் ஏறியதிலிருந்து அவன் ஸ்ரீயின் பக்கம் திரும்பி கூட பார்க்கவில்லை...

தன் உதவியாளரான கதிரை அலை பேசியில் அழைத்து தன் தொழில் விஷயமாகவே பேசிக் கொண்டிருந்தவன் சட்டென்று...

"கதிர், ஃபைண்ட் மி எ டிவோர்ஸ் லாயர்... ஐ வில் எக்ஸ்ப்ளெய்ன் யூ லேட்டர் [Find me a divorce lawyer, i will explain you later]" என்றான்.

காரில் அமர்ந்திருந்த திவ்யாவிற்கோ அவன் ஆங்கிலம் புரியவில்லை என்றாலும் அவன் தங்கள் திருமணத்தை பற்றி தான் நிச்சயம் பேசிக் கொண்டிருப்பான் என்று அவனையே கூர்ந்து கவனித்து இருக்க, அவன் மீண்டும் டிவோர்ஸ் என்ற வார்த்தையை உபயோகித்ததும் தன் மாமியார் முகத்தை பரிதாபமாக பார்க்க, ஸ்ரீ அவளுடைய கரத்தை பிடித்து அழுத்தம் கொடுத்துக் கொண்டே எல்லாவற்றையும் தான் பார்த்துக் கொள்வதாக கண்களாலேயே சைகை செய்தார்,

ஆனால் இதற்கு எல்லாம் சமாதானம் அடையும் நிலையில் இல்லை திவ்யாவின் மனம்...

அர்ஜூன் எப்பொழுது விவாகரத்தை பற்றி பேசினானோ

அந்த விநாடியில் இருந்து அவன் சொன்ன விவாகரத்து என்ற வார்த்தையிலேயே அது சுழன்றுக் கொண்டிருந்தது.

எங்கிருந்தோ வந்தவன் தன் வாழ்க்கையை சுழற்ற போவதை நினைத்து அரண்டு போய் அமர்ந்திருந்தாள் அந்த பேதை...

கலவரத்தினால் கனத்த மனதினாலோ என்னவோ நீண்ட பயனமாக தெரிந்த அந்த பயணமும் ஒரு வழியாக முடிவுக்கு வந்தது...

ஏற்கனவே தன் வாழ்வு பாதை மாறியதை கண்டு அஞ்சி நடுங்கிக் கொண்டே வந்தவளுக்கு கார் நிற்கவும் எட்டி பார்க்க ஆடிப் போனாள் அந்த பேதை...

நீலாங்கரையில் இருந்த அந்த அரண்மனையை போன்ற பெரிய பங்களா இன்னும் நடுக்கத்தை கொடுக்க, அந்த பங்களாவை பார்த்தவள் அவள் கணவன் இந்த கல்யாணத்தில் விருப்பம் இல்லாமல் இருப்பது ஒன்றும் தவறில்லை என்றே நினைத்தாள்.

"இவ்வளவு பெரிய பணக்காரர் எப்படி நம்மள மாதிரி ஒரு ஏழைப் பொண்ண கல்யாணம் செய்துக்கொள்வார்? ஐயோ! இந்த அத்தை ஏன் இப்படி ஒரு முடிவ எடுத்தாங்க? ஒரு வேளை நாம தற்கொலை செஞ்சுப்போம்னு பயந்து தான் இப்படி ஒரு முடிவ எடுத்தாங்களா?" என்று சிந்திச்சுக் கொண்டிருக்கும் போதே ஸ்ரீ அவளை அழைக்க மெதுவாக காரை விட்டு இறங்கினாள்.

பங்களாவை பார்த்து அதிர்ச்சியில் உறைந்து இருந்தவளுக்கு பங்களாவின் வாயிலில் பார்த்தக் காட்சி ஆச்சர்யத்தை கொடுத்தது என்றால், அர்ஜூனுக்கோ தாங்க முடியாத எரிச்சலை கொடுத்தது.

அங்கு அவன் தந்தை, தங்கை, தம்பி என்று அனைவரும் வாயிலில் நின்றிருக்க, அருகில் அவர்களின் வீட்டில் நெடு நாள் வேலை செய்யும் தெய்வானையும், அல்லியும் கையில் ஆரத்தி தட்டை வைத்துக் கொண்டு காத்திருந்தனர்.

ஸ்ரீ திவ்யாவை அழைத்துக் கொண்டு வாசல் செல்ல அவரை முந்திக் கொண்டு வேகமாக சென்ற அர்ஜூன் படாரென்று ஆரத்தி தட்டை தட்டி விட்டு,

"இது ஒன்னு தான் இப்போ குறைச்சல்" என்றவன் மின்னல் வேகத்தில் உள்ளே செல்ல, இது அங்கு இருந்தவர்களையே மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்றால் மலரைப் போன்ற மென்மையான மனம் கொண்ட அந்த சின்ன மலரின் நிலைமை????

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

53% 3:02 PM
https://drive.google.com/file



மலரினும் மெல்லியவளே!

பாகம் - 4

"அர்ஜுன்" என்று பாலாவும் ஸ்ரீயும் அழைத்தும் அவன் நிற்கவில்லை...

புயலென வீட்டிற்கு நுழைந்தவன் நேரே தன்னுடைய அறைக்கு சென்று கதவை வேகமாக சாத்தியதிலேயே தெரிந்தது அவனை யாரும் தொந்தரவு செய்யாமல் இருப்பதே நல்லது என்று.

வாயிலில் நின்றிருந்த திவ்யாவிற்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அவளின் சிந்திக்கும் திறனை ஒட்டு மொத்தமாக அழித்திருந்தது...

இன்றிலிருந்து தன் வாழ்க்கையில் பெரும் துன்பம் தொடரும் என்பதனை உணர்ந்தது போல் அவள் இதயம் சுக்கல் சுக்கலாக உடையும் நிலையில் இருக்க கண்களில் அழுகை பீறிட்டு கொண்டு வந்தது...

அவளின் நிலைக் கண்ட ஸ்ரீ ஆறுதல் அளிப்பது போல் அவளின் தோளைப் பிடித்து அழுத்தியவர் அல்லியிடம் இன்னொரு தட்டில் ஆரத்தி கரைத்து எடுத்து வர சொல்ல, பின் அவர்கள் திவ்யாவிற்கு மட்டும் ஆரத்தி சுற்ற ஆரம்பித்தார்கள்.

மனமுழுவதும் திகிலும் வருத்தமும் சூழ்ந்திருக்க, மற்றவர்களுக்கு தெரியாமல் தன் அழுகையை உள்ளிழுத்தவள் தன் உணர்வுகளை மறைத்து மிகுந்த சிரமப்பட்டு முகத்தில் ஒரு சிறு புன்னகையை தவழ விட்டுக் கொண்டே எல்லோரையும் பார்க்க,

53% 3:02 PM
https://drive.google.com/file



"திவ்யா, வலது கால எடுத்து வச்சு வாம்மா.... உள்ளே போய் உனக்கு எல்லோரையும் அறிமுகப் படுத்துறேன்" என்று ஸ்ரீ சொல்ல,

தன்னுடைய எதிர்காலத்தை நினைத்து அஞ்சிக் கொண்டே வலது காலை எடுத்து வைத்து உள்ளே சென்றாள் அந்த சின்ன பெண்.

"இவர் தாம்மா உன் மாமனார்... இவன் உன் கொழுந்தனார் அருண்... இவ தான் உன் நாத்தனார் மஹா" என்று ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைக்க, அவளோ அனைவரையும் பார்த்து சின்னதாக புன்னகைக்க, பாலாவிற்கு என்னவோ மருமகளைப் பார்த்தவுடனேயே பிடித்துவிட்டது..

"ஸ்ரீ, முதல்ல திவ்யாவ பூஜை ரூமுக்கு கூட்டிட்டுப் போய் விளக்கு ஏத்த சொல்லு... அதற்கு அப்புறம் அது கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்.... பின் எல்லாத்தையும் பேசிக்கலாம்" என்றார்...

ஸ்ரீ திவ்யாவை பூஜை அறைக்குள் அழைத்து செல்ல, அங்கு இருந்த தெய்வங்களின் படங்களை எல்லாம் பார்த்து கண்களை இறுக்க மூடிக் கொண்டு தன் வாழ்க்கை பாதையின் விசித்திரத்தை நினைத்து மனதிற்குள் மருகியவாரே வேண்டினாள்...

பின் அவளை சமையல் அறைக்குள் அழைத்து சென்ற ஸ்ரீ பாலும் பழமும் கொடுத்தவர் ஏதோ யோசனையில் திவ்யாவை பார்க்க, மீதி பாலை தன் கணவனுக்கு எடுத்து செல்ல சொல்வார்களோ என்று நினைத்து அரண்டு போனாள் திவ்யா....

https://drive.google.com/file



அவள் அரண்டு போய் நிற்பதைப் பார்த்த ஸ்ரீ மஹாவை அழைத்து, "மஹாம்மா, நீ போய் அண்ணனுக்கு இந்த பாலை குடுத்துவிட்டு வாம்மா" என்றார்...

"உன் மகன் பால் பழம் சாப்பிடும் நிலையிலா இருக்கிறான்??? இருந்தும் உனக்கு இத்தனை அழுத்தமும் தைரியமும் ஆகாது ஸ்ரீ" என்று இடித்துரைத்த மனசாட்சியை கண்டுக் கொள்ளாமல் தன் பிடியை விடாமல் தொடர்ந்தார் ஸ்ரீ...

அதிர்ந்த மஹா...

"ஓ மை காட்! மாம், என்ன விளையாடுறீங்களா? அண்ணா இப்போ இருக்கிற நிலைமையில என்னைய கடிச்சே குதறி விடுவாங்க... நான் போகலை மாம்" எனக் கூற,

மஹாவின் அச்சத்தை கண்ட திவ்யாவிற்கு இன்னமும் பதட்டம் தொற்றிக் கொண்டது...

வீட்டில் இருக்கும் அனைவருமே அவருக்கு பயப்படுவார்கள் போல் என்று...

உடனே ஸ்ரீ "சரி, நானே போகிறேன்" என்றவர் மெதுவே மாடியில் இருந்த அவன் அறையின் கதவை மெல்ல தட்ட, சத்தம் வராததைக் கண்டு மீண்டும் தட்ட அப்பொழுதும் கதவை திறக்காததால் குளியல் அறையில் இருப்பானோ என்று நினைத்தவர் அவனுக்காக காத்திருந்தார்...

அங்கு குளியலறையில் தண்ணீருக்கு கீழ் நின்று கொண்டிருந்த அர்ஜூனிற்கு வாய் விட்டு கத்த வேண்டும் போலிருந்தது....

H+ 1 53% 3:03 PM
https://drive.google.com/file
17

குளிர்ந்த நீரில் அசையாமல் நீண்ட நேரம் நின்றுக் கொண்டிருந்தவனுக்கு ஒரு வேளை இந்த குளிர் நீர் தன் மனதில் உள்ள சூட்டை தனிக்காதா? என்று ஆயாசமாக இருந்தது...

ஒரு வழியாக தன் கோபத்தை கட்டுக்குள் கொண்டு வந்து குளித்து விட்டு வெளியே வரவும் மறுபடியும் ஸ்ரீ கதவை தட்டவும் நேரம் சரியாக இருந்தது....

கதவு திறக்கப்படவும் அடைத்து வைக்கப்பட்ட கூண்டு சிறுத்தையைப் போன்று கோபத்தோடு நின்றுக் கொண்டிருந்த மகனைப் பார்த்த ஸ்ரீக்கு நெஞ்சுக் கூட்டில் சிலிர்ப்பு எடுத்தது...

என்ன தான் அர்ஜூனிற்கு தன் அன்னையின் மேல் மிகுந்த மரியாதை இருந்தாலும் ஸ்ரீக்கு அவன் மேல் மற்றவர்களை போல் அச்சமே இருந்தது... அதற்கு காரணம் அவரின் தந்தையின் ஆளுமையையும் ஆவேசத்தையும் அவன் உரித்து வைத்து போல் பிறந்து இருந்தது...

ஆனாலும் அவர் தன் அச்சத்தை என்றுமே அர்ஜூனிடம் வெளிக்காட்டியதில்லை...

அவனுக்கு தன் மேல் அளவுக்கதிகமான மரியாதை இருப்பதை உணர்ந்திருந்தவர் அதனையே பகடையாக உபயோகித்து இந்த திருமணத்தையே நடத்தி முடித்திருந்தாரே....

சில விநாடிகள் தயங்கியவர் "அர்ஜூன்.. இந்த பாலை குடிப்பா" என்றார் சன்னமான குரலில்....

53% 3:03 PM
https://drive.google.com/file



பாலை பார்த்தவன் அது என்ன பால்? எதுக்கு அந்நேரத்தில் பாலை கொடுக்கிறார்கள்? என்று ஒரு நிமிடம் குழம்பியவன் எதுவும் பேசாமல் தன் அன்னையை கூர்ந்து பார்த்துக் கொண்டே பாலை வாங்கியவன் மீண்டும் படீரென்று கதவை சாத்தினான்...

அவன் தன் அறைக் கதவை சாத்தவும் இழுத்திருந்த மூச்சை விட்டவர்...

"அப்பாடி!! என்னமோ சிங்கத்தோட குகைக்கு போற மாதிரியில்ல இருக்கு... சொந்த மகனைப் பார்த்து இப்படி பயப்படுற ஒரே அம்மா நானாத் தான் இருப்பேன்.... அப்போ அப்பாவப் பார்த்து பயந்தேன்... இப்போ அவரைப் போலவே பொறந்திருக்கிற இவன் கிட்ட பயப்படுறேன்.... புருஷன்கிட்ட கூட இப்படி பயப்படலை" என்று நினைத்துக் கொண்டே கீழிறங்க,

அவருடைய மனசாட்சியோ "இப்படிப்பட்ட மகனோட வாழ்க்கையிலேயே நீ என்னமா விளையாடுறியே" என்று ஏளனமாக குரல் கொடுக்க, இதுவும் கடந்துப் போகும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டவர் கீழ் இறங்கி வந்தார்...

கீழே வந்த ஸ்ரீ திவ்யாவிற்கு வீட்டை சுற்றிக் காட்ட அச்சத்துடனும் வியப்புடனும் வீட்டின் ஒவ்வொரு அறையையும், அங்கு இருந்த விலை உயர்ந்த பொருட்களையும் விழிகள் ஆச்சரியத்தில் விரிய பார்த்துக் கொண்டு வந்த திவ்யாவை ஸ்ரீக்கு நிரம்ப பிடித்து போனது...

அவள் அருகில் வந்து அவள் தலையை தடவியவர் பின் மஹாவிடம் திவ்யாவை அவளுடைய அறைக்கு அழைத்து செல்ல சொல்லி விட்டு அருணிடமும் பாலாவிடம் நடந்ததை அனைத்தையும் ஆரம்பம் முதல் சொல்ல ஆரம்பித்தார்...

52% 3:03 PM
https://drive.google.com/file

"ஆனா மாம், நீங்க எவ்வளவு பெரிய விஷயத்தை செஞ்சுருக்கீங்கன்னு தெரியுமா? அண்ணாவப் பற்றி நல்லா தெரிஞ்சும் எப்படி இப்படியொரு தைரியமான முடிவ எடுத்தீங்க?? அதுவும் அண்ணா எப்படி இதுக்கு ஒத்துக் கொண்டாங்க? ஆச்சரியமா இருக்கு அதே சமயம் அண்ணிய நினைச்சா பாவமாவும் இருக்கு"

"ஆமாம் அருண்... அவ ஓடிப் போய் தூக்கு போட ட்ரை பண்றத பார்த்தவுடனேயே எனக்கு பதறிப் போயிடுச்சு.... சின்னப் பொண்ணுடா... இப்ப நாம ஒன்னும் செய்யலைன்னா அவள் வீட்டுக்கு போன பின்னாடி இது மாதிரி ஏதாவது செஞ்சுக்கிட்டா என்ன பண்றதுன்னு கலங்கி போய்ட்டேன்..." என்றவர் பெருமூச்செறிந்து தொடர்ந்தார்...

"அதனால் தான் நான் அப்படி ஒரு முடிவ எடுத்தேன்.... எனக்கு தெரியும் இது எவ்வளவு பெரிய விவகாரமான முடிவுன்னு... இன்னும் சொல்லப் போனால் அர்ஜூன் இதுக்கு சம்மதிக்க மாட்டான்னு தான் நினைச்சு பயந்திட்டு இருந்தேன்... ஆனால் அதிசயமா அவன் ஒன்னும் சொல்லாமல் தாலியைக் கட்டிட்டான்" என்றவர் மனதிற்குள்...

"புலி எதுக்கு பதுங்குச்சுன்னு இப்ப புரியுதே.... அங்க அமைதியா இருந்திட்டு வெளியே வந்தவுடனேயே டிவோர்ஸ் பத்தி பேசறானே!!" என்று நினைத்தவர் அதனை பற்றி விவாதிக்காமல் மேலும் தொடர்ந்தார்....

"அருண்... அதே சமயம் இப்போ அர்ஜுனுக்கு திவ்யாவைப் பிடிக்காம இருக்கலாம்.... ஆனால் நிச்சயம் அவனுக்கு அவளைப் பிடிக்கத் தான் போகுது.... பார்த்திட்டே இருங்க.... நான் சொல்றது ஒரு நாள் நடக்கத் தான் போகுது" என்று கூறியவர் மீண்டும் தனக்குள்ளே...

3:03 PM 52%

https://drive.google.com/file

"அதற்குள் அவன் அந்த சின்னப் பெண்ணை என்ன பாடுப்படுத்தப் போறானோ தெரியலையே" என்று மனம் கலங்கித் தான் போனார்.

அங்கு கிராமத்திலோ மண்டபத்திலிருந்த அனைவரும் விருந்து உண்ட பின் ஸ்ரீ வீட்டிற்கு செல்வதாயிருந்த கலாவிற்கு அவர்கள் அனைவரையும் கவனித்துவிட்டு மண்டபத்தை காலி செய்யவே நீண்ட நேரம் பிடித்தது.

அதனால் ஸ்ரீக்கு அழைத்தவர் தாங்கள் மறு நாள் வருவதாக கூறிவிட்டார்.....

தன் பெற்றோர் வந்தார்கள் என்றாலாவது கொஞ்சம் நிம்மதியாக இருக்கலாம் என்று அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த திவ்யா இதை கேள்விப்பட்டவுடன் கதி கலங்கி போனாள்...

திவ்யா அர்ஜூனோடும் ஸ்ரீயோடும் அவர்கள் இல்லத்திற்கு வரும் பொழுதே கிட்டத்தட்ட மாலை ஆகியிருந்தது...

இந்த சிறிய நேரத்திற்குள்ளாகவே அவளுக்கு இங்கு தனியாக இருப்பது மூச்சு முட்டுவது போல் இருக்க தன் குடும்பத்தினரின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவளுக்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது அவர்கள் வரவில்லை என்றதும்...

அவளின் கலங்கிய முகத்தை பார்த்த ஸ்ரீ அவளின் அருகில் வந்தவர்...

3:03 PM 52%

https://drive.google.com/file

"திவ்யா, அம்மா அப்பா எல்லாரும் நாளைக்கு வந்துருவாங்கடா... அதான் நான் இருக்கேன்ல... அப்புறம் ஏன் இந்த கலக்கம்... வா" என்றவர் அவளை சமாதானப் படுத்தி இரவு உணவைத் தயாரிக்க சமையலறைக்குள் செல்ல, அவரை தொடர்ந்து திவ்யாவும் சமையல் அறைக்குள் நுழைந்தாள்...

எத்தனை தான் வேலை செய்பவர்கள் இருந்தாலும் ஸ்ரீக்கு சமையல் தன் கைகளாலேயே செய்ய வேண்டும்.

அது திருமணமான புதிதில் பாலாவின் ஆசை... திருமணமாகி இருபத்தி ஒன்பது வருடங்களானாலும் ஸ்ரீ அந்த பழக்கத்தை கை விடவில்லை....

உள்ளே வந்த திவ்யாவிற்கு ஸ்ரீ யார் யாருக்கு என்னென்ன பிடிக்கும் என்றும் முக்கியமாக அர்ஜூனுக்கு என்ன பிடிக்கும், பிடிக்காது என்று கூறிக் கொண்டே அன்றைய இரவு உணவுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

"அத்தை, நான் வேணா இன்னைக்கு சமைக்கட்டுமா?" என்று திவ்யா கேட்க,

எவ்வளவு பிரச்சனைகளுக்கு இடையிலும் திவ்யா அவ்வாறு கேட்டது ஸ்ரீக்கு இதமாக இருந்தது...

கலாவும் இப்படித் தான்.... எப்பொழுது ஸ்ரீ வீட்டிற்கு வந்தாலும் ஸ்ரீக்கு என்னென்ன பிடிக்குமோ அதை அனைத்தயும் சமைத்துக் கொடுப்பார்.

3:03 PM 52%
https://drive.google.com/file


"இல்லடா.. இப்பத் தானே வந்திருக்க... கொஞ்சம் கொஞ்சமா பழகிக்கலாம்..."

"இல்லை அத்தை, எங்க வீட்டுக்கு பக்கத்தில இருக்கிற ஒரு கடையில கணக்கு எழுதுற வேலைக்கு அம்மா போறாங்க.... அதனால எங்க வீட்டுலயும் எப்பொழுதும் நான் தான் சமைப்பேன்" என்று திவ்யா கூற,

ஸ்ரீக்கோ மனம் பழைய நியாபகத்தில் உழண்றது....

தான் கல்லூரியில் சேரும் பொழுது வசதி இல்லாத காரணத்தால் கலாவால் அவருடன் இணைந்து கல்லூரியில் படிக்க முடியவில்லை...

ஸ்ரீயும் தன் தந்தையிடம் கல்லூரி கட்டணப் பணம் வாங்கி தருவதாக கலாவிடம் எவ்வளவோ எடுத்து சொல்லியும் கலா கேட்கவில்லை...

ஒரு வேளை கலாவும் தன்னுடன் மேற்ப்படிப்பு படித்து இருந்தால் இன்னும் நன்றாக இருந்திருப்பாளே என்று மனம் வருந்தியது...

"சரிம்மா.. நீயே செய்" என்று முதல் முறையாக தன்னுடைய பல வருட பழக்கத்தை விட்டுக் கொடுத்தார்.

சமையலறை என்பது ஒரு பெண்ணிற்கு எத்தனை முக்கியம் என்று அனைவருக்கும் தெரியும்...

52% 3:03 PM
https://drive.google.com/file



எத்தனையோ வீட்டில் மருமகளிடம் சமையலறையை விட்டுக் கொடுக்காத மாமியார்கள் இன்னும் எவ்வளவோ பேர் இருக்கத் தான் செய்கிறார்கள்.

சமையலறையை தன்னுடைய இராஜ்யமாக கருதிக் கொண்டு தன்னுடைய ஆட்சியை அங்கிருந்து தொடங்கி வீட்டில் ஒவ்வொரு விஷயத்திலேயும் தன் முடிவே தலையாய முடிவு என்று இருக்கும் மாமியார்கள் இன்னும் உண்டு...

எப்பொழுது மருமகள் வந்து சமையல் செய்ய துவங்குகிறாளோ அப்பொழுதே தன் சாம்ராஜ்யம் கவிழ்ந்ததாக நினைப்பவர்கள் அவர்கள்.

ஆனால் அவற்றுக்கெல்லாம் ஸ்ரீ ஒரு விதி விலக்கு....

ஏற்கனவே நொந்துப் போயிருக்கும் தன் மருமகளை தன்னால் ஆன மட்டும் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்று நினைக்கும் நல்ல மனம் படைத்தவர் அவர்.

திவ்யாவிற்கு தன்னால் முடிந்த வரை சின்ன சின்ன சந்தோஷத்தை ஆறுதலைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தவர்...

"சரிடா, நீயே செய்" என்றார்.

அன்று இரவுக்கு சப்பாத்தியும், காய்கறிகள் போட்ட குருமாவும் திவ்யா செய்ய முதல் முறை மருமகள் கையால் சமைத்ததை சாப்பிட்ட ஸ்ரீக்கும் பாலாவிற்கும் மனது நிறைந்து இருந்தது...

52% 3:04 PM
https://drive.google.com/file



வீட்டில் உள்ள அனைவரும் மிகவும் ரசித்து உண்டார்கள்... அர்ஜூனைத் தவிர....

ஸ்ரீயிடம் பாலை வாங்கி விட்டு கதவை அறைந்து சாத்திய அர்ஜூன் குளியல் அறையில் சென்று பாலை ஊற்றியவன்,

"அவளப் பாத்தாலே எரியுது.... இதுல அவ குடிச்சு வச்ச மிச்ச பால வேற குடிக்கனுமா" என்று வாய் விட்டு கூறியவன் அந்த நேரத்திலும் சடுதியில் கிளம்பி தன்னுடைய அலுவலகத்தை நோக்கி சென்றுவிட்டான்.

முன்னறிவிப்பு இல்லாமல் எதிர்பாராதவிதமாக தன் அன்னை அழைத்திருந்ததால் திருமணத்திற்கு கிளம்பி போயிருக்க, அவனுக்கு அலுவலகத்தில் நிறைய வேலைகள் காத்திருந்தது...

அது மட்டும் அல்ல காரணம்....

எவ்வளவு விரைவாக அவளிடமிருந்து விவாகரத்து வாங்குகிறோமோ அது நல்லது... அது வரை அவள் முகத்தை பார்ப்பதைக் கூட முடிந்தவரை தவர்க்க வேண்டும் என்றெண்ணத்திலே தான் அவன் அந்த நேரத்திலும் அலுவலகத்திற்கு சென்றது...

ஆனால் பின்னாளில் அவள் முகத்தை பார்க்காமல் தான் எத்தனை அவஸ்தை படப் போகிறோம் என்றும், அவளைத் தேடி அவளின் பின்னே தான் செல்லப் போகிறோம் என்றும் அவன் இப்பொழுது அறிந்திருக்கவில்லை...

3:04 PM
https://drive.google.com/file

அனைவரும் உணவு உண்டு முடித்தவுடன் ஸ்ரீ திவ்யாவை அழைத்து...

"திவ்யாம்மா, இன்னைக்கு நீ மஹாராவோட படுத்துக்கோ... நாளைக்கு காலையில எல்லாத்தையும் பேசிக்கலாம்" என்று கூற,

"சரி அத்தை" என்று கூறிவிட்டு திவ்யாவும் மஹாராவுடனேயே அவள் அறைக்கு சென்றாள்.

திவ்யா தன் அறைக்குள் நுழைந்தவுடன் அவள் தன்னுடைய படுக்கையிலேயே படுப்பதற்கு மஹாரா ஏற்பாடு செய்ய அதை மறுத்த திவ்யா தயக்கத்துடன்..

"இல்லைங்க, நான் கீழேயே படுத்துக்கிறேன்" என்றாள் மெல்லிய குரலில்....

"அண்ணி, என்னோட நீங்க கொஞ்சம் சின்ன பொண்ணு தான்... ஆனால் அதுக்காக ப்ளீஸ் இந்த நீங்க, வாங்க, போங்க எல்லாம் வேண்டாமே..... இன்ஃபாக்ட் சொல்லப் போனால் எங்க அர்ஜூன் அண்ணனுக்கு உங்கள பிடிக்குதோ இல்லையோ எனக்கு உங்கள ரொம்ப பிடிச்சிருக்கு... யூ ஆர் வெரி ஸ்வீட் அண்ட் க்யூட்.... [You are very sweet and cute]... நிச்சயம் அண்ணனுக்கு உங்கள கூடிய சீக்கிரமே பிடிக்கும்.... அப்போ உங்கள இத்தனை நாள் தரையில படுக்க வச்சிருந்தேன்னு தெரிஞ்சுது அவ்வளவு தான்.... நான் தொலைஞ்சேன்" என்று கூறிவிட்டு அவளுக்கு படுக்க உதவியவள்,

"அண்ணி, இனி நீங்களும் நானும் ஃப்ரெண்ட்ஸ், என்ன?" என்று வினவ,

52% 3:04 PM

https://drive.google.com/file



எதார்த்தமாக மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல் பேசும் மஹாவை திவ்யாவிற்கு மிகவும் பிடித்து போனது...

"இந்த வீட்டில் எல்லோரும் நல்லவர்களாகத் தான் இருக்கிறார்கள்... அவரைத் தவிர" என்று மனதிற்குள் எண்ணியவள்,

"அவரும் நல்லவராக தான் இருக்கனும்.... திடீர்னு இப்படி ஒரு கல்யாணம் நடந்தால் யாராக இருந்தாலும் இப்படித் தான் நடந்துக் கொள்வார்கள்" என்று வெள்ளை மனதுடன் நினைத்தவள் மஹாவுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க தூக்கம் கண்ணை கட்டியது....

இன்று நடந்த மொத்த கலவரத்தில் வந்த மன அசதியாலும், உடல் அசதியாலும் தன்னையும் அறியாமல் தூங்கியும் போனாள் அந்த பேதை....

அதிகாலை சூரியன் அறையின் சாரளத்தின் வழியே தன் கதிர்களை செவ்வனே செலுத்த எப்பொழுதும் விடியற்காலையிலேயே எழுந்து பழகியவளாதலால் இன்றும் அதைப் போலவே விழிப்பு வர, விழித்தவளுக்கு தான் எங்கு இருக்கிறோம் என்று புரியவே சில விநாடிகள் பிடித்தது....

புரிந்ததும் உதறல் எடுக்க ஆரம்பிக்க படபடத்தவளுக்கு கீழே செல்வதா வேண்டாமா என்று குழப்பமாக இருக்க, ஒரு அரை மணி நேரம் வரை படுத்திருந்தவளுக்கு அதற்கு மேல் பொறுமையில்லை...

திருமணம் ஆன மறு நாளே இப்படி தாமதமாக எழுந்தால் அத்தையும் மாமாவும் என்ன நினைப்பார்கள் என்று தோன்ற மெதுவாக

52% 3:04 PM
https://drive.google.com/file

எழுந்தவள் தனது பெட்டியை திறந்து ஒரு புது புடவையை எடுத்துக் கொண்டு குளியல் அறைக்குள் சென்றாள்.

உள்ளே சென்றவளுக்கு குளியல் அறை கூட இத்தனை பெரிதாகவும், அழகாகவும் இருக்குமா என்று ஒரே ஆச்சர்யம்...

மனிதனுக்கு பணமும் இரசனையும் இருந்தால் எந்த இடத்தையும் அழகாக வைக்க முடியும் என்று நினைத்துக் கொண்டவள் குழாயை திறந்து பச்சை தண்ணீரில் குளிக்க ஆரம்பித்தாள்.

என்ன குளிராக இருந்தாலும் பச்சை தண்ணீரில் குளித்து தான் அவளுக்கு பழக்கம்.... அது பனிப் பொழியும் காலமாக இருந்தாலும் சரி...

சிறிது நேரத்தில் குளித்து முடித்து வந்தவள் இன்னமும் மஹா தூங்குவதை கண்டு "இதுவும் பணக்கார வீட்டில் சகஜம் போல லேட்டா எழுந்திருப்பது" என்று எண்ணிக் கொண்டு வெளியே வர,

அப்பொழுது தான் ஜாகிங் போய்விட்டு வந்திருந்த அர்ஜூனும் அலை பேசியை நோண்டிக் கொண்டே வேகமாக மாடிப் படி ஏறினான்.....

ஏற்கனவே எந்த நிமிஷத்திலும் எதுவும் நேர்ந்து விடுமோ என்கிற திகிலில் ஆழ்ந்திருந்தவளின் எண்ணம் முழுவதும் தன்னிலை குறித்து குழம்பியிருக்க, தலை வேறு குளித்திருந்ததால் குனிந்து ஈரத் தலை முடியை விரல் விட்டு கோதிக் கொண்டே யோசனயுடன் மெல்ல படியில் இறங்கி வந்துக் கொண்டிருக்க, அவளும் அர்ஜுனைக் கவனிக்கவில்லை....

அதிகாலை நேரம் ஆதலால் பாதி இருட்டும் பாதி மங்கலான வெளிச்சமும் சேர்ந்து படிகளில் ஒரு நிழலான சூழ்நிலையை

52% 3:04 PM
https://drive.google.com/file



உருவாக்கியிருக்க குனிந்து அலைப் பேசியிலேயே கண்களை பதித்து வேகமாக வந்துக் கொண்டிருந்த அர்ஜூனும் அவளை கவனிக்கவில்லை....

வேகமாக படி ஏறியவன் அதே வேகத்துடன் நேருக்கு நேர் அவள் மீது மோத, தளிர் மேனியவள் அவனுடைய வாளிப்பான வாட்டசாட்டமான உருவத்தின் வேகத்தை தாங்க இயலாது தடுமாறி கீழே விழப் போனாள்.....

"ஏ ஏ" என்று கத்தியவன் பூங்கொத்தாய் தன் மீது மோதியவளின் பிஞ்சு உடலை இறுக்கி பிடிக்க, அதில் தன்னிச்சையாக அவனின் வலுவான கரம் அவளின் வெற்றிடையில் அழுந்த படிய, அவளோ இன்னும் அதிர்ச்சியில் கிழே விழாமல் இருக்க அவனுடைய டி ஷர்ட்டையே இருக்கிப் பிடித்துக் கொண்டாள்...

எதிர்பாராத இந்த திடீர் மோதலினாலும் அவனின் இறுக்கிய அணைப்பினாலும் இதயம் பயத்தால் படபடவென அவள் உடலே அதிரும்படி அடித்துக் கொண்டு இருந்ததோடு உள்ளத்தின் போக்கிற்கு ஏற்ப முகத்தில் வியர்வை துளிகளும் அரும்ப, அதிக நேரம் அவர்கள் நிற்கும் விதத்திலேயே நின்றிருந்தால் அவள் நிச்சயம் பயத்தில் உயிரே விட்டிருப்பாள்...

வழக்கம் போல் காலை எழுந்தவுடன் பூஜை அறையில் விளக்கேற்றி விட்டு பூஜையை முடித்து அறையை விட்டு வெளி வந்த ஸ்ரீயின் கண்கள் இக் கண்கொள்ளா காட்சியை உள் வாங்கிக் கொண்டதில் அவரின் முகத்தில் ஒரு சிறு அரும்பு போல் புன்னகை பூத்தது....

படிகளில் தடுமாறி தன்னையே கொலுக் கொம்பாக இறுக்க பற்றியிருந்த மனைவியின் மதி முகத்தை முதன் முறையாக அதுவும்

52% 3:05 PM
https://drive.google.com/file



அத்தனை நெருக்கத்தில் பார்த்திருந்த அர்ஜுனிற்கோ ஒரு விநாடி இதயம் தடுமாறி தன் துடிப்பை அதிகரித்து மூளையையும் உரையச் செய்திருக்க....

திக்கித்தினறி தவிப்புடன் "நா... நா... நான் உங்களை கவனிக்கலை.... தெ... தெ... தெரியாம...." என்று அவளின் வாயிலிருந்து உதிர்ந்த இனிமையான குரலில் வெளி வந்த சொற்கள் அவன் மயக்கத்தை கலைக்கவே தன்னை சுதாரித்தவன் அவளை ஆழ்ந்து நோக்கியவாரே...

"ஐய்ஸ் [Eyes] என்ன ப்ரெண்ட்ல [Front] இருக்கா? இல்ல பேக்ல [back] இருக்கா? பாத்து வரத் தெரியாது, இடியட்" என்றுக் கூறிக் கொண்டே அவளை விட்டுவிட்டு மாடியேறினான்...

அவள் பிறந்து வளர்ந்த அந்த குக்கிராமத்தில் தந்தையாகட்டும், கூட பிறந்தவர்களாகட்டும் அல்லது எந்த ஆண்மகன்களாகட்டும் பெண்களிடம் சற்று தள்ளியே இருந்து பழகுவார்கள்... அது எழுத படாத சட்டம் அங்கே... அதிலும் வயதுக்கு வந்து விட்டால் சொல்லவே வேண்டாம்...

அப்படி எந்த ஆண்களிடமும் நெருங்கி பழகாமல் இது வரை இருந்து வந்தவளுக்கு முதல் முறையாக அறிந்த ஆணின் உடலின் ஸ்பரிசத்தையும், இடையை சுற்றியிருந்த அவன் கைகளின் வலுவையும், மோதிய வேகத்தில் அவளின் முகம் அவன் மார்பில் பதிய அதில் உணர்ந்த அவனின் பிரத்தியோக வாசனையும் அவளின் அடி வயிற்றில் சில்லென்று ஒரு உணர்வு கிளம்பி அவளின் எண்ணங்களை எங்கெங்கோ கொண்டு சென்றது...

ஆனால் அவனது "இடியட்" என்ற வார்த்தையை கேட்டதும் அவன் எண்ணங்கள் தன் எண்ணங்களுக்கு விரோதமான திக்கில் பயனித்து கொண்டு இருந்ததை அறிந்து புயலில் அடிப்பட்டதை போல் தவித்த மனதில் வேதனை நிரம்பி வழிய, அவளது மெல்லிய மனதை

3:05 PM 52%
https://drive.google.com/file



காயப்படுத்தி அவளை இவ்வுலகிற்கு கொண்டு வந்து சேர்த்திருந்தான் அவளின் கணவன்...

அதையும் கவனித்த ஸ்ரீ அவளை நோக்கி நடக்க ஆரம்பிக்க அதை கவனித்த திவ்யா கலங்கிய கண்களை ஸ்ரீக்கு காட்டாமல், கண்ணீரை கவனமாக துடைத்துக் கொண்டவள் ஸ்ரீயை நோக்கி புன்னகைத்துக் கொண்டே வந்தாள்.

"என்னடாம்மா, அதுக்குள்ள எழுந்திருச்சிட்ட"

"இல்லத்த, எங்க வீட்டுல ஐஞ்சு மணிக்கே எழுந்திருச்சு பழக்கம், அதான்" என்றவள்,

"அத்த நான் கோலம் போடட்டா" என்க,

ஸ்ரீ "கண்டிப்பாம்மா... அல்லி தான் எப்பாவாச்சும் கோலம் போடுவாள்... எனக்கு முதுகு வலி வந்ததில் இருந்து என்னால போட முடியல.... மஹாவுக்கும் கோலத்திற்கும் ரொம்ப தூரம்... நீயாச்சும் போடு" என்றவர் கையோடு கோலப் பொடி எடுத்துக் கொடுக்க திவ்யா வாசலில் தண்ணீர் தெளித்து பெருக்கி கோலம் போட ஆரம்பித்தாள்.

சிறிது நேரத்திலேயே மிகவும் அழகாக பெரிய கோலம் போட்ட மருமகளை பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தவர் அவள் அருகில் வந்து,

"திவ்யா.. அர்ஜூன் எதாவது சொன்னா கொஞ்சம் பொறுத்துக் கொள்ளடா.... அவன் எப்பவுமே இப்படித் தான்... சட்டுனு கோபம் வந்துடும்... யாருன்னு கூட பார்க்காமல் அவங்க மேல் தன் முழு

3:05 PM 52%
https://drive.google.com/file 17



கோபத்தையும் காட்டிடுவான்... ஆனால் கண்டிப்பா உன்னோட அன்பும் பொறுமையும் அவனை மாத்திடும்..." என்றவர் சில விநாடிகள் தயங்கி...

"நான் சொல்றது தப்புன்னும் எனக்கு தெரியும்... பெத்தவங்களால பிள்ளைங்கள திருத்த முடியாம ஒரு கல்யாணம் ஆனால் அவங்க திருந்திடுவாங்கன்னு சொல்றது ரொம்ப தப்பு... நீயும் உன் வீட்டுல செல்லமாத் தான் வளர்ந்திருப்ப... இப்போ கல்யாணம் ஆனவுடனேயே இவ்வளவு கஷ்டமான பொறுப்பு கொடுக்கறது தப்பு தான்.... ஆனால் கண்டிப்பா அவன் நீ சொல்றபடி ஒரு நாள் கேட்பான்னு எனக்கு நம்பிக்கை இருக்குடா" என்றார்.

அவரின் வார்த்தைகளை கேட்டவளுக்கோ சற்று முன் அவன் அவள் மேல் எரிந்து விழுந்தது நியாபகத்தில் வர,

"அவராவது நான் சொல்றது கேட்கிறதாவது... இன்னும் எத்தனை நாள் என்னைய இந்த வீட்டில வச்சுக்க அனுமதிக்க போறார்னே தெரியலை... இதில் இந்த அத்தை வேறா ஏதேதோ கற்பனை பண்றாங்க" என்று உள்ளுக்குள் குமைந்தவள் எதுவும் பேசாமல் ஒரு மெல்லிய புன்னகையை மட்டும் சிந்தினாள்...

இத்தனை நடந்தும் துக்கத்தை தனக்குள்ளே ஆழப் புதைத்துக் கொண்டு வெளியில் சிரிக்கும் அந்த சின்ன மலரை பார்த்தவருக்கு வலிக்கத் தான் செய்தது... ஆனால் திவ்யாவோ தன்னுடைய வருத்தத்தை வெளியில் காட்டாமல்,

"அத்தை, இன்னைக்கு என்ன டிபன் பண்ணனும்னு சொன்னீங்கன்னா செய்திடுறேன்" என்றாள்...

3:05 PM 52%
https://drive.google.com/file



அவளின் பொறுமையில், சிரிப்பில் தன் தோழி கலாவையே பார்த்தவர் இவளின் அன்பும் அமைதியும் நிச்சயம் தன் மகனின் இரும்பு மனதையும் மாற்றிவிடும் என்ற நம்பிக்கையில் ஒரு பெருமூச்சை ஆழ விட்டவர் அவளுக்கு அன்றைய உணவின் பட்டியலை தர,

அவர் சொன்னதுப் போலேயே திவ்யாவும் சமையலை செய்ய ஆரம்பிக்க, நேரம் போனதே தெரியாமல் இருவரும் பேசிக் கொண்டே சமைத்தது திவ்யாவின் மனதிற்கு சற்று ஆறுதலாக இருந்தது.

மணி ஏழு ஆக ஒருவர் பின் ஒருவராக உணவு அருந்த வர, அவர்களை தொடர்ந்து அர்ஜுனும் வந்தவன் டைனிங் டேபிளில் அமர, ஸ்ரீ எல்லோருக்கும் உணவு பரிமார ஆரம்பித்தார்...

தன் தட்டில் இருந்த பூரியை வாயில் வைத்தவன் நிமிர்ந்து பார்க்க அதே சமயம் திவ்யாவும் எதேச்சையாக அவனை பார்க்க அடிபட்ட சிங்கமாக மாறியது அவன் முகம்....

அவனைப் பொறுத்த வரை திவ்யாவைப் போன்ற பெண்கள் வீட்டில் வேலைக்காரிகளாக இருக்கத் தான் லாயக்கு... அவளை வீட்டுக்காரியாக, அதுவும் தன் மனைவியாக அவனால் எப்பொழுதும் கற்பனைக் கூட பண்ண முடியாது...

"அப்படி இருக்க அவள் எந்த உரிமையுடன் அவர்கள் டைனிங் டேபிள் வரைக்கும் வந்திருக்கிறாள்? எல்லாம் இந்த மாம் கொடுக்கும் இடம் தான்" என்று எண்ணிக் கொண்டு இருக்கையில் ஏற்கனவே உலையாக கொதித்துக் கொண்டு இருந்தவனின் மனதில் மேலும் நெருப்பை அள்ளிப் போட்டது போல்....

52% 3:05 PM
https://drive.google.com/file
17



"திவ்யா, இன்னும் ரெண்டு பூரி கொண்டு வந்து அர்ஜூன் தட்டில் வைம்மா" என்றார் ஸ்ரீ...

படீர் என்று தன்னுடைய நாற்காலியில் இருந்து எழுந்தவன் அவனுக்கு முன் இருந்த தட்டை வேகமாக தள்ள, அது உணவு பொருட்களுடன் சிதறி திவ்யாவின் காலிற்கு கீழ் வந்து விழுந்ததில் அவளுக்கு சப்தனாடியும் அடங்கி ஒடுங்கியது.

திக் பிரமை பிடித்தது போல் நின்ற மருமகளை பார்த்த ஸ்ரீ வேகமாக அவள் அருகில் வந்தவர் அவள் தோள் தொட்டு....

"திவ்யா" என்றழைக்க,

அர்ஜூனின் அரக்கத் தனத்தில் ஏற்கனவே அரண்டு போய் இருந்தவளுக்கு அவரின் தொடுகை உடல் முழுவதும் தூக்கி வாரிப் போட செய்தது...

அவளை ஆறுதலாக ஒரு நொடி அணைத்து விடுவித்தவர் கலக்கத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டே அர்ஜூன் பின்னால் சென்றவர்...

"அர்ஜூன், என்னப்பா இது? உன் கோபம் எனக்கு புரியுது.... ஆனால் நீ இவ்வளவு இண்டீசன்டா நடந்துக்கனும்னு அவசியமில்லை" என்க,

அது வரை அவரிடம் எதுவும் பேசாமல் இருந்திருந்தவன் பீரங்கி போல் வெடிக்க ஆரம்பித்தான்...

3:05 PM 52%
https://drive.google.com/file



"மாம், இங்க எனக்கு என்ன நடக்குதுன்னு புரிஞ்சுக்க முடியலை... இது வரைக்கும் எல்லோரும் என்னைய பாத்து பயந்து தான் பார்த்திருக்கேன்... நம்ம வீடும், நம்ம பிஸினஸும் என்னோட கண்ட்ரோல்ல தான் இருந்ததது..."

"பிஸினஸ்ல இந்த அளவு சாதிக்க முடிந்த என்னால, என் லைஃப்ல தோத்துப் போய்ட்டேனோன்னு தோனுது..... ஊரே என்ன பாத்து பயப்படுது.... ஆனால் என் வீடு என்னோட கண்ட்ரோல்ல இல்லை.... என்னோட சொந்த வாழ்க்கையில என் கண்ட்ரோல் இல்லை.... இன்ஃபாக்ட் சொல்லப் போனால் என் வாழ்க்கையே என் கிட்ட இல்லைங்கிற மாதிரி தெரியுது.... யூ ருயின்ட் மை லைஃப் [You ruined my life]."

"இதுக்கு மேலே நான் இந்த வீட்டுல என்ன பன்றேன்? எதுக்கு இருக்கிறேன்னு கூட தெரியலை? ப்ளீஸ் என்னைய கொஞ்ச நாள் தனியா விடுங்க"

தன் மகனின் இன்றைய கோபமும் ஆற்றாமையும் தன்னால் தான் என்று நன்கு புரிந்த ஸ்ரீயும் அவனின் வலியை உணரவே செய்தார்...

தொழில் சாம்ராஜ்யத்தில் அவன் ஒரு முடி சூடா மன்னன்... அரசியலிலும் சரி வெளி வட்டாரங்களிலும் சரி அவன் விரல் அசைத்தால் நடக்காது எதுவுமே இல்லை... அவனின் செல்வமும் செல்வாக்கும் அதி பிரபலம்... எவரையும் அஞ்சா நெஞ்சத்தோடும் அதிகாரத்துடன் வீழ்த்தும் சாமர்த்தியசாலி...

ஆனால் இன்று தன் அன்னையின் ஒரே வார்த்தை அவன் வாழ்க்கையையே அடியோடு புரட்டிப் போட்டுவிட்டது....

52% 3:05 PM
https://drive.google.com/file



நான் எப்படி இதற்கு சம்மதித்தேன்?? ஏன் அவரை உதறித் தள்ளி அந்த இடத்தை விட்டு வெளியே வர என்னால் முடியவில்லை?? எது என்னை அப்படி கட்டிப் போட்டது??

பல ஆயிரம் பேர் இருக்கும் கூட்டத்தில் கூட இயல்பாக எதுவும் பேச, செய்ய முடிந்த என்னால் ஒரு நூறு பேர் இருந்த திருமணம் மண்டபத்தில் ஏன் எதிர்த்து ஒரு வார்த்தை பேச இயலவில்லை....

தன் அன்னையின் மீது இருந்த மரியாதையா அல்லது வேறு ஏதோ ஒன்று என்னை பேச விடாமல் செய்து விட்டதா?

என மனதிற்குள் ஆயிரமாயிரம் கேள்விகள் கேட்டு கலைத்து போயிருந்தவனுக்கு இன்று அவரின் பேச்சு அவனின் கோபத்திற்கு தூர்வாரியது பொல் இருந்தது...

மனதில் இருந்ததை கொட்டிவிட்டான்... ஒவ்வொரு வார்த்தைகளாக அளந்து பேசுபவன் இன்று அள்ளி தெளித்துவிட்டான்...

இதற்கு என்ன பதில் சொல்வது என்று ஸ்ரீக்கும் தெரியவில்லை....மனதிற்குள் சுருக்கென்று இருந்தது.

"அர்ஜூன், ப்ளீஸ் நான் செஞ்சது உனக்கு இப்போ தப்பாத் தான் தெரியும், ஆனால்....." என்று கூறி முடிக்கவில்லை அவரின் முகத்திற்கு முன் தன் கரத்தை உயர்த்தியவன்...

"மாம்... இத இன்னும் காம்பிளிக்கேட் [complicate] ஆக்காதீங்க.... நீங்க நினைக்கிற மாதிரி என் மனசு மாறாது.... இஃப் யூ வாண்ட் டு ஹெல்ப் மி, ப்ளீஸ் [If you want to help me, please] அவங்கள அவங்க வீட்டுக்கு

3:06 PM 52%
https://drive.google.com/file



அனுப்பிருங்க... ஐ டு நாட் வாண்ட் டு ஸி ஹெர் எனி மோர் [I do not want to see her anymore] " என்றவன்,

ஷூவை மாட்டிக் கொண்டு வேகமாக தன்னுடைய காரை கிளப்பி சென்று விட்டான்...

அவர்கள் பின்னேயே வந்து அவர்களின் வாதங்களை கவனித்துக் கொண்டு இருந்த திவ்யாவிற்கு அவர்களின் மற்ற பேச்சுக்கள் எதுவுமே மனதில் ஏறவில்லை... இரண்டே இரண்டு விஷயங்களையே தவிர...

ஒன்று... தன் கணவன் "அவங்க" என்று தன்னை இன்னும் வெளியாளாக நினைத்து அழைத்தது...

இரண்டு.... தான் இருக்கும் இடத்தில் தன் கணவன் இருக்க விரும்பவில்லை என்று அவளை திருப்பி அனுப்ப சொன்னது....

இதற்கு மேலே ஒரு பெண்ணிற்கு தன் கணவனால் புகுந்த வீட்டில் என்ன அவமானம், அதுவும் திருமணமான மறு நாளே வந்துவிடப் போகுது..... துடிதுடித்து போனாள் அந்த பேதை....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

3:06 PM 52%
https://drive.google.com/file



மலரினும் மெல்லியவள்!

பாகம் - 5

கலங்கிய கண்களோடு நின்றிருந்த மருமகளை பார்த்த ஸ்ரீ அவள் அருகில் வந்து ஆறுதல் கூற ஆரம்பிக்க, அதை தடுத்த திவ்யா,

"அத்தை எனக்கு அவங்க மனசு நல்லா புரியுது.... அவங்க இடத்தில யாரா இருந்தாலும் இதை விட நிச்சயம் கோபப் பட்டிருப்பாங்க.... இனிமே அவங்க கீழே இருக்கும் போது நான் மாடியிலேயே மஹா அண்ணி ரூமிலியே இருக்கிறேன்..... அவங்க போனப் பின் நான் கீழே வருகிறேன்.... என்னால அவங்களுக்கு அவங்க விட்டுலேயே சுதந்திரம் போன மாதிரி இருக்க வேண்டாம்..... ஆனால் என்னைய எங்க வீட்டிற்கு மட்டும் அனுப்பிடாதீங்க அத்தை...." என்றவள் தலை கவிழ்ந்தவாரே...

"ஏற்கனவே அந்த மாப்பிள்ளை கல்யாணத்தை நிறுத்தினதுல ஊர்ல என்னென்ன பேசி அம்மாவையும் அப்பாவையும் கேள்விக் கேட்டுட்டு இருக்காங்களோ தெரியலை... இப்போ நான் திரும்பி வீட்டுக்கு வந்துட்டேன்னா என்னைய எல்லோரும் வாழா வெட்டின்னு கூப்புடறத கேட்டாங்கன்னா ரொம்ப உடைஞ்சு போயிருவாங்க அத்தை..... நான் இங்க உங்க வீட்டுல ஒரு வேலைக்காரியா இருந்துட்டு போயிடுறேன்.... எனக்கு அதுல ஒன்னும் வருத்தமும் இல்லை.... இன்னும் சொல்லப் போனால் நீங்க எனக்கு செய்திருக்கிறதுக்கு நான் நிச்சயம் நன்றி கடன் பட்டவ..... அந்த நன்றிய இப்படி தீர்த்துட்டு போறேன்" என்றாள்.

அவள் தலை கவிழ்ந்த வண்ணம் பேசிக் கொண்டு இருந்தாலும் அவளின் விழிகளில் வழியும் நீரை ஸ்ரீ உணர்ந்தே இருந்தார்...

3:06 PM 52%
https://drive.google.com/file



இந்த சின்ன வயதில் எத்தனை மன பாரம்... இதற்கெல்லாம் நான் தானே காரணம்... நல்லது செய்வதாக நினைத்து பெரிய கேட்டை செய்துவிட்டேனோ!!

அவளின் வலியை தன் வலியாக சுமந்தவருக்கு அவள் பேசியதில் ஒன்று மட்டும் வியப்பாய் இருந்தது...

தான் அவளுக்கு எவ்வளவு பெரிய கொடுமை செய்திருக்கிறோம்..... ஆனால் அந்த சின்ன பெண் நன்றி கடன் பட்டதாக சொல்கிறாள்.

"அர்ஜுன், இந்த மாதிரி பெண் உனக்கு எங்க தேடினாலும் கிடைக்கமாட்டாடா..... கையில இருக்கும் போது எந்த ஒரு பொருளோட அருமையும் தெரியாது.... அவ உன்ன விட்டு போறதுக்குள்ள நீ அவ அருமைய புரிஞ்சுக்கனும்.... அதான் என்னோட பிராத்தனைப்பா" என்று மனதுக்குள் எண்ணியவர் ஒன்றும் பேசாமல் திவ்யாவின் தலையை கோதிவிட்டபடியே,

"எனக்கு அப்படியே கலாவை பார்க்கிற மாதிரியே இருக்கு நீ பேசறத பார்த்தால்... உங்க அம்மா போலவே எவ்வளவு பொறுமை...." என்று பெருமூச்செறிந்தவர்....

"சரிடா வா.... உங்க அம்மா அப்பாவோட உன்னோட சொந்தக்காரர்கள் சில பேரும் வருவதாக உன் அம்மா காலையில் ஃபோன் செஞ்சு சொன்னாள்... அவங்களுக்கு சாப்பாடு ஏற்பாடு பண்ணனும்" என்றவர்,

அவளை அழைத்துக் கொண்டு சமையல் அறைக்குள் செல்ல, இதனை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பாலாவிற்கு தன் மனைவி

https://drive.google.com/file

பெரிய பிரச்சனையை இழுத்துக் கொண்டு வந்து விட்டதாகவே தோன்றியது.

ஏனெனில் அவரின் மகன் அத்தனை விரைவில் ஒருவரையும் ஏற்றுக் கொள்ள மாட்டான்.... அவனுக்கு நிச்சயம் திவ்யாவின் மீது காதலோ மனைவி என்ற பாசமோ வரப் போவதில்லை...

எதிரில் தன் முன் அமர்ந்து பேசுபவரிடமே அந்தஸ்து பார்ப்பவன்.... ஒருவரையும் அத்தனை எளிதில் நம்பாதவன் திவ்யாவையா, அதுவும் தன் மனைவியாகவா அங்கீகரிக்க போகிறான்....

என்ற ஆழ்ந்த யோசனையுடன் இருந்தவருக்கு இதற்கு கடவுள் தான் ஒரு நல்ல முடிவாக சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொள்ள மட்டுமே முடிந்ததது......

சமையல் அறைக்குள் நுழைந்த ஸ்ரீக்கும் திவ்யாவிற்கும் வரப் போகும் விருந்தினர்களுக்கு சமைப்பதற்கே நேரம் சரியாக இருந்தது....

அல்லியும் தெய்வானையும் அவர்களுக்கு உதவி செய்ய, ஒரு வழியாக அவர்களும் சமைத்து முடிக்க கலாவும் அவர் குடும்பத்தினர்களும் வந்து சேர்ந்தனர்....

வீட்டின் வாயிலில் வந்து இறங்கியதுமே ஆ என்று வாயை பிளந்துவிட்டார் கலா... இது என்ன வீடா அல்லது அரண்மனையா? என்று....

அவருக்கு ஸ்ரீயின் வசதியும் அந்தஸ்தும் தெரியும்... சிறிய வயதிலேயே கிராமத்தில் அவர்களின் வீட்டிற்கு சென்றவராயிற்றே...

52% 3:06 PM
https://drive.google.com/file

ஆனால் இருந்தும் இவ்வளவு பெரிய அரண்மனையை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை...

அவருக்கு எப்படி தெரியும் ஏற்கனவே கோடீஸ்வரர்களாக இருந்த குடும்பத்தை இந்தியாவிலேயே பெயர் சொல்லும் அளவிற்கு உயர்த்தியது அவரின் மருமகன் அர்ஜூனின் சாமர்த்தியதும் அதிகாரமும் தான் என்று...

அவர் தான் சிலையாக நின்றுவிட்டார் என்றால் அவருடன் வந்த மற்ற சொந்தங்களும் மூக்கில் விரல் வைத்தவாரே அசந்து போய் நின்றிருந்தனர்..

அவர்கள் அனைவருக்கும் ஒரே ஒரு எண்ணம் தான்..... எப்படி இப்படி ஒரு வாழ்க்கை ஏழைப் பெண்ணான திவ்யாவிற்கு அமைந்தது என்று.

கலாவிற்கு பெருமையாகவும் அதே சமயம் கலக்கமாகவும் இருந்தது.....

ஸ்ரீயின் பெருந்தன்மை அவரை பெருமை பட வைத்தது என்றால், அவர்களின் வசதியான வாழ்க்கைக்கு திவ்யா எந்த அளவிற்கு ஏற்றவள் என்பது அச்சப்பட வைத்தது.....

வெளியே மலைத்து நின்றுக் கொண்டிருந்தவர்களை உள்ளே அழைத்து வந்த ஸ்ரீயும் பாலாவும், அவர்களை ஹாலில் இருந்த அந்த பெரிய அழகான ஸோ:.பாவில் அமரச் செய்ய, கலாவோ ஸோ:.பாவின் நுனியில் அமர, அவள் அருகே வந்தமர்ந்த ஸ்ரீ,

52% 3:07 PM
https://drive.google.com/file



"கலா இப்போ நீ எனக்கு சம்பந்தியா வரல.... என்னோட உயிர் தோழியா வந்திருக்க..... உன் மகள் என்னோட மகள்.... அப்புறம் எதுக்குடி இவ்வளவு தயக்கம்..... ஃப்ரீயா இரு..... நீயே இப்படி இருந்தா அப்புறம் சிவா அண்ணனும், மத்தவங்களும் எப்படி இருப்பாங்க?" என்று கூறியவர் உள்ளே திரும்பி,

"திவ்யா, எல்லோருக்கும் காபி கொண்டு வாம்மா" என்றார்.....

பின் வந்திருந்த அனைவருக்கும் தன் அருகில் நின்றுக் கொண்டிருந்த அருணையும், மஹாவையும் அறிமுகப்படுத்தி வைத்தார்...

"இவன் தான் என்னோட இரண்டாவது மகன்..... இவன் பிறக்கிற சமயம் தான் நாங்க நார்த் சைட் போனது..... அப்புறம் சின்னவ மஹா பிறக்கும் சமயம் சென்னை வந்திட்டோம்.... இதுக்கிடையில் தான் நமக்குள்ள தொடர்பு விட்டுப் போச்சு..... அருண் கூடிய சீக்கிரம் காலேஜ் முடிக்க போறான்.... அதுக்குள்ள அவன் அர்ஜூனுக்கு அவன் பிஸினஸ்லேயும் உதவி செய்றான்..... மஹாவும் காலேஜ் போறா" என்றார் ஒரு அன்னையாக தன் பிள்ளைகளை பற்றிய பெருமிதத்தோடு.....

ஸ்ரீ அருணை அறிமுகப்படுத்தும் பொழுது அவன் கரத்தை பற்றி குலுக்கிய வினோத், மஹாவை அறிமுகப்படுத்தும் பொழுது அவளை நோக்கி திரும்ப, அவளும் எதேச்சையாக அவனைப் பார்த்தவள் இயற்கையிலேயே அவன் கண்களில் தெரியும் குறும்பை கண்டவளின் மனதிற்குள் ஏதோ மொட்டு விரிந்து அரும்ப செய்தது...

அவனைக் கண்ட அந்த விநாடியே அவன் விழிகளுடன் தன் விழிகளையும் உறவாடி கலக்கவிட்டவளின் விழிகளில் பிரதிபலித்த உணர்வுகளை கண்டவனின் மனமும் சந்தோஷத்திலும் அதே சமயம் சஞ்சலத்திலும் விழுந்து அவஸ்தைப் பட்டது...

52% 3:07 PM
https://drive.google.com/file



வினோத்திற்கு ஸிட்டி பெண்கள் என்றாலே ஒரு அலர்ஜி..... அவர்கள் எல்லோருமே ஏதொ ஒரு வித திமிர் தனத்தோடே இருப்பார்கள்... புடவை பக்கம் போகவே மாட்டார்கள்... அனைவருமே நவ நாகரிக மங்கைகள் தான் என்று எண்ணம்.....

அதனாலேயே தன்னுடைய கல்லூரியில் ஸிட்டியில் இருந்து மாற்றலாகி வந்திருக்கும் பெண்களிடம் அவன் அளவாகவே பழகுவான்.

மாநிறம் என்றாலும் தெளிந்த களையான முகம், ஆறு அடிக்கு மேல் வளர்ந்திருக்கும் அவன் உயரம், வசீகரிக்கும் சிரிப்பு, துறுதுறு கண்கள் என்று அவன் கல்லூரியில் பெண்களை கவர்ந்த போதும் அவர்களின் பின் திரும்பியும் பார்க்காமல் தன் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துபவன்....

பொருளாதரத்தில் மிகுந்த சிரமத்தில் இருக்கும் தன் பெற்றோரை சந்தோஷப்படுத்தி பார்ப்பதே தன் வாழ்க்கையின் ஒரே குறிக்கோள் என்று பெண்களின் பக்கமும், மது, புகை என்று எந்த கெட்ட பழக்கங்களின் பக்கமும் திரும்பியும் பார்க்காதவன்.....

ஆனால் மஹாவை ஸ்ரீ அறிமுகப்படுத்திய பொழுது அவளைத் திரும்பி பார்த்தவனுக்கு அந்த விநாடி ஏனோ மனதில் ஒரு இன்பம் ஊடுறுவி சென்றது போல் இருந்தது...

சிவந்த நிறத்தில் வெண்மதி போன்ற முகத்துடனும் தேவதைப் போல் இதயத்தை கலங்க வைக்கும் எழிலுடனும் மயக்கம் தரும் விழிகளுடனும் தன் முன் நின்று வசீகரிக்கும் அழகில் தன்னை அறியாமல் சிக்கிக் கொண்டவனின் பார்வையில் தெரிந்த குறும்புத்தனத்தை கண்டவளுக்கு நாணம் வந்தது....

https://drive.google.com/file



அவளின் வெட்கமும் இளமுறுவலுடன் தோன்றிய இதழின் அழகும் அவனை தடுமாற செய்ய, அலை மோதிய உள்ளத்துடன் அவனின் விழிகள் அவளை தன்னுள்ளே மூழ்கடித்துக் கொள்ளும் அளவிற்கு பார்க்க, அவளை அள்ளி பருக துடிக்க காத்திருப்பது போல் பார்த்த அவன் பார்வை அவளை நெளிய வைத்தது...

அவனின் ஆழ்ந்த அதே சமயம் துறுதுறு பார்வையை சந்திக்க முடியாமல் அவள் சட்டென்று தலை குனிந்தது வேறு அவனின் வாலிப வயதிற்கு தூபம் போட்டது போல் இருந்தது...

மனதின் ஒரு மூலையில் ஒரு வேளை இவள் நமக்கானவளோ என்று கூட தோன்றியது.....

நல்ல வேளை இவர்களின் பார்வை பறிமாற்றத்தை அங்கு இருந்தவர்கள் ஒருவரும் கவனிக்கவில்லை...

ஏற்கனவே ஒரு திருமணத்தை முடித்துவிட்டு படாதபாடு பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்... இதில் இவர்கள் வேறா..

தொடர்ந்த கலா...

"ஸ்ரீ, இவன் என்னோட பையன் வினோத்.... கல்யாணத்தில் பார்த்திருப்ப, 24 வயசாகுது... எம் ஸி ஏ படிக்கிறான்... உனக்கு தெரியுமே, நம்ம ஊர்ல நல்லசிவம் தாத்தா இருந்தார்ல... அவங்க பையன் தான் இவன் காலேஜ் படிப்புக்கு பொறுப்பெடுத்திருக்கார்..... இவன் ப்ளஸ் டூவில ஸ்கூலிலேயே முதல் மதிப்பெண் எடுத்ததால அவர் தான் இவன காலேஜ் சேர்த்துவிட்டு இப்போ எல்லாத்தையும் பார்த்துக்கிறார்..... திவ்யாவும் நல்லா படிப்பா... ஆனால் அவளை எங்களால காலேஜ் அனுப்ப முடியல..... ப்ளஸ் டூவோட படிப்ப நிறுத்திட்டோம்.... பதினெட்டு வயதிலேயே

3:07 PM 52%
https://drive.google.com/file



அவளுக்கு வரன்கள் வர ஆரம்பிச்சுடுச்சு... இன்னும் கொஞ்சம் நாளாகட்டும்னு இருந்தோம், ஆனால் அந்த பையன் வந்தவுடன் என்னமோ கல்யாணத்திற்கு சம்மதிச்சுட்டோம்....."

என்றவர் சிறிது வருத்தத்துடனே...

"திவ்யா கூட பத்தொன்பது வயதிலேயே கல்யாணமா அம்மான்னு கேட்டா? ஆனால் வயசுப் பொண்ண எத்தனை நாள் வீட்டுல வச்சிக்கிறதுன்னு தான் கல்யாணத்திற்கு சரின்னோம்..." என்க,

அப்பொழுது தான் திவ்யாவுக்கு வெறும் பத்தொன்பது வயது என்றும் அதுவும் கல்லூரிக்கு கூட அவள் போனதில்லை என்ற விஷயமே அருணுக்கும் மஹாவிற்கும் தெரிந்தது.

திகைப்புடன் ஒருவொருக்கொருவர் பார்த்துக் கொண்டார்கள்.....

"போச்சு, எல்லாம் போச்சு... இது வேறையா? அர்ஜூன் அண்ணனுக்கு தெரிஞ்சது அவ்வளவு தான்" என்பது போல் இருந்தது அவர்கள் பார்வை.

மெதுவாக அருணை நெருங்கிய மஹா அவன் கரத்தை பற்றி இழுக்க, குனிந்தவனிடம்..

"அர்ஜூன் அண்ணாவோட டேஸ்டுக்கு எப்படிண்ணா அண்ணி ஒத்து வருவாங்க? அவரோட ஸ்டேட்டஸ்க்கு அவர் எப்படி பொண்ணு எதிர்ப்பார்த்து இருந்திருப்பாரு.... ஆனால் இப்போ நடக்கிறது என்ன? இது எங்க போய் முடியப் போகுதோ தெரியலை" என்று கிசுகிசுத்தவள் தொடர்ந்து...

52% 3:07 PM
https://drive.google.com/file



"ஆனால் எனக்கு என்னவோ திவ்யா அண்ணியை ரொம்ப பிடிச்சிருக்கு.....வீட்டிற்கு வந்தவுடனே சமையல் செய்யும் பொறுப்பை எடுத்துக்கிட்டாங்க... காலையில் சீக்கிரம் எழுந்து வாசலில் கோலம் போடறது, பூஜை அறையில் இருந்து வர ஊதுபத்தி, சாம்பிராணி வாசம் வீடு முழுவதும் பரவி வீட்டையே ஒரு கோயில் மாதிரி மாற்றியதுன்னு ஒரே நாளில் ஐ ஃபெல் இன் லவ் வித் ஹர் [I fell in love with her]" என்றாள் முக மலர்ச்சியுடன்...

அவள் முகம் நோக்கி மேலும் குனிந்த அருண்....

"இது எல்லாத்தையும் விட அர்ஜூன் அண்ணா காலையில் அவங்க காலடியில் சாப்பாடு தட்டை விசிறி அடிக்க, எதுவுமே பேசாமல் அதை சுத்தம் பண்ணியது எனக்கு ரொம்ப பிடிச்சுச்சு மஹா... எவ்வளவு பொறுமை இல்ல? நிச்சயம் ஸிட்டி பெண்களிடம் இவ்வளவு பொறுமை இருக்கிறதா இப்பொழுதுன்னு தெரியலை" என்க

"நிச்சயம் எனக்கு இல்லை" என்று முடித்தாள் மஹா...

ஒரே நாளில் திவ்யா எல்லோர் மனதிலும், வீட்டில் வேலை செய்பவர்கள் உட்பட இடம் பிடித்துவிட்டாள்....

ஆனால் தன் மணாளனின் மனதில் இடம் பிடிப்பது எப்பொழுதோ?????

கலாவிற்கு வீட்டை சுற்றிக் காண்பித்த ஸ்ரீ கடைசியில் அர்ஜூனின் அறைக்கு வர, கலா அவனுடைய அறையை பார்த்தவர் அசந்துவிட்டார்.

52% 3:07 PM
https://drive.google.com/file



"இங்கு தான் நம் மகள் இருக்கப் போகிறாளா? எவ்வளவு பெரிசா அழகாக இருக்கு.... திவ்யா ரொம்ப கொடுத்துவச்சவ தான்... அம்மா தாயே! என் மகளுக்கு திருஷ்டி எதுவும் பட்டுடக்கூடாது தாயி... அவள் அவ புருஷனோட சந்தோஷமா இருக்கனும் அம்மா" என்று மனதார வேண்டிக் கொண்டார்.

அது திவ்யாவின் மனதை எட்டியதோ என்னவோ தன் அன்னையை திரும்பி பார்த்தவள் மனதுக்குள்,

"ஐயோ! அம்மா, நீங்க ரொம்ப கற்பனையெல்லாம் பண்ணாதீங்க... நானே இப்போ தான் அவரோட ரூம பார்க்கிறேன்..... அதுவும் இப்போ நாம் வெளிய தான் நின்னு பார்க்கிறோம்... இன்னும் உள்ளுக்குள் கூட போகலை... இதுக்கப்புறம் எப்போ இந்த அறையை பார்ப்பேன்னே எனக்கு தெரியலை" என்று குமைய, கலா தன் மகளின் அருகில் வந்தவர்,

"திவ்யாம்மா, நீ நேத்து மாப்பிள்ளையோட இந்த அறையில தான் படுத்திருந்தியா?" என்று மெதுவாக அவள் காதிற்கருகில் வந்து கேட்க, திவ்யாவிற்கு தன் அன்னையுடைய வெள்ளை மனதை நினைத்து பாவமாக இருந்தது.....

"அம்மா நீங்க கொஞ்சம் கீழ வரீங்களா? நான் உங்க கூட பேசனும்" என்க, கலாவும் ஸ்ரீயிடம் சொல்லிவிட்டு திவ்யாவின் பின் சென்றார்.

திவ்யாவும், கலாவும் மஹாவின் அறைக்குள் நுழைய ஸ்ரீக்கோ பக்கென்றிருந்தது.....

தன் மகனுக்கு இந்த கல்யாணம் பிடிக்கவில்லை என்பதையோ, அல்லது காலையில் நடந்ததையோ திவ்யா சொன்னால் கலாவின் மனது என்ன பாடுபடும் என்று யோசித்தவர் அவர்கள் வருகையே எதிர்பார்த்திருக்க, சிறிது நேரத்தைலேயே கலா புன்னகை முகத்தோடு வெளியே வந்தார்.....

ஸ்ரீ அருகில் வந்த கலா,

"ஸ்ரீ, நீ ஒன்னும் கவலைப் படாதடி... திவ்யா என்னை மாதிரி ரொம்ப பொறுமைசாலி... என் மகன் தான் அவங்க அப்பா மாதிரி கோபக்காரன்..... திவ்யா எல்லாத்தையும் சமாளிச்சுக்குவா... ஆனால் அவ ஏதாவது தப்பு பண்ணினா அவ கிட்ட எடுத்து சொன்னால் புரிஞ்சுப்பா... இதை உன் கிட்ட நான் சொல்ல வேண்டியதே இல்லை.... எனக்கு தெரியும் நீ எப்படி அவளை பார்த்துகுவன்னு... ஆனால் ஒரு அம்மாவா இத சொல்றதும் என்னோட கடமையில்லையா?" என்றார்.....

ஸ்ரீயோ நன்றியோடு திவ்யாவைப் பார்க்க, அவள் விழிகளில் ஏக்கத்துடன் தன் கணவனின் அறையையே பார்த்திருக்க,

"அப்பா முருகா, சீக்கிரம் சிறுசுகள் இரண்டையும் சேர்த்து வைப்பா... நான் நடந்தே உன் கோயிலுக்கு வருகிறேன்" என்று மனதிற்குள் பிராத்தனை செய்துக் கொண்டார்.

பின் அனைவரும் உணவு அருந்த அமர, ஸ்ரீயிடம் வந்த திவ்யா தன் அன்னைக்கோ மற்றவர்களுக்கோ கேட்காத வண்ணம் மெல்லிய குரலில்,

3:08 PM 52%
https://drive.google.com/file



"அத்தை, எப்போ அவர் கையால நான் தாலிய வாங்கிட்டோனோ அப்பவே இது என் குடும்பம்..... இங்க என்னால சந்தோஷம் மட்டும் தான் வரனும்... என்னால எந்த கஷ்டமும் வராது, வரவும் விடமாட்டேன்..... நீங்க, நானும் அம்மாவும் தனிய ரூமுக்குள்ளே போகிறத கலக்கத்தோட பார்த்திட்டு இருந்தப்பவே எனக்கு புரிஞ்சுடுச்சு... நிச்சயம் இங்க நடக்கிற எதையும் அம்மாவிடம் நான் சொல்லலை..... அவங்க கிட்டதட்ட ஒரு சின்ன குழந்தை மாதிரி.... என்னமோ இது ஏற்கனவே பெரியவங்க பாத்து வச்ச கல்யாணம் மாதிரி என்னென்னமோ நினைச்சுக்கிட்டாங்க..... அவங்ககிட்ட உங்க மாப்பிள்ளைக்கு கொஞ்சம் டைம் குடுங்க.... அதுக்குள்ள என்னென்னமோ கற்பனை பண்ணாதீங்கன்னு சொன்னேன்.... அவங்களும் புரிஞ்சிக்கிட்டாங்க" என்றாள்.

இவளே ஒரு சிறு குழந்தை... இவளுக்கு இவள் தாய் சிறு குழந்தையாக தெரியும் அந்த அப்பழுக்கற்ற மனதை என்னவென்று சொல்வது என்று பிரமித்து போனார் ஸ்ரீ.

உணவு உண்டு முடிந்ததும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த கலா, நேரே விஷயதுக்கு வந்தார்.

"ஸ்ரீ, திவ்யாவிற்குன்னு நாங்க சீர் வாங்கி வச்சிருக்கோம்.. நிச்சயம் உங்க வசதிக்கு அது ஒன்னுமே இல்ல... ஆனால் கொண்டு வந்தத கொடுத்து தான் ஆகனும்..... எல்லாமே வெளியிலே வண்டியில இருக்கு... நாங்களே இறக்கி வச்சிடுறோம்... எங்க வைக்கனும்னு மட்டும் சொல்லுப்பா" என்றார் தயக்கத்துடன்...

"என்னடி கலா, என்னமோ வெளி ஆளு மாதிரி பேசுர... அவ எங்க வீட்டு பொண்ணுடி.... ஆனால் நிச்சயம் நான் சொல்ற படி நீ கேட்கப் போறதில்ல... அதனால உன் விருப்பப்படியே செய்" என்றவர்,

https://drive.google.com/file



மஹாவை அழைத்து "மஹா அவங்களுக்கு அந்த கார்னர் ரூம காட்டும்மா... அவங்க அங்க திங்ஸ வைக்கட்டும்" என்றார்.....

கலா வினோத்தை பார்த்து, "வினோத் நீ போய் எல்லாத்தையும் எடுத்து வைப்பா" என்க,

மஹா அவன் பக்கம் திரும்ப, அது வரை எல்லையில்லா பிரமிப்புடன் அவளையே விழுங்கி விடுவது போல் கூர்ந்து நோக்கிக் கொண்டு இருந்தவன் அவள் சட்டென்று தன் முகம் நோக்கி திரும்பவும் தன் பார்வையை திருப்பிக் கொண்டான்...

பெண்களுக்கே உரிய இயற்கையான எச்சரிக்கை உணர்வு அவளுக்கு அவன் தன்னையே பார்த்திருப்பதை உணர்த்தி இருந்தாலும் அவன் பார்வையின் பொருளையும் புரிந்து இருந்தாலும், அவன் இப்பொழுது தன்னை கண்டவுடன் மறு பக்கம் திரும்பியதும் தன்னை அறியாமல் மெல்ல களுக்கென சிரித்தாள்...

அதுவரை அவளையே விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் தன்னை பார்ப்பது தெரிந்ததும் சட்டென்று தன் விழிகளின் போக்கை மாற்றியவன் அவள் சிரிப்பது தெரிந்ததும் மீண்டும் ஒரு முறை அவளை ஊடுறுவும் பார்வை பார்த்துவிட்டு "சரிம்மா" என்றவாரே வெளியே சென்றான்.....

அவனின் ஆழ்ந்த பார்வையில் திகைத்தவள் "இன்னைக்கு தான் முதல் முறை என்ன பார்க்கிறாங்க... அதுக்குள்ள இப்படி பார்த்தா" என்று மானசிகமாக தலையில் அடித்துக் கொண்டாள்.

ஆனால் என்னவோ அவளுக்கும் அவனை கண்டவுடனேயே பிடித்து தான் இருந்தது....

3:09 PM 51%
https://drive.google.com/file



அவன் திவ்யாவைப் போல அமைதியானவனாக தெரியவில்லை... ஆனால் அவளை போல் நல்ல களையான முகம்.... பார்த்தவுடன் பிடித்துவிடும் இரகத்தில் சேர்ந்த அழகனே அவன்...

வினோத்துடன் சேர்ந்து அருணும் மற்றவர்களும் சீர் சாமான்களை இறக்க துவங்க, சிறிதே இருந்தாலும் கலா மகளுக்கு நல்லாதாகவே பாத்திரங்களும், மற்றும் "அந்த மாப்பிள்ளை" வீட்டில் கேட்டிருந்தது போல பொருட்களும் வாங்கி இருந்தார்.

அனைத்தையும் எடுத்து வைத்த பிறகு கலா..

"சரி ஸ்ரீ, நாங்க கெளம்புகிறோம்.... மற்ற விஷயங்களை பிறகு பேசிக் கொள்ளாலாம்" என்றார்...

அவருக்கு திவ்யா தன்னிடம் அறையில் சொன்னது நியாபகத்தில் வந்தது.

"அம்மா, என்ன தான் அத்தை உங்க ஃப்ரெண்டா இருந்தாலும் இப்போ அவங்க உங்களோட சம்பந்தி..... அது மட்டும் இல்ல, இவங்க குடும்பத்த பார்க்கும் பொழுது ரொம்ப ரொம்ப வசதியான குடும்பமா தெரியுதும்மா..." என்றவள் தலை தாழ்த்தி தயங்கிவாரே...

"அதுவும் அவர பார்த்தாலேயே எனக்கு உள்ளுக்குள்ள எல்லாம் நடுங்குது... அவரு ரொம்ப பெரிய ஆளு போல... நிறைய படிச்சிருக்காரு, ரொம்ப பெரிய பிஸினஸ் எல்லாம் பண்றாருப் போலம்மா.... நிச்சயம் அவருக்கு பெரிய இடத்துல இருந்து, அவருடைய அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி தான் பொண்ணு பார்த்திருப்பாங்க.... இப்போ அத்தை சொன்னாதால அந்த நிமிஷத்தில என்ன பண்றதுன்னு தெரியாம

3:09 PM
https://drive.google.com/file



வேற வழியில்லாம அவர் என்னோட கழுத்துல தாலி கட்டிட்டாரு.... தாலி கட்டிட்டதுனால அவர உடனேயே என்னைய ஏத்துக்கங்கன்னு சொன்னா எப்படிம்மா? அவருக்கு என்ன பிடிக்குமா, இல்லை பிடிக்காதான்னு தெரியலை.... அதனால நீங்க இப்பவே ரொம்ப எல்லாம் எதிர்பார்க்காதீங்க..... ப்லீஸ்மா புரிஞ்சிக்கங்கமா" என்ற மகளை பெருமையோடு பார்த்தார் கலா...

இந்த சின்ன வயசிலேயே எவ்வளவு பக்குவம் என்று நினைத்தவர் மறு வீட்டு அழைப்பு, தாலி மாற்றிக் கட்டுவது என்று எதனையும் பேசாமல் கிளம்பினார்...

பின் அந்த காலத்திலேயே ஸ்ரீயின் அண்ணன் சுந்தரேசன் தன்னை விரும்புவது தெரிந்தும், அவனின் வசதி தெரிந்தும் தங்கள் நட்பு கெட்டு போய் விடக் கூடாது என்று தன் தோழியிடம் தெரியப்படுத்தி அதனை முளையிலேயே கிள்ளி எறிந்தவராயிற்றே...

அவருக்கு பிறந்த மகள் எப்படி இருப்பாள்??

ஸ்ரீக்கும் கலாவை இன்னும் கொஞ்ச நாள் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை தான்...

ஆனால் தன் மகனின் கோபமும், அவன் திவ்யாவை புறக்கணிப்பதும் தெரிந்தால் கலாவையும் அவள் குடும்பத்தையும் அது பாதிக்கும் என்று தான் ஒன்றும் பேசாமல் அவரை அனுப்பி வைத்தார்.

வீட்டில் இருந்து விடைப் பெற்று தாங்கள் வந்த காருக்கு அருகில் சென்ற வினோத் தன் தங்கையை பார்த்து தலையாட்டியவன், எதேச்சையாக பார்ப்பது போல் மஹாவையும் பார்த்து வைக்க, படப்படப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளின் இதழ்களில்

3:09 PM
https://drive.google.com/file



தவழ்ந்த புன்னகையும், விழிகள் அள்ளி வீசிய அழைப்பும் அவனை திணற அடித்தது...

நிலை குலைந்த தன்னை சீர்படுத்திக் கொள்ள அவன் முனையவும் அதில் வெற்றி பெற முடியாமல் அவன் தடுமாறவும், அவனின் தடுமாற்றம் புரிந்தவள் தலை தாழ்த்திக் கொண்டாள்...

கண்டதும் காதலா?.....[லவ் அட் ஃப்ர்ஸ்ட் ஸைட்] [Love at first sight] !!!!

அன்று இரவு மற்ற அனைவரும் உணவு அருந்தி முடிந்தவுடன், திவ்யா எல்லாவற்றையும் எடுத்து வைத்தவள் தான் மட்டும் உண்ணவில்லை.

இதை கவனித்த ஸ்ரீ அவளின் எண்ணம் புரிந்தவராக அவள் அருகில் வந்தவர்,

"திவ்யா, அர்ஜுன் எப்பொழுது வருவான் எப்பொழுது வெளியில் போவான்னு சொல்ல முடியாதுடா... அவன் பிஸ்னஸ்ஸ் அப்படி... அதனால நைட்டு அவன எதிர்பார்க்காதடா... நீ சாப்பிடு.... அவன் பத்து மனிக்கு மேல வந்தால் கண்டிப்பா வெளியில சாப்பிட்டுட்டு தான் வருவான்..... நான் சாப்பிடாமா வெயிட் பண்ணிட்டு இருந்தாலே அவனுக்கு ரொம்ப கோபம் வரும்.... அதனால நீ சாப்பிடு" என்றார்.

அவருக்கும் மனதிற்கு கஷ்டமாகத் தான் இருந்தது...

திருமணமான நாளில் இருந்து ஸ்ரீ பாலாவை விட்டு காலையிலும், இரவிலும் தனித்து உணவு அருந்தியதில்லை.....

எத்தனை நேரம் ஆனாலும் அவர் தன் கணவனிற்காக காத்திருந்து அவர் வந்தவுடன் இருவரும் ஒன்றாக சேர்ந்து தான் சாப்பிடுவார்கள்...

எத்தனையோ முறை பாலாவும் சொல்லி பார்த்தும் ஸ்ரீ கேட்டதில்லை...

அவர் பிரசவத்திற்கு தன் பெற்றோர் வீட்டிற்கு சென்ற போது பாலாவிற்கு தன் மனைவி இல்லாமல் உணவு இறங்கவே இல்லை.....

அதை இப்பொழுது நினைத்துப் பார்த்த ஸ்ரீக்கு திவ்யாவின் மனது நன்கு புரிந்தது...

ஸ்ரீ சொன்னதினால் ஏதோ என்று ஒரு சப்பாத்தியை சிரமப்பட்டு கொறித்துவிட்டு ஹாலுக்கு வந்த திவ்யா...

"அத்தை நான் அவர் வந்தவுடன் படுக்க போகிறேன்" என்றாள்.....

"ஐயோ! இந்த பெண்ணோட எந்த ஆசையும் நிறைவேறாதே இப்போதைக்கு" என்று நினைத்தவர் இதனையும் மறுக்க விருப்பமில்லாமல்,

3:10 PM
https://drive.google.com/file



"சரிடா, அவன் எப்போ வருவான்னு தெரியல... அதனால கொஞ்ச நேரம் வெயிட் பண்ணு..... அவன் வர லேட் ஆனால் நீ போய் படும்மா" என்றவர், மன பாரத்துடன் அவர் ரூமிற்கு சொன்றார்.

அங்கு அவரை எதிர்பார்த்திருந்த பாலா ஸ்ரீயின் முகம் தெளிவில்லாமல் இருப்பதை பார்த்து,

"என்னம்மா, ரொம்ப டல்லா இருக்க" என்க,

கனவனின் தோளில் சாய்ந்தவாரே நடந்ததை சொன்னார்...

"பாவங்க ரொம்ப சின்ன பொண்ணு... கல்யாணம் ஆகி ஒரு நாள் தான் ஆகிருக்கு... எனக்கு தெரியும்... அர்ஜூனுக்கு அவள் மனசுப் புரிய கண்டிப்பா கொஞ்ச நாள் எடுக்கும்.... ஆனால் அதுக்குள்ள இந்த பொண்ணு மனசு எவ்வளவு காயப்படுமோன்னு பயமா இருக்கு... என்னமோ மனசு ரொம்ப உருத்துதுங்க" என்றார்.....

மனைவியின் மனதை நன்கு புரிந்துக் கொண்ட கணவனாக,

"ஸ்ரீ, நடந்தது எல்லாம் நல்லதுக்குன்னு நீ தான் அடிக்கடி சொல்வ..... இப்போ மட்டும் என்ன. நம்ம இரண்டு பேரையுமே எடுத்துக்க.. உன்ன எனக்கு கல்யாணம் பண்ண முடிவு பண்ணினப்ப எனக்கு எவ்வளவு பயம் இருந்ததுன்னு தெரியும்... உங்க அப்பாவப் பார்த்தாலே ஊரே பயப்படும்... திடீர்னு வந்து உன்னைய பொண்ணு பார்க்கலாம் வான்னு எங்க வீட்டுல கூப்பிட்டப்ப இது எப்படி நடக்கும்? அவங்க எவ்வளவு பெரிய இடம்? நமக்கு ஒத்து வருமான்னு நான் கேட்டதுக்கு அவங்க வீட்டுல தான் கூப்பிட்டு அனுப்பினாங்கன்னு நீ பேசாமா வான்னு சொன்னவுடனேயே ஏதோ ஒரு தயக்கதுல தான் நான் உங்க வீட்டுக்கே வந்தேன்....."

51% 3:10 PM
https://drive.google.com/file



"ஆரம்பத்துல நான் கூட உன் கிட்ட அந்த அளவுக்கு பழகல... தான் என் கூட எவ்வளவோ இறங்கி வந்து உன்னோட மனச புரிய வச்ச.. அதற்கு பிறகு தான் நமக்குள்ள ஒரு அண்டர்ஸ்டான்டிங் வந்தது.... இப்பே எப்படி இருக்கோம் பாரு? அதனால எல்லாத்துக்கும் ஒரு டைம் இருக்கு... நாம தான் பொறுமையா இருக்கனும்..... நிச்சயம் திவ்யாவுக்கும் அந்த பொறுமை இருக்குன்னு பார்த்தாலே தெரியுது... அதனால மிச்சத்தை எல்லாம் அந்த கடவுளோட பாதத்தில போட்டுட்டு தூங்கும்மா" என்றார்.

கணவனின் ஆறுதலான வார்த்தைகளோ, இல்லை மனதின் அசதியோ, தூக்கமும் அவரை தழுவியது.

மறுநாள் அலுவலகத்திற்கு வந்த அர்ஜூன் யாருக்கும் விஷ் பண்ணாமலும் யாரையும் பார்க்காமலும் வெகு வேகமாக தன் அறைக்கு செல்ல, இது ஒன்றும் அவன் குனத்திற்கு மாறானது அல்ல என்றாலும் அவனின் இன்றைய வேகம் அனைவருக்கும் கொஞ்சம் அச்சத்தையே கொடுத்தது.....

அவன் பின்னையே வந்த கதிர் கதவை தட்ட, அவனை உள்ளே வர பணித்த சொன்ன அர்ஜூன் அவன் வந்தவுடன் அவனி நிமிர்ந்து பார்க்க, அலுவலக விஷயமாக பேச வந்தவன் அர்ஜுனின் கோப முகத்தைப் பார்த்தவுடன் எல்லாம் மறந்து போக ஒன்றும் பேசாமல் இருந்தான்.....

"வாட்ஸ் அப் கதிர்? [what's up Kathir] முக்கியமான விஷயமா?"

"இல்ல சார், நீங்க நேற்று ஃபோனில் ஏதோ லாயரைப் பார்க்க சொன்னீங்க, எதுவும் பிரச்சனையா?"

51% 3:10 PM

https://drive.google.com/file



சிரிது நேரம் மௌனமாக இருந்த அர்ஜுன் தன் தலையை அழுந்த கோதிக் கொண்டு கதிரைப் பார்த்தான்...

"கதிர், எத்தனையோ ப்ராப்ளம்ஸ என்னோட லை:ப்ல :பேஸ் பண்ணீயிருக்கேன்..... நான் ஜஸ்ட் ஒரே ஒரு பிஸினஸ் மட்டும் பண்ணலைன்னும் உங்களுக்கும் தெரியும்... நீங்க என்னோட ஒரு பிஸினஸ்க்கு மட்டும் பெர்ஸ்னல் அசிஸ்ட்டண்ட் இல்லைன்னும் உங்களுக்கு தெரியும்... அதனால உங்ககிட்ட மனம் விட்டு பேச எனக்கு நிச்சயம் எந்த தயக்கமும் இல்லை... எனக்கு :ப்ரெண்ட்ஸ்னு நிறைய பே இருந்தாலும் நான் என்னோட பெர்ஸ்னல் விஷயங்களை யார்கிட்டேயும் ஷேர் பண்றதில்லை..... ஆனால் உங்க கிட்ட மட்டும் ஐ ஆல்வேஸ் :பீல் க்ளோஸ்... மே பி பிக்காஸ் ஐ ட்ர்ஸ்ட் யூ அ லாட் [i always feel close... May be because i trust you a lot]" என்றவன் கதிரின் முகத்தை உற்று நோக்கி...

"அதனால உங்ககிட்ட இதை பத்தி டிஸ்கஸ் பண்றது ஒன்னும் தப்பு இல்லைன்னு நினைக்கிறேன்" என்றவன் நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் கூறி ஒரு பெருமூச்சு விட்டு,

"இதுல என்னால ஒரு முடிவ உடனே எடுக்க முடியும்னு தோனலை... அவ எங்க அம்மாவோட வெரி க்லோஸ் :ப்ரெண்டோட பொண்ணு.... இப்போ நான் என்ன முடிவ எடுத்தாலும் அது நிச்சயம் பெரிய பிரச்சனையாக வெடிக்கும்... எல்லோருடைய மனசையும் காயப்படுத்தும்.... பார்க்கத் தான் என்னோட மாம் ரொம்ப ஸா:ப்ட், ஆனா அவங்க ஒரு முடிவ எடுத்துட்டா யாராலையும் அத மாத்த முடியாது"

"அதனால இப்போ எனக்கு என்ன பண்றதுன்னு புரியலை கதிர்... ரொம்ப குழப்பமா இருக்கு... ஆனால் அதுக்காக அந்த பொண்ணு தான் என்னோட வை:ப்ன்னு என்னால ஏத்துக்கவும் முடியாது.... நிச்சயம் ஐ கெனாட் அக்ஸப்ட் ஹெர் அஸ் மை வை:ப்.... ஐ கெனாட் ஈவன் திங்க்

https://drive.google.com/file

அபெள இட் [i cannot accept her as my wife. I cannot even think about it ] " என்றவனின் முகம் இது வரைக்கும் கதிர் பார்க்காத முகமாக இருந்தது.

நேற்று அர்ஜூன் அவனிடம் ஒரு டிவோர்ஸ் லாயர் வேண்டும் என்ற போது அது நிச்சயம் வேறு யாருக்காக தான் இருக்கும் என்று நினைத்திருந்தவன், இன்று அர்ஜூன் அவனுக்கு திருமணம் முடிந்ததைப் பற்றி கூறியதும் அதிர்ந்தான்..

அப்படி என்றால் வக்கீல் இவருக்கு தானா??

ஆனால் இதனை என்னுடன் பகிர்ந்துக் கொள்கிறாரே... இதை பற்றி நான என்ன சொல்வது?

இது திருமண வாழ்க்கையை பற்றியது....

அவருடைய தனிப்பட்ட விஷயம்..... எப்படி இதைப் பற்றி அவரிடம் கலந்து ஆலோசிப்பது? என்று தயங்கினான்.

இருந்தும் அவனுக்கு அர்ஜூன் மேல் எப்பொழுதும் ஒரு தனி மரியாதையும் பாசமும் உண்டு....

அதனால் தான் சொல்ல வந்ததை சொல்லியே ஆக வேண்டும் என்று முடிவெடுத்தவன்,

"சார், எனக்கு உங்களோட பெர்சனல் விஷயத்தில தலையிட உரிமையில்லை... எனக்கு அது நல்லா தெரியும்.... பட் இஃப் யூ வான்ட் டு டாக், ஐ ஆம் ஹியர்...ப்ளீஸ் டோண்ட் ஹெஸிடேட் சர்...[but if you want to talk i am here. Please dont hestitate sir]" என்றான்."

3:10 PM 51%
https://drive.google.com/file 17



ஒவ்வொரு பிரச்சனையிலும் அர்ஜுன் முடிவெடுக்கும் விதம் மிகவும் தெளிவாகவும் கம்பீரமாகவும், புத்திசாலித் தனமாகவும், நிறைய சந்தர்பங்களில் அச்சமாகவும் இருக்கும்.

அரசியல்வாதிகள் ஈடுபடும் பொழுது கதிரே அர்ஜுனை பார்த்து...

"சார் கொஞ்சம் யோசிச்சு செய்ங்க.... அவங்களால எந்த சைடிலிருந்து பிரச்சனை வரும்னு தெரியாது... அதனால கொஞ்சம் பார்த்து செய்ங்க" எனும் பொழுதெல்லாம்,

"கதிர், பிரச்சனை என்று வரும் பொழுது அது அரசியல்வாதிங்களால வருதா? இல்லை வொர்கர்ஸால வருதா? அல்லது நம்மோட காம்பட்டிட்டர்ஸ்னால வருதான்னு பார்க்கிறதை விட அத எப்படி சால்வ் பண்றதுன்னு திங்க் பண்ணுறதுக்கு தான் நாம டைம் ஸ்பெண்ட் பண்ணனும்..... சில சமயத்தில அரசியல்வாதிங்களோட பிரச்சனைய கூட சமாளிச்சரலாம்... ஆனால் இவங்களால நம்மளை ஒன்னும் பண்ண முடியாதுன்னு நினைச்சிட்டு இருக்குற சாதாரண ஒரு தொழிலாளியால கூட சமாளிக்க முடியாத பிரச்சனை வரும்... அதானால் பிரச்சனையோட அளவு தான் முக்கியம்.. அதனால நமக்கு வர நஷ்டம் தான் முக்கியம்... அதுல தான் நம்ம கவனம் இருக்கனுமே தவிர வேற எதிலயும் கவனம் சிதறக் கூடாது" என்று அதிரடியாக கூறுவான்.

அவ்வாறு எந்த பிரச்ச்னைகளையும் அலசி ஆராய்ந்து ஆழ்ந்த யோசித்து முடிவெடுப்பவன் இன்று குழம்பி நின்றான்...

இது அவனுடைய மண வாழ்க்கை..... நிச்சயம் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எதையும் செய்ய முடியாது.... அதனால் தான் இந்த தடுமாற்றம்..... இதனை உணர்ந்த கதிர்,

3:11 PM 51%
https://drive.google.com/file

"சார், இப்படி செஞ்சா எப்படி? பேசாம இத நீங்க கொஞ்சம் ஆறப் போடுங்க..... கூடிய சீக்கிரம் நல்லா யோசிச்சு இதுக்கு ஒரு முடிவ கொண்டு வரலாம்... ஏன்னா இதுல ஒரு பொண்ணோட வாழ்க்கை பிரச்சனையும் அடங்கி இருக்கு" என்க,

சட்டென்று நிமிர்ந்த அர்ஜூன்,

"கதிர், ஐ டோண்ட் ஈவன் ஹேவ் டைம் டு திங் அபௌட் மௌ லைஃப்... [I don't even have time to think about my life] இதில் இன்னொரு பெண்ணோட வாழ்க்கையைப் பற்றி நினைப்பதா? ஒரு வேளை நான் அவ கழுதுல தாலி கட்டலைன்னா அவ இந்நேரம் அவ வீட்டுல தான இருந்திருப்பா.... இப்போ மட்டும் என்ன... அதனால அவ திரும்ப அவங்க ஊருக்கு போயே ஆகனும்" என்றான்.

அவனின் பதிலில் அதிர்ந்த கதிர் அவனை நிமிர்ந்து பார்க்க அர்ஜூனின் முகத்தில் சிறிதும் வருத்தமோ இல்லை குழப்பமோ தெரியவில்லை.... அவனை பொறுத்தவரை அவனுக்கு அவனுடைய தொழிற்கள் தான் முக்கியம்...

பெற்றோரோ கூடப் பிறந்தவர்களோ அதற்கு பிறகு தான்... அப்படி இருப்பவனுக்கு யாரென்றே அறியாத ஒரு பெண்ணை பற்றி என்ன கவலை?????

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

51% 3:12 PM
https://drive.google.com/file

பாகம் - 6

அர்ஜுனைப் போல் கதிரால் நினைக்க முடியவில்லை...

கிராமத்தில் பிறந்து நன்றாக படித்ததினால் சென்னையில் கல்லூரியில் சேர்ந்து, தன்னுடைய திறமையினால் மட்டுமே முன்னேறி இன்று "தி க்ரேட்" அர்ஜுனுக்கே பி ஏவாக வேலை செய்பவன்.....

அர்ஜுனைப் போல் மற்றவர்களின் வாழ்க்கையை அதுவும் பெண்களின் வாழ்க்கையை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்ள அவனால் முடியாது...

இன்னும் சொல்லப் போனால் அர்ஜுனைப் போன்ற கோடீஸ்வரர்களுக்கு வேண்டுமானால் இது சாதாரன விஷயமாக இருக்கலாம்.....

ஆனால் கிராமத்தில் பிறந்து வளர்ந்த அர்ஜுனின் மனைவி போல் பெண்களுக்கு இந்த மாதிரியான முடிவு அவர்கள் வாழ்க்கையையே சடுதியில் அதல பாதாளத்தில் தள்ளி விடும்.....

அதனால் இரு பக்கமும் நன்கு யோசித்து தன் மனதில் தோன்றியதை மறைக்காமல் சொன்னான்...

"சார், நான் அதுக்கு சொல்லலை.... இப்போ நீங்க எடுக்கிற எந்த முடிவுலயும் கண்டிப்பாக யாரோ ஒருவருக்கு பாதிப்பு இருக்கும்....

3:12 PM 50%

https://drive.google.com/file

அது உங்களுக்கோ, அல்லது நம்ம ஸ்ரீ மேடத்திற்கோ, அல்லது உங்க மனைவிக்கோ.."

அவன் மனைவி என்று சொன்ன பொழுது அர்ஜுன் அவனை சட்டென்று நிமிர்ந்து பார்த்த பார்வையில் தெரிந்த மாற்றத்தை தாங்க முடியாமல் ஒரு வினாடி நேரம் பேச்சை நிறுத்தியவன், முகம் தெரியாத தன் முதலாளியின் மனைவிக்காக தன் தயக்கத்தை உதறி தள்ளிவிட்டு மீண்டும் தொடர்ந்தான்....

"அதனால இப்போ கொஞ்ச நாளைக்கு இத ஆறப் போடலாம் நம்ம மும்பை பிராஞ்சில் கொஞ்சம் வேலைகள் இருக்கு.... நானே நேர்ல போய் பார்க்கனும்னு இருந்தேன்.... ஏன் நீங்க அங்க போகக்கூடாது?" என்று சொல்லும் பொழுதே கதிருக்கு கதி கலங்கியது....

ஏதோ ஒரு வேகத்தில் இவனிடம் அறிவுறைக் கேட்டால் இவன் ஊரை விட்டே போகச் சொல்கிறானே என்று தன் MD தன்னுடைய சீட்டை கிழித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று மனதிற்குள் நினைத்தவன் சற்றே தயங்க மேலே பேசுங்க என்று தலை அசைத்து அனுமதித்து அளித்தான் அர்ஜுன்...

உள்ளுக்குள் கலங்கி இருந்தவனுக்கு அர்ஜுன் இத்தனை நேரம் பொறுமையாக தான் பேசுவதை கேட்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருந்தது... தொடர்ந்தவன்..

"என்னடா பிரச்சனைக்கு பயந்து உங்கள ஊர விட்டு போகச் சொல்றேன்னு நினைக்காதீங்க சார்..... சில சமயம் பிரச்சனைகளை உடனே சரி பண்ணுறத விட அதை கொஞ்ச காலத்திற்கு ஆறப் போடுறதகூட நல்ல முடிவெடுக்க உதவும்... அப்போ யார் மனசையும் புன்படுத்தாம உங்களாலேயும் ஒரு நல்ல முடிவு எடுக்க முடியும்".....

H+ 1 50% 3:12 PM
https://drive.google.com/file



தன்னுடைய முடிவு நிச்சயம் தனக்கு சாதகமாக தான் இருக்க வேண்டும் என்று அடி மனதில் உறுதி எடுத்துக் கொண்ட அர்ஜூனிற்கு கதிர் சொன்னதும் நல்லதாகவே பட மும்பை செல்ல முடிவெடுத்தவன்.....

"ஓகே கதிர், நீங்க டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்ணுங்க.... இன்னைக்கு ஈவினிங்குள்ள இங்க நான் அட்டெண்ட் பண்ண வேண்டிய மீட்டிங்ஸ அரேஞ் பண்ணுங்க.... நாளைக்கு காலையில மும்பாய் போகனும்" என்றான்.

நீண்ட நேரம் உறங்காமல் இருந்த திவ்யாவிற்கு நேற்று இரவு உறக்கம் இல்லாதது, இன்று காலையிலில் இருந்து வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தது என்று அவளையும் அறியாமல் தூக்கம் தழுவ, ஹாலில் இருந்த ஸோஃபாவிலிலேயே படுத்து உறங்கியும் விட்டாள்.....

அலுவலகத்தில் அர்ஜூனிற்கும் வேலைகள் நெட்டி முறிக்க அதுவும் வசதியாக போனது அவனுக்கு...

இரவு இரண்டு மணிக்கு மேல் வீட்டிற்கு திரும்பியவன் வேகமாக மாடியில் ஏறும் பொழுது கீழே பார்க்கவும், முன் அறையில் இருக்கும் டிவியில் எதோ படம் ஓடிக் கொண்டு இருக்க, கீழே ஸோஃபாவில் அருகில் நின்று இருந்த திவ்யாவை பார்த்தவனுக்கு கட்டுக்கடங்காத கோபமே வந்தது.....

"இந்த மாம்க்கு யாரை எங்க வைக்கனுமோ அங்க வைக்க தெரியாது" என்று கொஞ்சம் சத்தமாகவே சொல்ல, அவன் நடக்கும் பொழுது வந்த அழுத்தமான காலடியிலேயே வாரி சுருட்டிக் கொண்டு எழுந்திருந்த திவ்யா அவன் வார்த்தையில் மிகவும் அடிபட்டுப் போனாள்..

50% 3:12 PM
https://drive.google.com/file



இருந்தும் தன்னுடைய இயற்கையான பொறுமை குணத்தினால் சில விநாடிகளில் தன்னை இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவள் "சாப்பிட்டீங்களா?" என்று அவள் காதுக்கே கேட்டதோ என்று தெரியாத சன்னமான குரலில் கேட்க,

அவளின் கேள்வியில் சட்டென்று திரும்பியவன் அவளை ஒரு வினாடியே பார்க்க, அந்த கூர்மையான பார்வையை எதிர்க்கொள்ள தைரியம் இல்லாமல் வெடுக்கென தலையைக் குனிந்தவள் அவன் அவனுடைய அறைக்கு போய் கதவை சாத்தும் வரை தலையை நிமிர்த்தவே இல்லை.....

வார்த்தைகளிலேயே விஷத்தை கக்கும் கணவனைக் கண்டவளின் சிந்தனை சிதைந்து மனதை பிளந்தது போல் வலித்தது...

ஆனால அவள் பெருமூச்செறியவுமில்லை, வேறு உணர்ச்சி எதையும் காட்டவுமில்லை...

சித்தம் சிந்திக்கும் சக்தியை அறவே அழித்திருந்தது....

உடல் தளர்ந்து நிதானத்தை இழந்து ஸ்:.பாவில் அமர, அவளுக்கே புலப்படாத தன் எதிர்காலத்தை நினைத்து மனம் வலிக்க இதயத்தில் வேதனை விளைந்ததால் பொலபொலவெனக் கண்ணீரை உகுத்தவள் சில நிமிடங்களில் தன் மனதினை திடப்படுத்தி கண்ணீரை உள்ளே இழுத்தாள்..

50% 3:13 PM
https://drive.google.com/file



"இன்னும் எவ்வளவோ இருக்கு... இப்பொழுதே அழுதுவிட்டா அப்புறம் மற்றதை எல்லாம் தாங்கிக்கிற சக்தி இருக்காது..... பெண்களுக்கே இந்த அழற சக்தி மட்டும் இல்லைன்னா அவ்வளவு தான்" என்று மனதிற்குள் நினைத்தவள் ஒன்றும் பேசாமல் எழுந்து மஹாவின் அறைக்கு சென்று வராத தூக்கத்தை வர வழைக்கும் முயற்சியில் தோல்வியையே தழுவியவள் விடியும் முன்னரே எழுந்து குளிக்க சென்றாள்.....

இன்று என்னென்ன விவகாரங்கள் வேதனைகள் தனக்காக காத்திருக்கிறதோ என்று மனதிற்குள் எண்ணியவாரே குளித்து முடித்தவள் எங்கே நேற்று போல் இன்றும் தன் கணவன் தன்னை இடித்த விடுவானோ என்று சுற்றும் முற்றும் பார்த்து கொண்டே கீழிறங்கினாள்.

வாயிலில் நீர் தெளித்து கோலம் போட்டவள் பூஜை அறைக்கு சென்று கண்களை மூடி...

"முருகா, எனக்கு பொறுமையும், எதையும் தாங்கிக்கிற சக்தியையும் தாப்பா" என்று மனதுருக வேண்டியவள், சமையலறையில் தெய்வானையும் அல்லியும் இன்னும் வரவில்லை என்று தெரிந்து தானே காலை உணவை தயாரிக்க ஆரம்பித்தாள்.....

ஒருவர் பின் ஒருவராக எழுந்து வர அவர்களுக்கு காபி கலந்து கொடுத்தவள் மனதில் தன் கணவன் கீழே வருவதற்கு முன் மஹாவின் அறைக்குள் சென்று விட வேண்டும் என்ற எண்ணமே இருந்தது.....

அவளுடைய பரபரப்பை பார்த்த ஸ்ரீ என்னவென்று கேட்க,

3:13 PM 50%
https://drive.google.com/file



"இல்ல அத்த, அவங்க வரதுக்கு முன்னமே எல்லா வேலையும் முடிக்கனும்னு முடிச்சிட்டேன்.... நான் மேலே போறேன், நீங்க மத்தது எல்லாம் பார்த்துக் கொள்கிறீர்களா?" என்றாள்.....

ஆழ்ந்து அவளைப் பார்த்தவர்,

"சரிடா, நீ போ நான் பார்த்துக்கிறேன்... ஆனால் இந்த நிலைமை கூடிய சீக்கிரம் மாறும்" என்று கூற, ஒரு சிறு புன்னகையுடன் மாடிப் படிகளில் காலை வைத்தவள் மேலே பார்க்கவும் வெலவெலத்துப் போனாள்..

அங்கு மாடியில் இருந்து அர்ஜூன் வந்துக் கொண்டிருந்தான்.....

எந்த திக்கில் செல்வது என்று தீர்மானிக்க இயலாத நிலையில் விருட்டென்று ஸ்ரீயின் பின் மறைந்த திவ்யாவை பார்த்தும் பார்க்காதது போல் தன் அன்னையின் அருகில் வந்தவன்,

"மாம், பிஸினஸ் விஷயமா இன்னைக்கு நான் மும்பை போறேன்.... வர எவ்வளவு நாள் ஆகும்னு தெரியாது.... ஒரு கப்பிள் ஆ:ப் டேஸ் [Couple of days] கழிச்சு :போன் பண்ணி எப்போ திரும்பி வரேன்னு கன்:பேர்ம் பன்றேன்" என்றவன் அவர் எதுவும் கூறும் முன்னரே வெளியில் சென்றிருந்தான்.

தன் கணவன் தான் இருக்குமிடத்தில் இருக்க விரும்பவில்லை....

அதனால் தான் இந்த மும்பை பயணமோ என்று உள்ளூர சந்தேகம் வர தன் கணவனைப் பின் தொடர்ந்து செல்லும் ஸ்ரீயின் பின் நீர்

3:13 PM 50%
https://drive.google.com/file


தேங்கியிருந்த விழிகளுடன் ஓட்டமும் நடையுமாக சென்றவள் அவரை நெருங்கி...

"அத்தை நான் வேண்டுமானால் எங்க வீட்டுக்கு போயிடுறேன்... அவங்கள எங்கயும் போக வேண்டாம்னு சொல்லுங்க" என்றாள்.....

வேகமாக சென்றுக் கொண்டு இருந்தவன் காருக்கு அருகில் செல்லும் பொழுது திவ்யாவின் குரல் சன்னமாக கேட்க கூர்ந்து கேட்டவன் அவள் ஊருக்கு போகிறேன் என்று சொன்னது அவன் மனதிற்கு மகிழ்ச்சியே தந்தது.....

ஒரு வேளை அவளே போய் விட்டால் பிரச்சனை எளிதாக முடிந்துவிடுமே என்று எண்ணியவனின் உள்ளுணர்வு எதனையோ உறுத்தவும் திரும்பி பார்க்க, அங்கு திவ்யா கண்கள் கலங்க அவனையே பார்த்திருக்க,

அவளின் நீர் ததும்பும் கண்களுடன் தன் ஈட்டி போன்ற கண்களை சில விநாடிகள் தன்னுணர்வின்றி உறவாடவிட்டவனுக்கு அவள் கலங்கிய விழிகளில் தெரிவது கலவரமா? கலக்கமா? காதலா? ஏக்கமா? எதிர்பார்ப்பா? என்ன என்பது புரியவில்லை...

அவளின் உணர்ச்சிகள் ததும்பி அசைவற்று நிற்கும் தோற்றம் அவனையும் அறியாமல் புகைப்படம் போல் அவனின் ஆழ் மனதில் பதிந்து போனது...

சட்டென்று காரை நோக்கி திரும்பியவன் தன்னிச்சையாய் ஒரு விநாடி தயங்கி நின்று பிறகு ஒன்றும் பேசாமல் தன் காரில் ஏறி அவன்

அதனை கிளப்பிய வேகத்திலேயே தெரிந்தது அவன் விரைவில் திரும்பி வர மாட்டான் என்று.....

அவன் காரை சீறிக் கிளப்பிய வேகத்தில் அவன் சீற்றம் தெரிந்தாலும், ஒரு கணம் என்றாலும் அவனின் கூரிய விழிகள் தன் இதயத்தை ஆராய்ந்துவிடுவது போல் உறுத்து பார்த்ததில் திவ்யாவின் மனதில் விவரிக்க இயலாத மயக்கத்தை ஏற்படுத்த இதயம் பெரு வேகத்தில் துடிக்க ஆரம்பித்தது...

அவனின் ஒரே பார்வையில் நிலை குலைந்தவள் ஒரு வேளை அவன் மனம் மாறி அவளை தேடி அடைய வந்துவிட்டால்???? மிருதுவான அவள் உள்ளத்தை கொள்ளை கொள்வானா அவள் கணவன்????

இங்கு வீட்டில் திவ்யா கலங்கி துடித்துக் கொண்டு இருந்த அதே நேரம் அங்கு விமானத்தில் ஏறி அமர்ந்தவனின் எண்ணங்களும் தன் திருமணத்தை பற்றியே சுற்றி சுற்றி வந்தது...

என்ன நினைத்து அவன் திவ்யாவின் கழுத்தில் தாலி கட்டினானோ அவனுக்கு தெரியவில்லை....

எந்த இக்கட்டான சூழ்நிலைகளையும் எளிதில் தன் சாமார்த்தியத்தால் சமாளிக்க முடியும் என்ற மன தைரியமோ??

அல்லது காதல், திருமணம், மனைவி என்ற பந்தங்களுக்கு வாழ்க்கையில் எப்பொழுதும் முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்ததினால் இந்த திருமணத்தில் இருந்து எளிதில் தன்னால் வெளி வர முடியும் என்று நினைத்திருந்ததாலோ என்னவோ??

அவன் திருமணத்தன்று பெரிய எதிர்ப்பு எதுவும் காட்டவில்லை போல...

தன்னிலை குறிந்து, தன் வாழ்க்கையின் பாதையில் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்ற இந்த தடுமாற்றத்தை நினைத்து ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டு இருந்தவனின் மனம் தன்னையும் அறியாமல் திருமணம் ஆன மறுநாள் அவளை படிகளில் விழாது இருக்க தான் இறுக்கி பிடித்திருந்ததை தன் கண்முன் கொண்டு வந்தது....

அவனின் ஸ்பரிசம் தீண்டியதும் பெண்களுக்கே உரிய இயற்கையான நாணமும், அவனை எதிர்பாராதவிதமாக அத்தனை அருகில் பார்த்திருந்ததால் அதிகப்படியான அச்சமும், அதே சமயம் அவனின் வலுவான கரங்கள் இறுக்கி அணைத்திருந்ததால் ஏற்பட்ட சலனமும் கலந்து அவனைப் பார்த்திருந்த விழிகளும்,

அவன் மார்பில் முகம் புதைந்து நிமிர்ந்ததினால் அவள் கன்னங்களில் ஏறிய குங்குமச் சிவப்பும், அவன் எங்கு தன்னை கீழே விட்டுவிட்டுவானோ என்ற திகிலில் படபடத்து சிறிதாக திறந்து இருந்த இதழ்களும் சில நிமிடங்கள் தான் என்றாலும் அவன் இதய துடிப்பை அதிகரிக்க வைத்து என்னவோ உன்மை தானே....

அவனின் இதயம் தடம் மாறிக் கொண்டு இருப்பதை அவன் புலன்கள் இன்னும் அவனுக்கு உணர்த்தவில்லை... உணர்ந்த நொடி அதிர்ந்தவன் ஆழ்ந்து பெருமூச்சு விட்டு கண் மூடினான்...

மூடிய விழிகளிலும் தன் வீட்டு வாயிலில் கலங்கிய விழிகளுடன் தன் கண்களின் வழியாக கலந்திருந்த அவனின் மனையாளே படர்ந்திருந்தாள்!

திவ்யாவின் அமைதியான குணமோ, எப்பொழுதும் சிரித்த முகமாக இருப்பதோ, அனைத்து வேலைகளையும் தன் தலை மேல்

3:13 PM
https://drive.google.com/file



போட்டுக் கொண்டு செய்ததுவோ எதுவோ அவளை அவள் கணவனின் வீட்டில் அனைவருக்கும் பிடிக்க செய்தது.

வெகு விரைவிலேயே அனைவருடைய மனதிலேயும் இடம் பிடித்துவிட்டாள்...

ஸ்ரீக்கோ ஒரு படி மேலே போய் தன்னுடைய உயிர் தோழி கலாவே திரும்பவும் தன்னைத் தேடி வந்து விட்டதாக தோன்றியது.....

மஹாவை விட மூன்று வயது சிறியவளாதலால் மஹாவை அண்ணி என்றழைக்க, மஹாவும் என்ன தான் வயதில் சிறியவளானாலும் முறையில் அண்ணி ஆதலால் திவ்யாவை அண்ணி என்றே அழைத்தாள்...

அண்ணி என்றழைத்துக் கொண்டாலும், இருவருக்கும் கிட்டதட்ட ஒரே பருவம் என்பதால் இருவரும் விரைவிலேயே நெருங்கிய தோழிகள் போலானார்கள்.

அர்ஜூன் மும்பை சென்று ஒரு வாரம் ஆகியிருக்க ஒரு நாள் தன் அன்னையை அலை பேசியில் அழைத்தவன்,

"மாம், நான் வந்த வேலை இன்னும் கொஞ்ச நாள் இழுக்கும் போலருக்கு.... அதனால் வர இன்னும் சில நாட்கள் ஆகும்" என்றான்.....

உண்மையில் அவன் சொன்னதில் சிறு உண்மையும் கலந்து இருந்தது...

https://drive.google.com/file



அவன் எதிர்பார்த்தைப் போல அவன் வந்த தொழில் காரியம் அவ்வளவு சீக்கிரமாக முடியவில்லை.....அதுவும் அவனுக்கு நல்லதாகவே பட்டது.

கதிர் சொல்லியிருந்ததைப் போல் முடிந்தளவு தன் திருமணத்தை பற்றிய முடிவை ஆறப் போடவே விரும்பினான்...

ஒரு வாரம் முடிந்த நிலையில் தொழில் விஷயமாக ஒரு நட்சத்திர ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த ஒரு மீட்டிங்கிற்கு வந்தவன் மீட்டிங் முடிந்து வெளியே செல்ல முற்பட அவன் பின்னர் ஒரு குரல் கேட்டது.....

திரும்பியவனுக்கு அவனுடன் கல்லூரியில் படித்த மேஹா புன் சிரிப்போடு நின்று கொண்டிருப்பதைக் கண்டவுடன் ஒரு சின்ன சந்தோசஷம்....

"வாட் அ ஸ்ர்ப்ரைஸ் அர்ஜுன்! ரியலி கெனாட் ப்லீஸ் [What a surprise Arjun? Really cannot believe] மும்பாய் எப்போ வந்த?"

மேஹாவிற்கு அர்ஜுனின் மேல் எப்பொழுதும் ஒரு தனி ஈடுபாடு உண்டு... ஆசை என்றும் கூட சொல்லலாம்.....

அவனுடைய கம்பீரமான ஆண்மையோடு கூடிய பேரழகு, அவனது பணம் மற்றும் யாருக்கும் எதற்கும் அடி பணியாத குணம்.....

அதற்காகவே கல்லூரி நாட்களில் அவன் பின்னையே சுற்றி திரிந்தவள்....

ஆனால் அவனோ அவளுக்கு அளவுக்கு மீறி இடம் கொடுக்காதவன்..... இறுதியில் இந்த பழம் புளிக்கும் என்று அவனை விட்டு விட்டு இன்னொரு பணக்காரனை தேடிப் போய்விட்டவள்.

"ஹாய் மேஹா, பிஸினஸ் விஷயமா வந்தேன்... அதுக்காக இங்க ஒரு மீட்டிங் அரேஞ்ச் பண்ணியிருந்தேன்..... மீட்டிங் இப்போ தான் முடிந்தது"

"வா அர்ஜுன், ரொம்ப வருஷத்திற்கு அப்புறமா மீட் பண்றோம்..... பேசுறதுக்கு எவ்வளவோ இருக்கு" என்றவள் வழக்கம் போல் அவன் கையைப் பிடித்துக் கொண்டு அழைக்க அவனும் மறுக்க முடியாமல் அவளுடன் சென்றான்.....

வெகு நேரம் வரை அந்த நட்சத்திர ஹோட்டலின் அருகில் இருந்த பூங்காவில் அமர்ந்து பழைய விஷயங்களை பேசிக் கொண்டிருந்தார்கள்.....

"சரி மேஹா நீ கிளம்பு... ரொம்ப நேரம் ஆச்சு... நான் வேண்டும் ஆனால் உன்னை ட்ராப் பண்ணவா"

"நோ அர்ஜுன், என் கார் இருக்கு... நான் போய்க்கிறேன்... கடைசியாக ஒரு செல்ஃபி எடுக்கலாமா?"

சரி என்றவனின் அருகில் வழக்கம் போல மிகவும் நெருங்கி அமர்ந்துக் கொண்டு புகைப்படம் எடுத்தவள், அதனை மறக்காமல் தன் முக நூலில் (ஃபேஸ்புக்கில்) போட்டு அர்ஜுனின் பெயரையும் அதில் இணைக்க அது மஹாவின் கண்களுக்கு தப்பாமல் சென்றடைந்தது.

3:14 PM 50%

https://drive.google.com/file



"மாம்... இந்த அண்ணனைப் பார்த்தீங்களா? பிஸினெஸ் விஷயமா மும்பைக்கு போய்ட்டு இப்போ ஒரு பொண்ணோட செல்:.பி எடுத்துக்கிட்டு இருக்கிறதை" என்றவள் கையோடு அந்த புகைப் படத்தையும் காட்ட, யார் அதைப் பார்க்க கூடாதோ அவள் தன் அன்னையின் பின் நிற்பதை அறியாமல் தானாக ஒரு புது பிரச்சனையை விலைக்கு வாங்கிக் கொண்டாள்.

மஹாவின் "அண்ணன் மும்பை" என்ற வார்த்தைகளில் தன்னையும் அறியாமல் அவள் அருகில் வந்திருந்த திவ்யாவிற்குஅவள் காட்டிய புகைப்படத்தில் தன் கணவன் வேறு ஒரு பெண்ணுடன் நெருங்கி அமர்ந்திருப்பது பளிச்சென்று தெரிய அது வரை எதிர்பாராமல் திடீரென்று நடந்தேறிய திருமணம் தான் தன் கணவனுக்கு பிடிக்கவில்லையோ என்று எண்ணியிருந்தவளுக்கு இந்த புகைப்படத்தை பார்த்ததும் தன் இதயத்தை யாரோ வாள் கொண்டு அறுப்பது போல் இருந்தது...

ஒரு வேளை அவருக்கு வேறு ஒரு பெண்ணுடன் காதல் இருக்குமோ?

சட்டென்று உதிர்த்த எண்ணத்தில் அதிர்ந்தவளின் உள்ளம் கண வேகத்தில் தன் வாழ்க்கை பாதை முடிந்ததை போல் உணர வேதனையுடன் மனம் பதறி துக்கம் தொண்டையை அடைக்க தன் மாமியாரை நோக்கினாள்...

அவளுடைய அதிர்ந்த முகத்தைப் பார்த்த ஸ்ரீக்கு தன் மருமகளின் எண்ணமும் அதனால ஏற்பட்ட கலக்கமும் புரிந்தது...

அக்கம் பக்கம் பார்க்காமல் வார்த்தைகளை விட்ட தன் மகளை கண்டு கண்களாலேயே அவளை எரிப்பதைப் போல் பார்த்தவர் திவ்யாவிடம் திரும்பி....

3:14 PM 50%

https://drive.google.com/file



"திவ்யா, நீ ஒன்னும் பெருசா எடுத்துக்காதடா.... அர்ஜூனுக்கு அந்த மாதிரி பழக்கம் எல்லாம் இல்லை.... அவனுக்கு கேர்ள் ஃப்ரெண்ட்ஸ்னு ஒருத்தரும் கிடையாது.... அது ஏதாவது பழைய ஃப்ரண்டாக இருக்கும்.... திடீர்னு மும்பையில எங்கேயாவது மீட் பண்ணியிருப்பாங்க.... ஃபோட்டோ எடுத்திருப்பாங்க.... அத நினைச்சு மனசப் போட்டு குழப்பிக்காதடா....." என்றவர் அவளை மேலும் நெருங்கி...

"ஒரு வேளை அர்ஜூன் யாரையாவது லவ் பண்ணியிருந்தானா கண்டிப்பா நான் சொன்னதுக்காக உன் கழுத்தில் தாலிக் கட்டியிருக்கமாட்டான்.... என் மகனைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்.... அவனுக்கு அப்படி யார் மேலாவது ஈடுபாடு இருந்திருந்தால் நான் இல்லை, யார் சொன்னாலும் அவன் மனசை மாத்தியிருக்க முடியாது.... அதனால நீ மனசப் போட்டுக் குழப்பிக்காதடா" என்றார்.

ஆனாலும் அத்தனை எடுத்து சொல்லியும் திவ்யாவின் முகத்தில் தெளிவில்லாததைப் பார்த்தவருக்கு இதற்கு மேல் எப்படி அவளுக்கு புரிய வைப்பது என்றும் தெரியவில்லை...

மனம் முழுவதும் சஞ்சலத்துடன் விதி தன் கரத்தை இன்னும் தன் வாழ்க்கையில் இருந்து விலக்கவில்லை என்று உணர்ந்தவள் தன் மனதினில் எழும் பூகம்பத்தை மறைத்து தன் மாமியாருக்காக புன்னகைத்து வைத்தாள்...

அந்த சிறு பெண்ணின் புன்னகையின் பின் இருக்கும் வலியை உணராதவரா அவள் மாமியார்!!!

50% 3:14 PM
https://drive.google.com/file



அங்கு அர்ஜூனிற்கு மும்பையில் இன்னும் ஒரு சில வாரங்களாவது எடுக்கும் என்று நினைத்திருந்த வேலைகள் எதிர்பாராதவிதமாக சுலபமாக முடிந்தது...

"என்ன செய்வது? இப்போ இந்த சூழ்நிலையில் சென்னைக்கும் திரும்ப போக விருப்பம் இல்லை.... யாரையாவது மீட் பண்ணலாமா?" என்று அர்ஜூன் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே ஸ்பீக் ஆஃப் தி டெவில் [speak of the devil] என்பார்களே அது போல் மேஹாவே அவனை அலை பேசியில் அழைத்தாள்.....

"அர்ஜூன், நான் இன்னைக்கு கொஞ்சம் ஃப்ரீ... இப்போ நீ பிஸியா இல்லன்னா எங்காவது வெளியில் போகலாமா?"

அவனுக்கு அவளுடன் போக ஈடுபாடு இல்லை... ஆனால் அதே சமயம் இப்பொழுது தான் இருக்கும் மன நிலையில் தனித்து இருப்பதிலும் விருப்பம் இல்லை...

ஒவ்வொரு நிமிடமும் திவ்யாவுடனான திருமண நாளும், தான் கிளம்பிய அன்று தன்னை பார்த்திருந்த அவளின் கலங்கிய முகமும் அவ்வப் பொழுது அவன் மனதில் தலைக் காட்ட துவங்கின....

அதனை தவிர்ப்பதற்காக மேஹாவுடன் செல்ல அவன் சரி என்றதும் அதற்காகவே காத்திருந்ததுப் போல் சிறிது நேரத்திலயே அவன் தங்கி இருந்த ஹோட்டலை அடைந்திருந்தாள் மேஹா.

இரவு வரை வெளியே சுற்றிய இருவரும் வெகு நேரம் சென்று அர்ஜூனின் ஹோட்டலுக்கு திரும்ப...

"அர்ஜூன், நாம ஏதாவது ஃபுட் ஆர்டர் பண்ணி இங்கேயே சாப்பிடுவோமா? நான் இப்போ கிளம்பினாலும் போற வழியில ஏதாவது வாங்கிட்டு தான் போகனும்... அதுக்கு இங்க உன் கூடயே சாப்பிடுறனே"

கேட்கும் பொழுதே அவன் எங்கு வேண்டாம் என்று சொல்லிவிடுவானோ என்ற கலக்கம் அவளுக்கு...

நொடி நேரம் கூட தாமதிக்காமல் சரி என்றவன் அவளுக்கு பிடித்தது போல் உணவுகளை கொண்டு வர பணித்தவன் குளிக்க சென்றான்.

அர்ஜூனை அத்தனை எளிதில் எதற்கும் சம்மதிக்க வைக்க முடியாது... கல்லூரி நாட்களிலேயே அவளின் குணம் அறிந்து அவளை தள்ளி வைத்தவன்...

ஆனால் இன்று அவள் விரும்பிய விதத்தில் வளையும் அர்ஜூனை கண்டவளுக்கு இத்தனை நாட்களுக்கு பிறகு பலிக்க போகும் கனவினை நினைத்து மனம் குதூகலித்தது...

சிறிது நேரத்திலேயே குளித்து முடித்து வெளியே வந்தவன் அறையில் இருந்த கண்ணாடியில் தன் தலை கோதியவாரே தன் கட்டிலில் படுத்து தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்த மேஹாவை கண்டவனுக்கு அவளின் கிறக்கமான பார்வை உணர்த்தியது...

அவளின் எண்ணத்தை... வேட்கையை...

அவள் போட்டிருந்த ஆடை வேறு அபாயாகரமாக கழுத்துக்கு கீழே இறங்கி அவளின் கீழ் தரமான ஆசையை அப்பட்டமாக வெளிப்படுத்த, சட்டென்று அறையில் இருந்த தொலை பேசியை

H+ 1 50% 3:15 PM
https://drive.google.com/file 17



எடுத்தவன் தான் ஆர்டர் செய்த உணவு என்னானது என்று ரிஷப்ஷனிஸ்டிடம் விசாரித்தான்...

அவனின் எண்ணம் புரிந்தவளாக குழையும் குரலில்...

"என்ன அர்ஜூன்? இப்போ என்ன அவசரம்? அவங்க கொண்டு வரும் போது கொண்டு வரட்டும்.... உங்களுக்கு போர் அடிக்காம நான் பார்த்துக்கிறேன்" என்றாள்.....

அவளின் விரசமான பேச்சிலும் வழியும் குரலிலும் எரிச்சலடைந்தவனுக்கு பேசாமல் சென்னைக்கே திரும்பி சென்று இருக்கலாம் என்று தோன்றியது.....

தேவையில்லாமல் வினையை வாங்கிக் கொண்டோமே என்று சலிப்படைந்தவன்,

"மேஹா, இட்ஸ் ஆல்ரெடி டூ லேட், யூ ஹேவ் டு ட்ரைவ் பேக் டு யுவர் ஹோம், வொய் டோண்ட் யூ பேக் யுவர் ஃபுட் அண்ட் கோ? [Its already too late. you have to drive back to your home. Why dont you pack your food and go?] " என்றான்.....

அது வரை தாபத்தின் பிடியில் சிக்கி இருந்தவளுக்கு அவன் உதாசீனம் எரிச்சல் தர, இருந்தும் அவனை விட மனசில்லை....

"இவன் திருந்தவே இல்லை" என்று நினைத்தவள் அவன் அருகில் நெருங்கி வர,

50% 3:15 PM
https://drive.google.com/file
17



அவளுடைய நோக்கம் புரிந்தவன் "சே, இவ்வளவு வயசாகியும் இவள் திருந்தவே இல்லை... இவளை எப்படி சமாளிப்பது?" என்று குழம்பியவனுக்கு மின்னல் வெட்டியது போல் தோன்றியது அந்த யோசனை...

சட்டென்று "கமான் மேஹா, இது என்ன சின்ன பெண் மாதிரி..... ஐ ஆம் மேரிட்.... என் கிட்ட நீ இப்படி நடந்துக்கிறது கொஞ்சம் கூட நல்லா இல்லை" என்றான் வார்த்தைகளில் அடக்கப்பட்ட கோபத்துடன்....

ஆசையோடும் வேட்கையோடும் அவன் அருகில் நெருங்கி நின்றவளுக்கு அவன் சொன்ன அவனின் திருமணச் செய்தி நெருப்பை அள்ளி தெளித்தது போல் இருந்தது...

திருமணமானவனா?

அன்றும் அவளை சந்தித்த பொழுது அவன் தன் திருமணத்தை பற்றி சொல்லவில்லை...

இன்றும் காலை முதல் இரவு வரை அவளுடன் ஊர் சுற்றிய போதும் அவன் திருமணத்தை பற்றி பேசி இருக்கவில்லை....

அப்படி என்றால் இப்பொழுது மட்டும் எப்படி? என்று நினைத்தவள் சட்டென்று தன்னுடைய ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு இதழ்களில் வேஷப் புன்னகை தவழ...

"வாவ்! நிஜமாகவா அர்ஜூன்.... ஏன் என்கிட்ட இத்தனை நேரம் இதப் பற்றி சொல்லவில்லை? யாரந்த லக்கியஸ்ட் கேர்ள்? நான் அவங்களை இப்பொழுதே பார்க்கனுமே... ஃபோட்டோ எதுவும்

3:15 PM
https://drive.google.com/file

வச்சிருக்கியா?" என்றாள் அடுக்கடுக்காக தன் மனதில் மண்டியிருந்த புகைச்சலை சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு.....

மேஹாவைத் தவிர்க்கவே, தன்னை விட்டு தள்ளி வைக்கவே அவன் தன் திருமணத்தை பற்றி சொல்லியிருந்தான்.... ஆனால் அவள் தன் மனைவியின் புகைப்படத்தை கேட்பாள் என்று அவன் கொஞ்சம் கூட நினைத்திருக்க வில்லை....

அவள் சடாரென்று கேட்டதும் திகைத்தவன் "நானே எப்படி இந்த கல்யாணத்திற்கு சம்மதிச்சேன்னு குழம்பி போயிருக்கேன்... இதில் அவளோட ஃபோட்டோவை வேறு தூக்கிட்டு சுத்தனுமா?" என்று நினைத்தவன், இப்பொழுது இவளிடம் இருந்து எப்படி தப்பிக்க போகிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே அலை பேசி அழைத்தது...

கதிர் தான் அவனை அலுவலக விஷயமாக அழைத்திருந்தான்.

அது தான் சமயம் என்றெண்ணியவன்,

"இது பெர்ஸ்னல் கால்... நான் அட்டெண்ட் பண்ணியே ஆகனும்.... இஃப் யூ டோண்ட் மைண்ட் [If you don't mind]

நான் கொஞ்சம் வெளியே போய் பேசிட்டு வரேன்" என்று வெளியேறினான்.....

அர்ஜுனின் எண்ணம் முழுவதும் விரைவில் மேஹாவை அனுப்பி விட வேண்டும் என்பதிலேயே இருந்ததால் கதிருடன் சில நிமிடங்களே பேசியவன் திவ்யாவின் புகைப்படத்தை எங்கு எடுப்பது என்று சிந்தித்துக் கொண்டு இருக்க மஹாவின் நியாபகம் வந்தது....

3:16 PM

https://drive.google.com/file



கதிருடன் அழைப்பைத் துண்டித்துவிட்டு, மஹாவின் முக நூலில் (ஃபேஸ் புக்கில்) திவ்யாவின் புகைப்படம் எதுவும் இருக்கிறதா என்று தோண்ட, அங்கு இதற்குள்ளாகவே நன்றாக தோழிகள் போல ஆகிவிட்ட மஹாவும் திவ்யாவும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் இருந்தது.

"அடிப்பாவி, அதற்குள்ளாக இவ்வளவு ஃபோட்டஸா?" என்று வியந்தவன், அதனிடையே திவ்யா தங்களின் தோட்டத்தில் இருந்த ரோஜா மலர்களுக்கிடையில் மெலிதான ஒரு புன்னகையுடன் நின்றுக் கொண்டு இருந்த புகைப்படம் அவனையும் அறியாமல் அவனைக் கவர, அதனை தன் அலை பேசியில் சேமித்து வைத்தவன் அலை பேசியில் இன்னமும் பேசிக் கொண்டிருப்பது போல் நடித்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தான்...

"சரி, நான் அப்புறம் பேசுகிறேன். நீ போய் தூங்கு"

அவனுடைய மனைவியுடன் பேசுகிறது போல் தெரிய வேண்டுமாம்!!!!

உள்ளே வந்தவன், "என்ன மேஹா கேட்ட? என் வைஃப் ஃபோட்டவைத் தான?" என்றவன், திவ்யாவின் புகைப்படத்தைக் காண்பிக்க, திவ்யாவின் அன்றலர்ந்த மலர் போல் அப்பழுக்கற்ற முகமும், குழந்தை தனமான சிரிப்பும் மேஹாவிற்கு பொறாமையையே உண்டு பண்ணியது.

"வாவ்! செம்ம ஹோம்லியா அழகாக இருக்காங்க அர்ஜூன்" என்றவள், மீண்டும் இந்த பழம் புளிக்கும் என்ற கதையாகிவிட இதற்கு மேல் இவனை பணிய வைக்க முடியாது என்று,

"சரி அர்ஜூன், ஃபுட் வந்தவுடன் நான் பேக் செய்து எடுத்திட்டு போறேன்" என்றாள்.....

novels

https://drive.google.com/file



அவர்கள் வரவழைத்திருந்த உணவும் வர ஒரு வழியாக அவளை அனுப்பியவன், கட்டிலில் சாய்ந்து அமர்ந்து தொலைக்காட்சியை உயிர்ப்பித்தவன் மனம் முழுவதிலும் சிறிது நேரத்திற்கு முன் பார்த்த திவ்யாவின் புகைப்படமே நிறைந்திருந்தது...

சில நிமிடங்கள் அவளைப் பற்றியே தன் நிலை மறந்து சிந்தித்துக் கொண்டு இருந்தவன் அலை பேசியை கையில் எடுத்து அதனையே உற்று நோக்க, மனதினில் பல நூறு எண்ணங்கள், சிந்தனைகள்...

தன் தலை முடியை அழுந்த கோதிக் கொண்டவன் தயக்கத்தை உதறி அலை பேசியை உயிர்ப்பிக்க, அதில் அவன் மனையாளின் அழகிய புகைப்படம் காட்சி அளித்தது...

திருமணத்தன்று தன் அருகில் அமர்ந்திருந்தாலும் அவன் மாங்கல்யத்தை அணிவிக்கும் பொழுது கூட அவள் முகத்தை பார்ப்பதை தவிர்த்து இருந்தான்...

மறு நாள் தங்க பதுமையென தன் மீது மோதி கொடியில் சிக்கிய பூங்கொடி போல் படர்ந்திருந்தவளின் பளிங்கு முகத்தை ஒரு சில நிமிடங்களே பார்த்திருந்தான்...

அதற்கு பின் ஏனோ அவனின் பிடிவாதமும் திமிரும் ஓங்கி இருந்ததாலும், தான் ஏதோ வஞ்சிக்கப்பட்டது போல் கொதித்துக் கொண்டு இருந்ததாலும் அவளின் முகம் பார்க்க அவன் மனம் விரும்பவில்லை... இல்லை அவன் இதயம் விரும்பியதை அவன் உணரவில்லையோ...

3:16 PM

https://drive.google.com/file



ஆனால் இன்று எதிர்பாராத சந்தர்ப்பத்தில் மேஹாவிற்காக திவ்யாவின் புகைப்படத்தை பார்க்க வாய்ப்பு அமைய அவன் பார்த்தது என்னவோ ஒரு நொடி தான்...

ஆனால் அதற்குள் அவன் மனைவி அவனையும் அறியாமல் அவன் மனதில் பசை போல் ஒட்டிக் கொண்டாள்....

இரண்டாவது முறையாக...

புகைப் படத்தில் பச்சை பசேல் என்றிருந்த தோட்டத்தில் சூரியனின் மயக்க ஒளியும், அவற்றின் இடையே தேவதை போல் ஒரு ரோஜா செடியின் அருகில் அழகாக புன்னகைத்து கொண்டு நின்ற திவ்யாவும் இணைந்த காட்சி அத்தனை அற்புதமாக இருந்தது அவனின் கண்களுக்கு....

சின்ன பிறைப் போல் நெற்றி, கூர்மையான மூக்கு, அதில் ஒற்றை சிவப்பு கல் மூக்குத்தி, செப்பு உதடுகள் அதில் மெலிதான புன்னகை, நீண்ட கூந்தலைப் பின்னி மல்லிகை சரம் சூடி சடையை முன் பக்கம் விட்டிருந்தாள்...

அவள் தனது ஒரு கையை லேசாக உயர தூக்கி சிறு பிள்ளை போல் செடியில் இருந்த ரோஜாப் பூவை பிடித்திருக்க, அடர் சிகப்பு நிறத்தில் அவள் புடவை கட்டியிருந்ததால் அதனிடையில் பளீரென்று தெரிந்த குறுகிய இடையைக் கண்டவனின் இதயம் தடுமாற ஆரம்பித்தது...

தன் மனையாளின் கள்ளம் கபடம் இல்லாது சிரிக்கும் குழந்தை தனமான முகத்தை இரசித்துக் கொண்டிருந்தவன் அவளின் அழகிய கண்களைப் பார்த்ததும் அவள் அவன் மும்பைக்கு கிளம்பிய அன்று விழிகள் கலங்க அவனைப் பார்த்திருந்தது நினைவுக்கு வந்தது.....

49% 3:16 PM
https://drive.google.com/file



மனம் அதன் போக்கில் மிதக்க, தன்னை அறியாமல் அர்ஜூனின் விரல்கள் திவ்யாவின் முகத்தில் கோடுகள் வரைந்தது...

நெற்றி, கண்கள், மூக்கு, இதழ்கள் என்று மென்மையாக தடவியவனின் விரல்கள் அவளின் கன்னக் குழிக்குள் வந்து சிக்கியது...

ஆனால் அவன் மனம் கிறங்கி இருந்தது சில நிமிடங்கள் தான்....

"அர்ஜூன், உன் நினைப்பு போற இடமே சரியில்லை... ஏணி வச்சு ஏறினால் கூட அவளுக்கு உன் இடத்தை அடைய முடியாது" என்று தேவையில்லாமல் அவன் மனம் உறைக்க, தன் மனதில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு திடுக்கிட்டவன் சட்டென்று அலை பேசியை அணைத்து கட்டிலில் போட்டவன் தலையை சிலுப்பி விட்டுக் கொண்டு கட்டிலில் இருந்து எழுந்தான்...

அவனுக்கே அவன் மனம் போகும் பாதை புரி படவில்லை...

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

https://drive.google.com/file



மலரினும் மெல்லியவள்!

பாகம் - 7

முக நூலில் மஹாவும், திவ்யாவும் ஒன்றாக இருக்கும் புகைப் படங்களை பார்த்து ரசித்தது அர்ஜுன் மட்டும் இல்லை, இன்னொருவனும் கூட...

மஹாவின் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் அவளின் சீனியர், கோகுல்....

அவனுடைய தந்தை ஒரு பிரபல சினிமா படத் தயாரிப்பாளர்.... ஒரு சில படங்களே தயாரித்து இருந்தாலும் அத்தனையும் வெற்றி படங்கள், அதனால் திடீர் கோடீஸ்வரர் ஆனவர்.....

பெரிய இடத்து பையன் என்கிற திமிராலும் தைரியத்தாலும் கல்லூரியில் அவனின் செயல்கள் வரம்பு மீறியதாகவே இருந்தாலும் அவனின் எந்த அத்து மீறிய செயலும் மேலிடத்திற்கு போகாமல் பார்த்துக் கொள்வதில் பலே கெட்டிக்காரன்.....

அப்படியே அவனை மீறி சென்றாலும் அவனுக்கு பதில் பழியை சுமக்கவும் அவனை சுற்றி காக்காய் கூட்டம் போல் எப்பொழுதும் நண்பர்கள் கூட்டம் இருந்தது.....

அந்த திமிரில் பெண்களிடம் வரம்பு மீறுவதை அவன் ஒரு பொழுது போக்காகவே வைத்துக் கொள்ள, கல்லூரியில் சேர்ந்த முதல் நாளே மஹா அவன் கண்களில் பட்டுத் தொலைத்தாள்.....

49% 3:17 PM
https://drive.google.com/file



நல்ல சந்தன நிறம், அழகான முகம் என்று சாதாரன அலங்காரத்திலும் தேவதைப் போல் பேரழகியாக கல்லூரிக்குள் நுழைந்தவளை வைத்தக் கண் எடுக்காமல் பார்க்க, அவனின் பார்வை போகும் இடத்தை பார்த்திருந்த அவனின் நண்பர்கள் மஹாவை பார்த்ததும் அவளின் அழகில் மயங்கி..

"பாஸ், யாரு பாஸ் இது? செம்ம கட்டை பாஸ்" என்க, கூறியவனின் கண்ணத்தில் பளார் என்று அறை விழுந்தது.....

பொறி கலங்க அவன் மலங்க மலங்க விழிக்க,

"யாரை பாத்துடா செம்ம கட்டைங்கிற? அவ உனக்கு அண்ணியா வரப் போறவ, புரியலை? எனக்கு மனைவியா வரப் போறவ.... இனி அவளைப் பற்றி பேசும் போது அண்ணின்னு தான் சொல்லனும், என்ன புரிஞ்சுதா?" என்று கத்தினான்.....

"பாஸ், உங்களுக்கு எப்போ பாஸ் நிச்சயம் ஆச்சு, சொல்லவே இல்லையே?" என்று ஆச்சரியத்துடனும், இத்தனை அழகான பொண்ணு இவனுக்கா? என்ற பொறாமையுடனும் கேட்க,

"இப்போ தான்... நிஜத்தில் சீக்கிரம்" என்றான்.....

ஆக இப்பொழுது தான் அந்த பெண்ணை இவன் பார்க்கிறான்....

அதற்குள் மனைவி என்றே முடிவு செய்துவிட்டான் என்று புரிந்துக் கொண்டவர்கள் பெரிய இடத்து சமாச்சாரம் நமக்கு எதுக்கு....

3:17 PM 49%

https://drive.google.com/file



ஏதோ அப்பப்ப பார்ட்டிகளுக்கும், பப்புக்கும் கூட்டிட்டு போறானா, வேண்டியதை வாங்கி தருகிறானா, அத மட்டும் பார்த்துக்கிட்டு போய்ட்டே இருக்க வேண்டியது தான் என்று நினைத்து அதனை அதோடு மறந்தும் விட்டார்கள்.....

ஆனால் கோகுலால் அப்படி இருக்க முடியவில்லை...

அன்று முழுவதும் அவளின் நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தவன், அவளை சில மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து ராகிங் பண்ணிக் கொண்டிருக்க இது தான் சமயம் என்று அந்த இடத்திற்கு சென்றான்.

அவன் வருவதை கண்ட ஒருவன் தன் நண்பர்களிடம் காதை கடிக்க, அவர்கள் அவனை கண்டவுடன் எழப் போக வேண்டாம் என்று கண்களாலேயே சைகை செய்தவன் ஒன்றும் அறியாதவன் போல் அவர்களுடன் அமர்ந்துக் கொண்டான்.....

ஏற்கனவே இத்தனை பேர், இதில் இன்னும் ஒருவனா? என்று கலங்கிய மஹா பேசாமல் அருண் அண்ணாவைக் கூட வரச் சொல்லியிருக்கலாம் என்று யோசிக்க, அவளின் கலங்கிய முகத்தைப் பார்த்து ரசித்த கோகுல்....

"என்ன மச்சி, என்ன நடக்குது இங்க? ரொம்ப பயந்திருக்காங்க போல இருக்கு..... ராகிங்கும் ஒரு லிமிட்டோடத் தான் நடக்கனும்னு சொல்லியிருக்கேன், இல்லையா?" என்றான்.....

என்னடா இவன் "சேம் சைட் கோல் போடுறான்" என்பது போல் பார்த்தவர்கள் அவனிடம் வாயைக் கொடுத்து பிரச்சனைகளை விலைக்கு வாங்காமல் இருக்க முடிவு செய்தார்கள்...

49% 3:17 PM
https://drive.google.com/file

"ஒன்னும் பெரிசா பண்ணலை மச்சி, சும்மா, தோ இவன லவ் பண்ற மாதிரி ஒரு டயலாக் பேச சொன்னோம்... அதுக்கே பொண்ணு இந்த மாதிரி பயப்படுது"

"டேய் இவன பாத்து லவ்வ சொல்ல சொன்னா யாரா இருந்தாலும் பயப்படத் தான் செய்வாங்க" என்றவன்,

"என்ன பார்த்து வேண்டுமானால் சொல்லு" என்றான்.

ஏற்கனவே உள்ளுக்குள் நடுங்க, அதனை வெளியில் காட்டாமல் முடிந்தவரை நின்றுக் கொண்டிருந்த மஹாவிற்கு இன்னும் அழுகை வர, "இவன் ஏதோ காலேஜிலேயே பெரிய ஆள் போல், அதான் ராகிங்கு இவன் ரூல்ஸ் செட் பண்றான்" என்று நினைத்தவள்..

"க்ளாஸ்ஸுக்கு போகனும்... டைம் ஆயிடுச்சு" என்று கண்கள் கலங்கியபடியே சொல்ல,

அவள் அருகில் வந்த கோகுல்,

"ஹே, இதுக்கு போய் எல்லாமா அழறது? இது ஜஸ்ட் சும்மா ஃபன்னுக்குதான்.... முதல்ல கண்ண தொடைங்க" என்றவன்,

"இட்ஸ் ஓகே மச்சி, லெட் ஹெர் கோ [Let her go]" என்றான்.....

விட்டால் போதும் என்று ஓடியவள் நாளையில் இருந்து அருண் அண்ணாவ கூட கூட்டிட்டு வரனும் என்று நினைத்துக் கொண்டாள்.....

3:18 PM 49%
https://drive.google.com/file



மஹா தைரியசாலி தான், ஆனால் எல்லாம் வீட்டில் தான்... வீட்டில் தான் வாயடிப்பது, சண்டைப் போடுவது எல்லாம்... வெளியில் வந்தால் படு அமைதி.....

அவளைப் பார்த்தால் கோடீஸ்வர வீட்டு பெண் போல் தெரியாது... அவள் அன்னையைப் போல் ஏழை பணக்காரர் வித்தியாசம் பார்க்காதவள்... எளிமையான வாழ்க்கையில் ஆர்வம் கொண்டு இருப்பவள்...

யாரிடமும் தானாக தன் வசதியைப் பற்றியோ தங்கள் அந்தஸ்தை பற்றியோ கூற மாட்டாள்...

அதிலும் அர்ஜுனை பற்றி வாயே திறக்க மாட்டாள்...

ஒரு வேளை அர்ஜுன் அண்ணாவைப் பற்றி சொல்லி அதன் மூலம் தன் அந்தஸ்தும் வசதியையும் தன்னுடன் படிக்கும் தோழிகள் தெரிந்துக் கொண்டார்களானால் தன்னுடன் பழகும் விதமே மாறலாம் என்ற எண்ணமே அதன் காரணம்......

ஏனெனில் எந்த பந்தாவும் இல்லாமல் சாதாரனமாக பழகுவதே அவளின் விருப்பம்...

ஆனால் கல்லூரியில் அவளை முதன் முதலாக பார்த்த அன்றில் இருந்து கோகுலின் கண்கள் அவளின் மீது தான் இருந்தது...

எந்த பெண்ணிடமும் தன் ஆசையை உடனே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் கோகுல் கூட அவளிடம் வம்பு அலக்கவில்லை என்றால் அது அவளை உடனே பறிக்காமல் தட்டி கணிய வைக்க வேண்டும் என்ற ஆசையே.

3:18 PM 49%
https://drive.google.com/file



ஆனால் பாவம் அது மஹாவுக்கு தான் தெரியாமல் போனது....

தெரிந்து இருந்தால் பின்னால் தனக்கு மட்டும் அல்ல, தன் அண்ணி திவ்யாவிற்கும் இவனால் நடக்க இருக்கும் விபரீதத்தை தடுத்து இருப்பாளோ?

ஆனால் விதி யரை விட்டது???

நல்லவர்கள் பொல்லாதவர்கள் என்ற பாகுபாடு பார்க்காமல் விளையாடுவது தான் அதன் பொழுது போக்கு போல....

இன்றோடு அர்ஜூன் மும்பை சென்று மூன்று வாரங்களுக்கு மேல் ஆகி இருந்தது....

அன்று ஒரு வெள்ளிக்கிழமை...

கோவிலுக்கு செல்லலாம் என்று தலைக் குளித்த திவ்யா, தனக்கு நிரம்ப பிடித்த சின்ன கரைப் போட்ட அடர்ந்த வைலட் நிற பட்டு புடவையை அணிந்தவள், தலையை பின்னி மிதமான அலங்காரத்துடன் இறுக்கி தொடுத்த மல்லிகைப் பூச் சரத்தை சூடியவள், கீழே இறங்கும் பொழுது வயிற்றில் லேசாக வலித் தோன்றியது....

49% 3:18 PM
https://drive.google.com/file

தேதியை நினைத்தவள் "சே! எப்படி தேதியை மறந்தேன்?" என்ற சிறு பிள்ளை போல் தன் தலையில் கொட்டிக் கொண்டு தன் மாமியாரின் அறை கதவை தட்டினாள்.

கதவு திறக்கவும் ஸ்ரீயிடம் எப்படி சொல்வது என்று தயங்க "என்னடா, கிளம்பிட்டியா? இதோ ஒரு நிமிஷம், நானும் கிளம்பிட்டேன்" என்க,

சிறிது தயக்கதுடனேயே "அத்தை எனக்கு பீரியட்ஸ் ஆகிடுச்சு... அதனால நீங்களும் மஹா அண்ணியும் கோயிலுக்குப் போறீங்களா?" என்றாள்.....

'ஏண்டா, இத சொல்றதுக்கு தான் இவ்வளவு தயக்கமா? நானும் பொண்ணு தான் " என்று சிரித்தவர்,

"சரி நீ ரெஸ்ட் எடு, நாங்க போய்ட்டு வரோம்" என்றார்......

பின் மஹாவும் கிளம்பியவுடன்,

"சரி திவ்யா, அருணும், மாமாவும் வர நேரமாகும்னு சொன்னாங்க. நீ கதவை நல்லா சாத்திக்கோ...... நாங்களும் வர நேரம் ஆகும்" என்றவர் கிளம்பி சென்றார்......

திவ்யாவிற்கு கோவிலுக்கு செல்வது என்பது சிறு வயது முதலே மிகவும் பிடித்தமான ஒன்று... தெய்வத்தின் சந்நிதானத்தில் கண்களை மூடி, சுற்றி நடக்கும் எதனைப் பற்றியும் நினைக்காமல் மனமுருக வேண்டும் பொழுது மனம் எவ்வளவு அமைதி அடைகிறது......

அதுவும் திருமணத்திற்கு பிறகு என்ன தான் அவளுக்கு தன்னை சுற்றி இருந்தவர்கள் அன்பாகவும் ஆறுதலாகவும் இருந்தாலும், தன் கணவனின் கோபமும் வெறுப்பும் அவளின் இதயத்தில் ஒரு திகிலான சூழலையே உருவாக்கி இருந்தது...

திருமணம் முடிந்த அன்றே விவாகரத்தை பற்றி பேசியவன்.... தான் இருக்கும் இடத்தில் இருக்க கூடாது என்பதற்காகவே வெளியூர் சென்று இருப்பவன்...

அவன் எப்பொழுது வேண்டுமானாலும் மும்பையில் இருந்து திரும்பி வரலாம்... வந்த நிமிடமே தன்னை வீட்டை விட்டு வெளியேற்றலாம்... இத்தகைய இறுக்கமான நிலையில் அவளுக்கு கடவுளின் பாதத்தில் சரணடைவதைத் தவிர வேறு நிம்மதி இல்லை....

ஆனால் இந்த மாதாந்திர தொல்லையால் இன்று அந்த சுகத்தை அனுபவிக்க முடியாமல் போய்விட்டதே என்றெண்ணியவள் வேறு வேலை எதுவும் இல்லாதிற்கவே புடவை மாற்றக் கூட எண்ணமில்லாமல் சமையலறையில் ஏதாவது சமைக்கலாம் என்று புகுந்தாள்......

சில நிமிடங்களிலேயே வீட்டின் அழைப்பு மணி அடிக்க "இப்போ தான் அத்தை போனாங்க, எதுனாச்சி மறந்திட்டாங்களா?" என்று நினைத்துக் கொண்டே சமையலைறையில் இருந்து வெளியே வர, யாரோ மறுபடியும் விடாமல் அழைப்பு மணி அடிக்க, வேகமாக கிட்டத்தட்ட ஓடியே வர வேண்டியதாய் இருந்தது.

"அப்பா, ஏற்கனவே வயிறு வலி, இதுல இவ்வளவு பெரிய வீட்ட கட்டிவிட்டு இங்கைக்கும் அங்கைக்கும் நடக்கவே தனி தெம்பு வேணும் போல இருக்கு" என்றெண்ணிக் கொண்டே கதவை திறக்க, அங்கு அவள் கண்ட காட்சி அவளை அப்படியே உறைய வைத்தது...

3:18 PM 49%
https://drive.google.com/file



இத்தனை தடவை அழைப்பு மணி அடித்தும் யாரும் வராமல் இருந்ததை எண்ணி முகத்தில் எரிச்சல் மண்டியிருக்க எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் அங்கு நின்றுக் கொண்டிருந்தான் அர்ஜூன்.

அவன் சென்ற வேலை முடிந்துவிட்டதால், இங்கே சென்னையிலும் ஏகப்பட்ட வேலைகள், வாடிக்கையாளர் மீட்டிங்குகள் என்று காத்து கிடந்ததால் தன் அன்னைக்கு கூட தெரியப்படுத்தாமல் அவன் கிளம்பி வந்துவிட்டான்...

அர்ஜூன் மும்பை சென்றிருந்த இந்த மூன்று வாரங்களில் மாமியாரும், மாமனாரும், மஹாவும் தங்கள் பாசத்தினால் அவள் எங்கு இருக்கிறாள் என்பதனையே மறக்க செய்திருக்க,

அருணோ வருவதும் தெரியாது, போவதும் தெரியாததுப் போல் தான் இருப்பான்..... வீட்டில் இருந்தாலும் அவனும் திவ்யாவிடம் சகஜமாகவே பழகியிருந்தான்...

இத்தனை நாட்களுக்குள் அவள் இந்த வீட்டினரோடு ஒரு ஆளாக மாறி இருக்க அதில் அர்ஜூனைக் கொஞ்சம் மறந்திருந்தாள் என்றே சொல்லலாம்.

ஆனால் இன்று முன்னறிவுப்பு எதுவும் இல்லாமல் இப்படி திடுமென்று எதிரே வந்து நின்றவனைக் கண்டவள் மிதமிஞ்சிய அச்சத்தால் உடல் முழுவதும் மரத்துப் போனது போல் திக் பிரம்மை பிடித்து நின்றாள்...

49% 3:19 PM
https://drive.google.com/file



அழைப்பு மணி அடித்ததும் தன் அன்னையோ அல்லது தங்கையோ ஒருவர் தான் கதவை திறப்பார்கள் என்று எண்ணியிருக்க திடீர் என்று கதவை திறந்த திவ்யாவை கண்டதும் உடலெங்கும் ஒரு வித சிலிர்ப்பு படறவே இத்தனை நாட்கள் தன் மனக் கண்ணில் வந்து போன அவள் மதி முகத்தை மீண்டும் எழாதவாறு தட்டி வைத்திருக்க, அவன் ஆழ் மனதில் புதையுண்டு இருந்த உணர்வுகள் திமிறிக் கொண்டு மெல்ல தலை நீட்டி எட்டி பார்த்தது...

வயலட் நிற பட்டுப் புடவையில் தலையில் மல்லிகைப் பூ சூடி எளிமையான அலங்காரத்தில் அந்த நிலவையும் தோற்கடிக்கும் விதத்தில் எந்த களங்கமும் இல்லாமல் ஆனால் அச்சத்தில் விழி விரிய நின்றிருந்த மனையாளைக் கண்டவனுக்கு மேஹா சொன்னது நியாபகத்தில் வந்தது...

"செம்ம ஹோம்லியா அழகா இருக்காங்க"

ஒரு வேளை இந்த ஒரு மாத தன் இல்ல வாசம் அவளின் அழகை மெறுகேற்றி இருக்குமோ என்று கர்வத்தோடு எண்ணியவாரே சில விநாடிகள் நின்று இருந்தவன் சட்டென்று சுய நினைவிற்கு வர அசைவற்று நின்று இருந்தவளைக் கண்டவனுக்கு அவள் நகர்வது போல தெரியவில்லை...

அவள் முன் சொடக்கிட்டவன் அவளை ஆழ்ந்து பார்க்க, அவனின் சொடக்கில் சிந்தனை கலைந்து தன் உணர்வுக்கு வந்தவள் அச்சம் அகலா முகத்துடன் விலகி நிற்க அவளைத் தாண்டி உள்ளே சென்றான்......

அவன் வீட்டினுள்ளே சென்றும் இன்னும் திகிலில் உறைந்திருந்தவள் போல் கதவின் அருகிலேயே நிற்க அதனை கண்டும் காணாதது போல் ஹாலில் அமர்ந்தவன் தலையை அழுந்தப் பிடித்துக் கொண்டே "மாம்" என்று கத்த,

3:19 PM 49%
https://drive.google.com/file



அவனுடைய அந்த கத்தல் சத்தம் திவ்யாவை இந்த உலகிற்கு கூட்டி வந்தது......

அவனின் கத்தலில் திடுக்கிட்டவள் "ஐயோ!, இந்த நேரம் பார்த்து வீட்டில் யாருமே இல்லையே.... ஏற்கனவே ஏதோ கோபத்தில் இருப்பார் போல் இருக்கிறது... இப்பொழுது நான் ஏதாவது பேசினால் அவ்வளவு தான் தொலைந்தேன்" என்று கலங்கியவள் எதுவும் பேசாமல் அமைதியாக இருக்க,

அவன் மீண்டும் சத்தமாக "மாம்" என்று அழைத்தான்..

அவன் கத்திலில் பயந்தவள் வேறு வழியில்லாமல் மிக மெதுவான குரலில் தன் ஒட்டு மொத்த தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு....

"அத்தையும், அண்ணியும் கோவிலுக்கு போயிருக்காங்க, வர கொஞ்ச நேரம் ஆகும்.... டீ கொண்டு வரட்டுமா?" என்றாள்......

அவள் பேசியது அவள் காதிற்கே கேட்காதப் பொழுது அவனுக்கு எங்கு கேட்டிருக்கும்...

"என்ன?" என்று அவன் மேலும் குரலை உயர்த்திக் கேட்டப் பொழுது தான் "ஐயோ! நான் பேசியது இவருக்கு கேட்கவில்லை போலிருக்கே" என்றெண்ணியவள், தடுமாற்றத்துடன் ஒவ்வொரு வார்த்தையாக,

49% 3:19 PM
https://drive.google.com/file



"இ.. இ... இல்ல அத்தையும் அண்ணியும் கோ... கோ... கோவிலுக்கு போயிருக்காங்க, வர கொஞ்ச நேரம் ஆகும். டி...டி கொண்டு வரட்டுமா??" என்றாள்......

"மாம்மும் மஹாவும் கோவிலுக்கு போய் இருக்காங்கன்னா இவ என்ன பண்றா இங்க?" என்று நினைத்தவன் எதுவுமே பேசாமல் மீண்டும் தலையை அழுத்திக் கொண்டு இருக்க, என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் அந்த இடத்திலேயே கொஞ்ச நேரம் நின்று இருந்தவள்,

"நான் இருக்கும் இடத்தில் இருக்கவே பிடிக்காமல் வெளியூருக்கு போனவர் இப்பொழுது தான் வந்திருக்கிறார்.... இப்பொழுது இங்கேயே நின்றுக் கொண்டிருந்தோம் என்றால் நிச்சயம் கோபம் தான் வரும், திரும்பியும் வேறு எங்காவது போய் விடப் போகிறார்" என்று நினைத்தவள், உள்ளே செல்ல திரும்ப, அவள் போவதை அறிந்தவன்.....

"கொஞ்சம் ஸ்ராங்கா டி போட்டுக் கொடுங்க" என்றான்......

முதல் முறை இன்று தான் அவள் கணவன் அவளிடம் நேரிடையாக பேசி இருக்கிறான்......

அதில் சிறிதே மகிழ்ந்து இருந்தாலும், அவனின் "கொடுங்க" என்ற வார்த்தை மறுபடியும் மனதை குத்திக் கிழிக்க, எங்கிருந்தோ திடீரென்று அவனுடன் புகைப்படம் எடுத்த பெண் முகமும் நியாபகம் வர, கண்களில் நீர் கோர்ப்பதைத் தடுக்க முடியாமல் குனிந்த தலையை நிமிராமலே சமையலறைக்கு சென்றவள் அவனுக்கு தேநீர் போட ஆரம்பித்தாள்......

3:19 PM 49%
https://drive.google.com/file



சிறிது நேரத்தில் இஞ்சி ஏலக்காய் தட்டி போட்ட தேநீரை சுட சுட எடுத்து வந்தவள் அதனோடே தலை வலி மாத்திரையும் எடுத்து வந்திருந்தாள்......

இன்னும் தன் கரங்களால் தலையை அழுந்து பிடித்தவாரே குனிந்து அமர்ந்திருந்தவனை பார்த்தவளுக்கு,

"தலையை குனிந்தே அமர்ந்திருப்பவரை என்ன சொல்லி கூப்பிட?" (திவ்யாவின் கிராமத்தில் கணவனை மாமா என்றோ அல்லது அத்தான் என்றோ தான் அழைப்பார்கள்) "இவருக்கு இருக்கிற கோபத்துக்கும், என் மேல் இருக்கும் வெறுப்பிற்கும் நான் மட்டும் மாமான்னோ அத்தான்னோ கூப்பிட்டேன் டீயை என் தலையிலேயே கொட்டினாலும் ஆச்சரியம் இல்லை" என்று நினைத்தவள்,

தயக்கத்துடன் "என்னங்க" என்றழைத்தாள்......

அவளுடைய அழைப்பில் நிமிர்ந்துப் பார்த்தவன் எதுவும் பேசாமல் அவள் கொடுத்த தேநீரை வாங்கும் பொழுது அவனின் முரட்டு விரல்கள் அவளின் மென்மையான விரல்களுடன் உரச பாவையவளின் உடல் சிலிர்த்து மனம் அடியோடு நிலைக் குலைந்தது.

முதல் முறை திருமணமான இரண்டாவது நாள் மாடியில் இருந்து இறங்கும் பொழுது அவள் கீழே விழாமல் இருக்க அவள் இடையை பிடிக்கும் பொழுது ஏற்பட்ட அதே சிலிர்ப்பு...

உயிரின் வேர் வரை சென்று உடல் முழுவதும் உணர்ச்சி பிரவாகத்தில் சிக்க வைத்தது..

3:19 PM
https://drive.google.com/file



ஆனால் அவனுக்கு அப்படி எதுவும் இல்லைப் போல்... அமைதியாக தேநீரை பருகியவனின் தலை வலிக்கு அது மிகவும் இதமாகவே இருந்தது......

தேநீரை அருந்தியதும் அவன் முகம் இலகுவாக மாற, அவன் உணர்வுகளை புரிந்துக் கொண்டவள் அது தந்த சிறிய தைரியத்தில் "இந்த மாத்திரையும் போட்டுக்கோங்க" என்று மாத்திரையும் அவனிடம் நீட்டினாள்.

அவளையே சில நொடிகள் பார்த்தவன் மாத்திரைக்கு கை நீட்ட, எங்கே மீண்டும் அவன் விரல்கள் தன் கையில் பட்டுவிடுமோ என்று அச்சத்துடன் மாத்திரையை அவன் விரல் படாமல் போட, ஏற்கனவே தலை வலியில் இருந்ததவனுக்கு அவள் செயல் சீற்றத்தையே கிளப்பியது......

அவளையே பார்த்திருந்தவனின் பார்வை கூர்மையாக மாற, தன் ஆழ் மனதையே ஊடுறுவிப் பார்ப்பது போல் இருந்த அவன் பார்வையின் வீரியத்தில் அவளுக்கு சப்த நாடியும் ஒடுங்கி போனது...

"அப்படியே நாங்க இந்தம்மாவ தொடுறதுக்குத் தான் காத்திருக்கோம்" என்று நினைத்தவன் ஒன்றும் பேசாமல் மாத்திரையை தேநீரோடு உண்டவன் தேநீர் கப்பை அவளிடம் கொடுக்க முற்பட, அவள் கை நீட்டியதும் அவளை பார்த்தவாரே ஒன்றும் பேசாமல் தன் அருகில் இருந்த மேஜையில் வைத்து விட்டு மாடி ஏறினான்.

அவன் கோபம் அவளுக்கு புரிந்தது... ஆனால் அவளின் நிலை தான் அவனுக்கு புரியவில்லை...

அவன் அங்கிருந்து அகன்றதும் சமயலறைக்கு ஓடிய திவ்யா அது வரை பிடித்து வைத்திருந்த மூச்சை இழுத்துவிட்டவள்.

"அப்பாடி, அவங்களோட இரண்டு நிமிஷம் தனியா இருக்கவே மூச்சு முட்டுதே... இதுல இந்த அத்தை எதை மனசுல நினைச்சுட்டு அவரை நம்ம கழுத்துல தாலிக் கட்ட சொன்னாங்க?" என்று வியர்த்து விதிர்த்து போனாள்......

அர்ஜுன் வந்து கிட்டதட்ட ஒரு மணி நேரத்திற்கும் மேல் ஆகியிருந்தது...

நேரம் ஆக ஆக ஸ்ரீயும் மஹாவும் வருவதாகவே தெரியவில்லை...

திருமணம் ஆன இந்த ஒரு மாதத்தில் முதன் முறை தன் கணவனுடன் ஒரே விட்டில் தனித்து இருப்பதை நினைத்து மனம் படபடத்து திக் திக் என்று இருக்க,

"ஐயோ! இந்த அத்தை சீக்கிரம் வரக் கூடாது? இப்போ அவங்க சாப்பிட வந்தா நான் என்ன பண்றது?" என்று எண்ணிக் கொண்டே சப்பாத்திக்கு மாவைப் பிசைந்துக் கொண்டிருந்தாள்......

ஒரு வழியாக சப்பாத்தியை செய்து முடித்தவள் அதனை ஹாட்பாக்ஸில் வைத்துவிட்டு, குருமாவையும் இறக்கி வைத்து விட்டு தட்டுக்களை எடுத்து வைக்கலாம் என்று எட்டி தட்டை எடுக்கும் பொழுது,

"இன்னும் மாம் வரலையா?" என்ற கணீர் குரலில் தூக்கி வாரிப் போட கைகளில் இருந்த தட்டை நழுவ விட்டாள்......

3:19 PM 49%
https://drive.google.com/file



அவனை கண்டு ஏற்கனவே பயந்திருந்தவளுக்கு தட்டு விழுந்த சத்தம் மேலும் அதிர்ச்சியைக் கொடுக்க சட்டென்று விழிகளில் நீர் கோர்த்தது...

வேகமாக தட்டை தரையில் இருந்து எடுக்க,தட்டு கீழே விழுந்த எரிச்சலில் இருந்தவன்,

"ஒரு கேள்விக் கேட்டா உடனே பதில் சொல்ல தெரியாதா?" என்றான் படீரென்று......

திருமணம் ஆன நாளில் இருந்து தன் முகம் நோக்கி பார்க்காதவன்,முதன் முறை தன்னிடம் நேரிடையாக பேசிக் கொண்டிருப்பதில் உள்ளம் முழுவதும் திகில் சூழ்ந்திருக்க தலையை குனிந்துக் கொண்டே...

"அ.. அவங்க சித்தி விநாயகர் கோவிலுக்கு போயிருக்காங்க... அது இங்க இருந்து ரொம்ப தூரம்னு சொன்னாங்க....

வ.. வர லேட்டா ஆகும்னும் சொன்னாங்க" என்று ஒரு வழியாக திக்கி திணறி சொல்லி முடித்தவள்,

"நீங்க சாப்பிடுறீங்களா?" என்றாள் நடுங்கும் குரலில்...

அவன் எதுவும் சொல்லாமல் அலை பேசியில் தன் அன்னையை அழைக்க,விடாமல் அழைப்பு போய் கொண்டே இருந்தது...

என்ன நினைத்தானோ அழைப்பை துண்டித்தவன்,

3:20 PM 49%
https://drive.google.com/file



"இல்ல, இப்போ வேண்டாம்.... மாம் வரட்டும்" என்று சொல்லிவிட்டு திரும்ப,

பட்டென்று "இல்ல, சப்பாத்தி இப்போ தான் செஞ்சேன்... நல்லா சூடா இருக்கு" என்றாள்......

எங்கிருந்தோ வந்த தைரியத்தில் சொல்லிவிட்டாள்.... சொன்னவுடன் தான் தெரிந்தது சொன்னதன் அர்த்தம்....

ஒரு வேளை சரி என்று அவர் சாப்பிட அமர்ந்துவிட்டால்????

இதயம் படப்படக்க அவனையே பார்த்திருக்க....

அவனுக்கோ ஏற்கனவே அசதி... இதில் மூன்று வாரங்களாக ஹோட்டல் சாப்பாடு... சரியான பசி வேறு அவனுக்கு......

எதுவும் பேசாமல் கை கழுவியவன் டைனிங் டேபிளில் அமர, அவளுக்கு பயத்தில் குளிரெடுக்க ஆரம்பித்தது......

"இது தேவையா??? அவரே பேசாமல் போயிருப்பார்... பெரிய இது மாதிரி சாப்பிடுங்கன்னு சொல்லிட்டு, இப்ப என்ன பண்றது?" என்று மானசீகமாக தலையில் கொட்டியவள்,

உள்ளும் புறமும் நடுங்க வேறு வழியில்லாமல் "அவரை சாப்பிட சொல்லிட்ட, அப்புறம் இப்படி பயந்தா என்னா ஆவது? எப்படி பரிமாறுவது?" என்று நினைத்துக் கொண்டு உணவை எடுத்து மேஜையில் வைக்க,

3:20 PM 49%
https://drive.google.com/file



அப்பொழுதும் தலையை அவன் பிடித்தபடியே அமர்ந்திருக்கவும் மாத்திரை சரியாக வேலை செய்யவில்லைப் போல என்று நினைத்துக் கொண்டே பரிமாறினாள்......

தன் கணவனுக்கு இத்தனை அருகில் நிற்பது மேலும் பதட்டத்தையே கொடுக்க பரிமாறும் பொழுது அவள் கை விரல்கள் அனைத்தும் வெளிப்படையாக நடுங்கிக் கொண்டு இருப்பதை கவனித்தவன் லேசாக நிமிர்ந்துப் பார்க்க, அவன் கண்களில் முதலில் பட்டது அவளது இடையே......

அடர்ந்த வைலட் நிற புடவைக்கு இடையில் பளீரென்று தெரிந்த குறுகி சிறுத்த அழகான வளவளப்பான தன்னவளின் இடையை முதல் முதலாக அதுவும் இத்தனை அருகில் பார்த்தவனின் மனம் தடுமாறி துடிக்க ஆரம்பித்தது....

அதன் அழகையும் தன்னை ஈர்க்கும் அதன் சக்தியையும் தவிர்க்க முடியாமல் பார்த்திருந்தவனின் உடலெங்கும் உணர்ச்சி பிரவாகம் ஊற்றெடுத்து இருக்க,

தன் கணவன் தன் இடையைப் பார்ப்பதை கவனியாமல் பரிமாறுவதிலேயே குறியாக இருந்தவள் தன்னிச்சையாக புடவையை இழுத்து இடுப்பை மூட,

"பெரிய இவ, நாங்க அப்படியே பார்த்து இரசிக்க போறோமாக்கும்" என்று நினைத்தவன் நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான்......

49% 3:20 PM
https://drive.google.com/file



ஆனால் தன்னை மறந்து தன் விழிகள் தன்னவளின் அழகில் கணவனின் உரிமையோடு மேய்ந்ததை ஒத்துக் கொள்ள தான் அவனுக்கு மனதில்லை... உடனே ஒத்துக் கொண்டால் அவன் அர்ஜூன் இல்லையே!!!!

ஏதோ உள்ளுணர்வு உறுத்த நிமிர்ந்து பார்த்தவள் தன் கணவன் தன்னையே பார்த்திருப்பதை கண்டதும் அவன் பார்வையின் அர்த்தம் புரியாமல்,

"ஐயோ! இதுக்கு மேலே நாம் இங்கிருந்தோம் அவ்வளவு தான், நிச்சயம் சின்ன பிள்ளை மாதிரி அழுதுவிடுவோம்" என்று எண்ணியவள் தண்ணீர் எடுக்கும் சாக்கில் அவனிடம் இருந்து நகர்ந்தாள்......

மிகுந்த பசியில் இருந்தவனுக்கு அவள் செய்த சப்பாத்தியும் குருமாவும் அமிர்தம் போலவே இருக்க, சற்று அதிகமாகவே உண்டவன் எழுந்து கை கழுவ சென்றான்......

தண்ணீரை அவன் அருகில் வைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தவள் அடுப்பில் ஏதோ வேலை செய்பவள் போலே எதையோ செய்துக் கொண்டிருக்க, கை கழுவியவன்

"ஐ ஆம் கோயிங் டு ஸ்லீப்... ஐ வில் ஸீ மாம் டுமாரோ [I am going to sleep. I will see mom tomorrow]" என்றான்.

அவன் கூறிய ஆங்கில வார்த்தைகள் சட்டென்று புரியாமல் அவள் திருதிருவென்று விழிக்க "இது கூட புரியாதா? அப்போ இங்கிலீஷ் நாலேட்ஜ் சுத்தம். ஐயோ! மாம், என்ன மாம் இது? அப்படி நான் என்ன பாவம் மாம் செய்தேன்?" என்று மனதிற்குள்ளே புலம்பியவன்,

3:21 PM 49%
https://drive.google.com/file



"எனக்கு தூக்கம் வருது, நான் காலையில் மாம்கிட்ட பேசிக்கிறேன்" என்றவன் திரும்பி செல்ல எத்தனிக்க, எதையோ நினைத்தவன் மறுபடியும் திரும்பி,

"மாம்ன்னா என்னன்னு புரியும்ல" என்றவனின் தொனியில் அத்தனை குறும்பு தெரிந்தது......

அவன் தன்னை கிண்டல் செய்கிறான் என்று அவளுக்கு புரியவே சில விநாடிகள் பிடித்தது.... புரிந்ததும் மிகுந்த அவமானமாக இருக்க சட்டென்று......

"நான் ப்ளஸ்டூ வரைக்கும் படிச்சிருக்கேன்" என்றாள்......

அப்பா, அப்படியே ஐ ஏ எஸ் படிப்பு என்று எண்ணியவன் "ஐ ஏ எஸ் ஏதும் படிச்சரலேயே" என்று சொல்லியும் காண்பித்துவிட்டு அவள் முக மாற்றத்தை கவனித்து இரசித்தவன், அடக்கமாட்டாமல் மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டு அவன் அறைக்கு சென்றான்......

அவன் சென்றுவிட்டான் என்பது மூளையில் உறைக்கவே சில நொடிகள் பிடித்தது....

அவன் தன்னருகில் இருந்த வரை ஏதோ அழுந்தி பிடித்திருந்தது போல் உடலும் மனமும் இறுகி இருக்க, அவன் சென்றதும் ஆழ்ந்து மூச்சை இழுத்துவிட்டவளுக்கு "இப்படி எத்தனை நாட்கள் தான் இருக்க முடியும்? பேசாமல் திரும்பி ஊருக்கு போய்டலாமா?" என்று கூட தோன்றியது...

ஆனால் தன் தாயையும் தந்தையையும் நினைத்தவள் வேறு வழியின்றி தன் மனதை அடக்கிக் கொண்டாள்......

49% 3:21 PM
https://drive.google.com/file

அங்கு தன் அறைக்கு சென்று படுக்கையில் சாய்ந்தவனுக்கோ திவ்யாவின் நினைப்பே மீண்டும் மீண்டும் வந்து எழுந்தது...

அவள் தயங்கி தயங்கி பேசியது, தேநீர் கொடுத்தது, அவன் தலை வலியை சட்டென்று உணர்ந்து மாத்திரைக் கொடுத்தது, திடீரென்று அவன் குரலை கேட்டதும் அதிர்ந்து தட்டை நழுவ விட்டது, சுவையான டிபனை கை நடுங்கிக் கொண்டே பரிமாறியது, பின் ஆங்கிலம் தெரியாதா என்ற அவன் கேள்விக்கு வெடுக்கென்று தன் படிப்பை பற்றி சொன்னது...

எல்லாமாக ஒன்றன் பின் ஒன்றாக அவன் மனதில் வலம் வந்து அவன் சித்தத்தை சிதைத்தது....

இவற்றை எல்லாம் நினைத்துக் கொண்டு இருந்தவனின் மனம் இறுதியில் அவளின் இடையில் வந்து நின்றது......

அதுவும் அவன் பார்ப்பது தெரியாவிட்டாலும், அவள் தன்னிச்சையாக சட்டென்று புடவையை இழுத்து இடையை மறைத்தது நியாபகத்தில் வர அவனை அறியாமல் ஒரு மெல்லிய புன்சிரிப்பு அவன் முகத்தில் படர்ந்தது.

பிறந்தது முதல் நகர வாழ்க்கையிலேயே வாழ்ந்தவன்...... மேற்படிப்பை லண்டனில் படித்தவன், எப்போழுதும் தன்னை சுற்றி பணக்காரர்கள் மேல் தட்டு வர்க்கத்தை சேர்ந்தவர்களுடனேயே வாழ்ந்து வந்தவன்......

அவன் இப்படி ஒரு கிராமத்து பெண்ணை வாழ்நாளில், அதுவும் இத்தனை அருகில் இருந்து பார்த்ததில்லை, பழகியதில்லை......

3:21 PM 48%
https://drive.google.com/file



திருமணம் ஆன நாளன்று அவளை தன் வாழ்க்கையில் இருந்து எத்தனை விரைவில் தூக்கி எறிய முடியுமோ அத்தனை சீக்கிரம் அவளை விரட்ட வேண்டும் என்று நினைத்தது என்னவோ உண்மை தான்...

ஆனால் மறு நாள் அதிகாலையில் படிகளில் தான் மோதியதும் அவள் விழுந்து விடாமல் இருக்க தான் தன் ஒரு கரத்தால் அவளின் தளிர் மேனியை இறுக்க பற்றியிருக்க, மற்றொரு கரம் அவளின் மிருதுவான வெற்றிடையை வளைத்து பிடித்து இருக்க, தடுமாற்றத்தில் அவளின் பூக்கரங்கள் தன்னை இறுக்க பற்றியதும் அச்சத்தால் விழி விரிய தன்னை பார்த்திருந்த அவளின் மலர் முகமும் அவன் உள்ளத்தை வேர் போல் ஊடுறுவி சென்று ஆழ புதைந்திருந்தது...

தான் மும்பை கிளம்பிய அன்று வாயிலில் நீர் கோர்க்க தன்னையே பார்த்திருந்தவளின் விழிகளுக்குள் அவன் அவனையும் அறியாமல் தொலைத்திருந்தான்...

தன் அலை பேசியில் அவளின் புகைப்படத்தை சுயநிலையை அடியோடு இழந்து பார்த்திருந்த பொழுது உணர்வுகளின் சுழற்ச்சியால் உணர்ச்சிகள் அத்து மீறி தெறிக்கும் நிலையில் இருந்ததை அவன் உணரவில்லையோ??

வேற்று பெண்கள் மீது வராத இந்த உரிமை, உணர்ச்சி பிரவாகம் இவளின் மேல் மட்டும் வந்ததற்கு காரணம் என்ன?

இவை அத்தனையும் அவள் தன்னவள்... தனக்கு முழு உரிமை உள்ள மனைவி என்று ஆழ்மனதில் புதைந்திருந்த எண்ணத்தினால் தானே...

3:22 PM 48%
https://drive.google.com/file



எப்பொழுது என் மனதில் நுழைந்தாள் அவள்?? இதோ இப்பொழுதும் என் மனம் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருப்பது வியப்பாக இருக்கிறது...

எது அவளை பற்றி நினைக்க தூண்டுகிறது.... அது அவளின் அமைதியான அழகா? இல்லை வெகுளித்தனமா? இல்லை அவளது பயமா??

எவ்வளவு ஆழ்ந்து யோசித்தும் அவனுக்கு குழப்பம் தான் மிஞ்சியது..

ஆனால் என்னவோ அவனின் நினைப்பு இப்பொழுது இந்த நிமிடம் அவளிடம் தான்... அதனை நினைத்தவன் அவனாலேயே அவனின் மனம் போன போக்கை நம்ப முடியவில்லை......

ஒரு பக்கம் அவனது அந்தஸ்து, கௌரவம், தன்னை ஒரு சூழ்நிலை கைதியாக மாற்றி வஞ்சித்துவிட்டார்களே என்ற கோபம்.... மறு பக்கம் அவன் மனம் அறியாமலே அவன் மனதிற்குள் நுழைந்துவிட்ட காதல்...

வெகு நேரம் வரை அவளையே நினைத்திருந்தவனின் மனம் நிரம்பியிருக்க முதன் முறை தன் மனைவியின் கையால் உணவு பரிமாறியதால் வயிறும் நிரம்பியிருக்க நன்கு உறங்கிப் போனான் திவ்யாவின் கணவன்....

H+ 1 48% 3:23 PM
https://drive.google.com/file 17



மலரினும் மெல்லியவள்!

பாகம் - 8

கோவிலுக்கு சென்று இருந்த ஸ்ரீயும் மஹாவும் வீட்டிற்கு திரும்புவதற்கு நீண்ட நேரம் பிடித்திருந்தது..

வெகு நேரம் கழித்து வீட்டிற்கு வந்த ஸ்ரீ,

"சாரிடா திவ்யா, இன்னைக்கு ரொம்ப நேரம் ஆச்சு.. பாவம் நீ எவ்வளவு வேலை பண்ணியிருக்க" என்றார்......

"இல்லை அத்தை, ஒன்னும் பெரிசா பண்ணலை... அவங்க ரொம்ப தலை வலியோட வந்திருந்தாங்க.... அதனால தான் சீக்கிரம் சாப்பிட்டுட்டு படுக்கட்டுமேன்னு சப்பாத்தியும் குருமாவும் பண்ணினேன்"

"யாருடா, அருணா?"

"இல்லத்த, அவங்க, மும்பாய்ல இருந்து வந்துட்டாங்க..."

அவள் சொல்லும் போதே அவளின் குரலும் நடுங்கியது...

அர்ஜூன் திவ்யாவின் கையால் சாப்பிட்டானா?... ஸ்ரீயால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை...

48% 3:23 PM
https://drive.google.com/file



வியந்தவர் மஹாவை திரும்பி பார்க்க, மஹாவின் விழிகளும் ஆச்சரியத்தில் விரிந்திருந்தது... ஒருவொருக்கொருவர் பார்த்துக் கொண்டவர்கள் திவ்யா அறியாமல் சிரித்துக் கொண்டார்கள்......

பின் இப்பொழுது தான் ஸ்ரீ மனம் உருக தன் மகனும் மருமகளும் ஒன்று சேர வேண்டும் என்று கோவிலில் வேண்டிக் கொண்டார்......

ஆனால் தன் வேண்டுதல் இத்தனை விரைவில் நிறைவேர ஆரம்பித்துவிட்டதை அவரால் நம்ப முடியவில்லை....

ஸ்ரீயின் மனமும் முகமும் அவரின் மகிழ்ச்சியை வெளிப்படுத்த..

"சரிடா... அர்ஜூன் நல்லா சாப்பிட்டானா?" என்றார்......

"ஆமாம் அத்த, ரொம்ப பசிப் போல... அதுவும் இல்லாம அங்க மும்பைல என்ன சாப்பிட்டாங்களோ?" என்றாள்.

கணவன் மேல் தன் மருமகளின் கரிசனைத்தை பார்த்தவருக்கு உள்ளம் பூரித்தது...

திருமணம் முடிந்து வந்த இரண்டு நாட்களிலும் அவனின் உதாசீனம் திவ்யாவிற்கு எவ்வளவு வலியைக் கொடுத்திருந்தது என்பதை மற்றவர்களை விட அவர் தானே அதிகம் உணர்ந்திருந்தார்...

என்ன தான் தன் மகனின் மனம் மாற்றத்திற்காக ஒவ்வொரு நிமிடமும் அவர் காத்திருந்தாலும், அவரின் ஆழ் மனதில் அது நடக்க

48% 3:23 PM
https://drive.google.com/file
17

இன்னும் பல காலம் திவ்யா காத்து இருக்க வேண்டும் என்றே தோன்றியிருந்தது...

அதற்கு காரணம் அவர் தன் மகனை பற்றி நன்கு புரிந்து இருந்ததே...

ஆனால் அர்ஜூனின் மனம் திருமணத்தன்று தன் திருமணத்தையே வெறுத்தது தான்... இல்லை என்று சொல்வதற்கு இல்லை...

ஆனால் அந்த வெறுப்பு ஒரு நாள் தான் நீடித்தது...

அவனுக்கே தெரியாமல் அவன் மனையாளின் முகம் அவனின் இதயத்தில் படிந்து அவன் ஆத்மாவை ஊடுருவியிருக்கிறது என்பதை அவன் தான் இன்னும் புரிந்துக் கொள்ளவில்லை...

காதல் சில நேரங்களில் கண்டதும் வரும்...

சில நேரங்களில் பரிதாபத்தினால் வரும்....

சில நேரங்களில் திருமணத்திற்கு பிறகு வரும்... பெற்றோர் நிச்சயத்த திருமணங்களில் வருவது போல்!

சில நேரங்களில் உரிமையில் வரும்...

ஆனால் சில நேரங்களில் ஏன்? எதற்கு? எப்படி? என்றே தெரியாமலே ஒருவரின் மேல் வரும்...

3:23 PM 48%
https://drive.google.com/file



இங்கு அர்ஜூனின் காதலும் அப்படி தானோ????

மற்ற அனைவரும் உணவு அருந்தி முடித்தவுடன் ஸ்ரீயும் திவ்யாவும் டைனிங் டேபிளில் அமர்ந்தார்கள்...

"திவ்யா, அர்ஜூனுக்கு தலைவலின்னு சொன்னல்ல, அவனா சொன்னானா?"

"இல்லத்த, அவங்க தலைய பிடிச்சுட்டு உக்கார்ந்து இருந்தாங்க.... நான் தான் தலைவலியாத் தான் இருக்கும்ன்னு மாத்திரை குடுத்தேன்"

திவ்யாவின் அன்பும் பொறுமையும் கரிசனமும் நிச்சயம் அர்ஜூனை அவள் பால் விரைவில் இழுத்துவிடும் என்ற நம்பிக்கை வந்தது ஸ்ரீக்கு...

ஆனால் அவர் மகன் ஏற்கனவே அவளிடம் விழுந்துவிட்டான் என்பது அவனுக்கே தெரியாத போது பாவம் இவருக்கு எப்படி தெரியும்???

"கடவுளே, இந்த சின்னஞ் சிறுசுகள் சேருவதற்கு ரொம்ப நாள் இல்லன்னு நினைக்கிறேன்.... அத எப்படியும் நிறைவேற்றி வைப்பா, சீக்கிரம் குலதெய்வ கோவிலுக்கு வந்து பொங்கல் வைக்கிறேன்" என்று மனதிற்குள்ளே வேண்டிக் கொண்டார் ஸ்ரீ...

மறுநாள் காலையில் வழக்கும் போல் வாசல் தெளித்து கோலம் போட்டுவிட்டு மற்ற வேலைகலையும் முடித்துவிட்டு காலை டிபனை செய்ய ஆரம்பித்தாள் திவ்யா.....

3:23 PM
https://drive.google.com/file



ஸ்ரீயும் தெய்வானையும் அவளுக்கு உதவி செய்துக் கொண்டு இருக்க, அர்ஜூன் சமையல் அறைக்குள் நுழைந்தான்.

"மாம்... எனக்கு இன்னக்கு நிறைய வேலைகள் இருக்கு... வீட்டிற்கு வர லேட்டாகும்" என்றவன் வெளியே கிளம்ப எத்தனிக்க,

"அர்ஜூன்... சாப்பிட்டுவிட்டு போப்பா" என்றார் ஸ்ரீ.....

"நோ மாம்... த்ரீ வீக்ஸ் இங்க இல்லாததால நிறைய மீட்டிங்ஸ் பெண்டிங்கல இருக்கு..... சில காண்ட்ராக்ட்ஸ் வேற சைன் பண்றதுக்கு முன்னாடி டீட்டெய்ல்ஸ் பார்க்கனும்.... எனக்கு மூச்சு விடறதுக்குக் கூட நேரம் இருக்காது... சாப்பாட வெளியே பார்த்துக்கிறேன்" என்றவன் திரும்பி சென்றான்.....

சமையல் அறையின் வாயில் தாண்டி செல்லும் பொழுது ஒரு விநாடி தாமதித்தவன் திரும்பி திவ்யாவை ஒரு பார்வைப் பார்க்க, தன் கணவனின் இந்த திடீர் பார்வைக்கு என்ன அர்த்தம் என்று அவளுக்கு சத்தியமாக விளங்கவில்லை.....

ஆனால் வழக்கம் போல் ஒரு பய உருண்டை வயிற்றில் உருளவே செய்தது...

அலுவலகம் சென்ற அர்ஜூனும் என்றும் போல் அன்றும், அதற்கு அடுத்து வந்த நாட்களும் வேலை பலு அதிகமாகி தொழிற்சாலைகளை சந்திப்பது, தொழிற்கூட்டங்களில் பங்கேற்பது, அலுவலக வேலைகள் என்று மூழ்கி போக, காலையில் வெகு சீக்கிரம் வெளியே செல்வதும் இரவில் வெகு நேரம் கழித்து திரும்பி வருவதுமாக இருந்தான்..

3:23 PM 48%
https://drive.google.com/file 17



ஒரே வீட்டில் இருந்தும் திவ்யாவின் கண்களில் அவன் படுவது அபூர்வமாகி போனது...

ஒரு விதத்தில் அவனின் எதிரில் தான் இல்லாமல் இருப்பது நல்லது தான் என்று தோன்றினாலும் ஏனோ தன்னால் தான் தன் கணவன் வீட்டில் இருப்பதை தவிர்க்கிறானோ என்றும் தோன்ற ஆரம்பித்தது....

மனதிற்குள் உழண்டுக் கொண்டே இருந்த திவ்யா ஒரு நாள் ஸ்ரீயிடம் கலங்கிய முகத்துடன்....

"அத்த என் மனசுக்கு இது சரின்னு படல அத்த.... அவங்க எவ்வளவு பெரிய ஆளுன்னு இப்போ எனக்கு நல்லா புரியுது... அம்மா எப்பவும் சொல்வாங்க... ஆம்பளைங்க வெளியில எவ்வளவோ பிரச்சனைகளை சந்திச்சுட்டு வீட்டுக்கு வருவாங்க... அதனால வீட்டுல அவங்களுக்கு ஒரு நிம்மதியான சூழ்நிலை இருக்கனும்... வீட்டுல இருக்கிற பொம்பளைங்க அவங்க மனச புரிஞ்சிகிட்டு அவங்கள சந்தோஷமா வச்சிக்கனும்... இல்லாட்டி அவங்களால் வெளியில நிம்மதியா வேலைப் பார்க்க முடியாதுன்னு சொல்வாங்க.... இப்போ அவருக்கு என்னால இந்த வீட்டுல நிம்மதி இல்ல... அவங்க உங்கக் கூட உக்கார்ந்து பேசறதோ, சாப்பிடறதோ இல்லை..... எல்லாத்துக்கும் நான் தான் காரணம்... அதனால நான் என் வீட்டுக்கு போயிடறேன்" என்றாள் விழிகளில் நீர் கோர்த்து இருக்க....

அவளின் கலங்கிய முகத்தை பார்த்த ஸ்ரீக்கு மனம் கணக்க...

"திவ்யா, வெளியில் போற ஆம்பளைங்களுக்கு மட்டும் இல்லை... வேலைக்கு போற பொம்பளைங்களுக்கும் நீ சொல்றது சரி... வீட்டில் அவங்களுக்கு உகந்த சூழ்நிலை இல்லைன்னா எல்லாருக்கும்

H+ 1 48% 3:23 PM
https://drive.google.com/file 17



கஷ்டம் தான்... அது ஆண்களுக்கும் பொருந்தும், பெண்களுக்கும் பொருந்தும்... ஆனால் நீ நினைக்கிற மாதிரி எப்பவும் அர்ஜூன் நிறைய நேரம் வீட்டுல இருக்க மாட்டான்... அவனுக்கு அவங்க தாத்தாவை போல் எப்பவும் ஏதாவது செஞ்சுக்கிட்டே இருக்கனும்.... அவன் பிஸியா இல்லன்னா தான் அவனுக்கு பிரச்சனை... அதனால அவன் இப்போ இப்படி இருக்கிறதுக்கு நீ தான் காரணம்னு நினைச்சிக்காத, என்ன?" என்றார்....

ஆனாலும் திவ்யாவின் மனதில் இன்னும் தெளிவு ஏற்படவில்லை... திவ்யாவின் தந்தை சிவசுப்ரமணியத்திற்கு வீட்டில் எப்பொழுதும் ஒரு அமைதியான சூழ்நிலை இருந்தே ஆக வேண்டும்...

என்ன தான் கலாவும் வெளியில் வேலைப் பார்த்துவிட்டு வீட்டிற்கு திரும்பினாலும் தன் அசதியைக் காட்டாது தன் கணவனுக்காக பொறுமையை கடைப்பிடிப்பார்... இன்னும் சில ஆண்கள் அப்படி தான் இருக்கிறார்கள்...

அவர்களையே பார்த்து வளர்ந்து வந்தவளுக்கு இன்னும் அர்ஜூன் வீட்டில் அதிக நேரம் செலவிடாதது தன்னால் தான் என்று எண்ணி தன்னையே வருத்திக் கொண்டாள்..

ஆனால் திருமணம் ஆன மறு நாளும் அதற்கு அடுத்து வந்த அவன் மும்பையில் கழித்த சில நாட்களும் அவனுக்கும் அதே போன்று எண்ணங்கள் இருந்தது என்னவோ உண்மை தான்...

ஆனால் இப்பொழுது அவன் வெளியில் அதிக நேரம் தங்குவதற்கு காரணம் வழக்கம் போல் அவனின் தொழிற்களும் வேலை பலுவும் தான்...

3:23 PM 48%
https://drive.google.com/file



திவ்யாவிற்கு தான் அது புரியவில்லை... புரியவைப்பது அவள் கணவனின் கடமை அல்லவா????

அன்று மஹாவின் கல்லூரியில் அவர்களின் துறைகளுக்குள் நடக்கும் ஒரு சின்ன விழா....

அனைத்து துறை மாணவர்களுக்கும் இடையில் விளையாட்டு போட்டிகள், நடன நாடக போட்டிகள் மற்றும் இன்னும் சில திறமை சார்ந்த போட்டிகளும் நடக்கும் நாள்...

அன்று முதன் முறையாக மஹாவிற்கு புடவை அணிந்து செல்ல வேண்டும் என்று ஆசையாக இருந்தது....

அதுவும் திவ்யா வீட்டிற்கு வந்தததில் இருந்து அவளை புடவையில் பார்த்தவள், நம்மை விடச் சின்ன பெண் எத்தனை அழகாக புடவை உடுத்துகிறார் என்று நினைத்தவள் தானும் அணிய வேண்டும் என்று சொல்ல, திவ்யா அவளுக்கு உதவி செய்வதாக சொன்னாள்....

மஹாவிற்கு காலையில் எழுந்ததில் இருந்து "புடவை கட்டினால் தனக்கு நன்றாக இருக்குமா? நடக்கும் பொழுது தடுத்து கீழே விழுந்து விடுவோமா? உடம்பை நன்றாக மூடியிருக்குமா?" என்று ஒரே கவலை....

ஏனெனில் அவளுக்கு இப்பொழுது கொஞ்ச நாட்களாக அவளின் சீனியர் கோகுலின் எண்ணம் புரிய ஆரம்பித்து இருந்தது....

H+ 1 48% 3:24 PM
https://drive.google.com/file 17



அன்று ராகிங் நாளன்று பேசியவன் தான்... அதற்கு பிறகு இத்தனை நாளும் அவளை பார்த்துக் கொண்டு தான் இருக்கிறானே ஒழிய அவளிடம் பேச முயற்சிக்கவில்லை....

ஆனால் அவன் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று அவனிடம் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று உணர்த்திக் கொண்டே இருந்தது.

முதல் நாள் மஹாராவைப் பார்த்த கோகுல் அவளின் அழகில் மயங்கி இருந்தாலும் அதற்கு பின் அவள் அருணுடன் வர துவங்க அருணின் பணக்காரத் தோரணையிலும், அவன் ஓட்டி வந்த காரில் இருந்தும் அவர்களின் வசதி புரிபட விசாரிக்க ஆரம்பித்தவன், அர்ஜூனைப் பற்றி கேள்விப்பட்ட அந்த விநாடியே சப்த நாடியும் அடங்கி ஒடுங்க அமைதியாகி போனான்...

அர்ஜூனின் செல்வாக்கு இந்தியா முழுவதும் பிரபலம்... தொழில்வட்டாரத்தில் அவனை எதிர்ப்பவர்களை அவர்களுக்கே தெரியாமல் அழிப்பதில் கில்லாடி....

அவனின் ஒரே விரல் அசைவில் அரசியலே அடியோடு மாறக்கூடும் என்பதனை அறிந்திருந்த அரசியல்வாதிகளுக்குள் அவனின் அதிகாரத்தை நினைத்து எத்தனை பயம்?

அவனை அணுகுவது சிங்கத்தின் குகைக்குள் தனித்து செல்வது போல் என்று அவனைப் பற்றி பல விதமாக கேள்விப் பட்டவன் இருந்தும் மஹாவின் மேல் படிந்திருந்த தன் மனதை அகற்ற முடியாமல் கொஞ்சம் கொஞ்சமாக தான் காய் நகர்த்த வேண்டும் என்று முடிவு செய்தான்.

3:24 PM 48%
https://drive.google.com/file



அதன் படி அதிரடியாக மஹாரவை நெருங்க முயற்சிக்காமல் அவளை தன் கண்காணிப்பிலேயே வைத்திருந்தான்....

சிங்கத்தின் பாதுகாப்பில் இருந்த புள்ளி மானை சிங்கமும் அறியாமல் புள்ளி மானும் அறியாமல் வேட்டையாடும் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தான் அந்த குள்ள நரி....

ஒரு வழியாக மஹாவிற்கு புடவைக் கட்டி முடித்த திவ்யா அதற்கேற்றார் போல் சடைப் பின்னி, மல்லிகைச் சரத்தை சூட்டியவள்,

"மஹா அண்ணி... என்னமோ உங்கள பொண்ணு பார்க்க வராங்க போல் இருக்கு உங்கள பார்த்தா... ஒரு வேளை மாப்பிள்ளை யாராவது வந்தா உடனே உங்கள கல்யாணம் பண்ணிக்கிட்டு கூட்டிட்டு போய்டுவாங்க" என்று வெள்ளந்தியாக சிரித்தவாறே சொல்ல,

அவளின் வெள்ளை மனம் பார்த்த மஹாவிற்கு "ஏன் அண்ணனுக்கு இவங்களை பிடிக்கவில்லை? இவங்கள மாதிரி குழந்தை தனம் உள்ளவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் இந்த காலத்தில்?" என்றே தோன்றியது....

அவளின் யோசனையைப் பார்த்த திவ்யா...

"அண்ணி... இப்பவே கணவு காண ஆரம்பித்துவிட்டீர்களா?" என்ற கேட்க,

சட்டென்று வினோத்தின் முகம் மஹாவின் கண் முன்னே தோன்றியது...

48% 3:24 PM
https://drive.google.com/file

ஒரே ஒரு முறை தான் அவள் அவனை பார்த்திருந்தது...

அதன் பின் அவனை பார்க்கும் சந்தர்ப்பம் வரவில்லை.... இருந்தும் அவனின் முகம் கல்வெட்டு போல் அவளின் பூ மனதில் பதிந்திருந்தது....

அவனின் நினைவும் திவ்யாவின் பேச்சையும் கேட்டவளுக்கு நாணமும் சேர்ந்துக் கொள்ள, "போங்க அண்ணி" என்றவள் கண்ணாடியில் தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டவள்..

"கடவுளே, நான் பத்திரமா இந்த புடவையை இப்போ கட்டியிருக்கிற மாதிரியே திரும்பி வீட்டிற்கு வந்து சேர வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள்....

கீழே ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்த ஸ்ரீயும் பாலாவும் காலடி சத்தத்தில் நிமிர்ந்து பார்க்க, பெற்றவர்களின் கண்கள் ஆசையுடன் தழுவியது தங்கள் இளவரசியின் அழகிய தோற்றத்தை...

பெருமை வழியும் பார்வை பார்த்திருந்தவர்களை கண்ட மஹாவிற்கு வெட்கம் வர புடவையை அள்ளி பிடித்தவள் தன் அன்னையை நோக்கி ஓடி வந்து அணைத்துக் கொண்டாள்.....

அரக்கு நிறத்தில் நெய்யப்பட்ட சிறிய சரிகை போடப்பட்ட புடவையை அணிந்து சொர்ண விக்கிரகத்தை போல் இருந்த அவர்களின் செல்ல மகள் புடவையில் அத்தனை பாந்தமாக இருந்தாள்....

அடர்ந்த வண்ண புடவை அவளது சந்தன நிற மேனியில் ஒட்டி இருக்க பளிங்கு கல்லில் செய்த தேகம் போல் ஓவிய வடிவத்தில்

3:24 PM
https://drive.google.com/file



இருந்தவளின் லட்ஷணம் பெற்றோராய் அவர்களின் உள்ளத்தை பூரிக்க செய்தது...

ஸ்ரீயை அணைத்த படி நின்று இருந்தவளை தன் அறையில் இருந்து வெளி வந்த அருண் பார்க்க, பார்த்தவனிற்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை...

எப்பொழுதும் டாப்ஸ், ஜீன்ஸ் என்று அணிந்து வலம் வரும் தங்கையை முதன் முதலில் புடவையில் பார்க்கவும் அவளின் அழகு பண் மடங்காக அதிகரித்ததாகவே தோன்றியது அவனுக்கு...

"மாம், யாரு மாம் இவங்க? செம்மையாக இருக்காங்க?" என்று அழகாய் சிரிக்க...

"டேய் தங்கையை ஸைட் அடிப்பவன் உலகத்திலேயே நீ ஒருத்தன் தாண்டா" என்று ஸ்ரீ கிண்டலிடிக்க, அங்கே கலகலப்பு கூடியது....

"யூ லுக் வெரி ப்ரெட்டி ப்ரின்ஸஸ் [You look very pretty princess]" என்று கன்னத்தில் தட்டியபடியே அருண் கூற வெட்கத்தில் அவள் தலை குனிய,

"அச்சச்சோ இப்படி வெட்கம் எல்லாம் படாதம்மா.... காலேஜில் பசங்க தாங்க மாட்டாங்க" என்று மேலும் கிண்டல் அடிக்க முகம் சிவந்தவள் ஓடிப் போய் காரில் ஏறினாள்.

வழக்கம் போல் அருண் கல்லூரியில் அவளை இறக்கி விட தனியாக நடந்து வந்தவள் தன் தோழிகளைப் பார்த்து வேக அடியெடுத்து வைக்க...

3:24 PM 48%
https://drive.google.com/file



சொல்லி வைத்தார் போல் எங்கிருந்தோ பைக்கில் வந்த அந்த மாணவன் அவள் மேல் இடிப்பது போல் வர சட்டென்று நகர்ந்தவள் புடவை தடுக்கி கீழே விழுந்தாள்....

முதல் முறையாக தன் கனவுக் கன்னியை புடவையில் பார்த்த கோகுல் அவளின் அழகில் கிறங்கியவன் தன் நண்பனை அழைத்து அவள் கீழே விழ என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய சொன்னான்...

மனம் முழுவதும் அழுக்கு நிறைந்து இருந்த காமுகனுக்கு இதனை விட வேறு என்ன எண்ணங்கள் வரும்???

அவன் நினைத்தது போல் மஹாவும் கீழே விழ அவளின் தோழிகள் அவளை நோக்கி ஓடி வருவதற்குள் அவள் விழுந்திருந்த இடத்தை அடைந்த கோகுல் அவளுக்கு முன் தன் கரத்தை நீட்டினான்....

கீழே விழுந்த அதிர்ச்சியில் புடவை எங்கு விலகி இருக்குமோ என்ற கலக்கத்தில் இருந்தவளுக்கு கை நீட்டியவன் யாரென்று கூட பார்க்கத் தோன்றாமல் அவனின் கையைப் பிடித்து எழுந்தவளை நெருங்கியவன் ஆறுதல் சொல்வது போல் அவளின் இடைப் பிடிக்க, சட்டென்று சுதாரித்தவள் அவனை தள்ளி விட்டாள்....

"ஹே.. மஹா.. ரிலாக்ஸ்... நீ மேலும் விழுந்து விடாம இருக்கத் தான் நான் உன்னைப் பிடித்தது" என்று கூற,

அவனின் முகம் என்னவோ அவள் விழுந்ததை நினைத்து கலங்கியது போல் தான் தெரிந்தது....

H+ 1 48% 3:24 PM
https://drive.google.com/file
17



ஆனால் அவனின் கண்களில் ஏறிய பளபளப்பும், அதில் தெரிந்த அந்த வித்தியசமான மாற்றத்தையும் கண்டவள் அருவருப்புடன் முகம் சுளித்து விருட்டென்று தன் தோழிகளை அழைத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்....

இவ்வளவு நாட்கள் தூரத்தில் இருந்து அவளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவனுக்கு இத்தனை நெருக்கத்துடன், அதுவும் அவளின் இடையை முதன் முறையாக பற்றியிருந்தது அவனின் அடங்காத மோகத்தை இன்னும் தூண்டிவிட்டது...

கண்களில் இருந்து அவள் மறையும் வரை அவளின் பின்னழகை ரசித்து வேடனின் வேட்கையோடு பார்த்திருந்தவன் அவளை அடையும் நாளை எண்ணி கனவு காண ஆரம்பித்தான்.

ஆனால் அந்த நாள் எத்தனை விதமான ஆபத்தான அசந்தர்ப்பமான மனித் துளிகளை எத்தனை பேருக்கு கொண்டு வரப் போகிறது என்பதை அவன் அறியவில்லை.... அவனின் காமக் கண்கள் அதனை மறைந்திருந்தது...

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை.... அதிசயமாக வீட்டில் இருந்த அனைவரும் ஒன்றாக ஹாலில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தனர்...

எப்பொழுதும் தொழிற்களிலேயே தன்னை மூழ்கடித்து கொண்டு இருக்கும் அர்ஜூனிற்கு சனி ஞாயிறு என்றெல்லாம் கிடையாது...

அதே போல் தான் அருணும்...

3:25 PM

https://drive.google.com/file

மற்ற நாட்களில் கல்லூரிக்கு சென்று விடுபவன் விடுமுறை நாட்களில் அர்ஜூனிற்கு உதவி செய்வதற்காகவும், தொழிலை கற்று கொள்வதற்காகவும் அர்ஜூனுடனோ அல்லது தன் தந்தையுடனோ சென்று விடுவான்...

ஆக இன்று போல் அனைவரும் ஒன்று கூடி அமர்ந்திருப்பது எப்பொழுதாவது நடைபெறும் ஒரு எதிர்பாராத ஆச்சரியம்...

தந்தையுடனும் அருணுடனும் தீவிரமாக எதனைப் பற்றியோ ஆலோசித்துக் கொண்டு இருந்த அர்ஜூனை ஸ்ரீயின் தொண்டை கணைப்பு அவரை நோக்கி திசை திருப்பியது...

ஏனெனில் மும்பையில் இருந்து அர்ஜூன் திரும்பி வந்து இன்றோடு கிட்டத்தட்ட இருவாரங்களுக்கு மேல் ஆகியிருந்தது...

அவன் திரும்பி வந்ததில் இருந்து தன் திருமணத்தை பற்றியோ அல்லது திவ்யாவை அவள் வீட்டிற்கு அனுப்புவதை பற்றியோ பேசி இருக்கவில்லை...

ஆதலால் இது போல் இனி ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று தோன்ற...

"அர்ஜூன்... நானும் அப்பாவும் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம்பா... உன் கல்யாணம் தான் யாருக்கும் தெரியாம நடந்திடுச்சு.... பட் இன்னும் நம்ம சொந்தக்காரர்களுக்கு எல்லாம் நாம தெரியப் படுத்தல.... அப்புறம் திவ்யாவ யாருக்கும் தெரியாது... அதனால ஒரு கெட் டு கெதர் மாதிரி அரேன்ச் பண்ணி உங்க கல்யாணத்தை நம்ம

3:25 PM
https://drive.google.com/file



சொந்தக்காரங்களுக்கு அறிவிக்கலாம்னு இருக்கோம்... உனக்கு எப்போ ஒத்து வரும்னு சொல்லுப்பா" என்றார்....

இந்த விஷயம் யாருக்கு அதிர்ச்சியாக இருந்திருக்குமோ இல்லையோ ஆனால் திவ்யாவிற்கு பேரதிர்ச்சியாக இருந்தது...

தன் கணவன் அவளுடன் அதே வீட்டில் எப்பொழுதும் இருக்கிறானோ இல்லையோ ஆனால் இந்த இரு வாரங்களாக அவன் அமைதியாக இருக்கிறான்... அதுவே அந்த சின்ன பெண்ணிற்கு பெருத்த நிம்மதி...

இதில் இது வேறையா என்றே இருந்தது அவளுக்கு...

தன் மாமியார் பேசி முடித்ததும் சட்டென்று தன்னை அறியாமல் அர்ஜுனைப் திரும்பி பார்க்க, அவனும் அதே சமயம் அவளைப் பார்க்க சரேலென்று தலையை குனிந்துக் கொண்டாள்.

"எல்லாத்தையும் செய்து விட்டு ஆவுனா தலைய குனிஞ்சுக்கறா" என்று நினைத்தவன்,

"மாம்... வாட் டு யு மீன் [Mom.. What do you mean?] நீங்க என்ன பேசுறீங்கன்னு புரிஞ்சு தான் பேசுறீங்களா? இப்போ இது தேவையா? என்றான் அழுத்தமான குரலில்...

கேள்வி என்னவோ தன் அன்னையிடம் தான்... ஆனால் பார்வை இன்னும் தரையிலேயே புதைந்து விடும் அளவிற்கு தலை கவிழ்ந்து இருந்த தன் மனையாளின் மீது தான் இருந்தது....

3:25 PM 48%
https://drive.google.com/file



"அர்ஜூன்... யெஸ்.. இப்போ இது தேவை தான்.... கிட்ட தட்ட ஒன்றறை மாசம் ஆகப் போகுது உங்களுக்கு கல்யாணம் முடிஞ்சு.... நாம கண்டிப்பா உங்க கல்யாணத்தை பற்றி அனௌன்ஸ் பண்ணியே ஆகனும்.... இல்லைன்னா திவ்யாவ வெளியே அழைச்சுட்டு போகும் போது பார்க்கிறவங்க யாருக்கும் அவ யாருன்னு தெரியாது.... அது எப்பொழுதும் ஒரு கேள்வியாவே இருக்கும்... அவள எல்லோர்கிட்டையும் முறைப் படி அறிமுகப் படுத்தறது தான் சரி" என்றார் தன் மகனை விட அதிகாரமான குரலில்...

பின், ருத்ரமூர்த்தியின் பேரனுக்கே இத்தனை அதிகாரமும் கம்பீரமும் இருந்தால் அவரின் மகளிற்கு எத்தனை ஆளுமை இருக்கும்...

அவரின் கண்களை கூர்ந்து பார்த்தவன் சில நிமிடங்கள் மௌனமாக இருக்க, அந்த அறையில் தன் மாமியாரின் அருகில் அமர்ந்திருந்த திவ்யாவிற்கு ஒவ்வொரு நொடியும் ஏதோ ஆழ்கடலில் மூழ்கடித்துக் கொண்டு இருப்பது போல் மூச்சு திணறியது...

அவளை திரும்பியும் பார்க்காதவன் என்ன நினைத்தானோ வார்த்தைகளை கொட்ட ஆரம்பித்தான்...

"நோ மாம்... நான் டைவர்ஸ்க்கு லாயர் கூட டிஸ்கஸ் பண்ணிட்டு இருக்கிறேன்.... அதனால ப்ளீஸ் நீங்க இந்த மாதிரி அவசர முடிவு எதுவும் இனிமேலாவது எடுக்காதீங்க" என்று திவ்யாவின் தலையில் மட்டும் அல்ல, அங்கு கூடியிருந்த அனைவரின் தலையிலும் அலுங்காமல் குலுங்காமல் ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டான்....

"அவளை அவளுக்கு தெரியாமல் பார்க்கறதும், தனியா படுக்கை அறையில் அவளை நினைத்து கனவு கண்டுக்கிட்டும் இருந்துட்டு இப்போ இப்படி பேசுனா எப்படி அர்ஜூன்?" என்று மனசாட்சி கேள்விக் கேட்க,

https://drive.google.com/file



"அது எப்படி? இவங்களே முடிவு பண்ணி கல்யாணத்தை நடத்திடுவாங்களாம்.... அத நாம எதுவும் சொல்லாம ஏத்துக்கனுமாம்... இதுல இப்போ எல்லோருக்கும் அனௌன்ஸ் வேற பண்ணனுமாம்.... இது எப்படி இருக்கு?"

என்று அவனுடைய ஈகோ அவன் மனசாட்சிக்கு எதிராக பதில் கொடுக்க,

அவ்வளவு பெரிய இடியை எல்லோர் தலையிலும் போட்டு விட்டு ஒன்றும் தெரியாதது போல் இருந்த மகனைப் பார்க்க ஸ்ரீக்கே கோபம் கோபமாக வந்தது என்றால் திவ்யாவிற்கோ இதயமே நின்று விடும் போல இருந்தது.

தன் தனிப்பட்ட வாழ்க்கையில் தன் அன்னையின் ஆளுமை அவரின் அதிகாரம் அர்ஜூனிற்கு பிடிக்கவில்லை...

ஆனால் அதற்காக அவரை பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு தன் ஆழ் மனதை அறியாமலே தன் மனம் கவர்ந்தவளின் மலர் போன்ற மனதை பொசுக்கிக் கொண்டு இருந்தான்....

மலரினும் மெல்லியவளின் மிருதுவான மனதை கருக்கிக் கொண்டு இருந்தான் அவளின் கணவன்...

இத்தனை நாட்கள் அவன் அரவம் எதுவும் இல்லாமல் திருமணத்தை பற்றி விவாதிக்காமல் இருக்க சிறிதே தெளிந்து இருந்தவளுக்கு அவனின் விவாகரத்து என்று வார்த்தை மீண்டும் உணர்த்தியது...

3:25 PM
https://drive.google.com/file



நிலை இல்லாத தன் இல்லற வாழ்க்கையின் போக்கை...

ஹாலில் இருந்த ஒருவரையும் பார்க்காமல் சட்டென்று எழுந்தவள் விடுவிடுவென்று மாடியேறி தன் அறைக்குள் நுழைந்தவள் சத்தம் வராமல் வாயை மூடிக் கொண்டு கதறினாள்.....

அவள் அவ்வாறு செல்லவும் வலிக்க வலிக்க தன் மகன் தன் மனையாளை வார்த்தைகளால் அடிப்பதை பார்த்த ஸ்ரீ,

"அர்ஜூன்... நீ என்ன பேசுறேன்னு தெரியுதா? வேணும்னா வச்சுக்கிறதுக்கும் வேண்டாம்னா வெட்டிவிடறதுக்கும் கல்யாணம் என்கிறது விளையாட்டு இல்ல அர்ஜூன்... நீ சொல்றது கொஞ்சம் கூட மனதாபிமானமே இல்லாத ஒரு விஷயம்... ஒரு சின்ன பொண்ணுக்கு நாம செய்ற பாவம்... உனக்கும் ஒரு தங்கச்சி இருக்கு.. அவளுக்கு இந்த மாதிரி நிலைமை வந்தா என்ன பண்ணுவ?" என்றார் முகம் சிவக்க ஆத்திரத்தில்...

"மாம் இன்னும் பழைய காலத்து அம்மா மாதிரி பேசாதீங்க.... மாப்பிள்ளை ஓடிப் போய்ட்டா கல்யாணத்திற்கு வந்த யாரோ ஒருத்தன என் தங்கைக்கு நான் கல்யாணம் பண்ண அவ ஒன்னும் சீப் இல்ல.."

வார்த்தைகளில் மேலும் விஷத்தை கக்கினான் அவர் மகன்...

ஆனால் நல்ல வேளை அதற்குள் அவன் மனைவி அவளின் அறையை அடைந்து கதவை சாத்தியிருந்தாள்...

"அர்ஜூன்... வார்த்தைய அளந்துப் பேசுப்பா... திவ்யா மட்டும் என்ன சீப்பா? உங்க அம்மா அவ அம்மாவோட க்ளோஸ் ஃப்ரெண்டுங்கிற ஒரே காரணத்தில் தான் அவள் உன் கையால தாலி வாங்க

3:25 PM 47%
https://drive.google.com/file



சம்மதிச்சிருக்கா.... அம்மா சொல்லலை, அப்படியும் அவள் அந்த பையன் கல்யாணம் வேண்டாம்னு சொன்னவுடனே தற்கொலை தான் பண்ண போயிருக்கா.... யாராவது கல்யாணத்திற்கு வந்தவன் நம்மளை கல்யாணம் பண்ணிக்குவான் அவ மணமேடையிலையே உட்கார்ந்து இருக்கலை" என்று தன் கோபத்தை அடக்கியவாறே கூறினார் பாலா....

"நோ டாட்... இதுக்கு மேலே என்னைய கம்பெல் பண்ணாதீங்க" என்று கூறியவன் விறுட்டென்று எழுந்து இரண்டு இரண்டு படிகளாக தாவி தன் அறைக்கு சென்று படீரென்று வேகமாக கதவை அடைக்க, அந்த சத்தம் மூடியிருந்த கதவின் வழியே திவ்யாவிற்கு நன்றாக கேட்டது....

"இவ்வளவு கோபம் என் மேலே ஏன்? அப்படி நான் என்ன பாவம் செஞ்சேன்?" என்று அவள் மௌனமாக அழுது கரைய, அங்கே அர்ஜூனோ குறுக்கும் நெடுக்குமாக தன் அறைய அளக்க, அவன் மனசாட்சியோ மீண்டும் மீண்டும் அவனைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டது....

"அர்ஜூன்... நீ அந்த பொண்ணோட ஃபோட்டோவை தினம் ஒரு தடவையாவது பார்த்து ரசிக்கிற... வெளியில போகும் போழுது அவளுக்கே தெரியாமல் அவளை கண்களாலேயே முழுங்கிவிடுவது போல் பார்க்கிற.... அப்போ அதற்கெல்லாம் என்ன அர்த்தம்? எங்கிருந்துடா வந்தாங்க லாயர்? எப்போ அவங்ககிட்ட நீ டைவர்ஸ் பற்றி பேசின? என்க,

இரு கரங்களாலும் தன் தலையை இறுக்க பிடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவனின் இதயத்திற்கும் மூளைக்கும் அங்கு ஒரு பெரிய யுத்தமே நடந்துக் கொண்டு இருந்தது...

திவ்யாவை அவனுக்கு பிடித்திருந்தது... அவளை அவளுக்கு தெரியாமல் ரசிக்க பிடித்து இருந்தது... தன் மனதில் அவளின் உருவம் பதிந்து போனதையும் அவன் உணர்ந்தே இருந்தான்...

47% 3:25 PM
https://drive.google.com/file



ஆனால் இன்னும் ஏன் என் மனது அவளை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது?

"மாமை பழிவாங்குவதாக நினைத்து கொண்டு அவளை பழி வாங்குகிறேனா???"

ஏற்கனவே குழம்பி தத்தளத்து தடுமாறி இருந்த அவனது மனது இன்று அவன் அன்னையின் பேச்சில் மேலும் குழம்பியது.

ஒரு முடிவும் எடுக்க முடியாமல் மனக்குழுப்பத்தில் திகைத்து போய் அப்படியே கட்டலில் அமர்ந்து தன் தலையை பிடித்து இருந்தவன் வெகு நேரம் யோசித்தும் ஒரு முடிவு எடுக்க முடியாமல தடுமாறினான்...

எந்த நிலையிலும் நிதானமாகவும் அதே சமயம் துரிதமாகவும், சில நேரங்களில் தயவு தாட்சண்யம் ஏதுமின்றியும், பதட்டங்கள் ஏதுமின்றியும் சர்வ சாதாரணமாகவே முடிவுகளை தீர்மானித்து இருந்தவன் இன்று சங்கடத்தில் அகப்பட்டது போல் தத்தளித்து இருந்தான்...

புத்திக்கும் மனதிற்கும் இடையில் கிடந்து தவித்தது அவனது இதயம்....

மறுநாள் கீழே இறங்கியவனுக்கு தன் அன்னை யாரிடமோ தொலை பேசியில் பேசியது கேட்டது...

"ஆமாம் வனிதா... இது ஒரு சின்ன கெட் டு கெதர் தான்... நம்ம குடும்பத்தில் இருப்பவர்களை மட்டும் தான் இன்வைட் பண்றேன்....

கண்டிப்பா குடும்பத்தோட வந்துடனும்... இன்னும் இடம் முடிவு ஆகலை.... முடிவு செஞ்சோனே மறுபடியும் கூப்பிடுறேன்" என்றார்....

அர்ஜூனுக்கோ என்ன பேசுவதென்றே தெரியவில்லை....

தான் அவ்வளவு சொல்லியும் இவர் தன்னிஷ்டம் போல் தான் செய்கிறார் என்று நினைத்தவன் எதுவும் பேசாமல் யோசனையுடன் டைனிங் டேபிளில் அமர, அவனைப் பார்த்த திவ்யா வேகமாக ஸ்ரீயிடம் சென்றவள் அர்ஜூன் சாப்பிட அமர்ந்திருப்பதை தெரிவித்தாள்....

"திவ்யா... நான் பிஸியா இருக்கேன்.... நீயே அவனுக்கு சாப்பாடு எடுத்து வை" என்று அர்ஜூனைப் பார்த்தவாறே ஸ்ரீ சொல்ல...

அதனைக் கேட்ட அர்ஜுன் அடங்காத ஆத்திரத்தில் விருட்டென்று எழுந்தான்....

அங்கு அவனுக்கும் அவன் அன்னைக்கும் இடையே கிட்டத்தட்ட ஒரு போராட்டமே நடந்துக் கொண்டு இருந்தது...

அவனின் கோபத்தைக் கண்ட திவ்யாவிற்கு அவன் உணவு வேறு அருந்தாமல் வெளியே செல்ல எத்தனிப்பதைக் கண்டு மனம் பதற தன் அச்சத்தை ஒதுக்கி வைத்து அவன் அருகில் வந்தாள்...

இது வரை அவன் வீட்டினுள் நுழையும் பொழுது அவள் சமையல் அறையில் பதுங்கி கொள்வாள்...

அவன் ஹாலில் அமர்ந்திருந்தாலோ அல்லது வீட்டில் வேறு எங்கும் இருந்தாலோ மஹாவின் அறையே கதி என்று கிடப்பாள்...

3:26 PM 47%
https://drive.google.com/file


ஆனால் இன்று தன் கணவனின் பசி அறிந்து தன் பயத்தை தன்னிடம் இருந்து கொஞ்சமே கொஞ்சம் அகற்றி வைத்தவள் தன்னால் முடிந்த அளவு தைரியத்தை திரட்டி முதல் முறையாக அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்து..

"உ.... உங்களுக்கு என்ன விருப்பமோ அதை நீங்க செய்யுங்க.... நான் உங்க எந்த முடிவுலையும் தலையிட மாட்டேன்.... ஆனால் கோபத்தை சாப்பாட்டில் காட்டாதீங்க... உ.... உட்காருங்க" பதட்டத்துடன் தடுமாறியவாறே கூறியவள்...

அவனுக்கு தட்டையும் எடுத்து வைத்து காலை உணவான இட்லியையும் தக்காளி சட்னியையும் எடுத்து வைத்தாள்.....

அவன் உள்ளம் முழுவதும் தன் அன்னையின் அலட்சியத்தால் அடி பட்டு சினம் சூழ்ந்து இருந்தாலும் தன் வாழ்க்கையில் முதல் தரம் தன் மனைவி தன்னிடம் யாசிப்பது போல் கேட்டிருந்ததைக் கண்டவன் தன் கூரிய பார்வையை அவளை விட்டு ஒரு நொடி கூட அகற்றாமல் அவளின் சொற்களுக்கு அடி பணிந்தான்...

தன்னை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த தன் கணவன் தன் பேச்சிற்கு மறு பேச்சு பேசாமல் மௌனமாக உணவு அருந்த அமர திவ்யாவிற்கு தான் அப்பாடி என்றிருந்தது....

அவன் உண்ட பின் கை கழுவியவன் வழக்கம் போல் அவளுக்கு தெரியாமல் அவளைப் திரும்பி பார்க்க, அதே சமயம் அவன் தட்டை எடுத்துக் கொண்டு வந்துக் கொண்டு இருந்தவள் எதேச்சையாக அவனைப் பார்க்க கண்ணும் கண்ணும் நோக்கியது....

Message from +94 77 082 9535 @ Sri

https://drive.google.com/file



அவனின் அம்பு போன்ற பார்வையின் கூர்மையில் பெரிதும் நெளிந்தவளின் உடலெங்கும் அச்சம் ஆட் கொண்டது....

அவனது அழுத்தமான பார்வை அவளுக்கு எதனையோ சொல்லாமல் சொல்லியது...

அதன் விளைவாக அவளது சிந்தனை ஓட்டமும் தடைப் பட்டது...

அதன் பலன்?? அவன் பார்வையின் அர்த்தம் அவளுக்கு இன்றும் விளங்கவில்லை...

தன் கணவனின் பெயரைக் கேட்டாலே மனம் பதற உடலில் உதறல் எடுக்க எழுந்து நிற்பவளுக்கு அவனின் ஆழ்ந்த பார்வையின் அர்த்தம் எங்கனம் புரியும்....

ஆனால் அவன் இன்னும் அவள் மீது படிந்து இருந்த விழிகளின் போக்கை மாற்றவில்லை... அதில் விஷமமே நிறைந்து இருந்தது...

தன் கணவனின் விபரீத பார்வையில் அவள் இதயம் கண வேகத்தில் அடித்துக் கொள்ள உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாததால் பெரிதும் சங்கடத்தில் அகப்பட்டு தத்தளிக்கவே செய்தவள் மித மிஞ்சிய கட்டுப்படுத்த முடியாத சங்கடத்தால் அகப்பட்டு தன் பார்வையை அவனை விட்டு அகற்றினாள்..

தன் மனையாளின் உணர்வுகளை அவளின் மனதிலோடிய எண்ணங்களைப் புரிந்துக் கொண்டவன் போல் கண்களில் வழியும் சிரிப்புடன் அந்த இடத்தை விட்டு அகன்றான்...

Saving screenshot...

https://drive.google.com/file



இவற்றை எல்லாம் தொலைப் பேசியில் பேசியபடியே பார்த்துக் கொண்டு இருந்த ஸ்ரீ...

"அர்ஜூன்... உன்னை பெத்தவ டா நான்.... எனக்கு தெரியாதா உனக்கு என்ன பிடிக்கும்? என்ன பிடிக்காதுன்னு" என்று நினைத்தவர் தன்னுடைய பட்டியலில் மீதம் இருந்தவர்களை அழைக்க ஆரம்பித்தார்.

மலரினும் மெல்லியவள்!

தொடரும்...

3:27 PM
https://drive.google.com/file



மலரினும் மெல்லியவள்!

பாகம் - 9

மளமளவென்று ரிஷப்ஷனிற்கு வேண்டிய அனைத்தையும் ஸ்ரீயும், அருணும், பாலாவும் ஏற்பாடு செய்ய, அவர்களை அர்ஜூன் தடுக்கவுமில்லை.... எதிர்த்து பேசவும் இல்லை....

அதுவே ஸ்ரீயை ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருந்தது...

"அன்று தான் என்னமோ டைவர்ஸுக்கு அரேஞ் பண்ணிட்டு இருக்கேன்னு சொன்னான்.... இப்போ என்னாடான்னா ஒன்னுமே பேசாம இருக்கான்.... நிச்சயம் அவனுக்கு திவ்யா மேலே ஒரு ஆர்வம் வந்திருக்கு" என்று நினைத்தவர் அவர்கள் இருவரையும் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்....

தன் மகன் திவ்யாவை அவ்வப்பொழுது பார்ப்பதும், அவள் அவனைப் பார்த்ததும் அவன் தன் பார்வையை மாற்றுவதும் அவர் கண்ணிலும் பட்டுக் கொண்டு தான் இருந்தது.

தன் மகனிற்கு அவன் மனைவியின் மீது ஒரு ஈர்ப்பு வந்திருப்பது போல் தோன்ற மனதிற்கு சிறு அமைதி உண்டாக அந்த நிம்மதியுடனே அவர் ரிஷப்ஷனிற்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட ஆரம்பித்தார்....

ரிஷப்ஷனிற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே மஹாவும் திவ்யாவை அழகு நிலையத்திற்கு அழைத்துச் செல்வது, அவளுக்கு நிகழ்ச்சிக்கான ஏற்ற புடவைகள் எடுப்பது, எடுத்த புடவைகளுக்கு

3:27 PM 47%
https://drive.google.com/file



பொருத்தமான அணிகலன்கள் வாங்குவது என்று நாட்களும் வேகமாக ஓடியது.

அர்ஜூனையும் திவ்யாவையும் தவிர ஸ்ரீயும் மற்றவர்களும் ஆர்வமாக எதிர்பார்த்திருந்த அந்த அழகான நாளும் வந்தது....

ஒரு நட்சத்திர ஹோட்டலில் தான் ரிஷப்ஷனிற்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள்....

பல மணி நேரங்களுக்கு முன்னதாகவே பாலாவும் அருணும் விழாவின் ஏற்பாடுகளை கண்காணிக்க சென்று இருக்க, திவ்யாவிற்காகவும் மஹாவிற்காகவும் காத்து இருந்த ஸ்ரீக்கே பொறுமை குறைய ஆரம்பித்து இருந்தது என்றால் அர்ஜூனின் நிலைப் பற்றி சொல்லவும் வேண்டுமா என்ன?

அம்மாவும் பிள்ளையும் கீழே ஹாலில் இருந்த ஸோஃபாவில் கிளம்பி தயாராக அமர்ந்து இருக்க இன்னும் திவ்யாவும் மஹாவும் தங்கள் அறையை விட்டு வெளியே வந்தபாடு இல்லை...

"மஹா.... என்னம்மா பண்றீங்க? கெஸ்ட் எல்லாரும் வந்ததற்கு அப்புறம் போலாம்னு சொல்றீங்களா? சீக்கிரம் வாங்க" என்று கீழிருந்து ஸ்ரீ சத்தம் போட,

ஏற்கனவே பல விதமான எண்ணங்களில் சிந்தனைகளில் உழண்டுக் கொண்டு இருந்த அர்ஜூனின் டென்ஷன் இன்னும் அதிகமாகனதே தவிர குறையவில்லை.... முகம் கடுகடுத்து அமர்ந்திருந்தான் அவன்...

அதனைப் பார்த்த ஸ்ரீக்கோ...

3:27 PM 47%
https://drive.google.com/file



"கடவுளே! இவன் இந்த ஃபங்ஷனுக்கு சம்மதிச்சதே பெரிசு... டைவர்ஸ் கிவர்ஸ்ன்னு சொன்னவன், அதற்கப்புறம் அதைப் பற்றியே வாய திறக்காமல் இப்போது அமைதியாக கிளம்பி வேறு உட்கார்ந்து இருக்கிறான்... இப்போ இந்த பொண்ணுங்க வேற என்னன்னா நிலைமை தெரியாம... சே" என்று மனதிற்குள் அஞ்சி இருக்க.....

தொழில் சம்பந்தமான கூட்டங்கள் ஆகட்டும், அரசியல்வாதிகளை சந்திப்பது ஆகட்டும் அல்லது மற்ற நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர்களின் சந்திப்பாகட்டும்.... அனைவரும் அர்ஜூனிற்காக அவர்கள் தான் முன்னரே வந்து காத்திருப்பார்கள்...

அவனுக்கு யாரையும் எதிர்பார்த்திருப்பதோ அல்லது அவர்களின் வரவை எதிர்பார்த்துக் காத்து இருப்பதோ கொஞ்சமும் பிடிக்காது...

ஆனால் அதே சமயம் நேரத்தின் அருமை நன்கு தெரிந்தவன்... காலந் தவறாமையில் அவனை மிஞ்சுபவர்கள் எவரும் இல்லை...

அப்படி இருக்க அதுவும் இப்பொழுது இந்த விழாவிற்கு செல்வதற்கே அவனுக்கு விருப்பம் இல்லாத போது இதில் திவ்யாவிற்காக நான் காத்து இருப்பதா என்று கொந்தளித்துக் கொண்டிருந்தான் கோபத்தில்....

ஸ்ரீ சொல்லியும் அவர்கள் வருவதைப் போல் தெரியாததால் பொறுமை இழந்தவன் கத்த ஆரம்பித்தான்....

3:28 PM 47%
https://drive.google.com/file



"மாம்.. பேசாம நீங்க எல்லாரும் ஒன்னா வாங்க... நான் கிளம்புகிறேன்" என்றவனின் முகம் முழுவதும் எரிச்சல் மண்டியிருந்தது....

"கிழிஞ்சுது போ" என்று மானசீகமாக ஸ்ரீ தலையில் கை வைக்கவும் மஹாவின் அறைக் கதவு திறக்கவும் நேரம் சரியாக இருக்க கதவு திறந்த சத்தத்தில் எதேச்சையாக மாடியை நோக்கியவனின் புருவங்கள் வியப்பால் உயர்ந்தன என்றால் அவன் கண்களிலிலும் வியப்பு ஊருறுவி நின்றது... அவை சிமிட்டவும் மறந்து போனது.....

அங்கு மயில் கழுத்தின் நிறத்தில் பட்டுப் புடவையும் அதில் அகல கரையிட்ட தங்க ஜரிகையும், மயில் கழுத்தின் நிறத்திலும் அதனுடன் தங்க கம்பிகள் பின்னி பிணைந்திருந்த விதத்தில் செய்யப்பட்ட நகைகளையும் அணிந்து மஹாவின் கை வண்ணத்தால் அலங்கரிக்கப்பட்டு வானில் இருந்து இறங்கி வரும் தேவதைப் போல் மாடிப் படிகளில் வந்துக் கொண்டு இருந்தாள் அவனின் மனையாள்...

அர்ஜுன் தன் வாழ்க்கையில் எத்தனையோ பெண்களை பார்த்திருக்கிறான்... அவர்களை கடந்தும் வந்திருக்கிறான்... ஆனால் ஒருவரிடமும் அவன் தன் மனதை பறிக்கொடுத்திருந்தது இல்லை....

ஆனால் இன்றோ?

எளிமையான முக அலங்காரத்தில், இதழ்களில் லேசான உதட்டுச்சாயம் பூசியிருக்க, தலை நிறைய மல்லிகைப் பூவைச் சூடி, உச்சி வகிட்டில் சிறியதான நெற்றி சுட்டியை அணிந்து அதில் விளக்கின் (light) வெளிச்சம் பட்டதால் கற்கள் மின்ன, முன் நெற்றியில் ஒட்டிக் கொண்டு இருந்த அவளின் முடி அவளுக்கு தனி அழகைக் கொடுக்க அன்னமென நடந்து வந்தவளின் அழகில் கிறங்கி போனவனின் கண்கள் நிலைத்தது நிலைத்தப்படி நின்றுவிட்டன...

3:28 PM 47%
https://drive.google.com/file



தன்னவளைக் கண்டதும் அவன் முகத்தில் விரிந்த விரிப்பையும் பிரமிப்பையும் ஸ்ரீ கவனிக்க தவறவில்லை அதனால் அவரின் உதட்டிலும் விஷமச் சிரிப்பு உதிர்க்கவே செய்தது...

மாடியில் இருந்து இறங்கி கொண்டு இருந்தவள் தன் மாமியாரைப் பார்த்து புன்னகைத்தவள் பின் தன் கணவனைப் பார்க்க, தன்னை கண்களால் பருகியபடியே நிற்கும் கணவனைக் கண்டவளின் முகத்தில் அளவு மிகுந்த நாணமும் அதனால் வெட்கச் சிவப்பும் மண்டிவிட அவளின் முக மாற்றத்தில் தன்னை தொலைத்தான் அர்ஜூன்...

அவனின் ஆளை விழுங்கும் பார்வையைக் கண்டவள் நிலைக்குலைந்து தனது அடி இதழை மடித்து லேசாக கடித்துக் கொள்ள அதில் அவளின் அபரிதமான அழகும் இன்னும் ஆழமான கன்னக் குழியும் அவனுக்குள் தன் பணியை விபரீதமாக செய்துக் கொண்டு இருந்ததால் அர்ஜூனின் இதயத்தை அப்படியே அபகரித்துக் கொண்டன.

மெல்ல அவர்களை நெருங்கியவள் சன்னமான குரலில்...

"மன்னிச்சுக்கங்க அத்தை... கொஞ்சம் நேரம் ஆகிடுச்சு" என்க...

அதில் அவள் உதடுகள் விரிந்து உதிர்த்த வார்த்தையிலும் அவன் உள்ளம் சிக்கி கவிழ்ந்தது...

தன் மகனின் ஒவ்வொரு அசைவையும் சில நாட்களாக கூர்ந்து கவனித்து வந்த ஸ்ரீ இன்று அவன் தன் மனைவியை தன்னையும் அறியாமல் இரசித்து சிலையாக நின்று பார்த்துக் கொண்டு இருப்பதைப் கண்டவருக்கு இவர்கள் இணையும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்றே தோன்றியது...

https://drive.google.com/file

உணர்ச்சி ததும்ப நின்றுக் கொண்டு இருந்தவனை நோக்கி "என்னப்பா அர்ஜூன் போகலாமா?" என்று குறும்பு சிரிப்பு சிரிக்க, அவரின் வார்த்தைகளில் சடுதியில் சுய நினைவிற்கு வந்தவன் திரும்ப எத்தனிக்க....

"சாரிம்மா... கொஞ்சம் லேட்டாகிடுச்சு.... அண்ணி தான் இந்த மேக்கப் வேண்டாம், அந்த மேக்கப் வேண்டாம், இது ரொம்ப ஓவரா இருக்குன்னு படுத்திட்டாங்க.... எனக்கு என்னமோ இன்னும் கொஞ்சம் மேக்கப் போட்டால் போட்டோஸ்ல இன்னும் நல்லா இருக்கும்னு தோணுது" என்றாள் மஹா....

"இல்ல.. இதே நல்லா இருக்கு... போதும்" என்று சட்டென்று அர்ஜூன் சொல்லவும் ஸ்ரீயின் கண்களும் மஹாவின் கண்களும் அவனை சடாரென்று மயங்கி விழுந்து விடும் அளவிற்கு ஆச்சரியமாக நோக்கியதென்றால் திவ்யாவோ தலை கவிழ்ந்தவள் நிமிரவே இல்லை...

சிர்த்துக் கொண்டவர்....

"ஆமாம் மஹா... இந்த லைட் மேக்கப்பே ரொம்ப அழகா எடுப்பா இருக்கு திவ்யாவுக்கு.... சரி கிளம்பலாம்.... சீக்கிரம் காரில ஏறுங்க" என்று சொல்லிவிட்டு முன்னர் நடக்க, அவரைத் தொடர்ந்து மஹாவும் திவ்யாவும் நடக்க, அவர்களின் பின்னால் தன் மனைவியை ரசித்தவாரே வந்துக் கொண்டு இருந்தான் அர்ஜூன்.....

அவர்கள் வீட்டின் வாயிலை தாண்டி காரை நோக்கி நடக்க, திடீரென்று வீசிய காற்றில் தன்னவளின் தலையில் அவள் சூடியிருந்த மல்லிகைச் சரத்திலிருந்து மலர்கள் சில உதிர...

H+ 1 47% 3:28 PM
https://drive.google.com/file 17



அவளை தொடர்ந்து சென்றுக் கொண்டு இருந்தவன் மலர்கள் உதிர்ந்துவிடவே எதிர்பாராமல் அந்த மலர்களின் மீது தன் கால்கள் பட நடக்கப் போனவன் தன்னிச்சையாக தன் பாதங்களை சில அடி தாவி தள்ளி வைத்து நடந்தான்...

மலரினும் மெல்லிய தன்னவளின் சிகையில் சில மணி துளிகளே உறவாடி இருந்தாலும் இப்பொழுது தரையில் உதிர்ந்து கிடக்கும் மலர்களை கூட அவன் கசக்க விரும்பவில்லை!!!!! அவள் சூடிய மலர்களையே கசக்க விரும்பாதவன் அவளையா கசக்க போகிறான்.....

அந்த நட்சத்திர ஹோட்டல் அலங்கார விளக்குகளால் ஜொளித்துக் கொண்டிருந்தது.....

Welcome to the Wedding Reception of

Arjun & Dhivya

Warm welcome by

A.K Group of Companies

ரிஷப்ஷன் வரவேற்பு பலகை பார்ப்பவர்களின் கண்களை பறிக்கும் விதத்தில் அழகாக மலர்களால் அலங்கரிக்கப் பட்டு ஹோட்டலின் வாயிலில் வைக்கப் பட்டிருந்தது....

அர்ஜூனின் திருமணம் தான் எதிர் பாராமல் அவன் அன்னையை தவிர மற்ற குடும்பத்தினர் ஒருவரும் அருகில் இல்லாமல்

H+ 1 47% 3:28 PM
https://drive.google.com/file 17



நடந்தேறியது ஆதலால் திருமண வரவேற்பாவது மிகவும் பிரம்மாண்டமாக நடக்க வேண்டும் என்று எண்ணிய ஸ்ரீயும், பாலாவும் பணத்தை தண்ணீர் போன்று வாரி இறைத்திருந்தனர்....

நெருங்கிய சொந்தத்தினரை மட்டும் தான் அழைக்க வேண்டும் என்று முதலில் ஸ்ரீ முடிவு செய்திருந்தார்...

ஆனால் வரவேற்பு விழாவே வேண்டாம் என்று எதிர்ப்பான் என்று நினைத்துக் கொண்டிருந்த அர்ஜூனே ஒன்றும் சொல்லவில்லை என்பதாலும் ஒருவரை விட்டு ஒருவரைக் அழைக்க முடியாது என்பதாலும் அவரின் விருந்தினர்கள் பட்டியல் அதிகரித்து இருந்தது...

ஆதலால் அவர் முன் குறித்து இருந்ததை விட உறவினர்கள் நிறைய பேரை அழைத்திருந்தார்.... அது மட்டும் இல்லாமல் திவ்யாவின் குடும்பத்தையும், கலாவிற்கும் சிவசுப்ரமணியத்திற்கும் வேண்டிய நெருங்கிய சொந்த பந்தங்களையும் அழைத்திருந்தார்....

ஆகையால் அந்த நட்சத்திர ஹோட்டலே விருந்தினர்களாலும், சிறுவர், சிறுமியர்களாலும் இளையவர்களாலும் நிரம்பி வழிந்து களை கட்டியது....

திருமணம் முடிந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியிருக்க, திருமணத்திற்கு மறு நாள் திவ்யாவை பார்த்தது தான் திவ்யாவின் பெற்றோரும், தமையனும்... அதற்கு பின் தொலைப் பேசியில் அவ்வப்பொழுது பேசி நலம் விசாரித்துக் கொள்வார்கள்.... அவ்வளவே....

இரண்டு மாதங்கள் கழித்து தங்கள் மகளை காணப் போகும் சந்தோஷத்தில் கலாவும் சிவசுப்ரமணியமும் இருந்தார்கள் என்றால் தன்

3:28 PM 47%

https://drive.google.com/file



பிரியமான தங்கையைப் பார்க்கப் போகும் மகிழ்ச்சியில் நிறைந்து இருந்தான் வினோத்....

ஒரு பக்கம் அவனின் அன்பு தங்கை மறுபுறம் பார்த்த முதல் நாளே அச்சாணிப் போல் தன் இதயத்தில் பதிந்திருந்த தன்னவள்... அவனின் சந்தோஷத்தின் அளவைப் பற்றி சொல்லவா வேண்டும்....

கலாவிற்கும் சிவசுப்ரமணியத்திற்கும் திவ்யாவை திருமணத்திற்கு மறுநாள் ஸ்ரீயின் வீட்டில் பார்த்ததில் இருந்து, அவர்கள் வசதியை கண்கூடாக கண்டதில் இருந்து ஒரு வித கலக்கம் இருந்துக் கொண்டே இருந்தது....

என்ன தான் திவ்யா தான் சந்தோஷமாக இருப்பதாக தொலை பேசியில் சொல்லியிருந்தாலும் அவள் கஷ்டமோ நஷ்டமோ தன் சோகங்களை தனக்குள் எப்பொழுதும் புதைத்துக் கொள்ளும் பெண் ஆதலால் நேரில் அவளைக் காணும் வரை அவர்களுக்கு நிம்மதி இல்லை...

தங்கள் ஊரில் இருந்து நேரே ஹோட்டலுக்கு வந்திருந்தவர்கள் வரவேற்பறையில் அவர்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர்...

ஒரு வழியாக அவர்கள் நெடுநேரம் எதிர்பார்த்திருந்த அர்ஜூனின் கார் ஹோட்டலின் உள்ளே நுழைந்தது...

காரைப் பார்த்ததுமே தன் மகளை பார்க்க போகும் ஆர்வத்தில் கலாவின் கண்கள் பனிக்க, காரில் இருந்து அர்ஜூன் இறங்க, ஸ்ரீயும் அவர்கள் பின்னையே திவ்யாவும் மஹாவும் இறங்க கலாவிற்கு தன் மகளைப் பார்த்ததும் கண்களின் ஆனந்த கண்ணீர் வர ஆரம்பித்தது.

47% 3:29 PM
https://drive.google.com/file



இந்த இரண்டு மாதங்களில் நன்றாக நிறம் கூடி, சிறிது சதை கூடப் பிடித்து அழகாக பட்டுப் புடவையில் தேவதைப் போல இறங்கி வந்த மகளைப் பார்க்க பார்க்க அவர் தாய் உள்ளம் பெருமையில் பூரித்தது...

அவர்களின் அருகில் சென்ற கலா, அர்ஜுனைப் பார்த்து "மாப்பிள்ளை, நல்லா இருக்கீங்களா?" என்க,

"ம்" என்று மட்டும் சொன்னவன், வேறு எதையும் பேசவில்லை....

ஸ்ரீயிடம் சென்றவர் முகமெல்லாம் பூரிப்புடன்...

"எப்படிடி ஸ்ரீ இருக்க? ஃபங்ஷன் ரொம்ப பிரம்மாண்டமா அரேஞ்ச் பண்ணிருக்க... ரொம்ப சந்தோஷமா இருக்குடி" என்றார்....

அவரின் கரத்தை பற்றிய ஸ்ரீ,

"இது நம்ம பிள்ளைங்க விஷேஷம் கலா... நாம கனவு கண்ட மாதிரி உன் பெண்ணை என் பையனுக்கு எடுத்து இருக்கோம்... இந்த அளவிற்கு கூட க்ராண்டா பண்ணலைன்னா எப்படி டி? என்க...

சிலிர்த்தவர் திரும்பி மகளை பார்க்க, தன் அன்னையையே வைத்த கண்கள் வாங்காமல் பார்த்திருந்த திவ்யாவை பார்த்தவர் "திவ்யா" என்று அவளை கட்டி அணைத்துக் கொண்டார்....

3:29 PM
https://drive.google.com/file



"ஐயோ! அண்ணியோட புடவை கசங்கப் போகுது... ரொம்ப நேரம் ஆச்சு எனக்கு அவங்கள ரெடி பண்றதுக்கு.... நீங்களே கலைச்சி விட்டிருவிங்க போல" என்று மஹா அலற...

சுற்றி இருந்த அனைவரும் சிரிக்கவும் அவர்களை கண்டு நாணமுற்றவள் உள்ளுணர்வு உணர்த்த திரும்பி பார்க்க அங்கு வினோத்தின் கண்கள் அவளையே வண்டு போல் மொய்த்திருந்தது...

தன்னை ஊசி போல் துளைக்கும் பார்வையை பார்த்தவள் நிலைக் குலைந்து தவிக்க, அவளின் முக மாறுதல்களை சடுதியில் தன் மனதில் குறித்துக் கொண்டவன் ஆனந்தத்தில் திளைத்திருந்தான்...

தன்னவளைக் கண்டுக் கொண்டதில்...

அதில் அவன் உதடுகள் சில்மிஷமாய் விரிய தன் எண்ணங்களை அவன் கண்டுக் கொண்டதில் சங்கடத்தில் நெளிந்தவள் சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டு ஹோட்டலிற்குள் நுழைய முற்பட, ஸ்ரீ....

"மஹா, நீ போய் ரிஷப்ஷனில் நின்று வர கெஸ்டுகளை கவனிம்மா" என்றார்....

அது தான் அவளுக்கு நிரம்ப பிடிச்ச விஷயமாச்சே....

உடனே சரி என்றவள் துள்ளி குதித்து ஓட, வினோத்தைப் பார்த்த ஸ்ரீ..

3:29 PM 47%
https://drive.google.com/file



"தம்பி... அவளுக்கு உங்க சொந்தக்காரர்களை தெரியாது... அதனால் உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா நீங்களும் அவளுடன் போய் நிக்கிறீங்களா?" என்று கேட்க,

"ஆஹா, கரும்பு தின்ன கூலியா" என்று மனதுக்குள் எழுந்த குதூகலத்தை மறைத்துக் கொண்டு ஒன்றுமே தெரியாத நல்லவன் போல்...

"இதுல ஆட்சேபனை என்ன ஆண்டி... தோ போறேன்" என்றான்... இந்த பூனையும் பாலைக் குடிக்குமா என்பது போல்...

ஸ்ரீ சொன்னதுமே வேகமாக ஓடியவள் வினோத் தன் பின்னால் வருவது தெரியாமல் ரிஷப்ஷன் மேஜைக்கு அருகில் சென்றவள் சட்டென்று நின்று விட, அவளின் பின்னையே ஓடியவன் அவள் நின்றதும் தன்னை சமன்படுத்த முடியாமல் படீரென்று மோத, மோதியது என்னவோ அவன்.... ஆனால் விழப் போனவள் அவள்....

ஏற்கனவே அவளைப் பார்த்த அன்றே தன்னை இழந்திருந்தவன் இன்று அவள் பின்னால் மோதியதால் நிலைக் குலைந்து அவளின் பின் புறமாக அவளின் இடையை வளைத்து பிடித்திருக்க, தங்களை சீர் படுத்துக் கொள்ள முனைந்த இருவருமே திணறித் தான் போனார்கள்...

ஆனால் முனைந்தது முழுப் பலனை அளிக்கவில்லை...

அவனின் இடது கரம் அவளது இடது தோளை அழுந்திப் பிடித்திருக்க அவனின் வலது கரம் இடையோடு அவளை இறுக்கி தன்னோடு சேர்த்து அணைத்திருக்க அவளது தேகத்தில் இன்ப நெருப்புகள் அள்ளிக் கொட்டியது...

3:29 PM
https://drive.google.com/file

வினோத்தின் நிலைமையோ சொல்லுவதற்கில்லை...

பின் புறமாக நின்றவாறே அவளைப் பிடித்திருந்ததால் மல்லிகைச் சரங்களை சூடியிருந்த அவள் தலை அவன் மார்பில் புதைந்து இருக்க, அவளை குனிந்து பார்த்தவன் உணர்ச்சிகளிருந்து விடுபடமுடியாமல் திண்டாடினான்...

அவர்கள் இருந்தது ஹோட்டலின் வரவேற்பறை... ஒரு வேளை அவர்கள் தனித்து இருக்கும் சூழலில் இத்தகைய அழகிய தருணத்தை அவர்கள் சந்தித்து இருந்தால் வினோத்தின் வேகத்திற்கு அவனின் இயற்கையான துணிவிற்கு மஹா திணறியிருப்பாள்...

அதனால் அவர்கள் இருவரும் அந்த மோன நிலையில் இருந்தது சில விநாடிகள் தான்...

அவளின் பூப் போன்ற மென்மையான மேனியின் ஸ்பரிசம் ஆண்மகனான அவனின் உடலில் ஒரு அதிர்வை உண்டாக்கி இருந்ததினால் அந்த அதிர்வில் இருந்து வெளி வர முடியாமல் அவளை பிடித்தவாறே அவன் ஸ்தம்பித்து நிற்க, அவள் தான் தங்கள் சூழ்நிலையை உணர்ந்து சட்டென்று அவனை விட்டு விலகினாள்....

அவனின் இதயத்தை துளைக்கும் பார்வையில் செந்தனலாய் சிவந்திருந்தவள் கூச்சத்தில் நிலம் நோக்கி தலை கவிழ உடலால் விலகினாலும் மனதால் விலக முடியாமல் இருவரும் ஒரே மனநிலையுடன் இருக்க, காதல் என்ற இனிய ராட்ஷசன் அவர்களின் இதயத்திற்குள் ஆர்ப்பாட்டமாக புகுந்தான்...

3:29 PM 47%

https://drive.google.com/file



ஆனாலும் தன்னவன் தன் இதயத்திற்குள் நுழைந்துவிட்டதை அவ்வளவு எளிதில் ஒத்துக் கொண்டாள் அவள் அர்ஜுனின் தங்கை அல்லவே???

கர்வம் தலைக்கேற ஆணவத்துடன்...

"ஏன் இப்படி அடிச்சு பிடிச்சு ஓடி வர்றீங்க? அதான் நான் முன்னால போறேன் தெரியுதுல்ல... கொஞ்சம் தள்ளியே வரது... " என்று கத்த,

அவளின் அருகே வந்த வினோத்...

"ஏய், பொம்பளை ரவுடி... ஏண்டி இப்படி காது கிழியற மாதிரி அலர்ற? தெரியாம இடிச்சுட்டேன்... அதுக்கு என்னமோ வேணும்னே இடிச்சுட்ட மாதிரி கத்துற" என்றான் பதிலுக்கு...

"என்னது, பொம்பளை ரவுடியா? யாரைப் பார்த்து ரவுடிங்கிற?" என்று எகிறினாள் அவனின் மனம் கவர்ந்தவள்....

இருவரின் மனங்களிலும் இருவரும் அறிந்தே காதல் என்ற நுண்ணுணர்வு துளிர்விட ஆரம்பித்துவிட்டது.... ஒருவரின் இதயத்தை மற்றவரின் இதயம் கவர்ந்து இருந்தது...

இருந்தும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சண்டை கோழிகள் போல் சிலிர்த்து எழுந்து மோதிக் கொண்டிருந்தனர்.....

"ஹே, இந்த வா போங்கிற வேலையெல்லாம் இங்க வேண்டாம்.... உங்க ஊரில வேணா இது சாதாரனமா இருக்கலாம்.....

ஆனால் வயசுக்கு மரியாதைக் கொடுக்கனும்.... ஒழுங்கா போங்க வாங்கன்னு கூப்பிடு"

அவன் விடாமல் அவளை இழுக்க...

"இங்க பாருடா... நான் என்னமோ இவன் கூடவே எப்பொழுதும் இருக்க போற மாதிரி இவன வாங்க போங்கன்னு கூப்பிடனுமாமே" என்று உள்ளுக்குள் நினைத்தவள்...

"அதுக்கு வேற ஆளப்பாருங்க" என்றாள்....

ஆனால் தன்னையும் அறியாமல் அவன் சொன்னது போல அவனை 'ங்க' போட்டு அழைத்ததை உணராமல்....

அதனை கேட்டவன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்....

இவர்களின் சண்டையை ஹோட்டலின் வரவேற்பு அறையில் இருப்பவர்கள் பார்த்து ரசித்துக் கொண்டு இருக்க, திகைத்தவர்கள் சுய உணர்வுக்கு வந்து ரிஷப்ஷன் மேஜைக்கு அருகில் நின்று விருந்தினர்களை வரவேற்க தயாரானார்கள்.....

சில நிமிடங்களில் விருந்தினர்களும் உறவினர்களும் வர துவங்க, வந்திருந்தவர்களை மஹாவும் வினோத்தும் புன் சிரிப்புடன் வரவேற்க ஹோட்டலின் உள்ளே நுழைந்தார் அர்ஜூனின் அத்தை பாக்யம்....

தன் இரு பிள்ளைகளுடன் வாயெல்லாம் பல்லாக ஆனால் மனம் முழுவதும் அழுக்காக....

3:29 PM 46%
https://drive.google.com/file



அந்த காலத்தில் பாலாவிற்கு ஸ்ரீயை மணம் முடிக்க கேட்ட பொழுதே தன் அண்ணனின் அதிர்ஷ்டத்தை நினைத்து பொறாமைப்பட்டவள் பாக்யம்....

தனக்கும் அப்படி வசதியான இடத்தில் இருந்து மாப்பிள்ளை வரும் என்று பகல் கனவு கண்டுக் கொண்டு பெண் பார்க்க வந்தவர்களை எல்லாம் விரட்டி அடித்தவள்....

இறுதியாக அவளை வற்புறுத்தி ரேஷன் கடையில் வேலை பார்க்கும் கணேசனுக்கு மணம் முடித்தனர்....

எப்படியும் தன் அண்ணன் அண்ணியிடம் சொல்லி நிறைய நகைகள் போட்டு தன்னை யாரேனும் பணக்காரனுக்குத் தான் திருமணம் செய்து கொடுப்பார் என்றெண்ணி கொண்டு இருந்தவளுக்கு கணேசனை கொண்டு வந்து அண்ணன் நிறுத்தியது பெருத்த ஏமாற்றம் ஆக இருந்தது....

ஸ்ரீயோ கூட எவ்வளவோ எடுத்து சொல்லியும் பாலா கேட்கவில்லை....

தன்னுடைய நகைகளைக் கூட கொடுக்க ஸ்ரீ முன் வந்தும் தன் தந்தையின் வசதிக்கு ஏற்ப தான் மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என்று உறுதியாக இருந்தார் பாலா...

இதில் ஸ்ரீக்கும் மனம் வருத்தம் தான்.... தன் கணவன் தன்னை தன் குடும்பத்தாரிடமிருந்து வேறுப் படுத்திப்பார்ப்பதாக...

46% 3:30 PM
https://drive.google.com/file



ஆனால் தன் மனைவியிடம் இருந்து எதனையும் பெற்றுக் கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்து விட்டார் பாலா.

பாக்யத்திற்கு மாறுபட்ட குணம் உடையவர் அவளின் கணவன் கணேசன்....

தன்னுடைய வசதிக்கேற்ப தன் மனைவியை மகிழ்ச்சியாகவே வைக்க அவர் முயல மகிழ்ச்சி மனதில் இருந்து தான் வர வேண்டும் வசதியினால் அல்ல என்று புரியாத பாக்யத்திற்கு எத்தகைய மகிழ்ச்சியை இழக்கிறோம் என்று தெரியாமலே தன் அண்ணனின் வாழ்வை, வசதியை பார்த்து பொறாமை படுவதிலேயே வாழ்க்கையும் கழிந்தது....

இத்தனை வருடங்கள் கழிந்தாலும் அவளின் பொறாமை படும் குணம் மட்டும் மாறவே இல்லை....

தனக்குத் தான் நல்ல வசதியான வாழ்க்கை கிடைக்கவில்லை...

தன்னுடைய மகன் மகளுக்காகவது நல்ல வசதியான இடத்தில் திருமணம் செய்ய வேண்டும் என்று இருந்தவளுக்கு அர்ஜூனின் வசதியும் கம்பீரமும் ஆளுமையும், அவனுக்கு வெளி வட்டாரத்தில் இருக்கும் பெரிய பெயரும் தன்னுடைய மகளை அர்ஜூனிற்கு எப்படியாவது திருமணம் முடிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தை உருவாக்கியிருந்தது....

பாக்யத்தைப் போன்று பணத்தாசை பிடித்திருந்தவளே அவள் மகளும்....

3:30 PM
https://drive.google.com/file

சிறு வயது முதலே அர்ஜூனைக் கண்டு காதல் வயப்பட்டிருந்தவளை ஏனோ அர்ஜூன் திரும்பியும் பார்த்ததில்லை....

அர்ஜூனைப் பொறுத்தவரை அவன் திரும்பி பார்க்கும் தகுதி கூட அவளுக்கு கிடையாது என்று நினைத்து இருப்பவன்....

ஆனால் எப்படியும் அவனை தன் வலையில் வீழ்த்திவிடலாம் என்று கனவு கண்டுக் கொண்டிருந்தவளுக்கு இந்த திருமணம் பெரும் அதிர்ச்சியையே தந்தது.

மற்றவர்களுக்கு இது ஒரு சாதாரண "கெட் டு கெதர்" என்று சொல்லியிருந்தாலும் பாலா தன் தங்கையிடம் தன் மகன் அர்ஜூனிற்கு எதிர்பாராதவிதமாக திருமணம் நடந்ததை பற்றி சொல்லியிருந்தார்...

இதனை கொஞ்சம் எதிர்பார்க்காதிருந்த பாக்யத்திற்கு பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது அர்ஜூனின் திருமணம்...

அவளுக்கு இந்த வரவேற்புக்கு வருவதே பிடித்தம் இல்லாத பொழுதும் அர்ஜுனின் மனைவியை பார்க்க வேண்டும்.... நிச்சயம் அவள் ஸ்ரீயின் அளவிற்கு வசதியாக இருக்க வாய்ப்பில்லை....

ஏனெனில் அவள் வசதியானவளாக இருந்திருந்தால் இப்படி திடீர் திருமணம் செய்திருக்க அவசியம் இல்லை என்று மனதில் வன்மமாக நினைத்தவள் வரவேற்ப்பில் திவ்யாவின் வரவை ஆர்வத்துடன் எதிர்ப்பார்த்திருந்தாள்....

ஆனால் ஹோட்டலுக்கு வந்தவருக்கு அங்கு மஹாவும் வினோத்தும் நெருங்கி நின்று விருந்தினர்களை வரவேற்றது மேலும் ஒரு பேரதிர்ச்சியை கொடுத்தது...

3:30 PM 46%
https://drive.google.com/file



பின்னே மகளைத் தான் அர்ஜூனிற்கு மணம் முடிக்க முடியவில்லை... தன்னுடய மகனிற்காகவாவது மஹாவை எடுக்கலாம் என்று இருந்தவருக்கு இது பேரிடி அல்லவா....

மனதிற்குள் குமைந்தவள் முகத்தில் அதிர்ச்சியைக் காட்டாமல் ஸ்ரீயிடம் திவ்யாவின் குடும்பத்தை பற்றி விசாரிக்க ஆரம்பிக்க ஸ்ரீயோ தன் நாத்தனாரிடம் "ரிஷப்ஷனுக்கு அப்புறம் பேசிக் கொள்ளலாம்" என்று கூறி நழுவிட்டார்.

குடும்பத்தினர் அனைவரும் வந்ததும் ஹோட்டலின் விஷேஷ ஹாலிற்குள் நுழைய மிகவும் பிரம்மாண்டமாக அமைத்திருந்த மேடையைப் பார்த்த கலாவிற்கு பெருமிதம் தாங்கவில்லை....

முகமேல்லாம் மலர்ச்சியாக தன் மகளின் அருகில் வந்தவர் அவள் கரத்தைப் பற்றி ஸ்ரீயுடன் இனைந்து மணமக்களை மேடையில் அமரச் செய்தார்.

மயில் தோகையை விரித்ததுப் போல் மேடை அலங்காரம் செய்யப்பட்டிருக்க, மயில் கழுத்து நிறத்தில் புடவை உடுத்தியிருந்த திவ்யா அங்கிருந்த அனைவரின் கண்களையும் அத்தனை கவர்ந்தாள்.

அவளுடைய முகம் வெட்கத்தினாலேயும் அர்ஜூனுக்கு வெகு அருகில் அமர்ந்திருக்கும் சஞ்சலத்தினாலேயும் அவளை மிகவும் அழகாகவே காட்டியதாக ஸ்ரீக்கு பட்டது...

அருகில் வந்தவர்...

3:30 PM

https://drive.google.com/file



"திவ்யா, ரொம்ப அழகா இருக்கடா... என் கண்ணே பட்டிரும் போல இருக்கு.... விட்டிற்கு போனவுடனே உனக்கு சுத்திப் போடுறேன்" என்றார்....

இதனைக் கேட்ட அர்ஜூன் சட்டென்று திரும்பி திவ்யாவை பார்க்க,

"உனக்கும் சுத்தி போடுறேண்டா... அதுக்கு எதுக்கு எங்கள இப்படி முறைச்சுப்பார்க்கிற" என்க,

அவன் "ம்ப்ச்" என்று சலித்துக் கொண்டு திரும்பினான்....

விருந்தினர்கள் அனைவரும் வந்து சேர்ந்து இருக்க வந்திருந்தவர்களை வரவேற்கும் பொருட்டு மேடையில் ஏறிய பாலா...

"இங்க வந்திருக்கும் எல்லோருக்கும் ஆச்சர்யமா இருக்கும்.... ஏதோ கெட் டு கெதர்ன்னு சொல்லி இன்வைட் பண்ணிட்டு இப்போ கல்யாணம் ரிஷப்ஷனாக இருக்கேன்னு.... எப்போ அர்ஜூனுக்கு கல்யாணம் ஆச்சு? உங்களுக்கெல்லாம் ஏன் சொல்லலையான்னும் இருக்கும்... உன்மை தான்... ஒரு முக்கியமான தருணத்தில் அர்ஜூனுக்கும் திவ்யாவிற்கும் கல்யாணம் ஆகிடுச்சு.... அதனால் அந்த கல்யாணத்தை உங்க எல்லோருக்கும் தெரியப்படுத்தனும் தான் இந்த ரிஷப்ஷனை நாங்க அரேஞ்ச் பண்ணியிருக்கோம்... இது தான் என்னோட மருமகள் திவ்யா... மிசஸ் திவ்யா அர்ஜூன்" என்க,

அங்கு வந்திருந்த விருந்தினர்களிடேயே பெருத்த சலசலப்பு ஏற்பட்டது.....

ஸ்ரீ, அர்ஜுனையின் திவ்யாவையும் மண மேடைக்கு அழைத்து வரும் பொழுதே அனைவரும் கிசுகிசுத்துக்கொள்ள, இப்பொழுது பாலா அவர்கள் திருமணத்தை பற்றி சொல்லவும் ஆர்வம் மேலிட ஒருவருக்கு ஒருவர் திரும்பி பார்த்துக் கொண்டார்கள்...

இந்தியாவிலேயே மிகப் பெரிய கோடீஸ்வரர்களின் பட்டியலில் இருப்பவன் அர்ஜூன்....

அவனுடைய தொழில் சாம்ராஜ்யம் உலக அளவில் பரந்து விரிந்து இருந்திருந்தது... அதுவும் அழகான இளம் தொழிலதிபன்....

அவனுக்கு பெண் கொடுக்க எத்தனையோ தொழிலதிபர்கள், குழுமங்களின் நிறுவனர்கள் போட்டிக் போட்டுக் கொண்டு இருக்க, அவனின் இந்த திடீர் திருமணம் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் ஆச்சரியத்தை வரவழைத்து இருந்ததென்றால்,

தங்கள் பெண்களை அவனுக்கு மணமுடிக்க கனவுக் கண்டு கொண்டு இருந்த சொந்தங்களுக்கு பொறாமையை உண்டு பண்ணியிருந்தது....

பின் ஆறு அடி மூன்று அங்குலத்திற்கு நெடு நெடுவென உயரத்துடன் செக்கச் சிவந்த நிறத்துடன் பேரழகனாக தங்கள் கண் முன் இருப்பவனை யாருக்கு விட்டுக் கொடுக்க மனம் வரும்...

அதிலும் அவன் இன்று கரு நீல நிற கோட் சூட்டில் கம்பீரமாக ஆணழகனாக அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவர்களால் பெருமூச்சு மட்டும் தான் விட முடிந்தது...

H+ 1 46% 3:30 PM
https://drive.google.com/file

பாலா திவ்யாவை அத்தனை சொந்தங்களுக்கு முன் அறிமுகப்படுத்த தன் மாமனார் தன்னை "மிஸஸ் திவ்யா அர்ஜூன்" என்று கூறியது வேறு வெட்கத்தை அள்ளித் தர முகம் சிவந்து திவ்யா தலையை குனிந்துக் கொள்ள, அர்ஜூனிற்கோ சங்கோஜமாக இருந்தது...

அவனுக்கு இப்படி தன்னை அழைத்து வந்தது ஏதோ பொம்மலாட்டம் போலவும் அதில் தன்னை ஒரு பொம்மையாகவும் அமர வைத்திருந்ததை போலவே உணர்ந்தவன் ஏனோ ஒட்டாத மனதுடனே அங்கு மேடையில் அமர்ந்து இருந்தான்....

அர்ஜூனின் முக மாற்றத்தையும் அதில் தெரிந்த வாட்டத்தையும் பார்த்த கலா உடனேயே பாலாவின் கையிலிலிருந்த ஒலிப் பெருக்கியை வாங்கியவர்,

"நான் ஒரு விஷயம் பேசலாமா அண்ணா?" என்று கேட்க அவரும் சம்மதம் என்று தலையசைத்தார்....

"நான் தான் திவ்யாவோட அம்மா... எங்க மாப்பிள்ளை அர்ஜூனோட அம்மாவும், நானும் சின்ன வயசில இருந்தே நெருங்கிய தோழிகள்.... ஒரு இக்கட்டான சூழ்நிலையில திவ்யாவோட கல்யாணம் நிற்க இருந்த சமயத்தில ஸ்ரீ, தன்னோட மகன் அர்ஜூன எங்க மாப்பிள்ளையா ஆக்கினா.... இதுக்கு நான் கடவுளுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை... இப்போ நான் பேசுறது மாப்பிள்ளைக்கு கூட பிடிக்காதுன்னு எனக்கு தெரியும்... ஆனால் அவங்க நல்ல மனச நான் எடுத்து சொல்லியே ஆகனும்... நாளைக்கு நீங்க யாரும் இந்த கல்யாணத்தைப் பற்றி தப்பா பேசிடக்கூடாது.... அதுக்கு தான் இதை சொல்றேன்" என்றவர்,

அர்ஜூனிடம் திரும்பி, "என்னைய மன்னிச்சிக்கங்க மாப்பிள்ளை... இத நான் இப்பொ சொல்லிட்டதனால பின்னாடி ஒரு பேச்சும் வராது... அதனால தான் நான் பேசினேன்" என்றவர்,

கண்களிலேயே அவனிடம் மன்னிப்பு வேண்ட அவன் ஒரு சிறு புன்னகையையே உதித்தான்....

அதுவே கலாவின் மனதிற்கு ஆறுதலாக இருந்தது....

ஏனெனில் அவன் இது வரை கலாவை நேருக்கு நேராக பார்க்கவில்லை... அவரை பார்ப்பதனையே தவிர்ப்பதை போல் இருந்து அவன் செயல்கள்...

திருமணம் ஆன அன்றோ, அல்லது மறு நாளோ தன் மருமகன் தன்னை பார்க்க வேண்டும் பேச வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை...

ஆனால் இன்று ஹோட்டலின் வாயிலில் ஸ்ரீக்காகவும் தன் மகள் மருமகனிற்காகவும் ஆவலோடு காத்திருந்தவர் அவனிடம் நலம் விசாரிக்கும் பொழுதும் அவன் ஒரு சிறு புன்னகையை கூட உதிர்க்கவில்லை...

தன் சித்தம் சிந்தனை இதயம் அனைத்திலும் நிறைந்திருக்கும் தன் மனையாளிடமே அவன் இன்னும் நெருங்கி இருக்கவில்லை... தன்னை வெளிப்படுத்தி இருக்கவில்லை...

அப்படி இருக்க அவனுக்கு மற்றவர்களை பற்றி நினைக்க எங்கு நேரம் இருக்கிறது??

ஆனால் இன்று தான் பேசியதும் அதற்கு எதிர்ப்பு எதுவும் காட்டாமல் தன்னைக் கண்டு புன்னகைக்கும் மருமகனைக் கண்டவருக்கு அத்தனை நிறைவாக இருந்தது...

மேடையில் இருந்த மணமக்களுக்கு அனைவரும் வாழ்த்துக்கள் கூற துவங்க பிடித்ததோ பிடிக்கவில்லையோ மற்றவர்களுக்காகவாவது ஒவ்வொருவரையும் திவ்யாவிடம் அறிமுகப்படுத்தினான் அர்ஜூன்....

அவன் அருகில் நெருங்கி அதுவும் இத்தனை பெரிய கூட்டத்திற்கு முன் நிற்பதற்கே அவள் பெரு முயற்சி எடுத்து தன்னை திடப்படுத்திக் கொள்ள வேண்டியதாக இருந்தது....

இதில் விருந்தினர்களை அறிமுகப்படுத்தும் பொழுது அவளுக்காக அவளின் உயரத்திற்கு ஏற்றவாறு அவன் குனிந்து பேசியதில், அவன் உடல் அவளின் உடலில் அழுத்தமாகவே உரச உணர்ச்சிகள் மின்னல் போல் பாய்ந்து அவளின் பூ உடலைத் துவளச் செய்திருந்தது...

இதில் சில நேரங்களில் இசை நிகழ்ச்சிகளின் சத்தம் காதை கிழித்துக் கொண்டு இருக்க, அவன் மேலும் அவளின் காதோரம் குனிந்து பேசுவதற்கு உதடுகளை தாழ்த்திய போது அவன் மீசை லேசாக அவள் காதில் உரச, அவளின் தேகத்தில் தீ மூள உள்ளத்தில் கிளர்ச்சியும் உடலில் நடுக்கமும் சேர்ந்து எங்கே தளர்ந்து அவர் மேலேயே விழுந்துவிடுவோமோ என்று கதிகலங்கி போய் நின்று இருந்தாள்...

ரிஷப்ஷனுக்கு அர்ஜூனின் சொந்தங்களும் விருந்தினர்களுமே நிறைய வந்து இருந்தாலும் திவ்யாவின் வழியிலும் சிலர் வந்திருந்தனர்...

3:31 PM
https://drive.google.com/file

அவனுக்கு அவளிடம் ஒருவரையும் அறிமுகப்படுத்த தயக்கம் இல்லை... ஆனால் அவன் மேடையில் தங்களுக்கு வாழ்த்து சொல்ல வந்திருந்தவர்களிடம் பேசிக் கொண்டு இருக்கும் பொழுது திவ்யாவின் சொந்தங்களும் மேடை ஏறி இருந்தார்களென்றால் அவர்களை தன் கணவனிற்கு அறிமுகப் படுத்துவது அவளின் கடமை அல்லவா...

இல்லை என்றால் அது அவர்களை அவமதிப்பது போல் ஆகிவிடும்....

ஆனால் அதே சமயம் மறு புறம் திரும்பி பேசிக் கொண்டு இருக்கும் கணவனை எவ்வாறு தன் புறம் திருப்புவது....

"என்னங்க" என்று அழைத்தால் மெல்லிய கீதம் போல் இருக்கும் அவளின் குரல் நிச்சயம் அவன் காதுகளுக்கு போய் சேராது...

வேறு வழி....

திகிலும் தடுமாற்றமும் போட்டி போட அவள் முகம், அதிகரித்து இருந்த இதய துடிப்பை அப்பட்டமாக வெளிக்காட்ட சங்கடத்தின் உச்ச நிலைக்கே சென்று இருந்தவள் முதன் முறையாக தன் கணவனின் முழங்கையைத் தொட்டு அழைக்க, அவளின் தொடுகையில் சட்டென்று திரும்பியவன் அவளை ஏறெடுத்து நோக்கி என்ன என்பது போல் மேலும் அவளை நோக்கி குனிய...

அவனின் முகத்தை வெகு அருகில் மூச்சு காத்து படும் அளவிற்கு பார்த்ததால் ஏற்கனவே சிவந்து இருந்த அவளின் முகம் இன்னும் அதிகமாய் சிவந்தது...

3:31 PM
https://drive.google.com/file

அவளின் உடலில் அவள் அன்று வரை அனுபவிக்காத உணர்ச்சிகள் ஊடுறுவி செல்ல அதன் விளைவாக அவள் தன் கரத்தை அவனின் முழங்கையில் இருந்து வெடுக்கென்று இழுத்துக் கொள்ள, அச்சத்தின் சாயலும் தவிப்பின் பாவனையும் கலந்து அழகுற தன் முகத்தை நோக்கி அன்னாந்து நின்ற அவள் பாணியில் அவளின் அழகு பண்முறை அதிகரித்தது போல் தெரிந்ததால் மீண்டும் இந்த உலகை மறந்தான் அர்ஜூன்...

சில நொடிகள் அவளையேப் பார்த்து இருந்தவன் அவளின் தவிப்பும் தடுமாற்றமும் புரிந்தவன் போல் சிறு இள முறுவலுடன் "என்னாச்சு?" என்றான்...

அவன் கேள்விக்கு தான் பதில் சொல்லவில்லை என்றால் அவன் மீண்டும் அந்த புறம் திரும்பிவிட்டால் மீண்டும் அவனை அழைப்பதற்கு அவளுக்கு மனதில் தெம்பு இல்லை...

அதனால் திக்கித் திணறி... "இவங்க எங்க அத்தை மாமா... எங்க அப்பாவோடு கூட பிறந்தவங்க" என்று ஒரு வழியாக அவர்களை அறிமுகப்படுத்த, மனதிற்குள் அவளின் அச்சத்தை ரசித்துக் கொண்டவன் அவளின் மாமாவின் கரத்தை பற்றி குலுக்கினான்...

ஆக ஒரு வழியாக வாழ்த்து படலம் முடிய மேடையில் இருந்து கீழே இறங்கி வந்தவர்கள் ரிஷப்ஷன் ஹாலில் போட்டு இருந்த வட்ட மேஜையை சுற்றி இருந்த நாற்காலிகளில் அமர, திவ்யாவிற்கு போன உயிர் மீண்டு வந்தது போல் இருந்தது...

ஆனால் அவளை ஒரு நிமிடம் கூட நிம்மதியாக மூச்சு விட மாட்டார் போல் இருந்தது உணவு அருந்த மண மக்களை ஸ்ரீ அழைத்த பொழுது.... இப்பொழுதைய நாகரிக வழக்கத்தின் படி ப:ஃபே [buffet]

3:32 PM 46%
https://drive.google.com/file



அமைப்பில் உணவு பதார்த்தங்களை அங்கு வகைப்படுத்தி வைக்கவில்லை...

இந்த ரிஷப்ஷனே சொந்த பந்தகளுக்கு மட்டும் தான் என்பதால் நமது கலாச்சாரப் படி வாழை இலை விருந்திற்கே ஸ்ரீ ஏற்பாடு செய்திருந்தார்...

மாமியார் உணவு அருந்த அழைத்ததும் வேறு வழியில்லாமல் கணவனைத் தொடர்ந்து நடந்து சென்றவளுக்கு அதிர்ச்சியில் கால்கள் தடுமாறியது அங்கு அத்தனை இளவட்டங்களும் இவர்களுடன் சேர்ந்து உணவு அருந்த அமர்ந்து இருந்ததை கண்டு...

ஏனெனில் அவளும் வந்ததில் இருந்து சந்தர்பம் அமையும் பொழுதெல்லாம் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள் அவர்கள் செய்யும் லூட்டியை, அட்டகாசத்தை...

இங்கும் என்ன செய்ய காத்திருக்கிறார்களோ என்று அஞ்சியவாரே அர்ஜூன் அருகே அமர அவள் எதிர்பார்த்தது போல அர்ஜூனை திவ்யாவிற்கு இனிப்பை ஊட்ட சொல்லி கத்தினார்கள்...

"ஐயோ! இந்த ஒரு நாளில் இருந்து என்னை எப்படியாவது காப்பாத்துப்பா முருகா" என்று திவ்யா உள்ளுக்குள் கதறினாள் என்றாள் அர்ஜூனோ ஒரு படி மேலே போ வாய்விட்டே சலித்துக் கொண்டான்......

"மாம்... இது என்ன கல்யாணமா? ரிஷப்ஷன் தான... எதுக்கு மாம் இதெல்லாம் செய்யனும்"

ஆனால் சிறியவர்கள் அவர்களை விட்டால் தானே......

H+ 1 46% 3:32 PM
https://drive.google.com/file 17



ஏற்கனவே உடல் நடுங்க, உள்ளுக்குள் உதறலெடுக்க அவனருகில் அமர்ந்திருந்து திவ்யாவிற்கோ இது தேவையா? என்று இருந்தது...

தயங்கியவாறே அவளருகில் அமர்ந்திருந்த ஸ்ரீயைப் பார்க்க, அவரோ "பரவாயில்லை, வாங்கிக்கோ" என்று கண்களாலேயே சைகை செய்ய, என்ன என்று விழித்து தன் கணவனை நோக்கி திரும்பியவள் அரண்டு போனாள்..

அங்கு முகத்தில் எந்த உணர்வுகளையும் காட்டாமல் இனிப்பை வைத்துக் கொண்டு அர்ஜூன் தனக்காக காத்திருந்ததை கண்டவளுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை...

ஆனால் அவளுக்குள் இந்த எண்ணமே உழன்றுக் கொண்டு இருந்தது....

"தன் கணவன் தன் மனம் விரும்பி இதை செய்யவில்லை.... ஊருக்காகத் தான் இதை செய்கிறான்" என்று...

எதுவும் பேசாமல் வாயை திறந்தவள் அவன் ஊட்டிய இனிப்பில் சிறிதே கடித்து விட்டு திரும்பிக் கொண்டாள்....

அர்ஜூனிற்கு பொதுவில் அதுவும் இத்தனை பேர் சுற்றி இருக்க இது போன்ற காரியங்களை செய்வது அவனுடைய குணத்திற்கு ஒத்து வராத ஒன்று.....

H+ 1 45% 3:33 PM

https://drive.google.com/file



ஆதலால் அவன் மற்றவர்களுக்காகத் தான் வேறு வழியில்லாமல் திவ்யாவிற்கு இனிப்பை ஊட்டினான்.....

ஆனால் திவ்யாவிற்கு இனிப்பை ஊட்டும் பொழுது அவளின் ரோஜா போன்ற மெல்லிய இதழில் தன் விரல் பட்டவுடன் இனம் புரியாத ஒரு சிலிர்ப்பை உடல் முழுவதும் உணர்ந்தவன் தன்னை மறந்து அவளை சில நொடிகள் பார்த்திருக்க, கூடியிருந்த இளசுகள் கூட்டமாக கத்தியதில் திவ்யா கதி கலங்கி போய் சடக்கென்று தலை கவிழ்ந்தாள்...

மற்றவர்கள் அதனை அவள் வெட்கப்படுவதாக எடுத்துக் கொண்டாலும் அர்ஜூனுக்கு மட்டும் தெரியும் அவள் தன் மீது உள்ள பயத்தினாலேயே அப்படி செய்தாள் என்று....

சிறு கோடு போல் மெல்லிய புன்னகை அவன் இதழ்களில் விரிந்தது...

பின் திவ்யாவை அவனுக்கு ஊட்ட சொல்ல,

"கடவுளே! இவங்களுக்கு நான் ஊட்டனுமா?" என்று கலங்கிய முகத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்து விழித்தவள் வேறு வழியில்லாமல் இனிப்பை எடுக்க அங்கு அவளையே கூர்ந்து பார்த்தவனின் பார்வையின் வீரியத்தை தாங்காதவளின் கை நடுக்கம் எடுத்தது.....

இவற்றையெல்லாம் ஆர்வத்துடன் கண்டுக் கொண்டிருந்த சிறியவர்கள் மீண்டும் கத்த, திக்கென்று இருக்க வேறு வழியில்லாமல் வெளிப்படையாக நடுங்கும் விரல்களோடு தன் கணவனுக்கு இனிப்பை ஊட்டினாள் திவ்யா...

3:33 PM 45%
https://drive.google.com/file



இவை அனைத்தையும் மூன்றாம் வகுப்பில் சந்தித்து இன்று வரை ஆத்மார்த்தமான நட்புடன் இருக்கும் தோழிகள் இருவரும், இன்று தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் விசித்திரமான முறையில் ஏற்ப்பட்ட பிணைப்பை விழிகளில் நீர் கோர்த்து இருக்க உணர்ந்து ரசித்துக் கொண்டு இருந்தார்கள்...

ஒரு வழியாக ரிஷப்ஷன் முடிந்தவுடன் அனைவரும் கிளம்பவும், திவ்யா அர்ஜுனைப் பின் தொடர்ந்து வந்துக் கொண்டு இருக்க, மற்றவர்களை வேறு காரில் வர சொன்ன ஸ்ரீ சொன்ன அடுத்த வார்த்தைகளில்....

"இந்த அத்தை இன்னைக்கு என்னை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டார் போல" என்றே தோன்றியது திவ்யாவிற்கு....

"அர்ஜூனும் திவ்யாவும் தனியா கார்ல வரட்டும்.... நாம எல்லோரும் வேற கார்ல போகலாம்" என்றார் ஸ்ரீ...

தன் அன்னையைத் திரும்பி பார்த்த அர்ஜூன் அமைதியாக காரில் ஏறி ஓட்டுனர் இருக்கையில் அமர, முன் பக்கம் ஏறுவதா? அல்லது பின் பக்கம் ஏறுவதா? என்று திவ்யா குழம்பி நிற்க,

தன்னவளின் பதட்டத்தை உணர்ந்த அர்ஜூனே எட்டி முன் பக்க கதவை திறந்து விட முளை உறைந்து நின்றாள் திவ்யா என்றால் ஆச்சரியத்தில் விழி விரித்து நின்று இருந்தனர் அர்ஜூனின் பெற்றோரும், அவன் உடன் பிறந்தவர்களும்..........

45% 3:35 PM
https://drive.google.com/file



மலரினும் மெல்லியவள்...

பாகம் 10

அர்ஜூன் காரின் கதவை திறந்தும் ஏறாமல் நின்ற திவ்யா ஒரு சில நிமிடங்கள் ஸ்ரீயின் முகத்தையும் காரையும் மாற்றி மாற்றிப் பார்க்க, அங்கு பொறுமை இழந்துக் கொண்டு இருந்தான் அர்ஜூன்...

வழக்கமான அவனின் அகங்காரம் தலை தூக்க, லேசாக இடது பக்கமாக தலையை சாய்த்து திவ்யாவைப் பார்க்க அதில் அவள் நெஞ்சுக் கூடு சில்லிட சட்டென்று காரில் ஏறியவள் மறந்தும் தன் கணவனின் பக்கம் திரும்பவில்லை...

அர்ஜூன் கதவைத் திறக்கவும், பின் திவ்யா அதில் ஏறாமல் நிற்க அவளை கூர்ந்து பார்த்ததையும், அதில் மின்னல் போல் காரில் ஏறிய திவ்யா அர்ஜூன் அருகில் அமர்ந்ததையும் கண்ட மஹாவிற்கும் அருணிற்கும் நடப்பது கனவா? இல்லை நினைவா? என்று தோன்ற ஆச்சரியத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்...

அருண் மஹாவிடம் "இங்க என்ன நடக்குது?" என்க...

"ஒரே நாள்ல இவ்வளவு மாற்றமா? இல்லை எல்லாம் என்னோட மேக்கப்போட மாயமா?" என்று மஹா அளக்க...

"அடியே... ஏதோ ஒரு நாள் அதுவும் ஏற்கனவே அழகா இருக்கிற அண்ணிக்கு மேக்கப் போட்டுவிட்டு ஏன்டி இப்படி அளப்பரை பண்ற" என்றான்...

H+ 1 45% 3:35 PM
https://drive.google.com/file
17



"உங்களுக்கு தான் என் திறமையைப் பார்த்து பொறாமை" என்று உதட்டை சுளித்தவாறே கிசுகிசுத்தவள் திரும்பிப் பார்க்க அங்கு வினோத் அவளையே பார்த்துக் கொண்டு இருக்க, "ஐயோ! இவங்க இப்படி பார்ப்பதை யாராவது பார்த்தால் என்ன ஆகும்??" என்று மனதிற்குள் நினைத்தாலும் அதுவும் அவளுக்கு பிடித்து தான் இருந்தது.

திவ்யா காரில் அமர்ந்ததும் அர்ஜூன் காரை கிளப்ப, மற்ற அனைவரும் வேறு வேறு காரில் கிளம்பினார்கள்...

தனித்த இரவு, சப்தமேதுமற்ற சூழ்நிலை, காதலுக்கும் காமத்திற்கும் ஏற்ற வயதுடைய இருவர், உரிமையுள்ள உறவு....

இயற்கையின் வேகம் மெள்ள ஆட்கொள்ள இம்சையும் இன்பமும் கலந்த உணர்வில் தாக்கப்பட்டு அர்ஜூன் இருந்தானென்றால் காரில் ஏறியதில் இருந்து ஒவ்வொரு நொடியும் திவ்யாவின் நிலை விவாரணத்திற்கு அப்பாற்பட்டதாயிருந்தது...

உணர்ச்சிகள் கரைக்கடக்கும் ஆவலில் திமிறிக் கொண்டு இருக்க தன் வெகு அருகில் அமர்ந்து இருந்தவளை உரிமையுடன் திரும்பி பார்க்க அழகெல்லாம் திரண்டது போலும் இருளைக் கிழித்துக் கொண்டு வந்த நிலவைப் போலும் அவன் மனைவி அவளை வசீகரிக்க, அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூக்களில் இருந்த வந்த சுகந்தம் அவன் நாசியைக் கவர்ந்து மயக்கத்தை விளைவிக்க திண்டாடிப் போனான் அர்ஜூன்...

வெளி உலகத்தில் அவன் அழுத்தமான காலடிச் சுவடுகளின் சத்தத்திற்கே எழுந்து நிற்கும் தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள்....

3:35 PM

https://drive.google.com/file



தொழில் வட்டாரங்களில் எதற்கும் அஞ்சாத சிங்கம் என்றும், தன் கூரிய பார்வையிலேயே எதிராளியை வென்றுவிடுபவன் என்றும் பேர் எடுத்தவன்...

அப்பேற்பட்ட அர்ஜூனிற்கே இந்த நிலைமை என்றால் பத்தொன்பது வயதே ஆன, தன் கணவனின் ஒரு பார்வையிலேயே சகலமும் நடுங்கி நிற்கும் திவ்யாவின் நிலையைப் பற்றி சொல்லவா வேண்டும்...

அவன் தன்னை திரும்பி பார்ப்பதை அவன் பக்கம் திரும்பாமலே தெரிந்துக் கொண்டவள் நாணத்தை மறைக்க முடிந்த அளவிற்கு வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வர, அவளின் நாணத்தையும் சங்கடத்தையும் மிகைப் படுத்தி வேதனையை அளிக்கும் வகையில் அவன் தன் இடது கையை கியர் பாக்ஸில் வைத்து இருக்க, அதில் அவன் கரம் அவளின் தொடையில் லேசாக உரச, தன்னிச்சையாக நகர்ந்து கதவோரம் ஒட்டி அமர்ந்தாள்...

அவளின் செய்கையை சாலையில் பார்வையை பதிய வைத்துக் கொண்டே கண்டுக் கொண்டவன் இதழ்களில் தவழ்ந்த புன்னகையுடன் கண்களில் விஷமச் சிரிப்புடன் காரை செலுத்திக் கொண்டு இருக்க அரவமேதும் இல்லாத அந்த நிசப்தமான சூழ்நிலையில் அர்ஜூனின் அலை பேசி அலறி திவ்யாவிற்கு தூக்கி போடச் செய்தது...

தன் ஷர்ட் பாக்கெட்டில் இருந்து அலை பேசியை எடுத்தவன் அதில் அழைத்திருந்தவரின் எண்ணைப் பார்க்க அவன் அன்னையே அழைத்திருந்தார்...

அவர் இந்த திருமண வரவேற்பை ஏற்பாடு செய்திருந்ததே அவனுக்கு விருப்பம் இல்லை... அதிலும் வாழ்த்துக்களும் கூச்சல்களும்

3:35 PM
https://drive.google.com/file



இளவட்டங்களின் அட்டகாசங்களும் அவனுக்கு கிட்டத்தட்ட ஒரு வித எரிச்சல் மனப்பாண்மையே உருவாக்கியிருந்தது...

இதில் அவர் மீண்டும் அழைக்கவும் இன்னும் என்ன மிச்சம் வைத்திருக்கிறார் என்று எண்ணியவன் அழைப்பை எடுக்காமல் அலை பேசியை மீண்டும் ஷர்ட் பாக்கெட்டில் வைத்து காரை ஓட்டுவதில் கவனத்தை செலுத்த, மீண்டும் மீண்டும் அலறிக் கொண்டு இருந்த அலை பேசி சற்று நேரம் இடைவெளிவிட்டு சினுங்க ஆரம்பித்தது...

ஆனால் இந்த முறை சினுங்கியது அர்ஜூனின் அலை பேசியல்ல... திவ்யாவினுடையது.....

அர்ஜூனை திரும்பி பார்த்தவள் வேறு வழியில்லாமல் அழைப்பை எடுக்க.....

"என்னடா, அர்ஜுன் செல்லிற்கு கூப்பிட்டேன்... அவன் எடுக்கல... யார்கிட்டயாவது பேசிட்டு இருக்கானா?" என்றார் ஸ்ரீ...

அவருக்கு நன்றாக தெரியும்... யாரிடமாவது அவன் பேசிக் கொண்டு இருந்தால் அலை பேசியில் அழைப்பு சென்று இருக்காது...

அவர் மகன் வேண்டும் என்றே தான் அலை பேசியை எடுக்கவில்லை என்று....

தெரிந்திருந்தும் அவர் திவ்யாவிற்கு அழைத்தவர்...

"திவ்யா... ஃபோன கொஞ்சம் அர்ஜூன் கிட்ட கொடுக்கிறியா? நான் ஒரு முக்கியமான விஷயம் பேசனும்" என்க...

3:36 PM

https://drive.google.com/file

ஏற்கனவே அவனுக்கு அருகில் தனியாக அமர்ந்து வருவது அவளுக்கு காரில் இருந்த ஏசியையும் மீறி வியர்த்துக் கொட்டுகிறது...

"இதுல இப்போ அவங்க கிட்ட போன வேற கொடுக்கனுமா.... ஐயோ!" என்றிருந்தது திவ்யாவிற்கு...

ஆனால் அர்ஜூனிற்கு நன்கு தெரியும் திவ்யாவின் அலை பேசியில் அழைத்ததும் தன் அன்னை தான் என்று...

அன்னைக்கும் மகனிற்கும் இடையில் நடக்கும் மௌன போராட்டம் தொடர்ந்துக் கொண்டே தான் இருந்தது இன்னமும்...

தன் மனைவியின் பால் அவன் உள்ளம் சரிந்திருந்தது உண்மை தான்... அதனை அவனும் உணர்ந்தே இருந்தான்...

அந்த ஒரு காரணத்தினால் தான் அவன் இந்த திருமண வரவேற்பை தடுத்து நிறுத்தவில்லை...

ஆனால் அதற்காக அவன் தன் அன்னையை மன்னித்துவிட்டான் என்று அர்த்தம் இல்லை... அவரின் மீது இன்னும் வெறுப்பும் கோபமும் இருக்கத் தான் செய்தது...

ஆதலால் இனி அவர் கேட்கப் போகும் அல்லது சொல்லப் போகும் எதனையும் தான் காதில் வாங்கப் போவதில்லை என்று முடிவெடுத்து இருந்ததினாலேயே அவன் அவரின் அழைப்பை நிராகரித்து இருந்தான்...

3:36 PM
https://drive.google.com/file



ஆனால் அவர் திவ்யாவையும் அழைக்கவும், அவளிடம் என்ன சொன்னாரோ அவள் அவனைத் திரும்பி பார்க்கவும் அவனுக்கு புரிந்து போனது...

தன்னிடம் காரியம் சாதிக்க நினைக்கும் தன் அன்னை இன்று தன் மனைவியைப் பயன்படுத்த பார்க்கிறார் என்று..

ஆனாலும் தன் நிலையில் இருந்து அவன் இனி சிறிதும் கீழ் இறங்கி வருவதாயில்லை....

தன் கணவனின் உள்ளத்திற்குள் நடக்கும் போராட்டத்தை அறியாமல் ஒரு வழியாக தனக்குள்ளே தைரியத்தை வர வழைத்துக் கொண்டவள் தயங்கியவாறே...

"அத்த உங்ககிட்ட பேசனும்னு சொல்றாங்க" என்று மெதுவாக கூற,

அவளை திரும்பிப் பார்த்தவனின் பார்வையை தாங்க இயலாமல் "பேசாமல் காரில் இருந்து குதித்து விடுவோமா?" என்றே இருந்தது அவளுக்கு.....

அவளை சில விநாடிகளே பார்த்தவன் மௌனமாக மீண்டும் சாலையில் கண்களை பதிக்க, இப்போழுது என்ன செய்வது என்றே தெரியாமல் குழம்பிப் போனாள் திவ்யா....

மீண்டும் தன்னை சமன்படுத்திக் கொண்டவள்.....

3:36 PM

https://drive.google.com/file



"அத்தக்கிட்ட நான் என்ன சொல்லட்டும்? இன்னும் லைன்ல தான் இருக்காங்க" என்று மெல்லிய குரலில் கூற ஒன்றும் பேசாமல் அவளிடம் இருந்து அலை பேசியை வாங்கியவன் மீண்டும் சாலையில் கண் பதித்து "வாட் மாம்?" என்றான்.

ஸ்ரீக்கு அவனது கடினமான குரலில் இருந்தே தெரிந்தது அவன் எவ்வளவு கோபமாக இருக்கிறான் என்று...

இதில் இந்த விஷயத்தை வேற சொல்லனுமா என்றிருக்க ஆனால் இவர்கள் இருவரையும் சேர்த்து வைக்க இதை விட நல்ல ஒரு சந்தர்ப்பம் அமையாது என்று ஒரு நல்ல அன்னையாக, தன் மனம் கவர்ந்த மருமகளின் நலனிற்காக அவர் அதனை செய்தே ஆக வேண்டும் என்று முடிவோடு இருந்தார்...

அவருக்கும் தன் மகனை நினைத்து அடி வயிற்றில் புளியை கரைக்கவே செய்தது...

இருந்தும் மனதிற்குள் துணிவை வர வழைத்துக் கொண்டவர் மெல்ல...

"அர்ஜூன்... இன்றைக்கு திவ்யாவோட சொந்தக்காரர்கள் சில பேரும், நம்ம சொந்தக்காரங்கள் சிலரும் நம் வீட்டிலேயே தங்குறாங்க..... ஏற்கனவே

உங்க அத்தை அவ பொண்ண உனக்கு எடுக்கலையேன்னு கோபத்துல இருக்கா.... இதுல அவ நீயும் திவ்யாவும் தனி தனியா படுக்கிறதப் பார்த்தா அதுக்கு கண்ணு காது மூக்குன்னு வச்சு பேச ஆரம்பிச்சிடுவா..... அது நம்ம குடும்பத்திற்கு கெட்ட பேரத் தான் கொண்டு வரும்...." என்றவர் சில விநாடிகள் தயங்கி ஊரில் உள்ள கடவுள்களிடம் எல்லாம் மன்றாடி மெதுவாக அதைக் கேட்டேவிட்டார்...

45% 3:36 PM
https://drive.google.com/file

"அதனால ப்ளீஸ்.. அவ இங்கிருந்து போற வரைக்கும் மட்டும் திவ்யாவை உன் ரூம்ல தங்க வச்சிக்கிறியா?"

இதனைக் கேட்பதற்குள் ஸ்ரீக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது....

இதைக் கேட்டதும் மறு பக்கதில் அர்ஜூன் கோபத்தில் கத்த போகிறான் என்று ஸ்ரீ நினைத்துக் கொண்டு இருக்க அவனோ எதுவும் பேசாமல் இருந்ததை பார்த்து குழம்பி போன ஸ்ரீ...

"அர்ஜூன், என்னப்பா? லைன்ல தான் இருக்கியா?" என்றார்.

"யெஸ் மாம்" என்றவனுக்கு அவரின் எண்ணம் புரிந்தது...

காதலோ, காமமோ, தாபமோ அவை ஒரு மனிதனின் சொந்த விஷயங்கள்... அது அவனுக்கும் அவன் மனைவிக்கும் மட்டுமே உரிய அந்தரங்க உறவு.... தன்னவளுடன் தான் கூடும் தருணத்தைக் கூட அவனும் அவளும் மட்டும் தான் முடிவெடுக்க வேண்டும்...

இதில் தலையிட இவ்வுலகில் ஒருவருக்கும் அதிகாரம் கிடையாது என்று நினைத்திருந்தவனுக்கு அவன் அன்னையின் இப்போதைய வேண்டுகோள் மேலும் எரிச்சலையும் ஆத்திரத்தையும் கிளப்பியது....

அந்த இரவு அவர்கள் இருவரும் இணையும் இரவாகக் கூட இருந்திருக்கலாம்... அவர்களின் வாழ்கையின் காதல் கலந்த காம

3:37 PM 45%
https://drive.google.com/file



இன்பத்தையும், நேசம் கலந்த தாம்பத்தியத்தின் சுகத்தையும் சுமந்து வரும் முதல் இரவாக அமைந்திருக்கலாம்...

அவன் உடலில் மண்டியிருந்த உணர்ச்சிகளின் சுழற்சியை, தாபத்தின் தகிப்பை, காமத்தின் வேட்கையை, பெண்ணவளும் தனது இதய வாசலைத் திறந்து தனது லாவண்யத்தை அவனுக்கு அள்ளி வழங்கி கணவனின் தேடலைப் பூர்த்தி செய்து அவன் பிரம்மச்சரியத்தை உடைத்த இரவாக இருந்திருக்கலாம்...

ஆனால் இந்த நிமிடம் அவனின் மனதில் மண்டியிருந்த விரக்தி எல்லாம் மீண்டும் மீண்டும் தன் வாழ்க்கையின் போக்கை, கணங்களை நிர்ணயிக்கும் தன் அன்னையை நினைத்து தான் இருந்தது...

அதில் அவனுக்குள் அடங்கியிருந்த வேதாளம் மெல்ல வெளி வர ஆரம்பித்தது....

சில நொடிகள் சிந்தித்தவன் மீண்டும் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பித்தான்... ஆனால் தன் மனைவிக்கு புரியக் கூடாது என்பதற்காக ஆங்கிலத்தில்.....

"மாம், என்ன ப்ளான் பண்றீங்க? எனக்கு ஒன்றும் புரியவில்லை... ப்ளீஸ் டோண்ட் ட்ரீட் மீ லைக் அ சைல்ட்.... [Please don't treat me like a child]... லெட் மீ டேக் தோஸ் டிஷிஷன்ஸ் மாம்... let me take those decisions mom..." என்றான்....

அழுத்தமான குரலில் கிட்டதட்ட கர்ஜிக்கும் தோரணையில் அவன் ஒவ்வொரு வார்த்தையையும் பல்லைக் கடித்துக் கொண்டு பேசியதிலேயே ஸ்ரீக்கு புரிந்தது அவனுக்கு தன் மேல் இருக்கும் அடங்காத கோபத்தின் அளவை.....

3:37 PM 45%
https://drive.google.com/file



ஒரு வேளை அவன் திவ்யாவைப் பார்க்கும் பார்வையின் அர்த்தத்தை நாம் தான் தவறாக புரிந்துக் கொண்டோமோ என்ற எண்ணம் கூட சடுதியில் தோன்றி மறைந்தது.....

ஆனால் அதே சமயம் அவருக்கு நன்றாக தெரியும்...

அர்ஜூனிற்கு யாரும் அவன் அறைக்கு வருவது பிடிக்காது என்று...

அப்படிப்பட்டவன் திவ்யாவை எப்படி தன்னுடன் தங்க அனுமதிப்பான்? ஆனால் திவ்யா அவன் மனைவி.... யாருக்கு உரிமை இருக்கிறதோ இல்லையோ ஆனால் அவன் மனைவிக்கு உரிமை இருக்கிறது... இப்பொழுது அதை சொன்னால் தாம் தூம் என்று குதிப்பான்.....

ஆனால் அவர் ஒன்று மட்டும் மறந்து போனார்.... அவன் உண்மையில் அவரின் எதிர்பார்ப்பை வெறுத்திருந்தால் ஆங்கிலத்தில் பேசியிருக்க மாட்டான்....

தன்னவளின் மனம் புண்படுவதில் அவனுக்கு விருப்பம் இல்லை...

ஸ்ரீயும் இதோடு இந்த விவாத்தை விட்டு இருக்கலாம்... ஆனால் திவ்யாவிற்கு நல்லது செய்வதாக நினைத்து அவனது ஆத்திரத்தை கிளறிவிட்டுக் கொண்டு இருந்தார்...

3:37 PM

https://drive.google.com/file

"இல்ல அர்ஜுன்... நீ சொல்றது எனக்கு புரியுது.... அவங்க எல்லோரும் இங்க தங்கப் போறாங்கன்னே எனக்கு இப்போ தான் தெரியும்.... இருக்கிறேன்னு சொல்றவங்கள போன்னு எப்படி சொல்றது?"

"பட் அதுக்கு நீங்க சொல்ற மாதிரி என்னால இருக்க முடியாது"

"அர்ஜுன் ப்ளீஸ்.... புரிஞ்சுக்க... இந்த ஒரே ஒரு உதவி மட்டும் செய்.... அப்புறம் உன் விருப்பப்படியே நான் எல்லாத்தையும் செய்றேன்" என்றார்....

அதற்கு மேல் அர்ஜுனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

அவனுக்கு தன் மனைவி தன்னுடன் ஒரே அறையில் தங்குவதில் விருப்பம் தான்...

ஆனால் அவளை தான் எடுத்துக் கொள்ளும் அந்த அழகிய கணம் அவனவள் அவளாக அவளை அவனிடம் ஒப்புவிக்கும் தருணமாகத் தான் இருக்க வேண்டும்...

அதனால் அவனின் கொந்தளிப்பு அதனை முடிவு செய்த அவன் அன்னையின் மீது தான்....

"ஓகே மாம்" என்று அழைப்பை துண்டித்தவன் திவ்யாவின் பக்கம் திரும்பாமலே அலை பேசியை நீட்ட, அமைதியாக அலை பேசியை வாங்கியவள் அவனின் ஆத்திரத்தில் கலங்கி போய் இருந்ததால் அதன் பிறகு மறந்தும் அவன் பக்கம் திரும்பவில்லை...

3:37 PM
https://drive.google.com/file

அமைதியாக ஆனால் மெதுவாகவே அவன் காரை செலுத்திக் கொண்டிருக்க வெகு நேரம் சென்றே வீட்டை அடைந்தவர்களுக்கு ஆரத்தி சுற்றுவதற்கு சில பெண்கள் வாசலில் காத்திருக்க, அர்ஜுனுக்கு தங்கள் திருமண நாள் நியாபகத்தில் வந்தது....

அவனுக்கு இருக்கும் கோபத்திற்கு எங்கே அவன் அன்று போல் ஆரத்தி தட்டை மீண்டும் தட்டி விடுவானோ என்று ஸ்ரீ அஞ்சிக் கொண்டுருந்தார்...

ஆனால் அதே சமயம் இத்தனை பேர் இருக்கும் போது அப்படி செய்ய மாட்டான் என்று சிறிது தைரியமும் இருந்தது...

ஆனால் அது அர்ஜுன் ஆகிற்றே....

அவன் எந்த காலத்தில் யாரைப் பற்றி கவலைப் பட்டிருக்கிறான்.....

ஆனால் அவர் பயந்ததற்கு மாறாக காரை விட்டு இறங்கியவுடன் ஸ்ரீ மற்றும் சில பெண்கள் ஆரத்தி எடுக்க ஒன்றும் பேசாமல் திவ்யாவுடன் உள்ளே சென்ற மகனை விழி விரிய ஆச்சரியத்துடன் பார்த்திருந்தார் ஸ்ரீ...

சிறிது நேரத்திற்கு முன் தன்னிடம் கர்ஜித்த அர்ஜுனா இது என்று....

வீட்டிற்குள் நுழைந்த அர்ஜுன் நேரே தன் அறைக்கு செல்ல, திவ்யா தன் உடைகளை மாற்றிவிட்டு தன் சுற்றத்திடனும் தன்

3:38 PM 45%
https://drive.google.com/file



அம்மாவுடனும் பேசிக் கொண்டிருக்க அவளருகே வந்த ஸ்ரீ சன்னமான குரலில்.....

"திவ்யா, நீ அர்ஜுனோட ரூமுக்கு போடா" என்றார்.... (ஆனால் இந்த அம்மாவுக்கு இவ்வளவு பிடிவாதம் இருக்கக் கூடாது)

"என்னது!!!! அவரோடு ரூமிற்கு நான் போறதா????" நினைத்த மாத்திரத்தில் திவ்யாவிற்கு மயக்கமே வந்தது....

அவள் திருதிருவென்று முழிக்க,

"நான் அர்ஜுன் கிட்ட பேசிட்டேன்டா..... இவங்க எல்லோரும் கிளம்பும் வரை நீ அவன் ரூம்ல தான் தங்கனும்" என்று அவள் காதில் கிசுகிசுக்க,

"ஐயோ!!! என்ன அத்த சொல்றீங்க?" என்று கிட்டதட்ட அலறினாள்....

இவள் இப்படி எல்லாம் சொன்னால் சரி பட்டு வரமாட்டாள் என்ற நினைத்தவர் சத்தமாக,

"சரிடா... நீ மாடிக்கு போ அர்ஜுன் காத்திட்டு இருப்பான்" என்று கூற...

அவர்களுக்கு அருகில் இருந்த அனைவரும் சிரிக்க திவ்யாவிற்கு வெட்கம் பிடுங்கி தின்றது.......

3:38 PM 45%
https://drive.google.com/file



ஸ்ரீ சத்தமாக சொல்லிவிட்டதால் வேறு வழியில்லாமல் தன் மாமியாரை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே மாடி ஏறிய திவ்யாவைப் பார்த்த ஸ்ரீ...

"இந்த பெண்ணை ரூமுக்குள்ள என்ன பாடுபடுத்த போறானோ தெரியலையே?" என்று திகைக்கவும் செய்தார்....

ஆனால் அதே சமயம் அவங்க அப்பா அம்மா இங்க இருக்கிற வரை கொஞ்சம் பொறுமையாகத் தான் இருப்பான் என்ற நம்பிக்கையும் இருந்தது அவருக்கு..

"இந்த விஷயத்தைத் தான் அத்தை அவங்ககிட்ட கார்ல பேசினாங்களா? அவங்க பதிலுக்கு இங்கிலீஷில் தான பேசினாங்க.... அப்போ எனக்கு புரியக் கூடாதுன்னு தான் பேசி இருப்பாங்க போல இருக்கு... போச்சு இப்போ எவ்வளவு கோபத்தில இருப்பாங்களோ?? நான் செத்தேன்.... அப்பா முருகா, ஏன்பா என்ன இப்படி மீண்டும் மீண்டும் சோதனைக்கு உள்ளாக்குற??" என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதே அவள் அவன் அறையை அடைந்திருந்தாள்....

அறையின் வாயிலில் ஒரு சில நிமிடங்கள் நின்று இருந்தவளுக்கு இதில் இருந்து தப்பித்துக் கொள்ள ஒரு வழியும் தெரியவில்லை...

உள்ளே அறையில் சிம்ம சொப்பனமாக தன் கணவன்... கீழே அந்த சிங்கத்தை பெற்றெடுத்த அதை விட சக்தி வாய்ந்த மாமியார்...

"இவர்கள் இருவருக்கும் இடையில் என்னை மாட்டிவிட்டு விளையாடுறியே முருகா" என்று தயங்கி நின்று இருந்தவள் மெதுவாக அவன் அறைக் கதவைத் தட்ட உள்ளிருந்து ஒரு சத்தமும் வரவில்லை....

3:38 PM 45%
https://drive.google.com/file



மீண்டும் தட்ட, "கம் இன் [Come in]" என்ற கம்பீரமான குரல் கேட்க, உச்சி முதல் உள்ளங்கால் வரை உதறல் எடுத்தது...

கலங்கி போனவளாக மெதுவாகவே கதவை திறந்தாள்.....

இப்பொழுது தான் அவள் தன் கணவனின் அறைக்குள் முதன் முதலாக நுழைவது.... அதுவும் அவன் அங்கு இருக்கும் பொழுது...

முதல் முறை அவள் அன்னை வந்திருந்த பொழுது கூட அவள் அவன் அறையின் வெளியே தான் நின்றிருந்தாள்...

மெல்ல அறைக்குள் வந்தவள் அவனை நிமிர்ந்து பார்க்கும் துணிவு இல்லாமல் தலை குனிந்தே நின்று இருக்க, கட்டிலில் கரங்கள் இரண்டையும் தன் தலைக்கு பின் கொடுத்து படுத்திருந்தவனுக்கு அவள் தலை கவிழ்ந்து நிற்பதை பார்க்க, அவளின் அச்சத்தின் அளவு நன்கு புரிந்தது...

அவள் அவ்வாறு சிறு பெண் போல் நிற்பதைக் கண்டவுனுக்கு தன்னை அறியாமல் சிரிப்பு வர, சத்தம் இடாமல் இதழ் விரித்து சிறிதாக புன்னகைத்தவன் வேறு ஒன்றும் சொல்லாமல் கட்டிலில் இருந்து எழுந்து பால்கனிக்கு போய்விட,

"ஐயோ! இப்பொழுது என்ன செய்வது.... அவர் கட்டிலில் உட்கார்வதா? இல்லை அந்த ஸோஃபாவில் உட்கார்வதா?" என்று குழம்பிப் போய் கடைசியில் அந்த அறையின் மூலையில் தரையில் அமர்ந்து சுவற்றில் சாய்ந்தவாறு தன் முழங்காலில் தலையை வைத்து அவன் வருவதற்காக காத்திருந்தாள்....

3:38 PM 44%
https://drive.google.com/file


அவள் எந்த அளவிற்கு பயந்திருக்கிறாள் என்று ஒரு கணவனாக அவனுக்கு புரிந்தே இருந்தது...

இப்பொழுது தான் அவளை நெருங்கினாலும் அச்சத்தினால் வேண்டுமானால் அவள் தன்னை அவனுக்கு கொடுப்பாள்... ஆனால் அதில் நிச்சயம் காதல் இருக்காது...

அவளின் உணர்வுகளை தூண்டிவிட்டு காதல் இல்லாது காமம் மட்டும் பிரவாகிக்கும் உறவில் ஈடுபட அவனுக்கு விருப்பமில்லை...

அதனாலேயே ஒரு நல்ல கணவனாக அவளுக்கு தனிமைக் கொடுப்பதற்கே அவன் வெளியே சென்றது....

ஆனால் அவள் கவலை அவளுக்கு....

"ஏதாவது ஒரு பெட்ஷீட் கொடுத்துவிட்டு போயிருந்தாலாவது நாம பாட்டுக்கு சிவனேன்னு தரையில படுத்து தூங்கியிருக்கலாம்.... இப்போ என்ன பண்றது? ஆமா அப்படியே கொடுத்துட்டாலும்" என்று எண்ணியவள் சுவற்றில் தலை சாய்க்க....

சிறிது நேரத்தில் அசதியினால் அவளையும் அறியாமல் உறங்கிப் போனவள் தூக்கத்தில் வெற்று தரையிலேயே படுக்க அப்பொழுது தான் அர்ஜூன் உள்ளே வந்தான்..

உள்ளே வந்தவன் அவளைக் காணாமல் தேட அறையின் மூலையில் தரையில் படுத்திருப்பவளை, அவள் படுத்திருந்த விதத்தைப் பார்த்தவனுக்கு ஒரு நிமிடம் மனதில் என்னவோ செய்ய, அவளருகில் மண்டிப் போட்டு அமர்ந்தவன் அவளை உற்று பார்த்தான்...

3:47 PM 42%
https://drive.google.com/file

முதல் முறையாக தன் மனையாளை இவ்வளவு அருகில் இத்தனை நிதானமாக இப்பொழுது தான் பார்க்கிறான்.....

அழகான முகம், சின்ன நெற்றி, அதில் கீழே படுத்திருந்ததால் கற்றையாக முடி முகத்தில் விழுந்து அதுக் கூட அவளுக்கு அழகாகத் தான் இருந்தது.

கூரிய சின்ன அழகான மூக்கு அதில் ஒற்றைக் கல் மூக்குத்தி, கீழே வரைந்து வைத்ததுப் போல் செப்பு உதடுகள் என்று ஒரு பெண்ணோவியமாக இருந்தவள் அவனின் இதயத்தை பிளந்து உள்ளே நுழைந்தாள்......

அர்ஜுனைப் போன்ற மனிதர்களுக்கு, வாழ்கையில் தொழில், லட்சியம், பணம் என்று ஓடுபவர்களுக்கு காதல் என்பது அர்த்தமற்ற ஒரு மூன்று எழுத்து சொல்...

காதலின் பின் ஒளிந்திருப்பது தன்னை வெளிப்படுத்த விரும்பாத இருட்டியதற்கு பின் திருட்டுத்தனமாக வெளி வரும் காமம்...

அது மட்டுமே காதலின் அர்த்தம் என்று இருந்தவனின் உள்ளத்தில் கூட தன் அழகிய மனதால், அப்பழுக்கற்ற குணத்தால் காதலை ஊற்றெடுக்க செய்துவிட்டாள் இந்த சின்ன பெண்...

அவனின் மனம் கவர்ந்த அவனுக்கு மட்டுமே உரிய அவனின் மனையாள்...

அர்ஜுனின் மனம் நிறைந்து இருந்தது....

42% 3:47 PM
https://drive.google.com/file

அவளின் கலைந்த அவள் எழில் முகத்தில் புரண்டுக் கொண்டிருந்த முடிக் கற்றையை அவள் முகத்தில் இருந்து ஒதுக்க அவன் தன் கைக் கொண்டு போக,

தன் கணவன் தன் அருகில் மண்டியிட்டு தன்னை ரசித்துக் கொண்டு இருப்பதை தூக்கத்திலும் உணர்ந்தாளோ அல்லதும் பெண்களுக்கு இயற்கையிலேயே இருக்கும் உள்ளுணர்வு உந்தியதாலோ அவள் திரும்பி படுக்க, அவள் தன்னை பார்த்து விடக் கூடாதே என்று எண்ணியவன் அவளைத் தொடாமல் வெடுக்கென்று எழுந்து கட்டிலில் போய் சாய்ந்து அமர்ந்தான்.

அங்கிருந்தப்படியே அவளைப் பார்க்க அவள் குளிருக்கு குறுகிப் படுக்க போர்வை கொடுப்போமா என்று ஒரு விநாடி நேரம் நினைத்தவன் தன் மனதை மாற்றிக் கொண்டு எழுந்து அந்த அறையின் ஏஸியின் அளவை குறைத்தவன் அவளைப் பார்த்தபடியே சிறிது நேரத்தில் தானும் துங்கிப் போனான்.

பொழுது புலர்ந்தும் தன்னை அறியாமல் அசதியில் தூங்கிக் கொண்டிருந்த திவ்யா விழித்ததும் தான் எங்கு இருக்கிறோம் யோசித்தவள் தான் படுத்திருப்பது தன் கணவனின் அறை என்று தெரிந்த அந்த விநாடியே விருட்டென்று அடித்துப் பிடித்து எழுந்தவள் கட்டிலில் பார்க்க, அங்கு அவளின் மணாளன் வலது கையை தலையில் வைத்து கண்களை மறைத்துக் கொண்டு அழகாக தூங்கி கொண்டு இருந்தான்.

அமைதியாக உறங்கி கொண்டிருந்த கணவனை ஆசையோடு பார்த்தவள் அவனை தன் கண்களின் வழியே ஆழ உள் வாங்கிக் கொண்டவள், பின் அவன் எழுந்து விட போகிறானோ என்ற பயத்தில் மெதுவாக வெளியெறினாள்.....

மஹாவின் அறைக்குள் சென்றவள் சிறிது நேரத்தில் குளித்து விட்டு கீழே இறங்க....

ஆனால் அதற்குள் ஏற்கனவே விழித்துவிட்டிருந்த தன் அன்னையும் மாமியாரும் ஹாலில் அமர்ந்துப் பேசிக் கொண்டிருப்பதை பார்த்தவுடன் அவர்கள் அருகில் போய்...

"காபி போடவா அத்தை?" என்றாள்...

நேற்று இரவு அவளை அர்ஜூனின் அறைக்கு அனுப்பி வைத்துவிட்டு அவன் இந்த பெண்ணின் மனம் நோகும் படி எதுவும் பேசியிருப்பானோ? அல்லது அவளை வெளியில் விரட்டி அடித்திருப்பானோ என்று கலக்கத்தில் இருந்து ஶ்ரீக்கும் திவ்யாவின் குடல் கேட்டதும் விலுக்கென்று அவளை திருப்பிப் பார்க்க அங்கு அமைதியான முகத்துடன் தலைக் குளித்து எழிலோடு நின்று கொண்டிருந்தாள் அவர் மருமகள்..

அவருக்கு சடுதியில் இந்த எண்ணம் தோன்றி மறைந்தது... நேற்று தன் மகன் திவ்யாவை தன் மனைவியாக எடுத்துக் கொண்டு இருப்பானோ???

ஆனால் தோன்றிய வேகத்திலேயே அது மறைந்தும் போனது...

இவ்வளவு சீக்கிரமாவது தன் மகன் திருந்திவிடுவதாவது என்று நினைத்துக் கொண்டவர் அவளின் கரத்தைப் பற்றி அழைத்து தன் அருகில் அமர வைத்துக் கொண்டார்...

"காபி எல்லாம் கொஞ்ச நேரம் கழித்து குடிக்கலாம்.... நீ இப்போ இங்க உட்காரு" என்றவர் அவள் உட்கார்ந்தவுடன்,

3:47 PM 42%
https://drive.google.com/file



"திவ்யா, நேத்தே சொல்லனும்னு நினைச்சேன்..... நேத்து நீ ரொம்ப ரொம்ப அழகா இருந்தடா.... அந்த மயில் கழுத்துக் கலர் புடவை உன் கலருக்கு ரொம்ப எடுப்பா இருந்தது.... என் கண்ணே பட்டுடும் போல இருந்தது" என்றார்...

மாமியாரின் புகழ்ச்சியில் வெட்கம் கொண்டவள் தலை குனிந்து சிரிக்க, அங்கு வந்த அல்லி கோல மாவுடன் வர,

"இங்க குடு அல்லி, நானே போடுறேன்" என்றாள்....

'இல்லம்மா, நீங்க பேசிக்கிட்டு இருந்தீங்க..... அதனால தான் உங்கள தொந்தரவு பண்ண வேண்டாம்னு.."

"பரவாயில்ல அல்லி, கொடு... நானே போடுறேன்" என்று கோலப் பொடியை வாங்கியவள் வாசல் தெளித்து கோலம் போட ஆரம்பித்தவளின் மனம் முழுவதும் அவள் கணவனே ஆக்கிரமித்து இருந்தான்...

நேற்று தன் கணவன் அவளை தன் அறையில் உறங்க அனுமதிப்பான் என்று அவள் கனவிலும் நினைத்து இருக்கவில்லை...

அவன் ரிஷப்ஷன் முடிந்து காரில் தன் அன்னையிடம் சினத்துடன் பேசிக் கொண்டு வந்ததைக் கவனித்துக் கொண்டு வந்ததில் இருந்து, ஸ்ரீயின் அலை பேசி அழைப்புக்கு பின் அவன் திவ்யாவை திரும்பியும் பார்க்காது எரிச்சல் கலந்த முகத்துடன் வேண்டும் என்றே நிதானமாக காரை செலுத்திக் கொண்டு சென்றதில் இருந்து அவளை தன் அறையில் படுக்க வைப்பதில் அவனுக்கு எத்தனை வெறுப்பு என்று நினைத்திருந்தாள்...

3:48 PM 42%
https://drive.google.com/file


ஆனால் நேற்று இரவு அவன் அவளை வெளியில் அனுப்பாதது மட்டும் இல்லை தான் உள்ளே நுழைந்ததும் அவன் ஒன்றும் சொல்லாமல் அறையை விட்டு வெளியேறியதும் அவளை வியப்பில் ஆழ்த்தியிருந்தது....

அதனை நினைத்துக் கொண்டே இதயம் முழுவதும் சிலிர்த்து இருக்க மனதின் பூரிப்பு கைகளில் அழகிய கோலமாக உருமாறியிருந்தது....

கண்களை கவரும் வகையில் அழகிய பெரிய கோலத்தை அவள் கிட்டத்தட்ட போட்டு முடிக்கவும், ட்ராக் சூட் போட்டுக் கொண்டு ஜாக்கிங் போக அர்ஜூன் வெளியே வரவும் சரியாக இருந்தது.....

வேகமாக வெளியில் வந்தவனின் கால்கள் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த மனையாளைக் கண்டதும் தாமாக தயங்கி நின்றது....

காலையில் தலை குளித்து தலையில் இன்னும் அவிழ்க்கப் படாத துண்டுடன் அந்த காலை வேலையிலிலும் சூரியன் சுட்டுக் கொண்டு இருந்ததால் நெற்றியில் வியர்வை துளிகள் அரும்பியிருக்க, வியர்வை லேசாக வழிந்து உச்சி வகிட்டில் வைத்து இருந்த குங்குமம் சிறிதாக கலைந்து வியர்வையோடு வழிந்து இருக்க அர்ஜூனின் கரங்கள் அதற்கு மேல் குங்குமத்தை வழியவிடாது துடைக்க பேராவல் கொண்டது.....

எளிமையான பருத்தி புடவையிலும் எழிலோடு அழகிய சிற்பம் போல் குனிந்து கோலம் போட்டுக் கொண்டு இருந்ததால் கழுத்தில் ஆடிய தாலிக் கயிறு வெளியில் வந்து விழுந்து அவள் மார்பில் தவழ்ந்துக் கொண்டிருக்க கோலத்தை போட்டவள் திருப்தியோடு புன்னகைக்க அவளின் செழித்த கன்னங்களில் அவள் முறுவல் காட்டிய பொழுது

42% 3:48 PM
https://drive.google.com/file



விழுந்த குழிகள் அவனை மயக்கத்தில் ஆழ்த்த தன்னை இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்றான் அர்ஜூன்......

தன் கணவன் வீட்டின் வாயில் கதவிற்கு அருகில் நின்று தன்னை அங்குலம் அங்குலமாக ரசித்து, சிலிர்த்து எழும் தன் தாபத்தை இறுக்கி பிடித்து கட்டுப்படுத்திக் கொண்டு நிற்பதை உணராமல் கர்ம சிரத்தையாகக் கோலத்தை போட்டுக் கொண்டிருந்தவள் அவன் வாயிலைத் தாண்டி நடக்கவும் தன் ஷூ லேஸ் அவிழ்ந்திருந்தப்பதை கவனித்து ஒரு காலை குத்துக்காலிட்டு மறு காலின் லேஸை கட்ட....

அவனின் அசைவில் சட்டென்று நிமிர்ந்துப் பார்த்தவள் எதிர்பாராதவிதமாக தன் கணவனைக் கண்டவுடன் விருட்டென்று வேகமாக எழ, அப்பொழுது தான் கவனித்தான் அர்ஜூன்.....

கோலம் போடுவதற்கு ஏதுவாக தன்னுடைய புடவையை தூக்கி அவள் இடுப்பில் சொறுகியிருந்ததை...

கீழே அமர்ந்து இருந்தவனின் கண்களுக்கு நேராக வெகு அருகில் அவள் கால்கள் இரண்டும் வாழைத் தண்டு போல் அழகாக பளிச்சென்று தெரிய அதில் மெல்லிதான வெள்ளி கொலுசுகள் பளபளக்க, அவன் பார்வை போகும் இடத்தை கண்டவள் பட்டென்று புடவையை இழுத்து விட்டவளின் கண்களில் வெட்கம் பொங்கி வழிந்தாலும் அதில் அச்சமும் கலந்து நின்றது...

அவளின் அபாரமான அழகு விழிகளில் தன் விஷம விழிகளை படறவிட்டவன் ஒரு நொடி நேரம் தயங்கி பின் எழுந்து தன்னுடைய ஜாக்கிங் வேலையை தொடர்ந்தான்....

3:48 PM
https://drive.google.com/file



"ஐயோ! கடவுளே! இப்படியா புடவையை இழுத்து சொறுகிட்டு அதுவும் அவங்க கீழ உட்கார்ந்துக்கிட்டு நான் நின்னுக்கிட்டு..., சே.... ஒரு வேளை நம்மளை தப்பா நினைத்திருப்பாங்களோ? சிட்டில பொண்ணுங்கல்லாம் இப்படியா புடவைய தூக்கிக் கட்டிட்டு ரோட்டுல நிக்கிறாங்க திவ்யா.... சே, சரியான பட்டிக்காடு டி நீ??" என்று தன்னை தானே திட்டிக் கொண்டவள்...

"நான் எங்க ரோட்டுலய நிக்கிறேன்.... இங்க வீட்டுக்கு முன்னாடி தான் நிக்கிறேன்..... ஆனால் அவங்க பார்த்த பார்வையே சரியில்லை... இன்னிக்கு என்ன பூகம்பம் வெடிக்கப் போகுதோ? இல்லை எல்லாரும் போனப்புறம் வச்சிக்கலாம்னு இருக்கிறாங்களான்னு தெரியலையே" என்று ஒருவழியாக முடிந்தவரை தன்னை குழப்பி உள்ளே சென்றாள்.

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

6:25 PM 71%

https://drive.google.com/file



பாகம் - 11

வீட்டிற்குள் நுழைந்த திவ்யாவிடம் நேரே வந்த அர்ஜூனின் அத்தை பாக்கியம் அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு,

"இங்க வாம்மா, கொஞ்சம் நேரம் பேசிக் கொண்டு இருக்கலாம்" என்றாள்..

இது வரை பாக்யத்தைப் பற்றி ஸ்ரீயோ மஹாவோ எதுவும் சொன்னத்தில்லையாதலால் திவ்யாவிற்கு அவளின் சுயரூபம் தெரிந்திருக்கவில்லை.

மௌனமாக பாக்கியத்தை தொடர்ந்தவள் அவளின் அருகே அமர, அந்த சின்ன பெண்ணிடம் தன்னுடைய விஷத்தை கக்க ஆரம்பித்தாள் பாக்கியம்....

"ஏம்மா, நேற்று தான் கேள்விப்பட்டேன்.... வேற யாரையோ உனக்கு கல்யாணம் பேசி அவன் கல்யாணத்திற்கு அன்னைக்கு காலையில மணமேடையிலேயே உன்னை வேண்டாம் என்று சொல்லி விட்டு போய்விட்டானாமே? ஏம்மா கல்யாணம் பேசி அத்தனை நாட்கள் பேசாம இருந்தவன் திடீர்னு மணமேடைக்கு வந்தப்புறம் அவனுக்கு உன்னை பிடிக்காம போனதுக்கு என்ன காரணம்?" என்று கேட்க,

திவ்யாவிற்கு அவளின் கேள்வியின் நோக்கம் புரியவே சில நொடிகள் பிடித்தது....

6:25 PM 71%
https://drive.google.com/file



புரிந்தவுடன் விழிகளில் விழிநீர் கோர்க்க ஆரம்பிக்க அவர்களின் உரையாடல்களை கவனித்துக் கொண்டு இருந்த கலா ஸ்ரீயைப் பார்த்தார்.

பாக்யம் திவ்யாவிடம் பேச வேண்டும் என்று அவள் கைப் பிடித்து அழைத்து வந்ததுமே சுதாரித்த ஸ்ரீ அவள் திவ்யாவின் திருமணத்தைப் பற்றிக் கேட்கவும் வெகுண்டு எழுந்தவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பொறுமையாக.....

"பாக்யம், வீட்டில் எவ்வளவு வேலை இருக்கிறது... கொஞ்சம் வந்து எனக்கு சமையல்ல உதவி செய்யக் கூடாது?" என்று அழைக்க,

"இல்லை அண்ணி, உங்க மருமகளிடம் நேற்று ரிஷப்ஷனில் ஒன்றும் பேச முடியவில்லை.... அதான் கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம்னு....." என்று இளித்தாள் அந்த வினைப் பிடித்தவள்...

"சரி எல்லாத்தையும் கிட்சனில் போய் பேசலாம்... இங்க ஆம்பளைங்க எல்லோரும் இருக்காங்கல்ல" என்று அவளின் கையைப் பிடித்து இழுக்காத குறையாக இழுத்து சென்றார்..

சமையல் அறைக்குள் சென்றவர்,

"பாக்யம், இவ்வளவு வயசாயிடுச்ச... என்ன பேசுறோம் யார்கிட்ட பேசுறோம்னு தெரிஞ்சுத் தான் பேசிறியா? அவ என் மருமக... உனக்கு அவகிட்ட அந்த மாதிரி பேசுறதுக்கு எந்த உரிமையும் கிடையாது... அதுவும் அர்ஜூனிற்கு நீ இப்படி பேசுறது தெரிஞ்சா அவ்வளவு தான்" என்றவுடன் பாக்கியம் எகிற ஆரம்பித்தார்.

70% 6:25 PM
https://drive.google.com/file

"என்ன அண்ணி? எனக்கு உரிமை இல்ல அப்படி இப்படின்னு சொல்றீங்க.... இது எங்க அண்ணன் வீடு... இங்க எனக்கு முழு உரிமை இருக்கு... அது மட்டும் இல்லாமல் நீங்க எப்படியும் என் பொண்ண அர்ஜூனுக்கு எடுப்பீங்கன்னு ரொம்ப ஆசையா எதிர்பார்த்திட்டு இருந்தேன்... இப்போ யாரோ ஊர் பேர் தெரியாத ஒருத்திய கூட்டிட்டு வந்து இவ தான் என் மருமகள்னு அறிமுகப் படுத்திறீங்க" என்று பொறியவே,

அவ்வளவு தான் ஸ்ரீக்கு எங்கிருந்து தான் இவ்வளவு கோபம் வந்ததோ தெரியவில்லை..

"பாக்யம்... நான் மறுபடியும் சொல்றேன் கொஞ்சம் வார்த்தைகளை அளந்து பேசு... இல்லைன்னா அர்ஜூன் கிட்ட இது பற்றி சொல்ல வேண்டி வரும்" என்று கூற,

அர்ஜூனின் பெயரைக் கேட்டாலே கேட்டவர்கள் அனைவருக்குமே இதயம் வாய் வழியாக வெளியில் வந்து விழுந்துவிடும் அளவிற்கு அத்தனை பயம்...

அதிலும் அவர்களின் உறவுக்காரர்களை பற்றி சொல்லவும் வேண்டாம்... அவன் வீட்டிற்குள் நுழைந்ததுமே மெதுவாக அவரவர் அவர்களுக்கு கொடுத்திருந்த விருந்தினர் அறைக்கு சென்று பதுங்கி கொள்வார்கள்....

அந்த வீடே நிதப்தத்தில் ஆழ்ந்திருக்கும்....

ஏனெனில் அவனின் பேச்சு, பார்வை, செயல் அத்தனையிலும் அவன் தாத்தா ருத்ரமூர்த்தியின் ஆணவம், அகங்காரம், சீற்றம் என்று ஒருங்கே ஒரே கலவையாக கலந்திருக்கும்...

6:26 PM 70%
https://drive.google.com/file



அதிலும் அவன் இப்பொழுது திவ்யாவை தன் மனைவியாக மனதார ஏற்றுக் கொண்டுவிட்டான்... இது யாருக்கு புரியுமோ இல்லை ஆனால் நமக்கு நன்றாகவே புரியும்...

இப்படி ஒரு சூழலில் பாக்யம் அவன் மனையாளின் மனம் நோகும் வகையில் ஏதாவது பேசினால் அவளின் தலைவிதி அன்றே மாற்றி எழுதப்பட்டிருக்கும்...

ஸ்ரீ "அர்ஜூன்" என்று சொன்னதுமே சட்டென்று அடங்கியவள்,

"அண்ணி, அட்லீஸ்ட் மஹாவையாவது என் பையனுக்கு கொடுப்பீங்களா?" என்று இழுக்க,

சே இவ திருந்தவே மாட்டாளா என்றிருந்தது ஸ்ரீக்கு....

"பாக்யம்... தயவு செஞ்சு இப்போதைக்கு எந்த கல்யாணத்தை பற்றியும் பேசாதே.... எனக்கு இங்க தலைக்கு மேல் வேலை இருக்கு... உன்னால எனக்கு உதவி செய்ய முடிஞ்சா செய்... இல்லன்னா போய் ரெஸ்ட் எடு" என்று அத்துடன் பேச்சை முடித்துக் கொண்டார்....

அவள் எப்படியும் இன்று ஊருக்கு கிளம்பிவிடுவாள் என்று தெரியும்.... அது வரை திவ்யாவை இவளின் கொடிய வார்த்தைகளிடம் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று எண்ணியவருக்கு பாக்யத்தின் உள் இருந்த அழுக்கான மனம் புரிந்து இருந்ததால் அவள் திவ்யாவிடம் அநாகரிகமாக பேசும் பொழுது அர்ஜூன் கண்களில் பட்டுவிடக்கூடாதே என்று கலக்கமாக இருந்தது....

70% 6:26 PM
https://drive.google.com/file

ஏனெனில் நேற்று அவன் என்னதான் தன்னிடம் எகிறி இருந்தாலும் இது வரையில் ஒருவரையும் தன் அறைக்குள் அனுமதிக்காதவன் திவ்யாவை அனுமதித்து இருந்தான்...

அது மட்டும் இல்லாமல் அவர்கள் இருவருக்கும் இடையில் எதுவும் நடந்ததா இல்லையா என்று தெரியாவிட்டாலும் திவ்யாவின் முகத்தில் இருந்த பூரிப்பை பார்த்தால் அவன் அவளிடம் கோபத்தை எதுவும் காட்டவில்லை என்பது நன்கு புரிந்து இருந்தது....

அதனால் அவன் எதிரில் இவள் திவ்யாவிடம் இது போன்று பேசினால் அது பெரிய விளைவுகளை கொண்டு வரும் என்றே தோன்றியது...

காலை உணவு அருந்த அனைவரும் டைனிங் டேபிளில் அமர, திவ்யாவும் மற்றும் சிலரும் பரிமாற, ஸ்ரீ...

"கலா, நாம எல்லோரும் இன்றைக்கே ஷாப்பிங் வேலை எல்லாம் முடிச்சிறலாம்" என்றார்..

கலாவிற்கு தன் மகளின் வரவேற்பிற்கு அவளுக்கு ஏதவது செய்ய வேண்டும் என்று ஆசை இருந்தது.... நிச்சயம் ஸ்ரீயின் வசதிக்கு ஏற்ப ஒன்றும் செய்ய முடியாது..

ஆனால் இருந்தாலும் நம்ம பொண்ணுக்கு ஏதவது செய்ய வேண்டுமே என்று ஸ்ரீயிடம் சொல்ல, அவர் நகையோ இல்லை பாத்திர பண்டங்களோ வேண்டாம்..... உனக்கு இஷ்டமென்றால் அவளுக்கும் சரி என்றால் புடவை வாங்கிக் கொடு என்றிருந்தார்,

பெண்களுக்கு எத்தனை புடவை எடுத்துக் கொடுத்தாலும் பத்தாதே. "சரி" என்றவர்,

"திவ்யா நீயும், மஹா நீயும் வாங்கம்மா..... எல்லோரும் போவோம்" என்றார்.

"அர்ஜுன்... இன்னைக்கு எங்க கூட நீயும் வாப்பா" என்று ஸ்ரீ கூற..

"நான் எதுக்கு மாம்? நேற்றே ரிஷப்ஷன்னு ஆ∴பீஸுக்கு போகலை.... நிறைய வொர்க்ஸ் பெண்டிங்ல இருக்கு... கதிரே எல்லாவற்றையும் பார்க்க முடியாது, அதனால் நீங்க லேடிஸ் எல்லாரும் போய்ட்டு வாங்க" என்றான்...

"இல்லை மாப்பிள்ளை, உங்களுக்கும் ட்ரெஸ் எடுக்கனும்.... நாங்க ரிஷப்ஷனுக்கு எங்க முறைய இன்னும் செய்யலை.... நீங்க கூட வந்தீங்கன்னா உங்களுக்கு பிடிச்ச மாதிரி ட்ரெஸ் எடுத்திரலாம்" என்றார் கலா.

திவ்யாவிற்கோ மறுபடியும் "அடக் கடவுளே" என்றிருந்தது.

"அவரோட வசதிக்கு நாம கால் தூசி பெறாமாட்டோம்.... அவங்க போடுற ட்ரெஸ் எல்லாம் பார்த்தா அவங்களுக்கு நாம கர்சீ∴ப் கூட வாங்க முடியாது... இதுல அம்மா ஏன் அவங்கள கடைக்கு கூப்பிடறாங்க" என்று மனதுக்குள் நினைத்தவள் அர்ஜுனை பார்க்க, அவனும் அதே சமயம் அவளை திரும்பி பார்க்க, அவளுக்கு தான் அவமானத்தில் தலை குனிய வேண்டியதாக போய்விட்டது...

https://drive.google.com/file



அவனுக்கும் அவள் ஏன் தலை குனிகிறாள் என்று தெரியும்.... தன்னவளுக்காக அவள் மனம் குளிர்வதற்காக சிறு புன்சிரிப்புடன்...

"சரி ஆன்ட்டி, நானும் வருகிறேன்" என்றவனை சட்டென்று நிமிர்ந்து பார்த்தவளுக்கு அவன் பார்வையின் அர்த்தம் புரியவே இல்லை.

ஸ்ரீக்கும் கலாவிற்கும் அவன் பதில் மிகவும் சந்தோஷத்தை அளிக்க, திவ்யாவிற்கோ கலக்கமாக இருந்தது...

"இவர் இப்படி டக்குன்னு இறங்கி வரமாட்டாரே? என்னமோ நடக்கப் போகுது?" என்று நினைத்தவளுக்கு மறுபடியும் அவன் முகம் பார்க்க தைரியமில்லை.

அனைவரும் ஷாப்பிங்கிற்கு உற்சாகமாக கிளம்ப பாக்யத்திற் இதற்கு மேல் அங்கிருப்பது பிடிக்கவில்லை.....

தன் கணவனையும் பிள்ளைகளையும் அழைத்தவள் இப்பொழுதே ஊருக்கு திரும்புவது நல்லது என்று சொல்ல கணேசனுக்கு தன் மனைவியை அங்கிருந்து அப்புறப் படுத்துவதே நல்லது என்று தோன்றியது..

அவர்கள் கிளம்பியதும், மற்ற அனைவரும் ஷாப்பிங் கிளம்ப, தானும் கிளம்புவதற்கு திவ்யா மஹாவுடன் அவள் அறைக்கு செல்ல, அவளைப் பார்த்த கலா....

"என்ன திவ்யா, கிளம்ப போகலையா?" என்றார்..

6:26 PM 70%

https://drive.google.com/file



அவர் தன் மகள் கணவனுடைய அறையில் தான் இப்பொழுது இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டிருக்க, அவளோ கிளம்ப தன் நாத்தனாரின் அறைக்குள் செல்வது வித்தியாசமாக பட்டது...

அது தன் அறைக்குள் இருந்த அர்ஜூனின் காதுகளுக்கும் கேட்டது.

"இல்லம்மா, ஒன்றும் இல்ல.... அண்ணிக் கிட்ட என்ன புடவை கட்டுறதுன்னு கேட்கலாம்னு நினைச்சேன்" என்று தயங்கியவாரே கூறினாள்....

"இவங்க ஊருக்கு போற வரைக்கும் எப்படி சமாளிக்கப் போறோமோ????" என்று அஞ்சியவளாக தன் அண்ணை தன் அருகிலேயே நிற்கவும் வேறு வழியில்லாமல் அர்ஜூனின் அறைக்குள் நுழைய முற்பட்டவள் கதவைத் தட்ட போக,

"கதவை வேற தட்டினால் அதற்கும் அம்மா ஏதாவது கேள்விக் கேட்பார்... கணவன் அறைக்குள் போக எதுக்குடி கதவை தட்டனும் என்று என்று சடுதியில் யோசித்தவள் கதவைத் தட்டாமலே நுழைந்தாள்...

ஆனால் தன் அன்னையை மட்டுமே நினைத்துக் கொண்டு தன் கணவனின் அறைக்குள் நுழைந்தவள் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை..... அங்கு தன் கணவன் அந்த நிலையில் இருப்பான் என்று....

ஷாப்பிங் கிளம்ப என்று உடை மாற்ற அர்ஜூன் தன் சட்டையை கழட்டியவன் வேறு சட்டை மாற்றுவதற்குள் அவள் சட்டென்று நுழைந்து விட கண்ணாடிக்கு முன் நின்ற அவனின் வெற்று முதுகைக் கண்டவளின் இதயம் அதிகமாக துடித்து, உடலில் ஒரு படபடப்பு வர, கால்கள் அதன் போக்கில் தடுமாற ஆரம்பித்து இருந்தது.....

70% 6:27 PM
https://drive.google.com/file
17

அர்ஜுன்..... ஆளை அசத்தும் உயரம், வெண்மையும் செந்நிறமும் கலந்த நிறம், நாள் தோறும் தவறாமல் செய்யும் உடற்பயிற்சிகளின் பலனாக புஜங்கள் இறுக்கி உருண்டு திரண்டிருக்க, கண்ணாடியில் அவனின் பிம்பத்தில் தெரிந்த மார்பு படர்ந்து விரிந்து, ஒட்டிய வயிறு, குறுகிய இடை என்று ஆளையே மயக்கும் பேரழகனாக நின்றிருந்த கணவனைக் கண்டவளின் உடல் முழுவதும் மின்னல் தாக்கியது போல் இருந்ததில் அவளின் சின்ன இதயம் தாளம் தப்பியது...

ஆனால் அவள் மேலும் எதிர்பார்க்காதது ஒன்று இன்றைய நாள் முடிவதற்குள் நடக்கவிருக்க இருந்தது...

அது கிட்டதட்ட தன் கணவனை தான் பார்த்த அதே கோலத்தில் அவன் இன்று தன்னை காணப் போகிறான் என்று!!!!!

தன் கணவனை மேல் சட்டையில்லாத உருவத்தில் பார்த்ததி ஏற்பட்ட அச்சத்திலிருந்து, வெட்கத்திலிருந்து, தவிப்பிலிருந்து அவளால் தன்னை மீட்க இயலவில்லை...

இதில் தான் கதவை தட்டாமல் உள்ளே நுழைந்ததற்கு என்ன சொல்லப் போகிறாரோ என்ற கலக்கம் வேறு....

அவள் தன்னையே பார்க்கிறாள் என்பதனை தன் முன்னால் இருந்த கண்ணாடியில் தெரிந்த அவளின் பிம்பம் வழியாக பார்த்தவன் மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டவன் பின் சட்டென்று அவளை திரும்பி பார்க்க, அது வரை தான் இமைகள் மூடாமல் அவனையே பார்த்துக் கொண்டு இருப்பது அப்பொழுது தான் புரிந்தது திவ்யாவிற்கு...

6:27 PM 70%
https://drive.google.com/file



அதற்கு மேல் அங்கு நிற்க தெம்பில்லாமல் முகம் சிவந்து உடல் துவள வெடுக்கென்று திரும்பியவள் அறையை விட்டு வெளியே செல்ல எத்தனிக்க...

"உங்க அம்மா இன்னும் வெளியில் தான் நிற்கிறாங்க" என்றான் இதழ் விரித்து சிரித்து....

தன் கணவன் வாய்விட்டு சிரித்து இன்று தான் முதல் முறை பார்க்கிறாள்...

அவன் தன் குடும்பத்தாரோடு அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கும் பொழுதோ அல்லது எந்த சந்தர்பத்திலேயாவது அவன் சிரிக்க வேண்டிய சூழ்நிலை அமைந்தாலோ அவன் இதழ் பிரிக்காமல் ஒரு சிறு கோடு போல் தான் புன்னகைத்து இருந்தான்...

ஆனால் இன்று இதழ்கள் விரித்து கலகலவென்று அவன் சிரித்தது அத்தனை கவர்ச்சியாக இருந்தது.... அவனை நோக்கி நிமிர்ந்து ஒரு சில விநாடிகள் அவன் சிரிப்பை பார்த்து ரசித்தவள் மீண்டும் படக்கென தலைக் கவிழ...

அவள் நிலைக்குலைந்து தலைக் குனிந்து நின்ற தோரனையைக் கண்டவனுக்கு அவளின் உருவம் ஏதோ கை தேர்ந்த சிற்பி செதுக்கிய சிற்பம் போல் இருந்தது....

மெல்ல அவளருகில் அழுத்தமான காலடிகளுடன் நிதானமாக அவளை நோக்கி நடந்து வந்தவன் நெருக்கமாக அவளுக்கு அருகே நிற்க அவளுக்குத் தான் மூச்சு முட்டியது.

6:27 PM 70%
https://drive.google.com/file 17



ஒரு விநாடி தாமதித்தவன் அவள் முகத்தை உற்று பார்த்தவாரே....

"அவங்க எல்லோரும் ஊருக்கு போற வரைக்கும் நீ இந்த ரூமிலேயே இரு" என்றான்.....

தன் கணவனா இவ்வாறு சொல்வது என்று அவன் பேசியதில் வியந்து கண்களை அகல விரித்து அவனை நிமிர்ந்து பார்க்க, அவனோ அவள் அருகில் இன்னும் நெருங்கி வந்தான்...

ஏற்கனவே அவனைக் அந்த நிலையில் கண்டதில் இருந்து ஏதோ கயிறுக் கொண்டு தன் கால்களை கட்டியது போல் இருந்தவளுக்கு அவன் நெருங்கி வந்ததும் பின்னால் நகர முடியவில்லை... கால்கள் இரண்டும் தரையோடு ஆழ புதைந்து போனது போல் மரத்து போயிருந்தது.....

"ஐயோ!... எதுக்கு இப்படி இவ்வளவு க்ளோஸ வராங்க" என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது....

"நீ போய் உன் ட்ரெஸ் எடுத்துட்டு வந்து இங்க வச்சுக்கோ" என்று கூறிவிட்டு திரும்பியவன் என்ன நினைத்தானோ மறுபடியும் அவள் அருகில் வந்து...

"அவங்க எல்லோரும் ஊருக்கு போற வரைக்கும் தான்....அதுக்கப்புறம் உன் இஷ்டப்படி நீ மஹா ரூமிலேயே இருந்துக்கலாம்" என்று கூறிவிட்டு நகர, அவளுக்கு தான் மனதிற்குள் எதுவோ நொறுங்கியது போல் இருந்தது...

6:27 PM 70%
https://drive.google.com/file



அவனுக்கு தன்னவளுடன் தனித்து இருப்பதில், அதுவும் நேற்று இரவு தன்னுடைய அறையில் தனக்கு அருகில் கீழே படுத்து இருந்தவளின் மலர் முகத்தை பார்த்து ரசித்துக் கொண்டே உறங்கியதில் அவன் மனம் சிலிர்த்து தான் இருந்தது...

ஆனால் அதே சமயம் தன்னருகாமையிலும், தன்னுடன் தனித்து இருக்கும் சூழ்நிலையிலிலும் அவள் மனதில் ஓடிய சஞ்சலங்களையும், அச்சத்தையும் அவன் அறிந்தே இருந்தான்...

தன் மனையாளுக்கு தன் மீது இன்னும் காதல் வரவில்லை... அதற்கு தடையாக இருப்பது அவளுக்கு தன் மீது இருக்கும் பயமே... அவளின் நிலை அறிந்து அவன் யோசித்து தான் இவ்வாறு சொன்னது...

ஆனால் பாவம் அவளுக்கு தான் அவன் சொன்னதன் நோக்கம் புரியவில்லை...

இன்று காலையில் கண் விழிக்கும் பொழுது அவன் தூங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தது அவளின் மனதிற்கு அத்தனை இதமாக இருந்தது.

திருமணம் எப்படி நடந்திருந்தாலும் திருமணம் திருமணமே..... அவன் அவள் கழுத்தில் கட்டிய தாலி நிஜம் தானே.....

அதுவும் முதல் முறையாக தரையில் தான் என்றாலும் அவன் அறையில் அவனோடு நேற்று தூங்கியது அவளுக்கு ஒரு பூரிப்பை கொடுத்திருந்தது...

6:27 PM 70%
https://drive.google.com/file
17


இது இப்படியே நீடிக்காதா?? என்றும் அவளின் பெண் மனம் ஏங்கி இருக்க, அதனை அவள் கணவன் இவ்வாறு கலைக்க வேண்டுமோ?...

அவளுக்கும் நன்றாக தெரியும்... சொந்த பந்தங்கள் எல்லோரும் இங்கு இருக்கும் வரைக்கும் தான் அவரோடு இருக்க முடியும் என்று..... அதை அவர் ஞாபக படுத்த வேண்டும் என்று இல்லையே.... இதை சொல்லிக் காட்ட அவசியம் என்ன?

மனதிற்குள் துடிதுடித்துப் போனவளின் முகமும் கலவரத்தை அப்பட்டமாக வெளிக்காட்ட அவன் பால்கனிக்கு சென்றும் அசையாமல் சில நொடிகள் அங்கேயே நின்றவள் வேதனை அதிகமாகவே ஏமாற்றத்துடன் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் வெளியேறினாள்.....

தன் அன்னை பார்க்கும் முன் போய் மஹாவின் அறையில் இருந்து ஒரு இரண்டு நாட்களுக்காவது ஆடைகளை எடுத்து இங்கு கொண்டு வர வேண்டும்....

அவர்கள் கண்ணில் பட்டோமோ தொலைந்தோம் என்று நினைத்தவள் வெகு வேகமாக மஹாவின் அறையில் இருந்த தன் ஆடைகளை பெட்டியில் எடுத்து அடுக்க ஆரம்பித்தாள்...

தன்னுடையெ மற்ற பொருட்களையும் பார்த்தவள் "இதனையும் எடுத்திட்டு போய்விடலாம்... அப்புறம் தலை சீவ இங்க வந்தாக் கூட ஏன் வரன்னு அம்மாக் கேட்டாலும் கேட்பாங்க" என்று வாய் விட்டு கூறியவள் அனைத்தையும் எடுத்துக் கொண்டாள்.

இந்த முறை தன் கணவனிற்கும் தன் அன்னைக்கும் இடையில் தவிக்க வேண்டியதாகிப் போனது.....

70% 6:27 PM
https://drive.google.com/file

பெருமூச்செறிந்தவள் சிறிது நேரத்தில் அவன் அறையின் கதவை தட்டியவள் சத்தம் ஏதும் கேட்காததால் அவர் இன்னும் பால்கனியில் தான் இருக்கிறாரோ என்று நினைத்து மெதுவாக அவன் அறைக்குள் நுழைந்தாள்..

அவள் எதிர்பார்த்தது போலே அவன் பால்கனியில் இருக்கவே, பெட்டியை ஒரு ஓரமாக வைத்தவள் அதில் இருந்து இளம் ரோஜா நிற ஷி:.பான் புடவையை எடுத்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள்...

விடியற் காலையிலேயே குளித்து முடித்துவிட்டதால் புடவையை மட்டும் தான் அவள் மாற்ற வேண்டும்.

"இப்பொழுது எங்கு சென்று புடவையை மாற்றுவது? அதுவும் அவர் எப்பொழுது அறைக்குள் வருகிறாரோ தெரியவில்லையே? ஐயோ! அவர் ட்ரெஸ் மாத்தினாரான்னு கூட பார்க்காமல் திரும்பியும் அவர் ரூமிற்கு வந்து சே... இம்சை டா"...

என்று வெளிப்படையாக தலையில் அடித்துக் கொண்டிருக்கும் பொழுதே சரியாக உள்ளே வந்தான் அர்ஜூன்...

அடர்ந்த அரக்கு வண்ண முழுக்கை சட்டையும், அதனை அவன் முட்டி வரை மடித்திருந்ததும், அதற்கு வெளிர் நீல நிற லெவிஸ் ஜீன்ஸும் அணிந்திருந்ததும் அவனுடைய நிறத்திற்கும், உயரத்திற்கும், உடல்வாகிற்கும் அத்தனை கவர்ச்சியாக இருந்தது....

இதில் வெளியே பால்கனியில் இருந்து வந்த சூரிய வெளிச்சத்தின் கதிர்கள் அவன் தலை முடியில் பட்டு மின்ன, அவனுடைய

https://drive.google.com/file

பேரழகு அவளின் உள்ளத்தை வசீகரிக்க முதன் முறையாக தன் கணவனை மனைவியின் கண்களோடு ரசிக்க ஆரம்பித்தாள்...

அவளின் பார்வையில் தெரிந்த மயக்கத்தில் அவள் சிலையென தன்னை ரசித்துக் கொண்டு இருப்பதை தானும் ரசித்தவன் தொண்டையை செரும இந்த உலகத்திற்கு வந்தவளுக்கு தனக்கு என்ன ஆனது என்றே புரியவில்லை.....

முதன் முறையாக தன் மனைவி தன்னை கணவனாக இரசிப்பதை அர்ஜூன் உணர்ந்துக் கொண்ட அழகிய தருணம் அது...

தடுமாறிக் கொண்டு இருப்பவளை ஆழ்ந்து நோக்கியவன் அவள் சட்டென்று தலை கவிழவும் அவள் இன்னும் புடவையை கையில் வைத்திருந்ததைப் பார்த்து அவள் தேவையை உணர்ந்தவனாக அவளுக்கு தனிமை கொடுக்க அவன் அறையை விட்டு வெளியேறினான்.

அவன் வெளியேறியதும் இத்தனை நேரம் இறுக்கி பிடித்து வைத்திருந்த மூச்சை ஆழ விட்டவள் மடமடவென்று புடவை மாற்ற ஆரம்பித்தாள்...

எளிமையான அலங்காரத்தில் தலையை மீண்டும் நன்றாக சீவி தளர பின்னலைப் போட்டவள் கீழே வர கதவை திறக்க, அது வரை அவர்கள் அறையின் வாயிலிலேயே தன்னுடைய அலை பேசியை பார்த்துக் கொண்டிருந்தவன் கதவு திறந்த சத்தத்தில் நிமிர்ந்து பார்க்க, பார்த்தவன் ஸ்தம்பித்து நின்றான்.....

அன்று அலர்ந்த ரோஜாப் பூவைப் போல் இளம் ரோஜா நிற புடவையில் பளிச்சென்று இருந்த தன்னுடைய மனைவியை ரசனையோடு

ரசித்துப் பார்க்க, கண்கள் சிமிட்டாமல் சுற்றம் அறியாமல் தன்னையே பார்த்திருந்தவனின் பார்வையில் தன்னை இழந்தாள் திவ்யா.....

முதன் முறை தன் கணவன் தன்னை மனைவியாக இரசிப்பதை அவள் உணர்ந்துக் கொண்ட தருணம் இது...

ஆக கணவன் மனைவி இருவருமே தங்களின் இதயத்தில் அரும்பியிருந்த காதலை பகிரங்கமாக வெளிப்படுத்தி இருக்காவிட்டாலும் விழிகளின் வழிகளிலே தங்களுடைய உணர்வுகளை உணர்த்திய நிமிடங்கள் அது....

திவ்யா படிகளில் முன் இறங்க அர்ஜூன் அவளைப் பின் தொடற, அவர்கள் இருவரும் ஒன்றாக கிளம்பி வருவது ஸ்ரீக்கும் பாலாவிற்கும் வியப்பாக இருந்தது....

ஒரு முறை தன் மனைவியை அவன் வெறுப்பதைப் போலவும், மறு முறை அவளை விரும்புவதைப் போலவும் நடந்துக் கொள்ளும் மகனுடைய எண்ணத்தை புரிந்துக் கொள்ள முடியாமல் அவனுடைய பெற்றோர் குழும்பித்தான் போனார்கள்.....

திவ்யாவின் அருகில் வந்த ஸ்ரீ...

"இந்த பேபி பிங்க ஸாரியில் ஃப்ரெஷ் ரோஸ் மாதிரியே இருக்க திவ்யா" என்றவர் அவளை திருப்பி நன்றாக இறுக்கித் தொடுத்த மல்லிகையை நான்கு சரங்களாக தலையில் வைத்தார்.

மஹாவின் தலையிலும் பூவை வைக்கப் போக....

6:28 PM
https://drive.google.com/file

"மாம், ஜீன்ஸ் டாப்ஸ் போட்டிருக்கேன்.... இப்போ போய் பூ வைக்கிறீங்களே.... இந்த ட்ரெஸுக்கு இது எடுக்காது" என்றவள் எதேச்சையாக வினோத்தைப் பார்க்க.

அவளின் வார்த்தைகளில் வினோத்தின் முகம் வாடியதைக் கண்டவள் தானும் வாடினாள்...

சட்டென்று... "சரி நீங்க எல்லாம் காரில் ஏறுங்க... மாம்... நீங்க பூவைக் குடுங்க" என்றவள்,

விருவிருவென்று தன் அறைக்குள் சென்று தன் மனம் விரும்பியவனின் முக வாட்டத்தை நீக்கவே அழகான சிகப்பு கலரில் அனார்கலி சுடிதாரைப் போட்டுக் கொண்டவள் மல்லிகைச் சரத்தையும் தன் தலையில் சூடி மகிழ்ச்சி தர வந்து காரில் அமர்ந்தாள்.

அனைவரும் காரில் ஏறப்போக பாலா முன் இருக்கையில் அமர, திவ்யா பின் இருக்கையில் ஸ்ரீயுடனும் மஹாவுடனும் அமர்ந்துக் கொள்ள அர்ஜுன் காரை செலுத்தினான்...

ஸ்ரீ வழக்கமாக செல்லும் ஒரு மிகப் பெரிய டெக்ஸ்டைல் ஷோரூமின் வாசலில் அர்ஜுன் காரை நிறுத்த, அவர்களின் பின்னால் இன்னொரு காரை அருண் ஓட்ட, அவனுடன் வந்த கலாவிற்கு தான் என்ன செய்வது என்று தெரியவில்லை....

அவர் கொண்டு வந்திருந்த பணத்தில் நிச்சயம் இது போல் இடத்தில் எதுவுமே வாங்க முடியாது..

ஸ்ரீக்கு அலை பேசியில் அழைத்தவர்...

70% 6:28 PM
https://drive.google.com/file

"ஸ்ரீ, இது ரொம்ப பெரிய கடை மாதிரி இருக்குடி.... என் கிட்ட அவ்வளவு பணம் கிடையாது" என்று தயங்கிவாறே சொல்ல அவரும் உடனே...

"அர்ஜூன்... இந்த கடைக்கு அப்புறம் வருவோம். இப்போ (வேறு ஒரு கடை பெயர் சொல்லி) அங்கு போலாம்" என்றார்..

அர்ஜூன் தன் வாழ்நாளில் அது பேன்ற கடைகளுக்கு சென்றதில்லை.... இருந்தும் ஒன்றும் சொல்லாமல் காரை எடுத்தவன் நேரே அந்த கடையில் போய் நிறுத்தினான்.

அனைவரும் உள்ளே செல்ல, திவ்யாவின் மனதில் மட்டும் சொல்ல முடியாத வலி ஏற்பட்டது... அது தன் ஏழ்மையினால் ஏற்பட்ட கழிவிரக்கத்தினால் வந்த வலி...

"இவங்க வசதிக்கும் நமக்கும் ஏணி வச்சாக் கூட எட்டாது... இப்போ அம்மாவும் அப்பாவும் எவ்வளவு அசிங்கப் படப் போகிறார்களோ தெரியலையே" என்று நினைத்தவளின் மனம் வழக்கம் போல் தன் இஷ்ட தெய்வமான முருகனிடமே சரணடைந்தது....

"முருகா, நீதான்பா இன்னைக்கு யார் மனசும் கஷ்டப்படாம பார்த்துக்கனும்"

கடையின் உள்ளே நுழைந்த அர்ஜூனிற்கு நன்றாக தெரிந்துப் போனாது இங்கு எந்த உடை எடுத்தாலும் தான் அதைப் போடப் போவது இல்லை என்று...

ஆனால் அவர்கள் மனம் கோணாமல் நடக்க முடிவு செய்தவன் அமைதியாக இருந்து விட, பெண்கள் அனைவரும் புடவைப் பிரிவைத் தேடிப் போக, சிவசுப்ரமணியமும், அருணும், வினோத்தும் அர்ஜுனோடு சேர்ந்து ஆண்களின் பிரிவைத் தேடி போனார்கள்..

ஒரு வழியாக அவர்களுக்கு வேண்டியதை எடுத்துவிட்டு பெண்கள் பிரிவுக்கு வர, அப்போழுது தான் ஸ்ரீ....

"திவ்யா.... நீ அன்னைக்கு மஹா போட்டிருந்த சுடிதார் நல்லா இருந்துச்சுன்னு சொன்னல்ல.... அது அர்ஜுன் முன்னாடி கார நிறுத்தினான்ல.... அந்த கடைல தான் வாங்கியது.... நீ வேண்டும் ஆனால் அர்ஜுன் கூட போய் அங்க அதே மாதிரி இன்னொரு சுடிதார் இருக்கான்னு பார்த்திட்டு வா" என்றார்...

ஸ்ரீயின் பேச்சில் அதிர்ந்தவள் படபடப்புடன் அர்ஜுனை நிமிர்ந்துப் பார்த்து...

"இ... இல்ல அத்த... பரவாயில்லை... அதான் இங்க புடவை எடுக்கிறோம் இல்ல.... அது போதும்" என்றாள் வார்த்தைகள் தடுமாறியவாறே...

"அர்ஜுன்... நீ கூட்டிட்டுப் போப்பா" என்று ஸ்ரீ கூற, அங்கு அத்தனை பேர் இருப்பதை பார்த்தவன் வேறு வழியில்லாமல் "ஓகே மாம் என்றான்...

திவ்யாவைப் பார்த்து தலையை அசைத்து வா என்பது போல் சைகை செய்தவன் நடக்க ஆரம்பிக்க ஒரு விநாடி மனதிற்குள் தடுமாறிய திவ்யா அவனைப் பார்த்தவாறே தன்னை மறந்தவாறு நின்றிருக்க, அவன் அதற்குள் கீழே இறங்கிக் கொண்டிருந்தான்...

70% 6:28 PM
https://drive.google.com/file

ஓட்டமும் நடையுமாக அவனைப் பின் தொடர்ந்தவள் அவனை அடையும் முன் அவன் காரை அடைந்திருந்தான்.

"முன்னாடி உட்காருவதா? பின்னாடி உட்காருவதா? முன்னாடின்னா கடவுளே திரும்பவும் அவர் கூட தனியா உட்காரனுமா?" என்று சிந்திச்சுக் கொண்டிருக்கும் பொழுதே அவன் எட்டி அவளின் பக்க கதவை திறந்து விட, சட்டென்று ஏறி அமர்ந்தாள்.

அது ஒரு மிகப் பிரமாண்டமான டெக்ஸ்டையில்ஸ் ஷோரூம்.....

உள்ளே நுழைந்தவுடன் அர்ஜூன் யாருக்கோ அலை பேசியில் அழைக்க சில நிமிடங்களில் ஒரு இளைஞன் அவர்களை நோக்கி வந்தவன்....

"ஹாய் அர்ஜூன்... லாங் டைம் நோ ஸீ [Long time no see] " என்றான்...

ராகேஷ்.... அந்த கடையின் முதலாளி, அர்ஜூனின் நண்பன்.....

வந்தவன் அர்ஜூனின் கரத்தை குலுக்கியவாறே திவ்யாவை பார்க்க அவன் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துக் கொண்ட அர்ஜூன் புன் சிரிப்புடன்.....

"ஹாய் ராகேஷ்... மீட் மை வை∴ப் திவ்யா [Meet my wife, Dhivya]" என்றான்.

6:29 PM 69%
https://drive.google.com/file



அர்ஜூனின் சொற்களை கேட்ட திவ்யாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை... தன் கணவன் தன்னை மனைவியாக ஏற்றுக் கொண்டானா என்று?

ஆனால் அதே சமயம் "மனைவி என்று அறிமுகப் படுத்தவில்லை என்றால் என்ன என்று அறிமுகப்படுத்துவார்? அவர் வேறு வழியில்லாமல் சொல்கிறார்... அதை நினைத்துக் கொண்டு நீ உடனே மனதில் ஒரு பெரிய கோட்டையைக் கட்டாதே" என்று அவள் இளகிய மனம் இரு தலைக் கொள்ளியாய் தவித்தது...

ராகேஷ் அவளைப் பார்த்து "ஹாய்" என்று கரம் நீட்ட, அவள் இரு கரம் கூப்பி வணக்கம் என்றாள்....

அவள் தன் கரம் பற்றாமல் வணக்கம் கூறியதில் புன்னகை புரிந்த ராகேஷ் "ஓகே அர்ஜூன், என்ன பார்க்கிறீங்க?" என்றான்..

"பட்டு புடவை செக்ஷனுக்கு கூட்டிட்டு போ ராகேஷ்" என்று அர்ஜூன் கூற,

"அத்தை சுடிதார் தான பார்க்க சொன்னாங்க... இவங்க என்ன புடவை செக்ஷனுக்கு போ என்கிறாங்க..... சரி அத்தைக்கும் மஹாவுக்கும் எதுவும் வாங்கனும்னு நினைக்கிறாங்க போல் இருக்கு" என்று நினைத்தவள் அவர்களை பின் தொடர, அந்த பிரமாண்டமான பட்டு புடவைகளின் பிரிவைப் பார்த்தவள் வாயைப் பிளந்துக் கொண்டு நின்றாள்..

அவர்கள் கிராமத்தில் அங்கொன்று இங்கொன்றுமாக ஒரு சில துணி கடைகள் தான் இருக்கும்...... ஆனால் நல்ல புடவைகள் வாங்க வேண்டும் என்றால் வெளியூருக்கு தான் போக வேண்டும்...

novels

https://drive.google.com/file 17

ஆனால் அங்கு கூட இது போன்ற அளவில் பெரிய கடைகள் இல்லை.

"அம்மாடி! கடையே இவ்வளவு அழகா இருக்குன்னா அப்போ புடவைங்க எவ்வளவு அழகு அழகா இருக்கும்?" என்று நினைத்துக் கொண்டு சிலை போல் அசையாமல் நிற்க,தன்னுடைய கண்களை அகல விரித்து ஆச்சரியத்துடன் கடையைப் பார்த்த தன் மனையாளின் பாந்தமான அழகில் மயங்கியவனுக்கு அவளின் குழந்தை தனமான முகமாறுதல்கள் அத்தனை பிடித்திருந்தது...

"மனசில அவளை அங்குலம் அங்குலமாக ரசிக்கிற அர்ஜூன்.... அவள் பேரில் உனக்கு எப்பவோ ஒரு ஈடுபாடு வந்திருச்சு.... ஆனால் அதை அவகிட்ட எப்போ வாய்விட்டு சொல்லப் போற?" என்றது அவன் மனசாட்சி...

ஆனால் அதை எல்லாம் காது கொடுத்து கேட்க அவனுக்கு எங்கே நேரம்? அவன் தான் தன் மனைவியை பார்த்து ஜொள்ளு விட்டு கொண்டு இருக்கிறானே.

தன்னை வலுக்கட்டாயமாக இழுத்து தன்னிலைக்கு கொண்டு வந்தவன் இன்னமும் சிலை போன்று நின்று கொண்டு இருந்தவளை பார்த்து,

"ஆச்சர்யமா பார்த்தது போதும், வா" என்ற அழைக்க,

அவன் குரலில் சுய நினைவுக்கு வந்தவள் கடையை சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே அவனை பின் தொடர்ந்தாள்.

6:29 PM
https://drive.google.com/file



அவளைப் பொறுத்தவரை அந்த நிமிடம் அந்த கடையின் அழகு தான் அவள் கண்களை பறித்து இருந்தது... கணவனின் பார்வையோ அல்ல அவனின் தவிப்போ அவளுக்கு தெரியவில்லை....

அங்கு இருந்த விற்பனையாளர்களிடம் ராகேஷ்...

"இவங்களுக்கு நல்லா காஸ்ட்லி சாரீஸ் காமீங்க" என்றவன் திரும்பி...

"அர்ஜூன்... டு யூ வாண்டு டு ஹாவ் சம்திங் டு ட்ரிங்க்? [Arjun, do you want to have something to drink?]" என்றான்.

"இட்ஸ் ஓகே ராகேஷ்" என்ற அர்ஜூன் திவ்யாவிடம் திரும்பியவன் அவள் இன்னமும் கடையை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு இருக்க விற்பனையாளர்களிடம் திரும்பி புடவைகளைப் காட்ட சொல்ல....

"ஓகே, அர்ஜூன்.... ஸாரீஸ் எடுத்தவுடன் என்னை கூப்பிடு" என்று கூறி விட்டு ராகேஷ் விடைப் பெற அர்ஜூன் புடவைகளில் கவனத்தை செலுத்த ஆரம்பித்தான்.....

ஆனால் இன்னமும் யாருக்கு வச்ச விருந்தோ என்று திருதிருவென்று விழித்தவாரே திவ்யா நிற்க அவளை திரும்பி பார்த்தவன்,

"புடவை எனக்கா எடுக்க வந்தேன்... நீ பாட்டுக்கு அங்கேயே நின்னுக்கிட்டு இருக்க.... வந்து செலக்ட் பண்ணு" என்றான்.

6:30 PM
https://drive.google.com/file


"யாருக்குங்க? அத்தைக்கா? மஹா அண்ணிக்கா?" என்று சிறு பிள்ளை போல் கேட்க.....

"ஏன்? நீ புடவை கட்ட மாட்டியா?" என்று அவன் கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்க அவன் கோபம் புரியாமல் "இதென்ன கேள்வி... இப்போ கூட புடவைத் தான கட்டியிருக்கேன்" என்று குழந்தைத் தனமாக நினைத்தவள்,

"ம்ம்... ம்ம்...கட்டுவேன்" என்க,

"அப்ப சரி, முதல்ல உனக்கு ஒன்னு எடு" என்றான்.

எனக்கா? என்று வியப்பும் கலக்கமுமாக அவனைப் பார்த்தவள் தயங்கியவாறே...

"இ.. இல்லைங்க... எ.. எனக்கு புடவை எல்லாம் வேண்டாம்" என்க,

சலிப்படைந்தவன் அவளை நெருங்கி வந்து அவள் காதிற்கு அருகில் குனிந்து...

"எல்லாரும் பார்க்கிறாங்க... சும்மா பேசிட்டு இருக்காம புடவைய எடுக்கிற வழியப் பாரு..... எடுத்துட்டு கூப்பிடு" என்றவன் தள்ளி சென்று தன்னுடைய அலை பேசியில் யாருக்கோ அழைத்து பேச துவங்கினான்...

"இவ்வளவு பெரிய கடையையே இப்பொழுது தான் வாழ்க்கையில் முதன் முதலில் பார்க்கிறேன்... இதுல புடவை அதுவும்

69% 6:30 PM
https://drive.google.com/file

தனியா எடுன்னா எப்படி எடுக்கிறது.... சே அம்மாவும் கூட வந்திருக்கலாம்" என்று நினைத்தவள் தயக்கத்துடனே பார்க்க ஆரம்பித்தாள்...

சிறிது நேரத்திலேயே மெஜந்தா நிறத்தில் முந்தானையில் தங்க ஜரிகையில் அழகான பூச்செண்டுகள் விரிந்து இருப்பது போல் நெய்யப்பட்டிருந்த பட்டுப் புடவையை எடுத்தவள் அதன் அழகில் லயித்து இருந்ததால் அதன் விலையை பார்க்கக் கூட யோசனையில்லாமல் அவனை திரும்பி பார்க்க, அவள் அருகில் வந்தவனின் கண்களையும் அந்த புடவையின் அழகு கவர இளம் புன்முறுவலுடன் "குட் செலக்ஷன்" என்றான்.

"சார்... நீங்க பில் போடுங்க.... நாங்க புடவைக்கு குஞ்சங்கள் (Tassels) போடுறோம்" என்று விற்பனையாளர் கூற பணத்தை செலுத்த சென்றவனின் பின்னால் சென்ற திவ்யா அவன் பணம் கொடுக்கும் பொழுது தான் கவனித்தாள் அவள் எடுத்த புடவையின் விலையை...

பார்த்தவளுக்கு கிட்டத்தட்ட மயக்கமே வந்தது....

அவள் வாழ்நாளில் இவ்வளவு விலை உயர்ந்த புடவைகளை கண்களால் பார்த்தது கூட இல்லை...

"புடவைகள் இவ்வளவு விலையில் கூட விற்குமா? அச்சச்சோ!!! விலையைக் கூட பார்க்காமல் யாராவது புடவை எடுப்பாங்களா திவ்யா?" என்று மனதிற்குள்ளே அரண்டவள் அவன் அருகில் தயங்கிவாறே வந்து....

"தப்பா நினைச்சிக்காதீங்க..... நான் விலையை பார்க்கல.... இவ்வளவு விலையில எனக்கு புடவை வேண்டாம்" என்றாள் கண்களில் கலக்கத்துடன் மெல்லிய குரலில்....

69% 6:30 PM
https://drive.google.com/file

அவளை திரும்பி பார்த்தவன் எதுவும் பேசாமல் பணத்தை செலுத்திவிட்டு "சுடிதார் செக்ஷன் எங்கு இருக்கு?" என்று கேட்க...

"ஏற்கனவே இவ்வளவு விலையில் புடவை எடுத்தாச்சு... இப்போ சுடிதார் வேற எதற்கு?" என்று நினைத்தவள் அதை அவனிடம் மெதுவாக சொல்ல,

"கொஞ்சம் பேசாமல் வர்றியா?" என்றான்...

சுடிதார் பிரிவுக்கு போனவளுக்கு என்ன கேட்பது என்று தெரியவில்லை...

"மஹா எந்த மாதிரி போட்டிருந்தா தெரியுமா? ஞாபகம் இருக்கா" என்று அர்ஜூன் கேட்க திருதிருவென்று விழித்த திவ்யாவைப் பார்த்தவன் மஹாவை அழைத்தான்.....

அவள் "அந்த சுடிதார் போட்டு எடுத்த :.போட்டோ ஒன்னு இருக்கு" என்றவள் அதனை அவன் அலை பேசிக்கு அனுப்ப, புகைப்படத்தை திவ்யாவிடம் காட்டியவன்.....

"இதே மாதிரி தான் வேண்டுமா? இல்லை வேற லேட்டஸ்ட் டிசைன் ஏதாவது பார்க்கிறியா?" என்றான்...

அவளுக்கோ ஏற்கனவே எப்பொழுதடா வீட்டிற்கு போவோம் என்றிருந்தது... இதில் இது வேறா? என்று நினைத்தவள்,

"எப்படி இருந்தாலும் பரவாயில்லை.... சுடிதார் இல்லாட்டிக் கூட பரவாயில்லை" என்றவளை மீண்டும் ஒரு பார்வை பார்த்தவன் அங்கிருந்த விற்பனையாளரை அணுகி புகைப்படத்தை காண்பித்து..

"இந்த ஃபோட்டோவில் இருக்கிற மாதிரி சுடிதார் இருக்கா?" என்றான்...

"அதே மாதிரி கிடைக்கறது கஷ்டம் சார்... இருந்தாலும் பார்க்கிறேன்... ஆனால் இதை விட புது டிசைன்ஸ் இப்போ வந்திருக்கு அதையும் பார்க்கிறீங்களா?" என்க...

"யா ஷ்யூர்" என்றான்.

மஹா அணிந்திருந்த அதே மாடல் சுடிதார் கிடைக்கவில்லை என்பதால் அதனை விட விலை அதிகமாக நல்ல டிசைனில் அவனே அவளுக்கு ஒரு சுடிதாரை தேர்ந்தெடுத்தான்...

ஒரு வழியாக வேண்டியதை வாங்கியவர்கள் காரில் ஏற அவளுக்குத் தான் ரொம்ப செலவு ஆகிவிட்டதோ? என்று கலக்கமாக இருந்தது.

காரில் அமர்ந்தவள் அவனிடம் தயங்கியவாரே மெதுவே...

"எங்க ஊரில நல்ல புடவை கடைங்க அவ்வளவு கிடையாது... பக்கத்து ஊரில தான் நல்ல கடைங்க இருக்கு..... ஆனால் எனக்கு தனியா போகப் பயம்.... எப்போதும் எங்க அம்மா தான் எனக்கு ட்ரெஸ் எடுப்பாங்க.... அதனால தான் இன்னைக்கு புடவை எடுக்கும் போது நா அது விலைய பார்க்கல..... நீங்க பேசாம அதை அத்தைக்கு, இல்லன்னா மஹா அண்ணிக்கு கொடுத்திடுங்க" என்று கண்களை அகல விரித்து

69% 6:31 PM
https://drive.google.com/file

தலையை ஆட்டி ஆட்டி சின்ன பெண் போல் பேசும் மனைவியை கூர்ந்து பார்த்தவன்,

"ஏன் உனக்கு பிடிக்கலையா?" என்றான்...

இதுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் தலை குனிய,

"பிடிக்காம தான் அந்த புடவைய எடுத்தியா? கேட்டா பதில் சொல்லனும்... உனக்கு பிடிச்சிருக்கா? பிடிக்கலையா?" என்றான்.

அவள் தலையை குனிந்தவாரே மெதுவாக ஆம் என்று தலை அசைக்க,

"அப்போ பேசாம வா" என்றவன் காரை கிளப்பினான்.....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 12

இதற்கு மேல் தன் கணவனை எதிர்த்து பேசும் தைரியம் திவ்யாவிற்கு இல்லை....

ஒன்றும் பேசாமல் அமைதியாக வந்தவளுக்கு ஒரே குழப்பம் "இப்போ எங்க போகிறோம்? பழைய கடைக்கா? அல்லது வீட்டிற்கா? என்று..

ஏனெனில் என்ன தான் அவள் சென்னைக்கு புதிது என்றாலும் தன் கணவன் தான் வந்த வழியில் திரும்பி காரை செலுத்தவில்லை என்பது நன்றாக புரிந்தது....

"வீட்டிற்கு என்றால் நிச்சயம் அத்தையும் யாரும் வந்திருக்க போவதில்லை..... அங்குப் போய் எப்படி இவருடன் தனியாக இருப்பது? ஒரு வேளை சமையல் அறையில் தெய்வானை அக்காவும் அல்லியும் இருந்தால் அவர்களுடன் இருந்து விட வேண்டியது தான்... ஆனால் கார் போகும் வழியைப் பார்த்தால் வீட்டிற்கு போவது போலும் தெரியவில்லை..... அவர்கள் முன்னர் சென்ற கடைக்கு செல்வது மாதிரியும் தெரியவில்லை....."

அவளின் முகம் தெளிவில்லாமல் ஏதோ சிந்தனையில் இருப்பதை கண்டவனுக்கு அவள் மனதில் ஓடிய எண்ணங்கள் புரிந்து இருந்தது.... இருந்தும் தான் எங்கு செல்கிறோம் என்று அவன் சொல்லவில்லை...

அவளின் குழப்பத்திற்கு விடை அளிப்பது போலவே அவன் ஒரு புது சாலையில் காரை செலுத்தியவன் சிறிது நேரத்தில் வழியில் மற்றொரு கடை வாயிலில் நிறுத்தினான்.....

அவன் காரை நிறுத்தவும் இங்கு எதற்கு வந்திருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டே அவனை திரும்பி பார்க்க....

சாலையில் கண்களைப் பதித்துக் கொண்டே....

"ஐ ஹாவ் டு கெட் சம்திங்.... பட் ஐ கெனாட் பார்க் தி கார் ஹியர்.... ஐ வி ட்ராப் யூ... கேன் யூ வெயிட் ஃபார் மி அக்ராஸ் தி ரோட்? [I have to get something.... But I cannot park the car here... I will drop you...Can you wait for me across the road?]" என்றவன் அவளை திரும்பி பார்க்க, அவன் ஆங்கிலம் புரியாததால் திருதிருவென்று விழித்திருந்தாள் அவனின் அழகிய மனைவி.....

தான் மும்பையில் இருந்து திரும்பி வந்த அன்று ஆங்கிலம் தெரியுமா என்று கேட்க அவள் பட்டென்று தன் படிப்பைப் பற்றி சொன்ன நிமிடங்கள் அழகாக விழிகளின் முன் படற....

உதட்டில் வளைந்த சிரிப்பை மிகவும் சிரமப்பட்டு தன் முகத்தை வேறு பக்கம் திருப்பி அடக்கியவன் மீண்டும் அவள் புறம் திரும்பி....

"எனக்கு கொஞ்சம் திங்ஸ் வாங்கனும்... ஆனால் இங்க கார் பார்க் பண்ண முடியாது.... நான் பார்க்கிங் லாட்ல கார பார்க் பண்ணிட்டு வரேன்.... அதனால நீ ரோட்ட கிராஸ் பண்ணி அந்த கடையில் போய் நில்லு.... நான் வந்திடுறேன்" என்றான்.

68% 6:33 PM
https://drive.google.com/file



"ம்ம்ம்" என்றவள் இறங்க, அவன் காரை நிறுத்தும் இடத்தை நோக்கி வண்டியை செலுத்தினான்...

அவன் சொன்ன கடை சாலைக்கு மறு பக்கம் இருந்தது... அதற்கு சிறிது தூரம் நடக்க வேண்டும்....

அது மட்டும் அல்லாமல் அது பெரிய பிரதான சாலை என்பதால் கூட்டமாக வேறு இருக்க, இரு பக்கமும் பார்த்துக் கொண்டே நின்றவளுக்கு எப்படி இதை கடக்கப் போகிறோம் என்றே கவலையாக இருந்தது...

சில நிமிடங்கள் அப்படியே நிற்க திடீரென்று மழை வேறு தூர ஆரம்பித்தது....

பேசாமல் இந்த பக்கமே ஒரு கடையில் நின்றுக் கொள்வோமா என்று யோசித்தவளுக்கு எதிரே இருக்கும் அந்த கடையில் தானே நின்று இருக்க சொன்னார்... திரும்பி வந்து நாம் அங்கு இல்லையென்றால் வேறு வினையே வேண்டாம்.....

யோசித்தவள் வேறு வழியில்லாமல் மற்றவர்களுடன் சேர்ந்து சாலையை கடக்க அதற்குள் மழை வலுவாக பிடிக்க ஆரம்பிக்க விடுவிடுவென்று நடக்க ஆரம்பித்தாள்...

என்ன தான் வேகமாக நடந்தாலும் சென்னையின் கூட்டத்தில் அவளால் மழை வலுப்பதற்குள் கடையை அடைய முடியவில்லை..

மழையில் முழுவதுமாக நனைந்து விட எதிரே இருந்த கடைக்குள் நுழைந்துக் கொள்ளலாமா என்று நினைத்தவள் அப்பொழுது தான் கவனித்தாள் தான் இருந்த நிலையை....

68% 6:33 PM
https://drive.google.com/file

சட்டென்று அடித்த மழையில் அவள் கட்டியிருந்த வெளிர் ரோஜா நிற ஷி:ஃபான் புடவை ஒட்டுமொத்தமாக நனைந்திருக்க, மெலிதான புடவை அவளின் உடலோடு ஒட்டி அவள் உடலின் அங்கங்களை தெளிவாக எடுத்துக்காட்ட அவளுக்கு அந்த நிலமையில் கடைக்குள் செல்வதற்கு கூச்சமாக இருந்தது...

ஆனால் அதே சமயம் அர்ஜூன் சென்ற திசையும் அவளுக்கு புலப்படவில்லை....

வேறு வழியில்லாமல் புடவை முந்தானையை எடுத்து தன் மேல் போர்த்திக் கொண்டவள் அந்த கடையின் வாசலில் இருந்த கூடாரத்திற்கு கீழ் மேலும் மழையில் நனையாதபடி நின்றுக் கொண்டாள்....

நின்றவள் சிறிது நேரம் சென்றே கவனித்தாள் அவள் அருகில் கூட்டத்திற்கிடையில் மூன்று வாலிபர்கள் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருப்பதை.....

என்ன தான் தான் புடவையை இழுத்து மூடியிருந்தாலும் மழையில் நனைந்திருந்த மெலிதான ஷி:ஃபான் புடவை அவளின் இளமையை, அழகிய உடலின் நெளிவு சுளிவுகளை அப்பட்டமாக வெளிக் காட்டத் தவறவில்லை..

திவ்யாவை சாலையில் இறக்கிவிட்ட அர்ஜூன் கார் நிறுத்தும் இடத்திற்கு செல்ல, பாதி வழியில் மழை வருவதைப் பார்த்து வீட்டிற்கு திரும்ப நினைத்தவன் காரை திருப்ப எத்தனிக்க அப்பொழுது தான் கவனித்தான் அது ஒரு வழி சாலை என்று..

6:33 PM 68%
https://drive.google.com/file



இப்பொழுது காரை சுற்றி எடுத்து சென்றால் திவ்யா இருக்கும் கடையை அடைய சிறிது நேரம் பிடிக்கும்....

அது வரை அவள் கடையில் தனியே இருக்க வேண்டும் என்று நினைத்தவன் காரை நிறுத்தி விட்டு நடக்க ஆரம்பிக்க அவன் நல்ல நேரம் மழை நின்றிருந்தது...

சிறிது நேரத்திலேயே திவ்யா இருந்த கடையை அடைந்தவன் அவள் கடைக்குள் செல்லாமல் வாயிலிலேயே நிற்பதைப் பார்த்துக் குழப்பமாக "கடைக்குள் போவது தானே? எதுக்கு இங்கு நிற்கிறாள்"? என்று எண்ணிக் கொண்டே அவளை நோக்கி நடந்தான்...

அர்ஜூன் எந்த வழியில் வருவான் என்று தெரியாமல் திவ்யா அவனை தேடி அங்கும் இங்கும் பார்க்க,

அதற்குள் அவளையே வைத்த கண் வாங்காமல் அவளை கண்களாலேயே விழுங்கிவிடுவது போல் பார்த்திருந்த அந்த வாலிபர்கள்...

"டேய், அந்த பொண்ணு தனியா வரலைப் போல.... யாரையோ தேடுதுடா" என்றார்கள்....

ஏற்கனவே மழையில் நனைந்தது கூச்சமாக இருக்க, இதில் அந்த வாலிபர்களின் கிண்டல் வேறு.....

இதில் தன் கணவன் தன்னை இந்த நிலையில் பார்த்தால் என்ன செய்வது? என்று நினைத்தவளுக்கு அங்கு நின்றுக் கொண்டிருப்பதே நெருப்பில் இருப்பது போல் இருந்தது...

68% 6:34 PM
https://drive.google.com/file



அவளை நீண்ட நேரம் காக்க வைக்காமல் அங்கு வந்த அர்ஜூன் அவளின் நிலையை சற்றும் கவனியாமல் "ஏன் உள்ளே போகலை?" என்று கூறியவன் அவள் அருகில் வந்ததும் தான் அவளைக் கவனித்தான்...

"ஷிட்.... அதுக்குள்ள இவ்வளவு நனைஞ்சிட்டியா?" என்றவன்,

"ஓகே... நீ இங்கேயே ஒரே ஒரு நிமிஷம் வெயிட் பண்ணு.... நான் இப்போ வந்திடுறேன்" என்று கூறியவன் கடைக்குள் சென்றான்.....

வெகு விரைவிலேயே திரும்பி வந்தவன் மழை மீண்டும் வழுக்க ஆரம்பிக்க,

"மழை திரும்ப பிடிச்சிட்டது..... நீ ஏற்கனவே ரொம்ப நனைஞ்சிட்ட..... அதனால நீ இங்கேயே இரு,.... நான் காரை எடுத்திட்டு வந்திடுறேன்" என்று நகர நினைக்க,

திவ்யா அவளையும் அறியாமல் சட்டென்று அவன் கரத்தைப் பிடித்து இழுத்தாள்...

நகர்ந்தவன் வெடுக்கென்று தன் கை இழுக்க பட என்னவென்று அவளைப் திரும்பிப் பார்த்தவன் அவள் பதட்டத்துடன் அவனைப் பார்த்திருக்க,

"என்ன?" என்று புருவத்தை உயர்த்தி கேட்க அவளுக்கு எவ்வாறு தன் நிலையை எடுத்து சொல்வது என்று தவிப்பாக இருந்தது.....

6:34 PM 68%
https://drive.google.com/file



அவன் அருகில் வந்தவள் கலக்கத்தை சுமந்திருந்த முகத்துடன் "நானும் உங்களோடேயே வரேனே" என்றாள்.....

"இந்த மழையிலையா? வேண்டாம்... நான் போய் கார எடுத்திட்டு வந்து விடுகிறேன்"

"இல்லைங்க.... அதான் ஏற்கனவே நனைஞ்சிட்டேனே.... அதனால உங்க கூடவே வரேன்"

அர்ஜூனிற்கு இதென்ன பிடிவாதம் என்று சலிப்பாக இருக்க "ம்ப்ச்" என்றவன் அவளின் முகத்தை உற்று நோக்கியவன் அப்பொழுது தான் அந்த வித்தியாசத்தை உணர்ந்தான்....

திவ்யா தன்னருகில் அஞ்சி நடுங்கிக் கொண்டு கோழிக் குஞ்சு போல் ஒன்றிக் கொண்டு இருப்பதை......

அர்ஜூனைக் கண்டாலே பயந்து ஒளிபவள்.... அவனின் கூரிய பார்வையின் வீரியத்தை தாங்க இயலாமல் தரையில் தலை புதையும் அளவிற்கு குனிந்துக் கொள்பவள்...

அவன் அவளருகில் சிறிது நெருங்கினாலே கை கால் என உடல் முழுவதும் உதறல் எடுக்க வெளிப்படையாக நடுங்கி நிற்பவள்...

ஆனால் இன்று அவனுடன் வெகு அருகில் அவன் உடலோடு உடல் உரசும் அளவிற்கு ஒன்றிக் கொண்டு இருப்பது எதனால் என்று குழம்பியவன் அவளைப் பார்க்க, அவளோ தன்னை அறியாமல் லேசாக திரும்பி அந்த வாலிபர்களைப் பார்த்தவள் சட்டென்று தலையை குனிந்துக் கொண்டாள்...

6:35 PM 68%
https://drive.google.com/file



முதலில் அவள் தனிமையில் சாலையைக் கடந்து வரவும் அவள் தனியாகத் தான் வந்திருப்பாள் என்று நினைத்து அவளைக் கிண்டல் பண்ணிய அந்த வாலிபர்கள் அவள் யாரையோ தேடுவதைப் பார்த்து அவள் யார் கூடவோ வந்திருப்பாள் போல என்று ஊகித்து இருந்தாலும் அவர்களின் வயது அவர்களின் கிண்டலைத் தொடர் செய்தது...

ஆனால் அர்ஜுன் வந்த பிறகு அவன் அவளிடம் பேசிக் கொண்டு இருப்பதை பார்த்த பிறகு அவனையும், அவன் உருவத்தையும், அவன் பணக்காரத் தோரனையும் கண்டவர்கள் சட்டென்று அடங்கித் தான் போனார்கள்..

ஆனால் திவ்யாவிற்கோ எங்கே மீண்டும் தன் கணவன் தன்னை தனியே விட்டு சென்றுவிட்டால் அவர்கள் அவளை மறுபடியும் வம்பிழுப்பார்களே என்று பயமாக இருந்தது...

திவ்யா அவனின் கரத்தை இறுக்கி பிடித்தவாறு கலங்கிப் போய் இருக்க, அவளின் தவிப்பையும் கலக்கத்தையும் பார்த்த அர்ஜுன் அப்பொழுது தான் அந்த செயலை செய்தான்....

சட்டென்று அவளின் வெற்று இடையில் கை வைத்து அவளை தன்னருகில் இழுத்தவன் அவளை இறுக்க அணைத்தவாரே அவள் காதிற்கு அருகில் குனிந்து....

"அவங்களைப் பார்த்தா பயப்படுற... சின்ன பசங்க... ஜஸ்ட் ஃபார் ஃபன்னுக்குத்தான் செய்றாங்க" என்றவன் அவர்களை திரும்பி பார்த்து தன் கூரிய ஈட்டி போன்ற பார்வையை அவர்கள் மேல் வீசவும் தவறவில்லை...

6:35 PM 68%

https://drive.google.com/file



அதில் நடுநடுங்கி போன அந்த வாலிபர்கள் அடுத்த ஐந்து நிமிடங்களில் அந்த மழையிலும் விட்டால் போதும் என்று அடித்து பிடித்து சாலையின் மறுப் பக்கத்தை ஓட்டமும் நடையுமாக கடந்து சென்று இருந்தார்கள்...

இங்கு திவ்யாவின் நிலைமையோ சொற்களுக்கு அப்பார்பட்டதாக இருந்தது....

அது வரை மழையில் நனைந்ததினால் தான் இருந்த நிலைமையினாலும் அந்த வாலிபர்களின் கிண்டலினால் ஏற்பட்ட கூச்சத்தினாலும் தத்தளித்து தவித்து இருந்தவளுக்கு அர்ஜுன் அவளை அவ்வாறு இடைப் பிடித்து இழுத்தது வெட்கத்தின் உச்சிக்கே கொண்டு சென்றது.

வெற்று இடுப்பில் அவனது கரம் அழுந்த பட்டதும் திக்கென்று அதிர்ந்து தடுமாறியவளின் இதயம் தடதடக்க, கூச்சத்தில் மெல்ல நெளிந்தவள் அவன் கையை தன் இடையில் இருந்து விலக்க முயற்சிக்க அதை உணர்ந்தவன் அவளின் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுத்து கையை எடுத்து "சரி வா" என்றான்...

என்ன தான் அந்த வாலிபர்கள் அவன் முறைத்த நிமிடமே அந்த இடத்தை காலி செய்திருந்தாலும் இனி அவளை, அதுவும் அந்த கோலத்தில் தனித்து விட அவனுக்கு மனம் இல்லை...

இருவரும் வேகமாக நடந்து கார் நிறுத்திய இடத்திற்கு செல்வதற்குள் அர்ஜுனும் நன்றாக நனைந்து விட்டிருந்தான்..

68% 6:35 PM
https://drive.google.com/file



காரில் ஏறியவன் தன் அன்னையின் அலை பேசிக்கு அழைத்து...

"மாம், இங்க ரொம்ப மழைப் பெய்யுது.... நாங்க இரண்டு பேரும் நனைஞ்சிட்டோம்... அதனால நாங்க வீட்டிற்கு போகிறோம்" என்றான்...

அவர் சரி என்றவுடன் காரை செலுத்தும் முன் திரும்பி திவ்யாவைப் பார்க்க அவளோ குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தாள்.....

அதைக் கவனித்தவன் காரின் ஏஸியை குறைக்க, அதை கண்டவள் தன் கணவன் முதல் முறை தன் மேல் கரிசனம் காட்டியதால் பாகாய் உருகியவள் கனிவாய் அவனை நிமிர்ந்து பார்க்க, அதே சமயம் அவனும் திரும்பி பார்க்க, ஏற்கனவே அவனின் தொடுகையில் கரைந்து இருந்தவள் அதற்கு மேலும் தாங்க மாட்டாதவளாய் பார்வையை வெளிப்புறம் திருப்பினாள்....

தன் கணவன் தன்னுடன் இத்தனை நேரம் தனிமையில் இருந்திருக்கிறான்.... முதல் முறையாக அவளிடம் இந்த அளவிற்கு அதுவும் பொறுமையாக, நிதானமாக பேசியிருக்கிறான்..

இப்பொழுது அவளுக்காக அவளின் குளிர் அறிந்து பரிவுடன் நடந்துக் கொள்கிறான் என்று நினைத்தவளுக்கு அவன் அவளை அவனாக முதல் முறை தொட்டிருப்பது நினைவில் வர,

இத்தனை நாள் அவளின் அடி மனதில் அவளையும் அறியாமல் அடங்கி இருந்த காதல் கட்டவிழ்ந்து ஆர்ப்பரித்து மேல் எழும்ப, மதிமயங்கிய உள்ளத்தோடு உணர்ச்சிகள் ஊஞ்சலாட உன்மத்த நிலையில் இருந்த இதயம் தன் தாளத்தை அதிகரித்தது....

67% 6:35 PM
https://drive.google.com/file



அர்ஜூனும் காரை செலுத்திக் கொண்டே அவளைப் பார்க்க, அவள் வெட்கத்தில் செந்தனலாய் சிவந்திருந்த தன் முகத்தை அவனிடம் இருந்து மறைக்க மெல்ல கதவோரமாக ஒண்டி அமர்ந்தவள் ஒன்றும் பேசாது வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வர, அவனுக்கு அந்த நேரம் தன்னவளை ரசிப்பதற்கு ஏதுவாகவே இருந்தது...

மழையில் நனைந்திருந்ததால் மெலிதான வெளிர் நிற ஷி:.பான் புடவை அவளின் இளமை அங்கங்களை வெட்டவெளிச்சமாக காட்ட, நீண்ட கூந்தலில் மல்லிகைச் சூடி அதனை அழகாக முன் புறமாக விட்டிருக்க மல்லிகையின் நறுமணம் வேறு அங்கு ஒரு அசாரண சூழ்நிலையை உருவாக்கியது....

பூவைப் போலவே மிருதுவான கன்னங்கள், கூர்மையான மூக்கில் சிறு ஒற்றைக் கல் மூக்குத்தி, சங்கு கழுத்து, அதற்கும் கீழ் அளவோடு எழுந்திருந்த அவளின் பெண்மையும், மெல்லிய மேலாடை அவள் பெண்மையை மறைக்க முயன்று முடியாமல் அதுவே அவளின் எழில்களின் அழகினை உச்சத்திற்கு கொண்டு போய் அலங்கரிக்க, அதற்கு கீழ் குறுகிய இடையும் என்று அவள் உடல் முழுவதும் பருவத்தின் யவனம் விரவிக் கிடந்தது....

தன்னவளின் உச்சியில் இருந்து இடை வரை அங்குலம் அங்குலமாக ரசிக்க ஆரம்பித்தவன் அவளின் மோகனத்தில் தன்னையும் அறியாமல் தன்னைத் தொலைத்து போக இடை வரை ஊர்ந்த பார்வை அதற்கும் கீழ் என்று இறங்க தன்னிலையை இழுத்து பிடித்து வைத்தவன் "அர்ஜூன் கன்ட்ரோல் யுவர் செல்:.ப் [Arjun, control your self]" என்று தனக்கு தானே கூறிக் கொண்டு தலையை அழுத்தமாக கோதி பார்வையை அவளிடமிருந்து வெகுப் பிரயாசை பட்டே திருப்பினான்...

அவள் தன் மனைவி... அவள் உள்ளத்தில் தன் மீது முதலில் காதல் வர வேண்டும்.... அதற்கு பின் தான் மனைவி என்ற உரிமையை

67% 6:36 PM
https://drive.google.com/file

அவளிடம் இருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவனின் உறுதி சுக்கு நூறாக உடைய ஆரம்பித்து இருந்தது....

அவனது மனதிற்குள் பெரும் குழப்பம் விளைந்தது... அந்த குழப்பம் எதனால் விளைந்தது?

அவளை சில நிமிடங்களுக்கு முன் தீண்டியதால் வந்த இன்பத்தினாலா? அல்லது அவள் காதலைச் சொல்லாத பொழுது அவளை எடுத்துக் கொள்ள நினைத்து தறிகெட்டு அலையும் மனதினை அடக்க முடியாமல் வந்த சங்கடத்தினாலா?

தன் அருகில் தன் தேவதை அழகெல்லாம் திரண்டு தனித்து அமர்ந்திருக்க, செயலெதிலும் இறங்காத அவன் சிந்தை வேறு பல விஷயங்களைச் சிந்திக்க ஆரம்பித்தது....

கணவனின் மனதில் தான் ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்ற தடுமாற்றத்தை, உணர்ச்சிகளின் கொந்தளிப்பை அறியாமல் அவனை விட்டு முடிந்தவரை தள்ளி அமர்ந்துக் கொண்டு வந்தவள் ஒரு வேளை தன் கணவன் தான் இருந்த நிலையில் மயங்கி தன்னை ஒவ்வொரு பாகமாக ரசித்துக் கொண்டிருப்பதை அவள் அறிந்திருந்தால் பின்னாலில் வரக் கூடிய பிரச்சனைகளை அவர்கள் தவிர்த்திருப்பார்களோ????

அவர்களுக்கு வரப் போகும் அந்த பிரிவும் வராமல் இருந்திருக்குமோ???

வெகுப் பிரயாசைப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டு வந்த அர்ஜூன் அதற்கு மேலும் காரில் இருந்த அந்த நிசப்தத்தை தாங்கும் சக்தியில்லாமல் மியூஸிக் ஸிஸ்டத்தை உயிர்பித்தவனின் புருவங்கள் தன்னை அறியாமல் ஆச்சரியத்தில் உயர்ந்தது...

https://drive.google.com/file

சொல்லி வைத்தார் போன்று அவனின் மனதில் மண்டிக்கிடந்த ஆசைகளை, தன் மனைவியிடம் தான் சொல்ல விரும்பும் தன் ஏக்கங்களை அப்படியே எடுத்துரைத்தது போல் இருந்தது அந்த பாடல்....

சட்டென தூறலும் கொட்டியதெப்படி

உயிர் மொத்தமும் உன்னிடம் ஒட்டியதெப்படி

இதயம் என்பது எனக்கும் உண்டென

தெரிந்து கொண்டதே உன்னால் தான்

எதையும் உன்னிடம் பகிர்ந்து கொள்ளவே

விரும்புகின்றதே நெஞ்சம் தான்

நிழல் மட்டும் தொடர்ந்து வந்த

நிலமை மாறி போனதே

நிஜம் உன்னை நெருங்கி நிற்க

வயது கோலம் போடுதே

இப்படியும் நான் ஆவேனா

மொத்தமும் மாறி போவேனா

கற்பனையும் நான் செய்வேனா

கண்டபடி பொய் சொல்வேனா

யாரை கேட்க, கைகள் கோர்க்க

நீ இல்லாமல் வாழ்வேனா

67% 6:36 PM
https://drive.google.com/file

சட்டென தூறலும் கொட்டியதெப்படி

உயிர் மொத்தமும் உன்னிடம் ஒட்டியதெப்படி

உனது புன்னகை உரசிச் செல்கையில்

உதிருகின்றதே காயங்கள்

உனது மெல்லிய விரல்கள் தொட்டதும்

நிகழுகின்றதே மாயங்கள்

எதை கண்டும் பயந்ததில்லை

இதற்கு முன்பு நானுமே

உனை கண்டு பதட்டம் ஒன்று

வருவதென்ன நாளுமே

எத்தனை பெண்கள் நின்றாலும்

என் விழி உன்னை தேடுதடி

தந்தது போதும் என்றாலும்

இன்னமும் காதல் கேட்குதடி

அடியே எந்தன் ஆயுள் ரேகை

உந்தன் கைகளில் ஓடுதடி

நீண்ட நேரம் அந்த பாடலிலேயே மனம் லயித்து இருந்ததாலும், புத்தியும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்ததாலும், இருவரும் அவரவர் மன நிலைகளுக்கு ஏற்ப குழுப்பத்தில் உழண்டுக் கொண்டு இருந்ததாலும் அவர்களின் வீட்டை வெகு விரைவிலேயே அடைந்திருந்தனர்...

https://drive.google.com/file

முதலில் வீட்டிற்குள் நுழைந்தவனிற்கு வீட்டில் வேலைக்காரர்கள் முதல் யாரும் இல்லை என்று தெரிய, எதுவும் பேசாமல் சமையல் அறைக்குள் நுழைந்தவனை கண்டவள் வியந்து போய் அவனிடம் தயங்கிவாறே...

"காபி போட்டுத் தரட்டுமா?" என்றாள்.....

அவளின் மென்மையான குரலில் அவளை திரும்பி பார்த்தவனுக்கு அவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் என்று உணர்வு ஒரு நொடி மின்னி மறைய தன்னை கட்டுப்படுத்தியவன்...

"இல்ல... நீ போய் முதல்ல ட்ரெஸ்ஸ மாத்து" என்றான்.....

ஏனெனில் அவன் உணர்ச்சிகள் முற்றிவிட்டதால் தன் சுயநிலையை இழந்திருந்தவனுக்கு அடக்கமாட்டாத கிளர்ச்சி இதயத்தில் பாய அவனால் இன்னும் அவளின் அழகிய உடலை ஆசையுடன் சுற்றிக் கிடந்த தன் கண்களை அகற்ற முடியவில்லை... அதை தவிர்க்கவே அவன் சமையல் அறைக்குள் நுழைந்தது....

"நீங்களும் உங்க ட்ரெஸ் மாத்துங்க... ஈரமா இருக்கு... சலிப் பிடிச்சுக்க போகுது" என்றவளை திரும்பி பார்க்க, அவன் பார்வையின் தாக்கத்தை தாங்காதவள் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் மெதுவே மாடி ஏற ஆரம்பித்தாள்.....

அறையை அடந்தவள் "ஈரமா இருக்கு சலிப் பிடிச்சுக்க போகுதுன்னு சொன்னா அதற்கெதுக்கு இந்த முறைப்பு? அப்படி என்ன

https://drive.google.com/file



நான் சொல்லிட்டேன்?" என்று நினைத்தவளுக்கு அவன் பார்வையில் தெரிந்தது கோபம் அல்ல, தாபம் என்று புரிந்திருக்க வேண்டும்.....

புரியாதது அவளின் கெட்ட நேரமோ? அல்லது அவனின் பரிதாப நேரமோ???

அதே சிந்தனையில் அறையின் கதவை தாள் போட மறந்தவள் உள்ளே நுழைந்து கட்டில் மேல் தன் பெட்டியை வைத்து அதிலிருந்து ஒரு புடவையையும், அதற்குண்டான ப்ளவுசையும் எடுத்தவள் புடவையை கட்டிலின் மேலே போட்டு விட்டு ப்ளவுசை அணிய முற்பட்டாள்....

அங்கு கீழே சமையல் அறைக்குள் நுழைந்த அர்ஜூனின் நிலைமையோ பரிதாபத்தின் எல்லையை கடந்திருந்தது.... இன்னமும் தன் மனதை ஒரு நிலைப் படுத்த முடியாமல் தடுமாறியிருந்தது...

இதயம் கன்னாபின்னாவென்று துடிக்க அவளை பின் தொடர முற்பட்ட மனதை அடக்க வழி தெரியாமல் சில நிமிடங்கள் தவித்தவன் தனக்கு தெரிந்தவரை காபியைப் போட்டு எடுத்துக் கொண்டு மாடி ஏற, சரியாக அவனது அலை பேசியில் கதிர் ஏதோ குறுந்தகவல் அனுப்பினான்.....

அதனை படித்துக் கொண்டே படிகளில் ஏறியவன் அவள் அறைக்குள் இருப்பதை மறந்து அறையின் கதவை தட்டாமல் திறக்க காலையில் தன் மனைவி தன்னை பார்த்த கிட்டத்தட்ட அதே கோலத்தில் இப்பொழுது அவன் அவளைப் பார்த்திருந்தான்...

ப்ளவுசை அணிந்துக் கொண்டு இருந்தவள் சற்றும் எதிர்பாராதவிதமாக கதவு திறந்துக் கொள்ள அங்கே தன் கணவனைக் கண்டவள் "ஐயோ!" என்ற ஒரு சின்ன அலறலுடன் கட்டிலில் இருந்த

6:37 PM 67%
https://drive.google.com/file 17



புடவை எடுக்க முற்படும் போது புடவையை தவற விட்டுவிட்டு பின் தரையில் கிடந்த புடவையை கொத்தாக அள்ளி அவசரமாய் தன் மார்பினை மூட, அங்கு அவன் கண்ட காட்சியில் அர்ஜூனின் உடலில் தாபத் தீ கொளுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.....

சட்டென்று அவனுக்கு முதுகு காட்டி திரும்பியவள்.....

"அவசரத்தில கதவை தாள் போட மறந்திட்டேன்... கொஞ்சம் வெளியில் இருக்கிறீங்களா?" என்று நடுங்கும் குரலில் அவள் கூற,

அவளை அந்த கோலத்தில் கண்டு தடுமாறி சிந்தனை ஓட்டம் தடைப் பட்டு நின்றவனிற்கு அத்தனை விரைவில் தன் உணவுகளின் வீச்சுகளில் இருந்து வெளிவர இயலவில்லை...

அவன் இன்னமும் அதே இடத்தில் அசையாமல் நிற்பதையும் அவனின் விழிகள் தன் உடலில் எல்லை தாண்டி பிரயாணிக்கும் இடங்களைக் கண்டவளுக்கு காதலை விட அச்சமே மேலோங்க அவளின் விழிகள் பீதியும் கலக்கமும் நிறைந்த பார்வையை வெளியிட கெஞ்சும் குரலில்....

"ப்ளீஸ்.... கொஞ்ச வெளியில் நில்லுங்க" என்றாள்....

அவளின் கெஞ்சலில் தன் மனதை கண நேரத்தில் சமாளித்துக் கொண்டவன் அவளுக்கு எதிர்புறமாக திரும்பி "சாரி" என்று மட்டும் சொன்னவன் சட்டென்று அறையை விட்டு வெளியே வர, அவளுக்கு இதயம் தடதடத்ததில் மயக்கமே வருவது போல் இருந்தது....

"கதவைக் கூட தாள் போடாமல் அவர் ரூமிலேயே சாவகாசமாக ட்ரெஸ் மாற்றிக் கொண்டு... என்ன திவ்யா? அந்த

6:37 PM 67%
https://drive.google.com/file



கோலத்தில் அவர் முன்னாடி நின்னுட்டியே... சீசீ, என்ன பத்தி என்ன நினைத்திருப்பார்?" என்று எண்ணியவள் மறக்காமல் அவன் வெளியே சென்றவுடன் விருவிருவென்று அவன் பின் சென்று கதவை தாள் போட்டாள்.

வெளியே வந்த அர்ஜூனுக்கு அவள் அவனை தொடர்ந்து வேகமாக வந்து கதவை அடைத்தது குழப்பத்தை தான் வர வழைத்தது.....

அவள் அவனுடைய மனைவி..... அவளை அந்த கோலத்தில் பார்க்கும் உரிமை உள்ளவன் அவன் ஒருவனே...

வழக்கமாக அச்சத்தையும் கலக்கத்தையும் விரித்துக் காட்டும் அவளின் விழிகள் இன்று காதலை வெளிப்படுத்தியிருந்ததே.....அப்படி இருக்க ஏன் இந்த ஒதுக்கம்?

அவனுக்கு அவள் நிலை புரியவில்லை... தன் நிலைப் புரியவில்லை... இறுதியில் மனம் கணக்கும் அளவிற்கு திகைப்பு தான் மிஞ்சியது....

அவனும் ஈர உடையில் இருப்பதால் திவ்யா அவசரம் அவசரமாக புடவையை அணிந்தவள் வேகமாக கதவை திறக்க, அங்கு அவன் ஒரு கையில் காபியை பருகிக் கொண்டே அலை பேசியில் நேண்டிக் கொண்டிருந்தாலும் அவன் சிந்தனை அங்கு இல்லை என்பது அவன் அவளை நிமிர்ந்தும் பார்க்காததில் இருந்து புரிந்து போனது.....

அதற்கு மேல் அவன் முன் நிற்க கூச்சம் இடந்தராமல் தயங்கியவளாக...

"நீங்க ட்ரெஸ் மாத்துங்க" என்க...

67% 6:38 PM
https://drive.google.com/file



அவளின் குரலை கேட்டவன் அவளை நிமிர்ந்துப் பார்க்க சற்று முன் நடந்ததை நினைத்தவளுக்கு முகம் செவ்வானமாக சிவக்க அதற்கு மேல் அவனைப் பார்க்கும் தைரியமில்லாமல் விருவிருவென்று கீழே இறங்கியவள் நேரே சமையல் அறைக்குள் நுழைந்தவளுக்கு புரியாத ஒரு உணர்வு உடல் முழுவதும் மெல்லியதாக பரவ ஆரம்பித்தது...

சற்று நேரமே என்றாலும் தன் கணவன் தன்னை பார்த்திருந்ததை கண்டவளுக்கு அவன் பார்வையும், விழிகளின் போக்கும் இன்னமும் உடலில் நடுக்கத்தை கொடுத்துக் கொண்டு இருக்க மௌனமாக சமையல் அறையில் இருந்த மேஜையில் அமர்ந்தவளுக்கு தன் இதயம் துடிக்கும் சத்தம் வெளியில் கேட்பது போல் இருந்தது....

அதற்கு மேல் தன் கணவனை காணும் தைரியம் அவளுக்கு இல்லையாதலால் மற்றவர்கள் வீட்டிற்கு திரும்பி வரும் வரை சமையல் அறையை விட்டு வெளியில் வருவது இல்லை என்று முடிவெடுத்தவள் நேரத்தை போக்கவும், தடுமாறி இருந்த தன் மனதினை திடப்படுத்தவும் சமைக்க ஆரம்பித்தாள்...

இந்த மழை நேரத்தில் சாப்பிட ஆப்பமும் சொதியும் நன்றாக இருக்கும் என்று நினைத்தவள் அதையே செய்ய துவங்க நேரம் போனதே தெரியவில்லை.....

அவள் சமையலை முடிக்கவும் அனைவரும் திரும்பி வரவும் அவர்கள் சத்தம் கேட்டு அர்ஜுன் கீழே இறங்கி வரவும் நேரம் சரியாக இருந்தது.....

அவர்களின் அரவம் கேட்டு சமையல் அறையை விட்டு வெளி வந்தவள் அங்கு அர்ஜுனைக் காண தலைக் குனிந்தவள் குனிந்தவளே...

6:38 PM 67%
https://drive.google.com/file


கிட்டத்தட்ட தரை பூமியில் புதைந்துவிடும் அளவிற்கு குனிந்திருந்தவளை ஸ்ரீயின் கேள்வியே நிமிரச் செய்தது...

"என்னம்மா, அதே சுடிதார் கிடைச்சிச்சா?"

"இல்லத்தா... ஆனா கிட்டத்தட்ட அதே மாதிரி வேற இருந்தது.... அத எடுத்து கொடுத்தாங்க" என்றவள் தப்பி தவறியும் அர்ஜுனை பார்க்கவில்லை....

"வேறு ஏதாவது வாங்கினீங்களா?" என்று ஸ்ரீ கேட்க,

அவள் மனம் முழுவதும் சற்று முன் நடந்திருந்த சம்பவத்திலேயே நிலைக் கொண்டு இருந்ததால் அவரின் கேள்விக்கு பதில் சொல்லாமல் திருதிருவென்று முழித்திருந்தவளைக் கண்டவன் அவளை கூர்ந்து பார்த்து...

"யெஸ் மாம்...." என்றவன் அவளின் புறம் திரும்பி "ஸாரி (Saree) வாங்கினோம்" என்றான்...

"ஙே" என்று விழித்தவளுக்கு தான் ஆடை மாற்றும் முன் அவன் வந்ததையே நினைத்துக் கொண்டு இருந்தவளுக்கு அவன் புடவை என்றதும் சட்டென்று அந்த நினைப்பே வர,

"ஐயோ! இப்போ எதுக்கு எல்லோர் முன்னிலும் இவர் அதைப் பற்றி கேட்கிறார் என்று குழம்ப அவள் முகம் நொடிக்கு ஒரு தரம் மாறுவதை கண்டவனுக்கு புரிந்து போனது....

6:38 PM 67%
https://drive.google.com/file



அவள் இன்னும் அந்த நிமிடங்களில் இருந்து வெளி வரவில்லை என்று... அவளின் தடுமாற்றம் புரிந்தவனாக....

"அதே ஸ்டோரில் ஒரு ஸாரி எடுத்தோமே..... அதை சொன்னேன்" என்றான்...

"அப்பாடி" என்றிருந்தது அவளுக்கு......

"சே, அவர் தெரியாமல் ரூமிற்குள் வந்துவிட்டார்.... அதற்காக அதனையேவா நினைத்துக் கொண்டு இருப்பது" என்று நாணியவாறே புடவையை எடுத்து வர எழுந்தவள் அப்பொழுது தான் கவனித்தாள் அவர்கள் காரிலேயே வாங்கி வந்த பொருட்களை வைத்துவிட்டு வந்துவிட்டதை......

அவனை நோக்கி "அது கார்லேயே இருக்கு" என்று மெல்லிய குரலில் கூற,

சட்டென்று எழுந்தவன் தன் அறைக்கு சென்று கார் சாவியை எடுத்து வந்தவன் அவளிடம் கொடுக்க....

"எனக்கு கார திறக்க தெரியாது" என்றாள் கலக்கத்துடன்.....

அங்கு நடக்கும் அதியசத்தை உலக அதிசயம் போல பார்த்திருந்தது எட்டு ஜோடி கண்கள்.... ஸ்ரீ, பாலா, மஹா, அருணின் கண்களே அவை....

"தி கிரேட் அர்ஜுன் புடவை எடுத்து கொடுத்திருக்கிறான்.... மனைவியை தனியே வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான்....

6:38 PM 67%
https://drive.google.com/file



வீட்டிற்கு வரும் வழியில் காரில் என்ன நடந்ததோ வாங்கிய பொருட்களை கூட காரிலேயே மறந்து விட்டிருக்கிறார்கள்.... இப்பொழுது மனைவி சொன்னவுடனே மாடிக்கு சென்று தன் கார் சாவியை, அதுவும் தன் கார் அருகில் கூட யாரையும் அனுமதிக்காதவன் மனைவியிடம் சாவியை கொடுத்து பொருட்களை எடுத்து வரச் சொல்கிறான்"

அவர்களின் ஆச்சரியப் பார்வையை பார்த்தும் கண்டு கொள்ளாதவன் திவ்யாவின் அருகில் நெருங்கி வந்து அவளிடம் காரின் ரிமோட்டை கொடுத்து காரை எப்படி திறப்பது என்று சொல்லிக் கொடுத்தான்.....

அவன் சொல்ல சொல்ல அவள் தலையை ஆம் என்றும், இல்லை என்றும் மாற்றி மாற்றி ஆட்ட அவளுக்கு ஒன்றும் புரியவில்லை என்று உணர்ந்தவன் மெல்லிய புன்னகை உதிர்த்து சரி வா என்று அழைத்து விட்டு வெளியே செல்ல, அவன் பின்னரே ஓடினாள்..

காருக்கு சென்றவன் திரும்பி பார்க்க, அங்கு சிறு பெண் போல் ஓடி வரும் மனைவியைக் கண்டவன் மனதுக்குள் புன்னகைத்துக் கொண்டவனாக அவள் வரும் வரை காத்திருந்து பின் தன்னுடைய காரின் ரிமோட்டை அவளிடம் கொடுத்து எப்படி அதை உபயோகப்படுத்துவது என்று சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்க அவளுக்கு அது மண்டையில் ஏறினால் தானே...

அவன் அவள் வெகு அருகில் நெருங்கி நிற்பதில் சகலமும் அடங்கி ஒடுங்க தன்னை மறந்து நின்று கொண்டிருந்தவளுக்கு தன்னை சுற்றி நடக்கும் மற்ற விஷயங்கள் எல்லாம் எங்கு தெரியப் போகுது?

அதை உணர்ந்தவன் போல்,

6:38 PM 67%
https://drive.google.com/file



"திவ்யா" என்று அழைக்க,

"ஙே" என்று முழித்தவள் அவனை நிமிர்ந்து பார்க்க...

"இது தான் காரை அன்லாக் செய்வது... இதை அழுத்தினால் காரின் ட்ரன்க் தானாக திறந்துக் கொள்ளும்" என்று அவளின் விரல் மேலேயே தன்னுடைய விரலை வைத்து அழுத்த அவனின் தொடுகையில் சங்கடத்தில் நெளிந்தவளுக்கு நெஞ்சத்தில் அதிகப்படியான சஞ்சலமும் சலனமும் தோன்றியது....

மெல்லிய விகசிப்பு அவளது பூ முகம் முழுவதும் படற அவன் தீண்டலில் உடல் முழுவதும் நடுக்கம் பரவ, சட்டென்று கையை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டவள் தலை கவிழ்ந்து நிற்க, தன் ஸ்பரிசத்தால் தடுமாறி நிற்கும் தன் மனையாளை ரசித்தவன் காரில் இருந்து அவர்கள் வாங்கிய ஆடைகள் இருந்த பைகளை தானே எடுத்தான்...

அவள் இன்னமும் நடுக்கம் குறையாமல் தடுமாறி தவித்து காரின் ரிமோட்டையே பார்ப்பதை பார்த்தவன்....

"இங்கேயே நிற்க போகிறாயா? இல்லை வீட்டிற்குள் வரப் போகிறாயா?" என்று கேட்டுக் கொண்டே நடக்க,

அவன் கேள்வியில் சுய உணர்வுக்கு வந்தவள் அவனைப் பின் தொடர, அவர்கள் வருகையை ஆவலுடன் பார்த்திருந்த ஸ்ரீ

"பைகளை இங்க கொடு அர்ஜூன்.... புடவையைப் பார்ப்போம்" என்றார்...

67% 6:39 PM
https://drive.google.com/file



அவருக்கு தன் மகன், அவன் மனைவிக்கு முதன் முதலாக எடுத்துக் கொடுத்த புடவையை பார்க்க வேண்டும் என்ற மகா ஆவல்.

புடவையைக் கொடுத்தவன் ஒரு நொடி திரும்பி திவ்யாவை பார்த்து விட்டு ஒன்றும் பேசாமல் மாடிக்கு செல்ல, புடவையைப் பார்த்தவர்களுக்கு ஒரே ஆச்சர்யம்....

அனைவரின் கண்களையும் கவர்வதாக இருந்தது அந்த அழகிய பட்டுப் புடவை.

கலாவிற்கோ அதனின் விலையைப் பார்த்ததும் அதிர்ச்சியாக இருந்தது.....

"எதுக்கு திவ்யா இவ்வளவு விலையில புடவை வாங்கியிருக்க? மாப்பிள்ளை என்ன நினைச்சிருப்பாரு?"

"இல்லம்மா... நான் புடவை எடுக்கும் போது விலையை பார்க்கல.... ஆனால் பில் போடும் போது பார்த்திட்டு புடவை வேண்டாம்னு தான் சொன்னேன்... அவங்க தான் கேட்கலை"

இவர்களின் உரையாடல்களை கவனித்த ஸ்ரீ....

"கலா.... அவனோட வைஃபுக்கு அவன் புடவை எடுத்துக் கொடுக்கிறான்... அது அவனோட இஷ்டம்.... நாம இதில் எல்லாம் ஒன்னும் சொல்லக் கூடாது" என்று கூறியவரின் மனதிலும் பூரிப்பே நிரம்பி வழிந்தது.....

6:39 PM
https://drive.google.com/file



தன் மகன் கொஞ்சம் கொஞ்சமாக அவன் மனைவியிடம் நெருங்குவதை நினைக்கும் பொழுது.....

ஆனால் தன் கணவனின் மனதை, அது தன்னிடம் தன் உரிமையை நிலைநாட்ட தத்தளித்துக் கொண்டு இருப்பதை, இதயத்தால் தன்னை மனைவியாக ஏற்றுக் கொண்டவனின் உள்ளம் உடலாலும் தன்னை ஏற்றுக்கொள்ள தவிப்பதை பெண்ணவள் புரிந்துக் கொள்வாளா????

அவள் புரிந்துக் கொள்ளும் வரை காலம் காத்திருக்குமா? அவள் கணவன் காத்திருப்பானா?

மலரினும் மெல்லியவள்!!!!

தொடரும்......

66% 7:23 PM
https://drive.google.com/file

பாகம் - 13

இரவு உணவு அருந்தும் நேரம் ஆக அனைவரையும் அழைத்த ஸ்ரீ அர்ஜூனையும் அழைக்க, கீழ் இறங்கி வந்தவனின் கண்கள் தன்னவளையே ஆவலுடன் தேடியது...

அவன் அமர்ந்ததும் பரிமாற அருகில் வந்தவளை அவன் நிமிர்ந்து பார்க்க தன் கணவனின் கண்கள் தன்னை ஊடுறுவதைப் போல் பார்க்கவும் வேறு பக்கம் தன் விழிகளைத் திருப்பியவள் அவனுக்கு பரிமாற துவங்க அர்ஜூனிற்கு தன் மனையாளின் மனம் போகும் போக்கு புரிபடவில்லை...

அவள் புடவை காற்றில் அசைந்ததால் அவன் மீது மெல்ல உராய்ந்து அவன் உணர்ச்சிகளை மேலும் கொந்தளிக்க செய்ய அவளின் அழகை அள்ளி பருகிய கண்களை நிதானமாக அவள் மேல் ஓடவிட்டவன் தன்னை சுற்றி இருப்பவர்களை சிறிதும் சட்டை செய்யவில்லை.....

அவன் இன்னும் தன் பார்வையை தன்னிடம் இருந்து அகற்றவில்லை என்பதை புரிந்துக் கொண்டவளின் மனம் திண்டாட்டத்தில் சிக்க, வேறு எதுவும் செய்யும் வகையேதும் அறியாது தடுமாறியவள் தன்னை திடப்படுத்திக் கொள்வதற்காக சமையல் அறைக்குள் புகுந்தாள்....

அவளின் ஒவ்வொரு செய்கைகளையும் அவன் கண்காணித்துக் கொண்டே தான் இருக்கிறான்.... அவள் தன்னை தேடுவது போலவும் தெரிகிறது.... தன்னை தவிர்ப்பது போலவும் தெரிகிறது....

7:23 PM 66%

https://drive.google.com/file



அவளின் இரண்டு கெட்டான் நிலைமையில் இருந்து அவளின் மனதை, அவளின் எதிர்பார்ப்பை, விருப்பத்தை அவனால் ஊகிக்க முடியவில்லை... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்....

இன்று அர்ஜூனிற்கு அவன் மனைவியின் அருகாமை வேண்டும்.... அவனுக்கு அவளின் அணைப்பு வேண்டும்... அவன் உடலெங்கும் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் மின்னல் வேகத்தில் பாய்ந்துக் கொண்டு திணறி இருந்தவனுக்கு அவன் மனைவியின் நெருக்கம் வேண்டும்....

அந்த நினைவுகளில் லயித்து இருந்த அர்ஜூனிற்கு இன்று இரவு எப்படியும் தன்னுடையவளை முழுமையாக தன்னவளாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற வெறி தோன்ற அதற்கு அவள் இணைந்து இழைவாளா என்ற பெரும் கேள்வியும் தோன்றியது......

நிதானமற்ற புத்தியுடன் தவித்திருந்தவனுக்கு, சில நிமிடங்களே ஆனாலும் தன் மனைவியை, அவளின் அழகிய உடலழகை அந்த கோலத்தில் கண்டிருந்தவனுக்கு உடலுணர்வு நிலைக் கொள்ளாது துடித்திருந்தது....

அனைவரும் உணவு உண்ட பின் விருந்தினர்களோடு ஸ்ரீயும் மற்றவர்களும் ஹாலில் அமர்ந்து பேச ஆரம்பிக்க, மாடிக்கு ஏற ஆரம்பித்த அர்ஜூன் திரும்பி திவ்யாவைப் பார்த்தான்...

ஆனால் அவன் மனையாளோ தன் அன்னைக்கு அருகில் அமர்ந்தவள் அவன் பார்வையை வேண்டுமென்றே தவிர்த்தவள் அவன் தன் அறையை அடையும் வரை மறந்தும் திரும்பி பார்க்கவில்லை......

7:23 PM 66%
https://drive.google.com/file



வீட்டிற்கு வந்ததிலிருந்து அர்ஜூனையும் திவ்யாவையும் கவனித்துக் கொண்டே இருந்த ஸ்ரீக்கு என்றும் இல்லாமல் இன்று தன் மகனின் கண்களில் தெரிந்த ஆர்வம் ஒரு அன்னையாய் தன் மகனின் தேடலை உணர்த்த அவன் தன்னுடைய மனைவியாக திவ்யாவை ஏற்று கொண்டது உறுதியானது.....

அவன் தன் மனைவியை தேட ஆரம்பித்திருக்கிறான் என்பதைப் புரிந்துக் கொண்டவர் வயிற்றில் பால் வார்க்க மகிழ்ச்சியில் திக்கு முக்காடியவருக்கு அடுத்த கவலை இப்போழுது இந்த சின்ன பெண் தன் கணவனின் மனதை புரிந்துக் கொண்டு அதற்கேற்றார் போல் நடந்துக் கொள்ளே வேண்டுமே என்பது தான்.....

அவனே ஒரு பிடிவாதக்காரன்..... இத்தனை நாட்களுக்கு பிறகு தான் திவ்யாவை ஏற்றுக் கொண்டிருக்கிறான்.... ஆனால் கண்டிப்பாக அவனாக திவ்யாவிடம் இதனை வாய் விட்டு சொல்லப் போவதில்லை..... ஏனெனில் பெற்றவளுக்கு தெரியாதா தன் பிள்ளைகளை பற்றி..... ஆனால் திவ்யாவோ அவனைக் கண்டாலே பயந்து நடுங்குகிறாள்...

இவர்கள் இரண்டு பேரையும் எப்படி சேர்த்து வைப்பது என்று யோசித்தவர் நேற்று போல் இன்றும் அதே உத்தியைக் கையாள வேண்டியது தான் என்று யூகித்துக் கொண்டவர் திவ்யாவிடம் சிறிதே சத்தமாக.....

"திவ்யா நீ மாடிக்கு போம்மா.... ரொம்ப நேரம் ஆகிடுச்சு" என்றார்...

"ஐயோ! ஏற்கனவே அவர் பார்வையே சரியில்ல..... இதில் இன்னைக்கு நைட்டுமா????" என்று கலங்கியவள்...

66% 7:23 PM
https://drive.google.com/file



"இ.... இல்ல அத்த.... அம்மா நாளைக்கு ஊருக்கு போறாங்க இல்ல... அதனால நான் இன்னைக்கு அவங்க கூடவே படுத்துக்கிறேனே" என்றாள்.

மனதால் நன்கு புரிந்துக் கொண்டு காதல் மொழி பேசி இதயத்தால் கலந்து இருப்பவர்களுக்கே முதன் முறை தாம்பத்யம் என்பது விடையறியாத விடுகதையை போன்றது....

இதில் சின்ன பெண், அவன் பார்வையில் வழியும் தாபம் சொல்லுகிறது அவன் வேட்கையை... ஆனால் அவளின் மனமுழுவதும் சூழ்ந்திருப்பதோ அவனை பற்றிய திகில்..... இதில் அவரோடு தாம்பத்தியமா????

கதி கலங்கி போயிருந்தாள் திவ்யா......

ஆனால் ஸ்ரீக்கோ திவ்யாவின் பதில் சங்கடத்தையும் கலக்கத்தையும் ஒருங்கே கொடுத்தது.....

கிழிஞ்சது போ, சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கமாட்டாரு போல... எந்த ஒரு காரியத்தையும் அர்ஜுன் தன் விருப்பம் இருந்தால் மட்டுமே செய்வான்.....

இல்லை என்றால் எக்காரணம் கொண்டும் அவனை செய்ய வைக்க முடியாது..... அது அவன் போடும் உடைகள் ஆகட்டும், படித்த படிப்பாகட்டும், செய்யும் தொழிற்கள் ஆகட்டும்...

எதிலும் அவனாக விரும்பி ஈடுபட்டால் மட்டுமே உண்டு..... அவ்வளவு பிடிவாதமும் அழுத்தமும் நிறைந்தவன்....

அப்படி இருக்கும் பொழுது நானே இந்த கல்யாணத்தை அவன் எப்படி ஏற்றுக் கொள்ள போகிறானோ என்று அரண்டுப் போய் இருந்த சமயம் கடவுளின் புண்ணியம் அவனுக்கு தன் மனைவியின் மேல் இவ்வளவு சீக்கிரம் ஒரு ஈடுபாடு வந்திருக்கிறது...

அதை இந்த சின்ன பெண் புரிந்துக் கொள்ளாமல் இப்படி முரண்டு பிடிக்கிறாளே என்று வருந்தியவர் கலாவை பார்க்க, தன் தோழியின் எண்ணம் புரிந்தவராக,

"திவ்யா, நீ போய் உன் ரூமில படு.... நானும் ஸ்ரீயும் பேச நிறைய விஷயம் இருக்கு.... நாங்க தூங்க எப்படியும் ரொம்ப நேரம் ஆகும்" என்றார்....

ஆனால் திவ்யா அதை காது கொடுத்து கேட்டால் தானே...

"இல்லை மா.... நான் உங்க ரூமில படுத்துக்கிறேனே..... நீங்க ஆசுவாசமா வாங்க... நீங்க வரும் வரை முழிச்சிட்டு இருக்கேன்.... நாம் இரண்டு பேரும் பேசி ரொம்ப நாள் ஆகிடுச்சு" என்க,

அங்கு மஹா, அருண், வினோத் என்று இளவட்டங்கள் அனைவரும் சுற்றி அமர்ந்து இருக்க, இதற்கு மேல் அவளுக்கு என்ன சொல்லி புரிய வைப்பது என்று மானசீகமாக தலையில் அடித்துக் கொண்ட ஸ்ரீயும் கலாவும் அதற்கு மேல் அந்த பேச்சை வளர்க்க விரும்பாமல் அத்தோடு நிறுத்திக் கொண்டனர்...

ஆனால் ஸ்ரீக்கு தான் "வெண்ணை திரண்டு வரும் பொழுது தாழியை உடைத்த கதையாக விட்டதே" என்றிருந்தது....

7:24 PM
https://drive.google.com/file



திருமணத்தன்று தான் சொன்னதும் மனம் முழுவதும் வெறுப்பிலும், அடங்காத சீற்றத்திலும், அவமானத்திலும் கொந்தளித்துக் கொண்டு இருந்தாலும் அவர் மகன் அவரின் சொல்லைத் தட்டவில்லை....

இன்னார் என்றே தெரியாது அவனைப் பொறுத்தவரை அவனின் அந்தஸ்திற்கு தகுதியில்லாத ஒரு பெண்ணை மணமுடிக்க ஒத்துக் கொண்டான்....

ஸ்ரீ தான் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடோ, வித்தியாசமோ பார்க்காதவர்....

ஆனால் அர்ஜூன் அப்படி இல்லையே....

அப்படி இருக்க அவள் படிப்பையோ, வயதையோ அல்லது வசதியைப் பற்றியோ கவலைப்படாமல் தாய் சொல்லை மறுக்காமல் தாலி கட்டியவனாயிற்றே!!!!

என்ன தான் அதற்கு பிறகு அவன் விவாகரத்து என்று பேச்சை எடுத்திருந்தாலும் இதோ இப்பொழுது, இந்த நிமிடம் தன் மனைவியாய் அவளை ஏற்றுக்கொண்டு அவளின் துணையைத் தேட ஆரம்பித்து இருக்கிறான்....

இதனை அந்த பெண் புரிந்துக் கொள்ள வேண்டுமே.... நான் அவர்கள் இருவரையும் ஒன்று சேர்க்க என் மகனின் வெறுப்பை எந்த அளவிற்கு சம்பாதித்து இருக்கிறேன்...

இதற்கு மேல் நான் என்ன செய்ய முடியும்? என்று அவரின் மனம் கணக்க ஆரம்பித்தது.....

7:24 PM 65%
https://drive.google.com/file



ஆனால் மற்றவர்களுக்கு தெரியாது திவ்யாவின் அடி மனதில் ஏற்பட்டிருந்த, அவளை பதட்டத்தில் ஆழ்த்தி இருந்த அவளின் அச்சத்தினால் விளைந்திருந்த மனப் போராட்டம்....

அன்று அவள் கணவன் அவளை அந்த கோலத்தில் பார்த்ததில் இருந்து அவனை நிமிர்ந்துக் கூட பார்க்க திராணி இல்லாமல் வெட்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.....

அவன் அவளின் இடைப்பிடித்து தன் வலியக் கரங்களால் அணைக்கவும் தன் கணவனின் ஸ்பரிசத்தில் நிலைக் குலைந்து இன்ப உணர்ச்சிகள் கிளறிவிடப்பட்டிருந்தாலும், கணவனின் அணைப்பில் பாதுகாப்பாக உணர்ந்திருந்தாலும், அந்த ஸ்பரிசத்தில், பாதுகாப்பில் அவள் மனம் அமைதியடையவில்லை....

மாறாக ஒரு இனம் புரியாத பயமும், பயத்தில் தடுமாறியிருந்த இதயமும் அவளின் உள் மனதில் ஏற்பட்டிருந்த நடுக்கத்தை இன்னும் குறைக்கவில்லை....

கணவன் மனைவி இருவரும் இருவேறு நிலையில் சிக்கித் தவித்ததால் தங்கள் இணையின் நிலையை அடியொடு மறந்தனர்......

அர்ஜூனிற்கு தன் மனையாளின் அருகாமையினாலும், மென்மையான அவள் தளிர் மேனியின் ஸ்பரிசத்தினாலும் அவனுடைய உடலெங்கும் திமிறிக் கொண்டு இருக்கும் உணர்ச்சிகளின் நெகிழ்ச்சிகளுக்கு வடிகாலாக அவளுடைய நெருக்கத்தை, உறவை தேடிக் கொண்டு இருக்கிறது அவன் மனமும் உடலும்....

65% 7:24 PM
https://drive.google.com/file 17



திவ்யாவிற்கோ தன் கணவனின் தேடலாலும் அவன் பார்வையில் வழியும் வேட்கையாலும் மனதில் ஏதேதோ எண்ணங்கள் உலாவி அவளை அதிர்ச்சியிலும் அச்சத்திலுமே துவண்டு போகச் செய்திருக்கிறது....

இந்த நிலையில் எப்படி அவருடன் ஒரே அறையில் தங்குவது என்று கலங்கியே அவன் அறைக்கு செல்லாமல் தவிர்க்க முயற்சித்துக் கொண்டு இருந்தாள்....

ஆனால் ஸ்ரீ நினைத்தது சரி என்பது போல் அங்கு திவ்யாவின் வரவிற்காக காத்திருந்த அர்ஜூனிற்கு அவள் நீண்ட நேரமாகியும் வராதது கண்டு மனதில் மிதமிஞ்சிய குழப்பமே சூழ்ந்திருந்தது...

இன்று காலையில் அவன் உடை மாற்றிக் கொண்டு இருக்கும் பொழுது அறைக்குள் நுழைந்தவள் அவனை எதிர்பாராதவிதமாக வெற்று மார்புடன் பார்த்திருக்க, அவளின் விழிகள் அவனை ஒரு மனைவியாக ரசித்ததை அவன் பார்த்திருந்தானே.....

மழையில் நனைந்து நடுநடுங்கிக் கொண்டிருந்தவள் அந்த வாலிபர்களின் கிண்டலுக்கு பயந்து ஒரு கணவனாக உரிமையுடன் அவனை நெருங்கி பாதுகாப்பிற்காக இறைஞ்சி நின்ற பொழுது ஒரு மனைவியின் உரிமையை அவளிடம் கண்டிருந்தானே...

பின் அவளை தனிமையில் ஒரு கணவன் மட்டும் பார்க்கக் கூடிய அழகிய கோலத்தில் அவன் பார்த்திருக்கும் பொழுது அவளின் முகத்தில் படர்ந்திருந்த நாணத்தையும் அதனால் அவளின் உடலில் ஏற்பட்ட தடுமாற்றத்தையும் கவனித்திருந்தானே....

65% 7:24 PM
https://drive.google.com/file



"என்னை கண்டவுடன் எதிர் திசையில் ஓடிக் கொண்டிருந்தவள், அச்சத்தில் என் கண்முன்னே தோன்றாது மறைந்தே இருந்தவள் இப்பொழுதெல்லாம் என்னைப் பார்த்தவுடன் தலை கவிழ்ந்துக் கொள்வது என்ன? என் விழிகளின் போக்கை உணர்ந்து முகம் செந்தனளாய் சிவப்பது என்ன?"

"என் காதலை, என் தேடலை, என் தவிப்பை அவள் உணரவில்லையா? இல்லை உணர்ந்தும் என்னிடம் நெருங்க விருப்பம் இல்லையா" என்று இதயம் வெடிக்கும் அளவிற்கு வினவிக் கொண்டிருந்தவனின் உள்ளம் நிலைகொள்ளாமல் தவித்திருந்தது....

நேரம் ஆக ஆக அவள் வரும் சுவடே இல்லாது இருக்க, ஆங்காரமாக அங்கும் இங்கும் நடந்தவனின் முகத்தில் அத்தனை ருத்திரகரமான கோபம் உதயமாயிற்று....

அவள் தன்னை தேடி வராததற்கு காரணம் அவளின் உதாசீனம். புறக்கணிப்பு தான் என்று தவறுதலாக நினைத்திருந்தவனுடைய வெறுப்பு அதிகமாகிற்று...

அவளின் அருகாமையும், தன் அறையில் மறைத்தும் மறையாமலும் தான் கண்ட அவளின் பெண்மையும் அவனின் உள்ளத்தில் மோகத்தை தூண்டி அக்கினியை அவன் உடலில் விசிறிவிட்டதால் உணர்ச்சி அலைகளின் சுழற்சியில் சிக்கி கிடந்தவனின் மனம் தாறுமாறாக சிந்திக்க துவங்கியது....

நேற்று இரவு அவளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அறையை விட்டு சென்று இருந்தவனுக்கு இன்று இரவு அவன் சித்தம் கோபத்தின் சீற்றத்தில் விபரீதமாக நினைக்க தோன்றியது.....

65% 7:24 PM
https://drive.google.com/file

ஆனால் அதே சமயம் அவளை வலுக்கட்டாயமாக தன் வசப்படுத்துவதோ அல்லது தன் உரிமையை நிலைநாட்டும் விதத்தில் அவளை பலவந்தப்படுத்துவதோ அர்ஜுனால் முடியாது....

அது அவனின் குணத்திற்கு அப்பாற்பட்டது....

அவனாக இதுவரை ஒருவர் பின்னும் சென்றதில்லை.... மற்றவர்கள் தான் அவனைத் தேடி அவனது காலடியில் வந்து விழுந்திருக்கிறார்கள்...

அதிலும் பெண்களின் விஷயத்தில் அவன் தன்னுடைய கடினமான பக்கத்தையே காட்டியிருக்கிறானே ஒழிய அவர்களை அவன் ஒரு அளவிற்கு மேல் தன்னை நெருங்கவிட்டதில்லை....

இப்பொழுது மனைவியே ஆனாலும் அவளை தேடி நான் செல்ல மாட்டேன்.... நான் வேண்டும் என்றால் அவள் தான் இனி என்னை தேடி வரவேண்டும் என்று இறுமாப்புடன் நினைத்திருந்தவனின் மனம் அனலாய் கொதித்திருந்தது....

சட்டென்று கட்டிலில் படுத்தவன் கோபத்தில் ஒவ்வொரு அலைவரிசையாக தொலைக்காட்சியில் [TV Channels] மாற்றி கடைசியில் ரிமோட்டை தரையில் தூக்கி எறிந்துவிட்டு தன் ஆத்திரத்தை அடக்க வழி தெரியாமல் உள்ளுக்குள் புகைந்து வெகு நேரம் வரை உறக்கமற்று கிடந்தான்....

அடிபட்ட சிறுத்தையை போல் மனம் புழுங்கிக் கொண்டிருந்தவன் இரவு வெகு நேரம் வீட்டின் கூரையைப் பார்த்தவாறே படுத்து இருக்க, கீழே தன் அன்னையுடன் படுத்திருந்த திவ்யாவிற்கோ

65% 7:25 PM
https://drive.google.com/file

கணவனின் எதிர்பார்ப்பு புரிந்திருந்தாலும் அவனை நெருங்குவதற்கு இன்னும் அவளின் மனதில் தைரியம் வரவில்லை...

திருமணத்தன்றிலிருந்து அவனின் சினத்தையும் வெறுப்பையும் மட்டுமே பார்த்திருந்தவளுக்கு இந்த சில நாட்களாக அவன் தன்னிடம் விரும்பி நெருங்கி வருவதை உணர்ந்து இருந்தாலும் அவன் வாய்விட்டு சொல்லாத காதலை அவள் மென்மையான மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது....

அவனின் காதலையே புரிந்துக் கொள்ள மறுத்த மனது அவனோடு தாம்பத்தியத்தை எவ்வாறு தைரியமாக எதிர்கொள்ளும்.....

ஒரு வேளை அவளின் அச்சத்திற்கு மன சஞ்சலத்திற்கு அவன் பதில் கொடுத்திருந்தாலோ அல்லது தன் உணர்வுகளை அவளுக்கு தெளிவு படுத்தியிருந்தாலோ அவன் கனவு இன்று பூர்த்தியாகி இருக்கிமோ???

தன்னை எதிர்பார்த்து காத்திருக்கும் கணவனின் மனநிலையை முழுவதுமாக அறிந்துக் கொள்ளமால் தூர இருந்தே அவனின் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தாள் தன்னுடைய அறியா புறக்கணிப்பால்.....

இந்த இருவரில் யாரைக் குறைச் சொல்வது?

தன் கணவனின் மனமாற்றத்தை உணராமல் இன்னமும் அவனுக்கு அஞ்சிக் கொண்டு இருக்கும் திவ்யாவையா?

அல்லது வார்த்தைகளால் சொன்னால் தான் காதலா? என் அருகாமை, அதனால் உனக்குள் ஏற்படும் தகிப்பு, என் பார்வையில்

7:25 PM 65%

https://drive.google.com/file

தெரியும் தேடல் சொல்லவில்லையா என் காதலை? என்று சீற்றத்தில் தன் சித்தத்தை தொலைத்திருக்கும் அர்ஜூனையா?

பூஜை அறையில் விளக்கேற்றிக் கொண்டிருந்த ஸ்ரீக்கு, படிகளில் வேகமாக தட தட வென்று யாரோ இறங்கும் சத்தம் கேட்க, வெளியே வந்தவர் அங்கு அதிகாலையிலேயே விரைவாக அலுவலகத்திற்கு கிளம்பி வந்துக் கொண்டிருந்த அர்ஜூனின் களைத்த முகத்தை கண்டவருக்கு புரிந்து போனது அவன் நேற்று இரவு சரியாக உறங்க வில்லை என்று.....

"என்ன அர்ஜூன், இவ்வளவு சீக்கிரம் கிளம்பபிட்ட? இன்னும் டிபன் செய்யலைப்பா.... கொஞ்சம் நேரம் வெயிட் பண்ணு.... இதோ முடிச்சிடுறேன்"

"நோ மாம்... எனக்கு அவசரமாக ஒரு வேலை இருக்கு" என்றவன் நகர,

அவனின் முகத்தை பார்த்தே அவன் உள்ளத்தில் இருக்கும் கோபம் குறையவில்லை என்பதனை உணர்ந்தவர் ஒன்றும் பேசாமல் அமைதியாக அவனையே பார்த்து இருக்க, விடு விடுவென்று நடந்தவன் சட்டென்று திரும்பி...

"மாம்... அவங்க எல்லோரும் எப்போ கிளம்புறாங்க?" என்றான்...

"கலாவும் அவங்க சொந்தக்காரர்களும் இன்னைக்கு மத்தியானம் டிரெயினுல்ல போறாங்க அர்ஜூன்"

7:25 PM 65%
https://drive.google.com/file



"ஓகே மாம்... அவங்க போனப்புறம் அவள மஹா ரூமுக்கு திரும்பவும் மூவ் பண்ண சொல்லிடுங்க" என்றவன் திரும்பியும் பார்க்காமல் சென்று விட்டான்....

"போச்சு... வேதாளம் மீண்டும் முறுங்கை மரம் ஏற ஆரம்பிச்சுடுச்சே" என்று நினைத்தவர்,

"திவ்யா நேற்று கலாவுடன் கெஸ்ட் பெட்ரூமில் தூங்கியது இவனுக்கு தெரியவில்லை போலிருக்கு... அவள் மஹாவின் அறையில் தூங்கியதாக நினைத்துக் கொண்டு இருக்கிறான்..... சே, இந்த பொண்ணு இப்படி பண்ணிடுச்சே??? என்ன தான் சின்ன பெண் என்றாலும் புருஷன் மனசக் கூடவா புரிஞ்சுக்க தெரியாது.... அவன் கண்ண பார்த்தாலே தெரியல? அவன் அவளிடம் என்ன எதிர்பார்க்கிறானென்று" என்று மனதிற்குள் மருங்கியவர் தன் மகனையும் மனதிற்குள் திட்ட தவறவில்லை...

"கல்யாணம் ஆகி இத்தனை நாட்கள்ல அவன் அவளிடம் ஒரு வார்த்தைக் கூட ஒரு கணவனா பேசயதில்லை.... அவளிடம் கணவனாக என்றுமே நடந்துக் கொள்ளவில்லை.... இப்போ திடீரென்று அவன் அவளை எதிர்பார்த்தால் அவளும் சின்ன பெண் தானே? எப்படி அவளுக்கு புரியும்" என்று நினைத்தவர்...

"ஆக நான் தான் இங்க குழம்பிப் போய் நிற்கின்றேன்.... சேர வேண்டிய இரண்டும் அதுங்க பாட்டுக்கு அதுங்க வேலைய செய்துக் கொண்டு இருக்குதுங்க... என்னமோ போ" என்று சலித்துக் கொண்டவர் கடவுளின் பாதத்தில் தான் பாரத்தை இறக்கி வைத்தவாறே தன் பூஜையை தொடர ஆரம்பித்தார்.

நேரே அலுவலகத்திற்கு வந்த அர்ஜூனின் மனதிற்குள் இருந்த புகைச்சல் இன்னும் அடங்கவில்லை.....

65% 7:25 PM
https://drive.google.com/file

அர்ஜூனின் அலுவலகத்தில் அவன் வீட்டில் இருப்பது போல் ஒரு ஜிம் இருக்கிறது.... வீட்டில் உடற்பயிற்சி செய்ய நேரங்களோ சூழ்நிலைகளோ இல்லையெனில் அவன் அலுவலகத்தில் செய்வது உண்டு...

நேரே தன் ஜிம்மிற்குள் நுழைந்தவன் உடை மாற்றி டிரெட்மில் ஏறி ஓட துவங்க, அவனின் ஓட்டத்தின் வேகத்திற்கு ஏற்ப மனதின் ஓட்டமும் அதிகரித்தது....

எத்தனை காதலுடன் நேற்று தன் மனைவியின் வருகையை ஆவலாக எதிர்பார்த்திருந்தான்.....

திருமணமான நாள் அன்று அவளை வெறுத்தது உண்மை தான்... அவளை தன் வாழ்க்கையை விட்டு அகற்ற வேண்டும் என்று எண்ணியதென்னவோ உண்மை தான்....

ஆனால் தான் அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லையே.... தன் அன்னையை பழிவாங்குவதற்கு தான் அதற்கு பிறகும் அவன் அவளை கடிந்துக் கொள்வது போல் நடந்துக் கொண்டது....

ஆனால் எந்த நிமிடம் அவள் மேல் காதல் பிறந்ததோ, எந்த நிமிடம் அவளின் அருகாமையை அவளின் அழகை ரசிக்க ஆரம்பித்து இருந்தானோ அந்த நிமிடத்தில் இருந்து அவன் விழிகள் அவளை ஆசையோடு தழுவ துவங்கிவிட்டதே.....

அதனை அவளும் தானே உணர்ந்திருந்தாள்...

7:25 PM
https://drive.google.com/file

திருமணம் ஆனால் என்ன நடக்கும் என்று தெரியாத அளவிற்கு சின்ன பெண்ணா அவள்???

அதுவும் நேற்று மழையில் நனைந்ததில் ஈற உடையுடன் நின்றவள் தன்னைப் பார்த்ததும் அடைந்த வெட்கம் தான் என்ன!

மறுபடியும் அவன் அவளை அறையில் பார்த்ததில் இருந்து அவனைக் காண அச்சப்பட்டுக் கொண்டு ஓடி ஒளிந்தது என்ன!

இதில் இருந்து புரியவில்லை? அவளுக்கு தன் கணவனின் பார்வை சொல்லும் அர்த்தங்கள்?

அவள் அம்மா தன்னை தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது என்று என் அறையில் தங்கியவள் நேற்று அவரையும் மீறி மஹாவின் அறையில் தங்கியிருந்தாள் என்றால்??

என் அருகாமையை அந்த அளவிற்கு வெறுக்கிறாளா? என்று புத்தி தாறுமாறாக எண்ணியது......

அவன் மனம் அதன் போக்கில் நிலைகொள்ளாமல் தவித்தது....

தன் நிலையை அடியோடு மறக்கும் கட்டத்திற்கு தன்னை தானே தள்ளிக் கொண்டு இருந்தான் தறிகெட்டும் அலையும் சிந்தனைகளால்.....

தன் MD-ஐ தேடி அவன் அறைக்கு போன கதிர் அங்கு அர்ஜூனைக் காணாமல் தேடி இறுதியில் ஜிம்மிற்கு வந்தவன் வாயிலில் நின்றே அர்ஜூனை அழைத்தான்...

65% 7:25 PM
https://drive.google.com/file

ஏனெனில் தான் ஜிம்மில் இருக்கும் பொழுது அர்ஜூன் யாரிடமும் பேசுவதோ அல்லது அவர்களை ஜிம்மிற்குள் அனுமதிப்பதோ இல்லை... ஜிம்மிற்குள் இருக்கும் குளியல் அறையில் குளித்துவிட்டு வெளி வரும் போது தான் அவனை சந்திக்க முடியும்...

ஆனால் இன்று கதிரின் "மே ஐ கம் இன் சார்?" என்ற அழைப்புக்கு அவனை உள்ளே வர பணிக்க, கோபத்தில் சிவந்திருந்த அர்ஜூனின் முகத்தையும், தன் சீற்றத்தை தனிக்க அவன் அதிவேகமாக பயற்சி செய்துக் கொண்டிருந்ததால் அவனின் உடலில் வடிந்துக் கொண்டு இருந்த வேர்வையும் கதிருக்கு சொல்லாமல் சொல்லியது தன் MD-யின் மனதை.....

இரு வேறு விதமாக ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த மனதையும், புதிதாக உள்ளத்தில் மலர்ந்திருந்த மனைவியின் மேலான தாபத்தையும் எப்படி அடக்குவது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்த அர்ஜூனை கதிரின் அழைப்பு இந்த உலகிற்கு கொண்டு வந்தது.

உள்ளே வந்த கதிர் எப்படி துவங்குவது என்று தெரியாமல் தாமதித்தவன் தயங்கியவாரே...

"ஹவ் வாஸ் தி ரிஷப்ஷன் சார்?" என்றான்....

ஏற்கனவே கொதித்துக் கொண்டு இருக்கும் எரிமலையை ஒத்த மனதைக் கொண்டு இருந்த அர்ஜூனிற்கு ரிஷப்ஷன் என்று வார்த்தை அந்த எரிமலையை வெடிக்கும் நிலைக்குக் கொண்டு செல்ல, தன் கோபத்தை டிரெட்மில்லில் தன் ஓட்டத்தை இன்னும் அதிகரித்து அடக்கிக் கொண்டவன்....

7:25 PM
https://drive.google.com/file

"கதிர்.... அந்த எல்டன் எக்ஸ்போர்ட்ஸ் அண்ட் இம்போர்ட்ஸ் காண்டிராக்ட் என்னாச்சு?" என்றான் தன் ஓட்டத்தை நிறுத்தாமல்.

"சார்... பால் இஸ் இன் அவர் கோர்ட் சர் [Ball is in our court sir].... அவங்க கோட்ஸ் எல்லாம் வந்தாச்சு.... நீங்க தான் முடிவு எடுக்கனும்? நம்ம வாங்க போற பார்ட்ஸ் எல்லாம் எப்படி மேனு∴பேக்சர் பண்ணுறாங்க? நம்பி வாங்கலாமான்னு நீங்க தான் அங்கப் போய் பார்த்திட்டு டிஸைட் பண்ணனும்..... ஏன்னா உங்களுக்கே தெரியும் எவ்வளவு எக்ஸ்பன்ஸீவ் பார்ட்ஸ் அதுன்னு.... சோ என்னுடய் சஜ்ஜஷன் என்னன்னா, நீங்க ஒரு ட்ரிப் யு.எஸ் அண்ட் ஜெர்மனிக்கு போய்ட்டு வந்தால் சரியாக இருக்கும்..... அப்புறம் முடிவெடுக்கலாம்" என்றான்...

புத்தி தன் மனைவியின் உதாசீனத்தால் அவமானப்பட்டிருந்தாலும் மனம் அவளின் அருகாமையை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டு இருக்கும் இந்த நிலையில் இதுவே உசிதமான வழி என்று அர்ஜுனிற்கும் பட்டதால் அவளைவிட்டு சில நாட்கள் தள்ளி இருக்க முடிவு செய்தான்....

"ஓகே கதிர் நீங்களே ட்ரிப்புக்கு ஏற்பாடு பண்ணிடுங்க.... யாரையாவது வீட்டிற்கு அனுப்பி பாஸ்போர்ட்ட எடுத்துட்டு வரச் சொல்லுங்க.... நான் மாம்கிட்ட போன் பண்ணி சொல்லிடுறேன்... நீங்க அதுக்குள்ள அவங்க சேல்ஸ் மேனஜரிடும் பேசிடுங்க.... ரிமம்பர் ஒன் திங் கதிர்... ஆஸ் யூஷ்வல் எல்லா மீட்டிங்சும், அரேஞ்மெண்டுஸூம் பக்காவா இருக்கனும்.... என்னுடைய ட்ரிப் ப்ளானையும், ∴ப்ளைட் ஐட்டினெரியையும் எனக்கு ஈமெயில் பண்ணிடுங்க" என்றவன் கதிருக்கு விடைக் கொடுத்தான்.

கதிர் அறையை விட்டு சென்றதும் அவனது மனது மீண்டும் திவ்யாவிடமே சென்றது...

7:25 PM 65%

https://drive.google.com/file



தான் இருக்கும் இந்த குழப்பமான சூழ்நிலையில் அவளை விட்டு தூரம் செல்வது ஒரு வழியில் நல்லது தான் என்று நினைத்தவன் தன் அன்னையின் அலை பேசிக்கு அழைக்க, ஆனால் அழைப்பு போய் கொண்டே இருந்ததே ஒழிய அவன் அழைப்பை ஒருவரும் எடுக்க காணோம்...

எரிச்சல் அடைந்தவன் மீண்டும் மீண்டும் அழைக்க அங்கே வீட்டிலோ ஸ்ரீ அலை பேசியை ஹாலில் வைத்துவிட்டு பாலாவின் அறையில் அவரிடம் பேசிக் கொண்டு இருந்ததால் அலை பேசியின் அழைப்பு சத்தம் அவர் காதுகளுக்கு எட்டவில்லை.....

ஆனால் சத்தம் கேட்டு ஓடி வந்த திவ்யா தன் கணவனின் எண்ணைப் பார்த்து எடுப்பதா வேண்டாமா என்று தயங்கிக் கொண்டு இருந்தவள் அவன் விடாமல் அழைக்கவும் வேறு வழியில்லாமல் எடுக்க, எடுத்தது தன் அன்னை தான் என்று நினைத்துக் கொண்டு "மாம்" என்று அழைக்க, அவன் கம்பீரக் குரல் கேட்டவுடன் அவள் மனமுழுவதும் பயம் கவ்விக் கொண்டது...

ஏனெனில் அவன் காலை உணவு அருந்த வராமல் இருக்க தன் மாமியாரிடம் அவனைப் பற்றி விசாரிக்க, அவன் எதுவும் வேண்டாம் என்று கோபமாக போய்விட்டான் என்று சொல்லியிருந்தார் ஸ்ரீ....

அதில் இருந்து ஏற்கனவே அவளின் மனதில் சுழன்றுக் கொண்டு இருந்த அச்சமும் கலக்கமும் இன்னும் அதிகரித்திருந்தது....

ஆனால் இப்பொழுது வேறு வழியில்லாமல் அவன் அழைப்பை எடுக்க, அவன் ஸ்ரீ என்று நினைத்து பேச, திவ்யாவிற்கு திக்கென்று இருக்க, இருந்தும் தடுமாறியவாறே.....

"அ.... அத்தை ரூமில் மாமாவோடு பேசிட்டு இருக்காங்க.... இ.... இருங்க போன போய் கொடுக்கிறேன்" என்று கூற எதிர்பாராமல் திவ்யாவின் குரலைக் கேட்டவனுக்கு மனதிற்குள் பற்றி எரிவது போல் இருந்தது....

"நேற்று ஏன்டி ரூமிற்கு வரவில்லை?" என்று பேசாமல் கேட்டுவிடலாமா என்று சடுதியில் தோன்றி மறைந்த எண்ணத்தை கைவிட்டவன் தானாக இறங்கி வர விரும்பவில்லை.....

கோபத்தை தன்னுள்ளே அடக்கியவன்...

"இட்ஸ் ஓகே.... என் ரூமில் என்னுடைய பாஸ்போர்ட் இருக்கு.... ஆ:பிஸிலில் இருந்து வருவாங்க.... எடுத்து கொடுத்து விடு" என்றான்...

சன்னமான கிட்டதட்ட நடுங்கும் குரலில்....

"எந்த இடத்தில் இருக்கு?" என்று அவள் கேட்க,

இப்படி பயந்து பயந்தே என்னை கொல்றடி என்று நினைத்தவன் அவனின் பீரோவை திறக்கும் குறியீட்டை சொல்லி...

"அதுல இருக்கு" என்றான்...

தன்னுடைய பள்ளி கல்லூரி காலங்களில் ஆகட்டும், இல்லை தொழிலில் ஆகட்டும் எப்பொழுதும் தைரியமான பெண்களுடனேயே பழகியவன்...

64% 7:27 PM
https://drive.google.com/file
17

ஆனால் பெண்களின் அச்சமும் ஒரு தனி அழகு..... அவர்களின் வெள்ளை மனம் அதனை விட பேரழகு என்று அவனுக்கு இது நாள் வரை தெரிந்திருக்கவில்லை.....

திவ்யாவை சந்திக்கும் வரை....

அவள் அவனைக் கண்டால் பயந்து நடுங்கும் பொழுது, அவனைப் பார்த்தவுடன் தலை குனியும் பொழுது, அச்சத்தினால் அவளின் கண்களை அகல விரித்துப் மருண்டப் பார்க்கும் பொழுது அவனுக்கு அவளை மிகவும் பிடித்திருக்கிறது.

அதிலும் நேற்று அந்த வாலிபர்களுக்கு அஞ்சி தன் கணவன் எங்கே தன்னை மீண்டும் தனியே கடையின் வாயிலிலேயே விட்டுவிடுவானோ என்று கலங்கி அவன் கரத்தை பிடித்து இழுத்து தானும் அவனுடன் வருகிறேன் என்றாளே.....

அப்பொழுது அவளின் பயத்தை அவ்வளவு அழகாக விரித்து காட்டி அவனை மயக்கியதே அவளின் எழில் முகம்....

மனநிலை முழுவதும் சங்கடத்திலும் சஞ்சலத்திலும் ஆழ்ந்திருக்க முகம் கன்றி இன்னும் தன் ஓட்டத்தை நிறுத்தாமல் ஓடிக் கொண்டிருந்தவன் ஒன்றும் தெரியாதது போல் இருக்கும் மனைவியை நினைத்து கடுகடுத்து இருக்க அங்கு சில நிமிடங்கள் பலத்த அமைதியே நிலவியது...

"என்ன அந்த பக்கம் சத்ததையே கானோம்.... ஒரு வேளை ஃபோன வச்சிட்டாரோ" என்று குழம்பியவள்....

"என்னங்க" என்று அழைக்க சட்டென்று சுதாரித்தவன்.....

7:27 PM 64%
https://drive.google.com/file



"பாஸ்போர்ட்ட எடுத்துட்டு போன் பண்ணு" என்றான்.

"சரி" என்றவள் மாடியில் அவனின் அறைக்குள் சென்று அவன் சொன்னது போல் பீரோவை திறந்தவள் திறந்த விநாடி சட்டென்று தன் கணவனுக்கே உரித்தான அவனின் பிரத்யோகமான வாசனை முகத்தில் பளிச்சென்று வீச தன்னை மறந்து சிலையென நின்றாள் சில நிமிடங்கள்.....

அவளையும் அறியாமல் அவள் கண்களில் நீர் படர்ந்தது......

அதிலும் பாஸ்போர்ட்டின் முதல் பக்கத்தில் அவனின் புகைப்படத்தைப் பார்த்தவளுக்கு அவன் தன்னருகிலேயே இருப்பது போல் ஒரு உணர்வு தோன்ற அத்தனை சிலிர்ப்பாக இருந்தது அவளது பூப் போன்ற இதயத்திற்கு....

இருவரும் தங்கள் இதயம் முழுவதிலும் காதலை சுமந்திருந்தாலும் ஒருவரின் மனதை ஒருவர் புரிந்துக் கொள்ளாமல் அன்று தேவையற்ற பிரிவினையை உண்டாக்கிக் கொண்டார்கள்....

புகைப்படத்தில் தன் கணவனின் அழகிய முகத்தின் மேல் மென்மையாக முத்தம் பதித்தவள் மீண்டும் அவன் படத்தை சில விநாடிகள் ஆழ்ந்து பார்த்து தன் கண்களுக்குள் புதைத்துக் கொண்டவள் வெளியே வர, தங்கள் அறையில் இருந்து ஸ்ரீயும் வெளியே வர திவ்யாவின் கையில் இருந்த பாஸ்போர்ட் அவரின் கண்களுக்கு பட்டது...

"என்னம்மா, அர்ஜுன் பாஸ்போர்ட் கேட்டானா?"

7:27 PM 64%
https://drive.google.com/file



"ஆமாம் அத்த.... இப்போ தான் ஃபோன் பண்ணினார்.... நீங்க மாமா கூட பேசிட்டிருந்தீங்க.... அதனால என்னைய எடுத்து வைக்க சொன்னாங்க.... யாரோ அவங்க ஆபிசிலிருந்து வருவாங்களாம்..... அவங்க கிட்ட கொடுக்க சொன்னாங்க" என்றாள்.

"இப்பொழுது எதுக்கு பாஸ்போர்ட்? எங்கேயாவது வெளிநாடு போகப்போறானா? ஒரு வேளை நேற்று நடந்தது இதுக்கு காரணமோ" என்று நினைத்தவர் திவ்யாவை கீழே அனுப்பிவிட்டு அர்ஜூனின் அலைபேசிக்கு அழைத்தார்...

"என்ன அர்ஜுன்? எதுக்கு பாஸ்போர்ட்? அப்ராட் எங்கேயும் போகப் போறியா?"

"யெஸ் மாம், யு.எஸ் அண்ட் ஜெர்மனி போறேன்.... பிஸினஸ் ட்ரிப்..... வர எப்படியும் ஒரு மாசம் ஆகும்"

கேட்டதும் அதிர்ந்த ஸ்ரீக்கு தன் மகனின் வருத்தம் புரிந்திருந்தாலும் அவனின் இயற்கையான குணத்திற்கு இந்த கோபம் ஒன்றும் புதிது இல்லை என்று தெரிந்திருந்தாலும் திவ்யாவின் மனதை நினைத்து மனம் கலங்கி போனார்....

அவளும் தன் கணவனை காதலோடு மனதிற்குள் பதியவைத்துக் கொண்டாள்... அவனும் அவளை மனைவியாக ரசிக்க துவங்கிவிட்டான்.....

ஆனால் தன் ஏழ்மையினாலும் இயற்கையிலே கொண்ட பயந்த சுபாவத்தாலும் அவளால் தன் இதயத்தை வெளிப்படையாக அவனிடம் திறந்து காட்ட முடியவில்லை....

7:27 PM 64%

https://drive.google.com/file



ஆளுமை, பிடிவாதம், திமிர் என்று ஒருங்கே கொண்டிருந்த ஆணவம் பிடித்த அவனும் தன்னிலையில் இருந்து இறங்கி வந்து தானாக அவளிடம் தன் காதலை சொல்ல முயற்சி செய்யவில்லை....

காதலை வார்த்தைகளாக வடிக்காமல் பார்வையிலேயே பறிமாற்றம் செய்துக் கொண்டவர்களுக்கு அதனை ஏற்றுக் கொண்டு அதனை செயலில் வெளிப்படுத்த தெரியவில்லை.....

மனதால் ஒன்று சேர்ந்துவிட்ட இரு இளம் உள்ளங்கள் தங்களின் காதலை வெளிப்படுத்தாது உடலால் பிரிய முடிவெடுத்துவிட்டனர்....

இந்த பிரிவு தற்காலிக பிரிவா? அல்லது நிரந்தர பிரிவா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.....

மலரினும் மெல்லியவள்!!!!

தொடரும்.........

64% 7:28 PM
https://drive.google.com/file

பாகம் - 14

அர்ஜூனின் வெளிநாட்டு பயணத்தைக் கேட்டதும் ஒரே கலக்கமாக இருந்தது ஸ்ரீக்கு....

சட்டென்று ஒரு யோசனை வர,

"அர்ஜூன்! ஏன் திவ்யாவையும் உன் கூட அழைச்சிட்டு போகக் கூடாது? கல்யாணமாகி நீங்க ரெண்டு பேரும் எங்கேயும் வெளியே போகலை... இந்த ட்ரிப் நிச்சயமா உங்க இரண்டு பேருக்கும் ஒரு அண்டர்ஸ்டாண்டிங் கொண்டு வரும்...." என்றார்...

அவருக்கு நன்றாக தெரியும்... இதை கொஞ்ச நாட்களுக்கு முன் சொல்லியிருந்தால் தன் மகன் தாம் தூம் என்று குதித்திருப்பான் என்று.....

இப்பொழுது அவனுக்கு தன் மனைவியைப் பிடிக்க ஆரம்பித்து இருக்கிறது... அவன் கண்கள் அவளை தன் மனைவியாகக் காண ஆரம்பித்து இருக்கிறது...

நிச்சயம் தான் எதிர்பார்த்தது போல் இந்த பயணம் அவர்களுக்கு இடையில் ஒரு புரிதலைக் கொடுக்கும் என்று.... அவரும் எத்தனை தான் முயற்சி எடுப்பார்....

இளையவர்கள் தங்களின் நிலையில் இருந்து இறங்கி வர மறுக்கிறார்களே....

7:28 PM 64%

https://drive.google.com/file



அவர் மகன் தன்னிடத்தை விட்டு, தன் ஆணவத்தை விட்டு கீழ் இறங்கி வந்தால் அவர் மருமகளிற்கு அது புரியவில்லை.....

அவளின் அளவிற்கு இறங்கி வந்து தன்னை தெளிவு படுத்தும் பொறுமை அவர் மகனிற்கு இல்லை.... யாரைக் குறை சொல்வது?

இருந்தும் அவர் தன் முயற்சியை கைவிடுவதாக இல்லை.... திருமணம் என்பது ஆயிரங்காலத்து பயிர் என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்.....

அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகிறது என்ற கூற்றிற்கேற்ப திவ்யா அர்ஜூன் திருமணம் பெரியோர்கள் பார்த்து நடக்கவில்லையே....

உண்மையில் இவர்கள் திருமணம் தானே சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது...

இப்பேற்பட்ட திருமணத்தை தோழ்வி அடைய அவர் விடுவதாக இல்லை..... இவர்கள் இருவரும் இணையும் வரை இந்த தாயுள்ளம் தவித்து தான் கிடக்கும்....

"நோ மாம், இது ஒரு பிஸினஸ் ட்ரிப்.... நான் எப்போ எந்த ஊரில் இருப்பேன் என்று எனக்கே தெரியாது..... இதுல அவளுக்கு முதல்ல பாஸ்போர்ட் எடுக்கனும், அப்புறம் விசா வாங்கனும், அதுக்கெல்லாம் எனக்கு நேரம் இல்லை..... சோ ப்ளீஸ் இதப் பற்றி பேசாதீங்க" என்றவன் அழைப்பை துண்டித்துக் கொண்டான்...

7:28 PM
https://drive.google.com/file



அவனுக்குமே திவ்யா தன்னுடன் வந்தால் எப்படி இருக்கும் என்ற நினைப்பே மனதிற்குள் ஒரு இனிய சிலிர்ப்பை தந்தது தான்...

"ஆனால் என்னுடைய ரூமிற்கே வருவதற்கு இத்தனை தயங்குபவள் என்னுடன் யு.எஸ்.ஸிற்கா வரப் போகிறாள்?" என்று எண்ணியவன் அத்துடன் அந்த நினைப்பை உதறிவிட்டு உடற்பயிற்சியை முடித்துக் கொண்டு ஜிம்மில் இருந்த குளியல் அறைக்குள் நுழைந்தான்.

சொந்தங்கள் அனைவரும் அவரவரின் காரில் கிளம்ப, கலாவும் சிவசுப்ரமணியமும், வினோத்தும் இரயில் நிலையத்திற்கு கிளம்ப திவ்யாவிற்கு தன் பெற்றோர் தன் அருகில் இருந்ததால் இருந்த கொஞ்சநெஞ்ச தைரியமும் அவளிடம் இருந்து விடை பெற்றதில் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது...

உள்ளத்தில் என்ன தான் சஞ்சலமும், மனதில் பாரமும் அழுத்திக் கொண்டிருந்த இருந்திருந்தாலும் அவள் அன்னை அவளுடன் இருந்த இந்த இரண்டு நாட்களில் சிறிது தைரியமாக இருந்தது....

தன் கணவன் இன்று வீட்டிற்கு திரும்பியதும் தன் மொத்த சுயரூபத்தை காட்ட போகிறான் என்று கலங்கி போயிருந்தவளுக்கு இப்பொழுது இவர்களும் கிளம்பவும் ஒட்டு மொத்த துணிவும் தன்னை விட்டு செல்வது போல இருக்கவும் மனம் சோர்வுற்றது...

விழிகளில் நீர் உடைப்பெடுக்க தங்களையே பார்த்திருந்த திவ்யாவின் அருகில் வந்த கலா அவள் கரங்களை தன் கரங்களுக்கு வைத்துக் கொண்டு கனிவுடன்....

"திவ்யா... அம்மா சொல்றத கொஞ்சம் கேளும்மா.... நீ இன்னும் சின்ன பொண்ணில்லை.... உனக்கு கல்யாணம் ஆயிடுச்சு.... உன்

64% 7:28 PM
https://drive.google.com/file
17



வீட்டுக்காரரர் மனசப் புரிஞ்சு நடந்துக்கம்மா" என்றவர் பெருமூச்சுவிட்டு அங்கிருந்து கிளம்பினார்...

ஏனெனில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்த ஒரு தாயாக, தன் கணவனுடன் இருபத்தி ஆறு வருடங்கள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த ஒரு மனைவியாக அவருக்கும் தெரிந்தது தன் மருமகனின் மன மாற்றமும், தேவையும்....

அதே சமயம் தன் மகளின் அச்சத்தையும் தடுமாற்றத்தையும் ஒரு அண்ணையாக அவர் புரிந்து கொண்டு தான் இருந்தார்....

ஆனால் இவர்கள் இருவருக்குள் ஒரு புரிதல் வர யாராவது ஒருவர் இறங்கி வந்து தான் ஆக வேண்டும் என்று உணர்ந்துக் கொண்டு தான் அவர் திவ்யாவிற்கு அப்படி ஒரு அறிவுரையைக் கூறினார்....

தன் அன்னையின் பேச்சிற்கு தலை கவிழ்ந்து செவி மடுத்திருந்தவளுக்கு பின் அவர் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு கண்களில் இருந்து ஆறாக வழியும் நீர் மட்டும் நின்றபாடில்லை....

திவ்யாவின் தோள் பற்றி அணைத்து கன்னத்தை தட்டி விடைப் பெற்ற வினோத் திரும்பி மஹாவைப் பார்க்க, அவளின் கண்களிலும் நீர் நிரம்பியிருந்ததைப் பார்த்தவனுக்கு வருத்ததிற்கு பதில் மகிழ்ச்சியே இருந்தது...

தன்னவளுக்கு தன் பிரிவு வருத்ததை தருவதை எந்த காதலனும் கர்வத்துடனேயே விரும்புவான்... அவனுக்கு மட்டுமே தெரியும் அது தன் காதலியின் அங்கீகரித்த காதலின் அடையாளம் என்று..

7:28 PM 64%

https://drive.google.com/file



யாருக்கும் தெரியாமல் வருகிறேன் என்று தலை அசைக்க, சிறு புன்னகையுடன் தன்னை யாரும் கவனிக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்து விட்டு சரி என்று தலை அசைத்தவளை அப்பொழுதே அந்த நொடியே அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது அவனுக்கு.....

ஆனால் அவளின் வசதியும் அழகும், தன்னுடைய ஏழ்மையும் சடுதியில் அவன் மனதில் தோன்ற, அவனை சட்டென்று திரும்பி செல்ல வைத்தது.....

ஆனாலும் தன்னவள் தன்னுடைய காதலை வாய் விட்டு சொல்லாமலே புரிந்துக் கொண்டது அவனை சிறகில்லாமல் பறக்கவே வைத்தது....

அன்று இரவு உணவு உண்ட பின் மஹாவின் அறைக்கு திவ்யா செல்ல, ஒரு பெரு மூச்சோடு அவளைப் பார்த்த ஸ்ரீ ஒன்றும் பேசாமல் படுக்க சென்றார்.....

அவரின் களைத்த முகத்தை பார்த்த பாலாவிற்கு எதுவோ நடந்திருக்கிறது என்று புரிந்தது....

மனைவியின் அருகில் வந்தவர்...

"என்னமா ரொம்ப வேலையா? ரொம்ப டயர்டா இருக்க?" என்க,

நடந்ததை விவரித்த ஸ்ரீ,

64% 7:29 PM
https://drive.google.com/file
17

"எனக்கு என்னமோ அர்ஜூன் திவ்யாவ விரும்ப ஆரம்பிச்சிட்டானோன்னு தோனுதுங்க.... ஆனால் இந்த பெண்ணுக்கு அது புரியலை.... நேற்று அவன் வாய் விட்டு தான் சொல்லல, ஆனால் அவனோட செயல் எல்லாம் அத தெளிவா வெளிப்படுத்திருச்சு..... நாங்க ஷாப்பிங் போலாம்னு கூப்பிட்டாலே அவனுக்கு அவ்வளவு கோபம் வரும்... அந்த நேரத்தில நான் எவ்வளவு சம்பாதிச்சிடுவேன் தெரியுமான்னு எரிஞ்சி விழுவான்.... ஆனால் நேற்று என்னன்னா நான் கடையில் சொன்னவுடனயே எந்த மறு பேச்சில்லாமல் அவளை தன் கூட கூட்டிட்டு போனான்..... அவளுக்கு முதல் தடவையா பட்டு புடவை வேறு எடுத்துக் கொடுத்திருக்கான்...... அது மட்டும் இல்லாமல் அவன் நேற்று இரவு தூங்கப் போற முன்னாடி திவ்யாவைப் பார்த்த பார்வையில ஒரு ஏக்கம் தெரிஞ்சுங்க..... இத்தனையும் எனக்கு புரியுது..... ஆனால் புரிஞ்சுக்க வேண்டியவளுக்கு புரியலையே..... அந்த கோபத்தில் தான் இப்போ யுஎஸ் ஜெர்மனின்னு கிளம்பறான்"

"என்னது யூஎஸ், ஜெர்மனி போறானா? எப்போ? எதுக்கு?"

தனக்கும் அர்ஜூனுக்கும் நடந்த விவாதத்தை ஸ்ரீ சொல்ல.

"ஸ்ரீ, அவங்க இரண்டு பேரும் சின்ன பிள்ளைங்க இல்லை... கல்யாணம் அப்படின்னா என்னான்னு தெரிஞ்ச வயது தான்... அதனால அவங்க ரெண்டு பேரையும் அவங்க போக்குல விடு.... எல்லாம் சீக்கிரம் சரியாகி விடும்" என்றார்.

என்ன தான் கணவரின் ஆறுதல் வார்த்தைகள் ஸ்ரீயின் உள்ளத்தில் சிறிதே நம்பிக்கையை வார்த்திருந்தாலும் அர்ஜூனின் வெளிநாட்டு பயணம் அவர் மனதை குடையவே செய்தது...

64% 7:29 PM
https://drive.google.com/file



இந்த ஒரு மாதத்தில் அவன் மனம் மாறிவிட்டால்? திவ்யாவை அவன் மீண்டும் வெறுக்க ஆரம்பித்துவிட்டால்?

மறுநாளே ஜெர்மனிக்கு கிளம்பிய அர்ஜூன் தன் அன்னையிடமும் தந்தையிடமும் மட்டும் சொல்லிவிட்டு கிளம்ப அங்கே வந்த திவ்யாவிற்கு அவனது பிரிவை தாங்க முடியாமல் அவளின் மனம் தன் உறுதியை இழந்து தளர ஆரம்பிக்க துடிதுடித்துப் போனாள்...

கடந்த முறை அவன் மும்பை போனது தன்னை விட்டு தள்ளி இருக்கத்தான் என்று அவளுக்கு நன்றாக தெரிந்திருந்தது.... அப்பொழுதே அவளது மனம் அந்த பாடுப்பட்டது.....

ஆனால் இன்று? இன்றைய பயணம்?

அர்ஜூனின் பிடிவாதமும், கோபமும் ஆளுமையும் திவ்யாவின் மனதில் அவன் அவளைக் காதலிப்பான் என்ற நினைப்பை உருவாக்கவில்லையோ என்னவோ ஆனால் கடந்த சில நாட்களாக அவன் அவளை எதிர்பார்ப்பதைப் போல் பார்ப்பதும், அவளின் அருகாமையை விரும்புவதுப் போல் அவளிடம் நெருங்கி நெருங்கி வருவதும் அவளுக்கு அவன் மனமாற்றத்தை உணர்த்தத் தான் செய்தது....

ஆனால் பாவம் அவளால் தான் தன் அச்சத்தை விட்டு, அவனை நினைத்து தான் கலங்கி போய் இருக்கும் நிலையை விட்டு அவனிடம் நெருங்க இயலவில்லை.....

அவனுடன் தனித்து ஒரே அறையில் இருப்பது என்பது, அதுவும் அவனுடன் தாம்பத்ய உறவு என்பது அவள் இருக்கும் இப்போதைய மனநிலையில் நடக்கும் காரியமே இல்லை....

7:29 PM 64%
https://drive.google.com/file



இருந்தும் அவனை பிரிவது தனக்கு பிடித்த ஒன்றை தன்னிடம் இருந்து யாரோ வலிய பிடுங்கினால் வரும் துக்கத்தையே கொடுத்தது.....

இதயமே இரண்டாக பிளந்தது போல் வலித்தது.....

அவனுக்கும் அதே உணர்வோ என்னவோ வாசல் வரை வந்தவன் எதனையோ யோசித்தவனாக ஒரு விநாடி நின்றவன் பின் திரும்பியும் பார்க்காமல் விறுவிறுவென்று காரை நோக்கி நடக்க, அவளின் பூ மனம் உள்ளுக்குள் நொறுங்கி போனது.....

"என்னிடம் சொல்லிவிட்டு போக கூட மனம் இல்லையென்றால் என் மேல் இவ்வளவு வெறுப்பா? ஏன் என் மனதை புரிந்துக் கொள்ள அவர் முயலவில்லை..... அப்படி என்றால் அவரின் இதயத்தில் துளி அளவுக் கூட என் பிரிவு வலி ஏற்படுத்தவில்லையா?" என்று தனக்குள்ளே மருங்கியவள் வாயிலைத் தாண்டி வெளியே வருவதா வேண்டாமா என்று தனக்குள்ளே யோசித்தவாறே நிற்க,

அவளின் உணர்வுகள் அவனையும் தாக்கியதோ காரில் ஏறப் போனவன் சட்டென்று தன் மனையாளை திரும்பிப் பார்த்தான்....

அவனின் பார்வை தன் மீது அழுத்தமாக படிந்திருப்பதை உணர்ந்த திவ்யாவின் நெஞ்சு குளிர்ந்து போனது....

அவள் இதனை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை....அவன் பார்வையை எதிர் நோக்கியவளின் ஆழ் மனதில் இருந்த காதல் மௌனமாக கூச்சலிட்டது...

"நானும் உங்க கூட வரேன்.... என்னையும் உங்க கூட கூட்டிட்டு போங்க" என்று...

7:29 PM 64%

https://drive.google.com/file

சுற்றி இருப்பவர்கள் ஒருவருக்கும் தெரியாமல் தலைக் கவிழ்ந்து தன் கண்ணிரை புடவை தலைப்பால் துடைத்தவள் அவனைப் நிமிர்ந்து பார்த்து ஒரு சிறு புன்னகையை உதிர்க்க, அவனுக்கு தன்னவளின் கண்ணீரும் புன்னகையும் உணர்த்தியது தன் பிரிவு அவளின் ஆழ் மனதில் ஏற்படுத்தும் காயத்தை...

இருந்தும் அவன் தன் பயணத்தை நிறுத்தவில்லை.....

அவளின் உருவத்தை கண்கள் வழியே தன் இதயத்திற்குள் கொண்டு சென்று பத்திரமாக சேமித்து வைத்துக் கொண்டவன் எதுவும் சொல்லாமல் காரில் ஏறினான்...

மற்றவர்கள் அனைவரும் வீட்டிற்குள் சென்றுவிட அர்ஜுனின் கார் கண்களில் இருந்து மறையும் வரை வாசலிலே நின்றவளை அவனும் தன்னுடைய ரியர் வியூ கண்ணாடியில் பார்த்துக் கொண்டே காரை ஓட்டியவன் பாரமான மனதை திட்டி தீர்த்தான்...

"ஆண், நீயே உன் மனதை அவளிடம் தைரியமாக சொல்லாத பொழுது, பெண், அதுவும் உன்னைக் கண்டாலே சிங்கத்தை பார்ப்பதைப் போல் பயப்படுபவள், எப்படி உன்னிடம் தன் உள்ளத்தை திறப்பாள்? என்று.

அவளின் கலங்கிய கண்களும் கலக்கத்தை சுமந்திருந்த முகமும் உனக்கு உணர்த்தவில்லை உன் மீது அவள் வைத்திருக்கும் ஆழமான காதலை....

மனசாட்சியின் கேள்விகளுக்கு விடை அளிக்கத் தெரியாமல், தன் மனதில் அரும்பியிருந்த காதலையும் வெளிப்படுத்தாமல் தன் பயணத்தை தொடர்ந்தான் அந்த இளம் கணவன்!!!!

64% 7:29 PM
https://drive.google.com/file

நாட்கள் அதன் போக்கில் செல்ல திவ்யா தன் கணவனின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்க அர்ஜூனோ தன்னவளிடம் சிக்கிய தன் மனதை அங்கு வெளிநாட்டில் தன் தொழிற்கள் சம்பந்தமான வேலைகளில் திசை திருப்ப முயற்சித்து, பகலில் வென்று இரவில் தோற்றுப் போய் கொண்டிருந்தான்.

"முன் பின் அறியாத இன்னாரென்றே தெரியாத ஒரு சின்ன பெண், தாலியைக் கட்டும் பொழுது கூட அவளின் முகம் பார்க்கவில்லை.... அவளிடம் எனக்கு எப்படி இப்படி ஒரு ஆழமான காதல் வந்தது? எங்கிருந்து எப்பொழுது வந்தது?" என்று ஒவ்வொரு நாளும் தன்னைத் தானே கேள்விகள் கேட்டு துவண்டுப் போயிருந்தான்....

பெரிய கல்லை தூக்கி தன் இதயத்தில் வைத்தது போல் அழுத்திக்கொண்டு இருந்தது அர்ஜூனிற்கு அவன் மனைவியின் பிரிவு....

ஒரு நாள் வேலை பளுவின் காரணமாக இரவு வெகு நேரம் சென்று தன்னுடைய ஹோட்டலின் அறைக்கு வந்தவன் அவ்வளவு அசதியிலும் தூக்கம் வராமல் இருக்க, திவ்யாவின் புகைப்படத்தை பார்க்க நினைத்து அலை பேசியை உயிர்ப்பிக்க, அங்கு மஹா அவர்களின் ரிஷப்ஷன் புகைப்படங்களை முக நூலில் பதிவு செய்திருந்தாள்....

தனக்கு இருந்த குழப்பத்தில் ரிஷப்ஷனைப் பற்றியோ, அல்லது புகைப்படங்களை பற்றியோ இது வரை நினைத்திராதவன் இப்பொழுது தான் இத்தனை நாட்கள் சென்று முக நூல் பார்க்க,

அங்கு அவனின் மனையாள் பட்டுப் புடவையில் குழந்தை தன்மை மாறாத முகத்துடனும் அழகுடனும் தேவதைப் போல் அவனருகில் நின்றிருந்தாள்...

7:29 PM
https://drive.google.com/file



அவளின் சிறு கீற்று போன்ற புன்னகை அவனது இதயத்தில் சில்லென்று ஊடுருவி சென்று அவளது அருகாமையை தேடச் சொல்ல கண்ணிமைக்க மறந்து அவளது புகைப்படத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏதோ ஒரு வித உணர்வு உடல் முழுவதும் பரவ அது காதலா, காதல் என்றால் தனக்கு எந்த வகையிலும் பொறுத்தமில்லாத ஒரு பெண்ணிடம் எப்படி தனக்கு காதல் வந்திருக்கக் கூடும்??

அல்லது ஒரு வேளை காமமா? காமம் என்றால் அன்று அவளை அந்த மழை நாளில் அந்தக் கோலத்தில் பார்த்ததால் அவளின் மேல் தாபம் வந்திருக்க கூடுமா?

ஆனால் அதற்கு முன்னரே அவளை என் மனமும் கண்களும் தேடியதே... அப்பொழுது இது வெறும் காமம் இல்லை....

அப்படி என்றால் காதல் தானா? என்று தெளிவாக குழம்பிப் போய் ஒவ்வொரு இரவும் தன் தூக்கத்தை தொலைத்துக் கொண்டு இருந்தான்...

இங்கே திவ்யாவிற்கோ தன் கணவனின் ஞாபகங்கள் ஒன்றன் பின் ஒன்றாக கடல் அலைகள் போல் ஆர்ப்பரித்து அலை மோதி அவளை கொல்லாமல் கொல்ல, அவளின் காயம் பட்ட மனதை மேலும் மேலும் வலிக்க செய்திருந்தது...

துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டதால் விம்மல் வெடித்துக் கிளம்ப தலையணைக்குள் தன் முகத்தை புதைத்துக் கொண்டவள் அழுது கரைந்தாள்...

7:29 PM 64%

https://drive.google.com/file

"ஏன் அவரை தேடுகிறேன்? அவர் இல்லாமல் இருப்பது ஏன் இத்தனை கஷ்டமாக இருக்கிறது? அவர் மனதில் நான் இருக்கிறேனா என்று கூட தெரியவில்லை.... வெளிநாட்டில் இருந்து திரும்பி வரும் பொழுது அவர் என்ன மனதுடன் வருவாரோ அதுவும் தெரியவில்லை..... பின் நான் எதை பார்த்து அவருக்காக காத்திருக்கிறேன்? அவர் என்னை ஏற்றுக் கொள்வதற்கு எனக்கு எந்த தகுதியும் இல்லை.... ஆனால் என் மனதில் அவரின் மீது கடலின் ஆழத்தை போல் காதல் இருக்கிறது.... ஆனால் வெளிப்படுத்த தெரியாமல் தவிக்கிறேனே..." என்று குமைந்தவள் தன்னையும் அறியாமல் தன் தாலியை இறுக்கி பிடித்துக் கொண்டாள்.

இப்படி ஒவ்வொரு நாளும் வலியோடும் வேதனையோடும் கழிய நாட்கள் அதன் போக்கில் நகர ஆரம்பித்தது.....

மற்றவர்களுக்கு அர்ஜூன் சென்று இரண்டு மாதங்கள் ஆகியிருந்தது என்றால் அர்ஜூனிற்கும் திவ்யாவிற்கும் ஏதோ இரு யுகங்கள் போல் தெரிந்தது அந்த இரு மாதங்களும்....

தான் இந்தியா திரும்பும் நாள் நெருங்கிவிட்டதால் தன் அன்னைக்கு அழைத்தவன் தன் வருகையை பற்றி சொல்ல.... ஸ்ரீயோ...

"அர்ஜூன்.... ஒரு மாசம் ஆகும்னு சொன்ன ட்ரிப் உனக்கு இரண்டு மாசம் பிடிச்சிடுச்சுப்பா.... கல்யாணமாகி இத்தனை மாசம் வேற ஆகிடுச்சு... ஆனால் இன்னும் தாலி பெருக்கி கட்டலை..... வழக்கமா நம்ம பக்கத்தில கல்யாணம் ஆகி மூன்று மாதத்தில தாலி மாத்திறது வழக்கம்..... இப்போ நீ இங்க இல்லாததால் நம்மால அதை செய்ய முடியல..... நீ எப்போ வரன்னு சரியா சொன்னீன்னா அதுக்கேத்த மாதிரி நானும் நல்ல நாள் பார்த்து திவ்யா வீட்டிற்கும் சொல்லிடுவேன்" என்றார்......

64% 7:29 PM
https://drive.google.com/file
17



திவ்யாவின் பெயரை கேட்டதும் மனதிற்குள் எழுந்த இனிமையான உணர்வலைகளில் ஒரு சில நொடிகள் சுகமாய் லயித்து இருந்தவன், இருந்தாலும் விட்டுக் கொடுக்காமல்.....

"மாம், ஏன் மாம் என்னவோ நீங்க எல்லாரும் ஏற்கனவே பார்த்து பேசி முடிச்ச மேரேஜ் மாதிரி எல்லாத்தையும் பண்ணனும்னு நினைக்கிறீங்க? எதுக்கு மாம் இதுக்கெல்லாம்??" என்றான் தன்னிடத்தில் இருந்து இறங்கி வராமல் பிடிவாதமாக...

"அர்ஜூன் கல்யாணம் எப்படி நடந்திருந்தாலும் கல்யாணம் கல்யாணம் தான்.... நான் கண்டிப்பா இத செய்யனும்... நீ எப்போ வரன்னு மட்டும் சொல்லு" என்று ஸ்ரீ பிடிவாதமாக கூற,

"இந்த வாரத்திற்குள் எல்லா வேலையையும் முடிக்கப் பார்க்கிறேன்" என்றவன் கதிருக்கு அழைத்து திரும்புவதற்கான பயணத் தேதியை இந்த வார இறுதிக்குள் உறுதிபடுத்த சொன்னான்...

சரியாக ஒரு வாரத்திற்குள் மிச்சம் இருந்த வேலைகள் அனைத்தையும் முழு மூச்சாக முடித்தவன் ஒரு வழியாக ஷாப்பிங் செய்ய கிளம்பினான்...

ஏனெனில் அவன் எங்கு வெளிநாடு சென்றாலும், யாருக்கு என்ன வாங்கினாலும் வாங்காவிட்டாலும், அந்த அழகான ராட்ஷசிக்கு ஏதாவது வாங்கி வந்துவிடுவான்...

இல்லை என்றால் அவள் குறைந்தது ஒரு வாரத்திற்காவது மூஞ்சியை உர்ரென்று வைத்திருப்பாள்...

7:30 PM 64%
https://drive.google.com/file



ஷாப்பிங் சென்றவன் எல்லோருக்கும் வேண்டிய பொருட்களை வாங்கும் பொழுது திவ்யாவின் நினைவு வர அவளுக்கும் ஏதாவது வாங்க வேண்டும் என்று முடிவு செய்தவன் என்ன வாங்குவது என்று தெரியாமல் குழம்பினான்......

அவளிடம் இதுவரை பேசியிருந்தால் தானே அவளுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது என்று தெரியும்.... அர்ஜூன் அவள் அருகில் சென்றாலே சகலமும் நடுங்கி போய் நிற்பவளுக்கு அவன் பேசும் வார்த்தைகள் எங்கு கேட்கப் போகிறது....

ஆனால் தன்னவளுக்கு அவளுக்கு பிடிக்கும் விதத்தில் ஏதாவது வாங்கியே தீர வேண்டும் என்று உறுதியோடு இருந்தவனுக்கு அதை கண்டறிவதற்கு உகந்த ஒரே ஆள் மஹா தான் என்று தோன்ற மஹாவிற்கு அழைத்தவன்,

"மஹா.... ஐ ஆம் லீவிங் இன் டூ டேஸ்..... டு யூ வாண்ட் மீ டு கெட் எனித்திங் ஃபார் யூ [I am leaving in two days...Do you want me to get anything for you?] " என்றான்.

வழக்கமாக அவனாக அவளுக்கு பிடித்தது போல் பொருட்களை வாங்கி வருவான்.... அவளிடம் என்ன வேண்டும் என்றெல்லாம் கேட்க அவனுக்கு நேரம் இல்லை...... அதற்கெல்லாம் அவனுக்கு பொறுமையும் இல்லை....

ஆனால் முதல் முறையாக தன்னிடம் என்ன வேண்டும் என்று கேட்கும் அண்ணனை வித்தியாசமாக உணர்ந்த மஹா, இருந்தால் என்ன கேட்டு விட வேண்டியது தான் என்று பட்டியலிட ஆரம்பிக்க அவனுக்கு "ஏண்டா கேட்டோம்" என்பது போல் ஆனது...

ஒரு வழியாக அவளின் பட்டியல் முடிவு பெற மெதுவாக ஆரம்பித்தவன்...

"மஹா, நீ கேட்டது எல்லாம் வாங்க ட்ரை பண்ணுறேன்.... பட் ஐ ரியலி டோண்ட் ஹாவ் தட் மச் டைம்..... [But i really don't have that much time] சோ முடிந்தவரை வாங்கி வர முயற்சிக்கிறேன்...... தென் வேற யாருக்காவது ஏதாவது வேண்டுமா?" என்க,

இப்பொழுது அவளுக்கு புரிந்துப் போனது.....

அடப்பாவமே இது புரியாமல் நாம் தான் அளவுக்கதிகமாக அளப்பறை விட்டுவிட்டோமோ என்று நினைத்தவள்,

"அண்ணா, நீங்க யாருக்கு கேட்குறீங்கன்னு தெரியுது... பட் எனக்கும் உண்மையிலேயே தெரியாது.... திவ்யா அண்ணிக்கு என்ன பிடிக்கும் பிடிக்காதுன்னு அவங்க இது வரைக்கும் யார் கிட்டேயும் வாய் விட்டு சொன்னதில்லை அண்ணா..... நீங்களா உங்க மனசுக்கு பிடிச்சத வாங்கி வாங்க.... இன்ஃபாக்ட், நீங்க என்ன வாங்கி வர்றீங்கங்கறத விட உங்களோட இந்த எண்ணமே அவங்களுக்கு ரொம்ப சந்தோஷத்த கொடுக்கும்" என்றாள்.....

அவன் உள்ளத்திற்குள் அவளின் வார்த்தைகள் மகிழ்ச்சி அலைகளை உருவாக்கவே செய்து இருந்தது..... இருந்தாலும் தங்கையிடம் அதனை வெளிப்படுத்த விரும்பாதவன்.....

"மஹா, நீ அவ கிட்ட ஒன்னும் சொல்லிக்காத.... லெட் இட் பீ ஸர்ப்ரைஸ் ஃபார் ஹெர் [Let it be surprise for her] " என்றான்...

7:30 PM 63%
https://drive.google.com/file



என்ன தான் தங்கை மீது பாசம் இருந்தாலும் அர்ஜூன் வாழ் நாளில் இவ்வளவு நேரம், அதுவும் பொறுமையாக, கனிவாக மஹாவிடம் பேசுவது இதுவே முதல் முறை...

அண்ணனின் மனம் மாற்றத்தை உணர்ந்துக் கொண்டவள் எல்லாம் திவ்யா அண்ணியின் அமைதியான, அழகான அன்பு தான் காரணம் என்று புன்னகைத்துக் கொண்டாள்....

மாலையில் குளித்து முடித்து அழகிய பட்டுப் புடவை உடுத்தி கோவிலுக்கு சென்றிருந்த திவ்யாவின் மனமுழுவதும் எப்பொழுதும் போல் கணவனே நிறைந்து இருந்தான்... அவன் வெளிநாடு சென்று கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு மேல் ஆனதால் அவனின் முகம் அவளின் கண்களின் முன் திறைப் போல் படிந்திருந்தது....

கண்களை இறுக்க மூடி தன் வாழ்க்கையின் போக்கு, பாதை தெரியாவிட்டாலும், தன் கணவனுக்காக மட்டும், அவனின் சந்தோஷத்திற்காக மட்டுமே வேண்டிக் கொண்டவள் வீட்டிற்கு திரும்பி வர வீட்டிற்குள் நுழைந்தவளின் கால்கள் சட்டென்று தடுமாறியது....

அங்கு ஹாலில் இருந்த சோ:.பாவில் அமர்த்தலாக, கால் மேல் கால் போட்டுக் கொண்டு புன்னகை முகத்தோடு அனைவருடனும் மகிழ்ச்சியாக பேசிக் கொண்டு இருந்த கணவனைப் பார்த்தவளின் விழிகள் நிலைக்குத்தி இருக்க, இதயம் தன் துடிப்பை பல மடங்கு அதிகரித்தது....

வியப்பும் பூரிப்பும் ஒன்று சேர்ந்து உள்ளம் முழுவதும் மகிழ்ச்சி பரவ அசையாமல் சிலை போல் நின்றவளைத் திரும்பி பார்த்தவனின்

63% 7:30 PM
https://drive.google.com/file



ஆராயும் பார்வையில் நெளிந்தவள் தயங்கி நிற்க, ஸ்ரீயின் அழைப்பில் அவள் கால்கள் தானாக அவர்களிடம் அவளை இட்டு சென்றது...

ஆனால் முடிந்த வரை தன் உணர்வுகளை முகத்தில் காட்டாமல் மறைத்தவள் ஸ்ரீயின் அருகில் சென்று அமராமல் நிற்க...

"உட்காருடா.... இப்போழுது தான் அர்ஜூன் வந்தான்" என்றார்...

"ஏன் அவர் வருவதை இவர்கள் யாரும் எனக்கு முன்னரே தெரியப்படுத்தவில்லை?? கோவிலுக்கு கிளம்பிய பொழுது அத்தையும் மஹாவும் தாங்கள் வரவில்லை என்று அவளை மட்டும் ஏன் போகச் சொன்னார்கள்?? என்று யோசித்தவளுக்கு தான் வருவது அவளுக்கு ஸர்ப்ரைஸாக இருக்க வேண்டும் என்று அர்ஜுன் கேட்டுக் கொண்டது எப்படி தெரியப் போகிறது?

மாமியார் சொன்னதும் வேறு வழியில்லாமல் தயக்கத்துடனே அவர்களின் அருகில் அமர்ந்தவள் அர்ஜூனை நிமிர்ந்து பார்க்க அவனின் விழிகள் இன்னமும் தன் மீதே படிந்திருப்பதைக் கண்டதும் அது வரை இருந்து வந்த பூரிப்பும் மகிழ்ச்சியும் வெகு தூரம் பறந்து போனது....

அவனுக்கு நேரெதிரில் அமர்ந்து இருப்பதால் அவனின் ஆழமான தன் இதயத்தையே ஊடுறுவும் பார்வையை பார்த்தவளின் கால்கள் நடுங்க, கைகள் உதற, நெஞ்சு திக்திக்கென்று இருக்க மூச்சு திணறியே நின்று விடும் போல் இருந்தது...

அதற்கு மேல் ஒரு நிமிடம் கூட அங்கு அமர்ந்திருக்க முடியாமல் மெல்லிய குரலில் தயங்கியாவாறே....

63% 7:31 PM
https://drive.google.com/file
17



"அத்த, நீங்க பேசிட்டு இருங்க.... நான் போய் காபி போட்டு எடுத்து வரேன்" என்று நகரப் போனவளை,

"இல்லைடா.... இப்போழுது தான வந்த..... கொஞ்சம் நேரம் இங்க உட்காரு" என்றார் அவளின் கலக்கம் புரியாமல்.....

ஆனால் அவளுக்கோ மனம் பேயாட்டம் ஆடி தடாலென கீழே விழுந்து விடுவது போல் இருக்க தன்னை கட்டுபடுத்தத் தெரியாமல் அச்சத்துடன் எழுந்தவள்...

"இல்ல அத்தை.... இதோ ஒரு நிமிஷத்தில வந்திடுறேன்" என்றவள் அர்ஜுனை திரும்பியும் பாராமல் சமையல் அறைக்குள் புகுந்தாள்.....

திவ்யா அர்ஜுனின் வரவை ஆசையுடன் எதிர்பார்த்திருந்தாள் தான்... அவன் வரும் நாளை நினைத்து உள்ளூர மகிழ்ந்து இருந்தாள் தான்... ஆனால் அவன் இப்படி சொல்லாமல் கொல்லாமல் திடீரென்று வருவானென்று அவள் எதிர்பார்க்கவில்லை....

அதுவும் வந்ததில் இருந்து அதே ஆழமான பார்வையோடு பார்த்திருப்பவனை எதிர்நோக்கும் சக்தி என்று தான் அவளுக்கு இருந்திருக்கிறது....

மனதிற்குள் பலவிதமான எண்ணங்கள் சிதறிக் கொண்டிருந்தாலும், கணவனைக் கண்டதும் உள்ளம் முழுவதும் அதே திகில் சூழ்ந்துக் கொண்டாலும், கை ஏனோ அதன் போக்கில் அவன் எப்பொழுதும் விரும்புவது போலவே காபியைப் கலந்தது...

7:31 PM 63%
https://drive.google.com/file
17

கலந்து முடித்தவளுக்கு அடுத்த கலக்கம் இப்பொழுது காபியை அவரிடம் எப்படி கொடுப்பது என்று....

மீண்டும் ஒரு முறை அவரின் ஈட்டியைப் போன்ற பார்வையை, என்னை அலசி ஆராயும் அவர் விழிகளை சந்திக்க எனக்கு தைரியம் இல்லை என்று யோசித்துக் கொண்டு இருந்தவளுக்கு பேசாமல் அல்லியிடம் காபியைக் கொடுத்துவிடலாமா என்று கூட தோன்றியது....

ஆனால் இப்பொழுது தான் வந்திருக்கிறார்... அதற்குள் மீண்டும் அவன் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ள மனமில்லாமல் வெளிப்படையாக நடுங்கும் கைகளுடனேயே காபி கோப்பைகளை ஒரு தட்டில் வைத்து கொண்டு வந்தாள்...

அனைவரும் காபியை எடுத்தவுடன் அர்ஜூனிடமும் நீட்ட, அவளின் நடுங்கும் கைகளைப் பார்த்தவன் அவளை நிமிர்ந்து பார்க்க,

"ஐயோ! மறுபடியும் அதே பார்வையா?" என்று மூச்சு முட்டியது அவளுக்கு.....

இவர்களின் பார்வை பறிமாற்றதை பார்த்திருந்த ஸ்ரீ "இதுங்க இப்படியே பார்த்துக் கொண்டே இருந்தா எப்போ ஒன்று சேர்வது? யார் முதல்ல தன் காதலை சொல்லப் போவது?" என்று மானசீகமாக தலையில் கைவைத்தவர் திவ்யாவின் கரத்தை வலுவில் பிடித்து இழுத்து தன் அருகில் அமர செய்தவர்.....

"வேலை செஞ்சது போதும்... கொஞ்சம் இப்படி உட்காரு" என்க அதற்கு மேல் அவருக்கு மறுப்பு சொல்ல முடியாமல் வேறு வழியில்லாமல் தலை குனிந்தவாரே அவர் அருகில் அமர்ந்தவள் மறந்தும் அர்ஜூனை நிமிர்ந்து பார்க்கவில்லை....

மஹா அர்ஜுனிடம்...

"அண்ணா.... என்னோட லிஸ்டில் இருந்தெல்லாம் வாங்கினீர்களா?" என்று கேட்க,

"உன்னோட லிஸ்டில் இருந்ததெல்லாம் வாங்கனும்னா நான் தனியா ஒரு ட்ரிப் போகனும்" என்று அவன் வழக்கம் போல் ஆங்கிலத்தில் உறையாட துவங்க ஒன்றும் புரியாதவளாக அமர்ந்திருந்தவளுக்கு எப்போழுது அந்த இடத்தை விட்டு அகல்வோம் என்று இருந்தது.

தன் பெட்டியை மஹாவிடம் காட்டிய அர்ஜுன்...

"அதில் நீ கேட்டது இருக்கிறது.... உன் ரூமுக்கு போய் செக் பண்ணிக்கோ" என்றவன்,

"ஒகே மாம்.... டாட்.... ஆம் வெரி டையர்ட்.... லெட் மீ ஹாவ் ஸம் ரெஸ்ட் [Ok Dad, I am very tired... Let me have some rest]" என்று கூறி விட்டு மாடி ஏறினான்...

அவன் அங்கு இருந்து நகர்ந்ததும் மெல்ல தலை நிமிர்ந்தவள் அவனின் பரந்த முதுகை வெறித்து பார்த்தவாறே அமர்ந்திருக்க, அவள் முகம் காணாமலே அவளின் விழிகளில் தெரிந்த ஏக்கத்தை, அவள் தன் முதுகையே கண்கள் இமைக்காமல் பார்த்திருப்பதை உணர்ந்துக் கொண்டவனின் முகத்திலோ அத்தனை புன்னகை.....

63% 7:31 PM
https://drive.google.com/file



ஆனால் அவளின் ஏக்க பார்வையைப் பார்த்திருந்த மற்றவர்களுக்கோ தர்ம சங்கடம் ஆகிப் போனது...

மஹாவிற்கு இத்தனை வாங்கியிருந்தவன் திவ்யாவிற்கும் எதனையாவது வாங்கி வந்திருக்க கூடாது என்று ஸ்ரீ தவித்துப் போனார்....

மஹாவிற்கோ....

"அண்ணன் எனக்கு வேண்டிய பொருட்களின் லிஸ்டைக் கேட்டதே அண்ணிக்கு என்ன பிடிக்கும் என்று கேட்பதற்கு தான்.... ஒரு வேளை நாம் அண்ணிக்கு என்ன பிடிக்கும்னு தெரியாது என்று சொல்லிவிட்டதால் அவரும் ஒன்றும் வாங்காமல் வந்து விட்டாரோ?? ஆனால் இல்லையே... அவருக்கு ஏதோ சர்ப்ரைஸாக வாங்கப் போவதாகத் தானே சொன்னார்... ஆனால் இதுங்க இரண்டும் ஆடும் கண்ணாம் பூச்சி விளையாட்டுல சேர்ந்தோம், நாம செத்தோம்" என்றே தோன்றியது..

"மாம்.... நான் வேண்டுமானால் அண்ணன் எனக்கு வாங்கி வந்ததில் எதனையாவது திவ்யா அண்ணிக்கு கொடுத்துவிடட்டுமா" என்றாள் கிசுகிசுப்பாக..

"அதை பற்றி அப்புறம் பேசிக்கலாம்" என்று கூறிய ஸ்ரீ "மஹாவிற்கு இவ்வளவு வாங்கி வந்த அர்ஜுன் திவ்யாவிற்கும் எதையாவது வாங்கி வந்திருக்கலாம்... பாவம் அவளும் சின்ன பெண் தானே.... ஏன் தான் இந்த அர்ஜுன் இப்படி கல் நெஞ்சம் உடையவனாகிருக்கிறானோ?" என்று எண்ணியவர்..

"அருண் நீ ஸூட்கேசைக் கொண்டுப் போய் ரூமில வை..." என்றார்...

63% 7:31 PM
https://drive.google.com/file

அவருக்கு இதற்கு மேல் அங்கு திவ்யாவை வைத்துக் கொண்டு பொருட்களை பற்றி பேச விருப்பம் இல்லை.

ஆனால் தன் அறைக்கு வந்த அர்ஜூனிற்கோ தன் மனைவியின் ஏக்கம் மிகுந்த கண்களே பறை சாற்றியது அவளின் மௌனத்தில் கறைந்திருக்கும் காதலை.....

தன் இதயம் முழுவதும் தன் கணவனின் மீது அளவுக் கடந்த காதலை சுமந்துக் கொண்டு ஆனால் அச்சத்தால் தன் மனதினை இறுக்க மூடியிருக்கும் தன்னவளை அவளின் கண்களே காட்டிக் கொடுக்கின்றதே...

அவளைப் பிரிந்திருந்த இந்த இரண்டு மாதங்களில் ஒவ்வொரு நிமிடமும் தன்னவளின் அழகிய முகமும், தன்னைக் கண்டதும் நாணத்துடன் அச்சமும் கலந்து கவிழும் விழிகளும் அவன் கண்களின் முன் தோன்றி அதனால் அவன் தவித்த தவிப்பு அவனுக்கு எடுத்துக்காட்டியிருந்தது இனி அவள் இல்லாமல் அவன் இல்லை என்பதை...

நான் எப்படி ஒரு சின்ன பெண்ணிடம் காதலில் விழுந்துவிட்டேன் என்று தன்னை குறித்தே ஆச்சரியப் பட்டவனுக்கு தெரியவில்லை வெறுப்புக்கும் விறுப்புக்கும் ஒரு நூலளவு இடைவெளியே என்று....

அவனுக்கு அவளின் மீதான வெறுப்பு காதலாக கனிந்தது எப்போது என்று தெரியவில்லை... ஆனால் இந்த நிமிடம் அவனின் மனம் முழுதும் அவளின் நினைவே காதலாக கசிந்துருகியது...

63% 7:31 PM
https://drive.google.com/file

இரவு பகல் பாராது அவளின் நினைவுகளிலேயே உழன்றுக் கொண்டு இருந்தவனுக்கு அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தவனுக்கு தெரிந்தது தனக்கு இருக்கும் அதே தவிப்பு தானே அவளுக்கும் இருக்கும் என்று...

அந்த நிமிடம் அவனுக்கும் புரிந்தது தன் மேல் இருந்த தவறு....

இதே சிந்தனைகளில் இரண்டு மாத கால பயணத்தை முடித்து திரும்பி வந்தவன் தேர்ந்தெடுத்து இருந்தான் தன் காதலை தன் மனைவியிடம் வெளிப்படுத்தும் அந்த பொக்கிஷமான தருணத்தை....

அந்த நிமிடம் இந்த கி:ப்டை அவளுக்கு கொடுக்க வேண்டும் என்று அவளுக்கேன்றே வாங்கி வந்திருந்தான் அந்த அழகிய பரிசினை....

அப்பொழுது அவளின் அழகிய முக மாற்றத்தை ரசிக்க வேண்டும்.... அப்பொழுதும் நிச்சயம் அதிர்ச்சியும் அச்சமும் வெட்கமும் கலந்த விழிகளை தான் என் மீது வீசுவாள்.....

அந்த விநாடி அவளை என் கைகளில் அள்ளி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கற்பனை செய்திருந்ததால் மற்றவர் முன்னிலையில் அவனுக்கு அதைக் கொடுக்க விருப்பம் இல்லை....

ஆனால் எதற்கும் படியாத இரும்பு போன்று இறுகியிருந்த தன் கணவனின் இதயத்தில் தன் மௌனத்தாலேயே இத்தனை மாற்றத்தை தான் உண்டு பண்ணியிருப்பதை அவன் மனைவி அறிவாளா?

தன் கணவன் தன் காதலை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தை, அவன் கனவு கண்டுக் கொண்டு இருக்கும் அந்த அழகிய தருணத்தை அவள் அவனுக்கு கொடுப்பாளா?

63% 7:32 PM
https://drive.google.com/file

பாகம் - 15

அர்ஜூன் மறுக்காததால் (அவன் மறுத்தாலும் இந்த அம்மா விடப் போவதில்லை!) ஸ்ரீ மறுநாளே கலாவை அழைத்தவர் தாலி பெருக்கி கட்டுவதைப் பற்றி பேசி ஒரு நல்ல நாள் குறிக்கச் சொன்னார்....

"ஸ்ரீ..... இப்ப தான் மாப்பிள்ளை வெளிநாட்டில் இருந்து வந்திருக்கார்னு சொல்ற.... அதுக்குள்ளேயுமாடி தாலி பெருக்கிக் கட்டறத செய்யனும்..." என்று கலா இழுக்க...

"கலா.... திவ்யா இன்னும் கயிறுதாண்டி போட்டிருக்கா.... கல்யாணம் பண்ணி இவ்வளவு நாளாச்சு.... எங்க முறைப்படி தாலிக் கொடி தான் போடனும்.... நீ ஒரு நல்ல நாள் பாரு.... விஷேஷத்தை எங்க விட்டிலேயே வச்சுக்கலாம்" என்று முடித்தார் ஸ்ரீ...

அதற்கு மேல் கலாவால் ஒன்றும் பேச முடியவில்லை....

என்ன தான் ஸ்ரீ தன் தோழியாக இருந்தாலும் இப்பொழுது திவ்யாவின் மாமியார்... அவர் சொற்படி அவர்களின் முறைகளை கடைப் பிடித்து தான் ஆக வேண்டும்..

தன்னுடைய விட்டிலேயே விஷேஷத்தை வைத்துக் கொள்ளலாம் என்று பாலாவிடம் சொன்னவர் அர்ஜூனிடமும் சொல்ல உடனே ஒத்துக்கொண்டால் அவன் அர்ஜூன் இல்லையே...

7:32 PM 63%

https://drive.google.com/file



"ஏன் மாம்? இப்போ தான் ரிஷப்ஷன் வச்சீங்க.... இப்போ இது எதுக்கு?"...

"அர்ஜூன்... ரிஷப்ஷன் வச்சு ரெண்டு மாசத்திற்கு மேல் ஆச்சு... இதுக்கும் ரிஷப்ஷனுக்கும் என்ன சம்பந்தம்? அது மட்டுமில்லாமல் திவ்யா வெறும் கயிறு தான் போட்டிருக்கா? நம்ம முறையின் படி தாலியை செயின்ல மாட்டனும்... திவ்யாவின் அப்பாவிற்கும் வினோத்திற்கும் லீவுக் கிடைக்கிறத பொறுத்து கலா ஒரு நல்ல நாள் பார்க்கிறேன்னு சொல்லியிருக்கா.... தயவு செஞ்சு நீ வீட்டுல இருக்கிற மாதிரி பார்த்துக்க"

திவ்யாவின் தாலியைப் பற்றி சொன்னதும் அர்ஜூனிற்கு அவர்களின் திருமண நாள் நியாபகத்தில் வந்தது.....

இரண்டு முடிச்சு போட்டவன் மூன்றாவது முடிச்சு போடுவதற்குள் திவ்யாவின் அருகில் இருந்து யாரோ மூன்றாவது முடிச்சை போட தாலிக் கயிறை வாங்க கையை நீட்ட, என்ன தான் அந்த திருமணத்தை அவன் அந்த நிமிடம் அறவே வெறுத்திருந்தாலும், ஆங்காரத்திலும் அவமானத்திலும் அப்பொழுது சுழன்று கொண்டு இருந்தாலும் மனதில் என்னவோ உந்த, தானே மூன்றாவது முடிச்சையும் போட்டு முடித்தான்....

மனதிற்கு பிடிக்காவிட்டாலும் ஒரு வேளை அவள் தான் இனி நம் வாழ்க்கை என்று அப்பொழுதே அவனின் ஆழ் மனதில் பதிந்திருந்ததோ!!!!!

நினைத்துப் பார்த்தவனுக்கு இந்த நிமிடமே தன்னவளிடம் தன் காதலை சொல்லமாட்டாமோ என்று மனம் ஆர்ப்பரித்தது...

62% 7:34 PM
https://drive.google.com/file



தாலிப் பெருக்கைப் பற்றி பேசிக் கொண்டிருக்க தன் மகனின் மனம் வேறு எதனையோ சிந்தித்துக் கொண்டு இருப்பதை பார்த்த ஸ்ரீ...

"அர்ஜூன்..." என்றழைக்க...

சுயநினைவிற்கு வந்தவன் வழக்கம் போல் தன் அன்னையின் பேச்சிற்கு மறு பேச்சு பேச ஸ்ரீக்கு அவனை எப்படி சம்மதிக்க வைப்பது என்று குழப்பமாக இருந்தது....

ஆனாலும் விடாப்பிடியாக....

"அர்ஜூன்... இதை நாம் செஞ்சு தான் ஆகனும்... கலாவிடமும் ஏற்கனவே பேசியாச்சு.... நான் சொல்ற நாள் நீ வீட்டில் இரு.... அது போதும்"

"மாம், இது லேடீஸ் விஷயம்..... இதுல என்னைய எதுக்கு எதிர்பார்க்கிறீங்கன்னே எனக்கு புரியலை" என்று அவன் மேலும் சலித்துக் கொள்ள,

"ம்ம்ம்.. ஏன்னா தாலி மாத்திக்கட்டப் போறது உன்னோட மனைவிக்கு" என்றவர் அதற்கு மேல் அந்த பேச்சை வளர்க்க விருப்பம் இல்லாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்...

வெளியே தன் திருமணம் சம்பந்தமான, தன் மனைவிக்கு உசிதமான எந்த விஷயத்தையும் அவன் பிடிக்காதது போல் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் அவனுக்குமே இது பிடிக்க தான் செய்தது...

https://drive.google.com/file 62% 7:34 PM



திருமணம் தான் எதிர்பாராதவிதமாக நடந்துவிட்டது.... இது போன்ற விஷேஷங்களாவது நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று நினைத்தவன் தன் காதலை சொல்லவும் அந்த நாளையே தேர்ந்தெடுத்தான்....

தாலி கட்டிய அன்றுதான் மனதில் காதல் இல்லாது வெறுப்பை மட்டுமே சுமந்திருந்தேன்....

தாலியை மாற்றும் அன்றாவது என் சித்தத்தில் கலந்திருக்கும் காதலை என் இதயத்தில் சுமந்திருக்கும் என்னவளுக்கு வெளிப்படுத்தி அவளை என்னவளாக முழுவதும் எடுத்துக் கொள்ள வேண்டும்.......

அந்த இனிமையான நாளிலேயே தன்னுடைய பரிசு பொருளையும் அவளுக்கு கொடுக்க முடிவு செய்தான்...

நல்ல நாளை முடிவு செய்து நெருங்கிய சொந்தங்களை மட்டும் அழைத்த ஸ்ரீ பாக்யத்தை மட்டும் அழைக்கவில்லை...

அவருக்கு நன்றாக தெரியும், அவள் வந்தால் தாலி பெருக்கி கட்டும் போது நிச்சயம் ஏதாவது அபசகுனமாக பேசுவாள் என்று.

நாள் குறித்து முடிந்ததும் அர்ஜூனிடம் அதனைப் பற்றி பேச...

ஆனால் அர்ஜூனின் நேரம் அன்று அவன் தங்களின் மிகப் பெரிய க்ளையண்டுகள் சிலரை சந்திக்க வேண்டி பெங்களூர் செல்ல வேண்டியிருந்தது....

7:34 PM 62%
https://drive.google.com/file 17



"டாட்.... நான் சில க்ளையண்ட்ஸ மீட் பண்றதுக்காக பெங்களூர் போறேன்.... ஏற்கனவே ஷெடியூல் பண்ணியாச்சு.... நான் இந்த ஃபங்ஷனுக்கு ரெண்டு நாள் முன்னாடியே கிளம்புகிறேன்.... அன்னைக்கு நான் எங்கிருப்பேன் என்று இப்போ என்னால கண்டிப்பா சொல்ல முடியாது"

"என்ன அர்ஜுன்... எப்பவே உன் கிட்ட இதைப் பற்றி பேசியாச்சு... திரும்பவும் இப்படி சொன்னால் எப்படி?

ஸ்ரீக்கு அர்ஜுன் இந்த விஷேஷத்தில் கலந்துக் கொள்ள விருப்பம் இல்லாமல் வேண்டும் என்றே தான் பெங்களூர் போவதாக தோன்றியது....

ஆனால் அர்ஜுன் சொன்னது போல் உண்மையிலேயே இது அவன் தவிர்க்க முடியாத தொழில் சம்பந்தப்பட்ட மீட்டிங்...

இவர்கள் இதனைப் பற்றி பேசிக்கொண்டு இருக்க, அவர்களின் விவாதங்களைக் கவனித்துக் கொண்டு இருந்த திவ்யாவின் மனம் மேலும் அடிப்பட்டு காயம் கண்டது....

வெளி நாட்டில் இருந்து வந்ததில் இருந்து அர்ஜுனை அவள் அடிக்கடி காணும் சந்தர்ப்பம் அமையாவிட்டாலும், அவனும் அவன் அலுவலகமே கதியென்று கிடந்திருந்தாலும் ஏதோ ஒரு இனம் புரியாத அமைதி அவள் மனதில் உலவிக் கொண்டு தான் இருந்தது....

ஒரு வேளை இத்தனை நாட்கள் பிரிந்திருந்த கணவன் வீடு வந்து சேர்ந்ததில் வந்த நிம்மதியோ அல்லது அவ்வப்பொழுதாவது அவனை பார்க்க முடிகிறதே என்ற சந்தோஷமோ...

https://drive.google.com/file

அப்படி இருக்க அத்தையும் மாமாவும் இவ்வளவு எடுத்து சொல்லியும் அவருக்கு இங்கு இருக்க பிடிக்கவில்லை போல் என்று நினைத்தவளின் இதயத்தில் புதிதாக அரும்பிய மொட்டு தீயில் பட்டு கருகியது போல் இருந்தது..

"அவருக்கு பிரியமில்லாத காரியத்தை ஏன் அத்தையும் இந்த அம்மாவும் செய்கிறார்கள்? இந்த சூழலில் அவசியம் தாலி மாற்றிக் கட்ட வேண்டுமா?" என்று மனதிற்குள் எண்ணியவள் தன் விழிநீரை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொள்ள, அது அவளருகில் இருந்த மஹாவின் கண்களிலிருந்து தப்பவில்லை...

"என் வயது ஒத்தவர் தான் திவ்யா அண்ணி... இன்னும் சொல்ல போனால் என்னை விட சின்னவர்.... இந்த வீட்டிற்கு வந்ததில் இருந்து அவர் மகிழ்ச்சியாக இருக்கிறாரோ இல்லை ஆனால் பாவம் நிம்மதியாக இல்லை...."

என்று மனம் வெதும்பியவள் தன் ஒட்டு மொத்த தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு தன் அண்ணிக்காக பேச முதன் முறை அர்ஜூனின் அறைக் கதவை தட்டினாள்....

"கம் இன்" என்று அவன் பணிக்கவும் உள்ளே சென்றவள் சில விநாடிகள் தயங்க அவளைக் கூர்ந்து பார்த்தவாறே....

"வாட் மஹா? எனி ப்ராப்ளம்?" என்றான்....

மஹா கலாட்டா பண்ணுவது கதை அளப்பது எல்லாம் அருணிடம் மட்டும் தான்.... அர்ஜூனிடம் அதெல்லாம் செல்லுபடி ஆகாது....

7:34 PM 62%

https://drive.google.com/file



ஏன்? என்ன? எதற்கு? அவ்வளவு தான்... கேள்விகளும் சரி பதில்களும் சரி அனைத்துமே ஒற்றை வரியிலேயே முடிந்துவிடும்...

அவனை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் இல்லாமல் "வீராப்பாக வந்தாச்சு, இனி பேசாமல் போக முடியாது" என்று நினைத்தவள் மெதுவாக...

"அண்ணா.... நான் கொஞ்சம் உங்கள் கூட பேசனும்" என்றாள்...

அவளின் அருகில் வந்தவன் கதவை சாத்திவிட்டு அவளை நோக்கி புருவத்தை உயர்த்தி என்ன என்பது போல் பார்க்க,

மனதிற்குள் ஏற்கனவே மனப்பாடம் செய்து வைத்திருந்த கேள்விகளை சடசடவென கேட்டுவிட்டாள்....

"ஏன் அண்ணா இப்படி இருக்கிறீங்க? எதற்கு ஒரு சின்ன பெண்ணை இவ்வளவு ஹேர்ட் பண்றீங்க? அவங்க பாவமில்லை?"

அவள் திவ்யாவை பற்றித் தான் பேசுகிறாள் என்று புரிந்துக் கொண்டவன் மென்மையாக புன்னகைத்தவாரே....

"அவ உனக்கு சின்ன பெண்ணா?" என்று கேட்க..

"ஆமாம் என்னைய விட அண்ணி மூனு வயசு சின்னவங்க தானே" என்றவள் இவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற கலக்கத்துடனேயே தொடர்ந்தாள்...

7:34 PM 62%
https://drive.google.com/file



"ஆனால் இதை பற்றி பேச எனக்கும் வயசில்ல தான்.... அதே சமயம் என்னால பேசாமலும் இருக்க முடியலைண்ணா..... உங்க ரெண்டு பேர் கல்யாணமும் நடந்த விதம் சரியில்லாமல் இருக்கலாம்..... இட்ஸ் நாட் ஃபேர் பார் போத் ஆஃப் யூ [Its not fair for both of you"] , உங்களோட மனநிலை எப்படி இருந்திருக்குமோ அப்படி தான் அண்ணியோட மன நிலையும் இருந்திருக்கும்..... அதுக்காக நீங்களும் அண்ணியும் ஒன்னுன்னு நான் சொல்ல வரலை.... நீங்க வேற அண்ணி வேற தான்..... ஆனால் அதே சமயம் ஒரு பெண்ணா அவங்க என்ன மன நிலையோட அப்போ இருந்திருப்பாங்கன்னு என்னால புரிஞ்சுக்க முடியும்..... ரெண்டு பேர் மேலேயும் தப்பு இல்லைங்கிற போது இப்படி அவங்கள எதுக்கெடுத்தாலும் ஹெர்ட் பண்றது சரியில்லைண்ணா..... அவங்க ரொம்ப இன்னசண்ட்...... பாவம்ண்ணா..... உங்களுக்கு அவங்கள பிடிக்கலைன்னா கூட பரவாயில்லை.... ஆனால் எனக்கு தெரியும் உங்களுக்கு அவங்கள பிடிச்சிருக்குன்னு"

என்று அவள் கூறும் பொழுது அவளை உற்று நோக்கியவன் பதில் எதுவும் கூறாமல் அவளையே பார்த்திருக்க...,

அவனின் கழுகு பார்வையை தாங்கிக் கொள்ள முடியாமல் பேச்சு தொண்டையிலேயே சிக்கிக் கொள்ள விக்கித்து போய் நின்றாள்....

ஆனால் அவன் மேலே பேசு என்பது போல் தலையை அசைத்து சைகை செய்ய, வேறு வழியின்றி அவளே தொடர்ந்தாள்...

"இது எனக்கு எப்படி தெரியும் என்று பார்க்கிறீர்களா? அவங்களுக்கு சர்ப்ரைஸ் கிஃப்ட் வாங்கிறதும், நீங்க அண்ணிய பார்க்குற பார்வையுமே சொல்லுதே" என்றவள் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் குனிந்து ஒரு நமுட்டு சிரிப்பு சிரித்து விட்டு மீண்டும் தொடர்ந்தாள்..

62% 7:35 PM
https://drive.google.com/file



"அதனால ப்ளீஸ்.... இத இப்படியே இழுக்கறத விட்டுட்டு போய் உங்க லவ்வ சொல்லுங்க" என்றவள் சொன்னதும் தான் புரிந்தது இது நாம ரிகர்ஸல் பார்த்த வார்த்தைகளே இல்லையே என்று....

ஏதோ ஒரு ஆர்வத்தில் கூறிவிட.... "ஐய்யய்யோ!! போச்சு, திட்டு விழப் போகுது" என்று அஞ்சிக் கொண்டு அவனையே பார்த்திருக்க, அவனோ...

"அடிப்பாவி! என்ன பேச்சு பேசுகிறாள்?" என்பது போல் மனதிற்குள் நினைத்துக் கொண்டாலும் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை.....

இதற்கு மேல் என்ன பேசுவது என்று மஹாவிற்கும் தெரியாமல் சலிப்புடன் தன் அறைக்கு திரும்பினாள்...

காரை ஓட்டிக்கொண்டு தன்னுடைய அலுவலகத்திற்கு வந்துக் கொண்டிருந்த அர்ஜுனிற்கு மனமெல்லாம் மஹா சொன்னதிலேயே நிலைத்து இருந்தது...

திவ்யாவை தான் திருமணம் செய்த நாளை நினைத்தவன், தன் அன்னை திவ்யாவிடம் தன்னை பிடித்திருக்கிறதா என்று கேட்ட பொழுது தன்னை நிமிர்ந்து கூட பார்க்காது கலாவைப் பார்த்தது...

பின் திருமணச் சடங்கின் போது மிகுந்த அச்ச்சத்தோடு தலை குனிந்தவாரே தன் அருகில் அமர்ந்து இருந்தது... சென்னைக்கு வந்ததற்குப் பிறகு தன்னை பார்க்கும் பொழுதெல்லாம் ஓடி ஒளிந்தது..... அந்த மழை நாளில் தன்னை கிண்டல் செய்த வாலிபர்களைப் பார்த்து பயந்து தன்னிடம் ஒண்டிக் கொண்டது...... உடை மாற்றும் பொழுது தன்னை பார்த்து பயந்து நடுங்கியது.....

7:35 PM
https://drive.google.com/file

பின் தான் யூ எஸ் செல்ல கிளம்பிய பொழுது கலங்கிய முகத்துடனும் அழுத விழிகளுடனும் தன்னை மௌனமாக வழி அனுப்பியது என்று ஒன்றன் பின் ஒன்றாக மனதிற்குள் ஓட அந்த கனம் இத்தனை நாளாய் தான் இழந்தது என்ன என்பதை உணர்ந்தவன் எப்பொழுதோ தன் இதயத்தில் அழுத்தமாக காலடியை எடுத்து வைத்திருந்த காதலை தன் மனம் கவர்ந்த மனையாளிடம் சொல்வதற்கு தயாரானான்...

"எப்படியும் திவ்யாவின் தாலிப் பெருக்கிற்குள் திரும்பி வந்துவிட வேண்டும்" என்று முடிவெடுத்தவன் விஷேஷத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே பெங்களூருக்கு கிளம்ப இத்தனை சொல்லியும் கிளம்புகிறாரே என்று நினைத்த திவ்யாவிற்கு தான் மனம் தவித்து போனது...

ஆனால் அவள் கணவன் தன் உள்ளத்திற்குள் புதைத்து வைத்து இருந்த தன்னவளின் மீது இருந்த அளவுக்கடந்த காதல் அவளுக்கு புரிய வாய்ப்பில்லையே..

கலா குறித்திருந்த தேதியிலே தாலி பெருக்கிற்கு ஏற்பாடு செய்ய, தாலி பெருக்கு அன்று நெருங்கிய சொந்தங்கள் வர ஆரம்பிக்க விடு களை கட்டியது.

திருமண பட்டு புடவையில் அழகுற தேவதைப் போன்று நின்று இருந்த தன் மகளின் அருகே வந்த கலாவிற்கு அவள் கண்களில் தெரிந்த சோகம் எதனையோ உணர்த்த நெருங்கி வந்தவர்,

"எங்கம்மா, மாப்பிள்ளைய காணோம்?" என்றார்..

7:35 PM 62%
https://drive.google.com/file



"இல்லம்மா, அவங்க திடீர்னு பெங்களூருக்கு போற வேலை வந்திடுச்சு.... பிஸினஸ் விஷயமா போயிருக்காங்க... அவங்களுக்கு பிஸினஸ் தான் முதல் மனைவி" என்று சிரித்தபடியே கூற,

அவளின் உயிரோட்டமில்லாத புன்னகையைப் பார்த்த கலாவிற்கு ஏதோ சரியில்லை என்று தோன்றியது..... ஆக இன்னும் இவர்களுக்குள் ஒரு இணக்கம் வரவில்லை....

மனம் கனக்க....

"நீ சந்தோஷமா இருக்கியா திவ்யா?" என்க..

"எனக்கு என்னம்மா குறைச்சல்? அத்த, மாமா, மஹா அண்ணி, அருண் அத்தான் எல்லோரும் என்கிட்ட பாசமா இருக்காங்க..... நான் என்றால் இவங்க அத்தனை பேருக்கும் அவ்வளவு பிரியம்" என்றவள் மறந்தும் கூட தன் கணவனைப் பற்றிக் குறிப்பிடவில்லை....

பெற்றவளுக்கு புரிந்துப் போனது.... மற்ற அனைவரையும் கூறியவள் வேண்டும் என்றே தான் தன் கணவனை பற்றி சொல்லவில்லை என்று...

சந்தோஷமாக விஷேஷத்திற்கு வந்தவருக்கு மகளின் கலங்கிய முகமும் பேச்சும் மனதிற்குள் பாரமாக இருக்க அவளின் தலையை தடவிவிட்டவர் ஒன்றும் பேசாமல் மௌனமாகவே இருக்க அதற்குள் கீழே இருந்து ஸ்ரீ அழைத்தார்....

திவ்யாவின் அருகில் வந்த ஸ்ரீ....

7:35 PM 62%
https://drive.google.com/file



"கலா, பார்த்தியா? என் மருமகளை.... எவ்வளவு அழகா இருக்கிறான்னு?" என்றவரின் முகம் பெருமையில் வழிந்தாலும் இந்த அழகினை அனுபவிக்க வேண்டிய தன் மகன் இவ்வாறு தள்ளி இருக்கிறானே என்று உள்ளுக்குள் வருந்தவும் தவறவில்லை....

இதனைப் பார்த்தவாறே வந்த வினோத் திவ்யாவிடம் வந்தவன் அர்ஜூனைப் பற்றிக் கேட்க, திவ்யா சொன்ன பதிலை கலா அவனிடம் சொல்ல, கேட்டுக் கொண்டிருந்தவனின் கண்கள் சட்டென்று மாடிப் படிகளில் இறங்கி வந்துக் கொண்டிருந்த மஹாவின் மேல் நிலைத்தது...

அழகு தேவதை என மெல்ல அசைந்து படிகளில் இறங்கி வந்துக் கொண்டு இருந்தவள் அதே நேரம் அவனைப் பார்க்க அவனின் விழுங்கிவிடும் பார்வையில் தன் விழிகளை தாழ்த்தியவள்....

"பார்க்கிறதுக்கு தான் இந்த பூனையும் பாலைக் குடிக்குமான்னு இருக்கு... ஆனா பார்வை மட்டும் கரெக்டா நம்ம மேல விழுது" என்று நினைத்துக் கொண்டு கலாவின் அருகில் வந்தவள், தான் அணிந்திருந்த புடவையைக் காண்பித்தவள்.....

"எப்படி இருக்கு அத்தை?" என்றாள்...

பார்வை என்னவோ கலாவைப் பார்த்து தான் ஆனால் கேள்வி தன் மனம் கவர்ந்தவனுக்கே என்பது போல் இருந்து அவள் கேட்ட விதமும் முக பாவனையும்...

62% 7:37 PM
https://drive.google.com/file

ஒரு முறை பேச்சு வாக்காக திவ்யா அவளிடம் சொல்லி இருக்கிறாள் வினோத்திற்கு சிட்டி பெண்களின் நாகரிக உடைகள் சுத்தமாக பிடிக்காது என்று...

அதனாலேயே அவள் திவ்யாவிடம் நாசுக்காக வினோத்திற்கு என்ன நிறம் பிடிக்கும் என்று விசாரித்து ஏகப்பட்ட கடைகளில் ஏறி இறங்கி அலைந்து திரிந்து இந்த புடவையை வாங்கி இருந்தாள்.....

எந்த விஷேஷத்திற்கும் சுடிதார், டாப்ஸ், ஜீன்ஸ் என்று அணியும் மகள் திடீரென்று இன்று புடவை அணிந்திருப்பதை கண்ட ஸ்ரீக்கு கூட மிகுந்த ஆச்சரியம்.

அவளின் நிறத்திற்கு அவள் அணிந்திருந்த பச்சை நிற பட்டுப் புடவையும் அதில் அடர்ந்த பிங்க் நிற கரையும் அத்தனை எடுப்பாக இருந்தது.

"மாம், நான் எப்படி இருக்கேன்?" என்று சிறிது சத்தமாகவே கூறவே,

வேறு எங்கோ பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்த வினோத் சட்டென்று இவளை திரும்பி பார்க்க, அவனைப் பார்க்காதது போல் சென்றவளைப் பார்த்தவன்,

"ராட்சஷி, என்னம்மா கத்தறா" என்று நினைத்துக் கொண்டவன் அவளின் அழகில் மயங்கவும் தவறவில்லை.

அர்ஜுனைப் போன்று நல்ல சிவந்த நிறம்.... வரைந்து வைத்த ஓவியம் போன்று அபாரமான அழகு.... சிலைப் போன்ற உடல்வாகு... அழகான புருவங்களுடன் கூடிய விழிகள், அழகான வடிவான இதழ்கள்

என்று சர்வ லட்ஷணமாய் இருந்தவளைப் பார்க்க பார்க்க அவனுக்கு திகட்டவில்லை....

சுவற்றுக்கு முதுகு கொடுத்து சாய்ந்தவாறு நின்று அவனைப் பார்த்தவளை கண்டவனுக்கு அதற்கு மேலும் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் யாரும் அறியாத வண்ணம் அவளின் அருகில் நெருங்கி நின்றவன் அவளின் விரல்களுக்குள் தன் விரல்களைக் கோர்க்க, அவன் தன் அருகில் வருவதைக் கண்டவுடனே இதயம் பலமாக துடிக்க ஆரம்பித்ததை உணர்ந்து இருந்தவளுக்கு அவன் தன் விரல்களை பிடிக்கவும் உதறல் எடுக்க ஆரம்பித்தது....

"என்ன தைரியத்தில் இத்தனை பேர் இருக்கும் பொழுது இவர் இப்படி என் கையைப் பிடிக்கிறார்? திவ்யா அண்ணிப் போல் இவர் பயந்த சுபாவம் இல்லை போல்... நான் சத்தம் போட மாட்டேன் என்கிற தைரியமோ???" என்று நினைத்துக் கொண்டவள் அவன் விரல்களில் இருந்து தன் விரல்களை பிரித்துக் கொள்ள போராட அவன் பிடியோ உடும்பு பிடியாக இருந்தது....

அவனது அகலமான வலுவான கரத்திற்குள் அவளின் விரல்களை அனைத்தையும் அழுத்தி கோர்த்துக் கொண்டவன் அவளின் பக்கம் திரும்பாமலே புன்னகைத்துக் கொண்டு இருக்க, அவனை நிமிர்ந்து பார்த்தவள் மெல்லிய குரலில்...

"ப்ளீஸ் விடுங்க... யாராவது பார்த்திறப் போறாங்க" என்று கெஞ்ச...

அவளின் முகப் பாவனையில் தன்னை தொலைத்தவன் ஒரு முறை கரத்தை அழுத்திப் பிடித்து பின் விடுவிக்க, விட்டால் போதும் என்று ஓடிச் சென்று திவ்யாவின் அருகே நின்றுக் கொண்டாள் வினோத்திற்கு மட்டுமே உரிய அவனின் அழகிய ராட்ஷசி....

திவ்யாவை அங்கு போடப்பட்டிருந்த மனையில் அமர செய்தவர்கள் நல்ல நேரம் பார்த்து தாலி மாற்றும் சடங்கை துவங்கினர்....

நேரம் ஆக ஆக அவளின் மெல்லிய மனம் அங்கு தன் கணவனின் இல்லாமையை நினைத்து வருந்த எத்தனை முயற்சித்தும் அவளால் தன் உள்ளத்தில் ஓடும் சிந்தனைகளை அகற்ற முடியாமல் அவளின் அழகிய முகம் அவள் உணர்வுகளை அப்பட்டமாக வெளிக் கொண்டு வந்திருந்தது....

அவளின் புன்முறுவலில் கூட ஏதோ ஒரு வலி தெரிவது போல் இருக்க, அவள் அருகில் வந்த ஸ்ரீ அவளின் பட்டுக் கன்னத்தில் சந்தனம் பூசிவிட்டவர்,

"திவ்யா... மனசுக்குள்ள எதையாவது போட்டு குழம்பிக்காதடா.... எல்லாம் நல்ல படியா நடக்கும்" என்றவாறே உச்சி வகிட்டில் குங்குமம் வைத்தவர் சுமங்கலிப் பெண்களை தாலிக் கயிறை மாற்ற அழைக்க திவ்யாவின் இதயத்தை மகிழ்ச்சியில் பூரிக்க செய்வது போல் சரியாக வீட்டிற்குள் நுழைந்தான் அர்ஜூன்..

மனையில் அமர்ந்திருந்தவள் அர்ஜூன் உள்ளே நுழைந்ததும் எதிர்பாராதவிதமாக தன் கணவனை அங்கு கண்டவளுக்கு மனதிற்குள் சில்லென்று ஒரு இனிமையான உணர்வு தாக்கி உடலில் மயிற்கால்கள் சிலிர்க்க தன்னையும் அறியாமல் எழ முற்பட, அவளைப் பார்த்து புன்னைகைத்தவன் வேண்டாம் என்று சைகை மட்டும் செய்துவிட்டு அவளைப் பார்த்தவாறே மாடி ஏறினான்...

மருமகனின் வருகை கலாவிற்கு நிம்மதியாகவும் பாலாவிற்கும் ஸ்ரீக்கும் ஆச்சரியமாகவும் இருந்தது...

62% 7:38 PM
https://drive.google.com/file 17



அன்று அவ்வளவு எடுத்து சொல்லியும் முடியாது என்று போனவன், இன்று சொல்லாமலே வந்திருக்கிறான்...

"ஒரு வேளை அவன் சென்ற வேலை முடிந்ததோ?" என்று யோசித்துக் கொண்டு இருந்த ஸ்ரீ திவ்யாவை பார்க்க, உள்ளத்தில் இருந்த மகிழ்ச்சி முகத்தில் அப்பட்டமாக தெரிய தன் கணவனின் முதுகையே பார்த்துக் கொண்டு இருந்தாள் அந்த சின்ன பெண்...

கடவுளே இந்த பெண்ணின் மகிழ்ச்சிக்காகவது தன் மகன் இந்த விஷேஷத்திற்கு தான் வந்தேன் என்று கூற வேண்டுமே என்று மனதார வேண்டிக் கொண்டார் ஸ்ரீ...

தன் அறைக்குள் சென்று சிறிது நேரத்தில் குளித்து முடித்து வெள்ளை நிற முழுக்கை சட்டையும், அடர் நீல நிற ஜீன்ஸூம் அணிந்து, முழுக்கை சட்டையை முழங்கை வரை மேலே ஏற்றி மடித்துக் கொண்டே சிறு புன்சிரிப்புடன் மாடிப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்த மகனை பெருமிதத்துடன் அவன் அன்னை பார்த்தார் என்றால், அவனின் அழகில் மதி மயங்கி அவனை அள்ளி பருகுவதைப் போல் அவனின் மனையாள் பார்த்துக் கொண்டிருந்தாள்.....

"அண்ணி பார்த்து, அண்ணனை சைட் அடிச்சதுப் போதும்....." என்று மஹா காதுக்கருகில் நெருங்கி கிசுகிசுப்பாக சொன்னவுடன் தான் சுய உணர்வுக்கு வந்த திவ்யா, அர்ஜூன் அவளின் எதிரில் போட்டிருந்த சேரில் அமர, சடக்கென்று வழக்கம் போல் தலையை குனிந்துக் கொண்டாள்.

அவள் தன்னையே வெறித்து பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்டவன், இப்பொழுது அவள் எதிரில் அமர்ந்ததும் முகத்தில் வெட்கமும் கூச்சமும் அதே சமயம் வழக்கம் போல் அவனைக் கண்டதும் வரும்

62% 7:38 PM
https://drive.google.com/file

அச்சமும் கலந்து தலை கவிழ்ந்து இருப்பதையும் கண்டவனுக்கு அத்தனை கர்வமாக இருந்தது தன்னவளின் அழகும் தன்னைக் கண்டதும் தோன்றிய அவளின் நாணமும்...

வெளிநாட்டில் இருந்து அவன் திரும்பி வந்ததற்கு பிறகு இந்த சில நாட்களாக அவளுடன் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பம் அமையாது போக அவனுக்கு எதிரே வர அவளும் அஞ்சி ஓடி ஒளிந்து இருக்க, அவளின் அழகிய முகத்தை உரிமையுடன் பார்த்து ரசிப்பதற்கு ஏதுவாக இன்று அவளுக்கு நேருக்கு நேர் அமர்ந்து இருப்பது அத்தனை இன்பமாக இருந்தது அர்ஜூனிற்கு...

அவளின் உச்சி வகிட்டில் அதிகமாக குங்கும் வைக்கப் பட்டிருந்ததால் அது சிறிதே சிதறி அவளின் முகத்திலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக பட்டிருக்க, தன் கணவன் தன் எதிரே அமர்ந்து தன்னை ஊடுறுவும் பார்வைப் பார்த்திருப்பதை அவளின் உள்ளுணர்வு எடுத்துக் சொல்லியிருந்தால் முகத்தில் சிதறி இருக்கும் குங்குமத்தின் நிறத்திற்கு போட்டி போடுவது போல் அவளின் குழைந்த முகம் சிவந்திருக்க.....

அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்த அர்ஜூனோ மேனகையிடம் தோற்ற விசுவாமித்ரன் நிலையில் இருந்தான்.....

வாழ்க்கையில் பயம் என்பதையே அறியாதவன்.... ஒற்றை வார்த்தையிலேயே தன்னை சுற்றி இருப்பவர்களை ஆட்டிப் படைப்பவன்...

ஆனால் இன்றோ இந்த சின்ன பெண்ணிடம் எப்படி தன் காதலை சொல்லுவது என்று மனதிற்குள் ஆயிரமாவது தடவையாக ஒத்திகைப் பார்த்துக் கொண்டான்...

62% 7:38 PM
https://drive.google.com/file

அனைவரும் சடங்குகளை முடித்தவுடன், வந்திருந்த விருந்தினர்களில் ஒரு வயதான சுமங்கலி பெண் அர்ஜூனைப் பார்த்து,

"நீ வாப்பா, வந்து தாலியில் மஞ்சளும் குங்குமமும் வைத்துவிடு" என்று கூற, இதனை கொஞ்சமும் எதிர்பார்க்காத திவ்யாவிற்கு திக்கென்றதில் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது...

"ஏற்கனவே அத்தையும் மாமாவும் அத்தனை எடுத்து சொல்லியும் முக்கிய வேலை இருக்கிறது என்று வெளியூருக்கு போனவர், சென்ற வேலை முடிந்ததோ என்னவோ அதிசயமாக இன்றே வந்திருக்கிறார்...."

"வந்தவர் வேறு எங்கும் செல்லாமல் இப்படி அமைதியாக மற்றவர்களுடன் சேர்ந்து அமர்ந்திருப்பதே பெரிசு... இதில் இது வேறையா?" என்று கலங்கியவளுக்கு தன் கணவன் என்ன சொல்லப் போகிறானோ என்று திகிலாக இருந்தது.....

ஆனால் திவ்யாவும் அவன் பெற்றோரும் உடன் பிறப்புகளும் வியப்பில் மூக்கில் விரல் வைப்பது போல் அவன் இளம் முறுவலுடன் எழவும், அதனை கொஞ்சமும் எதிர்பார்த்திராத திவ்யாவிற்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்ததில் கை கால் உதறல் எடுக்க துவங்கியது.....

மெதுவாக எழுந்தவன் அழுத்தமான காலடிகளுடன் அவளை நோக்கி நடந்து வர, அவள் இதயம் படபடவென்று வேகமாக துடிக்க ஆரம்பித்ததில் எங்கே இதயமே வெளியே வந்து விழுந்து விடுமோ என்பது போல் இருக்க அவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தவளுக்கு அவன் கண்களில் தெரிந்த விஷம சிரிப்பு அவளை நாணத்தின் உச்சத்திற்கே கொண்டு சென்றது...

62% 7:38 PM
https://drive.google.com/file

அவளின் அருகே வந்தவன் அவளுக்கு அருகில் ஒரு காலை மடித்து மண்டியிட்டவாறு தன்னை மஞ்சள் குங்குமம் வைக்க சொன்ன பெண்மணியைத் திரும்பி பார்க்க, அவர் அவனுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்தார்...

முதலில் சந்தனத்தை எடுத்து அவளின் கண்ணங்களில் பூச சொல்ல, தன் மனையாளை பார்வையிலேயே பருகியவாறு கிண்ணத்தில் இருந்து சந்தனத்தை கையில் எடுத்தவன் குனிந்து அவளுக்கு வலிக்குமோ என்பது போல் மென்மையாக அவளின் பட்டுக் கன்னத்தில் தடவ....

அவளுக்கு கணவனின் தொடுகையில் அதுவும் கன்னத்தில் அவனின் மென்மையான தடவலில் சங்கடமும் சிலிர்ப்பும் மாற்றி மாற்றி தோன்ற சித்தத்தின் சுழற்சியில் ஆட்கொண்டிருந்தவள் அவன் கண்களைப் பார்க்கும் தைரியம் இல்லாமல் விழிகளை தாழ்த்தினாள்....

அவளின் நாணத்தை ரசித்தவாறே அவளை இறுக்கி அணைத்துக் கொள்ள தூண்டிய உணர்வுகளை மிகுந்த சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டவன் அடுத்து அவர்கள் செய்ய சொன்னதில் அவன் கட்டுப்பாடுகளை தகர்த்து எறிந்தான்....

திவ்யாவின் தாலியில் மஞ்சளையும் குங்குமத்தையும் அந்த பெண்மணி பூச சொல்ல, திவ்யாவை மீண்டும் கூர்ந்து பார்த்தவன் வேண்டும் என்றே தன் இடது கையை அவளின் மார்பில் வைத்து அழுத்தி லேசாக தாலியை தூக்கி, மெல்ல தன் வலது கையில் மஞ்சளை எடுத்து பூச, மார்பில் ஆழ அழுத்தி புதைந்திருந்த அவன் கையினால் ஏற்கனவே திக்திக் என்று இருந்தவளுக்கு இப்பொழுது மயக்கமே வந்துவிடும் போல் இருந்தது....

62% 7:38 PM
https://drive.google.com/file



அவனின் இந்த அழுத்தமான தொடுதல் அதிர்ச்சியையும் கூச்சத்தையும் கொடுக்க, சட்டென்று நிமிர்ந்துப் பார்த்தவளின் இதயத்தை தன்னுடைய காதல் சொட்டும் பார்வையில் தடம் புரளச் செய்த அந்த காதல் கயவன் அவளைப் பார்த்து கண்ணடிக்க, அவளின் முகம் நாணத்தில் அதிகாலை சூரியனைப் போல் அத்தனை இரத்த சிகப்பாய் மாறியது...

ஒருவொருக்கருவர் வெகு அருகில் இருந்த பொழுதும், இத்தனை காதலை இதயம் முழுவதும் சுமந்திருந்த பொழுதும் தன் கணவனின் மீது இருந்த அதிகப்பட்ச அச்சத்தால் அவள் விலகியிருக்க, தன் காதலை சொல்ல தடுமாறி அவன் தவித்து இருக்க, இவர்களின் மனங்கள் மட்டும் மௌனமாக ஒன்றோடு ஒன்று பிணைந்துக் கொண்டு இருந்தது....

தனது தொடுகையும், தான் கண் சிமிட்டியதால் அவளின் முகம் சிவந்ததையும், அகல விரிந்த கண்களில் தெரிந்த அவளின் காதலையும் பார்த்தவன், அடி வயிற்றில் இருந்து இதயத்திற்கு ஊடுருவி சென்ற இந்த உணர்வு அவனின் சித்தத்தை தடுமாற செய்ய, உணர்ச்சி கொந்தளிப்பின் சிக்கியவனுக்கு தன் கரத்தை அவளின் மார்பில் இருந்து எடுக்க முடியாமல் போனது....

சுற்றி இருந்தவர்களின் களுக்கென்ற சிரிப்பு சத்தம் தன் நிலையை உணர்த்த இவ்வுலத்திற்கு திரும்பி வந்தவனின் முகத்தில் தோன்றிய நாணம் ஆண்களுக்கு கூட வெட்கம் வருமோ என்பது போல் அத்தனை அழகாக அம்சமாக இருந்தது....

சூழ்நிலை புரிந்த அடுத்த நொடி சட்டென்று அங்கிருந்து எழுந்தவன் புன் சிரிப்புடன் மற்றவர்களை நோக்கி விட்டு தன் இடத்தில் சென்று அமர திவ்யா தலை குனிந்தவள் குனிந்தவள் தான்....

62% 7:38 PM
https://drive.google.com/file



விஷேஷம் முடியும் வரை அவள் தன் கணவனை நிமிர்ந்து பார்க்கவில்லை....

இவர்களின் பார்வை பரிமாற்றத்தைக் கவனித்திருந்த மஹா தன்னிச்சையாக தன் மனம் கவர்ந்தவனைப் பார்க்க, அவளையே பார்த்துக் கொண்டிருந்த அவனும் அவளின் எண்ணம் புரிந்து அவளை பார்த்து கண் சிமிட்ட,

"அடப்பாவி, அவங்க இரண்டு பேரும் கல்யாணம் ஆனவங்க... அதனால் அண்ணா அண்ணியைப் பார்த்து கண்ணடிக்கிறாரு... இவருக்கு என்ன இத்தனை துணிச்சல்? அதுவும் இத்தனைப் பேரு இருக்கும் போது.... இது தான் கிராமத்து தைரியம் என்பதா" என்று நினைத்தவள் சட்டென்று தன் பார்வையை திருப்பிக் கொள்ள அவனுக்குத் தான் மனம் சிறகு விரித்து பறக்க ஆரம்பித்தது...

அந்த விநாடி மஹாவின் வசதி அவன் கண்களுக்கு தெரியவில்லை.... தன்னுடைய நிலை அவன் கண்களுக்கு தெரியவில்லை..... தெரிந்தது எல்லாம் தன்னவளின் காதல் கொண்ட விழிகளும், வெட்கத்தில் சிவந்திருக்கும் முகமுமே....

அவளின் வெட்கத்தை தன்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்த வினோத் இன்றே அவளை தனிமையில் சந்திக்க முடிவு செய்தான்...

ஒரே வீட்டில் இரு ஆண்கள் தங்களின் இணையிடம் தங்கள் காதலை, உள்ளத்தை வெளிப்படுத்த தக்க நேரம், சூழ்நிலை பார்த்து காத்திருந்தனர்......

அர்ஜூன், வினோத்..... இருவரும் தங்கள் மனம் கவர்ந்த பெண்களிடம் தங்கள் இதயத்தை திறப்பார்களா?

பாகம் - 16

அன்று விஷேஷம் முடிந்ததுமே விருந்தினர்கள் அனைவரும் கிளம்பியிருக்க ஸ்ரீ வற்புறுத்தியதால் கலாவின் குடும்பத்தினர் மட்டும் அன்று இரவு அங்கு தங்கிவிட்டு காலையில் புறப்பட முடிவெடுத்தனர்....

மஹாவை காலையில் சந்தித்ததில் இருந்து, அவள் மென்மையான விரல்களுடன் தன் முரட்டு விரல்களை கோர்த்ததில் இருந்து அவளை தனிமையில் சந்திக்க தவித்து காத்து இருந்த வினோத்திற்கு தன் அன்னை அன்று இரவு அவர்களின் வீட்டிலேயே தங்க சம்மதித்தது கரும்பு தின்ன கூலியா என்பது போல் இருந்தது...

மனம் முழுவதும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்க தன்னவளின் அருகில் இன்னும் ஒரு நாள் இருக்க கிடைத்த வாய்ப்பை நழுவ விட மனது இல்லாது சந்தோஷத்தில் திளைத்திருந்தவனின் பார்வை தன்னவளை விட்டு அகலவில்லை....

அவளின் பின்னையே சென்ற பார்வையை தடுக்க முடியாமல் அவன் தவித்து இருக்க, உடலை அங்குலம் அங்குலமாக தீண்டிச் செல்லும் அவனின் பார்வையை உணர்ந்திருந்தவள் எங்கு அர்ஜூன் அண்ணாவின் கண்களில் இது பட்டுவிடுமோ என்று அஞ்சி அவன் முன் வருவதைக் கூடுமானவரை தவிர்த்திருந்தாள்.....

அவள் மற்றவர்களுக்கு அஞ்சி தான் தன் முன் வராது ஆட்டம் காட்டுகிறாள் என்று அவனுக்கு புரிந்திருந்தது.... இருந்தும் அவன் பார்வையின் தேடல் குறையவில்லை...

61% 7:40 PM
https://drive.google.com/file

மாலை மறைந்து இரவு நெருங்க மொட்டை மாடிக்கு செல்ல நினைத்தவள் படிகளில் ஏற, ஹாலில் அமர்ந்து மற்றவர்களுடன் பேசிக் கொண்டு இருந்த வினோத்தின் கண்களில் இது தவறாமல் பட, அந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாது அவளை பின் தொடர்ந்தவனை மஹா அறியவில்லை...

அவளைப் போன்ற அழகி தனக்கு, அதுவும் தனக்கு மட்டுமே உரியவளாக வருவாள் என்று வினோத் கனவிலும் நினைத்திருக்கவில்லை....

சொக்க வைக்கும் அழகுடன் புடவையில் அப்ஸரஸ் போல் பேரழகுடன் இருந்தவளைக் கண்டு அவனது இதயம் தாறுமாறாக துடித்திருக்க இதில் புள்ளி மான் போல் அவள் மாடிப் படிகளில் வேகமாக ஏறுவதை பார்த்தபடியே பின் தொடர்ந்தவன் அவளின் பின்னழகை கண்டு கண் இமைக்க மறந்துப் போனான்...

அவள் பின்னால் அவளைத் தொடர்ந்து படி ஏறிக் கொண்டிருந்தவனுக்கு நீளமாகவும் இல்லாமல் குட்டையாகவும் இல்லாமல் அழகாக வெட்டிவிடப்பட்டிருந்த அவள் சிகையும் அதில் சூடியிருந்த இருவாச்சிப் பூச்சரங்களும், வெள்ளை பளிங்கு போல் பளிச்சென்று இருந்த அழகு முதுகும், ப்ளவுஸிற்கும் புடவைக்கும் இடையில் தெரிந்த அவளின் செந்நிற சிற்றிடையும் கண்ட வினோத்திற்கு உணர்ச்சிகள் பெரிதும் திரண்டெழுந்து வேட்கை வெறியைத் தூண்டியது...

அவன் தன் பின்னால் வருவதை அறியாமல் மொட்டை மாடியை அடைந்தவள் தன் முடியை முன் விட்டு கோதிக் கொண்டே வானைப் பார்த்திருக்க, இரவு முற்றிவிட்ட அந்த நேரத்தில் எங்கும் வெண்ணிலவு பரந்து அவள் எழில் முகத்தின் அழகு பண்மடங்காக அதிகரித்தது போல் தெரிந்தது அவனுக்கு......

7:40 PM 61%
https://drive.google.com/file



அவளின் அருகில் பின்புறமாக நெருங்கி நின்றவன் அவளது காதுக்கருகில் குனிந்து கிசுகிசுப்பாக....

"தனியா இங்க என்ன பண்ணிட்டு இருக்க?" என்க....

அவனின் குரலில் திடுக்கென்று தூக்கி வாரிப் போட திரும்பியவளுக்கு அவனை அந்த இரவில் அத்தனை அருகில் கண்டதும் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொள்ள, அவன் விழிகளில் அலைப்பாய்ந்த காதலைக் கண்டவள் அச்சத்துடன் அவனை விலக்கி கீழ் இறங்க முயற்சித்தாள்...

அவள் நகர எத்தனித்ததும் சட்டென்று அவள் கரத்தைப் பற்றியவன் இழுத்த இழுப்பில் அவன் மார்பில் மோதி தடுமாறி நிற்க, சட்டென்று அவளின் இடையைப் இறுக்க பற்றியவன் அவள் கண்களை ஆழ்ந்து பார்க்க, அவனின் எண்ணத்தின் ஓட்டத்தை கண்டு கொண்டவளுக்கு இதயம் பதற ஆரம்பித்தது...

"வேண்டாங்க.... யாராவது வந்தா பெரிய பிரச்சனையாகிடும்" என்று கெஞ்சியவள் அவனை முடிந்த அளவு தள்ளிவிட்டு ஓட முயற்சிக்க, அவளுக்கு முன் சென்றவன் வேகமாக மொட்டை மாடி கதவை சாத்தினான்.....

அவனின் செய்கையில் அதிர்ந்தவளின் கால்கள் தடுமாற உணர்ச்சிகள் பெரிதும் திரண்டிருந்தாலும் அச்சமே தலை தூக்கி நிற்க சட்டென்று இரண்டு அடி எடுத்து பின்னால் நகர்ந்தவளை இறுக்கி பற்றியவன் சுவரில் சாய்த்து நிறுத்தினான்....

61% 7:40 PM
https://drive.google.com/file



உடல் முழுவதும் நடுங்க, அச்சத்துடன் விழி விரிய தன்னை பார்த்தவாறே சுவற்றில் சாய்ந்து நிற்பவளைப் பார்த்தவன் அவளை நெருங்கி அவள் இரு பக்கமும் கையை அணைவாய் ஊன்றி, தன் உடல் அவள் மேல் உரச நின்றவன் அவளை அணு அணுவாக ரசித்து விழுங்கி விடுவது போல் பார்க்க, முதல் முறையாக ஒரு ஆணின் நெருக்கம் அவளின் தேகத்தை தடதடக்க செய்தது...

அவனின் அசுர வேகத்தில் இருந்தும், கண்களில் வழியும் தாபத்தில் இருந்தும் விடுபட முயன்று அசைந்தவளின் தேகம் அவன் மீது மேலும் நன்றாக பட்டதில் அவள் மார்பு அவன் நெஞ்சில் அழுந்தி பதிய, அதில் அவன் உணர்வுகள் கட்டவிழ்ந்து தலை விரித்து ஆட, அவன் கைகள் அவளின் இடையில் ஆழ பதிந்தது...

அவனின் ஸ்பரிசமும் இடைப் பிடித்திருந்த கரத்தில் காட்டிய அழுத்தமும் இதயத்தை தடுமாற செய்ய, இருந்தும் தன் தடுமாற்றத்தை மறைத்தவாறே அவன் நெஞ்சில் கை வைத்து அவள் தள்ள, அவளது விழிகளில் நிலைத்திருந்த அவன் பார்வை சற்றே இறங்கி இதழில் படிந்து அவன் அடுத்த விநாடி செய்ய போவதை சொல்லாமல் சொல்லியது...

பெண்களுக்கே உரிய இயற்கையான அச்சம் அவன் எண்ணத்தின் போக்கை உணர்த்த, உணர்ந்தவள் நெஞ்சில் வைத்திருந்த கரத்தில் அழுத்தத்தை கூட்டி அவனை மீண்டும் தள்ள, அவளின் எதிர்ப்பை மீறி அவளை நோக்கி குனிந்தவன் அவளின் இதழை அழுத்தமாக சிறை செய்து தனது முதல் முத்திரையை பதித்தான்...

இந்த எதிர்பாராத இதழ் முற்றுகையில் முதன் முறையாக ஒரு ஆண்மகனின் ஸ்பரிசத்தை உணர்ந்தவளின் பூ மேனி உணர்ச்சி வேகத்தில் மேலும் நடுங்க, அவனிடம் இருந்து விடுபட போராட, அவளின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து அவளின் இதழை விடுதலை செய்ய,

61% 7:41 PM
https://drive.google.com/file



அப்பொழுது தான் கவனித்தான் வெளிப்படையாக நடுங்கும் அவளின் உடலை......

தன் தவறை உணர்ந்தவன் சட்டென்று அவளை விட்டு விலக, கண்களில் நீரோடு அவனை நிமிர்ந்துப் பார்க்கக் கூட அச்சப்பட்டு அவள் கீழே இறங்க முற்பட அவள் கரத்தை பற்றி இழுத்தவன் அவள் முகத்தை தன்னை நோக்கி நிமிர்த்த முயற்சி செய்ய ஆனால் அவள் நிமிர்ந்தால் தானே...

அவளின் படப்டப்பை உணர்ந்தவன் நிதானமாக தன்னுடைய காதலை எடுத்துக் கூற ஆரம்பித்தான் கண் கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் போல்...

"மஹா... ப்ளீஸ்.... நான் சொல்லறத கொஞ்சம் கேளு.... காலையில உன்னை முதன் முதல்ல புடவையில் பார்த்ததில் இருந்து என் மனசு என் கிட்ட இல்லை... அதில் இருந்து உன் கூட பேசனும் முயற்சி பண்ணிக்கிட்டு இருக்கேன்..... இந்த கூட்டத்தில அந்த சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவே இல்லை..... நீயும் வேணும்னே என் கண்ணில் படாமலே ஒளிஞ்சுகிட்டு இருந்த.... உன்னிடம் என் மனச சொல்லனும்னு நேரம் பார்த்திட்டு இருக்கும் போது தான் நீ தனியா மாடிக்கு வருவதை பார்த்தேன்....." என்றவன் சில விநாடிகள் தயங்கி மீண்டும் தொடர்ந்தான்....

"உன்னைய எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குன்னு சொல்லத் தான் உன்னைய பின் தொடர்ந்து வந்தேன்..... ஆனால் ஐ ஆம் ஸோ ஸாரி மஹா.... என்னால உன்னை இவ்வளவு நெருக்கதில பார்த்ததும் ரெஸிஸ்ட் பண்ண முடியலை...... நீ எனக்கு மட்டும் தான்னு அந்த உரிமையை எடுத்துக்கிட்டேன்.... ஆனால் உன் மனசில என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்காம அவசரப்பட்டுட்டேன்.... ஸாரி டா.... ஐ ஆம் ரியலி ரியலி ரியலி ஸாரி... ப்ளீஸ் தயவு செய்து புரிஞ்சிக்க.... ஐ லவ் யூ ஸோ மச் மஹா [I love you so much Maha]" என்றான்.

7:41 PM 61%

https://drive.google.com/file



தலை குனிந்தவாரே அவன் பேசுவதைக் கேட்டிருந்தவள் அவனை நிமிர்ந்துப் பார்க்க நீர் திறையிட்டிருந்த அவளின் கண்களில் தெரிந்தது அதிர்ச்சியா? ஏமாற்றமா? குழப்பமா? என்று புரியவில்லை அவனுக்கு... ஆனால் அவளின் விழிநீர் அவன் மனதை அறுக்கத் தொடங்கியது...

அவன் கண்களை அதற்கு மேலும் சந்திக்க முடியாமல் இன்னும் அதிர்ச்சி விலகாத முகத்துடன் சில நொடிகள் சிலையென நின்று இருந்தவள் அவன் முகத்தை நிமிர்ந்தும் பார்க்காமல், அவனின் பேச்சிற்கு பதிலும் கூறாமல் அவன் கையை உதறிவிட்டு விறுவிறுவென்று படிகளில் இறங்கியவளை ஆற்றாமையுடன் பார்த்திருந்தவன் தன் தவறை உணர்ந்து தன் அவசர புத்தியை நினைத்து வருந்தி அவளை தடுக்க வழியில்லாது நின்றிருந்தான்....

அவள் மனதில் காதல் அரும்பி இருக்கிறது.... அவனை தன்னவனாக அவள் பார்த்த முதல் நாளே நினைக்க துவங்கிவிட்டாள்....

ஆனால் எதற்கும் நேரம் காலம் என்று இருக்கிறது.... மனம் விட்டு இருவரும் பேசிக் கொள்ளவில்லை... தங்கள் காதலை வாய் விட்டு சொல்லிக் கொள்ளவில்லை.... ஆனால் அதற்குள் அடுத்தக் கட்டத்திற்கு முன்னேறி இருக்கும் அவனை நினைத்து தான் அவளுக்கு மனது பிசைந்தது...

ஏன் இத்தனை அவசரம்? கிணற்று தண்ணீரை ஆற்று வெள்ளமா அடித்துக் கொண்டு போகப் போகுது????

61% 7:41 PM
https://drive.google.com/file



இரவு நெடு நேரம் ஆகியிருக்க அனைவரையும் உணவு உண்ண அழைத்த ஸ்ரீ பரிமாற துவங்க அது வரை தன் அறையில் அலுவலக வேலைகளில் மூழ்கியிருந்த அர்ஜூன் ஸ்ரீயின் குரலில் மாடியில் இருந்து இறங்கி வர, வந்தவனின் விழிகள் திவ்யாவையே தேடியது...

காலையில் உடுத்திய திருமணப் புடவையை இன்னும் மாற்றாமல், புதிதாக பூத்த மல்லிகை சரங்களை சூடி, புத்தம் புது தாலிக் கொடி அணிந்து தேவதையென நின்றவளைக் கண்டவனுக்கு தன் காதலை சொல்லும் நேரம் வந்துவிட்டது என்றே தோன்றியது....

தன் கணவன் வருவதை அறியாமல் எல்லோரிடமும் சிரித்து பேசிக் கொண்டு தன் அன்னை, மற்றும் மாமியாருடன் சேர்ந்து மற்றவர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தவள் தன் பின்னே நெருங்கி நின்றிருந்த கணவனை அறியவில்லை...

அவள் மேல் பட்டும் படாமலும் உரசி நின்றவனின் மூச்சுக்காற்று சூடாக உடலில் பட சட்டென்று திரும்பி பார்த்தவளுக்கு அவன் அவளின் வெகு அருகாமையில் நின்றுக் கொண்டிருப்பது அதீத கூச்சத்தையும் பயத்தையும் அளிக்க, விழிகளை அகல விரித்து பார்த்த மனைவியை ரசித்தவன் குறுநகைப் பூக்க, அவனின் புன் சிரிப்பில் மனம் தவித்தவள் அவனை விட்டு சட்டென்று நகர்ந்தாள்....

அவளின் ஒவ்வொரு செய்கைகளையும் ரசனையுடன் தன் மனதிற்குள் வாங்கிக் கொண்டவன் அவளின் மீது இருந்த பார்வையை இன்னும் விலக்காமல் அவளின் அருகில் இருந்த சேரில் அமர, தட்டை எடுத்து வைத்து பரிமாற ஆரம்பித்தவளுக்கு அவனின் விஷம பார்வையும் நகைக்கும் இதழ்களும் பெரிய இம்சையாக இருந்தது என்றால்....

7:41 PM 61%
https://drive.google.com/file



அவள் அவனின் வெகு அருகில் நின்றதில், அவளின் மேல் இருந்த அவளுக்கே உரித்தான நறுமணமும், அவனது முகத்திற்கு அருகில் இருந்த அவளது இடை அவனது கண்களுக்கு விருந்தாகியும் போனதில் அவனது சித்தத்தை தடுமாற்றி பித்தனாக்கி இருந்தது....

பரிமாறிக் கொண்டே இருந்தவளுக்கு அவன் இன்னமும் உண்ணாது இருக்கவும் அவனை நிமிர்ந்து பார்த்தவளுக்கு தன் கணவனின் அழுத்தமான பார்வை தன் இடையை தழுவிக் கொண்டு இருப்பதை கண்டு திக்கென்று இருக்க, இயற்கை பெண்களுக்கு கொடுத்த வரமாக வெட்கமும் வந்து தழுவ, தன்னிச்சையாக சட்டென்று புடவையை கொண்டு தன் இடையை மறைத்தாள்....

தன் மனையாளின் அந்த அவசர செயலில் வாய் விட்டு சிரித்தான் அர்ஜூன்.....

முதல் முறை அர்ஜூன் அவ்வாறு சத்தமாக சிரிப்பது அவன் குடும்பத்திற்கே ஆச்சரியமாக இருந்தது என்றால் கலாவின் குடும்பத்தை பற்றி சொல்லவா வேண்டும்...

"என்ன அர்ஜூன்? எங்களுக்கு தெரியாம என்ன ஜோக்?" என்று ஸ்ரீ கேட்க,

"நத்திங் மாம் [Nothing mom]" என்றவன் ஒன்றும் பேசாமல் உணவு அருந்துவதில் தன் கவனத்தை செலுத்த, அனைவர் கண்களும் ஏதோ ஒரு அர்த்தத்துடன் திவ்யாவை நோக்கியதில் அவளுக்கு தான் வெட்கம் பிடுங்கி தின்றது....

அவர்களின் கேலிப் பார்வையையும் குறும்பு சிரிப்பையும் தாங்க இயலாது நெளிந்தவள் "இன்னும் கொஞ்சம் இட்லி எடுத்து

7:58 PM 60%
https://drive.google.com/file



வருகிறேன்" என்று சமையல் அறைக்குள் சென்றவள் அதன் பின்னர் அவன் உண்டு முடிக்கும் வரை வெளியே வரவில்லை.

சாப்பிட்டுக் கொண்டே அவளின் வரவை எதிர்பார்த்து அவன் காத்திருக்க, உள்ளே சென்றவளோ இன்னமும் வெளியே வராது இருக்கவும் மற்றவர்களும் உணவு அருந்திக் கொண்டு பேசுவதில் கவனத்தை செலுத்தியிருக்க, உண்டு முடிந்ததும் கை கழுவும் சாக்கில் சமையல் அறைக்குள் நுழைந்தான்...

அங்கே அவனை எதிர்பார்க்காதவள் அடுப்பில் பிஸியாக வேலை செய்துக் கொண்டிருக்க, "புருஷன் மனச புரிஞ்சிக்க தெரியாம இங்க என்ன செய்துக் கொண்டிருக்கிறாள் பாரு" என்று எண்ணியவன் கை கழுவ வாஷ் பேசினின் அருகில் செல்ல அப்பொழுது தான் கவனித்தாள் அவன் சமையல் அறைக்குள் இருப்பதை....

காலையில் அவன் தாலியில் மஞ்சள் குங்குமம் வைக்க தன் மார்பில் அழுந்த கை ஊன்றியதில் இருந்து, அத்தனை சுற்றமும் தங்கள் இருவரை தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும் தன்னை பார்த்து கண் சிமிட்டியதில் இருந்து மனமெல்லாம் அச்சமா, அச்சத்தினால் விளைந்த கலக்கமா, இல்லை வயதுக்கே உரிய தாபமா என்று குழப்பத்தில் ஆழ்ந்திருந்தவளை மேலும் மேலும் திகிலில் தள்ளிக் கொண்டிருந்தான் அவள் கணவன்....

கை கழுவி முடிந்ததும் அவளை திரும்பி நோக்க, அவன் விழிகள் போன இடங்களை கண்டு கலங்கியவள் விருட்டென்று வெளியெ செல்ல எத்தனிக்க, இரண்டே எட்டில் அவளின் அருகில் வந்தவன் மிக அருகில் தன் உடல் அவளின் உடலின் மீது உரசுமாறு நின்று சொன்ன வார்த்தைகளில் அவளின் இதயம் நின்றுவிடும் போல் இருந்தது....

60% 7:58 PM
https://drive.google.com/file



"இன்னையில் இருந்து என் ரூமில் வந்து படுத்துக்கோ" என்றான் மனம் எல்லாம் ஆசையில் உள்ளம் முழுவதும் காதலில்....

அவன் சொன்னதன் அர்த்தம் புரிந்து, அவன் எதற்கு தன்னை தன் அறைக்கு வரச் சொல்கிறான் என்று உணர்ந்து 'ஙே' என்று விழித்தவளின் வெற்றிடையில் தன்னுடைய வலது கையை வைத்து தன்னருகில் இழுத்தவன், இடது கையை அவளின் கன்னத்தில் வைத்து வருட நிலைகுலைந்து போனாள் அவன் மனையாள்.....

தன் தொடுகையில் அவள் செயலிழந்து வெளிறி போய் நிற்க, அவள் கன்னத்தில் இருந்த விரல்களை மெல்ல கீழ் இறக்கி அவளின் கழுத்தில் முடிகளுக்கு இடையில் நுழைக்க, இந்த எதிர்பாராத தாக்குதலில் தளிர் மேனி நடுங்க தன் கண்களை இறுக்க மூடிக் கொண்டாள் அந்த இளம் பேதை.....

தன் மனைவியின் செந்தனலாய் மாறியிருந்த முகமும், வெட்கத்தில் கண்களை மூடியிருந்த விதமும், உதடுகள் துடிக்க உடல் நடுங்க துவன்று நின்றிருந்த தோற்றமும் அவனின் ஆண்மையை தட்டி எழுப்ப அவளின் முகம் நோக்கி குனிந்தான் அர்ஜூன்....

அவனின் மூச்சுக் காற்றை அவ்வளவு நெருக்கத்தில் உணர்ந்தவளுக்கு அவன் அடுத்து செய்யப் போவது புரிய, இதயம் தாறுமாறாக துடிக்க, கண்களை மேலும் இறுக்க மூடிக்கொண்டவளின் காதிற்கருகில் குனிந்து கரகரத்த குரலில்....

"இப்போ புரியுதா? எதுக்கு என் ரூமிற்கு வரச் சொல்றேன் என்று" என்று கிசுகிசுத்தவன் அவளை விட்டு விலக,

60% 7:58 PM
https://drive.google.com/file



அவனின் விலகலை உணர்ந்து மெதுவே கண்களை திறந்தவளுக்கு அவன் விழிகளின் வழிந்த காமமும், மோகப் புன்னகையில் தெரிந்த குறும்பும், முகத்தில் தெரிந்த வேட்கையின் வேகமும், தாபத்தை வரவழைப்பதற்கு பதிலாக எல்லையில்லா அச்சத்தை விளைவிக்க அவனை எதிர் கொள்ள தைரியமில்லாமல் வெளியே ஓடி வர, அவளின் பின்னரே சிரித்த முகமாக அவன் வர, சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் பெரியவர்களின் கண்களில் இந்த காட்சி படத் தவறவில்லை.

அவர்களின் எத்தனை நாள் ஆசை, கனவு, எதிர்பார்ப்பு இந்த சின்னஞ் சிறுசுகள் இரண்டும் இப்படி சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று...

எதிர்பாராதவிதமாக திருமணம் நடந்துவிட்டாலும் அர்ஜுனின் மகிழ்ச்சி ததும்பும் சிரிப்பும், காலையில் திவ்யாவுடன் அவனின் நெருக்கமும், அதற்கு அவளின் வெட்கப் புன்னகையும் பெற்றோர்களுக்கு அத்தனை பூரிப்பை தந்தது...

ஆனால் மகிழ்ச்சியில் உள்ளம் நிறைந்து நிம்மதி பெரு மூச்சுவிட்டவர்களுக்கு தெரியவில்லை இந்த சந்தோஷத்தின் ஆயுள் கொஞ்சமே என்று...

ஒரு வழியாக அனைவரும் உணவு அருந்தியவுடன் அவரவர் அறைக்கு சென்றுவிட மறு நாள் காலையில் கிளம்புவதற்கு கலா பெட்டியை அடுக்க உள்ளே வந்த திவ்யா தயங்கியவாறே...

https://drive.google.com/file



"அம்மா... நாளைக்கே ஊருக்கு போகனுமா? இன்னும் இரண்டு நாள் இருந்திட்டு போகலாம் இல்ல?" என்க....

"இல்ல திவ்யா.... உன்னோட கல்யாணத்திற்கு லீவு, உன்னைய இங்க வந்து பார்க்கறதுக்கு லீவு, அப்புறம் ரிஷப்ஷன், இப்போ தாலி பெருக்கிக்கட்டிறதுக்கு என்று நானும் அப்பாவும், வினோத்தும் இந்த நாலு அஞ்சு மாசத்தில ஏகப்பட்ட லீவு எடுத்திட்டோம்... நானே நாளைக்கு வீட்டுக்கு போனவுடனே வேலைக்கு போயாகனும்..... இன்னும் ஒரு நாள்னா ரொம்ப கஷ்டம்மா"....

"ஏம்மா.... இன்னும் எவ்வளவு நாள் தான் நீங்களும் வேலைக்கு போவீங்க? கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம் இல்ல?"

"திவ்யா... உன்னோட கல்யாணத்திற்கு வாங்கிய கடனை அடைக்கனும்.... அது மட்டும் இல்லாம இந்த வருஷம் வினோத்தும் காலேஜ் முடிக்கிறான்.... அது வரைக்கும் அவனுக்கு அப்பப்போ பணம் தேவைப்படுது..... என்ன தான் உதவி வெளியில் இருந்து வந்தாலும் ஐஞ்சுக்கும் பத்துக்கும் நாம அவங்க கையை எதிர்பார்க்க வேண்டாமில்ல"

தன் அன்னையின் பேச்சில் மனதிற்குள் உடைந்து போனாள் திவ்யா....

அவள் என்றுமே தனக்கு அமைந்திருக்கும் இந்த வசதியான வாழ்க்கையை நினைத்து கர்வம் கொண்டதில்லை..... பெருமை பட்டதில்லை..

மாறாக தான் இத்தனை வசதியாக இருக்கும் பொழுது தன் குடும்பத்தார் பொருளாதாரத்திற்கு இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே என்று தான் ஏக்கமாக இருந்தது...

60% 7:58 PM
https://drive.google.com/file



அதை உணர்ந்த கலா....

"திவ்யா... நீ இதை எல்லாம் மனசில போட்டு குழப்பிக்காத...... எல்லாம் வினோத் வேலைக்கு போற வரைக்கும் தான்... அதற்கு பிறகு எல்லாம் சரியாகிவிடும்..... நீ போய் தூங்கு... மாப்பிள்ளை காத்திட்டு இருப்பார்" என்றார்...

அது வரையில் அன்னையின் கவலையில் உழன்றுக் கொண்டு இருந்தவளுக்கு, அவரின் இல்லாமையை நினைத்து வருந்திக் கொண்டிருந்தவளுக்கு சற்று நேரத்திற்கு முன் அர்ஜூன் சொன்னது மறந்து போயிருந்தது....

அவள் அன்னை தன் கணவனைப் பற்றி பேசவும் தான் அவன் அவளிடம் சமையல் அறையில் சொன்னது ஞாபகம் வர தன்னையும் அறியாமல் அவளின் அடி மனதில் படர்ந்திருந்த கிலி மேல் எழும்பி வர ஆரம்பித்தது.....

அவளுக்கு அவள் கணவனை நினைக்கும் பொழுது ஒரு விதத்தில் காதலும் ஆசையும் வந்தாலும், மறு பக்கம் இருந்து அவனின் பிம்பம் அச்சத்தை போட்டிக் போட்டுக் கொண்டு அவளின் உள்ளத்திற்குள் கொதிக்க செய்ய, இதயத்தில் சுமந்திருந்த காதலுக்கும், உள்ளத்தில் சூழ்ந்திருந்த அச்சத்திற்கும் இடையில் அவள் மனம் ஊசலாடிக் கொண்டு இருந்தது....

என்ன தான் முயன்றும் அவளுக்கு அவள் கணவனின் காதல் புரிவதை விட அவன் சரசமான வார்த்தைகளிலும் நெருக்கமான தொடுகையிலும் அவனின் வேட்கையே புரிய, கதிகலங்க மனதில் மீண்டும் தாம்பத்தியத்தை பற்றிய அச்சம் சூழ, மீண்டும் மீண்டும் தன்

7:58 PM 60%
https://drive.google.com/file



கணவனின் கோபத்திற்கு ஆளாகப் போவதை உணராமல் இன்றும் அவனை விட்டு தள்ளி இருக்க முடிவு செய்தாள்....

விதியை யார் வெல்ல முடியும்????

கலா அவளை அர்ஜூனின் அறைக்கு போகச் சொல்ல வெடவெடத்தவள்.....

"அச்சச்சோ.... இத எப்படி மறந்தேன்..... அப்பா முருகா.... இன்று மட்டும் என்னைய காப்பாத்திவிடுப்பா..... நாளைக்கு அம்மா அப்பா ஊருக்கு போனப் பிறகு நான் வழக்கம் போல் மஹா அண்ணி ரூமில்யே படுத்துக்கிறேன்" என்று வேண்ட,

முருகனோ.....

"உனக்கு இன்னும் உன் புருஷன பத்தி முழுசா தெரியலையா திவ்யா? அவன் தன்னிலை விட்டு கீழிறங்கி வந்ததை வச்சு அவனை சாதாரனமாக எடைப் போடுற..... அவன் வேண்டியத இது வரை வாய்விட்டு கேட்டதில்லை.... கேட்காமலே அடையறது தான் அவன் வழக்கமே.... அவன்கிட்ட இல்லை என்ற பதிலை யாரும் இது வரை சொன்னதில்லை.... ஆனால் முதல் முறையா இன்னைக்கு அவன் வாய் திறந்து உன்னிடம் கேட்டிருக்கான்.... அது கிடைக்கலைன்னா அவன் எப்படி மாறுவான்னு எனக்கே தெரியாது" என்றார்.

முருகனிடம் தன்னை காக்கும் படி வேண்டியவள் ஒன்றை மட்டும் மறந்தே போனாள்.... அது அவள் கணவன் அவளை இன்று மட்டும் தன் அறைக்கு அழைக்கவில்லை.....

7:59 PM

https://drive.google.com/file



"இன்னையில் இருந்து என் ரூமில் வந்து படுத்துக்கோ" என்று அவள் எப்போழுதும் தன்னுடன் தான் இருக்க வேண்டும் என்று கூறினான்...

அவனின் அருகாமை தந்த பதட்டத்திலும், அவன் ஆண்மை தந்த மயக்கத்திலும், அவனின் தொடுகை கொடுத்த நடுக்கத்திலும் அவளுக்கு தான் அவன் சொன்னது சரியாக விளங்கவில்லையோ??

சில நேரங்களில் மனசாட்சி நம் தலையில் தட்டி கூறும் அறிவுரைகளை நாம் வேண்டுமென்றே கேட்க விரும்புவதில்லை.... இல்லையென்றால் விதி தன் விளையாட்டை நடத்துவது எப்படி????

"அம்மா... இன்னைக்கு உங்க கூட படுத்துக்கிறேன்மா..... எத்தனை நாள் ஆச்சு நான் உங்களை கட்டிப்பிடிச்சு தூங்கி...."

"திவ்யா, உன் புருஷனை கட்டி பிடிச்சு தூங்கறத விட்டு என்னைய கட்டி பிடிச்சுக்கிறேன் சொல்றீயே..... உன் புருஷன் கேட்டாருன்னா என்ன தான் திட்டு வாரு" என்று வாய் விட்டு சிரித்தவர்,

"போம்மா.... போய் தூங்கு" என்றார்....

எப்படி தன் அன்னையை சரி கட்டுவது என்று தெரியாமல் திருதிருவென்று முழித்திருக்க சரியான நேரம் பார்த்து ஸ்ரீ அங்கு வந்தார்...

"போச்சுடா!!!! அம்மாவ சம்மதிக்க வைக்கிறதே கஷ்டம்.... இதுல அத்தை வேறையா?" என்று எண்ணியவளுக்கு எப்படியும் இன்று தன் கணவனின் அறைக்கு போவதை தடுப்பதே முதல் குறிக்கோளாக இருந்தது...

60% 7:59 PM
https://drive.google.com/file



"என்ன? அம்மாவும், மகளும் சிரிச்சு பேசிட்டு இருக்கும் போது கரடி மாதிரி வந்துட்டேனா???"

"என்னடி கரடி, அது இதுன்னுட்டு.... உன் மருமகள் அவ புருஷன விட்டு என்ன கட்டிப் பிடிச்சுட்டு தூங்கனுமாம்.... நீயே என்னன்னு கேளு" என்க,

அவ்வளவு தான் ஸ்ரீக்கு மயக்கமே வந்தது..

"என்ன இது இந்த பெண் தெரிந்து தான் செய்கிறாளா? இல்ல தெரியாமல் செய்கிறாளா? ஏற்கனவே நடந்த பிரிச்சனை போதாதா? இப்போ தான் இரண்டு மாசம் கழித்து திரும்பி வந்திருக்கிறான்.... திருப்பியும் அவனை துரத்தி விடுவாள் போலிருக்குதே...... ஆனால் இப்போ நிச்சயம் அவன் எங்கேயும் போக மாட்டான்.... ஐயோ! இவளத் தான் போக சொல்லுவான்" என்று உள்ளுக்குள் கலங்கி போனவர்...

"திவ்யா... அர்ஜுன் உனக்காக காத்திட்டு இருப்பான்..... போ?" என்றதோடு அவ்வளவு தான் பேச்சு என்பது போல் முடித்துக் கொண்டார்.

தன் அத்தையிடம் தன் பேச்சு எடுபடாது என்று புரிந்துக் கொண்டவள் தன் அன்னையை ஐஸ் வைக்க ஆரம்பித்தாள்...

"அம்மா, ப்ளீஸ் மா.... எனக்கு என்னமோ உங்க கூட படுத்துக்கனும் போல இருக்கு.... நிறைய பேசனும் போல இருக்கும்மா.... இன்னைக்கு ஒரு நாள் தானே....." என்று கன்னத்தை பிடித்து கொஞ்ச...

7:59 PM 60%
https://drive.google.com/file



அதற்கு மேல் விதி விட்ட வழி என்று நினைத்த ஸ்ரீ அங்கிருந்த நகர, திவ்யாவிற்கு "அப்பாடி" என்று இருந்தது....

இதனால் விளையப் போகும் எதிர் வினைகளை அறியாமல்.....

இரவு வெகு நேரம் வரை தன் அன்னையுடன் பேசிக் கொண்டிருந்தாலும் மனம் முழுவதும் "அவர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பார்?? என்னுடைய வரவை எதிர்பார்த்திருப்பாரா?? நான் வராததால் கோபத்தில் இருப்பாரா" என்ற எண்ணங்களே மனதில் ஓடிக் கொண்டிருந்தது...

உள்ளம் முழுவதும் திகில் படர்ந்திருந்ததாலோ என்னவோ தூக்கமும் அவள் கண்களை தழுவ மறுக்க,

அங்கு தன் அறையில் அவளின் வரவை ஆவலுடனும், அடங்காத தாபத்துடனும் எதிர்பார்த்து இரண்டாவது முறையாக ஏமாந்து அவமானத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் தன் கணவனின் உணர்வுகளை எதிர்கொள்ள நேரும் பொழுது, புயலில் சிக்கிய படகாக தான் மாற வேண்டியிருக்கும் என்பதை அறியாதவளாக விழித்துக் கொண்டிருந்தாள்.....

வீட்டினர் அனைவரும் உறக்கத்தை தழுவ இந்த நான்கு இள உள்ளங்கள் மட்டும் தூங்காமல் விழித்திருந்தது.....

மாலை மொட்டை மாடியில் எதிர்பாராமல் நடந்த அதிரடி தழுவலிலும், முதல் முத்தத்திலுமே நிலைத்திருந்த மனதை இன்னமும் வெளியே கொண்டு வர முடியாமல் அதிர்ந்து போய் மஹா தவிக்க,

60% 7:59 PM
https://drive.google.com/file



தன் அவசரத்தாலும் வேட்கையினாலும் இரு உள்ளங்களுக்குள் அரும்பு போல் மலர வேண்டிய காதலை மொட்டிலியே கசக்கி எறிந்து, தன் மனம் கவர்ந்தவள் தன் காதலை காமமாக நினைக்க வைத்த தன் முட்டாள் தனத்தை நினைத்து வினோத் கலங்கியிருக்க,

அங்கு இத்தனை நாட்கள் காத்திருந்து, தன்னவளிடம் மனம் திறந்து இதயத்தில் சுமந்திருந்த தன் காதலை சொல்ல இன்றைய இரவை தேர்ந்தெடுத்து, மனைவியின் வருகையை ஆசையுடன் எதிர்பார்த்திருந்த அர்ஜூனின் நிலமையோ சொல்ல முடியாத அளவு இருந்தது.

அர்ஜூனின் உடல், உயிர், ஆன்மா அனைத்திலும் பிறந்த நாள் முதலே ஆணவமும், திமிரும், ஆளுமையும் கலந்திருந்தது.....

அவன் வாய் திறக்கும் முன்னரே அவனுக்கு வேண்டியதை அறிந்து அவன் முன் வரவழைக்க எத்தனையோ பேர் காத்திருந்தார்கள்....

தொழில் வட்டாரத்திலும், அரசியலிலும் அவன் ஒற்றைப் பார்வையை வைத்தே அவன் எதிர்பார்பை பூர்த்தி செய்ய துடித்திருந்தவர்கள் ஆயிரக் கணக்கில் இருந்தார்கள்....

இது வரை தன் வாழ் நாளில் தான் ஆசைப்பட்டதை மிரட்டியோ வலுக்கட்டாயமாகவோ அடைந்தே பழகியிருந்தவன் அவன்..

ஆனால் இன்று தன்னிலையில் இருந்து கீழே இறங்கி வந்து, தான் வாய் விட்டு தன் விருப்பத்தை சொல்லியும் தன் அறைக்கு அவள் வரவில்லை என்றால் எனக்கு அடங்காத மனைவியா? என்று அவமானத்தில் முகம் கன்றிச் சிவக்க, வெடிக்க காத்திருக்கும் அக்கினி மலையைப் போன்ற தோற்றதில் இருந்தது அவனின் முகம்....

7:59 PM 60%

https://drive.google.com/file



நான் அழைத்தும் வரவில்லை என்றால்? என் பேச்சை மதிக்கவில்லை என்றால்?

அங்கு ஆண்மகனான தனது தன்மானம் சீண்டப்பட்டதைப் போல் உணர்ந்தவன் தன் தலையை அழுந்த கோதி தன்னை சமன்படுத்திக் கொண்டு கட்டிலில் சாய்ந்தவன், இதற்கு மேலும் இறங்கி வந்து தன் காதலை அவளிடம் சொல்லப் போவதில்லை என்று முடிவெடுத்தான்....

அர்ஜுன் - திவ்யா: அழகிய இரவாக, காதலை சுமந்து சங்கமித்த முதலிரவாக மாறியிருக்க வேண்டிய இரவு இன்று மீண்டும் சீற்றத்தையும் திகிலையும் சுமந்து முடிந்தது அந்த இளம் தம்பதியினருக்கு....

தன்னவளின் வெட்கம் சொட்டும் விழிகளில் தெரிந்த நாணத்தையும், அவளின் பார்வையுடன் கலந்த தன் விழிகள் பாய்ந்து அவளின் இதயத்தை ஆராய்ந்து பார்த்ததில் உணர்ந்துக் கொண்ட அவளின் காதலையும் அறிந்திருந்தவன் அவளிடம் தன் காதலை சொல்லும் அழகிய தருணம் வரைக் காத்திருக்கவில்லை....

மாறாக அவளின் பருவ உடலின் அழகுகள் தன்னை ஈர்க்க செய்ததை மட்டுமே அவளுக்கு ஒவ்வொரு முறையும் உணர்த்தி அவளின் உணர்வுகளை பரிதவிக்க செய்ய, அதனால் அந்த சின்ன தளிரோ தன்னவனின் எதிர்பார்ப்பு வெறும் மோகம் கலந்த தாம்பத்தியம் மட்டுமே என்று அஞ்சிக் கலங்கியிருப்பதை அவனும் உணரவில்லை....

வினோத் - மஹா: விகசித்து மலர்ந்திருந்த மெல்லியலின் பார்வையில் வசப்பட்டு, ஆத்மாவை ஊடுறுவி முளைத்தெழுந்து மலர்ந்த காதலை

7:59 PM 60%
https://drive.google.com/file



வெளிக்கொணரும் முன்பே தன்னவளின் அபார அழகில் மயங்கி, கணத்துக்கு கணம் உணர்ச்சிகள் பிரவாகித்ததில் திணறி, இதயத்தில் படர்ந்திருந்த காதலை விட உடலுணர்வில் கலந்திருந்த காமத்திற்கு முதலிடம் கொடுத்து இன்று தன் காதலையே ஊசலாட வைத்துவிட்டான் இந்த இளம் காதலன்.....

நான்கு உள்ளங்களும் அவரவரின் குணத்திற்கும் செயல்களுக்கும் ஏற்ப தன்னையும் வருத்தி, தன் இணையையும் வருத்தி தனித்து கழித்த இந்த இரவு நீண்ட இரவாக இருக்கப் போவதென்பதில் சந்தேகமே இல்லை....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

60% 8:00 PM
https://drive.google.com/file

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 17

விடியும் வரை பெருமளவு குழப்பத்திலும், மலை அளவு அவமானத்திலும், கட்டுக்கடங்காத கோபத்திலும் உள்ளம் உலையாக கொதித்துக் கொண்டு இருந்ததால் உறக்கம் என்பதே இல்லாது சிந்தித்துக் கொண்டிருந்த அர்ஜூன் விடிந்ததும் எழுந்தவன் குளியல் அறைக்குள் சென்றான்...

மனதில் மண்டியிருந்த உஷ்ணம் உடல் முழுவதும் கனலாக வீசியதோ குளிர்ந்த நீரில் நீண்ட நேரம் நின்றிருந்தவனின் மனமும் குளிரவில்லை, உடலின் சூடும் தணியவில்லை....

இரு முறை தன் மனைவியை எதிர்பார்த்து அடைந்த ஏமாற்றம் அவனின் உள்ளத்தில் மனக்கசப்பை ஏற்படுத்த அதனால் விளைந்த வெறுப்புணர்ச்சியினால் சினம் துளிர்த்து இரவு முழுவதும் நெஞ்சத்தில் தகிப்பும் சீற்றமும் கொண்டு உறங்காது இருந்த கணவனை திவ்யா அறிந்திருந்தால் அவனின் கோபத்தை கண்கூடாக கண்டிருந்தால் நிச்சயம் வெலவெலத்து போயிருப்பாள்....

தன் பெற்றோரும் தமையனும் ஊருக்கு கிளம்ப உதவி செய்தவளின் பார்வை நொடிக்கொரு தரம் மாடியில் இருக்கும் தன் கணவனின் அறைக் கதவையே நோக்கியிருக்க எந்த அரவமும் இல்லாது இருந்த அறையின் நிசப்தம் மனதில் திக்திக்கென்ற உணர்வைத் தர, அவன் கதவு திறக்கப்படவும் இல்லை, அவன் கீழே இறங்கி வருவதாயும் தெரியவில்லை....

COPYRIGHTED

கணவனை நெருங்கவும் தைரியம் இல்லாமல் அவனின் கோபத்தையும் தாங்க சக்தி இல்லாமல் பரிதவித்து போய் இருந்தாள் அந்த சின்ன தளிர்.....

பெற்றோருடன் கிளம்பிய வினோத்தின் கண்களும் தன் தங்கையைப் போலவே விட்டை விட்டு கிளம்பும் வரையிலும் தன்னவளையே தேடி அலைமோத, எந்த சந்தடியும் இல்லாமல் தன் அறைக்குள்ளே அடைந்து இருந்தவள் அவன் ஊருக்கு கிளம்புவது தெரிந்தும் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு மறந்தும் வெளியில் தலைக் காட்டவில்லை....

அண்ணனும் தங்கையும் அவர் அவர்களின் குணாதியங்களுக்கு ஏற்ப தங்கள் துணையை நினைத்து விடியும் வரையில் இதயம் கனத்து உள்ளம் புகைந்து மன ஆற்றாமையுடன் தூங்காமல் இருந்து தங்களின் மனம் கவர்ந்தவர்களின் மனதை அறுக்கும் அளவிற்கு சித்திரவதை செய்துக் கொண்டு இருந்தனர்...

செல்வதற்கு முன் மஹாவின் அழகிய முகத்தை ஒரு முறையாவது பார்த்துவிட மாட்டோமா, தான் கிளம்பும் பொழுது சென்ற முறை செய்தது போல் தலையை மட்டுமாவது அசைத்து தன் கோபத்தை மறந்து தனக்கு விடைத் தர மாட்டாளா? என்று ஏங்கியவாறே வினோத் காத்திருக்க....

அவள் வெளியே வரும் சுவடே இல்லாததால் வேறு வழியில்லாமல் டாக்ஸியில் ஏறியவன் மீண்டும் ஒரு முறை ஏக்கத்துடன் வீட்டை திரும்பி பார்க்க, ஒரு வேளை நேற்றுப் போல் மொட்டை மாடியில் இருப்பாளோ? என்ற ஆசையில் மொட்டை மாடியையும் பார்க்க அவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.....

COPYRIGHTED

60% 8:00 PM
https://drive.google.com/file



அவனின் அழகிய ராட்ஷசி, செல்ல ரௌடி உள்ளம் முழுவதும் காதலை சுமந்திருந்தாலும் அவனின் அடாவடிச் செயலில் மனம் கலங்கி தன் இதயத்தை கடினமாக மாற்றிக் கொண்டு அறைக்குள்ளே அடைந்துக் கிடந்தாள்....

ஒரு வழியாக கலாவின் குடும்பத்தினரின் டாக்ஸி சென்றவுடன் உள்ளே வந்த ஸ்ரீக்கு இன்று என்ன நடக்குமோ? அர்ஜூனின் கோபம் எந்த எல்லையை தாண்டப் போகிறதோ என்று வயிற்றில் புளியை கரைக்க, மருமகளை திரும்பி பார்த்தவருக்கு அவளின் கலங்கிய முகமே பறைசாற்றியது அவளின் மனதில் சூழ்ந்திருந்த அச்சத்தை....

அவனை பெற்றவள் எனக்கே சில நேரங்களில் அவனைக் கண்டால் உதறல் எடுக்கிறது....

அவன் தந்தையாகட்டும் அல்லது நானாகட்டும் அவனுக்கு விருப்பம் இல்லாத ஒன்றை செய்தால் எங்களிடம் அவன் சீறும் விதத்தில் நாங்கள் இருவருமே நடுநடுங்கி போய் கலங்கியிருப்போம்....

இதில் அருணைப் பற்றியோ மஹாவைப் பற்றியோ சொல்லவும் வேண்டாம்....

அவன் முன் சாதாரனமாக நின்று பேசுவதற்கே பயந்து உடல் வெடவெடக்க நிற்பார்கள்....

அதிலும் அவர்கள் அவனுக்கு எதிராக எதையாவது செய்துவிட்டு பின் அவனிடம் மன்னிப்பு இறைஞ்சும் பொழுதும் கூட அவனின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவர்கள் அவன் முன் தலை கவிழ்ந்து நிற்கும் போது ஸ்ரீக்கே பாவமாக இருக்கும்....

COPYRIGHTED

60% 8:00 PM
https://drive.google.com/file



அந்த அளவிற்கு அவன் தன் குடும்பத்தையும், தொழிற்களையும் தன் தாத்தாவைப் போல் தன் உள்ளங்கைக்குள் வைத்து இருந்தான்...

அப்படி இருக்க பத்தொன்பது வயதே ஆன சின்ன பெண் இவள், என்ன செய்வாள்? பாவம்!!!

அவனைக் கண்டாலே பயந்து நடுங்கி ஓடி ஒளிகிறவள்...

அவன் அவளை ஒவ்வொரும் முறை திரும்பி பார்க்கும் பொழுதும் அவனுடைய கூர்மையான விழிகளை எதிர்கொள்ள முடியாமல் அஞ்சி ஒடுங்குகிறவாள்...

அவன் இன்று என்ன ருத்ர தாண்டவம் ஆடப் போகிறானோ?

இவள் அவனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறாளோ?.....

என்று திவ்யாவின் பரிதாப நிலையை நினைத்துப் பார்த்தவருக்கு அவளின் மேல் இரக்கமே வர அவளுடன் சேர்ந்து அவரும் தன் மகனின் வருகைக்காக அச்சத்துடன் காத்திருக்க ஆரம்பித்தார்...

ஆனால் கலா குடும்பம் சென்றும் அவன் கீழ் இறங்கி வருவாதாயில்லை...

சில நேரங்களில் ஏதோ ஒரு காரணத்தால் நாம் நமக்கு பிரியமான ஒருவரின் கோபத்திற்கு ஆளாகியிருப்போம்.... அவர்களின் சீற்றம், கோபம் வெளி வரும் நொடிகளை எண்ணிக் காத்திருப்போம்....

COPYRIGHTED

60% 8:00 PM
https://drive.google.com/file



அந்த நேரங்களில், ஒவ்வொரு நிமிடமும் மனதிற்குள் ஒரு கலக்கத்தை கொண்டு வரும்... ஒவ்வொரு விநாடியும் பல யுகங்கள் போல் தோன்றும்...

அந்த கலக்கத்தை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது அவர்களின் கோபம் கூட பெரிய அளவில் நம்மை பாதிக்காது.... ஆனால் அந்த நிமிடங்கள் நம்மை கதிகலங்க வைக்கும்...

அதே போன்ற ஒரு மனநிலையில் இருந்தனர் ஸ்ரீயும், திவ்யாவும்....

நேரம் ஆக ஆக அடி வயிற்றுக்குள் ஒரு உருளை உருளுவது போல் மனம் திகைத்து போய் செயலற்று இருக்க, அவர்களின் அதிர்ச்சியை மேலும் கூட்டுமாறு சிறிது நேரத்தில் குளித்து முடித்து கீழே இறங்கி வந்தவன் ஒன்றும் பேசாமல் ஷூவைப் போட, அவனின் அமைதி சூராவளிக்கு முன்னர் வரும் மயான அமைதியைப் போன்று கொடியதாக இருந்தது அவனின் மனையாளுக்கும், அவன் அன்னைக்கும்....

அவனின் அசாதரணமான மௌனத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல் அவன் மனதில் ஓடிக் கொண்டு இருக்கும் எண்ணங்களையும் அறியும் பொருட்டு அவன் அருகில் தயங்கிவாரே வந்தார் ஸ்ரீ.....

"என்ன அர்ஜூன், அதற்குள் கிளம்பிட்ட... சாப்பிடலையா?"

அவரின் கேள்வியில் ஷூவைப் போட்டுக் கொண்டு இருந்தவன் அவரை நிமிர்ந்தும் பார்க்காமல்....

COPYRIGHTED

8:01 PM 60%
https://drive.google.com/file



"ஒரு அர்ஜென்ட் விஷயமா கதிர் கால் பண்ணியிருக்கான்.... உடனே கிளம்பனும்" என்றவன் மறந்தும் தன் மனைவியை தேடவில்லை...

அது போல் கதிரும் அவனை அழைத்திருக்கவில்லை.... அவனுக்கு தன் வீட்டில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் நெருப்பின் பிடியில் இருப்பது போலவே இருந்தது....

இரவு முழுவதும் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தவனுக்கு எழுந்தவுடன் வந்த நினைவே....

"தனக்கும் தன் மனைவிக்கும் இடையில் நடக்கும் இந்த பிரச்சனையை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தினால் தன் தரம் தான் தாழ்ந்து போகும்.... மனைவியிடம் வாய்விட்டு அவளிடம் தாம்பத்தியத்தை யாசித்தானா அர்ஜூன் என்று அசிங்கமாகும்.... போயும் போயும் ஒரு பெண்ணுக்காக காத்திருந்தான் என்ற கேவலமான பேச்சு வரும்" என்று தப்புத் தப்பாக நினைத்தவன் அடங்காத கோபத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டு வெளியே சென்றவன்,

காரை புயல் போல் சீறிக் கிளப்பிக் கொண்டு சென்ற வேகத்திலேயே தெரிந்தது அவனின் சினத்தின் ஆழம்....

தன் மகன் தன் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்காமல் பதில் கூறிவிட்டு போனதில் ஸ்ரீயின் மனம் சுக்கல் சுக்கலாக உடைந்து போனது.....

அவனுக்கு தன் மனம் விட்டு தன் காதலைச் சொல்ல தெரியாது....

COPYRIGHTED

தன் இதயத்தை திறந்து தன் ஆசையை, மனதில் ஆடும் எண்ணங்களை தெளிவுப் படுத்த இயலாது....

ஏனெனில் அவன் மற்ற ஆண்களைப் போல் அல்ல....

தன் குடும்பத்தார் மீது அளவுக் கடந்த பாசமும் அன்பும் அவன் வைத்திருந்தாலும் அதனை என்றுமே அவன் வெளிக்காட்டியதில்லை...

இது அவர்கள் அனைவருக்குமே தெரிந்த விஷயம்.... இது நிச்சயம் திவ்யாவிற்கும் தெரிந்து தான் இருக்க வேண்டும்....

இத்தனை மாதங்கள் அவனோடு ஒரே இல்லத்தில், அவன் குடும்பத்தாரோடு இருந்திருக்கிறாள்....

இது கூட தெரியவில்லை என்றால் எப்படி?

ஸ்ரீயின் மனதில் தோன்றிய எண்ணங்களே இவை....

இந்த பிரச்சனையை இனியும் இப்படியே விட்டு விடக்கூடாது என்று எண்ணியவராக திவ்யாவைப் பார்க்க, தன் கணவன் வீட்டில் இருந்து வெளி சென்றும் இன்னும் அவன் சென்ற வழியின் மேலே விழி வைத்து கண்ணீரில் கரைந்துக் கொண்டிருந்தவளை நெருங்கியவர்....

"திவ்யா, உன் கூட கொஞ்சம் பேசனும்டா.... என் கூட வா" என்றார்...

COPYRIGHTED

60% 8:01 PM
https://drive.google.com/file

நேற்று தன் கணவன் ஆசையுடன் தன்னை அணைத்து தன் விருப்பத்தை எடுத்து சொல்லியும் தான் அவரின் அறைக்கு செல்லாதது நிச்சயம் அதீத கோபத்தில் அவரை தள்ளியிருக்கும்...

தன் வீட்டார் ஊருக்கு கிளம்பும் வரை வேண்டுமானால் பொறுமையோடு இருப்பார்.... அதற்கு பின் தான் தெரியும் அவரின் கோபத்தின் அளவு....

காலையிலேயே வெடித்து தன்னை வேரோடு சாய்க்க போகிறார் என்று அஞ்சிக் கொண்டு இருந்தவளுக்கு அவன் ஒன்றும் பேசாமல் தன்னை நிமிர்ந்து கூட பார்க்காமல் அலுவலகத்திற்கு சென்றது திகிலை அடி வயிற்றில் உரையச் செய்தது...

மயற்கூச்செரியும் அளவிற்கு உடலில் உதறல் எடுத்திருக்க அமைதி கலந்த ஒரு வித கிலி சூழ்ந்திருக்க தன் இதயம் இரண்டாக வெட்டப்ப்ட்டு பிளந்தது போல் வலியெடுக்க செய்தது அவனின் பாராமுகத்தால்....

ஆனால் அந்த நிமிடம் அவன் அமைதியாக சென்று இருந்தாலும் அவன் மனம் வெடிக்க தயாராக இருக்கும் எரிமலையை போல் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறது என்பதனை இந்த சின்ன பேதை அறியவில்லை...

மாமியார் தன்னை அழைக்கவும் சுயநினைவிற்கு வந்தவள் அவரின் பின்னரே செல்ல, அவளை கீழே இருக்கும் விருந்தினர்கள் தங்கும் அறைக்கு அழைத்து சென்று கதவை சாத்திவிட்டு அவளை கட்டிலில் அமரச் செய்த ஸ்ரீ அவளின் தலையை மென்மையாக கோதிவிட்டுக் கொண்டே....

COPYRIGHTED

8:01 PM 60%
https://drive.google.com/file



"திவ்யா.... நேற்று இரவு அர்ஜுன் எல்லோரும் சாப்பிட்டு கொண்டு இருக்கும் போது கிட்சனில் உன்னிடம் ஏதாவது சொன்னானா?" என்று நேரடியாகவே விஷயத்திற்கு வந்தார்....

"ஐயோ! அது எப்படி இவருக்கு தெரியும்" என்று யோசித்தவள் கலக்கத்துடன் அவரைப் பார்க்க,

சட்டென்று மாறிய அவள் முகமும், நிற்காமல் வழிந்தோடும் கண்ணீரும் அவரின் கேள்விக்கு பதிலை சொல்லாமல் சொல்லியது....

அவளின் முக மாற்றத்தை வைத்தே நடந்ததை யூகித்தவர்....

"திவ்யா... நானும் உன்னை மாதிரி ஒரு வீட்டிற்கு புதுப் பொண்ணா போயிருக்கேன்.... மூன்று பிள்ளைகளை பெற்றிருக்கிறேன்... அதனால் எனக்கு எப்படி இது தெரியும்ன்னு நினைக்காத" என்றார் கனிவாக.....

அதே சமயம் அவரின் குரலில் அழுத்தமும் இருந்தது...

அமைதியான முகத்தோடு சன்னமான குரலில் அவர் பேசினாலும் அவரின் வார்த்தைகளில் சிறிது கடுமையும் சேர்ந்திருப்பதாகவே திவ்யாவிற்கு தோன்றியது...

அதை உணர்ந்த நொடி அவளின் கண்களில் மேலும் கண்ணீர் பெருக, அவளின் நிலை உணர்ந்தவர் முடியை கோதிவிட்டவாரே...

"சொல்லுடா, என்ன சொன்னான் அர்ஜுன்?" என்றார்.

COPYRIGHTED

60% 8:01 PM
https://drive.google.com/file



என்னதான் பெண்ணாக இருந்தாலும் தன் மாமியாரிடம் எப்படி தன் கணவன் தன்னை அணைத்ததை, தன் அறைக்கு தன்னை அழைத்ததை சொல்வது என்று சில விநாடிகள் தயங்கியவள் தன் மாமியாரின் விழிகள் தன்னையே கூர்ந்து பார்த்திருப்பதை உணர்ந்து வேறு வழியின்றி பாதியை மறைத்து....

"அத்தை... என்ன நேத்து அவங்க ரூமிற்கு வரச் சொன்னார்கள்" என்றாள்...

அதை ஏற்கனவே யூகித்திருந்த ஸ்ரீ,

"சரி, அப்போ ஏன் நேத்து உன் அம்மாக் கூட தூங்கின?" என்றார்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று திவ்யாவின் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது...

என்ன தான் ஸ்ரீ ஒரு நல்ல மாமியாராகாவும், தன் அன்னையின் நெருங்கிய தோழியாகவும் இருந்தாலும் இது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நடக்கும் அந்தரங்கம்...

"அதுவும் தன்னுடன் தாம்பத்ய உறவை தன் கணவன் எதிர்பார்க்கிறார் என்றும், அவரைக் பார்த்தாலே நடுங்கும் தான் எப்படி அவருடன்.....????" என்றும் மனதிற்குள் ஓடிக் கொண்டிருக்க ஆனால் ஸ்ரீ விடுவதாக இல்லை....

"திவ்யா... உன்னைத் தாண்டா கேட்கிறேன்.... சொல்லு... அவன் கூப்பிட்டும் நீ ஏன் அவன் ரூமிற்கு போகலை?" என்க....

COPYRIGHTED

8:01 PM
https://drive.google.com/file



தயக்கத்துடனும், கலக்கத்துடனும் ஒவ்வொரு வார்த்தையாக....

"இல்லத்த.... எனக்கு அ.... அவங்கள பார்த்தாலே பயத்தில வெட வெடங்குது.... இதுல அவங்கக்கூட அவங்க ரூமுல எ...எப்படித்த?" என்றவள் அதற்கு மேல் பேசாமல் தலை குனிய,

"திவ்யா... ரிஷப்ஷன் அன்னைக்கு நைட் அவனோட அவனுடைய ரூமில் தான படுத்திருந்த.... அப்ப அவன் உன்னை எதுவும் செஞ்சானா? இல்ல உன்னை எதுவும் கஷ்டப்படுத்திற மாதிரி பேசினானா? அப்படி எதுவும் நடந்த மாதிரி எனக்கு தெரியலையே....." என்றவர் சில விநாடிகள் தயங்கி பின் தொடர்ந்தார்.....

"திவ்யா.... எனக்கு நீ வேற மஹா வேற இல்லை.... உன் இடத்தில் மஹா இருந்திருந்தாலும் நான் இப்படி தான் பேசியிருப்பேன்... பொண்ணா பிறந்தா இதெல்லாம் ஏத்துகிட்டு தான் ஆகனும்... கல்யாணம்னு ஒன்னு ஆனா புருஷனுடன் இப்படி எல்லாம் இருக்கனும்னு உனக்கு சொல்லி தெரிய வேண்டியதில்லையே..... இதெல்லாம் தெரிஞ்சு தான நீ அந்த பையன கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்ச?" என்க இதை எதிர்பார்க்காத திவ்யா அதிர்ச்சியுடன் அவரைப் நிமிர்ந்து பார்க்க.....

"என்னாடா, திடீர்னு அத்தை பழைய கதையெல்லாம் பேசுறேன்னு நினைக்காதடா..... நான் அவன பத்தி பேசலை.... என் பையனப் பத்தி தான் பேச போறேன்.... எனக்கு புரியுது.... உங்கள் கல்யாணம் ஏற்கனவே நாங்க எல்லாம் பார்த்து பேசி நடந்ததில்லைன்னு... ஆனால் அதே சமயம் அர்ஜூனோட நீ இத்தனை நாள் ஒரே வீட்டில் இருந்திருக்க.... அவனோட மனமாற்றத்தை பத்தி நான் சொல்ல வேண்டியதில்ல...." என்றவரின் கண்கள் ஒரு அன்னையாக தன் மகனை நினைத்து கலங்கியிருந்ததோ....

8:01 PM 60%
https://drive.google.com/file

இது வரை தன் தோழியின் மகளாக, தன் மருமகளாக திவ்யாவிடம் பேசிக் கொண்டிருந்தவர், இப்பொழுது முதன் முறையாக தன் மகனுக்காகவும் பேச துவங்கினார்.....

"அர்ஜூன் கொஞ்சம் கடுமையானவன் தான் திவ்யா..... அவன் மத்தவங்க போல் இல்லை.... ரொம்பவே முரட்டு குணம் உள்ளவன் தான்.... நான் இல்லைன்னு மறுக்கலை.... ஆனால் அதே சமயம் அவனும் மனுஷன் தான் திவ்யா..... உங்க கல்யாணம் அவனுக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சின்னு உன்னை விட பெத்தவ எனக்கு தான் தெரியும்.... இப்போ கூட அவன் எப்படி உங்க கல்யாணத்துக்கு சம்மதிச்சான்?? எப்படி எதுவும் பேசாம அமைதியா உன் கழுத்தில் தாலி கட்டினான்னு ஒவ்வொரு நாளும் நான் நினைச்சுப் பார்த்திருக்கேன்.... ஆனால் அவனே இவ்வளவு சீக்கிரம் மனசு மாறுவான்னு நான் எதிர்பார்க்கலை..... கல்யாணத்தன்னைக்கே டிவோர்ஸ் பத்தி பேசினவன் அவன்..... ஒரு முறை முடிவெடுத்தா அந்த கடவுளே வந்து சொன்னாலும் தன் முடிவ மாத்திக்க மாட்டாண்டா...."

"ஆனால் இப்போ அவனே உன்னை தேடுறானா அவனோட மனச புரிஞ்சுக்க திவ்யா.... இதுக்கு மேல உன் வாழ்க்கைய சிக்கல் ஆக்கிக்காத...... அவனோட கோபம் இப்போ அளவிட முடியாத அளவுள்ள இருக்குங்கிறது காலையில் அவன் முகத்தைப் பார்த்தே தெரிஞ்சிக்கிட்டேன்......அவன் என் முகத்தை கூட நிமிர்ந்து பார்க்கலை... இது வரைக்கும் அவன் என்ன எதிர்த்து எதுவும் பண்ணினதில்ல.... ஆனா உன் விஷயத்தில என் பேச்சுக் கூடக் கேட்க மாட்டானோன்னு பயமா இருக்குது திவ்யா....."

"என்னடா திடீர்னு அத்தை நிஜ மாமியார் போல் ஆகீட்டாங்கன்னு நினைக்காதடா..... எனக்கு அர்ஜூன் என்னை எதிர்க்கிறத பத்தி கவலை இல்லை... ஆனால் எனக்கு உன் வாழ்க்கை முக்கியம்... நீங்க இரண்டு பேரும் சந்தோஷமா இருக்கனும்.... நீ புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறேன்" என்றவர்,

COPYRIGHTED

59% 8:01 PM
https://drive.google.com/file



அதற்கு மேல் ஒன்றும் பேசுவதிற்கில்லை என்பது போல் ஒரு நீண்ட பெருமூச்சை விட்டவர் அறையை விட்டு செல்ல,

"இத்தனை நாளாய் தன் கணவனிடத்தில் எதிர்பார்த்திருந்த காதல் இப்பொழுது கிடைத்தும் கோட்டை விட்டு விட்டோமோ? இனி அவர் என்னை விட்டு தூரப் போய்விடுவாரா? எனக்கு அவர் கிடைக்கவேமாட்டாரா?" என்று திவ்யாவின் ஊமை மனது கிடந்து அலறி அரற்றியது.....

ஆனால் காலம் கடந்து!!!!!

தன் மாமியார் அறையை விட்டு சென்றும் ஒன்றும் செய்வதறியாது சிலைப் போல் கலங்கிப் போய் அமர்ந்திருந்தாள் மலரினும் மெல்லிய திவ்யா....

அதிகாலையில் அலுவலகத்திற்கு வந்த அர்ஜூனிற்கு அங்கு இன்னமும் ஊழியர்கள் ஒருவரும் வராதிருக்கவே தன்னுடைய கோபத்தை சமன் படுத்த வேலையில் கவனம் செலுத்துவதே சரியான வழி என்று எண்ணி கதிருக்கு அழைத்தான்...

மறு முனையில் அலை பேசியை யாரும் எடுக்காததால் ஆத்திரத்தில் அலை பேசியை தூக்கி மேஜையில் எறிந்தவன் தன் சேரில் தலை சாய்த்து இரு கரங்களையும் தன் தலைக்கு பின் வைத்து யோசிக்க துவங்கியவனுக்கு தலையே வெடித்துவிடும் போல் இருந்தது அவமானத்தில்....

COPYRIGHTED

59% 8:01 PM
https://drive.google.com/file



தன் மனைவியின் இகழ்ச்சியில், அவமதிப்பில், புறக்கணிப்பில்.....

எதுவும் செய்ய தோன்றாமல் சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தவன் ஆழ்ந்த பெருமூச்சுவிட்டு கணினியை உயிர்பூட்டி வேலையில் மூழ்க ஆரம்பிக்க கதிரிடமிருந்து அழைப்பு வந்தது.....

அர்ஜூன் அழைப்பு எந்த நிமிடம் வந்தாலும் கதிர் அவனின் அழைப்பை எடுத்துவிடுவான்.... அது நள்ளிரவாக இருந்தாலும் சரி...

ஆனால் இன்று தன் MD அழைக்கும் பொழுது அலை பேசியை வீட்டின் ஹாலில் வைத்துவிட்டு குளிக்க சென்றிருந்ததால் அலை பேசியின் அழைப்பு அவனது செவிகளுக்கு எட்டவில்லை...

குளித்து முடித்து வந்தவன் அர்ஜூனின் அழைப்பை கண்டவுடன்....

"ஐயோ! போச்சு!! காலங்காத்தாலே கூப்பிட்டு இருக்காரு... என்ன அவசரமோ? தொலைஞ்சோம்" என்று பதறியவன் அர்ஜூனிற்கு அழைத்து.....

"சார்... சாரி சார்.... நீங்க போன் பண்ணிய போது குளிச்சிட்டு இருந்தேன்.... அதான் உங்கள் கால அட்டெண்ட் முடியலை..... என்ன சார்? இவ்வளவு சீக்கிரம் கூப்பிட்டு இருக்கீங்க... எனி ப்ராப்ளம்?" என்றான்...

"கதிர்... ஐ நீட் யூ ஹியர்.... [I need you here] உடனே ஆ.:பிஸிற்கு வாங்க?" என்ற MD யிடம் அதற்கு மேல் கேள்வி கேட்டு பழக்கம் இல்லாததால் சட்டென்று சரி என்றவன் சொன்னது போல் அடுத்த அரை மணி நேரத்தில் அலுவலகத்தில் இருந்தான்..

COPYRIGHTED

8:02 PM 59%
https://drive.google.com/file



அலை பேசியில் அர்ஜூனின் குரலில் தெரிந்த அடக்கப்பட்ட கோபமும், அளவுக்கதிகமான அமைதியும் கதிருக்கு ஏதோ பெரிய விபரீதம் நடக்க இருக்கிறது என்பதை உணர்த்த விரைவாக அவன் அறைக்கு வந்தவன் கதவை மெதுவாக தட்டி விட்டு அர்ஜூனின் கட்டளையை எதிர்பார்த்து காத்து இருந்தான்...

உள்ளே இருந்து எந்த சத்தமும் வராமல் போகவும் மீண்டும் கொஞ்சம் சத்தமாக தட்ட,

"கம் இன்" என்ற குரல் கேட்டவுடன் உள்ளே சென்றவனுக்கு தன் M D யின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்தில் இருந்து எதையும் கண்டுப்பிடிக்க முடியவில்லை...

இது தான் அர்ஜூன்....

அவனின் உணர்வுகள், உள்ளத்தில் ஓடும் எண்ணங்கள் மற்றவர்களுக்கு தெரிய வேண்டும் என்று அவன் நினைத்தால் மட்டுமே அவர்களுக்கு தன்னை, தன் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துவான்......

இல்லை என்றால் அவனுடைய முகத்தில் இருந்து அவனின் மனநிலையை, அவன் மனதில் நினைத்துக் கொண்டிருப்பதை ஒருவராலும் கண்டறிய முடியாது.....

அது மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி, வருத்தமாக இருந்தாலும் சரி, இல்லை இப்பொழுது போல் கட்டுக்கடங்காத கோபமாக இருந்தாலும் சரி.....

COPYRIGHTED

8:02 PM 59%

https://drive.google.com/file



தன் தந்தை ருத்ரமூர்த்தியிடம் இருந்து தன் மகனுக்கு வந்த பல குணங்களில் இதுவும் ஒன்று என்று ஸ்ரீ அடிக்கடி சொல்லுவது உண்டு.....

ஆனால் இதே குணம் அர்ஜுனின் தொழில் சாம்ராஜ்யத்தில் அவனுக்கு பல நேரங்களில் உதவி இருக்கிறது....

இதைத் தான் ஆங்கிலத்தில "இமோஷனல் இன்டெலிஜன்ஸ்" [Emotional Intelligence] என்பார்கள்...

தன்னுடைய உணர்வுகளை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மட்டும் இல்லாமல் மற்றவர்களின் உணர்வுகளை நன்றாக கண்டறியும் சாமர்த்தியமும் பெற்றவர்கள் இவர்கள்...

எந்த அளவிற்கு தங்கள் சொந்த உணர்ச்சிகளை தங்களின் கைகளுக்குள் அடக்கி வைத்திருக்கிறார்களோ அதே அளவிற்கு தன் எதிராளிகளின் உணர்ச்சிகளையும் அடையாளம் கண்டு அவர்களின் உணர்வுகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து நிர்வகிக்கும் திறன் பெற்றவர்கள் இவர்கள்...

இது பல நேரங்களில் ஒருவராலும் தீர்க்க முடியாத பலவித சிக்கல்களையும் தீர்க்க உதவும் ஒரு உணர்வுசார் நுண்ணறிவு....

இவர்களை போன்றவர்களை வெல்வது என்பது மிக மிக கடினம்!!!

அர்ஜுனின் முகத்தில் இருந்து எந்த உணர்வையும் கண்டு அறிய முடியாவிட்டாலும், கதிரின் மனதில் எதுவோ உணர்த்த...

COPYRIGHTED

"இஸ் எவிரித்திங் ஆல்ரைட் சார்? [Is everything alright sir] " என்றான் தயங்கியவாறே....

"கதிர்... இன்று என்னோட ஷெடியூல்ஸ் என்ன?"

தன்னுடைய டேப்லட்டில் இருந்து அன்றைய நாளுக்கான வாடிக்கையாளர் பிரதிநிதிகளுடன் சந்திக்கும் மீட்டிங்ஸ், அலுவலக ஊழியர்களுடன் கூட்டங்கள், மற்ற அலுவல்களுக்கான அட்டவணை அனைத்தையும் சொன்னவன்,

"சார், உங்களுக்கு வேண்டும் என்றால் நான் எல்லாத்தையும் ரீ ஷெடியூல் பண்றேன்" என்றான்...

"உங்களிடம் நான் சொன்னேனா? ரீ ஷெடியூல் பண்ண சொல்லி..." என்று புருவங்களை சுருக்கி கதிரைப் கூர்ந்து பார்த்து அர்ஜூன் வார்த்தைகளை கடித்து துப்ப,

அர்ஜூனின் கோபத்தில் சகலமும் அடங்கி போன கதிர்...

"சாரி, சார்" என்றவன் அதற்கு மேல் ஒரு வார்த்தை உதிர்க்கவில்லை.

நேரம் செல்ல செல்ல மற்ற ஊழியர்ளும் வர துவங்க, வேலையிலும் மீட்டிங்குகளிலும் தன் நேரத்தை அர்ஜூன் செலவிட அப்பொழுது தான் அவனுக்கு அந்த தொலை பேசி அழைப்பு வந்தது தன்னுடைய "இன்:ஃபார்மர்" இடமிருந்து...

COPYRIGHTED

8:02 PM 59%
https://drive.google.com/file



"சார்... இன்னைக்கு நம்ம கம்பெனிக்கு இன்கம்டாக்ஸ் ரைட் வராங்க சார்"

தொழில் சம்பந்தப்பட்ட எந்த சூழ்நிலைகளிலும் அதிர்ச்சியோ பதற்றமோ ஆகாத அர்ஜூன் நிதானமாக ஆனால் யோசனையுடன்....

"என்ன திடீர்னு?" என்று கேட்க,

"சார், எனக்கு வந்த தகவலின் படி ராம் இன்டஸ்ட்ரீஸிலிருந்து தான் ஏதோ ஹிண்ட் போயிருக்கும்னு தோனுது சார்" என்றான் இன்ஃபார்மர்....

"ஓகே.... ஐ வில் டேக் கேர் ஆஃப் இட் [Ok i will take care of it] " என்றவன் கதிரை நோக்கி...

"உடனே நம்ம லாயர்ஸையும், ஆடிட்டர் கரனையும் வரச் சொல்லுங்க" என்க,

கதிருக்கு புரிந்துப் போனது இன்று என்ன நடக்கப் போகிறது என்று.

மடியில் கணம் இருந்தால் தானே வழியில் பயம் என்பது போல் விடுவிடுவென ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து முடித்து

எ.கே க்ரூப் ஆஃப் கம்பெனிஸ் வருமான வரி சோதனைக்கு தயாராகவும், வருமான வரி துறையில் இருந்து அதிகாரிகள் வருவதற்கும் நேரம் சரியாக இருந்தது....

COPYRIGHTED

59% 8:02 PM
https://drive.google.com/file

அவர்களிடம் இருந்து அவர்களின் அடையாள அட்டையை வாங்கி பார்த்த அர்ஜூன் சோதனைக்கான உத்தரவையும் கவனமாக படித்தவன் வக்கீலிடம் கொடுக்க அவரும் படித்துவிட்டு சோதனைக்கு சம்மதம் தெரிவித்தார்.

அவர்களின் ஒவ்வொரு கேள்விக்கும் பொறுமையாகவும் கவனமாகவும் பதிலளித்துக் கொண்டிருந்தவனின் மனதில்....

"எதற்காக இந்த ரைடு? ராம் இன்டஸ்ட்ரீஸில் இருந்து என்ன ஹிண்ட் போயிருக்கும்?" என்ற எண்ணங்களே ஓடிக் கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட இரவு வரை நீடித்த சோதனையில் ஊழியர்கள் ஒருவரையும் வெளியே விடாது அலுவலகத்திற்கு உள்ளேயே வைத்திருக்க அனைவருக்கும் ஒரு வித பயமும் அசதியுமுமே இருந்தது...

இறுதியாக அனைத்து ஆவணங்களையும் பார்த்தவர்கள் ஒன்றும் கண்டுப்பிடிக்க முடியாமல்....

"சாரி ஃபார் தி ட்ரபிள் மிஸ்டர் அர்ஜூன் கிருஷ்ணா [ Sorry for the trouble Mr Arjun Krishna] " என்றவர்கள் ஒரு வழியாக வெளியே செல்ல,

அர்ஜூன் உழன்று கொண்டிருந்த தன் நினைவுகளில் இருந்து இன்னமும் வெளியில் வரவில்லை.

சில நிமிடங்கள் அமைதியாக ஏதோ யோசனையில் இருந்தவன் சட்டென்று கதிரை ஆழ்ந்து நோக்கி ...

COPYRIGHTED

8:02 PM 59%

https://drive.google.com/file



"கதிர்... எனக்கு உடனே ராம் இன்டஸ்ட்ரீஸின் கரெண்ட் அண்ட் ஃப்யூச்சர் ப்ராஜட்ஸ் எல்லாவற்றை பற்றியும் கம்ப்ளீட் டிடெய்ல்ஸ் வேண்டும்... அவர்கள் என்ன மாதிரியான விளைவுகளை இந்த ரைடில் எதிர்பார்த்தாங்கன்னும் தெரியுனும்... யார் நம்ம கம்பெனி பற்றி, என்ன மாதிரியான தகவல்களை இன்கம் டாக்ஸ் ஆஃபிஸிற்கு சொன்னார்கள் என்றும் தெரியனும்... இந்த எல்லா டிடெய்ல்ஸும் எனக்கு நாளைக்குள்ள என் டேபிளில் இருக்கனும்" என்றவன் புயல் வேகத்தில் வேகமாக வெளியேற,

கதிரின் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்தது....

அது அர்ஜுனை பற்றியோ அல்லது தன்னை பற்றியோ பயத்தினாலோ இல்லை...

"ஐயோ! ராமா! புலி வால பிடிச்சிட்டியே.... இனி கடவுள் கூட உன்னைய காப்பாற்ற முடியாது" என்று ராம் இன்டஸ்ட்ரீஸின் M D ராமச்சந்திரனை நினைத்து தான்.

ஏனெனில் அர்ஜுனின் கோப வட்டத்திற்குள் விழுந்தவர்களை அது எந்த எல்லை வரை கொண்டு போகும் என்பதை ஸ்ரீக்கு பிறகு நன்கு தெரிந்தவன் இவன் ஒருவனே...

பல நேரங்களில் அதை திகிலோடு கண் கூடாக பார்க்க நேர்ந்ததும் உண்டு....

ஆனால் அப்பொழுதெல்லாம் அர்ஜுனின் அதிரடியான ஆட்டங்களைப் பார்த்து பயந்து போனாலும் தன் MD-ஐ எதிர்த்து முன்னாள் சேர்மனான அவரின் அன்னையோ அல்லது இன்னாள் சேர்மனான

COPYRIGHTED

59% 8:02 PM
https://drive.google.com/file



அவரின் தந்தையோ கூட எதிர்த்து பேசாதது கண்டு வாய் மூடி ஆச்சரியப்பட்டு இருக்கிறான்....

மனதிற்குள் "என்ன தில்லுப்பா இவருக்கு... அதுவும் இந்த சின்ன வயசிலேயே" என்று ஒருவித திகிலான நிலையில் இருந்திருக்கிறான்...

ஆனால் தொழிலிலேயே அப்படிப்பட்டவன் அர்ஜூன் என்றால் அவனின் கோபத்திற்கு புதிதாக ஆளான திவ்யாவின் நிலைமை என்னவோ?????

மலரினும் மெல்லியவள்!

தொடரும்.........

COPYRIGHTED

59% 8:04 PM
https://drive.google.com/file

பாகம் - 18

ஏற்கனவே மனம் சமாதனமற்று, மிகவும் குழம்பிய நிலையில் சித்தம் தடுமாறியிருந்தவனுக்கு இன்று எதிர்பாராமல் நடந்தேறிய வருமான வரித்துறையின் சோதனை வேறு உள்ளத்தை சளைக்க செய்ய உடலும் உணர்வும் துவண்டு போக, மனம் உணர்ச்சிகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக அடிமையாக ஆரம்பித்தது...

இது போன்ற சோதனைகளை அவன் தன் பெற்றோருடன் இணைந்து தொழிலில் இறங்கிய காலத்திலிருந்தே சந்தித்து இருக்கிறான்.... அதுப் போன்ற சூழ்நிலைகளில் தன்னந்தனியாளாக நின்று வென்றும் இருக்கிறான்.....

ஆனால் என்று காதல் என்ற ஒரு மெல்லிய நுண்ணுணர்வு அவன் உள்ளத்தில் அடி எடுத்து வைத்திருந்ததோ, எந்த நிமிடம் அவன் மனைவியின் மீது தன் கண்களை அளவிளடங்கா காதலுடன் நிலைநாட்டியிருந்தானோ அன்றிலிருந்து அவனையும் அறியாமல் அவன் இதயத்தின் ஒரு பக்கம் மென்மையாக மாறிவிட்டிருந்தது...

அதன் வெளிப்பாடே தன்னவளின் சிகையில் இருந்து விழுந்த மலர்களை கூட நசுக்க விரும்பாமல் அவன் தன் பாதங்களை தள்ளி வைத்தது...

ஆனால் இன்று தன் மனதினை அவள் கசக்கி எறிந்துவிட்டதாகவே அவன் உள்ளம் புழுங்க ஆரம்பித்தது....

59% 8:04 PM
https://drive.google.com/file



அதற்கு ஒரே காரணம் இதுவரை அவன் வாழ்க்கையில் அவனை ஒருவரும் தோற்கடித்ததில்லை.... அல்ல... யாரும் அவனை தோற்கடிக்க அவன் விட்டதில்லை....

ஒருவரும் அவனை புறந்தள்ளியது இல்லை.... உதாசீனப் படுத்தியதில்லை....

ஆனால் தன் மனைவி தன்னை மனமாற ஒதுக்கி வைத்து இகழ்ந்துவிட்டாள் என்று அவனாகவே தனக்குள் ஒரு தப்புக் கணக்கு போட்டுக் கொண்டான்...

மனம் அடிபட்டு போனதில், சித்தம் சிந்திக்கும் சக்தியை அறவே அழிக்க "இவளுங்க எல்லாம் கெஞ்சினால் மிஞ்சுவாளுங்க, மிஞ்சினால் கெஞ்சுவாளுங்க" என்று வாய்விட்டு சொல்லி கொதித்தவன் தன் இதயத்தை இரும்பாக்கி கொள்ள முடிவு செய்தான்....

உள்ளே எழுந்த உணர்ச்சிகளின் விளைவாக உள்ளூர அவமானத்தால் குன்றிக் கொண்டிருந்ததால் மனம் முழுவதும் வெறுப்புடன் அலுவலகத்தில் இருந்து வெளியே வந்தவன் அன்று இரவு போகத் தேர்ந்தெடுத்த இடம் ஒரு நட்சத்திர ஹோட்டலினுள் இருக்கும் பார்....

அகமும் புறமும் கோபக் கணலில் கொதித்திருக்க இன்று நடந்த சோதனை வேறு அவனின் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றினது போல் இருக்க, பாருக்குள் நுழைந்தவன் மனதின் அழுத்தத்தை போக்க மது அருந்த ஆரம்பித்தான்...

இந்தியா முழுவதும் தொழிற்களில் கொடிக்கட்டி பறக்கும் வெற்றிகரமான இளம் தொழிலதிபன்.....

59% 8:04 PM
https://drive.google.com/file



தன் எதிரிகளை சாமான்யமாக துவம்சம் செய்து வெற்றிக் கொள்பவன்....

இன்று தன் மனதினை அடக்க தெரியாமல் மது அருந்த துவங்கியவன் நடு நிசியாகும் வரை குடிப்பதை நிறுத்தவில்லை....

ஆனால் அங்கு திவ்யாவிற்கோ மனம் ஒரு நிலையில் இல்லாமல் துடித்து தவித்து இருந்தது....

அதிகாலையில் கோபமாக சென்ற கணவன் தன் அன்னையிடம் கூட முகம் கொடுத்து பேசாமல் சென்றவன் இரவு வெகு நேரம் சென்றும் விட்டிற்கு வராதது மேலும் அச்சத்தைக் கொடுக்க கலக்கத்துடன் தன் மாமியாரின் அறைக் கதவை தட்டினாள்..

அந்த நேரத்தில் கதவு தட்டப்படவும் குழம்பிய ஸ்ரீ யோசனையுடன் அறையை விட்டு வெளியே வர.....

"அத்த மணி மூனு ஆகுது.... இன்னமும் அவங்க விட்டிற்கு வரலை..... காலையில் ரொம்ப கோபமாக வேற போனாங்கல்ல.... இப்போ எனக்கு என்னமோ பயமா இருக்கு அத்தை" என்று கண்களில் நீர் திரண்டு இருக்க கலக்கத்துடன் கூறுபவளை பார்த்த ஸ்ரீக்கே ஒரு மாதிரியாக இருந்தது...

ஆனால் ஏற்கனவே கதிரின் மூலம் அலுவலகத்தில் நடந்த வருமான வரி சோதனையைப் பற்றி அறிந்திருந்தவர் அர்ஜூனின் மன நிலையை உணர்ந்தவராக அதனைப் பற்றி சொல்லி திவ்யாவையும் வருத்தப்பட வைக்க வேண்டாம் என்று எண்ணியவர்....

https://drive.google.com/file



"நீ போய் தூங்கு திவ்யா.... அவன் வந்திடுவான்" என்று மட்டும் சொன்னார்...

தொழிற்களில் இது போன்ற சம்பவங்கள் சகஜம் என்றாலும் அவன் இன்று இருந்த மனநிலையை நன்கு அறிந்தவர்களாக தன் மகனின் வரவிற்காக அவரும் பாலாவும் உறங்காமல் காத்துக் கொண்டு தான் இருந்தார்கள்...

ஆனால் அதனைப் பற்றி திவ்யாவிடம் சொல்லி அவளையும் வருத்தப்படுத்த அவர் விரும்பவில்லை...

கலக்கத்தோடு கீழே இறங்கப் போனவள் தயங்கிவளாக ஸ்ரீயை நோக்கி திரும்பி பார்க்க "என்ன திவ்யா? என்றார்...

"அத்த நான் வேண்டும் என்றால் இன்றில் இருந்து அவரின் ரூமில் படுத்துக்கவா?" என்ற தவிப்புடன் கேட்ட மருமகளை பரிதாபமாக பார்த்தவர் ஒன்றும் பேசாமல் "இது கணவன் மனைவிக்குள் நடக்கும் பிரச்சனை, அவர்களே தான் அதனை சரி செய்துக் கொள்ள வேண்டும்" என்று நினைத்தவர்,

மெல்லிய புன்னகையுடன் "சரிடா" என்றார்...

என்ன தான் ஸ்ரீ சொல்லிவிட்டாலும் தன் கணவனின் அறைக்கு அவன் இல்லாத பொழுது செல்ல அச்சமாக இருக்க தன் மாமியார் அவர் அறைக்குள் செல்லும் வரை காத்திருந்தவள் கீழே ஹாலிலேயே அவன் வரும் வரை காத்திருப்பது என்று முடிவு செய்து அங்கிருந்த சோபாவில் படுத்தாள்.

8:04 PM 59%
https://drive.google.com/file



கிட்டத்தட்ட நான்கு மணி வரை விழித்திருந்தவள் அதன் பிறகு தன்னையும் அறியாமல் சிறிதே கண்ணசர விடியற்காலையில் சட்டென்று விழித்தவள் "அவர் வந்துவிட்டாரோ? நாம் கவனியாமல் தூங்கி விட்டோமோ"? என்று பதறியவள் வெளியில் சென்று அவனின் காரை தேட அது அங்கிருந்தால் தானே...

அவன் இன்னும் வரவில்லை என்றது புரிந்ததும் பகீரென்று இருக்க, மனம் பதற, என்ன செய்வது என்று வாசலிலேயே கையைப் பிசைந்துக் கொண்டு நின்றவளின் அச்சத்தைப் போக்குவது போல வந்து சேர்ந்தான் அர்ஜூன்...

விடியும் வரை பாரிலேயே இருந்தவன் சற்று போதை தெளிந்ததும் காரை கிளப்பியவன் நேரே வீட்டிற்கு வர, வாசலில் நின்றுக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தவன் அவளை சுட்டு பொசுக்காதது ஒன்றே குறையாக கோபத்தை அடக்கிக் கொண்டு உள்ளே சென்றான்...

அவனை கூர்ந்துப் பார்த்தவளுக்கு அவனின் நடையின் தளர்ச்சியில் இருந்தே தெரிந்தது அவன் குடித்து இருக்கிறான் என்று....

முதல் முறை தன் கணவனின் மதுப் பழக்கத்தை கண்டவளுக்கு அவனின் இந்த பழக்கம் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது என்றால், ஒருவேளை என் மேல் உள்ள கோபத்தால் தான் என்றும் இல்லாமல் இன்று குடித்திருப்பாரோ? என்ற நினைப்பு இதயத்தில் சுருக்கென்ற தாங்க முடியாத வலியைக் கொடுத்தது....

அவன் பின்னாலேயே அவளும் போக, சற்று தடுமாறி மாடி படிகளில் ஏறியவன் தன் அறைக்குள் செல்லும் முன் திரும்பி கீழேப் பார்க்க அவளின் அதிர்ந்த கலங்கிய முகமும் நீர் தேங்கியிருக்கும் விழிகளும் அவனின் அடிப்பட்ட மனதிற்கு ஒரு குரூர மகிழ்ச்சியையே கொடுத்தது...

8:06 PM 58%
https://drive.google.com/file 17



பழி ஒரு பக்கம், பாவம் ஒரு பக்கம் என்பதுப் போல் எய்தவன் ஒருவன் இருக்க அம்பை தன் மனைவியின் மேல் எய்ய விரும்பியவன் அவளை எந்த விதத்தில் வலிக்க செய்வது என்று ஒரு நொடி யோசித்து பின் ஒரு நக்கல் சிரிப்புடன் மேலிருந்தவாறே...

"டிவோர்ஸுக்கு அப்பளை பண்ணப் போறேன்.... பேப்பர்ஸ் வரும் போது கையெழுத்து போட ரெடியா இரு" என்று சொல்ல...

மீண்டும் இத்தனை நாட்களுக்கு பிறகு "டிவோர்ஸ்" என்ற வார்த்தையை கணவனின் வாயில் இருந்து அதுவும் நேரிடையாக தன்னை நோக்கி அவன் சொன்னதை கேட்டதும் அமிலத்தை தன் உடல் முழுவதும் சொட்டு சொட்டாக ஊற்றியது போல் துடிதுடித்து போனாள் அந்த பாவை...

அவள் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியை சிறு புன்னகையுடன் ரசித்துப் பார்த்தவன் தன் அறைக்குள் சென்று படீரென்று கதவை சாத்த, அந்த ஒலி திவ்யாவை தூக்கி வாரிப் போடச் செய்தது என்றால் அவன் கதவை சாத்திய விதம் இனி என் அறையில், என் மனதில் உனக்கு இடம் இல்லை என்பதை உணர்த்துவதுப் போல இருக்க, இதயம் உறைந்து போய் நின்றாள்....

பொழுது புலர்ந்துவிட்டதால் விழித்த ஸ்ரீ, தன் அறையில் இருந்து வெளி வரவும் அர்ஜூன் திவ்யாவை பார்த்து விவாகரத்திற்கு தயாராக இரு என்று சொல்லவும் சரியாக இருந்தது....

அவனின் கொடிய வார்த்தைகளில் அதிர்ந்தவர் கீழே திவ்யாவை நோக்கி பார்க்க, மருமகளின் அதிர்ந்த முகம் தான் வருவதற்கு முன்பு கிட்டதட்ட அங்கு என்ன நடந்திருக்கும் என்பதனை உணர்த்தவும் வேகமாக கீழே இறங்கி வந்தவர் கலக்கத்துடன்...

"திவ்யா, என்ன நடந்தது?" என்றார்...

ஆனால் திவ்யாவோ தன் கணவன் மது அருந்தியிருப்பதையும், அவன் இத்தனை நேரம் கழித்து இப்பொழுது தான் வீட்டிற்கு அதுவும் தள்ளாடியபடியே நடந்து வந்ததையும் சொல்லாமல்.....

"அத்த... அவரு என்னைய விவாகரத்துக்கு கையெழுத்துப் போடனும்னு சொல்றாரு அத்த" என்றவள் பரிதவிக்கும் கண்களுடன் அவரை ஏறெடுத்து பார்க்க,

இது போன்று எதுவும் நடக்க வாய்ப்பிருக்கிறது என்று ஏற்கனவே யூகித்து இருந்த ஸ்ரீ அவளை பார்த்தவாறே வேகமாக அவளை நோக்கி வர திவ்யா உதடுகள் நடுங்க மேலும்....

"அத்த நான் தப்பு பண்ணிட்டேன் அத்த.... ஆனால் அதுக்கு இது ரொம்ப பெரிய தண்டனை இல்லையா?" என்று பரிதாமாக வினவ,

ஸ்ரீயின் மனம் கனத்துப் போனது....

திருமண மண்டபம் வரை வந்த மணமகன் திடிரென்று மணமேடையில் இருந்து எழுந்து திருமணத்தை நிறுத்தியதுமே அவனைப் பற்றி முழுவதும் அறியாத பட்சத்திலேயே, அவனுடன் ஒரு நிமிடம் கூட வாழாத நிலையிலேயே வாழப் பிடிக்காமல் தூக்கில் தொங்க ஓடியவள் இந்த சின்ன பெண்.....

பிறப்பு முதலே அந்தஸ்து, வசதி, ஆணவம், ஆளுமை, அதிகாரம் என்ற விஷயங்களுக்கு முதன்மை கொடுத்து வந்த மகனை

58% 8:06 PM
https://drive.google.com/file



இவை எதற்கும் சற்றும் ஒத்து வராத திவ்யாவின் கழுத்தில் தாலிக் கட்ட சொல்லி எத்தனை பெரிய கேட்டை அவளுக்கு செய்திருக்கிறோம் என்று ஸ்ரீ உணர்ந்த இந்த நிமிடம் அவரின் உள்ளம் நடுங்கி மனம் சிதற துவங்கியது.....

அறியாத ஒருவனின் அவமதிப்பால் தன் உயிரை மாய்க்க துணிந்த இவள் இன்று மனதார கணவனாக அர்ஜூனை நினைத்து உள்ளத்தில் வாழ துவங்கியிருப்பவள் அவனின் இந்த முடிவை, உதாசீனத்தை, வெறுப்பை எங்கனம் தாங்குவாள்....

நினைக்கும் பொழுதே ஸ்ரீயின் இதயத்தில் யாரோ தூக்க முடியாத அளவிற்கு ஒரு பெரிய பாறாங்கல்லை தூக்கி வைத்து அழுத்துவது போல் மனம் அத்தனை பாரமாக இருக்க, மெல்ல திவ்யாவின் அருகில் நெருங்கி வந்தவர் அவளை சமாதானப் படுத்தும் பொருட்டு...

"திவ்யா.... அர்ஜூன் சொன்னதை பெரிசா எடுத்துக்காதடா... அவன் வேற ஒரு டென்ஷனில் இருக்கான்.... அது அவனுடைய பிஸினஸினால் வந்தது..... நீ எதையும் மனசில வச்சிக்காத.... போ, போய் குளித்து விட்டு கோலம் போடு" என்றவர் அவளின் முகத்தை கனிவோடு நோக்கிவிட்டு தன் அறைக்கு சென்றார்....

மாமியாரின் ஆறுதலான வார்த்தைகள் திவ்யாவின் புண்ணாகிப் போயிருந்த மனதிற்கு மருந்தாகவில்லை....

தன் கணவன் விடியும் வரை வீடு திரும்பாமல் பின் மது அருந்திவிட்டு தளர்ந்து தள்ளாடி நடந்து வந்ததைப் பார்த்த அந்த வினாடியே உடல் ஒரு முறை உணர்ச்சி மிகுதியால் நடுங்கியது...

58% 8:06 PM
https://drive.google.com/file



அவளைக் கண்டவுடன் புருவங்களை ஒரு முறை சுளித்து குற்றம் சாட்டும் பார்வையுடன் நெருப்பைக் கக்குவது போல் அவளை ஒரு சில நொடிகள் உறுத்து விழித்தவன் அவளிடமிருந்து ஒதுங்கி அகன்று படிகளில் ஏறிய அந்த நிமிடம் அவளின் இதயத்தை குறிப்பார்த்து ஏதோ கூர்மையாக பாய்ந்தது போல் வலித்தது...

ஆனால் இருந்தும் அவனின் கோபத்தின் அளவு புரியாத பேதைப் போல் அவனைப் பின் தொடர முனைய, தன் அறையின் வாயிலை அடைந்தவன் அவளை மேலும் வலிக்க செய்யும் நோக்கத்துடன் அவளின் முகம் நோக்கி "விவாகரத்து பத்திரத்தில் கையெழுத்து போட தயாராக இரு" என்று சொன்னது நெஞ்சை பிளக்கும் சத்தத்துடன் இடி இறங்கியது போல் இருந்தது....

மாடிப் படிகளின் கைப்பிடியை நடுங்கும் கரத்துடன் இறுக்கி பற்றி மெல்ல படி ஏறியவள் இன்னும் மஹா தன் அறையில் உறங்கிக் கொண்டிருப்பதை பார்த்து மௌனமாக குளியல் அறைக்குள் நுழைந்தவள் சில நிமிடங்கள் தன் கணவனின் வார்த்தைகள் தந்த அதிர்ச்சியின் விளைவாக அழும் சக்தியை இழந்து உணர்ச்சியற்ற கல்லாக சமைந்து நின்றிருந்தாள்..

குளியல் அறையின் கதவில் சாய்ந்திருந்தவள் மெல்ல நடந்து தண்ணீர் குழாயை திறக்க, தன்னை கட்டுப்படுத்த முடியாமல் குழாயை இறுக்கி பிடித்துக் கொண்டவளின் இதயத்தில் இடி போல் உணர்ச்சிகள் தாக்கியதால், உதடுகள் துடிக்க மனதில் இருந்த துக்கம் அழுகையாக வெளி வரத் துவங்க வெடித்து அழத் துவங்கினாள்....

ஜாதகம் பார்த்து பொருத்தம் பார்த்து பெற்றோர்களின் சம்மதத்துடன் நிச்சயிக்கப்பட்ட திருமணம் விதியின் வசத்தால் நடக்கவில்லை...

58% 8:06 PM
https://drive.google.com/file

அதே விதி எங்கிருந்தோ முன் பின் அறியாத தன் குடும்பத்தை, தன் தொழில் உலகத்தை தன் கைக்குள் அடக்கி வைத்திருந்த அதிகாரமிக்க ஒருவனை தன் காலடிக்கு அழைத்து வந்து, தன் வாழ்க்கைப் பயனத்தில் சரிபாதியாக பங்குக் கொள்ளப் போகும் துணைவனாக தன் கழுத்தில் திருமாங்கல்யத்தை கட்ட வைத்தது...

ஆனால் இன்றோ கொலுக்கொம்பில் இறுக்கி படற துடித்து காத்திருக்கும் தளிர் கொடியை எதிர்பாராத புயல் காற்று ஒன்று விசிறியடித்து சிதைக்கச் செய்ததைப் போல் இந்த திருமணமும் நிலைக்காதென்றே தோன்றியது....

கடவுள் இணைத்ததை மனிதன் (அர்ஜூன்) பிரிக்காதிருக்கட்டும்!!!!

விதி...... மனிதன் நிச்சயிக்கும் நிமிடங்களையும் அது மாற்றிவிடுகிறது....

அது உருவாக்கும் சம்பவங்களின் முடிவுகளையும் அதுவே நிர்ணயிக்கிறது....

விதியின் வழிகளை மனிதன் அறிய முடிவதில்லை.... மனிதன் வகுக்கும் எந்த திட்டங்களையும் அது மாற்றிவிடுகிறது...

அதனால் உண்டாகும் விபரீதங்களும் பல...

பாரமான மனதுடன் குளியல் அறைக்குள் சென்றவள் தன்னிலை நினைத்து மௌனமாக அழுது கரைந்தாள்...

58% 8:06 PM
https://drive.google.com/file
17



காலை ஒன்பது மணி அளவில் அலுவலகம் செல்வதற்கு என்று கிளம்பி கீழே இறங்கியவன் அவனுக்காக அந்நேரம் வரை ஹாலில் இருந்த ஸோஃபாவில் அமர்ந்து காத்திருந்த தந்தையைப் பார்த்ததும் தெரிந்து போனது அவர் என்ன கேட்கப் போகிறார் என்று...

"டாட், எனக்கு இன்னைக்கு நிறைய கமிட்மெண்ட்ஸ் இருக்கு.... நான் அப்புறம் உங்கிட்ட பேசுறேன்"

"இன்கம் டாக்ஸ் ரைடு பற்றி ஒன்னுமே பேசலையே அர்ஜுன்"

"டாட்... பிஸினஸ்மேனுக்கு இதெல்லாம் பெரிய விஷயமா? இதுல பேச ஒன்னும் இல்லை டாட்.... ஐ டுக் கேர் ஆஃப் இட் [I took care of it] "ஸீ யூ டாட் [See you dad] " என்று சொல்லி விட்டு அவரின் பதிலுக்கு கூட காத்திருக்காமல் காரை வேகமாக கிளப்பி சென்றுவிட்டான்...

சமையல் அறையில் இருந்த திவ்யாவிற்கு தன் கணவனின் குரல் கேட்க வேகமாக வெளியே ஓடி வந்தவள் அவன் அதை விட வேகமாக சென்று விட,

நெஞ்சை பிளந்துக் கொண்டு வெளியேறிய விம்மலின் சத்தம் தன் மாமனாருக்கு கேட்டு விடாமல் வாயைப் பொத்திக்கொண்டு ஓசையற்று அழுதவள் யாரும் தன்னை கண்டுக் கொள்ளாமல் இருக்க மீண்டும் சமையல் அறைக்குள் புகுந்தாள்.

இன்று அதிகாலை அர்ஜுன் திவ்யாவிடம் அவர்களின் விவாகரத்து பற்றி பேசியதை ஸ்ரீ மூலம் ஏற்கனவே அறிந்திருந்தார் பாலா..

8:07 PM 58%
https://drive.google.com/file



அதே சமயம் அர்ஜூனின் சொந்த விஷயத்தில், அதுவும் அவனின் திருமண வாழ்கை விஷயத்தில் தலையிட அவருக்கும் துணிவில்லை....

ஆனால் மனதில் எங்கோ ஒரு மூலையில் தன் மகன் தன் மனைவியை விவாகரத்து செய்யும் அளவிற்கு அவ்வளவு தரம் தாழ்ந்து போக மாட்டான் என்ற சிறு நம்பிக்கையும் இருந்தது அவருக்கு....

தன் மனதில் மூண்டிருந்த கோபம் முழுவதையும் அதி வேகமாக காரை செலுத்துவதில் காட்டிய அர்ஜூன் அலுவலகத்திற்குள் நுழைய, அவனின் அக்கினி கக்கும் விழிகளையும் கோபம் சூழ்ந்திருக்கும் முகத்தையும் கண்ட ஊழியர்களுக்கு யாரும் அவனை நெருங்காமல் இருப்பதே சாலச் சிறந்தது என்று தோன்றியது...

தன் அறைக்குள் நுழைந்தவன் மனதை இறுக்கிப் பிடித்து தன் ஆத்திரத்தையும் ஆங்காரத்தையும் சிறிதே ஒதுக்கி வைத்தவன் வேலைகளுக்குள் மூழ்க, ஆனால் காலையில் எழுந்ததில் இருந்தே மேலும் ஏதோ அசம்பாவிதங்கள் நடக்கப் போவது போல் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது.....

விதி இன்னும் தன் கரங்களை அவனின் வாழ்க்கையில் இருந்து இழுத்துக் கொள்ளவில்லை என்பதை சிறிது நேரத்திலேயே அர்ஜூன் புரிந்துக் கொண்டான்....

ஏற்கனவே இருக்கும் பிரச்சனைகளிடையே இன்னும் என்ன பிரச்சனை என்று யோசித்துக் கொண்டு இருக்கும் பொழுதே கதிர்

அர்ஜூனின் அறைக் கதவை தட்டாமலே, அனுமதிக் கேட்காமலே வேகமாக உள்ளே வந்தான்....

அவனின் அவசரத்தையும் படபடப்பையும் பார்த்த அர்ஜூன் ஒன்றும் பேசாமல் அவனே விஷயத்தை சொல்லட்டும் என்பது போல் அவனை உற்று நோக்க,

"சார், யு எஸ்ஸில் இருந்து வந்த ஷிப்மெண்ட்டில் ப்ராப்ளம் சார்" என்றவன் பிரச்சனைகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்க துவங்கினான்....

அர்ஜூன் எப்பொழுதும் தன் தனிப்பட்ட பிரச்சனைகளை குடும்பத்தில் நிகழும் நிகழ்வுகளை தொழிலோடு சம்பந்தப்படுத்தமாட்டான்...

தன் தனிப்பட்ட வாழ்க்கை வேறு தொழில் வேறு என்று இருப்பவன்.... ஆனால் இப்பொழுது அவன் திருமண வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த இந்த சஞ்சலமும் சலனமும் தான் அவனை சிறிதே அசைத்துப் பார்த்திருந்தது...

இன்று அதனையும் ஒதுக்கி வைக்க முடிவு செய்தவன் நிதானமாக....

"ஓகே கதிர்... நீங்க கஸ்டம்ஸ் ஆ:பிஸுக்கு நேரிலேயே போய் என்ன பிரச்சனைன்னு பாருங்க" என்றவன் யோசனையுடன் சுங்க வரி துறையில் பெரிய பதவி வகிக்கும் தன் நண்பனின் அலை பேசிக்கு அழைத்தான்....

58% 8:07 PM
https://drive.google.com/file



அர்ஜூனின் எண் அலை பேசியில் ஒளிர்ந்த அடுத்த விநாடியே அவன் அழைப்பை மறுமுனையில் எடுக்க...

"ஹாய் அஷோக்... இன்னைக்கு நம்ம ஷிப்மெண்ட் ஒன்னு யு எஸ்ஸில் இருந்து வந்திருக்கு.... அதில பிரச்சனைன்னு கஸ்டம்ஸில பிடிச்சி வச்சிருக்காங்காலாம்.... லைசன்ஸ், சர்டிபிக்கேட்ஸ் எல்லாம் கரெக்டா தான் இருக்கும்.... ப்ளஸ் இது ஒன்னும் என்னோட ஃபர்ஸ்ட் ஷிப்மெண்ட் இல்லையே? கொஞ்சம் என்ன என்று விசாரி" என்றான்..

"அர்ஜூன், நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்.... யூ டோண்ட் வொர்ரி"

"வெரி எக்ஸ்பென்ஸீவ் பார்ட்ஸ் அஷோக்... பல கோடிகள் மதிப்புள்ள பொருட்கள் அதில் இருக்கு... ஒரு நாள் என்னோட ஷிப்மெண்ட் யார்ட்ல [Yard] இருந்தா கூட எனக்கு லட்சக்கணக்குல செலவு.... அது மட்டும் இல்லாமல் கஸ்டம்ஸ் போட்டு தீட்டிறப் போறாங்க... ப்ளீஸ் டேக் கேர் ஆஃப் இட்" என்றவன் அழைப்பை துண்டித்து விட்டு தன்னுடைய செயலாளரை அழைத்து அன்றைய வேலைகளின் பட்டியல்களை தெரிவித்தான்....

பின் சேரில் இரு கைகளையும் தலைக்கு பின்னால் கோர்த்துக் கொண்டு சாய்ந்து உட்கார்ந்தவனின் நினைவுகள் என்னதான் நேற்று நடந்த வருமான வரி துறையின் சோதனையிலும், ராம் இண்டஸ்ட்ரீஸ் மேலும், இதோ இப்பொழுது புது பிரச்சனையாக வந்திருக்கும் சுங்க துறை பிரச்சனைகள் மேலும் இருந்தாலும்,

இன்று விடியற்காலை தான் தன் அறைக்குள் போகும் முன் கீழே அதிர்ச்சியுடனமும், கலங்கிய கண்களுடனும், அச்சதினால் நடுங்கும் உடலுடனும் திவ்யா அவனை பார்த்துக் கொண்டிருந்த காட்சியே மீண்டும் மீண்டும் அவனின் கண்களின் முன் வலம் வந்துக் கொண்டிருந்தது.....

57% 8:09 PM
https://drive.google.com/file 17



இருபத்து மூன்று வயதிலேயே தன் தாத்தாவின் தொழிற்களை கையில் எடுத்தவன்....

இது போன்ற எத்தனையோ இன்னல்களையும் எதிர்ப்புகளையும், தன் புத்தி கூர்மையாலும், அசாதாரண தைரியத்தாலும் துச்சமென சமாளித்தவன்....

தொழிலில் தன்னுடன் போட்டி போடுபவர்களையும் தன்னை எதிர்த்து நிற்பவர்களையும் அதிரடியாக அவன் அடக்கும் போது எமகாதகன் என்று பெயர் எடுத்திருந்தவன்.....

ஆதலால் இப்பொழுது நடக்கும் சிக்கல்களைப் பற்றி அவன் துளி அளவும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் வாழ்க்கையில் பெண்களையே அண்டாதவன்.... எப்பொழுதும் எந்த பெண்ணாலும் கவரப் படாதவன்....

அது எப்பேற்ப்பட்ட பேரழகியானாலும் சரி.... எப்படிப்பட்ட கோடிஸ்வரியானாலும் சரி...

அவன் இதயத்தில் இது வரை எந்த பெண்களாலும் சாரல் வீசியதில்லை...

ஆனால் முதன் முதலாக ஒரு சிறு பெண்ணிடம் தன் மனதை இழந்ததை நம்ப முடியாமல், அதுவும் தன் அந்தஸ்துக்கு மாறாக அவளிடம் இறங்கி வந்து அவளை வலிய அழைத்ததை நினைத்து

உள்ளுக்குள் புகைந்து தன் சிந்தனைகளை சிதைத்துக் கொண்டிருந்தான் அர்ஜூன்....

"எனக்கு வேண்டும் எனும் பொழுது என்னிடம் வராதவள் இனி அவளே என்னைத் தேடி வந்தாலும் எனக்கு வேண்டாம்.... நான் அழைத்தும் என்னை ஒதுக்கியவள் இனி என் காலடியில் வீழ்ந்துக் கெஞ்சினாலும் எனக்கு அவள் தேவை இல்லை"

என்று உறுதியாக முடிவெடுத்தவன் மிகவும் சிரமப்பட்டே அவளின் நினைவுகளில் இருந்து தன் மனதை வலுகட்டாயமாக பிடுங்கி வேலையில் திருப்பினான்.

அங்கு வீட்டிலோ நேற்று திவ்யாவிற்கும் அர்ஜூனிற்கும் இடையில் நடந்த பிரச்சனையாலும், இன்று காலை அர்ஜூனின் விவாகரத்து பற்றிய பேச்சினாலும் மனம் அமைதியில்லாமல் இருந்த ஸ்ரீ மன அசதியில் சோபாவில் சாய்ந்தவாறு அமர்ந்திருக்க,

கல்லூரியில் இருந்து வந்த அருண் தன் அன்னையின் நிலையைப் பார்த்தவன் அருகில் வந்து மெதுவாக அவரை அழைத்தான்...

கண்களை மெல்ல திறந்து அருணைப் பார்த்த ஸ்ரீ,

"என்ன அருண், சீக்கிரம் வந்திட்ட?" என்க,

"எக்ஸாம்ஸ் நடக்குது மாம்.... காலையில் ஒரு எக்ஸாம் முடிஞ்சுது.... கொஞ்சம் ப்ரேக் வேணும்னு தோனிச்சு..... அதான் சீக்கிரம் கிளம்பி வந்து விட்டேன்"

8:09 PM 57%
https://drive.google.com/file



"சரி.... இரு லஞ்ச் எடுத்து வைக்கிறேன்" என்று அவர் எழ,

"மாம்.... ஆர் யூ ஆல்ரைட்? யூ டோண்ட் லுக் குட் [[Mom, Are you alright? You don't look good]" என்றான் யோசனையுடன்.

"எனக்கு ஒன்னும் இல்ல அருண்..... கொஞ்சம் தலை சுத்துற மாதிரி இருந்திச்சு.... அதான் வந்து படுத்துட்டேன்" என்க,

திடுக்கிட்ட அருண்...

"மாம், நீங்க எப்போதும் இது மாதிரி இருந்ததில்லையே..... நம்ம கம்பெனி ரைட் பத்தி நினைச்சிட்டு இருந்தீங்களா? அண்ணா தான் எல்லாத்தையும் பார்த்துக்கிறாங்களே...... அவங்க இருக்கும் போது என்ன கவலை??"

"அதெல்லாம் ஒன்னும் இல்ல அருண்.... நீ வா சாப்பாடு எடுத்து வைக்கிறேன்" என்றவரை ஓய்வு எடுக்க சொன்னவன் திவ்யாவை அழைத்து தனக்கு உணவு எடுத்து வைக்க சொன்னவனின் எண்ணமெல்லாம் ஸ்ரீயின் முகவாட்டத்திலேயும் அவரின் மெலிந்த பேச்சிலேயுமே இருந்தது....

அங்கு அலுவலகத்தில் கதிரின் மூலம் ராம் இன்டஸ்ட்ரீஸில் இருந்து யார் தனக்கு பிரச்சனை செய்வது என்று தெரிய வர, கதிரிடம் அவர்களின் கம்பெனி வாடிக்கையாளர் விவரங்களை கொடுத்து எவ்வாறு இதற்கு தொழில் ரீதியாக அடிக் கொடுப்பது என்று ஆலோசனை செய்த அர்ஜூன் அதற்கான திட்டத்தையும் கொடுத்தவன்.....

"கதிர்.... நம்முடைய பெயரோ, கம்பெனியோட பெயரோ வெளியே வரக் கூடாது.... ஆனால் ராமசந்திரனுக்கு மட்டும் இது நாம்

தான் செய்தோம் என்று தெரியனும்.... ஆனால் நம்மை எதிர்த்து எதுவும் செய்ய முடியாமல் அவனோட கையயும் காலையும் கட்டி இருக்கனும்..... எங்கும் லீக் ஆகாமல் பாத்துக்கங்க" என்றவன்,

அமெரிக்க ஏற்றுமதி பிரச்சனையை கையில் எடுக்க ஆரம்பித்தான்....

நேரம் போவதே தெரியாமல் சிக்கல்களை ஆராய்வதிலும், அதனை தீர்ப்பதிலேயுமே கவனத்தை செலுத்தி இருக்க, கூடவே தலை வலியும் சேர்ந்து வர அப்பொழுது தான் கவனித்தான் மணி எட்டு ஆகிவிட்டதை....

ஏற்கனவே நேற்று இரவு முழுவதும் தூக்கம் இல்லை...

இரவு முழுவதும் மது அருந்தியது வேறு காலையில் இருந்தே தலைப் பாரமாக இருப்பது போல் இருந்தது...

இப்பொழுது இந்த தலை வலி வேற என்று எரிச்சல் அடைந்தவன் கதிரையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டு தானும் கிளம்பினான்.

வழியெல்லாம் தொழிற்களையும், சிக்கல்களையும், திவ்யாவையும் பற்றி மாற்றி மாற்றி சிந்தித்தவன் காரை செலுத்துவதில் கவனத்தை செலுத்தாமல் இருக்க, ஒரு திருப்பத்தில் எதிரில் வந்த லாரியை கவனியாமல் வேகமாக காரைத் திருப்பியவன் சட்டென்று சுதாரித்து காரை இடப் பக்கமாக திருப்ப, கார் எதிலோ இடித்ததும்...

"ஐயோ" என்ற சத்தத்தை கேட்டு காரை சடாரென்று ப்ரேக் போட்டு நிறுத்தினான்......

57% 8:09 PM
https://drive.google.com/file

அங்கு இருந்த சிறிய டீ கடையின் வாசலில் போட்டிருந்த பெஞ்சில் கார் இடித்து நிற்க,

அதில் உட்கார்ந்திருந்த ஒருவன் மேல் சிறிதே அடிப்பட்டாலும் தன் உயிரே போய்விட்டது போல் கத்தினான் அவன்.... அவன் அலறும் சத்தம் கார் அவனை இடிக்கும் போது வரவில்லை....

இடித்து சில நிமிடங்கள் கழித்தே அவன் கத்தினான்...

பின் கார் இடிக்கும் பொழுதோ அல்லது அடுத்த சில நிமிடங்களோ அவன் காரைப் பார்க்கவே இல்லையே....

ஆனால் பார்த்தவுடன் தான் தெரிந்தது தன்னை இடித்தது பல கோடிகள் பெறும் வெளி நாட்டுக் கார் என்று...

இது போன்ற சந்தர்ப்பம் அவனுக்கு இனி எப்பொழுது கிடைக்குமோ???

"குய்யோ! முய்யோ!" என்று அவன் கத்த, உலகத்தில் வேறு பிரச்சனைகளே இல்லை இது தான் தங்களுக்கு ரொம்பவும் முக்கியம் என்பது போல் அது வரை வேகமாய் போய் கொண்டிருந்த சின்ன வாகனங்களும், பொது மக்களும் வேடிக்கை பார்க்க கூட,

அர்ஜூனிற்கு தலையில் அடித்துக் கொள்ளலாம் போல் இருந்தது....

57% 8:10 PM
https://drive.google.com/file

இருக்கும் பிரச்சனைகளில் இது வேற தேவை இல்லாமல் என்று....

கடுங்கோபத்துடன் காரில் இருந்து புயல் போல் இறங்கியவன் அவன் இன்னும் கத்திக் கொண்டிருப்பதைக் கண்டு அவனருகில் நெருங்கி....

"கத்துனது போதும்.... என் கூட வா... நானே பெரிய ஹாஸ்பிட்டலுக்கு கூட்டிட்டு போறேன்" என்றான்...

ஏனெனில் வண்டி ஓட்டுபவனுக்கு தெரியாதா தான் எதன் மீதி எந்த அளவிற்கு மோதினோம் என்று.... அதுவும் அர்ஜூனிற்கு நன்றாக தெரியும் அந்த ஆள் எதற்கு இந்த அளவிற்கு கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறான் என்று.

கண்டிப்பாக இது பணத்திற்கு தான்... ஆனால் உடனே பணத்தை எடுத்து நீட்டினால் இந்த பிரச்சனை இப்பொழுது முடியாது....

அதனால் எடுத்தவுடன் "நான் ஹாஸ்பிட்டலுக்கு கூட்டிட்டு போறேன்" என்று சொன்னால் தன் குட்டு வெளிப்பட்டு விடுமே என்று நிச்சயம் அவன் உடனே இறங்கி வருவான் என்று நினைத்தவன் மருத்துவமனைக்கு அழைக்க,

சுதாரித்த அந்த ஆள்,

"அதெல்லாம் நீ ஒன்னும் கூட்டிட்டுப் போக வேண்டாம்.... நானே போய்க்கிறேன்" என்றான்...

57% 8:10 PM
https://drive.google.com/file

சட்டென்று தன்னுடைய வாலட்டில் இருந்து அர்ஜூன் பணத்தை எடுத்து கொடுக்க, வாழ்நாளில் இவ்வளவு பணத்தை முதல் முறையாக பார்ப்பவன் போலும்..

வாயெல்லாம் பல்லாக இளித்துக் கொண்டு பணத்தை வாங்கியவன்,

"பாத்துப் போ சார்... வேற எங்காவது மறுபடியும் போய் இடிச்சிட போறே" என்று இலவசமாக ஒரு அறிவுரையும் கொடுத்துவிட்டே போனான்.

ஏற்கனவே தன் மனைவியின் மேல் இருந்த காதல் பலிக்காதது போல் தோன்றியதில் குறிப்பார்த்து ஈட்டியால் குத்தி கிழிக்கப்பட்ட இதயத்தை சமன்படுத்த முடியாமல் சுயநினைவை அடியோடு இழக்கும் நிலைக்கு உலையாக கொதித்துக் கொண்டிருந்தது அவன் உள்ளம்...

இதில் இந்த மோதலும் அதற்கு அந்த ஆளின் காட்டுக் கத்தலும் கபட நாடகமும் அர்ஜூனின் ஆத்திரத்தை உச்சக்கட்டத்திற்கு கொண்டு சென்றிருந்தது...

மேற்கொண்டு அவனின் இளிப்பு வேறு எரிச்சலை கிளப்ப...

"இருந்த தலைவலியில் இப்பொழுது இது வேற!" என்று நினைத்த அர்ஜூன் முன்பை விட விரைவாக காரை செலுத்த,

நேற்றைப் போல் இன்று இரவும் தன் கணவன் மது அருந்தி வருவானோ என்று நினைத்துக் கொண்டு திவ்யா கலங்கி இருக்க புயலென உக்கிரத்துடன் உள்ளே நுழைந்தான் அர்ஜூன்....

57% 8:11 PM
https://drive.google.com/file



## மலரினும் மெல்லியவள்!

### பாகம் -19

வீட்டிற்குள் நுழைந்தவன் ஹாலில் அமர்ந்திருந்த பெற்றோரையும், மற்றும் அருண், மஹாவைப் பார்த்தவன் அவர்களுடன் பேசாமல் மாடிக்கு ஏற, அவனின் கலைந்த தோற்றத்தையும் களைத்த முகத்தையும் பார்த்த பாலா தான் அவனை அழைத்தார்....

"அர்ஜூன், இங்க வந்து கொஞ்சம் உட்காருப்பா..... உன்னுடன் கொஞ்சம் பேசனும்"

தன் அறைக்கு செல்ல படிகளில் ஏறிக் கொண்டிருந்தவன் அவரின் அழைப்பில் திரும்பி பார்த்து....

"டாட்.... ஐ ஆம் வெரி டயர்ட் டுடே... ஷேல் வி டாக் லேட்டர் [I am very today, shall we talk later?] " என்ற மகனை வாஞ்சையுடன் பார்த்த ஸ்ரீ,

"கொஞ்சம் நேரம் இங்க உட்கார் அர்ஜூன்" என்றார்.....

ஆனால் இன்னும் சிறிது நேரத்தில் நடக்க இருக்கும் களேபரம் தெரியாமல்.....

தன் அன்னை சொன்னதும் மறுக்க முடியாமல் மெதுவே கீழ் இறங்கி வந்தவன் தொப்பென்று ஸோஃபாவில் சாய்ந்து அமர, அவன்

8:11 PM

https://drive.google.com/file



அமர்ந்த விதத்திலேயே ஸ்ரீக்கு தெரிந்து போனது தங்கள் மகனின் களைப்பும், அவன் மனதை அரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளும்.....

அமர்ந்தவன் எதுவும் பேசாமல் தலையைப் பிடித்தவாறே ஸோ.:பாவில் சாய்ந்து இருக்க, ஒரு அன்னையாக மகனின் மன சஞ்சலத்தையும், வேதனையும் அறிந்தவருக்கு உள்ளம் கலங்கி போனது...

அவருக்கு தெரியும் அர்ஜூனின் இப்பொழுதைய நிலைமை அவனின் தொழிற்களினால் வந்தது இல்லை என்று....

அவனை அறியாமலேயே அவன் மனமும் புத்தியும் தன்னுடைய திருமண வாழ்க்கையில் அடிப்பட்டு தோற்றுவிட்டதாக போட்டிப் போட்டுக் கொண்டு அவனை பாடாய் படுத்திக் கொண்டிருக்கிறது என்பதனை அவரும் ஆழ்ந்து உணர்ந்திருந்தார்...

பின் இந்த உலகத்திலேயே அர்ஜூனை நன்கு புரிந்துக் கொண்டவர், அவனின் ஒவ்வொரு செயல்களுக்கும், பார்வைக்கும், சொல்லிற்கும் முழுமையான, உண்மையான அர்த்தங்களை உணர்ந்து இருப்பவர் அவர் ஒருவரே!!!!

அவருக்கு தெரியாதா இந்த நிமிடத்தில் அவனின் அடி மனதிற்குள் ஓடிக் கொண்டிருக்கும் எண்ணங்கள் என்னென்வென்பது....

அவனின் கஷ்டத்தை உணர்ந்த ஸ்ரீ சமையல் அறையின் பக்க திரும்பி...

"அல்லி, கொஞ்சம் டீ போட்டு கொண்டு வாம்மா" என்றார்....

8:11 PM 57%

https://drive.google.com/file



திவ்யா சமையல் அறைக்குள் அல்லியோடு தான் இருந்தாள்...

ஆனால் அர்ஜுன் இருக்கும் இந்த நிலைமையில், விவாகரத்து பற்றி வேறு அவன் பேசி இருக்கும் இந்த நாளில் திவ்யா அவன் முன் வந்தால் நிச்சயம் ஏற்கனவே வெம்பி போய் வேதனையில் இருக்கும் அந்த சின்ன பெண்ணை ஈட்டி போன்ற வார்த்தைகளில் குத்தி கிழித்துவிடுவான் என்று தான் அவர் திவ்யாவை அழைக்காமல் அல்லியை அழைத்திருந்தார்.....

ஆனால் விதியுடன் போட்டியிட்டு யாரால் ஜெயிக்க முடியும்?? விதி முழு பலத்துடன் திவ்யாவின் வாழ்க்கையில் அவளுடன் போராடத் துவங்கியிருந்தது....

ஸ்ரீ அழைக்கும் பொழுது அல்லி சமையல் வேலையில் ஈடுபட்டிருந்ததால், திவ்யாவைத் திரும்பி பார்க்க....

"நீ வேலையை பாரு அல்லி.... நான் கொண்டு போறேன்" என்றவள் தன் மாமியார் தன் கணவனுக்கு தான் தேநீர் போடச் சொல்கிறார் என்று தெரியாமல் "இந்நேரத்தில் எதற்கு டீ?" என்று யோசித்தவள் காலையில் இருந்து ஸ்ரீயின் முகம் சரியில்லாததால் அவருக்காகத் தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டு தேநீர் போடத் துவங்கினாள்...

முதலில் தன் மாமியாருக்கு மட்டும் போட ஆரம்பித்தவள் பின்னர் எதற்கும் இருக்கட்டுமே என்று மாமனாருக்கும், கொழுந்தனாருக்கும் சேர்த்து தேநீர் தயாரித்தவள் ஒரு தட்டில் தேநீர் கோப்பைகளை வைத்து எடுத்து வர அப்பொழுது தான் கவனித்தாள் தன் கணவன் அங்கு அமர்ந்திருப்பதை...

57% 8:11 PM
https://drive.google.com/file

கடந்த சில வாரங்களாக திவ்யாவின் பெயரைக் கேட்டாலே மகிழ்ச்சியில் தத்தளித்த அவனது காதல் மனது, திவ்யாவின் கொலுசுகளின் கீர்த்தனைகளைக் கேட்டாலே அதன் இசையில் கட்டவிழ்த்து சிலிர்த்து எழுந்த உணர்வுகள், அவளின் எழில் முகத்தை கண்டதும் விழிகளிலும் இதயத்திலும் புரண்டு எழுந்திருந்த பரவசம்....

அத்தனையும் இன்று அவளை தேநீர் கோப்பைகளுடன் கண்டப் பொழுது சென்ற இடம் தெரியாமல் காணாமல் போனது....

அவளைப் பார்த்த அந்த விநாடி கோபத்தில் உடல் சிலிர்க்க, எந்நேரமும் வெடிக்கும் அக்கினி மலையின் நிலையில் இருந்த மனதை தன்னால் முடிந்த மட்டும் கட்டுக்குள் வைக்க முயற்சித்து கொண்டிருந்தான்.....

இத்தனைக்கும் அவள் அப்படி ஒன்றும் தவறு செய்துவிடவில்லை....

ஆனால் அர்ஜுனின் சூழ்நிலை, அவனுக்கு இன்றும் நேற்றும் அலுவலகத்தில் நடந்திருந்த தடங்கள்கள், எப்பொழுதுமே ஒரு அளவோடு பார்ட்டி போன்ற நேரங்களில் மது அருந்தி பழகியிருந்தவன் நேற்று விடிய விடிய அளவுக்கு அதிகமாக குடித்திருந்ததால் தலையே வெடித்துவிடும் அளவிற்கு இருந்த வலி....

இதில் தன் மனைவியின் ஒதுக்கமும் அவமதிப்பும் போட்டிப்போட்டிக் கொண்டு அவனை உலுக்கி எடுக்க சீற்றம் அவன் கண்களை மறைத்து இருந்தது.....

அர்ஜுனின் மன நிலை இவ்வாறு இருந்தது என்றால் திவ்யாவின் நிலைமையோ சொற்களுக்கு அப்பாற்பட்டு இருந்தது...

57% 8:11 PM
https://drive.google.com/file

மாமியார் மாமனார் மற்றும் கொழுந்தனாரை மட்டும் எதிர்பார்த்திருந்தவளுக்கு தன் கணவனையும் அங்கு கண்டதும் சொல்லி வைத்தார் போல உடல் முழுவதும் உதறெலுடுக்க ஆரம்பித்தது...

இதில் அவன் தன்னைக் கண்டதும் அவன் முகத்தில் தெரிந்த மாற்றமும், ருத்ரமும் அவளின் கால்களை மரத்துப் போகச் செய்ய சில விநாடிகள் நின்ற இடத்திலேயே நிற்க அவளின் தடுமாற்றத்தைக் கண்டவன் "ம்ப்ச்" என்று சலித்துக் கொண்டு தன் இடது கையை ஸோஃபாவின் கைப்பிடியில் ஊன்றியிருந்தவாறே மேலும் தலையை அழுத்தி பிடித்தவாறு முகத்தை திருப்பிக் கொண்டான்...

கணவனின் இந்த செய்கையில் அவன் மனதில் குடியிருந்த வெறுப்பின் உயரம் தெரிய பரிதாபமாக ஸ்ரீயைத் திரும்பி பார்க்க அவளின் நிலையை உணர்ந்தவர் "வா" என்பது போல் தலை அசைத்தார்....

"வேறு வழியில்லை.... கொண்டு வந்த டீயை அவர்களுக்கு கொடுத்து தான் ஆக வேண்டும்... ஆனால் கால்கள் மரத்துப் போய், கைகள் வேறு இந்த நடுங்கு நடுங்குகிறதே... இதில் கீழே போடாமல் டீயை அவரிடம் கொடுக்க வேண்டுமே" என்ற எண்ணம் வர, அந்த எண்ணமே அவள் கைகளின் நடுக்கத்தை மேலும் அதிகரித்தது....

மனதில் இருந்த கலக்கத்தையும் மீறி கால்களின் தடுமாற்றத்தை சிரமத்துடன் மறைக்க முயற்சி செய்தவாறே மெல்ல நடந்து வந்தவள் அர்ஜூனின் அருகில் வரும் பொழுது விதி தன் கரத்தை அழுத்தமாக அவளின் மேல் பதித்தது போல் சரியாக அவளின் புடவை தடுக்க, அப்படியே வைத்திருந்த தேநீர் தட்டை அவன் மீது தவற விட்டாள் இந்த நிமிடத்தில் அவன் மனதில் வெறுப்பை மட்டுமே கிளறியிருந்த அவன் மனைவி....

57% 8:11 PM
https://drive.google.com/file



ஏற்கனவே கொந்தளித்துக் கொண்டிருந்த உள்ளம், சமாதானமற்ற புத்தி, உள்ளே எழுந்த உணர்ச்சிகளின் விளைவாக உள்ளூர அவமானத்தால் குன்றிக் கொண்டிருந்த மனம் இதில் சூடான தேநீர் வேறு ஊற்றியதால் இகழ்ச்சியும் ஆத்திரமும் கலந்த பார்வையை ஒரு விநாடி அவள் மீது வீசியவன் தன் பொறுமையை இழந்து தன்னிலை மறந்தான்....

திவ்யா தேநீரை அவன் மீது தவறவிட்ட அந்த விநாடியே ஸ்ரீயும் மற்றவர்களும் ஸோஃபாவில் இருந்து எழுந்திருக்க, அதற்குள் "பளார்" என்ற சத்தம் மட்டும் கேட்டது....

இடி இறங்கியது போல் அர்ஜூனின் கை திவ்யாவின் கன்னத்தை பதம் பார்க்க, விழுந்த அறையில் தளிர் மேனியவள் நிலைத் தடுமாறி கன்னத்தை பிடித்துக் கொண்டே தொப்பென்று அருகில் இருந்த ஸோஃபாவில் விழுந்தாள்.

சத்தத்தில் அல்லியும் சமையல் அறையில் இருந்து வெளிவந்து எட்டிப் பார்க்க, அங்கு கூடியிருந்த அனைவருக்கும் திவ்யா உட்பட நடந்து முடிந்த சம்பவம் புரிய ஒரு சில விநாடிகள் பிடித்தது...

புரிந்ததும் அவனின் வலுவான கரத்தின் பலத்தால் கன்னம் விண்விண்ணென்று வலிக்க, தன் மாமனார், கொழுந்தனார் முன் தன் கணவன் தன்னை அறைந்ததை தாங்க இயலாதவளாக விழிகளில் கண்ணீர் ஆறாக பெருக்கெடுக்க மேனி நடுங்க தலை குனிந்து அமர்ந்திருந்தவளுக்கு, தன் பாதத்தின் அடியில் இருந்த பூமி அப்படியே தன்னை உள்ளிழுத்துக் கொள்ளாதா என்றிருந்தது.....

தன் மீது என்ன தான் தவறு இருந்தாலும் அதற்காக இப்படியா? அதுவும் இத்தனை பேருக்கு முன்னா? என்று ஸ்தம்பித்து சிலையென அமர்ந்திருந்தவள் அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்காமல் தன் அறைக்கு போக எத்தனிக்க....

8:11 PM 57%

https://drive.google.com/file

"எங்கடி போற?" என்று சிங்கம் போல் கர்ஜித்தவனின் குரல் அவளின் கால்களை இறுக்க கட்டி வைத்தது போல் அதற்கு மேல் ஒரு அடி எடுத்து வைக்க விடவில்லை.....

அதிர்ச்சியான இந்த நிகழ்வு நடந்து சில நிமிடங்கள் ஆன நிலையில் நிலைமையின் விபரீதம் புரிந்த ஸ்ரீ...

"அர்ஜூன், என்ன இது?, மிருகத்தனமா நடந்துக்கிற!!!" என்று கத்த....

அர்ஜூனின் வாயில் இருந்த வந்த அந்த அதிர்ச்சிகரமான சொற்கள் திவ்யாவை மூர்ச்சையுற்று மயங்கிப் போகும் நிலைக்கு கொண்டு சென்றது....

"மாம்.... இதெல்லாம் உங்களால வந்தது..... உங்க ஃப்ரெண்ட் பொண்ணுன்ன உடனே என் வாழ்க்கை பாழானாலும் பரவாயில்லை என்று இதோ, இவளுக்கு வாழ்க்கை கொடுக்கனும்னு யோசிச்சிங்கீங்களே..... கொஞ்சமாவது என்னை பத்தி யோசிச்சீங்களா? இவள கட்டிக்கிற அளவுக்கு அப்படி என்ன என் ஸ்டேட்டஸ் தாழ்ந்து போயிடுச்சு..... இவளுக்கும் கோடிஸ்வர மாப்பிள்ளைக் கிடைச்சதும் தாலி கட்ட வந்தவன் விட்டுட்டு போன வருத்தம் கூட இல்லாமல் உடனே என்னைய கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சுட்டா... இதுவே ஒரு வேளை நான் இவ்வளவு வசதியா இல்லாமல் இருந்தா என் கையால தாலி வாங்க சம்மதிச்சு இருப்பாளா?" என்று ஏதோ எரிமலைக்குள்ளிருந்து வெடித்து கிளம்பும் அக்கினித் துண்டுகளை போலவே வெளிவந்தன அவன் உதிர்த்த ஒவ்வொரு சொற்களும்....

நெஞ்சை பிளக்கும் வார்த்தைகளை அவன் உதிர்த்த பொழுது உடல் ஒரு முறை உணர்ச்சியால் நடுங்க அதிர்ச்சி தரும் அவனின்

8:12 PM
https://drive.google.com/file

வார்த்தைகள் சத்தமில்லாத மின்னல் போன்று மௌனமாக அவளின் மெல்லிய உள்ளத்தில் குத்தி இறங்க, அவன் கன்னத்தில் அறைந்ததே தெறித்து வலித்துக் கொண்டிருக்க, இப்பொழுது வார்த்தைகளால் மலரினும் மெல்லியவளின் பூப் போன்ற இதயத்தை ரணமாக்கிக் கொண்டிருந்தான் அவளின் காதல் கணவன்....

சரமாரியாய் தாக்கிய அவனின் வார்த்தை தாக்குதலில் உள்ளமும் உடலும் அடிப்பட்ட புழுவைப் போல் துடித்தவளின் கண்களில் மட்டும் நிற்காமல் கண்ணீர் வழிந்துக் கொண்டிருந்தது....

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்ற பழமொழியைப் போல் பிடித்தமில்லாமலேயே தாலியில் மூன்றாவது முடிச்சையும் தானேப் போட்டு தன் வாழ்க்கையை சரி பாதியாக பிரித்துக் கொடுத்த அவள் கணவன் தன் இதய துடிப்பே தன் மனையாள் தான் என்று இந்த நிமிடம் உணராமல் அவளை துடிக்க வைத்தான் மேலும் அவன் கக்கிய அனலைப் போன்ற வார்த்தைகளால்....

"வேலைக்காரியா வச்சுக்க வேண்டியவள எனக்கு சமமா நினைச்சு மருமகளா கொண்டு வந்தீங்க... என்னோட தகுதிக்கு உங்களால இவளத் தான் என்னோட மனைவியா கொண்டு வர முடிஞ்சுதா? அப்படி நான் என்ன தரம் தாழ்ந்துப் போய்ட்டேன்..... எத்தனை தடவை சொன்னேன்... இந்த கல்யாணம் வேண்டாம் வீட்டுக்கு போயிடலாம்னு... கேட்டீங்களா? இவள் இந்த வீட்டில் காலடி எடுத்து வச்சதிலிருந்து என்னோட நிம்மதி பறிப்போயிடுச்சு.... இனியும் இவ இங்க இருந்தான்னா அப்புறம் நீங்க என்னைய மறந்து விட வேண்டியது தான்.... அருண் உங்க எல்லா பிஸினஸையும் பார்த்துக்கட்டும்.... என்னைய ஆள விட்டுருங்க" என்றவன் திரும்பியும் பார்க்காமல் மாடிப்படியின் அருகில் நின்றிருந்தவளின் மீது எங்கு தன் உடல் உரச நேரிடுமோ என்பது போல் ஒதுங்கி படிகளில் ஏறியவன் அந்த வீடே அதிரும்படி படாரென்று தன் அறைக் கதவை சாத்தினான்.

8:12 PM 57%
https://drive.google.com/file



அவன் சென்று விட்டான்... ஆனால் அவனின் கொடிய பாம்பின் விஷம் போன்ற வார்த்தைகள் இன்னும் அங்கு எதிரொலித்துக் கொண்டே இருப்பது போல் இருந்தது திவ்யாவிற்கு......

உணர்ச்சி அற்ற கல்லாக சிறிது நேரம் படிகளின் அருகில் நின்றிருந்தவளுக்கு மூச்சு அடைத்து மயங்கி விழுந்துவிடுவது போல் இருக்க, எதுவும் சொல்லாமல் தன் அறைக்கு செல்ல படிகளில் ஏற...

"திவ்யா, ப்ளீஸ் டா... கொஞ்சம் இரு.... போகாத..." என்று தடுத்த ஸ்ரீயின் வார்த்தைகளில் அவள் நடை நின்றது...

அவளின் அருகே வந்தவர்....

"திவ்யா..... அவன் ஏதோ கோபத்தில பேசிட்டான்... அவனுக்கு உன் மேல கோபம் இல்லைடா... இரண்டு நாளா ஆ:பிஸில் அவனுக்கு ஏகப்பட்ட பிரச்சனை... அதத் தான் இப்படி உன் கிட்ட காட்டிட்டு போய்ட்டான்" என்று அவர் சொன்ன வார்த்தைகளில் எதுவுமே அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லை.....

அவரை திரும்பி பார்த்தவளின் கண்களில் வலிக்க வலிக்க தன் கணவன் வார்த்தைகளால் தன் இதயத்தில் அடித்த வலியே தெரிந்தது... அத்தனை துக்கத்திலும் ஒரு விரக்தி புன்னகை மட்டுமே சிந்தியவள் மெதுவே படிகளில் ஏறி தன் அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டாள்....

ஸ்ரீக்கும் தெரியும் அவளின் புன்சிரிப்பு அவள் புறத்தில் பட்ட வலியினால் வந்த வேதனையால் அல்ல, அவளது இதயத்தின் பட்ட வலியினால் வந்தது என்று....

8:12 PM 57%
https://drive.google.com/file



அவளின் கலங்கிய முகமும் நீர் நிறைந்த பார்வையும் தன்னை ஏதோ குற்றம் சாட்டுவது போல் உணர்த்த முதன் முறையாக தான் செய்தது தவறோ என்று ஸ்ரீ துடித்து உணர்ந்த அந்த நொடி அவரின் நெஞ்சில் நெருஞ்சி முள் போல் எதுவோ சுருக்கென்று குத்தியது...

இந்த திருமணம் எதிர்பாராத விதமாக நடந்திருந்தாலும் எப்படியும் இருவருக்குள்ளும் ஒரு புரிதல் வரும்... இருவரும் மகிழ்ச்சியாக வாழப் போகிறார்கள் என்று அவர் கட்டியிருந்த கனவுக் கோட்டை தன் கண்முன்னே தரை மட்டமாகி கொண்டு இருப்பதை கண்டவரின் இதயத்தில் தாங்கமுடியாத ஒரு வலி தோன்றியது....

ஏற்கனவே அர்ஜூனின் அராஜகத்தாலும் கொடிய வார்த்தைகளாலும் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த அருணும், பாலாவும், மஹாவும் அதுவரை எதற்கும் கலங்காத, சாமான்மயமாக எந்த விஷயத்திற்கும் மனம் நெகிழாதவரான ஸ்ரீயின் கண்களிலும் நீரித்துளிகள் பளபளப்பத்ததைக் கண்டு கலங்கி போயினர்...

ஒருவருக்கும் இரவு உணவு அருந்தக் கூட தோன்றாமல் அவரவர்களின் அறைக்கு செல்ல, தன் அறைக்கு வந்த ஸ்ரீ தன் கணவரிடம் கூட பேசாமல் அமைதியாக இருந்தவர் தலை சாய்ந்து தலையனையில் படுத்து கண்களை மூடிக் கொண்டார்...

மனைவியின் இந்த அமைதி பாலாவிற்கு அச்சத்தையே கிளறியிது....

ஸ்ரீயின் அருகில் அமர்ந்தவர்,

"என்னம்மா.... என்னாச்சு?" என்க,

57% 8:12 PM
https://drive.google.com/file

கண்களை திறந்துப் பார்த்தவர்,

"நான் தப்பு பண்ணிட்டேங்க.... இரண்டு சின்ன சிறுசுங்க வாழ்க்கைய வினாக்கிட்டேன்" என்றார் கலங்கிய கண்களுடன்...

அவரை தன் தோளில் சாய்த்துக் கொண்ட பாலா,

"இல்லம்மா, நீ ஒன்னும் தப்பு பண்ணலை.... நீ திவ்யாவிடம் சொன்ன மாதிரி இரண்டு நாளா அவனுக்கு ஏகப்பட்ட பிரச்சனைகள்... அவன் பிஸினஸில் எத்தனையோ பிரச்சனைகளை ஃபேஸ் பண்ணியிருக்கான்... அத கொஞ்சம் கூட பயமோ தயக்கமோ இல்லாமல் தனியாளா நின்னு சரி பண்ணியிருக்கான்.... ஆனால் அந்த மாதிரி நேரங்களில் அவன் சில சமயம் விட்டிற்கே கூட வராமல் இருந்திருக்கான்.... அது உனக்கே தெரியும்... அப்படியே வந்தாலும் அவன் தனிமையில் தானே இருப்பான்.... பிரச்சனைகளை யார்கிட்டேயும் ஷேர் பண்ணாம தானே தீர்க்கப் பார்ப்பான்... அது தானே நம்ம அர்ஜூன்? இன்னைக்கு ஏதோ மனைவிங்கிற உரிமையில திவ்யாவிடம் தன் கோபத்தைக் காட்டிட்டான்... நான் நாளைக்கு அவனிடம் பேசிறேன்... அவன் எல்லாவற்றையும் தன் தோளில் தானே சுமக்கனும்னு அவசியம் இல்லை.... நாமெல்லாம் எதுக்கு இருக்கோம்.... நீ மனச போட்டு குழப்பிக் கொள்ளாமல் படுத்து தூங்க" என்று சொன்னவர்,

தன் மனைவியின் தலையை கோதி விட, கண்களை மூடியிருந்த ஸ்ரீயின் நினைவில் அதிர்ந்த முகத்துடனும், சொல்லொன்னா வலியுடனும், ஊற்றாக பெருக்கெடுத்த நீருடனும் திவ்யா அவரை பார்த்திருந்த காட்சியே அலை போல் வந்துக் கொண்டிருந்தது.

அங்கு தன் அறைக்கு வந்த திவ்யாவிற்கோ தன் கணவனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் பேரொளியாக செவிகளில் கேட்டு அவளின் மென்மையான இதயத்தை நெருப்பாக சுட்டுப் பொசுக்கி கொண்டிருந்தது...

57% 8:12 PM
https://drive.google.com/file



அவனின் தேள் கொட்டிய வார்த்தைகளில்....

"நான் வசதியாக இருந்ததால் தான் என்னை திருமணம் செய்துகோண்டாயோ?" என்ற கேள்வியும்,

"வீட்டில் வேலைக்காரியாக இருக்க வேண்டியவள்.... என் தகுதிக்கு கொஞ்சம் கூட தகுதியில்லாதவள்" என்ற வார்த்தைகளும் திரும்ப திரும்ப எதிரொலிக்க, மஹா அறைக்குள் நுழையவும் சட்டென்று குளியல் அறைக்குள் சென்றவள் வாயை இறுக்க மூடிக் கொண்டு தேம்பி தேம்பி அழுதாள்.....

திவ்யாவின் நிலைமையை நன்கு புரிந்துக் கொண்ட மஹாவும் அவளை தொந்தரவு செய்யாமல் அவளின் வரவிற்காக காத்திருக்க நீண்ட நேரம் சென்று குளியல் அறையில் இருந்து வெளியே வந்த அண்ணியை பரிதாபமாக பார்த்தவள் அவளிடம் கேள்வி எதுவும் கேட்காமல், பேச்சும் கொடுக்காமல் படுத்துக் கொண்டாள்..

தன் அருகே தனக்கு முதுகு காட்டி படுத்திருந்த திவ்யாவின் உடல் அழுகையால் குலுங்கியதைக் கண்டவளுக்கு இதயமே வெடித்துவிடும் போல் இருந்தது...

ஏனெனில் திவ்யா அந்த வீட்டிற்கு வந்திருந்த இந்த ஐந்து ஆறு மாதங்களில் அத்தனை பேருடைய மனதையும் தன் அன்பாலும், அமைதியான குனத்தாலும் அவ்வளவு கவர்ந்திருந்தாள்....

அது நாள் வரை பெண் வாசமே என்ன என்று அறியாதிருந்த, முழுவதும் கல்லைப் போல் இரும்பாயிருந்த அவளின் கணவனின் இதயத்தை உட்பட....

57% 8:12 PM
https://drive.google.com/file

இரவு முழுவதும் உறங்காமல் மௌனமான அழுகையில் கரைந்துக் கொண்டிருந்தவள் விடிந்ததும் வழக்கம் போல் எழுந்து பூஜை அறையில் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு வசலில் கோலம் போட்டு முடித்து, காலை உணவு செய்ய சமையல் அறைக்குள் நுழைந்தவள் அதற்கு பின்னர் எக்காரணத்தைக் கொண்டும் வெளியே வரவில்லை...

காலை உணவை உண்ண அர்ஜூனைத் தவிர மற்ற அனைவரும் டைனிங் டேபிளுக்கு வந்தப் பிறகும் கூட அனைத்தையும் ஸ்ரீயிடம் கொடுத்துவிட்டாளே தவிர அவர் எவ்வளவோ எடுத்து சொல்லியும் அவள் வெளியில் வர மறுத்துவிட்டாள்...

ஒரு வழியாக அருணும் மஹாவும் கல்லூரிக்கு கிளம்பிச் செல்ல அர்ஜூன் வேகமாக கீழே இறங்கி வந்தவன் ஒருவர் முகத்தையும் நிமிர்ந்து பார்க்காமல் காலை உணவும் அருந்தாமால் விறுவிறுவென்று வெளியில் சென்றவன் தன் காரைக் கிளப்பி சென்றுவிட்டான்....

இரவு நடந்திருந்த களேபரத்திற்கு பிறகு வெகு நேரம் வரை உறங்காமல் விழித்திருந்த பாலா காலை அர்ஜூனிடம் எப்படியும் இதனை பற்றி பேசிவிட வேண்டும், திவ்யா அர்ஜூன் பிரச்சனைக்கு ஒரு தந்தையாக நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று காத்திருந்தவருக்கு அவன் அதிவேகமாக கீழே வந்த வேகத்திலேயே தன் காரில் சென்றுவிட்டான் என்று தெரிந்ததும் மனம் கசந்தது.....

ஸ்ரீயோ அல்லது தானோ இதில் நிச்சயம் தலையிட வேண்டும்... பிரச்சனையை சுமூகமாக தீர்த்துவிட வேண்டும் என்று முடிவெடுத்திருந்தவருக்கு அவன் சொல்லாமல் சென்று விட்டது வருத்தத்தையே தர, அவர் ஸ்ரீயிடம் அர்ஜூனை அவனுடைய அலுவலகத்திலேயே போய் சந்திப்பதாக கூறினார்....

8:12 PM 57%
https://drive.google.com/file



ஒரு வழியாக தன் மாமியாரைத் தவிர வீட்டினர் அனைவரும் வெளியே சென்றுவிட்டதை உறுதிப்படுத்திக் கொண்ட திவ்யா தன் அறைக்கு வந்தவள் பாரமான இதயத்துடனும், தளர்ந்த மனதுடனும் இனி தன் திருமண வாழ்க்கைக்கு விமோச்சனமில்லை என்று தீர்மானித்து அந்த கடிதத்தை எழுத ஆரம்பித்தாள்.

பிரியமுள்ள அத்தைக்கு திவ்யா எழுதிக் கொள்வது.

இந்த கடிதத்தை எழுதுவதற்கு முதலில் நீங்கள் என்னை மன்னிக்கவும்.... என் அம்மா ஸ்தானத்தில் இருக்கும் உங்களிடம் நான் சொல்லிவிட்டு சென்று இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள்... ஆனால் நான் சொல்லியிருந்தால் நிச்சயம் நீங்கள் என்னை போகவிட்டு இருக்க மாட்டீர்கள்.... அதனால் வேறு வழியில்லாமல் தான் இந்த கடிதத்தை எழுதுகிறேன்.

நேற்று நடந்ததற்காக நான் இந்த வீட்டையோ, அல்லது உங்களையே விட்டு செல்லவில்லை.... என் கணவருக்கு என்னிடம் கோபப்பட முழு உரிமை இருக்கிறது... ஆனால் அவருக்கு மனைவியாக இருக்க எனக்கு தகுதி இருக்கிறதா? என்ற கேள்வியே என்னை வெளியே செல்ல தூண்டியது.

அவர் சொன்னது போல் அவருக்கு வேலைக்காரியாக இருக்கக் கூட தகுதியில்லாதவள் மனைவியாக இருக்க ஆசைப்படலாமா? அவருக்கும் ஒரு வேலைகாரி கழுத்தில் தாலி கட்டிவிட்டோமே என்ற எண்ணமே அவரின் நிம்மதியை கெடுத்துக் கொண்டிருக்கும்.... நான் எந்த ஜென்மத்தில் யாருக்கு செய்த பாவமோ, மணமேடை வரை வந்தவர் தாலி கட்டாமல் விட்டுச் சென்றார்.

57% 8:12 PM
https://drive.google.com/file

இனி தெரிந்தும் நான் பாவம் செய்ய விரும்பவில்லை.... என்னால் இனி உங்கள் மகனுக்கு எந்த கஷ்டமும் இருக்காது.... நான் அவரின் பாதையை விட்டு விலகி செல்கிறேன்.

ஆனால் ஒன்று மட்டும் அவருக்கு புரிய வைக்க விரும்புகிறேன்... வாழ்க்கையில் அன்று தான் உங்கள் மகனை முதல் முதலில் பார்த்தேன்.... ஏற்கனவே திருமணம் நின்று விட்ட அதிர்ச்சியில் தற்கொலை வரை போனவளுக்கு அவர் வசதியானவரா? அவருக்கு நான் தகுதியானவளா? என்று பார்க்க தெளிவான மனநிலையிலோ சிந்தனையோ இல்லை.

என் அம்மாவின் முகத்தில், நான் இந்த திருமணத்திற்கு சம்மதிக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பே இருந்தது.... அதுவே தான் என்னை இந்த திருமணத்திற்கு சம்மதிக்கவும் வைத்தது.

ஆனால் அப்பொழுது உங்கள் மகனைப் பற்றிய எண்ணமோ, அவரது அந்தஸ்தோ, இல்லை அவர் எப்படிப் பட்டவர், நான் அவருக்கு தகுதியானவளா என்று எண்ணங்களோ எனக்கு இல்லை.... ஒரு வேளை நான் அவருடைய இடத்தில் இருந்து சிந்தித்து பார்த்திருந்தால், நிச்சயம் இந்த திருமணத்திற்கு நான் சம்மதம் தெரிவித்து இருக்க மாட்டேன்.

ஒரு நல்ல பெற்றோருக்கு தன் பெண் வசதியான வீட்டில் வாழ்க்கைப் பட வேண்டும் என்ற ஆசையை விட அவள் தன் புகுந்த வீட்டில் எல்லோருடனும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற விருப்பமே இருக்கும்.

அதுவும் உங்கள் தோழியைப் பற்றி உங்களுக்கு நான் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை.... நான் கலா வளர்த்த பெண்.... ஏழை தான், படிக்காத கிராமத்து பெண் தான், ஆனால் என்றுமே பணக்கார வாழ்க்கைக்கு ஆசைப்பட்டவள் கிடையாது.

8:13 PM

https://drive.google.com/file

எந்த நிமிடத்தில் என் கழுத்தில் அவர் தாலி கட்டினாரோ அன்றே இது என் குடும்பம், அவர் என் கணவர் என்று தான் நினைத்திருந்தேன்.... ஆனால் அன்றே அவர் என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சத்தியமாக நான் எதிர்பார்க்கவில்லை.

இனி ஒரே வீட்டில் அவருடன் இருந்து அவரின் நிம்மதியை நான் மேலும் கெடுக்க விரும்பவில்லை.... அதே போல் அவருடைய வாழ்க்கையில் இருந்து நான் விலகுவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை அவர் செய்யட்டும்.

அவர் சொன்னதுப் போல் விவாகரத்திற்கு நான் சம்மதிக்கிறேன்... எங்கு, எப்பொழுது கையெழுத்து போட வேண்டுமோ அங்கு நான் கையெழுத்து போடுகிறேன்.

நிச்சயம் அவருக்கு பிடித்தது போல் அவருடைய தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றார் போல் அவருக்கு பெண் கிடைத்து அவர் சந்தோஷமாக வாழ வேண்டும்.

இப்படிக்கு உங்களை பிரிய மனமில்லாமல் பிரியும்,

உங்கள் மகள் திவ்யா.

நடுங்கும் விரல்களுடன் கடிதத்தை எழுதி முடித்தவள் ஆறாக பெருக்கெடுத்த விழி நீரை துடைத்துக் கொண்டு முடிந்த அளவு பெட்டியில் துணிமணிகளை அடுக்கி வைத்து விட்டு குளியல் அறைக்குள் நுழைந்தாள்...

56% 8:13 PM
https://drive.google.com/file

"நான் வெளியே செல்வது என் கணவரைத் தவிர மற்ற அனைவருக்கும் அதிர்ச்சியாகவும் வருத்தமாகவும் இருக்கும்.... சொல்லாமல் கொல்லாமல் கிளம்பியதினால் என் மீது வெறுப்பு கூட வரும்... ஆனால் அதற்காக இனியும் அவருக்கு நான் தொல்லை கொடுக்க விரும்பவில்லை.... அதிலும் அம்மாவிற்கு நான் அத்தையிடம் சொல்லாமல் வந்துவிட்டேன் என்று தெரிந்தால் நிச்சயம் பேரதிர்ச்சியாகவும் கோபமாகவும் இருக்கும்"

என்று மனம் போன போக்கில் எண்ணிக் கொண்டிருந்தவளின் எண்ணங்கள் பின்னோக்கி சென்று தன் திருமண நாளில் வந்து நின்றது...

"என்னுடைய வாழ்க்கையில் ஏன் அப்படி ஒரு நாள் வந்தது? நான் என் அம்மா, அப்பா, அண்ணா என்று இருந்திருக்க கூடாதா? ஏன் என் கண்முன்னே அவரைக் கொண்டு வந்தது விதி? ஏன் என் கழுத்தில் தாலி கட்ட வைத்தது? இப்பொழுது என் மீது ஏன் இந்த அளவிற்கு வெறுப்பு வந்தது?" என்று நெஞ்சு உடைந்துவிடும் அளவிற்கு சிந்தித்துக் கொண்டிருந்தவளுக்கு எவ்வளவு முயன்றும் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலவில்லை...

விம்மி அழுதவள் முடிவில் உணர்ச்சி மிகுதியால் மூர்ச்சித்து விழும் அளவிற்கு மூச்சை அடைக்க ஆரம்பிக்க இனி ஒரு நொடி நேரம் கூட இங்கு இருக்கக்கூடாது என்று முடிவெடுத்தவள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு முகத்தை கழுவி வேறு புடவை அணிந்து கீழே எட்டிப் பார்க்க, அங்கு ஒருவரும் இல்லை என்று உறுதிப்படுத்துக் கொண்டு பெட்டியை எடுத்துக் கொண்டவள் மெதுவே இறங்கி வந்தாள்...

ஸ்ரீ அவர் அறையில் படுத்திருக்க, அல்லியும் தெய்வானையும் சமையல் அறையினுள் இருக்க, வீட்டில் நிலவிய நிசப்தமான சூழ்நிலை வேறு அவளின் திகிலை அதிகப்படுத்த கையில் இருந்த கடிதத்தை ஹாலில் போடப்பட்டிருந்த மேஜையில் வைத்தவள் வெளியே

8:13 PM 56%

https://drive.google.com/file



ட்ரைவர்களோ அல்லது தோட்டக்காரர்களோ யாரும் இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு விறுவிறுவென்று சத்தம் இல்லாமல் வெளியேறினாள்...

வாயிலைத் தாண்டவும் அவளின் அழகிய கோலம் அவளைப் பார்த்து கண்ணீர் வடிப்பது போல் தோன்றியது....

அங்கு தானே அன்று தான் புடைவையை தூக்கி சொறுகி கோலம் போட்டுக் கொண்டிருக்கும் போது தன் கணவன் தன்னை அத்தனை ஆர்வத்துடன் பார்த்திருந்தான்....

அந்த நினைவே இதயத்தை கலங்கடிக்க பெருமூச்செறிந்தவாறே ஒரு முறை திரும்பி வீட்டைப் பார்த்தவளுக்கு தன் திருமண நாள் அன்று தன் கணவன் ஆரத்தி தட்டை தட்டிவிட்டு சென்றது ஞாபகம் வர விழி நீரால் பார்வை மறைத்தது...

ஒவ்வொன்றையும் நினைக்க நினைக்க மூச்சு திணறுவது போல் இருக்க, ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் சாலைக்கு வந்தவள் அங்கு நின்றுக் கொண்டிருந்த ஆட்டோவில் ஏறி பேருந்து நிலையத்திற்கு போகச் சொன்னாள்...

பள்ளி வாழ்க்கை முடிந்தவுடன் கல்லூரிக்கு கூட செல்லாமல் வீட்டை விட்டு வெளியே போகாது இருந்தவளுக்கு இன்று இவ்வளவு பெரிய சென்னையில் தனியே பேருந்து நிலையம் வரை போவது மிகுந்த அச்சத்தை கொடுக்க, ஆனால் இனி ஒரு நிமிடம் அந்த வீட்டில் இருந்தால் கூட நிச்சயம் மூச்சு விடமுடியாமல் செத்துவிடுவோம் என்று நினைத்தவளுக்கு...

8:13 PM 56%
https://drive.google.com/file



"போதும்பா முருகா.... இந்த அதிர்ச்சிகள் போதும்... இதுக்கு மேல் எதுவும் தாங்கிக்கிற சக்தி இல்லை" என்று வேண்டிக் கொள்ள மட்டுமே முடிந்தது.

தன் வாழ்க்கை அர்ஜூனோடு துவங்கிய அன்று வேண்டிய அதே வார்த்தைகள்...

மத்திய பேருந்தில் கடலூர் செல்லும் பேருந்தைக் கண்டுப்பிடித்து ஏறி அமர்ந்தவளுக்கு எத்தனை முயன்றும் தன் கணவனின் நினைவை தவிர்க்க முடியவில்லை...

"சில நாட்களாக அவரின் நடவடிக்கைகளும், பார்வையும் அவருக்கு என் மேல் இருந்த காதலைத் தானே வெளிப்படுத்திக் கொண்டு இருந்தது.... ஒரு வேளை அது காதல் இல்லையோ? வெறும் ஆசையோ? ஆனால் காதல் இல்லாமல் தன் மேல் எப்படி ஆசை மட்டும் வரும்?" என்று குழம்பியவளுக்கு விடை ஒன்றும் புரிபடவில்லை..

இத்தனை நாள் என்னை வெறுத்த கணவன் இப்பொழுது தானே என்னை விரும்ப ஆரம்பித்து இருந்தார்... ஒரு வேளை நான் அவர் அழைத்த அன்று அவரின் அறைக்கு போயிருந்தால் அவருக்கு என் மேல் இத்தனை வெறுப்பு வந்திருக்காதோ? ஆனால் எத்தனை தான் வெறுப்பு இருந்தாலும் அவரின் மனதில் உள்ள எண்ணங்கள் தானே வார்த்தைகளாக நேற்று வெடித்து இருக்கிறது...

அப்படி என்றால் என்ன தான் அவர் என்னை ஏற்றுக் கொள்ள முயற்சி செய்தாலும் நான் அவருக்கு தகுதி அற்றவள் என்ற நினைப்பு அவரின் ஆழ் மனதில் பதிந்து இருந்திருக்கிறது என்று தானே அர்த்தம்... இனி அவரின் வாழ்க்கையில் நான் எக்காரணம் கொண்டும் தலை இடக்கூடாது...

56% 8:13 PM
https://drive.google.com/file



இத்தனை பெரிய பிஸினஸ் பண்ணுகிறவர், பெரிய கோடீஸ்வரர், இத்தனை நாள் என்னை அவர் வீட்டில் விட்டு வைத்திருந்ததே பெரிது என எண்ணியவள் வழிந்த கண்ணீரை யாரும் பார்க்காதவாறு துடைத்துக் கொண்டு தன் அன்னையை சமாளிக்க தயாரனாள்...

ஆனால் பாவம் தன் கணவனின் கோபத்திற்கு தன் மேல் உள்ள அதிக காதலே காரணம் என்று அறியவில்லை அந்த பேதை...

ஒரு வேளை அவள் அன்று அவனின் அறைக்கு போயிருந்தால் தான் வாங்கி வந்திருந்த பரிசினை அவளுக்கு கொடுத்துவிட்டு காதலை சொல்லியிருப்பானோ!!

அது தான் அவனின் திட்டமும் கூட, ஆனால் அந்த சந்தர்ப்பத்தை அவள் அவனுக்கு கொடுக்கவே இல்லையே... யாரை குறை சொல்வது என்று விதியே குழம்பி நின்றது.

காலையில் திவ்யாவை சந்தித்த பிறகு விடிய விடிய அழுததினால் வீங்கிப் வாடிப்போயிருந்த அவளின் முகத்தை பார்த்ததில் இருந்து அதே நினைவில் தன் அறைக்கு வந்து படுத்த ஸ்ரீக்கு இன்னமும் அதே வலி நெஞ்சில் குறையாமல் இருந்தது...

தன் நெஞ்சை அழுத்தி தேய்த்துக் கொண்டவருக்கு சிறிது நேரம் ஓய்வெடுத்தால் நன்றாக இருக்கும் போல் தோன்ற, இருந்தும் திவ்யாவை நினைத்து தன்னை திடப்படுத்திக் கொண்டு "பாவம் சின்ன பெண் ரொம்ப நொந்துப் போயிருக்கிறாள், நாமும் அவளுடன் அருகில் இல்லை என்றால் சரி இல்லை" என்று நினைத்தவர் கீழே இறங்கி வந்தார்...

56% 8:13 PM
https://drive.google.com/file



சமையல் அறைக்குள் வந்தவர் அங்கு தெய்வானையும் அல்லியும் மட்டும் இருக்கவே திவ்யா எங்கே என்று கேட்க, அவர்கள் அவள் தன் அறைக்கு செல்வதாக கூறியதை சொன்னதும் அல்லியிடம் அவளின் அறையில் போய் பார்க்க சொன்னார்...

திவ்யா அறையில் இல்லை என்பதை உறுதி செய்த அல்லி...

"அம்மா, திவ்யாம்மா ரூமில இல்ல.... இருங்க தோட்டத்தில் இருக்காங்களான்னு பார்த்துட்டு வர்றேன்" என்றவள் தோட்டத்திலேயும் அவள் இல்லை என்று உறுதி படுத்திக் கொண்டு ட்ரைவர் முருகனிடமும் தோட்டக்காரர்களிடமும் விசாரித்தாள்...

யாரும் அவளைப் பார்க்க வில்லை என்று உறுதியாக கூறியதும் அவளை பயம் தழுவ வேகமாக ஸ்ரீயிடம் ஓடி வந்தவள் திவ்யா எங்கும் இல்லை என்று கூற, ஸ்ரீக்கு மீண்டும் சுளீரென்று நெஞ்சில் வலி எடுத்தது...

ஹாலில் வந்து அமர்ந்தவர் காலையில் உணவு உண்டவுடன் அவளை தனியாக விட்ட தன் மடத்தனத்தை மனதிற்குள் திட்டியவர் அப்பொழுது தான் கவனித்தார் அந்த கடிதத்தை...

கடிதத்தை கண்டவுடனே அவரின் மனம் பதற ஆரம்பித்தது....

பிரித்து படிக்க ஆரம்பித்தவர் கடிதத்தின் வரிகளுக்கிடையே நீர் துளிகளைப் பார்த்ததுமே தெரிந்துப் போனது திவ்யா விழிகளில் நீரோடு இந்த கடிதத்தை எழுதி இருக்கிறாள் என்று....

56% 8:13 PM
https://drive.google.com/file



மனதை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அடி வயிற்றில் புளியைக் கரைக்க ஒவ்வொரு வரியாக படித்தவர், படித்து முடிக்கும் முன் தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சோபாவில் சாய்ந்தார்...

மலரினும் மெல்லியவள்!

தொடரும்.....

https://drive.google.com/file


மலரினும் மெல்லியவள்!!!!

பாகம் - 20

அவரின் அருகிலேயே இருந்த அல்லி கடிதத்தை அவர் படிக்கும் பொழுதே அவரின் முக மாற்றத்தை கவனித்தவள் நேற்று நடந்த பிரச்சனையால் தான் திவ்யாம்மா கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு சென்றிருப்பார் போலிருக்கிறது என்று நினைத்தவள் ஸ்ரீ நெஞ்சை பிடித்துக் கொண்டு விழவும்,

அம்மா என்று அலறியவள் தெய்வானையை அழைத்து கதற, அவர்களின் இருவருடைய சத்தத்தை கேட்ட முருகனும் மற்ற வேலைக்காரர்களும் ஓடி வர வீடே கதிகலங்கிப் போனது...

சட்டென்று பாலாவிற்கு அழைத்த முருகன் நிலைமையை சொல்ல, சென்னையில் இருக்கும் மிகப்பெரிய மருத்துவமனையின் நிர்வாக இயக்குனரான தன் நண்பனை அழைத்த பாலா ஆம்புலன்ஸை அனுப்ப சொல்லிவிட்டு தன் காருக்கு ஓடினார்...

வழியெல்லாம் பதற்றத்துடன் நடுங்கும் விரல்களுடன் அர்ஜூனின் அலை பேசிக்கு அழைக்க அங்கு உள்ளம் முழுவதும் இன்னும் தீராத சீற்றத்திலும் ஆங்காரத்திலும் இருந்தவன் அலை பேசியில் தன் தந்தையின் எண் ஒளிர்வதைப் பார்த்து, நேற்று நடந்த விஷயத்தைப் பற்றி தான் பேச அழைக்கிறார் என்று நினைத்து அவரின் அழைப்பை எடுக்காமல் இருக்க, அருணை அழைத்தவர் தழுதழுத்த குரலில் தொண்டை அடைக்க நிலைமையை விளக்கி சொல்லி மருத்துவமனைக்கு வரச் சொன்னார்...

https://drive.google.com/file

விஷயம் கேள்விப்பட்ட அருண் கிட்டத்தட்ட அதிர்ச்சியில் மயக்க நிலையை அடைந்தான்...

ஏனெனில் நேற்றில் இருந்து அவன் தன் அன்னையை பார்த்துக் கொண்டு தானே இருந்தான்... தான் கேட்டும் அவர் ஒன்றும் இல்லை என்று மறுத்துவிட்டாரே....

புயல் போல் காருக்கு ஓடியவன் அதனை விட வேகமாக மருத்துவமனைக்கு காரை செலுத்த, அங்கு அதற்குள் பாலா தங்கள் வீட்டை அடைவதற்கு முன்னரே ஆம்புலன்ஸ் வந்து சேர்ந்திருந்தது...

அலறி அடித்துக் கொண்டு ஸ்ரீயின் அருகில் ஓடியவர் அங்கு துவண்டு போய் சுய நினைவு இல்லாமல் படுத்து இருந்த தன் மனைவியின் நிலையை எண்ணி கண்ணீர் வடிக்க ஸ்ரீயை ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள்.

ஆம்புலன்ஸ் வருவதற்குள் அருண் மருத்துவமனைக்கு சென்றிருந்தான்.

பின்னையே பாலாவும் வர அவரை நோக்கி ஓடியவன்....

"என்னாச்சு டாட்? எப்படி இருக்காங்க மாம்?" என்க அவனை கலங்கிய கண்களுடன் அமைதியாக ஒன்றும் பேசாமல் பார்த்திருந்த பாலா "ஸ்ட்ரெச்சரில்" தன் மனைவியை ஏற்றுவதைப் பார்த்து தன் மனைவிக்கு அருகில் ஓடினார்...

COPYRIGHTED

56% 8:14 PM
https://drive.google.com/file

மருத்துவமனையின் நிர்வாக இயக்குனரும், பாலாவின் நெருங்கிய தோழர்களில் ஒருவருமான சுந்தர், பாலாவின் அருகில் வந்தவர்,

"வி வில் டேக் கேர் ஆஃப் ஹெர் பாலா... யூ டோன்ட் ஒர்ரி [We will take care of her Bala, you don't worry] " என்றவர் ஸ்ரீக்கு தேவையான சிகிச்சைகளை உடனடியாக துவங்க உத்தரவிட்டார்...

ஸ்ரீயை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்து செல்ல அவரின் பின்னேயே ஓடிய பாலாவையும் அருணையும் வாயிலில் நிற்க சொன்ன மருத்துவ குழுவினர் அவசரமாக சிகிச்சையை துவங்க ஐ சி யுவின் கதவிற்கருகில் போடப்பட்டிருந்த சேரில் அமர்ந்த பாலா மௌனமாக கதற ஆரம்பித்தார்...

பின் இருபத்தி எட்டு வருடங்கள் இல்லற வாழ்க்கையாயிற்றே....

கோடீஸ்வர குடும்பத்தில் பிறந்து செல்வச் செழிப்போடு வளர்ந்திருந்தாலும் ஏழை குடும்பத்தில் பிறந்த பாலாவை திருமணம் செய்த ஸ்ரீ ஒரு நாள் கூட பாலாவின் ஏழ்மையைப் பற்றியோ அந்தஸ்தைப் பற்றி குறைக் கூறியதில்லை...

ஸ்ரீயின் தந்தை ருத்ரமூர்த்தி இறக்கும் வரை பாலாவுடன் மும்பையில் சாதாரண ஒண்டுக் கட்டிடத்தில் வாழ்ந்த போதும் மனம் முழுக்க மகிழ்ச்சியும், இதயம் முழுக்க காதலுமே மட்டும் சுமந்து தன் கணவருடன் செம்மையான இல்லற வாழ்க்கை வாழ்ந்திருந்தவர்....

தன்னுடைய பிறந்த வீட்டின் செல்வத்தைப் பற்றியோ வசதிகளைப் பற்றியோ தன்னுடைய கணவனுடன் வசதி இல்லாமல்

COPYRIGHTED

56% 8:14 PM
https://drive.google.com/file



வாழ்ந்த நாட்களில் அவர் தப்பித் தவறிக்கூட ஒரு நாளும் ஒப்பிட்டு பார்த்து பேசியதில்லை....

ருத்ரமூர்த்தி இறக்கும் தருவாயில் தான் தன் தந்தையை சந்திக்க சென்றவர் பாலாவின் அனுமதியுடன் தங்கள் தொழில் ஸ்தாபனங்களின் சேர்மனாக பொறுப்பேற்று அதி விரைவில் அத்தனை தொழிற்களையும் பார்க்கும் அனைவரும் அதிசயிக்கும் வகையில் செம்மயாக நடத்தியவர்....

ஆனால் இன்று தனக்கு பிறந்த மகன் அந்தஸ்து, வசதி, பணம் என்று பார்த்து ஒரு ஏழைப் பெண்ணின் வாழ்க்கையை அதள பாதாளத்தில் தள்ளிவிட்டானே என்ற வேதனையே அவரின் இந்த நிலைக்கு காரணமாயிற்று....

கதறி அழும் தந்தைக்கு ஆறுதல் சொன்ன அருண், அர்ஜூனின் அலை பேசிக்கு மீண்டும் மீண்டும் அழைத்து அலுத்து போய் இறுதியில் அவனுக்கு ஒரு குறுஞ்செய்தி மட்டும் அனுப்பினான்.

"மாம் நாட் ஃபீலிங் வெல்... அட் த ஹாஸ்பிட்டல் நெள [Mom not feeling well... At the hospital now]" என்று அனுப்பியவன் மருத்துவமனையின் பெயரையும் குறிப்பிட ஒரு முக்கியமான மீட்டிங்கில் இருந்த அர்ஜூன் செய்தியை படிக்கவில்லை.

சிறிது நேரத்தில் ஐசியுவில் இருந்து வெளிவந்த சுந்தர் பாலாவின் அருகில் வர, அவரைப் பார்த்ததும் அலறி அடித்துக் கொண்டு எழுந்திருந்த பாலாவைப் பார்த்தவர் ஆறுதலாக அவரின் தோளில் கை வைத்து ஸ்ரீக்கு லேசான மாரடைப்பு [மைல்ட் அட்டாக்] என்று கூற பாலாவிற்கு உலகமே இருண்டது போல் இருந்தது...

COPYRIGHTED

8:14 PM 56%
https://drive.google.com/file 17


திருமணம் ஆன நாளில் இருந்து அவர் ஒரு நாள் கூட தன் மனைவி இல்லாமல் இருந்தது இல்லை..

அலுவல் விஷயமாகவோ, இல்லை தொழில் விஷயமாகவோ வெளி ஊர்களுக்கு போக வேண்டியது என்று வந்தாலும் ஸ்ரீயும் அவரும் இணைந்து செல்வதை வழக்கமாகவே வைத்திருந்தனர் இருவரும்...

பிள்ளைகளை கூட தன் அன்னையிடம் விட்டு விட்டு செல்வார்... ஆனால் தன் மனைவி இல்லாமல் எங்கும் செல்ல மாட்டார்.

ஆனால் இப்பொழுது ஸ்ரீயின் நிலைமை அவரை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது... அருண் தான் அவரை மிகவும் பாடுபட்டு தேற்ற வேண்டியதாகிருந்தது.

இந்த களேபரத்தில் பாலாவோ அருணோ தங்களுடன் திவ்யா இல்லாததை கவனிக்க தவறினார்கள்....

நேரம் ஆக ஆக அர்ஜூனும் திரும்பி அழைக்காதது வேறு அருணிற்கு கவலை அளிக்க,

"அப்படி என்ன தான் பிஸியாக இருந்தாலும் அண்ணா நிச்சயம் மெசேஜ் பார்க்காமல் இருக்க மாட்டாரே... ஒரு வேளை நேற்று நடந்ததயே இன்னும் நினைத்துக் கொண்டு போனைக் கூட கவனிக்கவில்லையோ" என்று நினைத்துக் கொண்டிருந்தவன் அப்பொழுது தான் கவனித்தான் அங்கு திவ்யா இல்லாததை....

கண்டவனுக்கு பகீரென்று இருந்தது....

COPYRIGHTED

8:14 PM 56%
https://drive.google.com/file



"ஏனெனில் மாமிற்கு ஒன்று என்றால் நிச்சயம் துடிதுடித்து போவார் அண்ணி... அப்படி இருக்கு அவர் ஏன் ஹாஸ்பிட்டல் வரவில்லை? கண்டிப்பாக மாமை ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டு வீட்டில் இருக்க அவரால் முடியது... டாடோடு நிச்சயம் அவரும் வந்திருக்க வேண்டும்... ஆனால் இங்கு அவர் இல்லை என்றால் எங்கே அவர்? எதுவோ சரியில்லை" என்று உணர்ந்தவன் திவ்யாவின் அலை பேசிக்கு அழைக்க அது அணைத்து வைக்கப்பட்டிருந்தது...

ஏதோ தவறு நடந்திருக்கிறது? என்று கலங்கியவன் வீட்டிற்கு அழைத்து அல்லியிடம் விசாரிக்க, பதறியவாறே அல்லி....

"திவ்யாம்மாவ எங்கு தேடியும் காணோம்... அவங்க ஒரு லெட்டர் மட்டும் எழுதி வச்சிட்டு போயிட்டாங்க... அத படிச்சதும் தான் அம்மா அப்படியே மயங்கி சரிந்து விழுந்திட்டாங்கய்யா" என்க...

அல்லியின் கூற்றில் அதிர்ந்து போனான் அருண்...

"அந்த லெட்டர் எங்க?"

"இங்க தான் இருக்குய்யா"

"சரி... அத உடனே முருகனிடம் கொடுத்து விடுங்க" என்றவன் அப்படியே தன் அன்னைக்கு தேவையான சில பொருட்களையும் கொடுத்து அனுப்ப சொன்னவனுக்கு மனதிற்குள் திவ்யாவை நினைத்து திகில் சூழ துவங்கியது....

ஒரு பக்கம் தன் அன்னையின் உடல் நிலையை நினைத்து கலங்கி போயிருந்தான்...

COPYRIGHTED

56% 8:15 PM
https://drive.google.com/file

மறுபக்கம் திவ்யா வீட்டை விட்டு சென்றுவிட்டது நினைத்து வேதனையில் உழன்று இருக்க ஆனால் இது எதுவுமே தெரியாமல் அனைத்துக்கும் காரணகர்த்தாவான அர்ஜூனின் ஆங்காரமும் இன்று தங்களுடைய அலை பேசி அழைப்புகளின் நிராகரிப்பும் அவனை மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்கியிருந்தது...

மீண்டும் அர்ஜூனை அழைப்போமா என்று எண்ணிய வேளையில் இரண்டு மணி நேரமாக நடந்த மீட்டிங் ஒரு வழியாக முடிந்தவுடன் அலை பேஸியில் கிட்டதட்ட பத்து முறைக்கும் மேலே தன் தந்தை அழைத்திருந்ததை பார்த்த அர்ஜூனிற்கு, அவர் நேற்று நடந்ததை பற்றி பேசத் தான் இத்தனை முறை அழைத்திருக்கிறாரோ என்று எண்ணி எரிச்சலாக வர, அப்பொழுது தான் அருணின் குறுஞ்செய்தியைப் பார்த்தான்.

பார்த்தவனுக்கு அண்டமே சுற்றியது போல் இருந்தது.

"கதிர்" என்று கத்தியவன் நிலைமையை சொல்லிவிட்டு புயலென பாய்ந்தான் தன் காரை நோக்கி...

வழியெல்லாம் ஒரு வேளை இதற்கு தான் தன் தந்தை இத்தனை முறை தன்னை அழைத்திருப்பாரோ... அது தெரியாமல் அவருடைய அழைப்புகளை நிராகரித்துவிட்டேனே என்று தன் மீதே கோபம் கொண்டவன் சூராவளியென காரை செலுத்தி அடுத்த முப்பதே நிமிடங்களில் மருத்துவமனையை அடைய அங்கு அப்பொழுது தான் ட்ரைவர் முருகன் கொண்டு வந்த கொடுத்திருந்த திவ்யாவின் கடிதத்தை குழப்பத்துடன் படித்துக் கொண்டிருந்தான் அருண்...

மருத்துவமனைக்குள் வேகமாக நுழைந்த அர்ஜூன், அதி வேகமாக அருணை அடைந்தவன் அவன் கரம் பற்றி,

COPYRIGHTED

8:15 PM 56%
https://drive.google.com/file



"அருண்... வாட் ஹாப்பெண்ட்? என்னாச்சு மாம்க்கு? ஸாரி, நான் ஒரு முக்கிய மீட்டிங்கில் இருந்தேன்.... ஐ மிஸ்ட் டாட்'ஸ் கால்ஸ் [I missed dad's calls] " என்று பதற....

அவனிடம் ஸ்ரீயின் நிலைமையையும் சிகிச்சையும் பற்றி படபடப்புடன் விவரித்தான் அருண்...

ஒரு வேளை தான் திவ்யாவிடம் நேற்று நடந்துக் கொண்ட முறை தான் தன் அன்னையை இந்த நிலைமைக்கு கொண்டு சென்று இருக்குமோ? என்று எண்ணிய அர்ஜூன் தன் இரண்டு கைகளாலும் தன் தலையை பிடித்துக் கொண்டு ஐசியுவிற்கு அருகில் போடப்பட்டிருந்த சேரில் தொப்பென்று அமர்ந்தவன் தலை நிமிர்ந்து தன் தந்தையை பார்க்கவில்லை...

ஏனெனில் தான் அவருடைய அழைப்பை தவிர்த்ததால் அவருக்கு தன் மேல் எந்த அளவிற்கு வெறுப்பு இருக்கும் என்று அவனால் உணர்ந்துக் கொள்ள முடிந்தது....

தவித்தவன் தனக்குள்ளே புலம்ப ஆரம்பித்தான்....

"எப்படி நான் இப்படி மாறிப்போனேன்?? எத்தனையோ பிரச்சனைகளை துச்சமென சந்திச்சவனுக்கு இப்பொழுது என்னானது? யார் மேல் உள்ள கோபத்தை யார் மேல் காட்டுவது என்று கூட தெரியாமல் அவள் மேல் இருந்த கோபத்தில் டாடின் [dad] அழைப்பை நிராகரித்து இருக்கிறேனே... என்ன ஒரு மடையன் நான்" என்று தன்னை தானே திட்டிக் கொண்டவன் தன் அன்னை இருந்த ஐசியு-வின் அறையைப் பார்க்க...

COPYRIGHTED

56% 8:15 PM
https://drive.google.com/file

அர்ஜூனின் மனம் தன் அன்னையை நினைத்து மௌனமாக கதறியது....

"ஸாரி மாம்.... ப்ளீஸ் ஃபர்கிவ் மீ, ப்ளீஸ் கம் பேக் [Sorry mom, please forgive me, please come back] " என்று உள்ளுக்குள்ளே அழுதவன் ஒவ்வொரு விநாடியும் தன் அன்னை எப்பொழுது கண் விழிப்பார் என்று ஏங்க அப்பொழுது தான் கவனித்தான் அங்கு தன் தந்தையும் அருணும் மட்டும் இருப்பதை....

திவ்யா எங்கே?

கவனித்தவனின் மனதில் சுருக்கென்று தைத்தது போல் இருந்தது...

"என்ன தான் என் மேல் கோபமாக இருந்தாலும், நான் அவ்வாறு அநாகரிகமாக நடந்துக் கொண்டிருந்ததால் கலங்கிப் போய் இருந்தாலும் மாமிற்கு ஏதேனும் ஒன்று என்றால் திவ்யா நிச்சயம் கூட வராது இருக்க மாட்டாள்... ஒரு வேளை மஹாவோடு வீட்டிலேயே இருக்கிறாளோ? மஹா காலேஜுக்கு போகவில்லையா? மஹாவிற்கு தெரியுமா?" என்று அடுக்கடுக்காக கேள்விகள் தோன்ற அருணிடம் வந்தவன்...

"மஹா எங்கே அருண்?" என்றான்...

"இல்லைன்னா... இன்னும் அவளுக்கு சொல்லவில்லை... காலேஜில் தான் இருக்கிறாள்" என்று அருண் கூற அப்பொழுது திவ்யா எங்கே என்ற கேள்வி அவன் மண்டையைக் குடைய, இருந்தும் அவனால் வெளிப்படையாக அவளைப் பற்றி விசாரிக்க அவனுக்கு மனம் இல்லை....

COPYRIGHTED

56% 8:15 PM
https://drive.google.com/file



அது திவ்யாவிடம் தான் நடந்துக் கொண்ட விதத்தினால் வந்த குற்ற உணர்வினாலோ அல்லது இன்னும் அவளின் மீது உள்ள வெறுப்பினாலோ.... அது அவனுக்கு மட்டுமே தெரியும்...

சிகிச்சை முடிந்து வெளியே வந்த நிர்வாக இயக்குனரும் மருத்துவருமான சுந்தர், ஸ்ரீ அபாயக்கட்டத்தை தாண்டிவிட்டதாகவும் அதிர்ச்சியினால் வந்த மாரடைப்பே இது என்றும், அதனால் மேற்கொண்டு அதிர்ச்சி தரக் கூடிய எந்த விஷயத்தையும் சொல்லாமலும், அப்படி எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும் சொன்னவர் மருந்துக்களைப் பற்றி விரிவாக சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அவர் அகன்றதும் ஐசியுவின் கண்ணாடி வழியே ஸ்ரீயைப் பார்த்த அர்ஜுனின் இதயம் நொருங்க ஆரம்பித்தது...

எப்பேற்பட்ட இரும்பு போன்ற மனதுடையவர் அவனின் அண்ணை...

அவனுக்கு அண்ணையாக மட்டும் இல்லாமல் குருவாகவும் வழித் துணையாகவும் இருந்து அவனுக்கு தொழில் கற்றுக்கொடுத்து அவனின் ஒவ்வொரு கட்டத்திலும் வழிகாட்டியாகவும் ஒரு நல்ல ஆசானாகவும் இருந்து வந்தவர்...

அவரின் இன்றைய நிலைமைக்கு காரணம் நான் தானே என்று எதற்கும் கலங்காத இரும்பை ஒத்த மனதுடையவனின் உள்ளம் ஊமையாக அழுதுக் கரைந்தது....

ஸ்ரீ கண் விழிக்கும் வரை ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக கரைய, அருண் மட்டும் மருத்துவமனையை விட்டு வெளியே வந்தவன் "திவ்யா அண்ணி எங்கு சென்று இருப்பார்? ஒரு வேளை

COPYRIGHTED

56% 8:15 PM
https://drive.google.com/file

கடலூருக்கே சென்று இருப்பாரோ?" என்று குழம்பியவன் "திவ்யா அண்ணியின் அம்மாவிற்கு அழைக்கலாமா?" என்று யோசித்தான்...

"ஆனால் திவ்யா அண்ணியின் அம்மாவை அழைத்தால் இங்கு நடந்தது அனைத்தையும் சொல்ல வேண்டியிருக்கும்... அது வேறுப் புது பிரச்சனைகளை கிளப்பும்" என்று நினைத்தவன் அந்த யோசனையை கைவிட்டு தன்னருகில் நின்றிருந்த ட்ரைவர் முருகனிடம்....

"முருகா, திவ்யா அண்ணி எங்க போனாங்கன்னு தெரியுமா?"

"இல்லை தம்பி... நான் பின்னாடி காரை கழுவிட்டு இருந்தேன்... அதனால் கவனிக்கவில்லை தம்பி"

"வீட்டில் இருப்பவர்கள் எப்படி வெளியே போறாங்கன்னு கூட பார்க்காமா என்ன வெறும் காரை துடைத்துக் கொண்டே இருந்தீர்களா? இத்தனை பேர் இருந்தும் எப்படி யார் கண்ணிலும் படாமல் அண்ணியால் வீட்டை விட்டு போகமுடியும்??" என்று கத்தியவன் இதற்கு மேல அவரைத் திட்டி ஒன்றும் பிரயோஜனமில்லை என்று எண்ணி..

"சரி, நீங்க இப்பவே கிளம்பி வீட்டிற்கு போங்க.... அங்க வெளியே யாராவது அண்ணிய பார்த்தாங்களான்னு விசாரிக்க முடியுமான்னு கொஞ்சம் பாருங்க" என்றான்...

ஒரு மணி நேரம் சென்று அவனை அழைத்த முருகன்..

"தம்பி, சின்னம்மா அங்க ஸ்டாண்டில் இருந்த ஆட்டோவில் ஏறி தான் மெயின் பஸ்டாண்டிற்கு போயிருக்காங்க... அந்த ஆட்டோ ட்ரைவரிடமே கடலூர் பஸ் எங்கு நிற்கும்னு கேட்டுட்டு போய்

COPYRIGHTED

56% 8:15 PM
https://drive.google.com/file

இருக்காங்க.... அம்மா அவங்க வீட்டிற்கு தான் போயிட்டு இருப்பாங்க" என்றார்...

சரி என்றவன் மீண்டும் திவ்யாவிற்கு அழைக்க அவள் அலை பேசி இன்னும் அனைக்கப்பட்டிருக்க "என்ன அண்ணி? என்ன பிரச்சனையா இருந்தாலும் இப்படியா வீட்டை விட்டு போறது? அதுவும் யார்கிட்டேயும் எதுவும் சொல்லாம..." என்று வருந்தியவன் இதற்கு மேலும் இதனை பற்றி மறைப்பது நல்லதல்ல என்று எண்ணி தன் தந்தையிடம் சென்று முருகன் சொன்னதை சொன்னான்...

அது வரை ஸ்ரீயைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருந்த பாலாவிற்கு அருண் திவ்யாவைப் பற்றி சொன்னதும் சுரீரென்று இருந்தது...

"எப்படி நான் திவ்யாவை கவனிக்க தவறினேன்.... ஸ்ரீயை ஆம்புலன்ஸில் ஏற்றும் பொழுது கூட திவ்யா அவளுடன் இல்லையே... எப்படி அவளை நான் மறந்தேன்?" என்று கலங்கியவர் அருணிடம் கலாவிற்கு அழைக்க சொல்ல, வேண்டாம் என்று மறுத்த அருணிற்கும் மனம் தவித்துப் போனது.....

ஏனெனில் தவறு எல்லாம் தங்கள் குடும்பத்தில் மேல் இருக்கிறது.... பாவம் ஒரு சின்ன பெண்ணை திருமணம் என்ற பேரில் அழைத்து வந்து அவரை இந்த அளவிற்கு அவமானப் படுத்தி இப்பொழுது அவர் வீட்டை விட்டு செல்லும் அளவிற்கு தள்ளிவிட்டு பின் எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவர் அம்மாவிற்கு அழைப்பது.... அழைத்து என்ன சொல்வது?? உங்கள் பொண்ணை என் அண்ணன் அவமானப் படுத்துவிட்டார்... அதனால் அவர் வீட்டை விட்டு சென்று விட்டார் என்றா?

அவன் வயதுக்கேற்றார் போல் அவனும் குழம்பி தவித்தான்....

COPYRIGHTED

8:15 PM 56%
https://drive.google.com/file



இவர்கள் இருவரும் பேசிக் கொண்டும் தன்னை மீண்டும் மீண்டும் திரும்பி பார்ப்பதை பார்த்துக் கொண்டிருந்த அர்ஜூன் யோசனையுடன் அவர்களின் அருகே செல்ல, அப்பொழுது தான் நர்ஸ் வந்து ஸ்ரீ கண் விழித்துவிட்டதாக சொன்னார்...

ஆவலுடன் அதி விரைவாக அறைக்குள் நுழைந்தவர்கள் அங்கு ஸ்ரீயை அந்த நிலைமையில் காண, பாலாவின் கண்களிலும் அருணின் கண்களிலும் நீர் பெருக்கெடுத்து வர, அவர்களின் பதைபதைப்பும் அழுகையும் ஸ்ரீயின் மனதை அசைக்க தனக்கு இருந்த சிரமத்தையும் மீறி கை நீட்டி அவர்களை அழைத்தார்...

அவர் அருகில் வந்தமர்ந்த அருணின் தலையில் கை வைத்தவர், மிகுந்த சிரமத்திற்கிடையே....

"எனக்கு ஒன்னும் இல்ல அருண்... பயப்படாத... உங்களை விட்டுட்டு அவ்வளவு சீக்கிரம் போக மாட்டேன்" என்று திணறித் திணறி பேசியவர் பிள்ளையின் முகத்திலும், தன் கணவரின் முகத்திலும் தெரிந்த திகிலை விலக்க சிரமப்பட்டு சிரிக்க முயல, அடக்க முடியாமல் தன் அன்னையை கட்டிக்கொண்டு அழுத அருண்....

"மாம், நீங்க நேத்தே சரியில்லைன்னு சொன்னேனே, கேட்டீங்களா? அப்பொழுதே ஹாஸ்பிட்டலுக்கு வந்திருக்கலாம் இல்லையா?" என்றான்.

தன்னை நினைத்து, தன் உடல் நிலையை நினைத்து மனதிற்குள் கலங்கி போயிருந்தாலும், தன் கலக்கத்தை முகத்திலோ, கண்களிலோ காட்டாமல் தன் அருகில் நின்றுக் கொண்டிருந்த அர்ஜூனை பார்த்த ஸ்ரீ அதன் பிறகு மீண்டும் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை...

COPYRIGHTED

8:15 PM 56%
https://drive.google.com/file 17



ஆனாலும் அவருக்கு நன்றாக தெரியும் தன் மூத்த மகன்... தன் மேல் உயிரையே வைத்திருப்பவன்... உள்ளுக்குள் எத்தனை கலங்கி இருக்கிறான் என்று....

ஆனால் எத்தனை பெரிய பேரிடியைப் போன்ற சோதனைகள் வந்தாலும், எவ்வளவு அசகாய சூழ்நிலைகள் வந்தாலும், எதற்கும் கண் கலங்காதவன் தன் உணர்வுகளை வெளியே காட்டாமல் நின்று கொண்டிருக்கிறான்.... தன் தாத்தாவைப் போல் என்று....

இருந்தும் அவன் திவ்யாவிடம் நடந்துக் கொண்ட முறை தானே அந்த சின்ன பெண்ணை வீட்டை விட்டு வெளியேதுறத்தியது என்றெண்ணியவர் சட்டென்று பாலாவிடம் "திவ்யா?" என்றார்.

இதற்கு மேலும் மறைக்க முடியாமல் பாலாவும் அருணும் திரும்பி அர்ஜூனைப் பார்த்தவர்கள் மேற் கொண்டு ஒன்றும் பேசாமல் இருக்க, ஸ்ரீயின் முகத்தில் தோன்றிய கலக்கத்தை கண்ட அருணிற்கு மருத்துவர் சொன்னது நியாபகத்தில் வந்தது....

"எந்த அதிர்ச்சியும் தாங்கும் சக்தி அவருக்கு இப்பொழுது இல்லை" என்று....

ஆனால் வேறு வழியும் இல்லை....

திவ்யா அண்ணியின் லெட்டரைப் பார்த்து தான் அவருக்கு இந்த மாரடைப்பே வந்திருக்கிறது... அப்படி இருக்க திவ்யா அண்ணியைப் பற்ற அவர் விசாரிக்காமல் விடப் போவதில்லை என்று உணர்ந்தவன் முருகன் சொன்ன விவரத்தை அப்படியே ஸ்ரீயிடம் கூறாமல்...

COPYRIGHTED

8:15 PM 56%
https://drive.google.com/file



"நீங்க ஒன்னும் கவலைப் படாதீங்க மாம்.... நான் இப்போ தான் அண்ணியிடம் பேசினேன்.... ஆனால் உங்கள் உடம்பை பற்றி அண்ணியிடம் ஒன்றும் கூறவில்லை... அவங்களை சீக்கிரம் வீட்டிற்கு வரச் சொல்லியிருக்கிறேன்... ஆனால் நாமும் அவங்களுக்கு கொஞ்சம் டைம் குடுக்கனும் மாம்.... இத்தனை நடந்ததற்கு பிறகு சட்டென்று எல்லாவற்றையும் மறந்திருங்கன்னு சொன்னா, எப்படி மாம்? பட், ஷி வில் கம் பேக் ஸூன் [But she will come back soon]" என்றான்..

அருணின் கூற்றில் அவன் தன்னை பார்த்தவாறே பேசிய விதத்தில் அர்ஜூனிற்கு புரிந்து போனது...

அங்கு ஏதோ விபரீதமாக நடந்து இருக்கிறது....

"திவ்யாவை வீட்டிற்கு வரச் சொல்லியிருக்கிறானா? அப்படி என்றால் திவ்யா எங்கு சென்று இருக்கிறாள்?" என்று திகைத்தவன் அருணையேப் பார்த்திருக்க,

ஆனால் இத்தனை விஷயங்கள் நடந்ததற்கு பிறகும் வாய் திறந்து தன் மனைவியைப் பற்றி விசாரிக்காத தன் அண்ணனின் பிடிவாதத்தையும் கோபத்தையும் எண்ணி வருத்தமடைந்த அருண் தன் கையில் இருந்த கடிதத்தை நீட்டினான்...

முகத்தில் குழப்ப ரேகையுடன் கடிதத்தை வாங்கி படிக்க ஆரம்பித்த அர்ஜூனின் முகம் கோபமும், வெறுப்பும், யோசனையும், கலக்கமும் என்று பலவித உணர்ச்சிகளின் கலவையாக மாற மாற அருணுக்கு மிதமிஞ்சிய பதற்றம் ஏற்பட துவங்கியது...

"இது வரை நடந்தது போதாமல் மேற்கொண்டு எதுவும் செய்துவிடுவாரோ அண்ணன்" என்று...

COPYRIGHTED

8:16 PM
https://drive.google.com/file

ஆனால் அர்ஜூனின் மனதில் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்களை, மனதில் பிரவாகித்துக் கொண்டிருந்த உணர்வுகளை, அவனின் அடி மனதில் ஏற்பட்டிருந்த காதல் என்ற நுண்ணுர்வை அறிந்திருந்தவர் ஒருவரும் இல்லையே...

தன் உணர்ச்சிகளில் கலந்துவிட்ட, தன் மனதை விழுங்கிவிட்டிருந்த தன் மனையாளின் மீது என்றோ உதயமாகியிருந்த, மலர்ந்து விரிந்திருந்த தன் கடினமான மனதைக் கூட ஊடுருவி விட்ட உன்னதமான காதலை அவன் இது வரை ஒருவரிடமும் வெளிப்படுத்தி இருக்கவில்லை....

அவன் மனைவியிடம் கூட... ஆனால் மஹாவைத் தவிர...

கடிதத்தை படித்தவன் "ஷிட்" என்று கத்தியவனின் கண்களில் கலந்து தெரிந்த வெறுப்பும் வேதனையும் அங்கு இருந்த அனைவருடைய மனதிலும் மீண்டும் அச்சத்தையும் அதிர்ச்சியையுமே கொண்டு வர...

அதே பார்வையுடன் தன் அன்னையை நோக்கியவன்,

"மாம்.... வாட் இஸ் திஸ் மாம்?.... [Mom... What is this mom?] இந்த லெட்டர படிச்சதனால தான் உங்களுக்கு இப்படி ஆனாதா? அப்படி என்ன உங்களுக்கு உங்க சொந்த பிள்ளைகளை விட அவ முக்கியமா போய்ட்டா? இந்த அளவிற்கு உடம்பு முடியாம போறதுக்கு" என்றான் அடக்கப்பட்ட கோபத்துடன் ஆனால் வார்த்தைகளை கடித்து துப்பியவாறே....

"அர்ஜூன், நீ கொஞ்ச நேரம் பேசாமல் இருக்கியா?" என்று பாலா கூற திரும்பி தன் தந்தையைப் பார்த்தவன் அதற்கு மேலும் தன்

COPYRIGHTED

https://drive.google.com/file

அன்னையை தன் வார்த்தைகளால் வேதனை படுத்திவிடக் கூடாது என்று எச்சரிக்கையாக ஒன்றும் பேசாமல் வெளியே சென்றவன் நேரே நிர்வாக இயக்குனர் சுந்தரத்தின் அறையை அடைந்தான்...

ஆனால் அவன் தன் கையோடு திவ்யாவின் கடிதத்தை கொண்டு சென்றதை அங்கு இருந்த சூழ்நிலையில் ஒருவரும் கவனிக்கவில்லை....

மீண்டும் விளக்கமாக ஸ்ரீயின் உடல் நிலையைப் பற்றி பேசியவன் சிகிச்சையையும் பற்றி கலந்து ஆலோசித்துவிட்டு, மருத்துவமனை முன் பணத்தை செலுத்தியவன் மஹாவிற்கு அழைத்து தான் அவளை அழைக்க அவளின் கல்லூரிக்கு வருவதாகச் சொன்னான்...

ஏனெனில் அவனுக்கு நன்கு தெரியும் தன் மனதை புரிந்துக் கொண்டவள் மஹா ஒருவளே என்று....

அவசர சிகிச்சை பிரிவில் அதற்கு மேல் ஒருவரையும் அனுமதிக்க முடியாது என்று நர்ஸ் கூற வெளியே வந்த அருணும் பாலாவும் அர்ஜூனைத் தேடி அவன் அலை பேசிக்கு அழைக்க, அவன் மஹாவை தான் கல்லூரியில் இருந்து அழைத்து வருவதாக சொன்னது இருவருக்குமே மிகப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது..

ஏனெனில் அர்ஜூனைப் பொறுத்தவரை அவனுக்கு தொழில் மட்டும் தான் வாழ்க்கை... தொழில் சம்பந்தமான மீட்டிங்ஸ், அது சம்பந்தமான பார்ட்டிகள் என்று தான் அவன் வெளியே போவானே தவிர, இது போன்ற வீட்டு வேலைகளை எல்லாம் செய்வது அருண் தான்...

COPYRIGHTED

55% 8:16 PM
https://drive.google.com/file



அதுவும் என்ன காரனமாக இருந்தாலும் சரி, அவசரமாக இருந்தாலும் சரி, தன் தங்கையை கல்லூரியில் இருந்து அழைத்து வருவது எல்லாம் கனவிலும் நடக்காத ஒன்று....

ஆனால் இன்று அவனே கல்லூரிக்கு செல்வதைக் கேட்டு ஆச்சரியத்தில் இருவரும் திகைத்தாலும், மீண்டும் இருவரின் மனதையும் ஸ்ரீயின் உடல் நிலையே ஆக்கிரமத்துக் கொள்ள ஒன்றும் பேசாமல் ஐசியுவிற்கு அருகிலே போடப்பட்டிருந்த சேரில் மௌனமாக அமர....

அங்கு உள்ளிருந்த ஸ்ரீக்கோ மனம் ஒரு நிலையில் இல்லை....

இத்தனை நடந்தும் தன் கோபத்தையும், சீற்றத்தையும் கொஞ்சமும் குறைத்துக் கொள்ளாத தன் மகனை நினைத்து ஸ்ரீக்கும் மனம் சலசலத்து பாரமாகிப் போனது...

அர்ஜூனின் குணமும் ஆணவமும் கோபமும் நன்கு தெரிந்திருந்தாலும் அவரால் அவனின் செயல்களை ஜீரனித்துக் கொள்ள இயலவில்லை...

மனைவியை கை நீட்டி அடித்தது மட்டும் இல்லாமல் என்ன மாதிரியான வார்த்தைகளை அவன் உதிர்த்துவிட்டான்...

என்ன தான் அவனுக்கு பிரச்சனைகள் இருந்தாலும் அந்த சின்ன பெண்ணை மனைவி என்று கூட பாராமால் வேலைக்காரி என்று அழைத்திருந்தவனை அவரால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை...

அவனுடைய கோபத்திற்கும் வெறுப்பிற்கும் எது காரணமாக இருந்தாலும் அவனின் அடாவடிச் செயலை, அநாகரிகமான செய்கையை அவர் மன்னிக்கத் தயாராக இல்லை என்று நினைத்துக்

COPYRIGHTED

55% 8:16 PM

https://drive.google.com/file 17

கொண்டிருந்தவருக்கு திவ்யாவை நினைத்து பயம் பிடித்துக் கொள்ள ஆரம்பித்தது....

எத்தனை வேதனையை சுமந்து அவள் வீட்டை விட்டு வெளியேறி இருப்பாள்? சின்ன பெண் வேறு? சென்னையைப் பற்றி என்ன தெரியும்?" என்று கலங்கியவராக நர்ஸை தன் அருகே அழைத்தவர் தன் கணவனை தன்னிடம் அழைத்து வரச் சொல்ல, அவர்...

"இல்லம்மா நீங்க ரெஸ்ட் எடுக்கனும்.... ரொம்ப ஸ்ட்ரெய்ன் பண்ணக்கூடாது.... இது எங்க MD யின் ஸ்ட்ரிக்ட் ஆர்டர் கூட" என்றார்..

"ஒரே ஒரு நிமிஷம் கூப்பிடம்மா, ரொம்ப முக்கியமான விஷயம் பேசனும்... ஒரு நிமிஷந்தான்" என்று மறுபடியும் கெஞ்ச, வேறு வழியில்லாமல் அவர் பாலாவை அழைக்க, அவர் என்னவோ ஏதோ என்று பதறி போய் வந்தார்..

தன் மனைவியின் அருகே வந்தவரின் கையை பிடித்துக் கொண்ட ஸ்ரீ,

"என்னங்க, எனக்கு என்னமோ திவ்யாவை நினைச்சு பயமா... அவ ரொம்ப சின்ன பொண்ணு.... பயந்த சுபாவம் கூட..... ஏதாவது பண்ணிக்கிட்டான்னா?"

"ஏம்மா அப்படி எல்லாம் நினைக்கிற? அப்படி எல்லாம் ஒன்னும் நடக்காது... நீ கலங்காம இரு"

"இல்லைங்க, எனக்கு ரொம்ப பயமா இருக்கு... முதல்ல கலாக்கிட்ட போன் போட்டு குடுங்க... நான் உடனே திவ்யாவை பத்தியும் இங்க நடந்தது பத்தியும் சொல்லனும்"

COPYRIGHTED

8:16 PM
https://drive.google.com/file

அவரை உற்று நோக்கிய பாலா,

"ஸ்ரீம்மா, இதெல்லாம் நாங்க பார்த்துக் கொள்ளமாட்டோமா.... நீ ஏன் வீணா ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கிற.... உனக்கு இப்போ தேவை ரெஸ்ட் மட்டும் தான்... நானே சம்பந்தியிடம் பேசுறேன்.... நீ எதைப் பத்தியும் வொர்ரி பண்ணிகாத" என்றார்.

கணவரின் கூற்றில் சிறிது நிம்மதி அடைந்தாலும் திவ்யாவைப் பார்க்கும் வரை தனக்கு நிம்மதி இல்லை என்று நினைத்த ஸ்ரீ ஒருவழியாக மருந்துகளின் உதவியால் உறங்க ஆரம்பிக்க, வெளியில் வந்த பாலா சிவ சுப்ரமணியத்தை அழைத்தார்...

சம்பந்தியிடம் நடந்தவற்றை மேலோட்டமாக சொன்னவர், தன் மகனுக்கும் மருமகளுக்கும் சிறிது பிரச்சனை, அதனால் திவ்யா கடலூருக்கு வந்துக் கொண்டிருப்பதாக சொன்னவர் ஸ்ரீயின் நிலைப் பற்றி சொல்வதை தவிர்த்தார்....

ஆரம்பத்தில் பதட்டம் அடைந்த சிவ சுப்ரமணியத்தை சமாதானப் படுத்தியவர், தன் மகனின் பிஸினஸ் பிரச்சனைகளால் தான் கொஞ்சம் கோபம் அடைந்து அதனை திவ்யாவிடம் காண்பித்து விட்டான் என்றும், திவ்யா வந்தால் அவளை திரும்பவும் ஊருக்கு அழைத்து வரவும் கேட்டுக் கொண்டார்...

திவ்யாவை அழைத்த சிவ சுப்ரமணியத்திற்கு அவள் அலை பேசி அணைக்கப்பட்டிருந்ததை அறிந்த பொழுது தெரிந்து போனது இது நிச்சயம் சிறிய பிரச்சனை அல்ல என்று...

COPYRIGHTED

55% 8:16 PM
https://drive.google.com/file



ஏனெனில் அலை பேசியை அனைத்திருக்கிறாள் என்றால் அவளுக்கு யாரிடமும் பேச விருப்பம் இல்லை என்று தானே அர்த்தம் என்று எண்ணியவர் தன் மனைவிக்கு அழைத்து அவரை வீட்டிற்கு வரச் சொன்னவர், அவர் வந்தவுடன் விரிவாக எடுத்துரைத்தார்..

திவ்யா வீட்டை விட்டு வந்துவிட்டாளா? அதுவும் ஸ்ரீயிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் தனியே கிளம்பி வந்துக் கொண்டிருக்கிறாளா? கடவுளே! என்ன தான் கணவனின் மீது கோபம் இருந்தாலும் அதற்காக இப்படி கோபித்துக் கொண்டு தனியாக வரலாமா? அவளின் கணவர் என்ன நினைப்பார்? அவர் ஏற்கனவே பெரிய கோபக்காரர்... மிகுந்த அந்தஸ்து பார்ப்பவர்... இப்பொழுது அவரும் இப்படி அவள் வேளியே வந்ததை அவமானமாக நினைக்க மாட்டாரா? அப்படி என்றால் இனி திவ்யாவின் வாழ்க்கை?

COPYRIGHTED

இவற்றை நினைக்க நினைக்க ஒரு அன்னையாக கலாவின் மனதிலும் கலக்கம் சூழ்ந்தது...

அவர்களை அதிக நேரம் காக்க வைக்காமல் திவ்யாவும் களைத்து போய் வீட்டிற்குள் நுழைந்தாள்....

வந்தவளுக்கு தன் பெற்றோரின் முகம் பார்த்தவுடனே தெரிந்துப் போனது அவர்கள் தன் வரவைத் தான் எதிர்பார்த்திருந்தார்கள் என்று..

கலங்கிய விழிகளுடனும், களைத்த முகத்துடனும் வேதனை வழிய தன்னந்தனியாக வந்து நிற்கும் மகளைப் பார்த்த பெற்றவர்களின் மனம் துடித்தது....

அவள் அருகில் வந்த சிவ சுப்ரமணியம்...

8:16 PM
https://drive.google.com/file



"நீ எதுவுமே சொல்ல வேண்டாம்மா... இது உன் வீடு.... இங்க எப்பவும் உனக்கு இடம் இருக்கு" என்று கூற,

ஓடி வந்து தன்னைக் கட்டிக் கொண்டு அழுத மகளைப் பார்க்க கலாவிற்கும் மனது தாங்கவில்லை....

அவளை அதற்கு மேலும் எதுவும் கேட்டு அவளின் வேதனையை அதிகரிக்க விரும்பாதவர்...

"வா திவ்யா, குளிச்சிட்டு வா... சாப்பாடு எடுத்து வைக்கிறேன்" என்றார்,

தன் அன்னையின் கரிசனத்தை பார்த்தவளுக்கு தன் பிரச்சனைகளை எல்லாம் சொல்லி அழ வேண்டும் போல் இருந்தது...

ஆனால் சின்ன வயதில் இருந்தே அவர்கள் தன்னையும் தன் அண்ணனையும் வளர்க்க எவ்வளவு பாடுப்பட்டார்கள் என்று பார்த்து பார்த்து வளர்ந்தவளுக்கு, இதற்கு மேல் அவர்களுக்கு பாரமாக வந்துவிட்டோமே என்றே கழிவிரக்கம் வர...

"இல்லம்மா. எனக்கு பசிக்கலை..... நான் கொஞ்ச நேரம் தூங்கனும்" என்றவள் தன் அறைக்கு செல்ல, எதையோ யோசித்த கலா சட்டென்று....

"கதவை திறந்தே வச்சுட்டு தூங்கும்மா" என்றார்...

COPYRIGHTED

8:16 PM 55%
https://drive.google.com/file



திரும்பி தன் அன்னையை பார்த்தவளுக்கு தெரியும் அவர் எதற்கு அப்படி சொல்கிறார் என்று.....

வலி மிகுந்த ஒரு சிறு புன்னகையை மட்டும் உதிர்த்தவள் ஒன்றும் பேசாமல் தன் அறைக்குள் சென்று கதவை தாழ் போடாமலே கட்டிலில் அமர்ந்தவளின் உள்ளத்தில் மின்னல் போல் நடந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றும் தோன்ற ஆரம்பித்தது....

என்ன தான் முயற்சித்தாலும் கணவனின் நினைவில் நிலைக்குலைந்த மனது, இடம் பொருள் ஏவல் பாராமல் சமையல் அறையில் அவன் தன்னை முரட்டுத்தனமாக இழுத்ததினால் எழுந்த கிளற்ச்சியையும், அவன் தன் இடைத் தொட்டதினால் குழைந்து போன தன் தளிர் மேனியின் நிலையையும், வலுவான அவன் கரங்களின் அழுத்தத்தின் விளைவால் தான் அதிர்ந்து இறுக்க விழிகளை மூடி நின்றிருந்த தோற்றத்தையும் மீண்டும் மீண்டும் நினைத்து பார்த்து ஏங்கியது...

அவரை ஒரு நொடி கூட இனி பிரியக்கூடாது என்று ஆழ்மனதில் புதைந்து இருந்த அவளின் உள்ளத்தை கொள்ளை கொண்டிருந்த காதலும், இதயத்திலும் உணர்ச்சிகளிலும் ஒன்றிக் கலந்திருந்த கணவனின் முகமும் அவளைக் மௌனமாக கொல்ல, தடுமாறி தத்தளித்த தன் மனதினை அடக்க தெரியாமல் கண்களை இறுக்கி மூடித் திறந்தவள் ஆயாசத்துடன் மெதுவே கட்டிலில் சாய்ந்தாள்.

அவரின் மேல் இத்தனை காதல் இருக்கிறது... உடலின் ஒவ்வொரு அணுவும் அவர் வேண்டுமென்று கத்தி கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறது... இருந்தும் ஏன் நான் அவரை சந்திக்க செல்லவில்லை... அவர் வாய் திறந்து வெளிப்படையாக அழைத்தும் நான் செல்லாதது என் தவறு....

COPYRIGHTED

8:17 PM 55%

https://drive.google.com/file

அதனால் வந்த விளைவே என் மீது அவருக்கு வந்த கோபமும் வெறுப்பும்... ஆனால் அதே சமயம் என் மீது உன்மையில் காதல் இருந்திருந்தால் விஷம் போன்றி கூறிய வார்த்தைகளை அவர் ஏன் சொல்ல வேண்டும்?? விவாகரத்திற்கு தயாராக இருக்க ஏன் சொல்ல வேண்டும்??

யோசிக்க யோசிக்க அவள் தலையே வெடித்துவிடும் போல் இருந்தது...

அவள் வந்த சிறிது நேரத்தில் வீட்டிற்கு வந்த வினோத்திடம் திவ்யா அவளின் அறையில் இருப்பதை கலா சொல்ல, அவள் தனியே வந்திருப்பதை அறிந்தவன் அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற மனநிலையில் இருந்தான்...

ஒரு வேளை தான் மஹாவிடம் நடந்துக் கொண்டதை யாராவது பார்த்து அத்தானிடம் சொல்லி அதனால் ஏதும் அவர்களுக்குள் பிரச்சனை வந்ததோ? அதனால் தான் திவ்யா தனியாக வந்திருக்கிறாளோ? என்று எண்ணியவன் அவளை காண அவளின் அறைக்கு சென்றவன் அவள் கண்களை மூடியிருந்தாலும் விழி நீர் மட்டும் நிற்காமல் பெருகி கொண்டிருக்க, துன்பத்தின் உருவாய் படுத்திருந்த தங்கையைக் கண்டவனுக்கு நெஞ்சு உடைந்துவிடும் போல் இருந்தது....

தன் அருகில் அசைவை உணர்ந்தவள் கண்களை திறக்க, தன் அண்ணனை கண்டவள் அமைதியாக எழுந்து அமர, அவள் கரத்தை மென்மையாக பற்றியவன் கனிவுடன்,,,

"என்ன திவ்யா? என்ன பிரச்சனை?" என்றான்...

COPYRIGHTED

55% 8:17 PM
https://drive.google.com/file

ஐந்து வயது மூத்த தன் அண்ணனிடம் எப்பொழுதும் மனம் விட்டு பேசியே பழகியவள் திவ்யா...

தன் அன்னையிடமோ தந்தையுடமோ கூட வெளிப்படையாக பேசி பழக்கம் இல்லாதவள்... ஆனால் வினோத் என்றால் அவளுக்கு உயிர்.

கோவிலுக்கு செல்லும் பொழுதோ இல்லை, பள்ளிக்கும் செல்லும் பொழுதோ யாரும் தன்னை கிண்டல் செய்தால் வினோத்திடம் தான் ஓடி வந்து சொல்வாள்...

எத்தனையோ முறை கலா கேட்டும், தன் அண்ணனிடம் எளிதாக விஷயங்களை பகிர முடிந்தவளால் அவள் அன்னையிடம் சொல்ல முடிந்தது இல்லை...

ஒரு வேளை தன் அன்னையிடம் அப்படி பழகியிருந்தால் தன் கணவனிடம் தனக்குள்ள பயத்தையும், அவன் தன்னை அத்தனை காதலுடன் எதிர்பார்த்தும் தான் அவனிடம் நெருங்க முடியாத நிலைமையையும் வெளிப்படையாக மனம்விட்டு சொல்லியிருந்தால் இத்தகைய அசம்பாவிதங்கள் நடக்காமல் தவிர்த்து இருக்கலாமோ?

இன்றும் அதே போல் வீட்டிற்கு வந்ததில் இருந்து தாயிடமும் தந்தையிடமும் கூட எதனையும் சொல்லாது இருந்தவள், அவனைக் கண்டதும் கட்டிப்பிடித்து வெடித்து கதறிக் கொண்டு நடந்தவற்றைக் கூறினாள்...

"என்னை அவருக்கு சுத்தமா பிடிக்கலைண்ணா..... அதனால வந்தது தான் இத்தனை பிரச்சனைகளும்..... அவர் என்னை அறைஞ்சது கூட எனக்கு வலிக்கலண்ணா...... ஆனால் அவர் என்னை சொன்ன

COPYRIGHTED

55% 8:17 PM
https://drive.google.com/file



வார்த்தைகள் இப்போதும் என் காதுகளில் நெருப்ப அள்ளி ஊத்தின மாதிரி எதிரொலிச்சுக்கிட்டே இருக்கு" என்று சொற்களை கஷ்டப்பட்டு உதிர்த்து அழுதவளைக் கண்ட வினோத்தின் உள்ளத்தில் பலதரப்பட்ட உணர்ச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன...

அண்ணனின் அணைப்பில் இருந்த போதும் திவ்யாவின் உடலில் இருந்த நடுக்கம் குறையவில்லை... அவளை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டவன் மெல்ல தன் மார்பில் இருந்து அவளின் முகத்தை நிமிர்த்தி துயரம் நிரம்பிய அவளின் கண்களை பார்த்தவனின் கண்களிலும் நீர் திரண்டது...

ஆனால் அதே சமயம் திவ்யா சொன்ன அத்தனையும் கேட்டவனுக்கு அர்ஜூனின் மேல் இருந்த நம்பிக்கை மட்டும் உடையவில்லை... தன் அத்தானுக்கு தன் தங்கையை பிடிக்கவில்லை என்பதை அவன் மனம் ஏற்றுக் கொள்ள மறுத்தது...

பின் அவளின் தாலி பெருக்கென்று அர்ஜூன் திவ்யாவை காதலோடு பார்த்திருந்ததை மஹாவோடு சேர்ந்து ரசித்து பார்த்தவனாயிற்றே...

வேறு எங்கோ பிரச்சனை நடந்திருக்கிறது என்பதை யூகித்தவன் தங்கையை ஆசுவாசப்படுத்திவிட்டு எதற்கும் கவலைப்படாதே என்று அவள் தலையைக் கோதிவிட்டவனுக்கு இதற்கு வழி எதுவும் புலப்படவில்லை....

ஏனெனில் அர்ஜூனின் அந்தஸ்தும், அவனின் ஆளுமையும் அதிகாரமும் வினோத்திற்கு கலக்கத்தையும் தயக்கத்தையுமே கொடுத்தது...

COPYRIGHTED

8:17 PM 55%
https://drive.google.com/file



அவர் எதிரில் நின்று பேசுவதற்கே அத்தனை அச்சமாக இருக்கிறது... இதில் அவரிடம் சென்று திவ்யாவிற்கும் அவருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்பதா என்று கலங்கி போனான் வினோத்....

ஆக அர்ஜூனே மனம் மாறி வந்தால் தான் இவர்களின் பிரச்சனைகள் தீரும்... ஆனால் அவன் வருவானா?

கோபத்தில் சிக்குண்டிருந்த, தன் இதயத்தில் பூத்திருந்த ஆத்மார்த்தமான காதலை பகிர்ந்துக் கொள்ளாமல் உணர்ச்சிகள் முற்றிவிட்டதால் தன் சுயநிலையை இழந்து வார்த்தைகளால் நெருப்பை கக்கி தன் மனையாளை துடிக்க செய்திருந்த அர்ஜூன் தன்னவளை அழைத்து செல்ல வருவானா???

ஆனால் தொழில் சாம்ராஜ்யத்தில் அதிரடி அரசனாக திகழுபவன், தன் எதிராளிகள் அனைவரையும் ஆட்டிப் படைத்து அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்குபவன், எந்த நிமிடம் காதலில், திருமண வாழ்க்கையில் அந்தஸ்தும் ஈகோவும் பார்த்தால் தாம்பத்யம் இனிக்காது என்பதை உணருகிறானோ அந்த நொடி நிச்சயம் மலரினும் மெல்லிய தன் மனையாளை தேடி வருவான் என்ற நம்பிக்கையில் வினோத்துடன் சேர்ந்து நாமும் காத்திருப்போம்!!!!

மலரினும் மெல்லியவள்!

தொடரும்...

COPYRIGHTED

8:18 PM 55%
https://drive.google.com/file

பாகம் - 21

அங்கு மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த அர்ஜூனின் மனதில் மீண்டும் மீண்டும் திவ்யாவின் கடிதமே அலைஅலையாய் மோதிக் கொண்டிருந்தது...

காரில் அமர்ந்து இருந்தவன் தன்னிச்சையாக அவளின் கடிதத்தை எடுத்து பார்க்க, கடிதத்தில் அங்கிங்கு அவளின் கண்ணீர் துளிகள் பட்டுக் காய்ந்திருந்த இடம் அவளின் அச்சத்திற்கும் கலக்கத்திற்கும் பின்னால் மறைந்து கொண்டிருந்த ஆத்மார்த்தமான அன்பையும் அவளின் அதிர்ந்து மருண்ட விழிகளுக்குள் தன் மேல் துளிர்த்து ஒளிந்து கொண்டிருந்த காதலையும் உணர்த்தியது...

திருமணம் நடந்தேறி இரு நாட்களிலேயே தான் அவள் இருக்கும் இடத்தில் இருக்க விரும்பாமல் தூரம் தள்ளி போயிருந்த போதும், பின் அவளைத் தன்னவளாக முழுவதும் அடைய காத்திருந்த நாளில் தன்னை அவள் நிராகரித்துவிட்டாள் என்ற ஆவேசத்தில் வெளிநாடு போயிருந்த பொழுதும் தோன்றாத வலி இதயத்தில் இப்பொழுது ஆழமாகத் தோன்றி குத்தி கிழித்தது...

அவளை விட்டு தான் விரும்பி சென்ற பொழுது தன்னைத் தாக்காத மனப் பாரம், அவளைத் தவிக்க விட்டு அவள் விழிகளில் வழியும் நீரை பார்த்த வண்ணம் தான் பயணித்த பொழுது ஏற்படாத மனக்கிலேசம், அவள் தன்னை விட்டு சென்றுவிட்டள் என்றவுடன் அவன் உள்ளத்தையே அடி வரை ஆழ அழுத்தி அவனின் இதயம் தன் துடிப்பை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்வது போல் இருந்தது....

COPYRIGHTED

55% 8:18 PM
https://drive.google.com/file

அதற்கு மேல் அங்கு இருக்க முடியாமல் மஹாராவைக் அழைத்து வர முடிவு செய்தவன் அலை பேசியில் அவளை அழைத்து...

"மஹாரா, ஐ ஆம் கமிங் டு பிக் யூ அப் இன் தேர்டி மினிட்ஸ்... [Maha, I am coming to pick you up in thirty minutes]" என்று மட்டும் சொன்னவன் வேறு ஒன்றும் சொல்லவில்லை...

மற்ற அனைவரின் பார்வையிலும் அவன் ஏதோ ஒரு குற்றவாளிப் போலவும் எதிரியைப் போலவும் தென்படுவதில் அவன் மனமும் அடிபட்டுத் தான் போனது... தன்னையும் அறியாமல் முதல் முறை தன் தங்கையிடம் ஆறுதலைத் தேடிச் சென்றான்....

அங்கு வகுப்பறையில் அமர்ந்திருந்த மஹாராவிற்கோ முதலில் அலை பேசியில் அர்ஜூனின் எண்ணை பார்த்ததுமே அடி வயிறு கலங்கியது...

ஏனெனில் வீட்டில் நேருக்குநேராகப் பேச நேரிடும் பொழுதே தன் தங்கையிடம் கூட வார்த்தைகளை அளந்து பேசுபவன்...

மஹாராவும் தனக்கு எதுவும் வேண்டும் என்றாலும் தன் அன்னையிடமோ அல்லது தன் அன்னை முலமாகவோ தான் அர்ஜூனிடம் கேட்பாள்...

அவளாக என்றாவது ஒரு நாள் அவனிடம் வலிய சென்று பேசினால் கூட ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்லிவிட்டு தன் கணினியில் மூழ்கிவிடுவான்...

அப்பேற்பட்ட அர்ஜூன் அண்ணன் அழைக்கிறார் என்று திகைத்து போய் அழைப்பை எடுத்தவளின் அதிர்ச்சியைப் பண்மடங்கு அதிகரிப்பது போல்

COPYRIGHTED

8:18 PM
https://drive.google.com/file

இன்னும் அரை மணி நேரத்தில் கல்லூரிக்கு வருகிறேன் என்று சொன்னால்!!!!!

"அர்ஜூன் அண்ணா நம்மைப் பிக்கப் செய்ய வருகிறார்களா? அதுவும் இந்த நேரத்திலா?" என்று வெலவெலத்து போனாள்...

குரல் தடுமாற...

"என்னாச்சு அண்ணா? ஏதாவது பிரச்சனையா?" என்க...

"நத்திங் மஹா... யூ ஜஸ்ட் பி ரெடி [Nothin Maha... You just be ready]" என்றான்...

"எதற்கு வருகிறார்? அதுவும் காலேஜிற்கே... ஒரு வேளை அன்று மொட்டை மாடியில் வினோத் என்னிடம் நடந்து கொண்டதை யாராவது பார்த்து அண்ணனிடம் சொல்லி இருப்பார்களோ?" என்ற நினைப்பே அவளுக்குக் கதி கலங்கியது...

"ஐயோ! அர்ஜூன் அண்ணனுக்கு மட்டும் அந்த விஷயம் தெரிந்து இருந்தால் அவ்வளவு தான்... அண்ணியின் அண்ணன் என்று கூடப் பார்க்க மாட்டாரே... இதில் ஏற்கனவே அண்ணியின் மேல் கோபமாக இருப்பவர்... இப்பொழுது இது வேறு தெரிந்தால் வேறு வினையே வேண்டாம்" என்று கலங்கியவள் உலகில் உள்ள எல்லாக் கடவுள்களிடமும் வேண்டிக் கொண்டு அர்ஜூனிற்காகக் கல்லூரியின் வாயிலில் வந்து காத்திருக்க...

இருக்கும் பிரச்சனைகள் போதாது என்று அவள் வகுப்பு நேரத்தில் கல்லூரியின் நுழை வாயிலில் யாருக்காகவோ காத்திருப்பது தன் தோழர்களின் மூலம் கோகுலின் செவிகளுக்குப் போக, "அவள் யாருக்காகக் காத்திருக்கிறாள்? ஒரு வேளை அவளுடைய பாய்

COPYRIGHTED

ஃப்ரெண்டா? அது எப்படி எனக்குத் தெரியாமல் அவளுக்குப் பாய் ஃப்ரெண்ட்" என்று மண்டைக்குள் குடைய, வேகமாகத் தன் வகுப்பறையை விட்டு வந்தவனுக்கு அங்கு அவள் தனித்துக் காத்திருப்பதைப் பார்த்ததும் கோபத்தில் முகம் விகாரமாக மாறியது...

"இத்தனை நாள் காத்திருந்தவனை விட்டு நேற்று வந்தவனைத் தேடுகிறாளோ?... அப்போ நான் என்ன இலவு காத்த கிளியா?" என்று உள்ளம் ஆத்திரத்தில் கொந்தளிக்க அவளுக்குத் தெரியாமல் மறைந்து நின்று கவனித்தான்...

அவள் வகுப்பறையை விட்டு சட்டென்று வெளியே சென்றதும் அவளைத் தொடர்ந்து வந்த தோழிகளும்....

"என்னடி, யாருக்காகடி வெயிட் பண்ற? எங்களுக்குச் சொல்லவேயில்லேயே" என்று கிண்டல் செய்ய, அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்ல மஹா வாயைத் திறக்கும் முன்னே அதி வேகமாகக் காரை ஓட்டி வந்த அர்ஜூன் தன் தங்கைக்கு அருகில் வந்து நிறுத்தினான்.

அர்ஜூனின் காரைப் பார்த்ததுமே மஹாவின் கை கால்கள் உதறல் எடுக்க ஆரம்பித்தது...

"நிச்சயம் இது வினோத் சமந்தப்பட்ட விஷயமாகத் தான் இருக்க வேண்டும்... அவர் காரை ஓட்டி வந்த விதமும், சடாரென்று ப்ரேக் போட்டு என் அருகில் காரை நிறுத்திய வேகமுமே சொல்லியதே அவரின் கோபத்தை" என்று கதிகலங்கியவள் காரையே பார்த்திருக்க...

காரின் கருப்பு கண்ணாடியை இறக்கி விட்டவன் அவளைப் பார்த்தவாறே ஏறு என்பது போல் கதவை திறக்க, அது வரை அவளுடன் நின்றிருந்த அவளின் தோழிகள் ஸன் க்ளாஸ் போட்டு கம்பீரமாகவும்

COPYRIGHTED

55% 8:18 PM
https://drive.google.com/file



ஆணழகனாகவும் ஆளுமையுடனும் இருந்த அவனின் அழகை பார்த்து நிலைக்குலைந்தவர்கள் படபடப்புடன்...

"ஹே மஹா, யாருடி இந்த ஹேண்ட்ஸம்????" என்று அலறினார்கள்.....

"டீ, அது என் அண்ணன் டீ" என்று அவர்களிடம் கத்தியவள் காரில் ஏறப் போக அவளின் கையை இழுத்த அவளின் தோழிகளின் ஒருத்தி...

"ஏண்டி, இப்படி ஹீரோ மாதிரி ஒரு அண்ணன் இருப்பதா சொல்லவே இல்லைடி..... ஏன்? நாங்க சைட் அடிக்கக் கூடாதுன்னு மறைச்சிட்டியா????" என்க.....

"கிழிஞ்சது போ, இது மட்டும் அர்ஜூன் அண்ணா காதில் விழுந்ததோ தொலைந்தோம்" என்று நினைத்தவள்...

"விடுங்கடி, நாளைக்குப் பேசுறேன்... எங்க அண்ணனே காலேஜுக்கு வந்திருக்காங்கன்னா ஏதோ பெரிய பிரச்சனைன்னு அர்த்தம்.... ப்ளீஸ் நாளைக்குப் பார்க்கலாம்" என்றவள் காரில் ஏறினாள்...

அர்ஜூனைப் பார்த்ததும் அவளுடைய பாய் ஃப்ரெண்டாகத் தான் இருக்கும் என்று நினைத்த கோகுலுக்கு அவனின் அழகும் கம்பீரமும் நிச்சயம் தனக்கு இல்லை என்று உரைக்க,

"அவன் எப்படி இருந்தால் என்னடி, நீ எனக்குத் தான்" என்று பல்லைக் கடித்துக் கொண்டு நின்றிருந்தவன், மஹா தன் தோழிகளிடம் "அர்ஜூன் என் அண்ணா" என்று சொன்னதுமே ஒரு பக்கம் நிம்மதி அடைந்தாலும், அர்ஜூன் வந்த வேகமும், அவனின் கம்பீர தோரணையும் அவன் மனதில் கிலி உண்டாக்க தவறவில்லை.

COPYRIGHTED

https://drive.google.com/file

மறைந்து நின்றவன் அர்ஜுனின் கண்களில் படாதவாறு மேலும் தன்னை மறைத்துக் கொண்டான்....

காரில் ஏறியதில் இருந்து அர்ஜூன் ஏதாவது பேசுவான் என்று அவன் முகத்தையே திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு மஹா வர, ஆனால் அவன் வாய்த் திறப்பதாகத் தெரியவில்லை...

அதற்கு மேல் பொறுக்க மாட்டாது ஒரு வழியாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு...

"என்னாச்சு அண்ணா? ஏன் திடீர்னு, என்னன்னு சொல்லுங்கண்ணா.... எனக்கு என்னமோ நீங்க அமைதியா வரதப் பார்த்தா பயமா இருக்கு" என்க....

"ஒன்னும் இல்ல.... பேசாம வா" என்றான்...

மீண்டும் நிசப்தம்...

அச்சத்தில் படபடப்பு வர, இதயம் வேறு அதற்கு ஏற்றார் போல் தன் துடிப்பை பல மடங்கு அதிகரிக்கச் சிறிது நேரம் அமைதியாக வந்தவளால் அதற்கு மேல் மௌனமாக இருக்க இயலவில்லை....

காரினும் குடிக்கொண்டிருந்த அமைதியை கிழிக்கத் திவ்யாவை பற்றிப் பேசத் துவங்கினாள்...

அர்ஜூன் எதிர்பார்த்ததும் அது தானே...

COPYRIGHTED

54% 8:21 PM
https://drive.google.com/file



ஒற்றை விரல் அசைவில் அனைவரையும் ஆட்டிப்படைக்கும் கர்ஜிக்கும் சிங்கம் இன்று சிறு பிள்ளை போல் தன் சின்னத் தங்கையிடம் ஆறுதலை தேடி வந்திருக்கிறது....

ஆனால் அவனின் இயற்கையான குணம் தன் மனதில் இருப்பதை வாய் திறந்து வெளிப்படையாகச் சொல்ல விடவில்லை....

"ஏன் அண்ணா, நேற்று அப்படி நடந்துக்கிட்டீங்க... பாவம் அண்ணா திவ்யா அண்ணி.... ஏற்கனவே ரொம்பப் பயந்த சுபாவம் அவங்க... இதுல நீங்க நடந்து கொண்ட விதத்தில் பாவம் ரொம்ப மனசு கஷ்டப்பட்டுட்டாங்க... நேற்று ராத்திரி முழுதும் தூங்கவே இல்லை... அழுதுகிட்டே இருந்தாங்க தெரியுமா? நீங்களும் ஒன்னு புரிஞ்சுக்கனும்.... அவங்களுக்குப் பத்தொன்பது வயது தான் ஆகுது.... நம்ம எல்லாத்தையும் விட ரொம்பச் சின்னப் பெண்தான்னு.... ஆனால் எனக்கு நல்ல தெரியும் உங்களுக்கு அவங்கள எவ்வளவு பிடிக்கும்னு... இல்லைன்னு மட்டும் சொல்லிடாதீங்க... இது யாருக்கு, ஏன் திவ்யா அண்ணிக்கே தெரியுமோ தெரியாதோ தெரியாது, ஆனால் எனக்குத் தெரியும்" என்று கூற அவளைத் திரும்பி பார்த்தவன் ஒன்றும் பேசாமல் காரை ஓட்டுவதிலேயே கவனம் ஆக இருக்க,

இதற்கு மேல் ஒரு அண்ணனிடம் ஒரு தங்கை எப்படி விளக்குவது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அருணோடு கூட அவள் கொஞ்சம் மனம் விட்டு பேசி விடுவாள்..... ஆனால் அர்ஜுனிடம் இவ்வளவு பேசியதே அதிசயம்...

வாழ்க்கையில் இரண்டாவது முறையாக அதுவும் அவனின் தனிப்பட்ட வாழ்க்கையை, திருமண வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறாள்....

COPYRIGHTED

https://drive.google.com/file



அவனும் இத்தனை நேரம் அவள் பேசியதற்குக் கோபப்படாமல் அமைதியாக இருந்ததே அவனின் குனத்திற்கு மாறு பட்டது என்று நினைத்தவள் தானும் மௌனமாகி விட, அடுத்த அரை மணி நேரப் பயணத்தில் காரை மருத்துவமனை வாயில் நிறுத்தினான் அர்ஜூன்..

தன்னை மறந்து யோசனையில் வந்தவள் அப்பொழுது தான் கவனித்தாள் அவன் காரை நிறுத்தி இருப்பது மருத்துவமனையில் என்று...

அது வரை வினோத்தை மட்டுமே நினைத்து பயந்து கொண்டு வந்தவளை வேறு ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்கிறது என்ற திகில் கவ்வி கொள்ள, ஒரு வேளை நேற்று அண்ணா அப்படி முரட்டுத்தனமாக நடந்து கொண்டதில் அண்ணிக்கு தான் ஏதோ ஆகிவிட்டதோ என்று நினைத்தவள் அர்ஜூனின் கையைப் பற்ற, அவளின் கையை அழுத்திக் கொடுத்தவன் "இறங்கு" என்றான்...

"அண்ணா, எனக்குப் பயமா இருக்கு, யாருக்கு? என்னாச்சு?"

பிடித்திருந்த அவள் கரத்தில் அழுத்தத்தைக் கூட்டியவன்.... "வா" என்று மட்டும் சொல்லி முன்னால் நடக்க...

ஒன்றும் புரியாமல் மனக் கலக்கத்துடன் விறுவிறுவென்று அவன் பின்னேயே வேகமாக நடந்தவள், அவசர சிகிச்சை பிரிவின் அருகில் அமர்ந்திருந்த அருணையும் தந்தையும் பார்த்து ஓடிச் சென்று என்ன என்று விசாரிக்க,

"ஒன்னும் இல்லடா, மாம்க்கு மைல்ட் அட்டாக்... பட் கரெக்டான நேரத்தில ஹாஸ்பிட்டலில் சேர்த்தால இப்போ ஒன்னும் பிரச்சனை இல்லை" என்று சொன்னார் பாலா...

COPYRIGHTED

54% 8:21 PM
https://drive.google.com/file

அதிர்ந்தவள் ஓடிச் சென்று ஐசியுவின் கதவின் வழியே தன் அன்னையைப் பார்த்தவளுக்கு அழுகை பீறிக் கொண்டு வந்தது..

அவளை இறுக்கி அணைத்து பாலாவும் அருணும் ஆறுதல் சொல்ல சிறிது நேரத்தில் கண் விழித்த ஸ்ரீ மஹா வந்திருப்பதை அறிந்தவர் அவளுடன் உரையாடிவிட்டு அர்ஜூனை தேட ஆனால் அதற்குள் அவன் மருத்துவமனையை விட்டுச் சென்றிருந்தான்...

மஹாவிடம் திவ்யாவின் கடிதத்தைப் பற்றியும் அவள் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியே சென்று விட்டதையும் ஸ்ரீ மூச்சு வாங்க எடுத்துரைக்க.....

அர்ஜூனிற்குத் தன் மனைவியின் மீது அரும்பியிருந்த காதலையும், அதனை அவன் வெளிப்படுத்துவதில் ஏற்பட்டிருந்த தடுமாற்றத்தையும் முதல் முறை தன் அன்னைக்குத் தெளிவுபடுத்தினாள் மஹா...

கடினமான பாறையில் இருந்து கூட நீர் எடுத்துவிடலாம் ஆனால் தன் மகனின் இதயத்தில் இருந்து காதலா? தன் காதுகளையே அவரால் நம்ப முடியவில்லை...

அவன் தன் மனைவியை ரசிப்பதை அவரும் தான் கண்டிருந்தார்... அவன் கண்கள் அவளை அதீத ஆர்வத்துடன் தேடுவதைக் அவரும் கண்கூடாகப் பார்த்திருந்தார்....

ஆனால் நேற்று அவன் முரட்டுத்தனமாக நடந்து கொண்ட விதம், திவ்யாவின் மெல்லிய இதயத்தைக் குத்தி கிழித்த அவனின் கூரிய ஈட்டி போன்ற வார்த்தைகள், அவள் வீட்டை விட்டுச் சென்றுவிட்டது தெரிந்தும் பதறாமல் நிதானமாக இருக்கும் அவனின் நிலை என்று அவரின் நம்பிக்கையை ஒட்டுமொத்தமாகச் சிதற அடித்திருந்தான் அர்ஜூன்...

COPYRIGHTED

54% 8:22 PM
https://drive.google.com/file
17



"மாம், அர்ஜூன் அண்ணனைப் பத்தி எனக்கும் மட்டும் தான் மாம் தெரியும்.... அவங்க எந்த அளவுக்கு அண்ணிய லவ் பண்ணுறாங்கன்னு" என்று மஹா தொடர, ஸ்ரீயால் நம்ப முடியவில்லை..

"அப்படி அவளை லவ் பண்றவன் ஏன் அந்த மாதிரி நடந்து கொண்டான்? என்று வேதனையுடன் கேள்வி எழுப்ப....

"அது தான் எனக்கும் புரியலை மாம்... ஆனால் எனக்கு நல்லா தெரியும்... அண்ணா எப்பவோ திவ்யா அண்ணிய வை:ப்பா ஏத்துக்க ஆரம்பிச்சிட்டாங்கன்னு... ஹி இஸ் இன் லவ் வித் ஹெர் [He is in love with her] " என்றாள் உறுதியாக...

ஸ்ரீக்கும் புரிந்தது... ஆனால் சிக்கலை உருவாக்கிய அவனே அதனைத் தீர்க்கவும் வேண்டும்.... அதற்கு அவன் தன் மனைவியைத் தானே தேடி செல்ல வேண்டும்...

அது வரை நாம் பொறுத்திருந்து தான் ஆக வேண்டும் என்று முடி வெடுத்தார்.

அன்று இரவு வீட்டிற்குச் செல்லாமல் அலுவலகத்திலேயே தங்கிவிட்டவன் மறுநாள் மாலை வரை மருத்துவமனையில் தன் அன்னையுடன் கழித்துவிட்டு இரவு நெருங்கவும் வீட்டிற்குக் கிளம்பக் காரை செலுத்திக் கொண்டிருந்தவனின் மனதில் மஹா சொன்ன வார்த்தைகளே திரும்பத் திரும்ப ஒலித்தது.

வரும் வழியெல்லாம் தன்னவளின் நினைவுகளே அவனை அலைக்கழித்துக் கொண்டிருக்க, சுனாமியாய் ஆர்ப்பரிக்கும் தன் மனதை அடக்கவும் தெரியாமல், கொந்தளித்துக் கொண்டு இருக்கும் தன்

COPYRIGHTED

54% 8:22 PM
https://drive.google.com/file



உள்ளத்தை ஒருவரிடமும் வெளிப்படுத்தவும் முடியாமல், வீட்டிற்குப் போகவும் விருப்பம் இல்லாமல் காரிலேயே சுற்றியவன் வெகு நேரம் கழித்தே வீட்டிற்குச் சென்றான்...

காரை நிறுத்திவிட்டு வீட்டிற்குள் நுழையும் முன் அவன் கண்களில் முதலில் பட்டது திவ்யா நேற்று காலையில் வீட்டை விட்டுச் செல்வதற்கு முன் வாசலில் போட்டிருந்த அழகிய கோலம்...

மனமுழுவதும் கவலைகளையும் வேதனைகளையும் சுமந்திருந்தாலும் இதுவே தான் கடைசியாக இந்த வீட்டின் வாயிலில் போடும் கோலம் என்று ஏற்கனவே அவளாக முடிவெடுத்திருந்தாலும் சிறிதும் கசங்கி சிதறாத பிரமிக்கதக்க வகையில் அவள் போட்டிருந்த கோலம் அர்ஜூனிற்கு அவன் மனையாளின் பொறுமையையும் மென்மையான மனதையுமே உணர்த்தியது...

அன்று ஒரு நாள் அவள் கோலம் போட்டுக் கொண்டிருக்கும் பொழுது தான் எதேச்சையாக வந்து விட, அவனைக் கவனிக்காதவள் புடவையை நன்கு இழுத்து சொறுகி கோலம் போடுவதில் கவனமாக இருக்க,

தன் இதயத்தைக் கலங்கடித்த அவளின் எழில் தோற்றமும், கணவனாகக் கர்வத்துடன் தான் ரசித்த அவளின் மார்பில் தவழ்ந்து ஊசலாடிக் கொண்டிருந்த தாலிக் கயிறும், வாழைத் தண்டு போல் பளபளத்த கால்களும், அதில் அவள் அணிந்திருந்த மெல்லிய வெள்ளி கொலுசுகளும் கண்களின் முன் தோன்ற பிரமை தட்டிய நிலையில் சில நிமிடங்கள் வாயிலிலேயே நின்றவன் பின் தன் தலையைச் சிலுப்பிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான்....

வீட்டிற்குள் நுழைத்தவனின் கண்கள் தன்னையும் அறியாமல் டைனிங் டேபிளுக்கும் சமையல் அறைக்கும் பயணிக்க, சிறு பெண் போல் வீட்டில் வளைய வந்த தன் மனையாளின் அழகிய தோற்றமும், குழந்தைத்

COPYRIGHTED

54% 8:22 PM
https://drive.google.com/file



தனத்துடன் அவள் கலகலத்து சிரிக்கும் பொழுது ஆழ விழும் கன்னக்குழிகளும் இன்று நிழலாய் தோன்ற....

நிழல் மட்டும் தொடர்ந்து வந்த

நிலமை மாறி போனதே

நிஜம் உன்னை நெருங்கி நிற்க

வயது கோலம் போடுதே

என்று அவளின் நிஜத்தைத் தேடி மனம் கணத்துப் போய்ப் பிசைய, தன்னிச்சையாக அவனின் கால்கள் அவனைச் சமையல் அறைக்குள் இட்டுச் சென்றது...

அங்கு மலரினும் மெல்லிய அவளின் மென்மையான இடையைத் தழுவியதும், அதனால் அவள் ஸ்தம்பித்துப் போய்க் கண்களை இறுக்க மூடி நின்றதும் அவளின் மென்மையான உடல் கூறுகள் அவன் மீது தவழ்ந்து ஏற்பட்ட உணர்ச்சிகளும் கிளர்ச்சியைக் கிளப்பி அவன் சித்தத்தைத் தடுமாறச் செய்தது....

COPYRIGHTED

அவளின் மென்மையான ஸ்பரிசமும், எப்பொழுதும் மல்லிகை சூடியிருப்பதால் அதன் நறுமனம் கலந்த அவளின் பிரத்யோக வாசமும் வேட்கையைத் தூண்ட, தடுமாறிய மனமே உணர்த்தியது அவளின் மேல் உள்ள அளவுக் கடந்த காதலையும் தன் மனைவியின் அருகாமையைத் தேடும் தன் இதயத்தின் தவிப்பையும்...

அவளின் களங்கம் இல்லாத வெகுளித்தனமான உள்ளமும், தன்னைக் கண்ட ஒவ்வொரு நாளும் பதற்றத்துடன் தலை கவிழ்ந்த நிமிடங்களும், தான் அகன்றதும் தன் முதுகையே ஏக்கத்துடன் வெறித்துப் பார்த்திருந்த

54% 8:22 PM
https://drive.google.com/file



அவளின் விழிகளும் அர்ஜூனிற்கு நிமிடத்திற்கு ஒரு தரம் அவளில்லாத நிதர்சனைத்தை உணர்த்தியது...

தன் அறைக்கு வந்தவன் மனதை இறுக்கி பிடித்துத் தன்னைக் கட்டுபடித்திக் கொண்டு ஆழ்ந்த பெரு மூச்சைவிட்டவன் அப்படியே கட்டிலில் சாய்ந்தான்....

இதுவே நிதர்சனம்... இதுவே யதார்த்தம்....

தன் குடும்பத்தாருடன் விவரம் தெரிந்த நாள் முதலே தள்ளி இருந்தவன்... ஒருவரிடமும் மனம் விட்டு பேசியிராதவன்.... உள்ளம் திறந்து யாரிடமும் வெளிப்படையாகக் கலந்திராதவன்....

தன்னை சுற்றி ஒரு இரும்பு கோட்டைச் சுவரைக் கட்டி அதனை அனைத்து பக்கங்களிலும் இறுக்கப் பூட்டி தன் உள்ளத்தைத் தனக்குள்ளே சிறை வைத்து இருபத்தி ஏழு வயது வரை கடினமான இருதயத்துடனும், தொழிற்கள் மட்டுமே தன் உலகம் என்ற வெறியுடனும் வாழ பழகியிருந்தவன்...

அப்படிப் பட்ட அர்ஜூனின் இதயத்தில், புத்தியில், உணர்வில் நுழைந்து கலந்தவள் அவனை முதன் முதலில் கவர்ந்த திவ்யா....

இரும்பாகி இருந்த உள்ளத்தில் ஆத்மாவையே ஊடுறுவிப் பிரவாகம் செய்து முளைத்தெழுந்த காதலை மலரச் செய்து அவனின் இதயத்தைத் தன் வசமாக்கியவள்...

COPYRIGHTED

8:22 PM 54%
https://drive.google.com/file



மனையாளின் நினைவுகள் கலங்கடிக்கத் திணறிக் கொண்டிருந்தவன் பீரோவை திறந்து வெளியில் எடுத்தான் அவளுக்கு முதன் முதலாகத் தான் வாங்கிய பரிசினை...

அது வைரகற்களும் ரூபிக்களும் பதித்து ஜொளித்துக் கொண்டிருக்கும் ஒரு நகை செட்...

தங்க சங்கிலியில் ஐந்து ரோஜாப் பூக்கள் கொத்தாக இருப்பது போல் உள்ள ஒரு கழுத்துப் பதக்கம் (பெண்டெண்ட்)..... ரோஜாப் பூக்கள் ரூபியிலும் ஆங்கங்கே வைரக்கற்களும் பதிக்கப் பட்டிருந்தது பார்ப்பவர்களின் கண்களை அத்தனை கவர்வதாக இருந்தது...

அதே டிசைனில் தோடுகளும், ஒற்றை ரோஜா உள்ள மோதிரமும், அழகாக வரிசையாக ரோஜா பூக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பது போல் டிசைன் செய்யப்பட்ட வளையல்களும் அவனின் முதல் பார்வையிலே கொள்ளை கொள்வதாக இருக்க அமெரிக்காவில் இருந்து கிளம்பும் நேரம் தன்னவளுக்காகவே என்று வாங்கி வந்திருந்தான்...

கட்டிலில் தலையணையை நிமிர்த்தி வைத்து அதில் சாய்ந்தவாறு படுத்தவன் நகைகளைக் கையில் தடவிப் பார்த்தவனின் மனது அவளையே வண்ணத்துப்பூச்சியாய் சுற்றி சுற்றி வர மனம் கரைந்து காதலில் உருகத்தான் செய்தது....

இத்தனை காதல் எனக்கு இருக்கும் பொழுது உனக்கு மட்டும் ஏண்டி என் மேல் ஆசை இல்லாமல் போனது... உன் உள்ளம் சொல்லவில்லையா நான் உன்னை விரும்ப ஆரம்பித்து இருக்கிறேன் என்று...

பின் ஏன் நான் பார்க்கும் பொழுதெல்லாம் உன் முகம் செவ்வானமாய்ச் சிவந்தது....

COPYRIGHTED

54% 8:22 PM
https://drive.google.com/file

என் பார்வையின் அர்த்தம் புரியாதவளுக்கு உன் வெட்கத்தின் அர்த்தம் கூடவா புரியவில்லை??????

இத்தனை நாட்கள் பொறுத்திருந்தவளுக்கு நான் அழைத்த அன்று மட்டும் என் அறைக்கு வந்திருந்தால் என் மனதின் ஆசையை வெளிப்படுத்தி இருப்பேனே...

இது வரை தன் மன உணர்வுகளை யாரிடமும் வெளிப்படுத்தாமல் தனக்குள் அடக்கப் பழகியவனுக்கு முதல் முறை காதல் என்று மெல்லிய சுகமான உணர்வு தோன்றியும் வெளிப்படுத்தத் தெரியாமல் தவிக்கிறேனே.....

எந்த பெண்ணிடமும் நெருங்கி பழகியிராதவனுக்குக் காதலை சொல்வது அத்தனை எளிதல்ல என்று விளக்கியிருப்பேனே....

ஏன் இப்படி என்னை விட்டு சென்றாய்? என்னிடம் வந்து விடுடி.... என்று உள்ளுக்குள் புலம்பியவனுக்கு அவன் உடலின் வேர் வரை ஊடுருவி அலைஅலையாக அதிர்வுகளை ஏற்படுத்தும் இந்த உணர்வு அவனுக்குப் புதிது...

இதுவரை அனுபவித்திராத அந்த உணர்வும் ஒரு வித உவகையே தர கம்பீரமான, எதற்கும் அசையாத அந்த ஆண்மகனையே அது அசைத்து தான் பார்த்தது....

அலைப் போல் பாய்ந்த தன் உள்ளத்தினை ஒரு முகப்படுத்தி எந்த ஒரு பெண்ணிடமும் சிக்காத தன் மனதை எப்படி இப்படி ஆட்டி படைக்கிறாள் தன் மனைவி என்று ஆராய்ந்தவன் அந்த நிமிடமே தன்னிடம் அவள் வரமாட்டாளா என்று ஏங்க ஆரம்பித்தான்....

COPYRIGHTED

54% 8:22 PM
https://drive.google.com/file

அருகில் இல்லாத பொழுதும் அவன் கல் மனதை சுழல்காற்று போல் சுழற்றி அடித்த பூங்காற்றானவள் தன் கணவனின் உடலும் உள்ளமும் தன் இதயத்தை, தன் காதலை, தன் அருகாமையை, தன் அணைப்பை தேட செய்தாள்...

பணிவன்பு உள்ளவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு.... அவர்கள் உணர்ச்சிகள் மேம்படும் போது அவற்றின் வேகத்திற்கு இடம் கொடுக்காது சற்றே நிதானித்துத் தன் சுவாதீனத்தை இழக்காமல் தக்க வைத்துக் கொள்கிறார்கள்....

தங்களின் உணர்வுகளைத் தங்கள் வசப்படுத்திக் கொள்கிறார்கள்...

இதுவரை தன் மனைவியுடனான தன் இல்லற வாழ்க்கையில் தன் பண்பைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருந்தவன் "நான் பண்புள்ளவனா? பண்பில்லாதவனா? என் மனைவியை நான் எடுத்துக் கொள்ளப் பண்பு ஏதும் தேவை இருப்பதாகத் தெரியவில்லையே....

அவள் வரவில்லை என்றால் என்ன? அவளை என்னிடம் இழுத்து வருவதற்குக் கூட எனக்கு முழு உரிமை இருக்கிறது என்று நினைத்தவன் நாளையே அவளை அழைக்கச் செல்வது என்று முடிவெடுத்தான்....

அவளாக வருவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என்றாலும் அவளைத் தூக்கி வருவது என்று நினைத்தவனின் முகத்தில் இளமுறுவல் தோன்ற, அதன் பின்னரே உறக்கமும் அவனை ஆரத்தழுவியது...

COPYRIGHTED

54% 8:22 PM
https://drive.google.com/file



மறு நாள் விடிந்தும் விடியாமலும் வழக்கத்தை விடச் சீக்கிரமாக அலுவலகத்திற்குச் சென்றவன் அன்று செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் அதி விரைவாக முடித்தவன் கதிரை அழைத்தான்...

"கதிர், இன்னைக்கு வெளியில் போக வேண்டும்... எப்படியும் திரும்ப வருவதற்கு நைட் ஆகிடும்.... அதனால இன்றைக்கு ஏதாவது முக்கிய மீட்டிங்ஸ் இல்லன்னா காண்டிராக்ட்ஸ் ஏதாவது சைன் பண்ணனும்மான்னு சீக்கிரம் செக் பண்ணி சொல்லுங்க"

"யெஸ் சார், இதோ செக் பண்ணிடுறேன், சார்... ஸ்ரீ மேடம் இப்போ எப்படி இருக்காங்க?"

"ஷீ இஸ் கெட்டிங் பெட்டர் [She is getting better] " என்றவன் மற்ற அலுவல்களைப் பற்றிச் சிறிது நேரம் விவாதித்தவன் கதரை செல்ல அனுமதிக்க...

அதுவரை வேலைகளிலும், தான் செய்ய வேண்டிய அன்றைய அலுவல்களைப் பற்றி விவரிப்பதிலும் மூழ்கியிருந்த தன் MD யின் முகத்தில் சட்டென்று தோன்றிய பரவசத்தைப் பார்த்த கதிருக்கு ஏனோ அர்ஜூனின் முகத்தில் திடீரென்று புலப்பட்ட இந்த மகிழ்ச்சி ஆச்சரியத்தைக் கொடுத்ததே....

ஒரு வேளை ஸ்ரீ மேடத்தின் உடல் நிலையில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று டாக்டர் சொன்னதினால் வந்த சந்தோஷமா அல்லது நமக்குத் தெரியாத அவரின் தனிப்பட்ட வாழ்க்கையில் வேறு எதுவும் அவரைப் பரவப்படுத்தியதால் வந்த மனமகிழ்ச்சியா?

இல்லை நமக்குத் தெரியாமல் ஏதாவது மிகப் பெரிய க்ளையண்ட்ஸோ அல்லது யாருக்குமே எளிதில் கிடைக்காத ப்ராஜக்ட் சக்ஸஸோ கிடைத்ததினால் வந்த உவகையோ...

COPYRIGHTED

8:22 PM

https://drive.google.com/file

மூளையே சூடாகும் வரும் யோசித்துக் கொண்டிருந்தவனுக்கு அர்ஜூனின் முகத்தில் தெரிந்த மாறுதல்களுக்கு எந்த ஒரு காரணத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை...

கேட்டால் சத்தம் போடுவார்... கேட்காமலும் இருக்கமுடியவில்லை.... தன்னை அடக்க முடியாமல் மனதில் தோன்றியதைக் கேட்டும் விட்டான்...

"எனிதிங் ஸ்பெஷல் டுடேய் சார்? [Anything special today sir]"

கணினியில் கண்களைப் பதித்திருந்த அர்ஜூன் அவனைச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தவன் ஒன்றும் இல்லை என்று தலையை ஆட்டியவன் மறுபடியும் கணினியில் கண்களைப் பதித்தான்...

"அதானே, இவராவது அவர் மனதில் உள்ளதை வெளிப்படுத்துவதாவது" என்று எண்ணிய கதிர் அதற்கு மேல் அங்கு நிற்பதற்கு வழியில்லாமல், அப்படியே நின்றாலும் அதற்கும் இவரிடம் இருந்து ஒரு முறைப்பே பரிசாகக் கிடைக்கும் என்று யோசித்தவாறே அறையை விட்டு வெளியேற...

அவன் சென்றதும் அவனை நிமிர்ந்து பார்த்த அர்ஜூனின் இதழ்களில் இள நகை விரிந்தது....

எத்தனை தான் அர்ஜூன் தனக்கு முன் மலைப் போல் குவிந்திருந்த அலுவல்களை விரைவாக முடிக்க முயற்சித்தாலும் அன்று மதியம் வரை வேலைகள் அவனை இழுத்துக்கொள்ள அவன் எதிர்பார்த்தது போல் உடனடியாகத் திவ்யாவின் ஊருக்கு கிளம்ப இயலவில்லை...

COPYRIGHTED

54% 8:23 PM
https://drive.google.com/file

ஒரு வழியாக மதியத்திற்கு மேல் கிளம்பியவன் தன் தந்தையை அழைத்துத் தான் நேரம் சென்றே இன்று மருத்துவமனைக்கு வரமுடியும் என்றான்... ஆனால் தான் திவ்யவின் ஊருக்கு செல்வதையோ அல்லது அவளை அழைத்து வரப் போவதையோ பாலாவிடம் சொல்லாமல் வேண்டுமென்றே மறைத்து....

ஏனெனில் அருண் திவ்யா கடலூருக்கு சென்றிருக்கிறாள் என்று சொன்னதை வைத்து அவள் அங்குத் தான் இருப்பாள் என்று தெரியும் ஆனால் திவ்யாவின் நிலைமை அவனுக்கு இன்னும் புலப்படவில்லை....

அவளுக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ ஆனால் அவளுடன் தான் இன்று சென்னைக்குத் திரும்ப வேண்டும் என்று உள்ளூர உறுதி எடுத்துக் கொண்டாலும் அவளை அழைத்து வரும் வரை ஒருவரிடமும் சொல்லாமல் செல்வதே சிறந்தது என்று முடிவெடுத்திருந்தான்...

காரைக் கிளப்பியவனின் உள்ளத்திலும் உடம்பிலும் புதுத் தெம்பு ஊற, மனம் பாரம் குறைந்து இலகுவாக உணர, தன் மனையாளை சந்திக்கும் ஆர்வத்துடன் இதயம் முழுவதும் நிரம்பி ததும்பி வழியும் காதலை சுமந்திருந்தவன் மூன்றாவது முறையாகத் தன்னிலை தாழ்ந்து தன்னவளின் தஞ்சம் தேடி சென்று கொண்டிருந்தான்...

முதல் முறை தன் பார்வையால், தன் விழிகளில் வழியும் காதலால் தன் தேடலை தன் மனம் கவர்ந்தவளுக்கு உணர்த்தியிருந்தான்....

இரண்டாம் முறை தன் மனம் திறந்து, தன் ஸ்பரிசத்தால், தன் அணைப்பால், தன் வாய் திறந்து அவளின் அருகாமையை இறைஞ்சியிருந்தான்...

COPYRIGHTED

8:23 PM 54%
https://drive.google.com/file



இதோ மூன்றாம் முறை அவளைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள, அவளை முழுவதுமாகத் தன் வசப்படுத்த, தன் கர்வம், ஆளுமை, அதிகாரம், அந்தஸ்து அனைத்தையும் அவளிடம் சமர்ப்பித்து அவளைத் தன்னுடன் அழைத்து வர நேரில் சென்று கொண்டிருக்கிறான்....

தன் கணவனின் மனதை, அவன் இதயத்தில் ஆர்ப்பரிக்கும் திரை கடலெனத் திரண்டிருந்த காதலை புரிந்து அவன் மனையாள் அவனுடன் இணைந்து வாழ வருவாளா??

இரண்டு முறை தன் கணவனின் அருகாமைக்கு அஞ்சி அவனின் ஆழ்ந்த நம்பிக்கையைக் குலைத்தவள், தன் அச்சத்தினாலும் கலக்கத்தினாலும் அவனை நிராகரித்தவள் இந்த முறை அவனின் கனவை நிறைவேற்றுவாளா?

ஆனால் இன்று தன் கணவன் தன்னுடனான இல்லற வாழ்க்கைக்கு, தங்களின் தாம்பத்தியத்திற்கு அச்சாரம் போடாமல் விடப்போவதில்லை என்ற முடிவோடு வந்து கொண்டிருக்கிறான் என்பதை அறியவில்லை அந்தப் பேதை....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்.....

COPYRIGHTED